ISSN : 3049-0723 (O)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

Tamilmanam International Research Journal of Tamil Studies

A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal

மலர் : 4
இதழ்: 01
மாதம், வருடம்: அக்டோபர் 2025

Vol: 4
Issue: 01
Month, Year: October 2025

Started : 2024, Monthly, Multilanguage (Tamil, English), Peer Reviewed
Publisher: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College
90, Palakkad Road, Pollachi 642001, Tamilnadu, India www.ngmc.ac.in

Available online : www.tamilmanam.in :

Tamilmanam International Research Journal of Tamil Studies

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

ISSN: 3049-0723 (Online)

ISSN: 3107-7781 (Print)

Language: **Multiple languages**

Language (other): **Tamil, English**

Starting Year: **2025**

Format (Medium): **Online, Print**

Frequency of the Publication : **Monthly**

Subjects: SCIENCE AND KNOWLEDGE. ORGANIZATION. COMPUTER SCIENCE. INFORMATION. DOCUMENTATION. LIBRARIANSHIP. INSTITUTIONS. PUBLICATIONS

Managing Editor

S.VEERAKANNAN

Publisher

Department of Library, Nallamuthu Gounder Mahalingam College,

90, Palakkad Road, Pollachi 642001, Tamilnadu, INDIA Email: editor@tamilmanam.in, ngmcollegelibrary@gmail.com,

Website: www.tamilmanam.in

Publisher Website: www.ngmc.org, www.ngmc.ac.in

Editorial Team

Editor-in-Chief

- **Dr. T. Rajkumar M.A., M.Phil., NET, Ph.D.**
    - Associate Professor & Head, PG & Research Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi 642001, Tamilnadu, IN
    - Email: rajkumar@ngmc.org
    - Profile: https://www.ngmc.org/department-profile/pg-department-of-tamil/

Editor & Website Administrator

- **Mr. S. Veerakannan M.Sc. IT., M.L.I.Sc., CFOMD.**
    - Deputy Librarian, Research Dept of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi 642001, Tamilnadu, IN
    - Email: dlibrarian@ngmc.org
    - URL: https://www.ngmc.org/mr-veerakannan-s/

Associate Editors

- **Dr. B. Aruljothi M.A., M.Phil., Ph.D., NET**
    - Assistant Professor, Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi 642001, Tamilnadu, IN
    - Email: aruljothib@ngmc.org
    - Link: https://www.ngmc.org/department-profile/department-of-tamil-literature/
- **Dr. S. Vijayakumar M.L.I.Sc., M.Phil.,Ph.D.,NET**
    - Librarian, Research Dept of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi 642001, Tamilnadu, IN
    - Email: librarian@ngmc.org
    - URL: https://ngmc.irins.org/profile/216405
- **Dr. K. Singaravelu M.A. B.Ed M.Phii. PhD.**
    - Assistant Professor, Department of Tamil, Thiruvalluvar University, Serkkadu, Vellore – 632 115.
    - Email: tamilsingam80@gmail.com
    - Profile: https://www.tvu.edu.in/wp-content/uploads/2017/06/Dr.K._Sigaravelu_tamil_Profile-1.pdf

Editorial Board Members

- **Dr. N. Jayasudha M.A., M.Phil.,Ph.D.,NET**
    - Assistant Professor, Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi 642001, Tamilnadu, IN
    - Email: jeyasudha@ngmc.org

- Profile: https://www.ngmc.ac.in/staff-profile/dr-n-jayasudha-b-am-amphilphdnet/

- **Dr. S. Jamuna M.A., M.Phil., Ph.D.,NET.**
    - Assistant Professor, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi 642001, Tamilnadu, IN
    - Email: jamuna.s@ngmc.org
    - Profile: https://www.ngmc.ac.in/staff-profile/dr-s-jamuna-m-am-philphdnet/

Editorial Members Abroad

- **V. Krisnaveni**
    - Senior Lecturer, Swamy Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka.
    - Email: kisnaveniv@esn.ac.lk
    - Mobile: +94706158744
    - Profile: https://www.svias.esn.ac.lk/ms-p-krisnaveni/
- **Dr. T. Vivanantharasa**
    - Senior Lecturer, Swamy Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka.
    - Email: vivanantharasat@esn.ac.lk
    - Mobile: +94706685799
    - Profile: https://www.svias.esn.ac.lk/mr-t-vivanantharasa/
- **Dr. T. Megarajah**
    - Senior Lecturer, Swamy Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka.
    - Email: megarajaht@esn.ac.lk
    - Profile: https://www.fac.esn.ac.lk/dts/academic-staff/t-megarajah
- **Mrs. Vinothini Arivalagan**
    - Senior Lecturer, Department of Language Studies, Coordinator – B.A (Hons) in Tamil & Tamil Language Teaching
      Certi in TSL, Certi in SSL, Ad.CTSL & Ad.CSSL, Open University of SriLanka, Nawala, Nugegoda.
    - Email: arivino816@yahoo.com, avino@ou.ac.lk
    - Tel :-011-2881535
    - Profile URL: https://ou.ac.lk/staff/mrs-a-v-vinothini/

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

Tamilmanam International Research Journal of Tamil Studies

ISSN (Online): 3049-0723 | ISSN (Print): 3107-7781 DOI:

https://doi.org/10.63300/tm040110

Vol. 4 No. 01 (2025): Tamilmanam October 2025 Published: 01 October 2025

A Welcome Note from The Editorial Board

We are delighted to present **Volume 4, Issue 01 (October 2025)** of the *Tamilmanam International Research Journal of Tamil Studies*, a beacon dedicated to illuminating the profound depths and vibrant expanse of Tamil language, literature, and culture. With each issue, we strive to foster rigorous scholarship and provide a platform for insightful research that transcends geographical boundaries, bringing the richness of Tamil heritage to a global audience.

This current volume, *Tamilmanam October 2025*, is a testament to the enduring legacy and dynamic evolution of Tamil studies. It brings together a diverse collection of scholarly articles that delve into ancient classics, explore modern literary masterpieces, dissect linguistic nuances, and examine the societal fabric woven through centuries of Tamil thought and life.

Within these pages, you will journey from the ethical frameworks of ancient Tamils to the contemporary narratives of women's lives and the poignant realities of child labor. Scholars revisit the timeless wisdom of Thirukkural and Sangam literature, analyze the narrative styles of literary giants like Bharathiar and Cho Ramaswamy, and explore the social consciousness embedded in the works of Na. Muthukumar. We also embrace diverse cultural expressions, from the ancient performing art of Koodiyattam to the modern craft of animation rooted in Tamil folk tales. Linguistic comparisons, the role of technology in education, and critical assessments of Malaysian Tamil novels further enrich the intellectual landscape presented herein.

Each contribution has undergone a rigorous peer-review process, ensuring the highest standards of academic excellence and originality. We extend our heartfelt gratitude to our esteemed authors for their dedication and invaluable contributions, and to our diligent reviewers for their critical insights.

We invite you, our readers, to immerse yourselves in the scholarly discourse presented in this issue. May it inspire new perspectives, provoke further inquiry, and deepen your appreciation for the magnificent heritage of Tamil.

Sincerely,

The Editorial Board *Tamilmanam International Research Journal of Tamil Studies*

Table of Contents / உள்ளடக்க அட்டவணை

Page Numbers	Article Title (English)	Article Title (Tamil)	Author(s)
1-9	The Soul of the Land: Beliefs and Customs in Sa. Kandasamy's 'Chayavanam'	சாயாவனம் நாவலில் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்	R. Vinnilavu, Dr. A. Maria Sebastian
10-21	Trailblazing Studies of Contemporary Feminist Literature, Examined from a Thinai Theoretical Perspective	திணைக்கோட்பாடு நோக்கில் சம காலப் பெண்ணியப் படைப்புகளின் ஆய்வு முன்னோடிகள்	S. Nirmala, Dr. A. Maria Sebastian
22-27	Echoes in Verse: Unveiling Societal Aspirations in Aingurunuru's Depiction of Progeny	ஐங்குறுநூறு காட்டும் மக்கட் பேறும் சமுதாயப் பின்னணியும்	Tamilselvam D, Dr. K. Nagarathinam
28-36	The Theatrical Canvas of Cho Ramaswamy: A Masterclass in Language, Laughter, and Lampoonery	சோ. இராமசாமியின் நாடகக் கலை: மொழி, நகைச்சுவை, நையாண்டி	Dr M. Anuradha, Dr. G. Padmapriya, Dr. P. Murugesan
37-43	The Confluence of Words: Vowel, Consonant, and KuRRugaRam Endings	உயிர், மெய், குற்றுகரவீற்றுப் புணர் மொழிகள்	Dr. A. Atheeswari
44-52	The Travelogues of Bharathiar: Descriptive language style and fictional language structure	பாரதியாரின் பயணக் கட்டுரைகள்– வருணனை மொழிநடையும் புனைவுமொழிக்கட்டமைப்பும்	Dr. Bharathi Prakash

Page Numbers	Article Title (English)	Article Title (Tamil)	Author(s)
53-62	Koodiyattam: An Ancient Performing Art of Kerala	கூடியாட்டம் - கேரளாவின் பண்டைய நாடகக் கலை வடிவம்	Dr. Kamaraj S
63-72	Water Needs and Usage Practices of Ancient Tamils	பண்டையத் தமிழரின் நீர்த் தேவைகளும் அதன் பயன்பாட்டு முறைகளும்	Dr. G. Vijayaragavan
73-82	Unveiling the Soul of the Kaisika Nadagam	கைசிக நாடகம் (கோவில் சார் நாடகப்பிரதி)	V. Hemavarthini, Dr. G. Vasanthimala
83-88	Inner values of the ancient Tamil people	பழந்தமிழ் மக்களின் அகவாழ்க்கை விழுமியங்கள்	S. Gowri, Dr. M. Aruldoss
89-95	The social status of women's lives in Cho. Dharman's novel Durvai	சோ. தர்மனின் தூர்வை புதினத்தில் பெண் மாந்தர்களின் வாழ்வியலின் சமூக நிலை	R, Rajesh Kumar, Dr. E. Karpagam
96-108	Animation art based on Tamil folk tales and myths	தமிழ் நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்களை அடிப்படையாகக் கொண்ட அனிமேஷன் கலை	Priya Palanimurugan
109-118	Modi Vithai or Game!	மோடி வித்தை அல்லது விளையாட்டு!	P. Govindasamy, Dr. C. Muthukandan
119-125	Conceptualization in Kumarakuruparar Kadavul Malai	குமரகுருபரக் கடவுள் மாலையில் கருத்துப்புலப்பாடு	Dr. P. Balamurugan
126-132	Echoes of the Unheard: Unveiling Child Labourers' Lives Through 'Koottukkunjugal'	கூட்டுக்குஞ்சுகள் நாவல் வெளிப்படுத்தும் குழந்தைத் தொழிலாளர்களின் வாழ்வியல்	A. Meera, Dr. N. Ramaprabha

Page Numbers	Article Title (English)	Article Title (Tamil)	Author(s)
133-137	The Kotravai Koothu of the Parambu people in the novel Vel Pari	வேள் பாரி நாவலில் பறம்பு மக்களின் கொற்றவைக் கூத்து	Dr. C. Nanthini
138-142	The role of technology in teaching and learning	கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பங்கு	Dr. S. Karthikeyan
143-160	Purananuru and Society	புறநானூற்றில் சமுதாயம்	Mrs. M. Bhuvaneswari, Dr. E.R. Ravichandran
161-167	The ethical framework of ancient Tamils and today's reality	பழந்தமிழர் வாழ்க்கை நெறிமுறைகளும் இன்றைய நடைமுறையும்	Dr A. Mohanraj, Dr T. Annadurai, Dr. C. Sakthimurugan, Dr. V. C. Srinivasan
168-180	Thiruvasagam: A Multifaceted Perspective	திருவாசகம் ஓர் பன்முகப் பார்வை	Dr. M. Anuradha, Dr. C. Sakthimurugan, Dr. P. Gomathi, Dr. G. Padmapriya
181-187	Works of Keeranur Jagirraja in Tamil Muslim Novels - A Study	தமிழ் முஸ்லிம் நாவல்களில் கீரனூர் ஜாகிர்ராஜாவின் படைப்புகள் - ஓர் ஆய்வு	Dr. J. Krishnakumari
188-194	Women Praised by Thirukkural	திருக்குறள் போற்றும் பெண்கள்	M. Jeyarani
195-202	Kings in Pazhamozhi Nanuru	பழமொழி நானூறு கூறும் மன்னர்கள்	A. Nandhakumar
203-207	Tamil and Telugu – A Comparison	தமிழ் தெலுங்கு – ஒப்பீடு	Dr. Kamaraj S

Page Numbers	Article Title (English)	Article Title (Tamil)	Author(s)
208-220	Theme changes in later Aatrupadai literature	பிற்கால ஆற்றுப்படை இலக்கியங்களின் பொருண்மை மாற்றங்கள்	Ishwarya C, Dr. N. Bhagawathiammal
221-227	Shakti Jyothi Poems from a Realist Perspective	மெய்ப்பாட்டியல் நோக்கில் சக்திஜோதி கவிதைகள்	A. Booma, Dr. M. Kannammal
228-234	Malaysian Tamil Novels — Trends, Evolution, and Critical Assessment	மலேசிய தமிழ் நாவல்கள் — போக்குகள், பரிணாமம் மற்றும் விமர்சனத் தீர்மானம்	S. Pradeepa
235-240	Social Consciousness in the Works of Poet Na. Muthukumar	கவிஞர் நா. முத்துக்குமாரின் படைப்புகளில் சமூகச்சிந்தனைகள்	Mr. A. Gokulkannan
241-247	Contradictions Between the Individual and Society in Sangam Literature	சங்க இலக்கியங்களில் மனிதனுக்கும் சமூகத்திற்குமான முரண்பாடுகள்	Dr. C. Ragu
248-262	Kalithogai Kaala Kathal Marapugal	கலித்தொகை கால காதல் மரபுகள்	Dr R. Vanithamani

சாயாவனம் நாவலில் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்

The Soul of the Land: Beliefs and Customs in Sa. Kandasamy's 'Chayavanam'

ர. விண்ணிலவு[1], முனைவர் அ. மரிய செபஸ்தியான்[2]

[1]ஆய்வாளர், (23PHD0213) முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி, விஐடி பல்கலைக்கழகம், வேலூர்.
Email: vinnilavu.r@vit.ac.in, ORCiD:
[2]உதவிப் பேராசிரியர், நெறியாளர், சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி
விஐடி பல்கலைக்கழகம், வேலூர்.
Email: mariasebastin.a@vit.ac.in, ORCiD: https://orcid.org/0009-0001-7269-6217

R. Vinnilavu, Research Scholar (23PHD0213), Full-time Ph.D. Research Scholar School of Social Sciences and Languages, VIT University, Vellore.
Dr. A. Maria Sebastian, Assistant Professor, Supervisor School of Social Sciences and Languages VIT University, Vellore.

Abstract:

The novel Saayavanam highlights the customs and traditions that are deeply rooted in the everyday life of the people, reflecting their culture and social values. Rituals, religious practices, family life, marriage systems, indigenous medicine, modes of worship, and rain-invocation rituals are intricately interwoven with the people's lifestyle. These customs not only fulfilled the needs and beliefs of the community but also strengthened social unity. Through this, the novel portrays the Tamil heritage and the philosophical foundations of their way of life.

Keywords: Saayavanam, Customs, Traditions, Worship, Hospitality, Rituals.

ஆய்வுச் சுருக்கம்:

சாயாவனம் நாவலில் சுட்டிக்காட்டப்படும் பழக்கவழக்கங்கள், மக்களின் அன்றாட வாழ்வில் ஆழமாகப் பதிந்துள்ள கலாச்சார மற்றும் சமூகப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன. மரபுகள், மதச்சடங்குகள், குடும்ப வாழ்க்கை, திருமண முறைகள், மருந்து வழக்கங்கள், தற்சார்ப்பு வாழ்வியல், வழிபாட்டு முறைகள் மற்றும் மழை வேண்டி வழிபடுதல் ஆகியவை மக்களின் வாழ்வியலோடு இணைந்தவையாக்க் காணப்படுகின்றன. இப்பழக்கவழக்கங்கள் மக்களின் தேவைகளையும் நம்பிக்கைகளையும் பூர்த்தி செய்ததோடு, சமூக ஒற்றுமையை வலுப்படுத்துகின்றன. இதன் மூலம் சாயாவனம் நாவல், தமிழர் பாரம்பரியத்தையும், அவர்களின் வாழ்வியல் தத்துவத்தையும் சித்தரிக்கிறது.**திறவுச்சொற்கள்**: ஆதியன் இன மக்கள், கல்வி, தொழில், சாதி சான்றிதழ், வாழ்வியல் சிக்கல்.

திறவுச்சொற்கள்: சாயாவனம், பழக்கவழக்கங்கள், மரபுகள், வழிபாடு, விருந்தோம்பல், சடங்குகள்.

முன்னுரை;

தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும், அவை தோன்றிய காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வின் பிரதிபலிப்பாகும். அதன்வழியே மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்த பல்வேறு பழக்கவழக்கங்கள்

Tamilmanam

இடம்பெறுகின்றன. இப்பழக்கவழக்கங்கள் பெரும்பாலும் முன்னோர்களிடமிருந்தே ஒரு தலைமுறையிலிருந்து அடுத்தத் தலைமுறைக்குக் கடத்தப்படுகின்றன . அந்தவகையில், மக்களிடையே கடத்தப்படும் பழக்கவழக்கங்கள் தொடர்ந்து கடைபிடிக்கும் போது, அவர்களுக்கேயுரிய தனித்த பண்பாட்டு மரபாக உருப்பெறுகின்றன. இலக்கியங்கள் அவை தோன்றிய காலத்தின் சமுதாயப் பண்பாட்டு நிலைகளை வெளிப்படுத்துவன. சமுதாயத்தின் இயல்பிற்கேற்ப உருப்பெறுவதும் காலப்போக்கிற்கு ஏற்ப மாறுபடுவதும் இலக்கியத்தின் இயற்கைப் பண்பாகும். தமிழ் மொழியின்கண் தமிழ்மக்களின் வாழ்க்கை மரபுகளும் இலக்கிய மரபுகளும் ஆழ வேரூன்றி வளர்ந்துள்ளதனைப் பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. இலக்கியங்களின் வழியே வெளிப்படுத்தப்பட்டிருக்கும் வாழ்வியல் மரபுகளை இனங்கண்டு அறிந்துணர்வது பண்பாட்டினை அறிய வாய்ப்பாக அமையும். பண்பாட்டினை அறிவதற்கு இலக்கியச் சான்றுகளே அடிப்படைச் சான்றுகளாக அமையும் நிலையில் அச்சான்றினைப் பிற வாய்வியல் சான்றுகளோடு இணைத்துநோக்கி அச்சமுதாயத்தின் பண்பாட்டினையும் சிறப்பியல்புகளையும் அறிந்துணர்வது சமூகப் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க பணியாகும். அந்நிலையில் இங்கு, சாயாவனம் நாவலில் இடம்பெறும் மக்களின் வாழ்க்கையில் பின்பற்றப்படும் நம்பிக்கைவயப்பட்ட பழக்கவழக்கங்களைக் காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பழக்கம் வழக்கம்

தனிமனிதனின் தேவையின் அடிப்படையில் பழக்கம் தோன்றுகின்றன. அவையே, குறிப்பிட்ட பகுதியில் வாழும் பலருடைய பழக்கம் வழக்கங்களாக மாறும்போது அவர்களுக்கேயுரிய மரபாக உருப்பெறுகின்றன. இது குறித்துக் க. காந்தி தம் நூலில், "பழக்கவழக்கங்களைத் தனிமனிதனும் சமுதாயம் என்ற அமைப்பும் இணைந்து உருவாக்குகின்றன. மக்களின் தேவைகளின் அடிப்படையிலேயே பழக்கங்கள் தோன்றுகின்றன. அவை சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற நிலையில் வழக்கங்களாக உருப்பெறுகின்றன." (தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்.பக்.14) எனும் கருத்துப் பழக்கவழக்கம் குறித்த புரிதலை ஏற்படுத்துகிறது. ஆகவே, மக்கள் ஒரு செயலை தேவையினால் தொடர்ந்து பின்பற்றும் பொழுது அச்செயலே, பின் வழக்கமாக மாறி அம்மக்களுக்குரிய தனித்த பண்பாட்டு மரபாக இடம்பெறுகிறது எனலாம். அந்தவகையில் சாயாவனத்தில் வாழும் மக்களும் வாழ்க்கையில் சில பழக்கவழக்கங்களைக் கடைபிடிப்பதை நாவலின் வழி பின்வருமாறு அறியலாம்.

பொதுவாகச் சில பழக்கவழக்கங்கள் ஒரு தலையினரிடமிருந்து அடுத்தத் தலைமுறையும் பின்பற்றும் போது அதற்கான காரணக் காரியங்களை அறியாமல் அப்படியே ஏற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு ஏற்றுக் கொள்ளும் பழக்கவழக்கங்களால் மரபு தன்மையை இழக்க நேரிடும். இந்த வகையில், இன்றும் மக்களிடம் பல்வேறு பழக்கங்கள் வழக்கத்தில் பின்பற்றுகின்றனர் என்பதும் இயல்பே. அதேபோல், சாயாவனம் நாவலில் இடம்பெறும் சிவனாண்டித் தேவர் தெற்கு திசைப்பார்த்து புளி உலுக்கும் முறையில்,

"புளி உலுக்குவதில் அவருக்கு வரிசை உண்டு. தெற்கிலிருந்து தொடங்கி, தென்கிழக்காய்ப் போய், வடக்கே போவார். ஏனென்று காரணம் சொல்லத் தெரியாது அவருக்கு. அவர் தகப்பனாரும், தாத்தாவும், அவருக்கு முந்தியவர்களும் போன முறையாகும். அந்தச் சுவடு பிசகாமல் சிவனாண்டித் தேவரும் போய்க்கொண்டிருந்தார்." (சாயாவனம் – 16) எனும் கருத்திலிருந்து தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து தெற்கு திசையில் தொடங்கி வடக்குத் திசையில் செல்வது வழிவழியாகப் பின்பற்றிவரும் வழக்கமே என்றறிய முடிகிறது.

பழக்கவழக்கங்கள் சில சமூகக் கட்டமைப்புகளை ஏற்படுத்துகிறது. அதுவே, காலப்போக்கில் அம்மக்களுக்குரிய கட்டுப்பாடுகளையும் விதிக்கின்றன. அந்த வகையில், சாயாவனத்தில் வாழும் மக்கள் ஒவ்வொரு குடும்பத்திற்குரியப் புளியமரங்கள் பிரித்தலிக்கப்பட்டு, அம்மரத்திலிருந்து மட்டுமே புளி உலுக்கி எடுத்துக் கொண்டு செல்லும் பழக்கத்தினைக் கடைபிடிக்கின்றனர்.

''ஒவ்வொரு மரத்திலிருந்தும் ஒவ்வொரு குடும்பத்திற்குப் புளி. தெற்கே இருக்கிற தித்திப்புப் புளிய மரத்திலிருந்து புளி சாம்பமூர்த்து ஐயர் வீட்டிற்கு. குட்டை மரத்திலிருந்து பெரிய பண்ணைக்கு. தென்கிழக்கு காத்தவராயன் மரத்துப் புளி பதஞ்சலி சாஸ்திரி வீட்டிற்கு, நெட்டை மரத்துப் புளி பார்த்த சாரதி ஐயங்கார் வீட்டிற்கு, ஒவ்வொரு மரத்தையும் தனித்தனியாக உலுக்குவார். ஒரு மரத்துச் சோட்டானோடு இன்னொரு மரத்துச் சோட்டான் கலக்காது.' (சாயாவனம் – 16) மேற்கண்டவாறு, சாயாவனத்தில் வாழும் மக்கள், தம் வாழ்க்கையில் வழிவழியாகப் பின்பற்றும் குறிப்பிட்ட வழக்கத்தை (புளியை பிரித்துக்கொடுக்கும் வழக்கம்) நாவலின் வழி அறிய முடிகின்றது. இவ்வாறு மக்கள் முன்னோர்கள் கற்றுக்கொடுத்த பழக்கங்களை அடுத்தடுத்துப் பின்பற்றப்படும் போது, வழக்கமாக நிலைத்துவிடுகின்றன. மக்களிடையே இன்றும், பல்வேறு பழக்கவழக்கங்கள் வழக்கத்தில் நிலைத்திருக்கின்றன.

நாவலில் பளியர் இனக்குழுக்களின் பழக்கவழக்கம்

சாயாவனத்தில் வாழ்ந்த பளியரின மக்கள் இனக்குழுக்களாக வாழ்ந்து வந்துள்ளனர். அதேபோல் ஒவ்வொரு குழுக்களுக்கென்று தனிப்பெயரிட்டு அழைத்துள்ளனர். மேலும், ''இனக்குழு வாழ்வுமுறை அழிந்து நிலவுடைமையாக மாறுகின்ற சூழலில் பழைய சமுதாயத்தின் எச்சங்களும் எழுவது இயல்பே, இனக்குழு அழிவு முழுமையாக இராமல் அரைகுறையாக இருந்தால் இனக்குழு மக்களின் சிந்தனைகள் நம்பிக்கைகள், பண்பாட்டு எச்சங்கள் அதற்கடுத்து உருவாகும் சமுதாயத்தில் எஞ்சி நிற்கும்.'' எனும் தேவிபிரசாத் சட்டோவின் கருத்தினைப் பா.பிரபு தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.(பழந்தமிழக இனக்குழு வாழ்வியல்.பக்.3) மேற்கூறிய கருத்தின் வழி ஒரு சமுதாயம் பல்வேறு மாறுதலுக்குப் பிறகும், வாழ்வில் சில பழக்கவழக்கங்கள் அழியாமல் பின்பற்றப்படுகிறது. இந்த வகையில் நாவலில் இடம்பெறும் சிதம்பரத்தின் அம்மா எந்தக்குழுவினை சார்ந்தவர் எனத் தேவர் கேட்டதிலிருந்து, சாயாவனத்தில் வாழும் மக்கள் கூட்டமாக அதாவது குழுவாக வாழ்வதை நூலின் வழி அறிய முடிகிறது.

'வேங்கப் புலி கூட்டமில்லே, உங்கம்மா?''

'மொட்டாணிக் கூட்டம்ன்னு அம்மா சொல்லுவாங்க.''

'ஆமாம்... ஆமாம்... இப்பதான் நினைவு வருது.' (சாயாவனம் – 36) என்று கூறுவதிலிருந்து இனக்குழுக்களாக வாழும் மரபை பின்பற்றியுள்ளதை நாவல் தெளிவுபடுத்துகிறது.

அடுத்ததாக நாவலில் ஒரு குறிப்பிட்ட இனக்குழு மக்களிடையே சாமியாராகப் போகும் வழக்கம் இருப்பதையும் நாவல் எடுத்துக்ககாட்டியுள்ளது. அக்கருத்து,

'அந்தப் பயமவன் வம்சத்திலேயே அப்படியொரு புத்தி; சாமியாராப் போறது வழக்கம். அவன் அப்பன் சாமியாராப் போனான்; தாத்தா போனான். அப்புறம் இந்தப் பயலும் போயிட்டான்.'' (மேலது – 38) மூலம் மொட்டாணிக் கூட்டத்தில் வாழும் மக்கள், திருமணமான கொஞ்ச காலத்திலே சாமியாராகப் போகும் வழக்கம் பின்பற்றியுள்ளதை வெளிப்படுத்துகின்றன. மேலும் இவ்வழக்கம் தலைமுறை தலைமுறையாகத் தொடந்துள்ளதையும் அறியமுடிகிறது. எனவே ஒவ்வொரு இனக்குழுக்களுக்கெனச் சில வழக்கங்களைத் தொடர்ந்து பின்பற்றி வரும்போது அதுவே, நாளடைவில் அவர்களுக்குரிய தனித்த மரபாக எடுத்துக் கொள்ளலாம்.

விருந்தோம்பல்

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவாகும். பழந்தமிழர் பாரம்பரிய பண்புகளில் ஒன்றே விருந்தோம்பல். தம் வீட்டிற்கு வந்த விருந்தினரை அழைத்து மனம் மகிழ்ந்து உணவளிப்பது தமிழர்களின் பண்பாகும். அப்பண்பின் சிறப்பினை இலக்கியங்களின் மூலம் அறியலாம். புறநானூறு பாடல்,

''நடுகற் கைதொழுது பரவு மொடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே '' - (புறம்.பா.306)

அடிகள் மூலம் பெண் நடுகல்லைத் தொழுது, இடைவிடாமல் விருந்தினரை நான் எதிர்கொள்ளப் பெறுவேனாக என்பதிலிருந்து சங்க கால மகளின் விருந்தோம்பல் பண்பு வெளிப்படுகிறது. அவ்வாறே, சாயாவனத்தில் இடம்பெறும் சிவனாண்டித் தேவர் மருமகள் குஞ்சம்மாள் வீட்டிற்கு வந்த சிதம்பரத்தையும் உணவருந்த அழைத்து உணவு வழங்கியமையும் காலம்காலமாகத் தமிழரின் விருந்தோம்பல் பண்பினை வாழ்வின் முக்கியமான ஒன்றாகக் கருதலாம்.

'உள்ளே வாழைச் சருகில் பிழிந்து வைத்த பழையதும் ஒரு கிண்ணத்தில் கட்டி எருமைத் தயிரும் இருந்தன. இலையின் ஒரு பக்கத்தில் சுண்டக் குழம்பு; இன்னொரு பக்கத்தில் சுட்ட கருவாட்டுத்துண்டு' (சாயாவனம் – 82) இவ்வரிகள் மூலம் சாயாவன மக்களின் வாழ்வில் விருந்திடும் வழக்கத்தினை அறிந்து அதனைப் பின்பற்றுவதையும் அறியலாம். விருந்தினரை வீட்டிற்கு அழைத்து உணவிடல் என்பது விருந்தோம்பலுக்குரிய முக்கிய வழக்கமாகும். இதுபோன்ற வழக்கம், இப்போதும் தொடர்ந்து மக்களால் கடைபிடிக்கப்படுகின்றன. இவை மனிதர்களின் அறத்தினை வெளிப்படுத்துவன எனலாம். அந்த வகையில், அற இலக்கியமான திருக்குறளில் திருவள்ளுவர் 'விழுந்தோம்பல்' எனும் ஒர் அதிகாரத்தையே கொடுத்துள்ளார். மனித வாழ்வில் விருந்தோம்பல் பண்பு சிறந்த வழக்கமாகி விட்டன எனலாம்.

மருத்துவம்

இயற்கையோடு இயைந்த வாழ்ந்த மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட காயம், நோய்களுக்கு இயற்கையிடம் இருந்தே குணப்படுத்தும் மருந்தை பெற்றனர். இவை நாட்டுப்புற மருத்துவத்தோடு நெருங்கிய தொடர்புடையதாகும். ''இயற்கையிலிருந்து கிடைக்கும் பொருட்களைக் கொண்டு தயாரிக்கும் மருந்துகளை உபயோகப்படுத்தும் முறையினால் இம்மருத்துவ முறை இயற்கை என்று பெயர் பெற்றது'' (நாட்டுப்புற மருத்துவம் – ஓர் ஆய்வு.ப.18) என இயற்கை மருத்துவத்திற்குக் க,காந்தி தம் நூலில் விளக்கம் அளிக்கிறார். இக்கருத்து இயற்கை மருத்துவத்தினைக் குறித்த புரிதலை நமக்களிக்கின்றது. இவ்வாறு, நாவலிலும் சாயாவனத்தில் வாழும் மக்களும் இயற்கை மருத்துவம் குறித்து அறிந்துள்ளதை, ''ஒருவாட்டி எங்க அப்பாவுக்கு ஒரு காயம்; பெரிய அறுவா பட்டுடுச்சு. எங்க அம்மா, நாயுருவியும் பூண்டும் வச்சு, ஒட்ட ஒட்ட அரைச்சுப் போட்டாங்க. ரெண்டே நாளுலே காயம் ஆறிப் போயிடுச்சு.'' (சாயாவனம்.ப.59) கருத்தின் வழியே அறியலாம். இக்கருத்திலிருந்து இயற்கை மருத்துவமானது, நாட்டுப்புற மக்களிடம் தற்போதும் வழக்கத்தில் இருப்பதைக் காணமுடிகின்றன. இம்மருத்துவம் வாய்வழியாகத் தலைமுறை தலைமுறையாகத் கற்பிக்கப்படுகிறது. இக்கருத்தினை மேற்கூறிய நாவலின் வரிகளின் மூலமே அறிய முடிகிறது. அதாவது தன்னுடைய தாய் தந்தையின் மூலமே எந்த பச்சிலையினால் வெட்டுக் காயத்தைக் குணப்படுத்த பயன்படுத்தலாம் என்றறிகின்றனர். ஆயினும் இக்கால ஓட்டத்தில் அதனை நாடிச்செல்வோர் மிகச் சொர்ப்பமே எனலாம்.

தற்சார்பு வாழ்க்கை

சாயாவனத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை இயல்பான மற்றும் ஆடம்பரமற்ற வாழ்க்கையே வாழ்ந்து வந்துள்ளனர். அதனை நாவலில் ஆசிரியர் பதிவு செய்துள்ளமை அவ்வாழ்க்கையைப் பலரும் வாழ வேண்டும் என்று ஏங்கும் வகையில் நாவலில் சில காட்சிகளை அமைத்துள்ளார்.

''புளிக்கு, கடைக்குப் போக வேண்டியதில்லை; ஐயர் தோட்டத்தில் உலுக்கித் தேவர் கொண்டுவந்து தருவார். வீட்டுக் கொல்லையில் மிளகாய்ப் பயிராகும். செட்டியார் காணம் போட்டு நல்லெண்ணெய் தருவார்; அதற்குக் கணக்கில்லை. செக்கடிக்குப் போனால், வேண்டுமென்ற வரையில் கொண்டு வரலாம்; கேள்வி முறை கிடையாது. சொந்தக் காணம் மாதிரி.

துணிகளுக்குத்தான் மாயவரம் போக வேண்டும் – பத்து மைல் நடைப்பயணம்; வண்டியில் போனால் செட்டியார் வீட்டு வாசலில் இறங்கலாம். செட்டியார் வீட்டுத் தறி சொந்தத் தறி போல – தேவையான போது வேட்டி, புடவை, துண்டு எடுத்துக் கொண்டு, அறுவடைக்குப் பிறகு, நான்கைந்து பேராகச் சேர்ந்து வண்டியில் நெல் அனுப்புவார்கள். இதற்கெல்லாம் துல்லியமான கணக்குக் கிடையாது; நினைவும் வார்த்தையுந்தான் கணக்கு.'' (சாயாவனம்.ப.85) இவ்வாழ்க்கையில் சரியான மற்றும் துல்லியமான கணக்கென்று கிடையாது. அதைப் போல் சொல்லும் வார்த்தையே உண்மை என நம்பினார்கள். அதனாலேயே,

அவர்கள் வார்த்தைகளை நம்பினார்கள். அவர்கள் வாழ்க்கை வாய்ச்சொற்களின் மீது ஆதாரப்பட்டிருந்தது. இதிலிருந்து அவர்களின் வாழ்க்கையில் வழக்கமும் வார்த்தையும் முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது எனலாம். சாயாவனத்தில் பணத்தைக் காண்பதற்கு முன்பு இருந்ததை விட வாழ்வை விடப் பணப்புழக்கம் ஏற்பட்டபின்பு பல இன்னல்களுக்கு ஆட்படுகிறது சாயாவன மக்களின் வாழ்க்கை.

வழிபாடு

மனித சமுதாயத்தில் வழிபாடு என்பது மிகவும் இன்றியமையா ஒன்றாகக் கருதப்படுகிறது. மக்கள் பொதுவாக ஒரு செயலைச் செய்வதற்கு முன் முதலில் தங்களுக்குரிய தெய்வத்தின் ஆசீர்வாதம் மற்றும் உதவியை நாடி, அந்தச் செயலில் வெற்றி பெற வேண்டும் என்ற நம்பிக்கை வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்புடையது எனலாம். அந்த வகையில் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் பதிற்றுப்பத்தில் ''இந்தக் கொற்றவையைச் சேர மன்னன் முதலில் வழிபட்டே பின்னர்ப் போர் முதலியற்றில் ஈடுபட்டான் என்னும் குறிப்பும்,

உருகெழு மரபின் அயிரை பரவியும்
கடல் இகுப்ப வேல் இட்டும்
உடலுநர் மிடல் சாய்த்தும் (பதிற்.80:19-21)

எனவரும் அடிகளால் அறியலாகும்.'' (சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்.பக்.99.) அந்த வகையில் சாயாவனம் நாவலில் இடம்பெறும் மக்கள் வாழ்க்கையில் பல்வேறு இடங்களில் தங்களுக்குரிய தெய்வங்களை வழிபடுகின்றனர். முதலாவதாக, சிதம்பரம் தான் வாங்கிய காட்டை அழிப்பதற்கு முன், தேவர் முழுமனத்துடன் இஷ்டதெய்வமான மந்தையாவை இருகரம் கூப்பி வழிப்பட்டத்திலிருந்து வழிபாட்டின் நிலையை அறியலாம்.

''அலக்கை, எட்டிய, வசதியான ஒரு முள்ளில் மாட்டிவிட்டுக் கை கூப்பி, மனமொன்றிய நிலையில் மந்தையத் தேவரைத் தொழுதார். அஃது ஒரு மரபு; ஒரு பழக்கம். வேலையைத் தொடங்குவதற்கு முன்னே மனத்திற்குள்ளேயே வழிபாடு. இஷ்டதெய்வம் உத்தரவு கொடுத்துவிட்டது மாதிரி, உடலைச் சிலிர்த்துக்கொண்டு முன்னோக்கிச் சென்றார்.'' (சாயாவனம்.ப.93) என்றதன் வழி சாயாவனத்தில் வாழும் மக்கள் ஒரு செயலை தொடங்குவதற்கு முன் தங்களின் குலதெய்வத்தை வழிபடும் வழக்கத்தைக் கொண்டிருப்பதை அறிய முடிகிறது. இதேபோல் ஒரு செயலை தொடங்குவதற்கு முன் தங்களுக்குரிய தெய்வத்தை வழிபடும் முறை சமகால மக்களிடையேயும் காணமுடிகிறது. ஆகவே வழிபாட்டு முறையை,

முதலில் ஒரு தலைமுறையினர் நிகழ்த்த அடுத்தத் தலைமுறையினரும் அதனைப் பின்பற்றும் போது அவர்களுக்கேயுரிய தனித்த மரபு சார்ந்த வாழ்வியல் வழக்கமாகக் கொள்ளலாம்.

சிறுதெய்வ வழிபாடு

கிராம்ப்புற மக்கள் சிறுதெய்வ வழிபாட்டில் ஒன்றான குலதெய்வ வழிபாட்டில் மிகுதியாக ஈடுபடுகின்றனர். சிறுதெய்வங்கள் பற்றிச் சு. சக்திவேல் கூறும் கருத்து, ''சிறு தெய்வங்களில் மாரியம்மன், அய்யனார் போன்றவை பெரும் பாரம்பரிய மரபை(great tradition) நோக்கி சென்று கொண்டிருக்கின்றன.'' (நாட்டுப்புற இயல் ஆய்வு.ப.226) வழிபாடு என்பது மக்களின் வாழ்வில் ஒர் அங்கமாக இருப்பதை அறிந்து கொள்ள முடிகின்றனது. அதனாலேயே எந்தவொரு செயலை தொடங்குவதற்கு முன்பும் வழிபாடென்பது அவர்களது வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப் பிணைந்து விட்டன எனலாம். இக்கருத்திலிருந்து வழிபாட்டின் நீட்சியின் மூலம் மக்களின் பாரம்பரிய பண்பாட்டை அறிந்து கொள்ள முடியும் எனலாம்.

இவ்வாறு, சாயாவனத்தில் வாழும் மக்களும் சிறுதெய்வ வழிபாட்டை மேற்கொண்டுள்ளனர். காட்டை அழிப்பதற்கு முன்பு தாங்கள் வழிபடும் தெய்வங்களின் பெயர்களைச் சொல்லி, பற்ற வைக்கும் தீயால் கேடுகள் விளையாவண்ணம் காக்குமாறு வேண்டிக் கொள்கிறார் தேவர். ''பய பக்தியோடு தீயை நோக்கிய தேவர் மேல்துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டார்.

''தாயே, மாரி! ஏழைக்காத்தா! மந்தையா! பெரிய கருப்பு! – நீங்க எல்லாம் பக்கத்துணையா இருந்து, ஒரு பங்கமும் வராம காப்பாத்தனும்'' என்று பரவசத்தோடு தீயைத் தொழுதார்.

அவர் கண்கள் மின்னின; முகத்தில் ஒரு பிரகாசம். 'ஹ!' என்ற கூச்சல். உடம்பு சிலிர்த்து. எதிர்பார்த்த உத்தரவு கிடைத்துவிட்டது.

''நம்பச் சாமி சரியின்னுடுச்சுங்க, தம்பி'' என்று தேவர் தீச்சட்டியை எடுத்துக்கொண்டு உள்ளே போனார்.'' (சாயாவனம்.ப.118) என்ற கருத்தின் மூலம் வழிபாடென்பது இயற்கையின் மீதான பயம் கலந்த நம்பிக்கையின் வெளிபாடு எனலாம். அதேபோல் மேற்கூறியவை மக்கள் வழிவழியாகப் பின்பற்றிக்கொண்டு வரும் வழக்கத்தின் ஒரு கூறாகும்.

மேற்கூறியவாறு, சாயாவனத்தில் வாழும் பளியரின மக்கள் சிறுதெய்வங்களான மாரி, ஏழைகாத்தா, மந்தையா மற்றும் பெரிய கருப்பு ஆகியவற்றை வழிபடுவதை நாவலின் வழியே காணமுடிகின்றன. இதன்மூலம் சாயாவனத்தில் வாழும் மக்கள் வழிபாட்டில் தனித்த பழக்கவழக்கத்தையும் பண்பாட்டையும் கொண்டுள்ளதை தெரிந்து கொள்ள முடிகின்றது.

மழை வேண்டி வழிபாடு

மழை வேண்டி வழிபாடு என்பது நாட்டில் மழை இல்லாமல் பொய்த்து போகும் போது விவசாயம் மற்றும் மற்ற தேவைகளுக்காக மழைப்பொய்ய வேண்டுமென்று மக்களால் வேண்டிக்கொள்ளும் ஒரு முக்கிய வழிபாட்டு முறையாகும். இம்மழை வழிபாடானது, மக்களால் பல்வேறு முறைகளைக் கொண்டு வழிபடுகின்றனர். மழை வேண்டி தெய்வத்திற்குப் பூசைசெய்து வழிபடும் வழக்கம் தற்போதும் கிராமப்புறங்களில் காணமுடிகிறது. தமிழகமெங்கும் மாரியம்மன் வழிபாடு காணப்படுகிறது. மக்கள் மாரியம்மனை மழையின் கடவுளாக வழிபடுகின்றனர்.

''ஆருகடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது
மாரிகடன் தீர்த்தவருக்கு மனக்கவலை தீருமம்மா'' (நாட்டுப்புற இயல் ஆய்வு.ப.203) எனச் சு.சக்திவேல் மழை குறித்து நாட்டுப்புற மக்களிடயே இருக்கும் நம்பிக்கையைத் தம் நூலில் குறிப்பிடுகிறார். இக்கருத்தின் வழி 'மழை வேண்டி வழிபடுதல்' மக்களிடையே இருந்துள்ளதை அறியலாம். மேலும் நாவலில், ''அஞ்சு வருஷத்துக்கு முன்னெ, ஒரு வாட்டி மழை இல்லே; மழை

இல்லேயின்னா சுத்தமா மழையில்லே; ஏழு மாசமா. சித்திரை மாசம் போல வெயில் கொளுத்திச்சு. பயிரெல்லாம் கருகிப் போயிடுச்சு. ஆடு மாடுகளுக்குக்கூடத் தண்ணியில்லே. குளம் குட்டையெல்லாம் சுத்தமா வத்திப் போயிடுச்சு. வேண்டாத தெய்வமில்லே; போடாத பூசையில்லே ஆனா, மழை மட்டும் வர்லே. அந்த வருஷம் பொட்டு மழையில்லாம போயிடுச்சு...''(சாயாவனம்.ப.136) என்னும் கருத்தின் மூலம் மழை வேண்டி தெய்வத்தை வழிபடும் வழக்கம் மக்களிடம் இருப்பதைச் சாயாவனம் குறிப்பிடுகிறது. இதன்வழியே மழை வேண்டி வழிபடுதல் என்பது தொடர்ந்து பின்பற்றப்படுவதை இலக்கியங்களினால் அறியமுடிகிறது. இவ்வழிபாடு விவசாயக் கிராமப்புற மக்களிடையே இன்றும் வழக்கத்தில் இருக்கும் ஒரு முறையாகும். எனவே மழையின் தேவையை எண்ணி வாழும் மக்களின் வாழ்க்கையோடு இயைந்த ஒரு வழக்கம் சார்ந்த வழிபாடே எனலாம்.

இறப்புச் சடங்கு சார்ந்த வழக்கம்

மனித வாழ்க்கையில் பிறப்பும் இறப்பும் இயற்கையால் நிகழ்வனவாகும். அந்த வகையில், இறப்பின் போது பல்வேறு சடங்குகள் ஒவ்வொரு சமுதாயத்திற்கு ஏற்றவாறு நிகழ்த்தப்படுகின்றன. சடங்குகள் குறித்து, "தொடக்கக் காலத்தில் கூட்டங் கூட்டமாக வாழ்ந்து வந்த மனிதன் தன்னோடு வாழ்ந்து வந்த மற்றொரு மனிதன் திடீரென்று இறந்ததைக் கண்டு பயந்தான். ஆகவே அவ்வாறு ஏற்படும் பயத்தைப் போக்கிக்கொள்ளப் பலவகைச் சடங்குகளைச் செய்யத் தொடங்கினான்.''(தமிழ் மரபில் மரணச் சடங்குகள்.பக்.15.) கூறும் கருத்தின் மூலம் இறப்புச் சார்ந்த சடங்குகள் காலம்காலமாகப் பின்பற்றும் போது நம்பிக்கை சார்ந்த வழக்கமாக மாறுகின்றது எனலாம். மேலும் தமிழர்களின் இறப்புச் சடங்கில் 'ஒப்பாரி பாடல்கள்' பாடும் வழக்கமும் உண்டு. கிராமப்புறத்தில், நல்ல காரியங்களுக்குக் கலந்து கொள்ளா விட்டாலும் தவறில்லை, ஆனால் துக்கத்துக்குக் கலந்துக்கொள்ள வேண்டும் என்பார்கள். அவ்வாறு சாயாவனம் நாவலில் இறப்புச் சார்ந்த சடங்குகளில் ஒன்றான கோடி எடுத்து வரும் சடங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்துச் சி.சுந்தரேசன் தம் கட்டுரையில், "கணவன் இறந்தாலும் மனைவி இறந்தாலும் பெண்ணின் தாய் வீட்டிலிருந்து இறுதிச் சடங்கு செய்யும் வழக்கம் உள்ளது. இதை, பொறந்த இடத்துக் கோடி என்று கூறுவார்கள். அதில் நெல், அரிசி, மஞ்சள், குங்குமம், வளையல், தலைக்குப்பூ, எண்ணெய், சீயக்காய், பச்சை மட்டை (கீத்து) போன்றவற்றை எடுத்து வருவார்கள். கோடிக்குப் பெரும்பாலும் மல்லுத்துணியைத் தான் எடுத்து வருகின்றனர்.''(இறப்புச் சடங்குகள்.) என விளக்கியுள்ளார்.

"ஏழு மாதக் கர்ப்பிணியான அன்னகாமு ஜீரத்தால் காலமானாள். ஐந்து நாள் ஜீரம், அவள் மூச்சை அடக்கிவிட்டது. இங்கேயே ஊர் முழுவதும் வந்து குழுமியிருக்கிறது!

நடுப்பகலுக்குச் சற்றுப் பின்னர் அன்னகாமுவின் பெரியண்ணன், செட்டியார் வீட்டிலிருந்து கோடி எடுத்து வந்தான். முரட்டுச் சிவப்புச் சேலை. அவன் கையில் கொடுக்கும் போது செட்டியார் குலுங்கக் குலுங்க அழுதாராம். கல்யாணத்திற்கு, விலையுயர்ந்த தாழாம்பூக் கரையிட்ட மஞ்சள் புடவையைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தவர் அவர்தான். வருஷம் ஒன்றரை ஆகவில்லை; கடைசிச் சேலை தருகிறார்.'' (சாயாவனம்.ப.109) இவ்வடிகளால் இறந்தவர்களுக்குக் கடைசியாகப் புது வேட்டி, சேலை கொடுப்பதைக் கோடி என்று சொல்வது அறிய முடிகிறது. இவ்வழக்கம் மக்களிடையே இன்றும் புழக்கத்தில் இருக்கின்றது. மேலும் இறப்புக் குறித்த புரிதலை இரண்டே வரிகளில் நாவலில் குறிப்பிட்டுள்ளமை சிறப்பே,

"என்ன விசித்திரம்! ஒன்றின் அழிவு தீயினிடமும், இன்னொன்றின் அழிவு மனிதர்களிடமும் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது! (சாயாவனம்.ப.117). தொடர்ந்து காலம்காலமாக மக்களிடம் பின்பற்றி

வரும் பல வழக்கங்களால் உறவுகளிடையே நெருக்கத்தை ஏற்படுத்துகின்றன. வாழ்க்கைக்கு உகந்த வழக்கங்களைச் சேகரிப்பதும் காப்பதும் சமூகத்தில் வாழும் அனைவரின் சமூகக் கடமையாகும்.

பண்டமாற்று முறை

பண்டமாற்று முறை என்பது, ஒரு பொருளைக் கொடுத்துத் தங்களுக்கு வேண்டிய மற்றொரு பொருளை பரிமாறிக் கொள்ளும் பழங்கால முறையாகும். இம்முறை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலத்தில் வாழும் மக்களிடையே பழக்கத்தில் இருந்துள்ளது. அந்தவகையில், சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலத்தில் வாழும் உப்பு வணிகர் மாட்டு வண்டிகளிலே நெல்லைக் கொண்டு வந்து கொடுத்து உப்பை மாற்றிக் கொண்டு போனார்கள் என்று நற்றிணைப் பாடல் கூறுகிறது.

‘‘தந்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து
பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி’’ (நற்.183.1-2)

இவ்வடிகள் மூலம் மருதநிலத்தில் வாழும் வணிகர்கள் தமது நாட்டில் விளைந்த வெண்ணெல்லை வண்டிகளில் ஏற்றிச் சென்று விற்று அதற்கு மாற்றாக நெய்தல் நிலப்பகுதியில் விளைந்த உப்பினைப் பெற்றுத் தமது நாட்டுப்பகுதியில் விலைகூறி விற்பர் என்றறியலாம். மக்கள் ஒரு பொருள் கொடுத்து வேண்டிய மற்றொரு பொருளைப் பெற்றுக் கொள்ளும் பண்டமாற்றுமுறை பண்டைய காலத்தில் இருந்தே வழக்கத்தில் இருந்துள்ளதை அறியலாம். மயிலை சீனி. வேங்கடசாமி தம் நூலில், ‘‘சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர் அன்றாடத் தேவையான அரிசி, பருப்பு, உப்பு, பால், தயிர், மீன், இறைச்சி முதலான பொருட்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்றுச் செய்து கொண்டார்கள். பெரிய பட்டினங்களிலும் நகரங்களிலும் காசு கொடுத்துப் பொருளை வாங்கும் முறை இருந்தபோதிலும் ஊர்களிலும் கிராமங்களிலும் பொதுவாகப் பண்டமாற்று முறையே வழக்கத்தில் இருந்தது.’’ (பழங்காலத் தமிழர் வணிகம்.பக்.12). இவ்வாறே சாயாவனத்தில் வாழும் மக்களும் தங்கள் வாழ்வில் பண்டமாற்று முறையில் பொருட்களை வாங்கியுள்ளதை நாவலின் மூலம் அறிய முடிகின்றனது . அச்செய்தி,

‘‘முணுமுணுத்துக் கொண்டிருந்த பாட்டியைப் பார்த்துச் சிதம்பரம், ‘இப்படி வாங்க, பாட்டீ; உங்களுக்கு என்ன வேணும்.?’’ என்று கேட்டான்.

‘‘இஞ்ச பாருங்க, தம்பி. பதக்கு நெல்லு இருக்கு. அளந்து கிட்டு ஒரு சேர் நல்லெண்ண; ரெண்டுபடி கொத்தமல்லி கொடுன்னா, பய, ‘காசு கொண்டா; இஞ்ச நெல்லு எடுத்துக்க மாட்டேங்'கறான்.’’

பணத்தை வாங்கிக்கொண்டு சாமான்கள் கொடுக்கக் கோமுட்டிச் செட்டியும், அப்துல் காதர் ராவுத்தரும் முன்வரவில்லை. பணம் கொண்டு போனவர்களையெல்லாம், ‘நெல்லு கொண்டாங்க; இந்தச் சனியன் வேணாம்’’ என்று விரட்டியடித்ததார்கள். (சாயாவனம்.ப.175) என்னும் கருத்தின் வாயிலாகப் பணம் என்பது மக்களிடம் புழக்கத்தில் இல்லாத காலகட்டத்தில், பெரும்பாலும் பண்டமாற்று முறையைப் பின்பற்றியதை இதனால் அறிய முடிகின்றது. இக்காலகட்டத்தில் நகர்புறத்தில் இப்பழக்கம் இல்லாவிட்டாலும் நாட்டுப்புறத்தில் அதாவது கிராமங்களில் வழக்கத்தில் இருப்பதைப் பார்க்கலாம். இப்பண்டமாற்றத்தால் மக்களிடையே நல்லுறவு ஏற்படுத்தும் வழக்கம் எனலாம்.

முடிவுரை

சாயாவனம் நாவல், தமிழ்ச் சமூகத்தில் தொடர்ந்துவரும் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் பண்பாட்டு மரபுகளைப் பதிந்து வைத்துள்ளது. கிராமப்புற மக்களின் வாழ்க்கைமுறை, இனக்குழுக்களாக வாழும் பழக்கம், விருந்தோம்பல் பண்பு, இயற்கை மருத்துவம், வழிபாடு, மழை வேண்டல், இறப்புச் சடங்குகள் மற்றும் பண்டமாற்று முறை போன்றவை, அந்தச் சமூகத்தின்

அடையாளமாகவும் வாழ்வின் ஓர் அங்கமாகவும் இருந்து வருகின்றன. முன்னோர்கள் கடைபிடித்து வந்த நம்பிக்கைகள், சிலவற்றின் காரணங்களை அறியாமல் இன்றும் தொடரும் நிலையில் இருக்கின்றன. ஆனால் அவை மக்களிடையே ஒற்றுமையும், மரபினை பிழையாமலும் பாதுகாத்து வருகிறது. இதன்வழி, ஒவ்வொரு நம்பிக்கையும், பழக்கவழக்கமும், வாழ்வியல் அனுபவங்களின் கூறாகவும், சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் ஊக்கமாகவும் இருந்து, அந்தச் சமூகத்தின் பண்பாட்டையும் வாழ்வியலையும் விவரிக்கிறது.

சாயாவனம் நாவல் வழியே, தமிழரின் வாழ்வியல் மரபுகளையும், சமூகப் பண்பாட்டு நிலைகளையும், பண்பாட்டு அடையாளங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது.

துணைநூற் பட்டியல்

1. காந்தி.க, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-600113.

2. கந்தசாமி.சா, சாயாவனம், காலச்சுவடு பப்ளிகேஷன் (பி) லிட்., திருநெல்வேலி-629001.

3. பிரபு.பா, பழந்தமிழக இனக்குழு வாழ்வியல், https://keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/42594-2021-09-12-03-41-24.

4. செல்வராசு.அ, சங்க இலக்கியம் உரைவேறுபாட்டுக் களஞ்சியம் 12 புறநானூறு தொகுதி - 2, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை-600050.

5. சாந்தி.ச, நாட்டுப்புற மருத்துவம் ஓர் ஆய்வு, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்-613005.

6. சண்முகம் பிள்ளை.மு, சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-600113.

7. சக்திவேல்.சு, நாட்டுப்புற இயல் ஆய்வு,

8. இரத்தினதேவி மதியாபரணம் (தொகுப்பு), சைவ தமிழ் ஆன்மிகப் பணியாளர் திட்ட வெளியீடு.

9. சுந்தரேசன்.சி, இறப்புச் சடங்கு https://www.tamilvu.org/tdb/titles_cont/folklore/html/death%20ritual.htm

10. பாலாஜி.க, நற்றிணை உரைவேறுபாடு தொகுதி-1, பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., இராயப்பேட்டை, சென்னை – 14.

11. வேங்கடசாமி.மயிலை சீனி, பழங்காலத் தமிழர் வணிகம் (சங்க காலம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை-600098.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

திணைக்கோட்பாடு நோக்கில் சம காலப் பெண்ணியப் படைப்புகளின் ஆய்வு முன்னோடிகள்

Trailblazing Studies of Contemporary Feminist Literature, Examined from a Thinai Theoretical Perspective

சே. நிர்மலா[1], முனைவர் அ. மரிய செபஸ்தியான்[2]

[1]ஆய்வாளர், (22PHD0268) முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி, விஐடி பல்கலைக்கழகம், வேலூர்.
Email: nirmala.s2022@vitstudent.ac.in, ORCiD: https://orcid.org/0009-0009-0453-9672
[2]உதவிப் பேராசிரியர், நெறியாளர், சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி
விஐடி பல்கலைக்கழகம், வேலூர்.
Email: mariasebastin.a@vit.ac.in, ORCiD: https://orcid.org/0009-0001-7269-6217

S. Nirmala, Research Scholar (23PHD0268), Full-time Ph.D. Research Scholar School of Social Sciences and Languages, VIT University, Vellore.
Dr. A. Maria Sebastian, Assistant Professor, Supervisor School of Social Sciences and Languages VIT University, Vellore.

Abstract:

This article, focusing on the Tinai கோட்பாடு (Tinai theory) established by Tolkappiyar, explores the Tamil people's lives, emotions, culture, religion, and social structures through Sangam literature. Tinai is a combination of land (nilam), time (pozhuthu), subject matter (karu), and characteristic emotions/states (uri). Based on this, aspects of human life such as love, profession, and social relationships are reflected in Sangam poems. Anthologies like Ettuthogai, specifically Kurunthogai and Agananooru, and Pathuppattu, highlight anthropological aspects through the literature of Tinai. Women played a significant role in Sangam literature, and their contributions formed the basis for feminist voices. Following this, contemporary women poets, in their pudukkavithai (new poetry), challenge social oppressions and strengthen women's self-awareness (suya buddhi), liberation, and emotions. By organizing these within the frameworks of Tinai theory, the article points out how Tamil literature, starting from Tolkappiyar's Tinai system, has, across time, recorded human emotions, cultural identity, and social changes right up to contemporary feminist creations.

Keywords: Tinai Theory, Sangam Female Creations, Contemporary Female Creations, People's Way of Life.

ஆய்வுச் சுருக்கம்:

இந்தக் கட்டுரை தொல்காப்பியர் வகுத்த திணைக்கோட்பாட்டை மையமாகக் கொண்டு, சங்க இலக்கியங்கள் வழி தமிழரின் வாழ்வியல், உணர்வுகள், பண்பாடு, சமயம் மற்றும் சமூகக் கட்டமைப்புகளை விளக்குகிறது. திணை என்பது நிலம், பொழுது, கரு, உரி ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகும். இதன் அடிப்படையில் மனித வாழ்வின் காதல், தொழில், சமூக உறவுகள் போன்றவை சங்கப் பாடல்களில் பிரதிபலிக்கின்றன. எட்டுத்தொகையான குறுந்தொகை, அகநானூறு

நூல்களும் மற்றும் பத்துப்பாட்டு போன்ற நூல்களும் திணையின் இலக்கியத்தின் வழியாக மானுடவியல் அம்சங்களை எடுத்துரைக்கின்றன. பெண்கள் சங்க இலக்கியத்தில் முக்கிய பங்கு வகித்ததோடு, அவர்களின் பங்களிப்புகள் பெண்ணியக் குரலின் அடிப்படையை அமைத்தமையில் அதனைத் தொடர்ந்து சமகாலப் பெண் கவிஞர்கள் புதுக்கவிதைகளில் சமூக அடக்குமுறைகளை எதிர்த்து, பெண்களின் சுயநினைவு (சுயபுத்தி), விடுதலை, உணர்வுகள் ஆகியவற்றை வலுப்படுத்துகின்றனர். அதனை திணேக்கோட்பாட்டின் அமைப்புகளில் தொகுப்பதன் மூலம் தொல்காப்பியத் திணைமுறையிலிருந்து தொடங்கி, இன்றைய பெண்ணியப் படைப்புகள் வரை, தமிழ் இலக்கியம் மனித உணர்வு, பண்பாட்டு அடையாளம், சமூக மாற்றங்களை காலந்தோறும் பதிவு செய்துவருவதை கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.
திறவுச் சொற்கள்: திணைக்கோட்பாடு, சங்க பெண் படைப்புகள், சமக்கால பெண் படைப்புகள், மக்களின் வாழ்வியல் முறை.

இலக்கிய விமர்சனங்கள்

தமிழ் இலக்கிய ஆய்வுகளில் தொல்காப்பியர் வகுத்த திணைக்கோட்பாடு வாழ்வியல் சார்ந்த அடிப்படைச் சிந்தனையாகக் கருதப்படுகிறது. இதனை எஸ்.ஶ்ரீகுமார், து.சீனுசாமி போன்ற ஆய்வாளர்கள் நிலம், பொழுது, கரு, உரி ஆகிய நான்கு கூறுகளின் அடிப்படையில் மனித வாழ்க்கை, உணர்வு, சமூகத் தொடர்புகளை விளக்குகிறது என்று வலியுறுத்தியுள்ளனர். சங்க இலக்கிய ஆய்வுகள் பெண்களின் பங்கு மற்றும் அவர்களின் குரல் சமூக, பண்பாட்டு அடையாளங்களை பிரதிபலித்ததை சுட்டிக்காட்டுகின்றன. முன்னதாக இடம்பெற்ற ஆய்வுகள் திணைக்கோட்பாட்டை வாழ்வியல், சமயம், உளவியல், அழகியல் எனப் பல கோணங்களில் விரிவாக ஆராய்ந்துள்ளன. பெண்ணிய இலக்கிய விமர்சனத்தில் சல்மா, சுகிர்தராணி, மலதி மைத்ரி போன்ற சமகாலப் பெண் கவிஞர்கள் பெண்களின் உடல்–உளவியல் அனுபவங்கள், அடக்குமுறை, சுயநினைவு மற்றும் விடுதலை போன்ற தலைப்புகளைப் பிரதானமாக வெளிப்படுத்தியுள்ளனர். இருந்தாலும், முன்னைய ஆய்வுகள் பெரும்பாலும் திணை அல்லது பெண்ணியம் என தனித்தனி கோணங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. திணைக்கோட்பாட்டின் வாழ்வியல் அடிப்படையிலும், சமகாலப் பெண்ணிய இலக்கியத்தின் சமூக, உளவியல் குரலும் இணைந்துள்ள ஆராய்ச்சிகள் குறைவாக இருப்பது, இத்துறையில் புதுமையான ஆய்வுக்கான இடைவெளியை வெளிப்படுத்துகிறது. எனவே, திணைக்கோட்பாட்டு நோக்கில் சமகாலப் பெண்ணியப் படைப்புகளை ஆராய்வது, பழந்தமிழ் இலக்கிய மரபின் தொடர்ச்சியையும், நவீன பெண்ணியக் குரலின் புதுமையையும் ஒருங்கே வெளிப்படுத்தும் புதிய முன்னோடியாக அமைகிறது.

திணைக்கோட்பாடு

தொல்காப்பியர், தமிழரின் வாய்மொழி வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு திணை கோட்பாட்டை இலக்கண வடிவமாக வகுத்தார். திணை என்பது நிலம், பொழுது, கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய இயற்கைச் சூழல்களின் ஒருங்கிணைப்பு ஆகும். ஒவ்வொரு திணைக்கும் தனித்துப் பொருந்தும் உரிப்பொருள்கள் உள்ளன. அவை தன் திணைக்குள் மட்டுமே அமைய வேண்டும் எனத் தொல்காப்பியர் வலியுறுத்துகிறார். இக்கோட்பாடு, இலக்கியத்தில் நிலைக்கும் நெறிமுறைகளைக் குறிக்கும் முக்கியக் கருவியாகவும், தமிழரின் பண்பாட்டு அடையாளமாகவும் அமைகிறது. இதனைத் தொடர்ந்து **ப.கணேஷ்வரி எழுதிய** *“திணை இலக்கணத்தில் சமயக் கொள்கை ஊடாட்டம்”* என்ற

கட்டுரையில் (IOR PRESS, Year: 2021), தமிழில் உலகியல் வாழ்வைத் திணை முறையில் வகுத்திருக்கும் இலக்கண அமைப்பின் முக்கியத்துவத்தையும், அதன் அடிப்படையில் சமயக் கொள்கைகளின் ஊடாட்டத்தை ஆராய்கின்றார். சமுதாயத்தின் உற்பத்தி மற்றும் வளர்ச்சியால் அதன் கலை, இலக்கியம், சமயம் மற்றும் பண்பாடுகள் பாதிக்கப்படுகின்றன என்கிறார். தொல்காப்பிய காலம் சமுதாய ஒற்றுமையின் மறுஉயிர்ப்புக் காலமாக விளங்குகிறது; அந்நூலில் இடம்பெறும் தெய்வக் கோட்பாடுகள் சமுதாயத்தின் சமய, சமூக சூழ்நிலைகளை பிரதிபலிக்கின்றன. புத்தமத மற்றும் சமணமத சார்பிலான வீர சோழியமும் நெமிநாதரும் தெய்வக் கோட்பாட்டை உயர்திணை கூறுகளில் இணைக்கின்றனர். நன்னூல் போன்ற நூல்கள் சமஸ்கிருதத் தாக்கத்தையும், அதன் வழியாக தமிழிலக்கணத்தில் தெய்வத்துடன் தொடர்புடைய கோட்பாடுகள் எப்படி இடம்பெருகின்றன என்பதையும் விளக்குகின்றன. **சி.சதானந்தன்** எழுதிய *“தொல்காப்பியத்தில் அகத்திணை இலக்கியவகைக் கோட்பாடு”* என்ற ஆய்வுக்கட்டுரை (IOR PRESS, year 2022) தொல்காப்பியத்தில் காணப்படும் அகத்திணை இலக்கிய கோட்பாட்டை விரிவாக ஆய்வு செய்கின்றது. இக்கட்டுரை, தமிழ் அகத்திணை மற்றும் அகம்பாட்டு பாரம்பரியங்கள் இலக்கிய இலக்கணக் கோட்பாடுகளுடன் எவ்வாறு பிணைந்துள்ளன என்பதை ஆராய்கின்றது. தொல்காப்பியர் மற்றும் பல மொழிபெயர்ப்பாளர்களின் மனித உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பல அகத்திணைப் பாடல்கள் உருவாகியுள்ளனர். அவை தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை இக்கட்டுரை விரிவாக விளக்குகிறது. அகத்திணை இலக்கியங்களை வகைப்படுத்தும் இலக்கணக் கோட்பாடுகளுக்கான மிக முக்கியமான ஆய்வாக இது அமைகிறது. **முனைவர் ப.சு. மூவேந்தன்** எழுதிய *“தொல்காப்பிய அக இலக்கண மரபில் மாறன் அகப்பொருள் சுட்டும் முதல், கரு, உரி”* எனும் ஆய்வுக்கட்டுரை (சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், October 2023) தொல்காப்பியத்தின் அக இலக்கண பாரம்பரியத்துடன் மாறனின் "அகப்பொருள்" என்னும் இலக்கியத்தை ஒப்பிட்டு ஆராய்கிறது. இக்கட்டுரை, தமிழ் இலக்கண வளர்ச்சியின் ஓர் அங்கமாக மாறன் அகப்பொருள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை சமூக மற்றும் உளவியல் கோட்பாடுகளுடன் இணைத்து விளக்குகிறது. குறிப்பாக, முதல், கரு, உரி ஆகிய அமைப்புகளின் அடிப்படையில் உள்ளடக்கங்களை பகுத்து விளக்குவதன் மூலம், அகப்பொருள் நூலின் இலக்கிய, இலக்கணப் பண்புகளை சிறப்பாக சுட்டிக்காட்டுகிறது. இதன் வாயிலாக, தொல்காப்பியத்திலிருந்து மாறன் வரை தமிழ் இலக்கணச் சிந்தனையின் பரிணாம வளர்ச்சியைப் பற்றிய மதிப்பீடும் வழங்கப்படுகிறது. அதில் **முனைவர் அர. கண்ணன்** எழுதிய **"குறுந்தொகையில் திணைசார் வாழ்வியல் – குறிஞ்சி நிலம்"** (பிரணவ் தமிழியல் ஆய்விதழ், April 2023) என்ற ஆய்வுக்கட்டுரை, சங்க இலக்கியங்களில் குறிஞ்சி நில மக்களின் சூழலியல் அடிப்படையிலான வாழ்வியலை நுணுக்கமாக ஆராய்கின்றது. தொல்காப்பியர் கூறிய முதல், கரு, உரி என்ற மூவகைப் பிரிவுகளின் அடிப்படையில் குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாட்டு அமைப்பு மற்றும் இயற்கைச் சூழலுடன் கூடிய ஒற்றுமை போன்ற அம்சங்கள் இக்கட்டுரையில் வெளிக்கொணரப்படுகின்றன. இயற்கையை தனித்து சித்தரிக்காமல், மக்கள் வாழ்வியலோடு பின்னிய ஒன்றாகக் காணும் சங்க இலக்கிய பார்வையை இக்கட்டுரை வலியுறுத்துகிறது. குறிப்பாக, **குறுந்தொகை** பாடல்களின் வழியாக குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கை, தொழில், காதல் உணர்வுகள் ஆகியவை சூழலியலை அடிப்படையாகக் கொண்டு எப்படி வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதையும், இது தமிழர்களின் தனித்துவமான வாழ்வியல் பார்வையை

Tamilmanam

எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதையும் இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது. இக்கட்டுரை, குறிஞ்சி நில சார்ந்த திணை வாழ்வியலை ஆய்வுசெய்ய விரும்பும் ஆய்வாளர்களுக்கான முக்கியமான இலக்கிய ஆதாரமாகும்.

அகத்திணையில் அமைந்த கைக்கிளை பெருந்திணையானது ஒருதலை மற்றும் பொருந்தா காமத்தை திணைக்கோட்பாட்டின் வழி அறியலாம், **மு.புவனேஸ்வரி எழுதிய "கைக்கிளை பெருந்திணை – சில அவதானிப்புகள்"** *(ijtlls, Jan 2021)* என்னும் கட்டுரையில், தொல்காப்பியத்தில் அகத்திணையில் உள்ள கைக்கிளை மற்றும் பெருந்திணையானது திணைகளை மையமாகக் கொண்டு, சங்ககாலத் தமிழர்களின் ஒருபுறக் காதல் உணர்வுகளை ஆய்வு செய்கின்றது. ஐந்திணை நிலங்களின் பின்னணியில் இளைய தலைமுறையின் காதல் வெளிப்பாடுகள், வாழ்க்கைமுறைகளுடன் இணைந்துள்ளதை எடுத்துரைக்கின்றது. இது அகத்திணை வழியாகத் தமிழ் வாழ்வியலின் உணர்வுப் படிநிலைகளை விளக்கும் முக்கிய ஆய்வாக அமைந்துள்ளது. **முனைவர் செ. சாந்தி** எழுதிய *"தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்"* என்ற கட்டுரையில் (ARAN, April 2025) தொல்காப்பியத்தை தமிழ் மொழியின் பழமையானதாகவும் முழுமையானதாகவும் ஆன இலக்கண நூலாக அமைகிறது. இந்நூலுக்கு முன்பும் சில இலக்கண நூல்கள் இருந்திருக்கலாம் என தொல்காப்பியமே சுட்டுவதாகக் கூறப்படுகின்றது. இக்கட்டுரை, தமிழரின் வரலாற்று பின்னணி, பண்பாட்டு வளர்ச்சி மற்றும் மானுடவியலை உள்ளடக்கிய பொக்கிஷமாக தொல்காப்பியம் விளங்குவதை விவரிக்கின்றது. இதன்மூலம், தமிழினத்தின் நாகரிகம், மரபு மற்றும் மதிப்பீடுகள் பற்றிய அடையாளம் இந்நூலின் வாயிலாக எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

சங்க இலக்கியம்

பொ.அகத்தியபாலா தனது "**எட்டுத்தொகையில் தமிழர் வாழ்க்கையும் சமூக கட்டமைப்பும்**" என்ற ஆய்வுக்கட்டுரையில் (அரிமா நோக்கு ஆய்விதழ், January - march 2024) எட்டுத்தொகைப் படைப்புகளின் வழியாக தமிழர் வாழ்வியல் மற்றும் சமூக அமைப்பின் பாரம்பரியத்தைக் கூறுகின்றார். சங்க இலக்கியங்கள் தமிழின் தொன்மையையும், தமிழர்களின் வாழ்வியல் சிறப்பியலையும் வரலாற்று ஆவணமாக பதிவு செய்கின்றன என்பதை வலியுறுத்துகிறார். சங்க காலத்தை மட்டுமல்லாது, தமிழர்களின் நீண்டகால பாரம்பரியத்தையும் இந்நூல்கள் சித்தரிக்கின்றன. குறிப்பாக, பாவனை இல்லாமல் உண்மையை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்ட இக்காலப் பாடல்கள், உலகின் பிற நாட்டினரும் தமிழை அறிய சங்க இலக்கியங்களைக் கற்க விரும்பும் அளவிற்கு, மனித வாழ்வின் பரந்த அனுபவங்களை பொதிந்துள்ளதாக அவர் விளக்குகிறார். எட்டுத்தொகை நூல்கள், பழந்தமிழ் சமூக கட்டமைப்புகளை, வாழ்வியலின் மாறுபாடுகளை, வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களை அழகியலுடன் பதிவு செய்துள்ளன என்பதையும், இவை எல்லா காலத்துக்கும் பொருந்தும் பண்பாட்டுக் களஞ்சியமாகத் திகழ்வதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். இதனை உணர்த்தும் விதமாக கி.பு. இந்துஜா எழுதிய "பத்துப்பாட்டில் வாழ்வியல் கோட்பாடுகளில் நிலங்கள்" (IRJT, Vol.4, 2022) என்ற ஆய்வுக் கட்டுரை, பத்துப்பாட்டு நூல்களில் காணப்படும் நிலவியல் சித்திரங்களின் வழியாக தமிழர் வாழ்வியலை வெளிப்படுத்துகிறது. திணை என்பது தமிழருக்கே உரிய கோட்பாட்டின் அடிப்படையில், நிலங்களை மையமாகக் கொண்டு, சங்ககால மக்களின் தொழில்கள், சமூக ஒழுக்கம், மற்றும் தெய்வ உணர்வுகளும் ஒருங்கிணைந்து, நவீன சமூகத்திற்கும் ஏற்ப பாடங்களைத் தருவதை இவ்வாய்வு கூறுகிறது.

இக்கட்டுரை, பத்துப்பாட்டு இலக்கியத்தின் வழியே திணைமுறையின் செயல்திறனையும் வாழ்வியலும் ஒன்றிணைவதை விளக்கும் முக்கியமான எடுத்துக்காட்டாகும். சரவணஜோதி சீதாராமன் எழுதிய "அற இலக்கியமும் திணைக்கோட்பாட்டு மரபும்" என்ற கட்டுரை (Journal of Tamil Studies, year 2020) தமிழ் இலக்கியங்களில் திணை மரபின் வெளிப்பாடுகளை ஒப்பீட்டு ஆராய்கின்றது. சங்க இலக்கியங்களில் இயற்கை நிலப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு பாடல்கள் அமைந்துள்ளன. ஆனால் நெறி இலக்கியங்களில் இயற்கைச் சூழலைக் குறிப்பிடாமல், நேரடியாகக் கருத்தையே (நெறிப்பொருள்) மையமாகக் கொண்டு பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரை வரலாற்றுச் சூழ்நிலை, இனகுழு கலப்புகள் ஆகியவைகளால் திணை கோட்பாட்டின் நோக்கில் ஏற்பட்ட மாறுபாடுகளை விளக்குகிறது. சங்க இலக்கிய மக்கள் இயற்கை சார்ந்த வாழ்க்கை முறையை கடைப்பிடித்ததால் இயற்கை பின்னணியில் பாடல்கள் உருவாகின; ஆனால் பின்னர் மத வழிகாட்டல்களின் தாக்கம் பெருகியபோது, நெறி இலக்கியங்கள் நற்பண்பு மற்றும் ஒழுக்கக் கூறுகளை மையமாகக் கொண்டதாக இக்கட்டுரை காட்டுகிறது. D. பெருமாள் மற்றும் V. இராமமூர்த்தி எழுதிய "சங்க இலக்கியத்தில் மருதத்திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்கள்" எனும் ஆய்வுக்கட்டுரை (*International Research Journal of Tamil,* year 2022) மருத நிலத்தின் பண்பாட்டு, சமூக மற்றும் இயற்கைச் சித்திரங்களை விரிவாக ஆய்வு செய்கின்றது. இக்கட்டுரை, மருத நிலம் தொடர்பான சங்கப்பாடல்களில் காணப்படுகின்ற முதல் (நிலம், காலம், தொழில்), கரு (சூழ்நிலை, மக்கள் வாழ்க்கை) மற்றும் உரிப்பொருள் (கவிஞரின் உணர்வு வெளிப்பாடு) என்பவை வகைப்படுத்தி, அந்நிலத்தின் உள்நிகழ்வுகளை இலக்கிய அழகியலுடன் ஒன்றிணைத்து சுட்டிக்காட்டுகிறது. குறிப்பாக, மருத நிலத்தின் விவசாய வாழ்க்கை, காதல் காத்திருப்பு, மற்றும் சமூக உறவுமுறைகள் போன்றவை, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை போன்ற சங்கப்பாடல்களின் வழியாக எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதையும், அவை தமிழரின் வாழ்வியல் அறக்கட்டளைகளுடன் எவ்வாறு ஊடாடுகின்றன என்பதையும் விளக்குகிறது. இக்கட்டுரை, மருதத்திணை சார்ந்த இலக்கிய ஆய்வுகளுக்கான முக்கியமான இலக்கிய ஆதாரமாக திகழ்கிறது.

அ.அருண்பெஜோ எழுதிய *"சங்க இலக்கியங்களில் வேளாண்மை திணை வழி ஒப்பீடு"* என்ற ஆய்வுக் கட்டுரையானது (ijtlls, December 2024) சங்ககாலத்தில் நிலப்பரப்பும் நீர்வளங்களும் குறித்த விவசாய நடைமுறைகளை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. சங்க இலக்கியங்களின் அடிப்படையில், ஐந்திணைகளின் வேறுபாடுகளைப் பொருத்து மண்ணின் தன்மை, நீர்வளக் கிடைப்பின் அடிப்படையில் தமிழர்கள் பின்பற்றிய விவசாய முறைகள் பற்றிய முக்கியமான தகவல்களை இக்கட்டுரை வழங்குகிறது. மற்ற நாடுகளில் மக்கள் துன்பத்தில் வாழ்ந்தபோதிலும், தமிழர்கள் தங்கள் சொந்த நிலத்திலேயே உற்பத்தி செய்து வாழ்ந்துள்ளனர் என்பதை வலியுறுத்துகிறது. இவ்வாய்வு, தமிழ் வாழ்வியலிலும், இயற்கை சார்ந்த உணவுப் பாதுகாப்பிலும் திணை கோட்பாட்டின் பங்களிப்பை ஆழமாகக் காட்டுகிறது. க.கருப்பசாமி எழுதிய "மருதத்திணை உள்ளுறை உமைவியல் அழகியல்" என்ற கட்டுரையில் (ijtlls, year 2019) மருதத்திணையின் பாடல்களில் வெளிப்படும் காதல் உணர்வுகள், இயற்கை மற்றும் உள்ளுறை உணர்வுகளை அழகியல் கோணத்தில் விரிவரிக்கப்படுகின்றது. மருத நிலத்தின் இயற்கைச் சிறப்புகளும், காதலர்களின் மனநிலைகளும், அந்தக் காலப்பண்பாட்டு அமைப்புகளும் எவ்வாறு இலக்கிய வடிவத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதையும் இக்கட்டுரை எடுத்துக்காட்டுகின்றது. குறிப்பாக,

சிறியபாடல்களில் வெளிப்படும் அழகியல் நுணுக்கங்கள் மற்றும் உள் உணர்வுகளைத் தேடிக்காட்டுவது இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாக உள்ளது. எனவே, மருதத்திணை சார்ந்த உள்ளுறை உணர்வு மற்றும் உணர்வுப்புலங்களை ஆய்வு செய்யும் முனைவோர்களுக்கான ஒரு முக்கியமான ஆதாரமாக இக்கட்டுரை விளங்குகிறது. **ச.உமாதேவி (2019),** *“குறுந்தொகையில் பெண் புலவர்கள்”* என்ற கட்டுரையில் (ijtlls, May-2019), **எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான “குறுந்தொகை”** என்னும் இலக்கிய தொகுப்பில் பெண்கள் புலவர்கள் அளித்த பங்களிப்பை வெளிக்கொணர்ந்து விளக்கியுள்ளார். மொத்தம் 205 புலவர்கள் இதில் பங்கேற்றிருந்தபோதிலும், அதில் **18 பேர் பெண்கள்** என்பது குறிப்பிடத்தக்கது. சங்க காலத்தில் பெண்கள் கவிதை மொழியில் தனித்த திறமையும், நுண்ணறிவும் கொண்டு இயற்றியுள்ளார்கள் என்பதற்கான உறுதியான சான்றுகளாகவும், அவ்வையார், வெள்ளிவீதியார், அல்லூர் நன்முலையார், காகைப்படினியார், ஆத்திமந்தியார், ஒக்கூர் மாசத்தியார் ஆகியோரின் பங்களிப்புகள் ஆய்வில் எடுத்துக்காட்டப்படுகின்றன. பெண்கள் புலமை, கலைச்சேர்க்கை மற்றும் உள்ளுணர்வு அம்சங்கள் குறுந்தொகைப் பாடல்களில் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பது இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கமாக அமைகிறது. சீ.அலக்ஸ் ஜேக்கப் (2019) தனது “அகநானூறு குறிஞ்சிப்பாடல்களில் உள்ளுறை” என்ற ஆய்வுக் கட்டுரையில் (ijtlls, year 2019) சங்க இலக்கியங்களில் காணப்படும் உள்ளுறை நுட்பங்களைத் தொகுத்து ஆராய்ந்துள்ளார். தொல்காப்பியத்தில் கூறப்படும் இலக்கணக் கொள்கைகள், குறிப்பாக உள்ளுறை மற்றும் அதன் சிறப்பம்சங்கள் குறித்த கோட்பாடுகள், இவ்வாய்வில் அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. வெளிப்படையாகச் சொல்ல இயலாத அல்லது கூர்மையான உணர்வுகளை, பிறரை புண்படுத்தாமல் நுணுக்கமாகச் சொல்வதற்கான அழகிய நுட்பமாக உள்ளுறை அமைந்துள்ளதாக அவர் விளக்குகிறார். குறிப்பாக, அகநானூறு குறிஞ்சித் திணையில் உள்ள பல உள்ளுறைகளின் வடிவமைப்புகள், சுருக்கமான சொற்களில் ஆழமான அர்த்தங்களை வெளிப்படுத்தும் திறன்கள், வாசகருக்கு உணர்ச்சி நெருக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இவ்வாய்வில் அலசப்பட்டுள்ளன. எனவே, குறிஞ்சித் திணை சார்ந்த உள்ளுறை ஆய்வுகளுக்கு இந்தக் கட்டுரை முக்கியமான வழிகாட்டியாக அமைகின்றது. **ல.பிரியதர்ஷினி** எழுதிய "திணையியல் நோக்கில் குறுந்தொகைப் பாடல்கள்" என்ற கட்டுரை (ijtlls, July 2025) சங்க இலக்கியங்களில் அகப்பொருள் வாழ்க்கை மற்றும் திணை வாழ்வியலை விரிவாக எடுத்துரைக்கின்றது. குறுந்தொகை அகத்திணை இலக்கியங்களில் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. இக்கட்டுரை, குறுந்தொகை பாடல்கள் மூலமாக திணை அடிப்படையிலான வாழ்வியல், சமூகமுறைகள், இயற்கை வழிபாடு, பெண்மையின் பண்புகள் மற்றும் விருந்தோம்பல் போன்று தொன்மையான பண்பாடுகளை ஆராய்கின்றது. திணையியல் கோட்பாடுகளுடன் கூடிய இயற்கையோடு இணைந்த காதலும், கடமையுணர்வும், ஆன்மிக வாழ்வும் நுணுக்கமாக வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு, *குறுந்தொகை* தமிழர் பண்பாட்டை பரம்பரை நோக்கில் வழிநடத்தும் இலக்கியச் சான்றாக அமைகின்றது என்பதை கட்டுரை வலியுறுத்துகின்றது. **அ.முரளி எழுதிய** *“சங்க இலக்கியத்தில் சமூக அமைப்பு, சமுதாய அமைப்பு மற்றும் உரிப்பொருள் சூழல்”* எனும் கட்டுரையில் (சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Published: 15-11-2022), சங்க இலக்கியத்தின் அடிப்படையில் தமிழக சமூக அமைப்புகளில் ஏற்பட்ட மாற்றங்களையும், அந்த மாற்றங்கள் உருவாக்கிய சமூக ஒழுங்கமைப்புகளையும் விரிவாக ஆராய்கின்றார். அகப் புற வாழ்வியல் மாற்றங்களால் உருவான

சமூகக் கட்டமைப்புகள் மற்றும் அவை எவ்வாறு வளர்ச்சி அடைந்தன என்பதையும் எடுத்துரைக்கிறார். குறிப்பாக சங்க மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறை, குடும்ப அமைப்பு, சமூக அமைப்புகள் மற்றும் சமூக ஒழுங்கமைப்புகள் ஆகியவை இக்கட்டுரையின் வழியாக தெளிவாக உரைக்கப்படுகின்றன.

சங்க காலப்பெண்களும் பெண் படைப்புகளும்

ச.சரவணன் எழுதிய *"சங்க கால மகளிர் வாழ்ந்த சமுதாய சூழல்"* என்ற கட்டுரையானது (ijtlls, July 2019) சங்க இலக்கியத்தின் அடிப்படையில் தமிழரின் ஒழுக்கநடையும் மரபு கொண்ட சமூக அமைப்பை வெளிப்படுத்துகின்றது. இக்காலத்தில் பெண்கள் வாழ்ந்த நிலை, குடும்ப அமைப்பு, சமூகப் பங்கு ஆகியவை விரிவாக ஆராயப்படுகின்றன. சங்கக் காலத்திலேயே கல்வியறிவு பெற்ற பெண்கள் சமூகத்தில் முக்கிய பங்காற்றியமைக்கான பல ஆதாரங்கள் மேற்கோளாகக் காட்டப்படுகின்றன. பெண்கள் தமிழர் வாழ்க்கையின் அடிப்படை அங்கமாக விளங்கினார்கள் என்பது இக்கட்டுரையின் முக்கியமான ஆய்வாணுவாகும். இதன் மூலம் சங்க கால சமூக கட்டமைப்பும், பெண்களின் நிலையும் புரிந்துகொள்ளப்படுகின்றன. **S.சுஜா எழுதிய "சங்கப் பெண் கவிஞர்கள்: சொற்பதிவு நுட்பங்கள்" (*Indian Journal of Multilingual Research and Development*, Published: 30-12-2022) என்ற ஆய்வுக்கட்டுரை, சங்க இலக்கியத்தில் பெண் கவிஞர்களின் பங்கு, வரலாற்று அடையாளம் மற்றும் சொற்களுக்குள் பதிந்த நுட்பங்களை ஆராய்கிறது. சங்க இலக்கியம் மறைந்துவிடாமல் மீள்பதிப்பாக்கம் செய்யப்பட்டதிலிருந்து ஏற்பட்ட இலக்கிய விழிப்புணர்வை முதற்கட்டமாகக் கொண்டு, இக்கட்டுரை தமிழ்ச் சங்கப் பெண் கவிஞர்கள் சமுதாயத்தின் பழமையான மதிலகளை எவ்வாறு வார்த்தைகளின் வழியாகப் பதிவு செய்துள்ளனர் என்பதை ஒளிவீசுகிறது.**

முனைவர் மு.ரேவதி எழுதிய "சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் படைப்பாளுமைத் திறன்" (ijtlls, year 2021) என்னும் கட்டுரை, சங்க இலக்கியத்தில் பெண்கள் கொடுத்த இலக்கியப் பங்களிப்பை ஆழமாக ஆராய்கின்றது. 'எட்டுத்தொகை' தொகுப்பிலுள்ள பெண் கவிஞர்களின் எழுத்தாற்றல், அவர்கள் கடந்து வந்த சமுதாய விழுமியங்கள், அகப்புற மன வெளிப்பாடுகள் என்பவற்றை மீறியும், சார்பற்ற கண்ணோட்டத்துடன் வார்த்தைகளின் வழியாக உணர்வுகளைப் பதிவு செய்த விதத்தை இக்கட்டுரை திறனாய்வாக முன்வைக்கின்றது. நவீன பெண்ணியக் கோணத்தைக் கூட எதிர்வினையாக நோக்கவைக்கும், அந்நாள் பெண்கள் கொண்டிருந்த பார்வை, எழுத்துத் திறமை மற்றும் இலக்கியப் பயன்பாட்டை இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது. **அ.ரஞ்சிதா** எழுதிய *"சங்க இலக்கியத்தில் அரசப்பெண்பாற்புலவர் பாடல்களில் உளவியல்"* என்ற கட்டுரை (ijtlls, July 2025) சங்க இலக்கியத்தில் உளவியல் சிந்தனையின் அடையாளங்களை வெளிப்படுத்துகின்றது. இந்தக் கட்டுரை, சங்கக் காலத்து அரசப் பெண்கள் பாடிய கவிதைகள் மூலமாக, மனித உளவியல் மற்றும் உணர்வுசார் செயல்பாடுகள் எவ்வாறு அக்கால இலக்கியத்தில் இடம்பற்றியுள்ளன என்பதை ஆராய்கின்றது. ஆதிமந்தியார், தேவிபெருங்கோப்பெண்டு மற்றும் பாரியின் மன்றத்து பெண்கள் போன்ற அரசப்பெண்பாற்புலவர்கள், உளவியல் துறை அதிகாரபூர்வமாக உருவாகும் முன்பே, உணர்வுச் சிந்தனைகளைக் கவிதை வழியாக வெளிப்படுத்தியுள்ளனர். சங்க இலக்கியம் நவீன உளவியலுக்கு முந்தைய கால கட்டத்தில், மனதின் ஆழமான கோட்பாடுகளை வடிவமைத்துள்ளது என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகிறது. இவ்வாறு, தமிழின் சங்க இலக்கியம், தனது காலத்தைக் கடந்துள்ள உளவியல் சிந்தனைகளை முன்வைத்தது

என்பதை கட்டுரை நிரூபிக்கின்றது. **முனைவர் ஏ.சைலஜா** *"குறுந்தொகைப் பெண்பாற் புலவர்கள் பாடல்களில் வெளிப்படுத்தும் பெண்மொழியா?"* என்ற கட்டுரையில் (புதிய அவையம், January 2025), பெண்கள் தங்கள் உடல், ஆசைகள் மற்றும் உளவுணர்வுகளை இலக்கியத்தில் வெளிப்படுத்த வேண்டிய அவசியத்தை பெண்ணியக் கோணத்தில் வலியுறுத்துகின்றார். ஹெலனின் கருத்துகளை மேற்கோளாக கொண்டு, "உன் உடலின் குரல்களை கேள், அதுவே உன் மூளை அகப்பகுதியில் புதைந்துள்ள எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளியே கொண்டு வரும்" என குறிப்பிடுகிறார். குறுந்தொகையில் உள்ள பெண்பாற் புலவர்கள் பாடல்களில், ஆண் வேட்பும், ஆணுக்கான ஏக்கமும், காதல் ஆசையும் வெளிப்படையாகத் ததும்புகிறது. சில பாடல்களில் கணவன் ஒரு வாட்டப் பெண்ணிடம் சென்று திரும்பிய பின், மனைவி வெளிப்படுத்தும் எதிர்ப்பு மென்மையானது அல்லது சமரசமாகும். வேறு சில இடங்களில் பெண் தன் காதல் வேட்கையை நிதர்சனமாகவும் திறமையாகவும் பேசுகிறாள். இந்தக் கட்டுரை, இக்குரல்கள் ஒரு "பெண்மொழி"யா அல்லது "பாலியல் அழுத்தத்தின் மொழி"யா என்பதை ஆய்வு செய்ய முனைகின்றது. **ப.விமலா (2022)**, *"ஔவையார் பாடல்கள் வழி சங்ககாலப் பெண்பாற்ப் புலைர்களின் பெண்மொழி"* என்ற கட்டுரையில் (சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Vol. 4, Issue: Special 27, Year: 2022), பெண் எழுத்தாளர்களின் மொழி உருவான விதத்தையும், அதுவே சமூகத்தின் பண்பாட்டுச் சூழலில் ஒடுக்கப்படும் பாலின உருவகங்களுக்கு எதிராக உருவான புதிய மொழியாகக் காணப்படுவதாகக் கூறுகிறார். இக்கட்டுரை, பெண்கள் தங்களது உடல் அனுபவங்களை தடைப்படுத்தாமல் எழுத வேண்டும் என வலியுறுத்துகிறது. இத்தகைய அணுகுமுறைகள் சமூக விமர்சனத்தை அச்சமின்றி எதிர்கொள்கின்றன. சங்க காலத்தைச் சேர்ந்த ஔவையாரின் பாடல்கள், இத்தகைய பெண்ணிய உணர்வுகளையும், அவர்களின் உளவுணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. பெண்களின் உள்ளார்ந்த அனுபவங்களை பிரதிபலிக்கும் இவர்களின் subconscious மொழி, பெண்மொழியாக ஒளிவிடுகிறது. இவ்வாய்வின் முக்கிய நோக்கம் சங்க இலக்கியத்தில் பெண்மொழியின் உருவாக்கத்தையும், அதனை ஔவையார் பாடல்கள் வழியே அறியுமான வழிமுறையையும் ஆய்வுசெய்வதாகும்.

சமக்காலப் பெண் கவிஞர்கள்

பெண்கள் கல்வி, கலாசாரம், ஒழுக்கம் மற்றும் சமூக நிகழ்வுகளில் எடுத்துக் கொண்ட பங்கு, சங்க இலக்கியத்தின் வழியாக விளக்கப்படுகின்றது. இக்கட்டுரை, சங்ககாலச் சமூகத்தில் பெண்களின் முக்கியத்துவத்தைக் கூறும் முக்கியமான ஆய்வாக விளங்குகிறது. **சு.செல்லம்மாள்** தனது ஆய்வில் (*ijtlls*, May-2019), **நவீன பெண் கவிஞர்களின் பெண்ணியக் கோட்பாடுகள்** புதுக்கவிதைகளில் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதைக் கூறுகிறார். பெண்ணின் அடக்கப்படும் உணர்வுகளையும், சமூக கட்டுப்பாடுகளையும் எதிர்த்து, அவர் தனி ஆளுமையாக மாறக்கூடிய திறனை பெண் கவிஞர்கள் தங்களது கவிதைகளில் வெளிப்படுத்துகின்றனர். இந்தக் கவிதைகள் பெண் மனதை உலுக்கும் பெண்ணிய மின்னல்களை கொண்டவை. **"அம்பி", "அநாதிகாலம்", "கருவறை வாசனை", "நீரிலையும் முகம்", "ஒரு மலையும் இன்னொரு மலையும்"** போன்ற தொகுப்புகளில் உள்ள கருத்துகள், நவீன பெண் கவிஞர்களின் நிலைப்பாடுகளையும், தங்களது தனிப்பட்ட அனுபவங்களையும் வெளிப்படுத்துகின்றன. இக்கவிதைகள் படைப்பாற்றலுடனும், நுண்ணுணர்வுடனும் எழுதப்பட்டு, பெண் விழிப்புணர்வை ஊக்குவிக்கின்றன. **சு.செல்லம்மாள்** எழுதிய **"பெண்கவிஞர்களின்**

புதுக்கவிதைகளின் பெண்ணியக் கட்டமைப்பு" (ijtlls, year 2020) என்ற ஆய்வுக்கட்டுரையில், பெண் எழுத்தாளர்களின் படைப்புகளில் பெண்மையையும் பெண்ணியக் கருத்துக்களையும் மையமாகக் கொண்டு ஆராயப்படுகிறது. இவ்விலக்கணமான சூழலிருந்து விடுபட, பெண்கள் நடத்திய புரட்சி, அவர்களின் எழுத்து முயற்சிகளிலும் காணப்படுகிறது. புதுக்கவிதைப் பாணியில் எழுதப்பட்ட இக்கவிதைகள், பெண்களின் உள் உணர்வுகளையும் சமூக எதிர்ப்புகளையும் வெளிக்கொணர்கின்றன. பெண்கள் சந்திக்கும் துன்பங்களை, சமுதாய அமைப்புகளால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளையும் எதிர்த்து, பெண்ணியக் குரலை உருவாக்கும் இந்தப் படைப்புகள், ஆணாதிக்க சமூகத்திற்கு எதிராக ஒரு புரட்சிகரமான நிலையை உருவாக்குகின்றன. எனவே, இக்கட்டுரை, சமகாலப் புதுக்கவிதைகளில் பெண்ணியக் கட்டமைப்பை தெளிவாகக் காட்டுகிறது. **ந.சித்திரா எழுதிய**, *"சல்மா கவிதைகளில் மொழியும் வியும்"* என்ற கட்டுரையில் (ijtlls, January 2023), இலக்கியம் என்பது மனித குடும்ப வாழ்வின் சூழலை வெளிப்படுத்தும் ஊடகமாக விளக்கப்படுகிறது. கவிதை என்பது சுருக்கமான, சுடுசொல் நடையோடு வாசகனை ஈர்க்கும் வடிவமாகத் தனித்த சிறப்பை உடையது. பெண்கள் சமுதாயத்தில் நிலைத்த இடத்தை அடையாத நிலையில், சுதந்திரக் குரலாக எழுத்து வடிவத்தில் பெண்கள் தங்களது அனுபவங்களையும், வலிகளையும் வெளிப்படுத்த Feminism ஒரு முக்கியமான இயக்கமாக வளர்ந்தது. பாரதி மற்றும் பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் தொடக்கக் காலத்தில் பெண் விடுதலையை இலட்சியமாகக் கொண்டு எழுதியுள்ளனர். இந்த வரிசையில், நவீன தமிழ் கவிஞராகச் சல்மா திகழ்கிறார். அவர் தனது கவிதைகளில் பெண்ணிய குரலை மொழியிலும் வியத்தகுந்த நடையிலும் கொண்டு வந்துள்ளார். பெண்கள் சந்திக்கும் சமூக, உடல் மற்றும் உளவியல் வலிகளை அவர் கூர்மையாக பதிவு செய்கிறார். இந்த ஆய்வில், சல்மாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் வழியாக, அவர் பதிவு செய்த பெண்களின் விடுதலைக்குரிய குரலும், சிந்தனையும் ஆராயப்படுகிறது.

கு.ஜெயா பிர்ஷிலி எழுதிய *"ஒப்பியல் நோக்கில் ஔவையார் மற்றும் சப்போ கவிதைகள்" (IJTLLS-2025)* என்ற கட்டுரையில், பண்டைய உலகில் பெண்கவிஞர்களின் அரிதான பங்கு வலியுறுத்தப்படுகிறது. சங்ககாலத் தமிழ்க் கவிஞர் ஔவையார் வாழ்க்கை நெறி, ஒழுக்கம், பெண்களின் ஒடுக்கப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்தியவர்; சப்போ காதல், விருப்பம், நெருக்கம் ஆகியவற்றை சமூகக் கட்டுப்பாடுகளை மீறி பாடியவர். இருவரின் கவிதைகளிலும் உருவகம், உவமை போன்ற இலக்கிய உத்திகள் காணப்படுகின்றன. ஆணாதிக்க சமூகத்தில் பெண்களின் குரலை முன்வைத்த முன்னோடிகளாக இவர்கள் திகழ்ந்து, பெண்களின் அறிவாற்றலையும் படைப்பாற்றலையும் உலகிற்கு எடுத்துரைத்துள்ளனர்.

முடிவுரை

தொல்காப்பியத் திணைமுறை, அதன் இலக்கிய, பண்பாட்டு, சமய, மானுடவியல் கோட்பாடுகள் வழி மனித உணர்வுகள், வாழ்வியல் பார்வைகள் மற்றும் தெய்வக் கருத்துக்களை வெளிப்படுத்தும் அடிப்படைச் சுவடாக விளங்குகிறது. குறுந்தொகை முதல் மாறனின் அகப்பொருள் வரை நிலம், பொழுது, உரிப்பொருள் ஒருங்கிணைப்பின் வழி உருவான திணைமுறைச் சிந்தனை, தமிழ் மொழி, இலக்கணம், இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை ஒன்றிணைக்கும் அடையாளமாகத் திகழ்கிறது. இந்தக் கோட்பாடு, சங்க இலக்கியத்தின் சமூக பண்பாட்டின் பின்னணி மற்றும் பாலின சமத்துவக் கருத்துகளை

விளக்குவதோடு, தமிழரின் வரலாறு, சமூக, பண்பாட்டு அடையாளங்களைப் புரிந்துகொள்ளும் அடித்தளமாகவும் அமைகிறது. சங்க இலக்கிய காலத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்ட மரியாதை, சமூகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் இலக்கிய முயற்சிகள் தோன்றின. பெண் எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகள் மூலம் பெண்ணியக் குரலை வலுப்படுத்தியதோடு, சில ஆண் எழுத்தாளர்களும் பெண்களின் உரிமைகளை ஆதரித்தனர். குறிப்பாக புதுக்கவிதைகள், பெண்களின் உள் உணர்வுகளையும் சமூகப் போராட்டங்களையும் வெளிப்படுத்தும் சக்திவாய்ந்த ஊடகமாகத் திகழ்கின்றன. திணைக்கோட்பாடு, சங்க இலக்கியத்தில் பெண்களின் உணர்வுகளையும் வாழ்க்கைச் சூழலையும் இயற்கைச் சித்திரங்களின் மூலம் வெளிப்படுத்தியதைப் போல, சமகாலப் பெண்ணியப் படைப்புகள் இந்த உணர்வுகளை புதிய சமூகக் கோணத்தில் மாற்றி, பெண்களின் சுயநினைவு, சுதந்திரம் மற்றும் சமூக மாற்றத்திற்கான குரலை உருவாக்குகின்றன. இவ்வாறு திணைக்கோட்டின் சங்க மரபுகளை, சமகாலப் பெண்ணியக் குரலும் இணையும் இடத்தில், தமிழ் இலக்கியம் காலத்தைக் கடக்கும் மனித அனுபவங்களைப் பதிவு செய்கிறது.

துணை நூற்பட்டியல்

1. **தொல்காப்பியம், பொருளதிகாரம் (உரைவளம்) அகத்திணையியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பதிப்பாசிரியர் ஆ.சிவிலிங்கனார், டி,டி,டி தரமணி, சென்னை, பதிப்பகம் - 1991.**
2. **ப.கணேஷ்வரி (2021)** *திணை இலக்கணத்தில் சமயக் கொள்கை ஊடாட்டம்*, சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Vol. 3, Issue: Special 2, Year: 2021, DOI: 10.34156/irjt 21s223, page: 117 - 121.
3. **சி.சதானந்தன் (2022)** *தொல்காப்பியத்தில் அகத்திணை இலக்கியவகைக் கோட்பாடு,* International Research Journal of Tamil, Vol.4, Issue-S-13, 2022, DOI: 10.34256/irjt 224s134, int.res.j.tamil, page: 25 - 31.
4. முனைவர் ப.சு.மூவேந்தன் (2023) தொல்காப்பிய அக இலக்கண மரபில் மாறன் அகப்பொருள் சுட்டும் முதல், கரு, உரி, சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், VOL-7, ISSUE- 2, YEAR- OCTOBER , 2023, P- ISSN. 2454-3993, E- ISSN. 2585- 2810, IDhttp!//orcid.org/000-0003-1353-4821
5. **முனைவர் அர. கண்ணன்** (2023) **குறுந்தொகையில் திணைசார் வாழ்வியல் – குறிஞ்சி நிலம்,** பிரணவ் தமிழியல் ஆய்விதழ், Special Issue, Vol. 2, Issue-3, April 2023, ISSN: 2585-9599
6. **மூ.புவனேஸ்வரி (2021) கைக்கிளை பெருந்திணை – சில அவதானிப்புகள்,** *தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், Vol. 3, Issue 2, Jan 2021.*
7. முனைவர் செ. சாந்தி (2025) தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள், இணைப்பேராசிரியர் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் issn: 2582-399x, vol:7 issue :26 april 2025

8. **பொ.அகத்தியபாலா (2024)** தனது “**எட்டுத்தொகையில் தமிழர் வாழ்க்கையும் சமூக கட்டமைப்பும்**” என்ற ஆய்வுக்கட்டுரையில் (அரிமா நோக்கு ஆய்விதழ், UGC CARE Group – 1 Journals, Vol. 18, No. 01)
9. கி.பு. இந்துஜா, பத்துப்பாட்டில் வாழ்வியல் கோட்பாடுகளில் நிலங்கள், சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், VOL.4, ISSN.4, YEAR- 2022, DOI: 10.34256/IRJT22438.
10. சரவணஜோதி சீதாராமன் (2020) அற இலக்கியமும் திணைக்கோட்பாட்டு மரபும், Journal of Tamil Studies, eISSN 2116-5507, Volume 1, No.1, 2020, pp.29–38
11. D.பெருமாள் மற்றும் V.இராமமூர்த்தி (2022) சங்க இலக்கியத்தில் மருதத்திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்கள், *International Research Journal of Tamil,* Vol. 4, Issue, April 30, 2022, DOI: 10.34256/irjt 22238, int.res.j.tamil, page: 270 - 287.
12. **அ.அருண்பெஜோ (2024)** *சங்க இலக்கியங்களில் வேளாண்மை திணை வழி ஒப்பீடு,* தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், Vol-7, Special Issue-1, December 2024, E-ISSN: 2581-7140
13. க.கருப்பசாமி (2019) மருதத்திணை உள்ளுறை உமைவியல் அழகியல்” என்ற கட்டுரையில், தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், Vol. 2, Issue 1,page: 28 -31.
14. **ச.உமாதேவி (2019)** *குறுந்தொகையில் பெண் புலவர்கள்,* தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN: 2581-7140, Special Issue 2: Vol. 1, May-2019, page: 38 - 43.
15. சீ.அலக்ஸ் ஜேக்கப் (2019) அகநானூறு குறிஞ்சிப்பாடல்களில் உள்ளுறை, தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், Vol. 2, Issue 1, page: 13 - 19.
16. **ல.பிரியதர்ஷினி (2025)** திணையியல் நோக்கில் குறுந்தொகைப் பாடல்கள், தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN: 2581-7140, Volume - 8, Issue - 1, July 2025.
17. **அ.முரளி (2022)** அவர்கள், *“சங்க இலக்கியத்தில் சமூக அமைப்பு, சமுதாய அமைப்பு மற்றும் உரிப்பொருள் சூழல்”* எனும் கட்டுரையில் (சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Published: 15-11-2022, Vol. 4, Issue: S-21, Year: 2022)\
18. **ச.சரவணன் (2019)** *சங்க கால மகளிர் வாழ்ந்த சமுதாய சூழல்,* தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN: 2581-7140, Vol. 2, Issue - 1, July 2019.
19. **S.சுஜா (2022) சங்கப் பெண் கவிஞர்கள்: சொற்பதிவு நுட்பங்கள், *Indian Journal of Multilingual Research and Development*, Vol. 3, Issue 4, Published: 30-12-2022.**
20. முனைவர் மு.ரேவதி (2021) சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் படைப்பாளுமைத் திறன், தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், Vol. 3, Issue 2.
21. **அ.ரஞ்சிதா (2025)** *எசங்க இலக்கியத்தில் அரசப்பெண்பாற்புலவர் பாடல்களில் உளவியல்,* தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN:2581-7140, Volume-8, Issue-1, July 2025.

22. **முனைவர் ஏ.சைலஜா (2025)** *குறுந்தொகைப் பெண்பாற் புலவர்கள் பாடல்களில் வெளிப்படுத்தும் பெண்மொழியா?,* புதிய அவையம், ISSN-2456-821X, Vol. 08, Issue-02, January 2025,
23. **ப.விமலா (2022)** *ஔவையார் பாடல்கள் வழி சங்ககாலப் பெண்பாற் புலைர்களின் பெண்மொழி,* சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Vol. 4, Issue: Special 27, Year: 2022.
24. **சு.செல்லம்மாள் (2019)** புதுக்கவிதைகளில் பெண் கவிஞர்களின் பெண்ணிய கருத்தாக்கங்கள், *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்,* E-ISSN:2581-7140, Special Issue 2: Vol.1, May-2019, page: 127 - 130.
25. **சு.செல்லம்மாள் (2020)** எழுதிய **"பெண்கவிஞர்களின் புதுக்கவிதைகளின் பெண்ணியக் கட்டமைப்பு"** *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்,* E-ISSN:2581-7140, Special Issue 2: Vol.1, page: 191 - 194.
26. **ந.சித்திரா (2023)** *சல்மா கவிதைகளில் மொழியும் வியும்,* தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN: 2581-7140, Volume - 5, Issue - 2, January 2023.
27. கு.ஜெயா பிர்ஷிலி, ஒப்பியல் நோக்கில் ஔவையார் மற்றும் சப்போ கவிதைகள், தமிழ் மொழி மற்றும் பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal , Volume - 7, SPL Issue - 2, February 2025, DOI: 10.5281/zenodo.15553611.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723
Vol. 4 Issue: 01 October 2025

ஐங்குறுநூறு காட்டும் மக்கட் பேறும் சமுதாயப் பின்னணியும்

Echoes in Verse: Unveiling Societal Aspirations in Aingurunuru's Depiction of Progeny

தே. தமிழ்ச்செல்வம்[1], முனைவர் க. நாகரத்தினம்[2]

[1]ஆய்வியல் மாணவர், டாக்டர் எஸ்.என்.எஸ் ராஜலட்சுமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர் - 641049.

[2]உதவிப் பேராசிரியர், டாக்டர் எஸ்.என்.எஸ் ராஜலட்சுமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர் - 641049

[1]**Tamilselvam D,** Research Scholar, Dr. SNS Rajalakshmi College of Arts and Science (Autonomous) Coimbatore - 641049. Email: tamilkrithka7@gmail.com, ORCiD:

[2]**Dr. K. Nagarathinam,** Assistant Professor, Dr. SNS Rajalakshmi College of Arts and Science (Autonomous), Coimbatore - 641049. Email: rathikak80@gmail.com, ORCiD:

Abstract:

Literature arises from social life, hence a significant portion of literature becomes a portrayal of society. Whatever way of life and customs a society possesses, those are also recorded in literature. Therefore, the life of a society during a specific period can be understood through the literature that emerged during that period. In this regard, this essay aims to explore the concept of progeny (children) as depicted in Ainguruniru, how gender preference operated in progeny, and the societal background for this.

Keywords: Literature, Society, Ainguruniru.

ஆய்வுச் சுருக்கம்:

இலக்கியம் சமுதாய வாழ்க்கையிலிருந்து தோன்றுவதால் இலக்கியத்தின் பெரும்பகுதி சமுதாயச் சித்தரிப்பாய் அமைந்து விடுகின்றது. ஒரு சமுதாயம் எத்தகைய வாழ்வியலை ஒழுகலாறுகளைக் கொண்டுள்ளதோ அவையே இலக்கியத்திலேயும் பதிவு செய்யப்படுகின்றன. எனவே ஒரு சமுதாயத்தின் குறிப்பிட்ட காலகட்டத்திய வாழ்க்கையை அக்காலக் கட்டத்தில் தோன்றிய இலக்கியத்தின் வாயிலாகக் கண்டடைய முடியும். இந்த வகையில் ஐங்குறுநூறு காட்டும் மக்கட்பேறு குறித்தும் மக்கட்பேற்றில் பாலின விருப்பு எப்படித் தொழிற்பட்டிருந்தது என்பது குறித்தும் இதற்கான சமுதாயப் பின்னணி குறித்தும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

திறவுச்சொற்கள்: இலக்கியம், சமுதாயம், ஐங்குறுநூறு

மக்கட்பேறு

மனித வாழ்க்கையை முழுமை பெறச் செய்வது பிள்ளைப் பேறேயாகும். சமூக உறுப்பினர்கள் பிறந்து, வளர்ந்து, மணம்முடித்து இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு அதன் பயனாகப் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதே சமுதாய நிலையில் முழுமையான வாழ்க்கையாகக் கருதப்படுகின்றது. இதனால்தான் இலக்கியங்கள் பிள்ளைப் பேற்றின் முக்கியத்துவத்தைப் பெரிதும் வலியுறுத்தி வந்துள்ளது.

"தமிழ் இலக்கண இலக்கியங்கள் குழந்தைப்பேற்றின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. தலைவி சூலுறும் பக்குவக் காலத்தில் தலைவன் அவளைப் பிரிந்திருக்க மாட்டான் என்ற கருத்தினைப் "பூப்பின்

புறப்பாடு ஈராறு நாளும் நீத்த கன்றுரையார்" என்ற தொல்காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன. குழந்தைப் பேற்றிற்கும் அக்கால சமுதாயம் தந்த முக்கியத்துவத்தையே அது உணர்த்துகின்றது. "நன்கலம் நன்மக்கள் பேறு" என்பது மக்கட் பேற்றின் சிறப்பினையே சுட்டுகின்றது.

குழந்தைப் பேற்றை மக்களுக்கு வலியுறுத்தப் பல்வேறு நம்பிக்கைகள் பரப்பப்பட்டன. குழந்தையைப் பெற்றவர்களே இவ்வுலகில் புகழோடு வாழ்ந்து மறுமையுலகை அடைவர் என்ற கருத்து மக்களுக்குப் போதிக்கப்பட்டது. ஈமச் சடங்குகளைச் செய்வதற்கும் இறந்த பின் பல்வேறு சடங்குகளைச் செய்வதற்கும் பிள்ளை அவசியம் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது. இக்கருத்துக்கு ஆதரவாகப் பிள்ளை பெறாதவர்களுக்குப் போரிலிருந்து உயிர் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. ஒவ்வொரு பெண்ணும் குழந்தை பெற்றுத் தருவதையே முதற் கடைமையாகக் கொள்ள வேண்டும் என்பதை "ஈன்று புறம் தருதல் எந்தலைக் கடனே என்ற தொடர் மக்களுக்குப் போதிக்கின்றது". (இராமநாதன், ஆறு ,1982 :90)

ஆக மனித சமூகம் குடும்பமாக வாழும் வாழ்க்கையைப் பொருள் பொதிந்ததாக ஆக்குவதும் மாந்தர்தம் இல்லற வாழ்க்கையை முழுமை பெறச் செய்வதும் மக்கட் பேறுதான் என்பது தெளிவுபடுத்துகின்றது. இந்த உண்மையைச் சங்கத் தமிழர் தெளிவாக உணர்த்திருந்தனர் என்பதற்குப் பாண்டியன் அறிவுடை நம்பி பாடியுள்ள புறநானூற்றுப் பாடல் சிறந்த சான்றாக அமைந்துள்ளது. அப்பாடல் வருமாறு!

"படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெரும் செல்வாராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல் லோர்க்குப்
பயங்குறை இல்லைத் தாம் வாழும் நாளே" (புறம் .188)

"பலருடன் இருந்து உண்ணும் உயர்நிலையை அடைவதே உலக வாழ்க்கைக்கு வேண்டிய பல அமைப்புகளும் அமைந்து விட்டன என்பதற்கு அடையாளமாகும். இவ்வாறு படைக்கப்படும் செல்வம் பலவற்றையும் படைத்து பலருடன் கூட உண்ணும் உடைமை மிக்க செல்வத்தை உடையோராயினும் குறுகக் குறுக நடந்து சிறிய கையை நீட்டிக் கலத்தின் கட் கிடந்தனைத் தரையிலேயிட்டும் கூடப் பிசைந்து தோன்டியும் வாயாற் கவ்வியும் கையால் துழாவியும் நெய்யையுடைய சோற்றை உடம்பின் கண் படச் சிதறியும் இவ்வாறு அறிவை இன்பத்தால் மயக்கும் மக்களைப் பெறாதவர் வாழ்க்கை குறைவுடைய வாழ்க்கையேயாகும். எனவே பெருவாழ்விற்குரிய மக்களைப் பெற்றுக் குடும்பத்துடன் இன்பமாக வாழ்ந்தனர் பழந்தமிழ் மக்கள்" (வித்தியானந்தன், சு. 1971:288) என்பது தெளிவாகத் தெரிவிக்கின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மக்கள் பேறு குறித்து ஐங்குறுநூறு சுட்டும் செய்திகளை இனிக்காணலாம்.

ஐங்குறுநூற்றில் மக்கட்பேறு

ஐங்குறுநூற்றின் முல்லைத்திணைப் பாடல்களில் செவிலி கூற்றுப் பத்து எனும் தலைப்பில் அமைந்த பத்துப் பாடல்களும் மக்கள் பேற்றின் சிறப்பை மக்கட்பேறு இல்லற வாழ்க்கையை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்வதைச் சிறப்பாகப் பேசுகின்றன.

தன் குட்டி இடையே படித்திருக்க அதன் இரு பக்கமும் மானும் அதன் பிணையும் படுத்திருப்பதைப் போல மகன் நடுவே படுத்திருக்க இரு மருங்கும் தாயும் தந்தையும் படுத்திருந்தனர் எனச் செவிலி கூறுவதை

"மறி இடைப் படுத்த மான்பிணை போல,

புதல்வன் நடுவணன் ஆக நன்றும்

இனிதுமற்ற அவர்கிடக்கை" (ஐங்குறுநூறு. 401:1-3)

எனும் அடிகள் சுட்டுகின்றன.

"புதல்வற் கவை இய தாய் புறம் முயங்கி

நகை இனன் வதிந்த கிடங்கை, பாணர்

நரம்பு உவர் முரற்றை போல

இனிதால்......" (ஐங்குறுநூறு .402)

எனும் பாடல் தன் மகனை அனைத்துக் கிடந்த தாயின் புறத்தைக் கணவன் தழுவிக் கிடந்தது பாணரின் யாழின் நரம்பிலிருந்து எழுந்த இசையைப் போல இனிமையுடையது எனச் செவிலி கூறுவதைச் சுட்டுகின்றது.

தன் மகன் சிறு தேர் உருட்டுவதைக் கண்டு தலைவன் தன் காதலியின்பால் கொண்ட அன்பைப் போலப் பெரிதும் அன்பு கொண்டான் என ஒரு பாடல் (ஐங். 403) சுட்டுகிறது.

தன் மகனுக்குத் தாய் பாலூட்ட அவளின் முதுகுப் புறத்தே தலைவன் தழுவிக்கிடந்தான்.(ஐங், 404)

மகனை ஈன்றத் தலைவி தான் வாழப் புகுந்த ஒளி பொருந்திய வீட்டிற்கு விளக்காகினாள் என்பதை

"ஒண் சுடர்ப் பாண்டிற் செஞ்சுடர் போல

மனைக்கு விளக்கு ஆயினள் மன்ற - கனைப் பெயல்

பூப்பல அணிந்த வைப்பின்

புறவு அணிந்து புதல்வன் தாயே" (ஐங்குறுநூறு .405)

எனும் பாடல் காட்டுகின்றது.

மகன் அருகிலே விளையாடி இன்புறத் தலைவன் தன் மனைவியைத் தழுவி இனிமையோடு அமர்ந்திருந்தனன் (ஐங்குறுநூறு. 406) என்றும்

பாணர்கள் முல்லைப் பண்ணை யாழில் மீட்ட தலைவி முல்லைப் பூவைச் சூட வெறுப்புற்ற தலைவன் தன் புதல்வனோடு பொலிவுற்று இனித்திருந்தனன் (ஐங்குறுநூறு. 408) என்றும் பாடல்கள் காட்டுகின்றன.

"புதல்வனைத் தழுவிக் கிடந்தான் தலைவன். அப்புதல்வனை ஈன்றவளோ (நம்மகள்) அவ்விருவரையும் ஓருங்கு அணைத்துக் கிடந்தாள். அவ்வாறு அம்மூவரும் படுத்திருந்த காட்சி எப்பொழுதும் இனிமை தருவதாகும். அவ்வின்பத்திற்கு மிகப்பெரும் பரப்பினை உடைய இவ்வுலகம் முழுவதுமே ஒப்பாகும்." (தட்சிணாமூர்த்தி அ. 2004: 894) என ஐங்குறுநூற்றின் 409 ஆம் பாடல் சுட்டுகிறது.

மாலை நேரத்தில் வீட்டின் முற்றத்தின் கண் உயரம் குறைந்த கட்டிலில் தலைவன் தலைவியுடன் இருக்க, மகன் அவனின் மார்பில் மேல் ஏறி ஊர்தலால் தோன்றும் மகிழ்ச்சியும் சிரிப்பும் கூடிய இன்பம் நிறைந்த நிலை பாணனின் யாழிசையை ஒத்திருக்கிறது என்பதை (ஐங்குறுநூறு. 410) ஒரு பாடல் பதிவு செய்துள்ளது

மேற்காட்டிய சான்றுகளைத் தொகுத்து நோக்குகின்ற போது இல்லற வாழ்க்கைக்கும்- குடும்ப வாழ்க்கைக்கும் மகிழ்ச்சியையும் இன்பத்தையும் அளிக்கவல்லது மக்கட்பேறே என்பதும் தலை மக்களின் அன்பு நிறைந்த - இன்பம் நிறைந்த வாழ்க்கை மக்கட் பேற்றின் அடித்தளத்திலேயே அமைகின்றது

என்பதும் புலப்படுகின்றன. மக்கள் பேறு வாழ்க்கைக்கு அதன் இயக்கத்திற்குக் காரணமானது என்பதைப் பண்டைத் தமிழர் நன்குணர்ந்திருந்தனர் என்பதை ஐங்குறுநூற்றின் செவிலிக் கூற்று பத்து சிறப்பாகச் சித்தரித்துள்ளது தெளிவாகத் தெரிகின்றது.

மேற்காட்டிய செவிலிக் கூற்று பத்துப் பாடல்கள் மக்கள் பேற்றின் முக்கியத்துவத்தை சிறப்பைக் காட்டும் அதே வேளையில் மக்கள் பேற்றில் ஆண் பிள்ளையையே முதன்மைப்படுத்திப் பேசுகின்ற போக்கையும் நுட்பமாகச் சித்தரித்துள்ளது. இந்த நிலையில் மக்கட்பேற்றில் ஆண் பிள்ளை குறித்த விருப்பம் தொழிற்படுவதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. எனவே இதற்கான சமுதாயப் பின்னணியைப் புரிந்து கொள்ள வேண்டியது அடிப்படையாகின்றது.

ஆண் பிள்ளை விருப்பும் சமுதாயமும்

ஐங்குறுநூற்றின் செவிலி கூற்று பத்துப் பாடல்களில் புதல்வனே முதன்மைப்படுத்தி பேசப் பெறுகிறான்.

*புதல்வன் நடுவண ஆக (401: 2)

*புதல்வற் கவை இய தாய் புறம் முயங்கி (402:1) ஒன்னு

*புணர்ந்த காதலியின் புதல்வன் தலையும் (403:1)

*புறவணி நாடன் புதல்வன் தாயே' (405 :4)

*வாள் நுதல் அரிவை மகன் .....(404:1)

*மாதர் உண்கண் மகன் விளையாட' (406:1)

*துனி தீர் கொள்கைத் தன் புதல்வனொடு பொலிந்தே '(408:4)

*புதல்வற் கவை இயினன் தந்தை ......(409:1)

*மனையோள் துணைவி ஆக புதல்வன் '(410:2)

என 407 ஆம் பாடல் தவிர ஏனைய ஒன்பது பாடல்களிலும் மகன், புதல்வன் என ஆண்மகனே முதன்மையாகச் சிறப்பாகப் பேசப் பெற்றுள்ளது. இதற்கான காரணம் என்ன? சங்கச் சமுதாயம் ஆண் வழிப்பட்டதாகவும் ஆண்வழித் தலைமையினதாகவும் இருந்ததே இதற்குக் காரணம் எனலாம்.

"பிள்ளைப் பேறு என்பது நடைமுறை சார்ந்த நிலையில் அன்றி ஆண்வழிச் சமுதாய அமைப்பை முன்னிலைப்படுத்தும் நோக்கிலேயே இலக்கியங்களில் பதிவாகியுள்ளது 236 புலவர்களால் பாடப்பட்ட 882 களவுப் பாடல்களையும் 233 புலவர்களால் பாடப்பட்ட 964 பாடல்களையும் கொண்டதான சங்க இலக்கியங்கள் (வ.சு.ப.மாணிக்கம், 1947:91) தலைவி தலைவன் இருவரை மட்டுமே மையப்படுத்தியவனாக அமைந்திருக்க எல்லாப் பாடல்களும் தலைவியை மையப்படுத்தியே பெரிதும் அமைந்திருக்கக் கற்புப் பாடல்களில் பேசப்படும் பிள்ளைப் பேற்றுச் சூழல்களில் ஆண் பிள்ளைப் பேறே பேசப்பட்டுள்ளது. பெண் பிறப்பு பற்றிய செய்தியைப் பேசும் அகப்பாடலையோ புறப்பாடலையோ எங்கும் பார்க்க இயலவில்லை.

பரத்தையர் கூட எம்மொடு புலம்பும் புதல்வன் தாய் (ஐங்குறுநூறு.90:4) "மேவன செய்யும் புதல்வன் தாய்கே" (குறுந்தொகை 8 :6) எனப் புதல்வனை முன்னிலைப்படுத்தியே தாயை விளிக்கின்றாள் ...." ஆகவன முலையரும் பிய சுணங்கின் மாசில் கற்பின் புதல்வன் தாய்" (அக .6: 12,13)எனத் தலைவன் தலைவியையும் மகனே முன்னிலைப்படுத்தியே அழைத்துள்ளனர் ."கணவன் உவப்ப புதல்வர் (600) என மதுரைக்காஞ்சி பிள்ளைபேற்றில் கணவன் மகிழ்வது ஆண் பிள்ளைப் பிறப்பிலேயே என்பதை

உரைத்துள்ளது." (பெ.மாதையன், 206: 113 ,114) எனக் குறிப்பிடும் பெ. மாதையன் சங்க இலக்கியங்களில் இந்த போக்கே பரவலாக இடம்பெற்றுள்ளதை (குறுந்தொகை 359 :56' அக . 176 :18-21 ,184 :1 -3, 66:1-4, கலித்தொகை 75: 24,25, பதி.74 :20, 21 ,புறம். 160: 18 ,19 பெரு. 223 -225,246, 252 நற்றிணை, 355:1-3) எடுத்துக்காட்டி,

".......இவ்வாறு சங்க இலக்கியக் கவிதை மரபே ஆண் வழிப்பட்டதாக ஆணை முதன்மைப்படுத்தியதாகப் பெண்ணைத் தற்சார்பற்ற நிலையில் ஆணைச்சார்ந்து முன்னிலைப்படுத்துவதாக அமைந்துள்ளது" (2010:116) என்கிறார்.

எனவே சமூக நிலையில் ஆணே முதன்மையானவனாக விளங்கிய நிலையில் பல்வேறு சமூக ஒழுகலாறுகளும் ஆணை முதன்மைப் படுத்தியவனாக ஆண் வழிப்பட்டவையாக இருப்பதே இயல்பு .இந்த இயல்பைத் தான் சங்கக் கவிதையாக்கமும் சங்கக் கவிதைகளில் இடம் பெறும் ஆண் முதன்மையையும் ஆண்மகவு விரும்பப் பெறுவதும் புலப்படுகின்றது.

"சங்க காலத்தில் மனையின் கண் இருந்து மனையறம் நிகழ்த்தும் உரிமை இல்லறத்தில் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் சிறப்பு மகளிர்க்கு உரியவொன்றாக இருந்தது. மனைவி, இல்லாள், மனைக்கு விளக்கு, மனைக்கிழத்தி, மனையாள், மனையோள், இற்பொலி மகடூஉ, இற்கிழத்தி போன்ற பெயர்கள் மகளிர்க்கே உரியவாயின. இவ்வாறு மனையின் உரிமையினைக் என குறித்தற்குரிய பெயர்கள் ஆண் பாலருக்கு வழங்கப் பெறாமையால் அன்று மனையறக் கடமைகளில் மகளிரே பொறுப்புடையராய் விளங்கினர் என்பதை அறியலாம் "(திலகவதி, 2001:139) இந்தச் சமூகநிலை பெண்ணின் வெளியுலகத் தொடர்பைத் தடைசெய்வது பெண்ணை இல்லறக் கடமைகளிலேயே உழலச் செய்தது. எனவே பொருளீட்டல், போர் முதலானவற்றில் பெண்ணுக்கு இடமின்றி போனது. இந்த நிலையில் பொருளீட்டல், போர்க்களம் புகுதல் முதலான சமூகக் கடமைகளில் ஈடுபடும் வாய்ப்பு ஆணுக்கு மட்டுமே இருந்ததால் ஆண்பிள்ளைப் பேறு பெரிதும் விரும்பப்பட்டுள்ளது என்பது தெளிவுபடுகின்றது. இதனையே ஐங்குறுநூறு காட்டுகின்றது எனலாம்.

முடிவுரை

இலக்கியம் சமூக வாழ்க்கையிலிருந்து உருவாவதால் அது சமூக வாழ்க்கையே சித்தரிக்கின்ற இயல்பு உடையதாகின்றது. இந்த நிலையில் சமூகத்தின் பல்வேறு ஒழுகலாறுகளையும் விழுமிய கூறுகளையும் புலப்படுத்துகின்ற இலக்கியம் இத்தகைய கூறுகள் எத்தகைய சமூகப் போக்கின் அடிப்படையில் எழுந்தனவோ அதே நிலையைப் பிரதிபலிப்பதாக அமைந்துவிடுகின்றது.

சங்கச் சமுதாயம் ஆண்வழிப்பட்ட ஆண் தலைமையை முழுதாகக் கொண்ட சமுதாயம் எனில் சமுதாய நடைமுறைகள் யாவும் ஆண் தலைமையை, ஆண் மேலாண்மையைக் கொண்டவையாக இருப்பது இயல்பானது.

ஆண் வழிச் சமுதாயத்தில் இலக்கிய உருவாக்கமும் ஆண் தலைமையை மேலாண்மையை புலப்படுத்துவதன். இந்த வகையில் ஆண் வழிப்பட்ட சங்க இலக்கியக் கவிதை மரபில் ஆணின் முதன்மை, தலைமை பேசப்படுவதும் விரும்பப்படுவதும் இயல்பாக நிகழ்ந்துள்ளன. இந்தப் பின்னணியில் மக்கட்பேறு இல்லற வாழ்வுக்கு சமுதாய வாழ்வுக்கு அடிப்படை என்பதை வலியுறுத்தும் சங்க இலக்கியங்கள் மக்கட் பேற்றிலும் ஆண் மக்கட்பேற்றையே விரும்பியிருப்பது தெளிவாகத்

தெரிகின்றது. இந்தச் சமுதாயப் பின்னணியைத்தான் ஐங்குறுநூற்றின் செவிலிகூற்று பத்துப் பாடல்களிலும் காணப்படுகின்றன.

பயன்பட்ட நூல்கள்

1.இராமநாதன் ,ஆறு, 1982 நாட்டுப்புற பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல் மணிவாசகர் நூலகம், 89 ,லிங்கிச் செட்டித் தெரு, சென்னை

2.தட்சிணாமூர்த்தி,அ.(உ.ஆ) 2004, ஐங்குறுநூறு மூலமும் உரையும் புத்தகம் ,2 என். சி. பி. எச் பிலிட், சென்னை

3.திலகவதி,க, 2001 ,சங்க கால மகளிர் வாழ்வியல் இறையருள் பதிப்பகம் 4/371முதல் தெரு சக்தி நகர் காட்டூர், திருச்சிராப்பள்ளி

4.மாதையன் ,பெ, 2010 சங்க இலக்கியத்தில் குடும்பம் என்.சி. பி. எச் .பி லிட் ,சென்னை

5.வித்தியானந்தன் ,சு,1971, தமிழர் சார்பு, பாரிபுத்தகப் பண்ணை, 574, பைகிராப்ட் ரோடு, திருவல்லிக்கேணி சென்னை.

References:

1. Ramanathan, Aru, 1982. Folksongs Portraying Tamil Life Styles. Manivasagar Noolagam, 89, Lingi Chetty Street, Chennai.

2. Dakshinamurthy, A. (Ed.), 2004. Ainkurunuru: Original Text and Commentary. 2 N.C.P.H. Pvt. Ltd., Chennai.

3. Thilagavathi, K., 2001. Life Styles of Women in the Sangam Period. Iraiyaruḷ Pathippagam, 4/371 Mudal Street, Sakthi Nagar, Kattoor, Tiruchirappalli.

4. Mathaiyan, Pe., 2010. The Family in Sangam Literature. N.C.P.H. Pvt. Ltd., Chennai.

5. Vidyananthan, Su., 1971. Tamil Perspectives. Pari Puthaga Pannai, 574, Pycrofts Road, Triplicane, Chennai.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723
Vol. 4 Issue: 01 October 2025

சோ. இராமசாமியின் நாடகக் கலை: மொழி, நகைச்சுவை, நையாண்டி

The Theatrical Canvas of Cho Ramaswamy: A Masterclass in Language, Laughter, and Lampoonery

முனைவர் ம. அனுராதா[1], முனைவர் கோ. பத்மபிரியா*, முனைவர் ப. முருகேசன்**

[1]தமிழ்த்துறை இணைப்பேராசிரியர், நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-638052, தமிழ்நாடு, இந்தியா.

*தமிழ்த்துறை இணைப்பேராசிரியர், நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-638052 தமிழ்நாடு, இந்தியா.

**தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-638052 தமிழ்நாடு, இந்தியா.

Dr M. Anuradha, Associate Professor in Tamil, Nandha Arts and Science College (Autonomous), Erode-638052, Tamilnadu, India. Email: anutamil71@gmail.com

Dr. G. Padmapriya, Associate Professor in Tamil, Nandha Arts and Science College (Autonomous), Erode-638052, Tamilnadu, India. Email: padmapriyakss@gmail.com

Dr. P. Murugesan, Assistant Professor In Tamil, Nandha Arts and Science College (Autonomous), Erode-638052, Tamilnadu, India. Email: murugesanjrf2012@gmail.com

Abstract:

Cho Ramaswamy was a prominent writer, playwright, and journalist, who expressed sharp perspectives on Tamil national politics, society, and culture through a distinctive style of wit and satire. His plays, particularly those based on political satire, are structured with techniques and linguistic approaches that stimulate public thought. This article studies the stylistic features of Cho Ramaswamy's dramatic narratives, explaining how humor and satire have been employed. The analysis is organized at a minimum of five levels: language, metaphors/symbols, sentence structure, dialogic nuances, and dramaturgical themes. Basic information about Cho's life and contributions, as well as details regarding his famous plays, have been obtained from reliable sources.

Keywords: Language, Metaphors/Symbols, Sentence Structure, Dialogic Nuances, Dramaturgical Themes

ஆய்வுச் சுருக்கம்:

சோ. இராமசாமி (Cho Ramaswamy) தமிழ்தேசிய அரசியல், சமூகம் மற்றும் கலாசாரத்தின் மீது கூர்மையான நகைச்சுவை மற்றும் பரியாசப் பாணியால் வெளிப்படுத்திய ஒரு முக்கிய எழுத்தாளர், நாடகாசிரியர் மற்றும் பத்திரிகையாளர். இவருடைய நாடகங்கள், குறிப்பாக அரசியல் பரிகாசத்துக்கு உட்பட்ட தொழில்நுட்பம் மற்றும் மொழி நடத்தை மூலம் பொது சிந்தனையை எழுப்பும் வகையில் இருக்கும். இந்த கட்டுரை சோ. இராமசாமியின் நாடகக் கதைச்சரிகளின் மொழி-பாணி (stylistics) அம்சங்களை ஆய்வு செய்து, நகைச்சுவை மற்றும் பரியாசம் எவ்வாறு உபயோகப்படுத்தப்பட்டுள்ளன என்பதை விளக்குகிறது. குறைந்தபட்சம் ஐந்து மட்டங்களில் (மொழி, உவமைகள்/சின்னங்கள், வாக்கிய அமைப்பு, உரையாடல் நுணுக்கங்கள், நாடகவியல் கருப்பொருள்) அமைப்புச் செய்து ஆராய்வு மேற்கொள்ளப்பெரியது. (Cho–வின் வாழ்க்கை மற்றும் பங்களிப்பு பற்றிய அடிப்படை விவரங்கள்,

மற்றும் அவரது பிரபலமான நாடகங்கள் தொடர்பான தகவல்கள் சக்திஆதாரங்களிலிருந்து பெறப்பட்டது).

திறவுச்சொற்கள்: மொழி, உருவகங்கள்/குறியீடுகள், வாக்கிய அமைப்பு, உரையாடல் நுணுக்கங்கள், நாடக வழிபாட்டு கருப்பொருள்கள்.

1. வேதாந்தம் மற்றும் ஆய்வு நோக்கம் (தெளிவு)

நாடகாசிரியர் சோ (சோ ராமசாமி) அவர்களின் நாடகங்கள், குறிப்பாக அவற்றின் மொழி பாணி மற்றும் நகைச்சுவை அம்சங்கள் பற்றிய ஆய்வுக்கு இந்தத் திட்டம் தன்னை அர்ப்பணிக்கிறது. சோவின் படைப்புகள் கடுமையான சமூக-அரசியல் விமர்சனத்தை, கூர்மையான நகைச்சுவை மற்றும் பரிவர்த்தனை மூலம் பார்வையாளர்களுக்கு எடுத்துச் செல்கின்றன. இந்தத் தனித்துவமான இணைப்பு, ஒரு நுண்ணாய்வுக்குரிய பாணி மற்றும் மொழியியல் அம்சங்களைக் கொண்டுள்ளது. எனவே, இந்த ஆய்வின் முதன்மை நோக்கம், சோவின் நாடகங்களில் காணப்படும் தனித்த மொழிப் பண்புகள், நகைச்சுவை உருவாக்கத்தில் பயன்படுத்தப்படும் பாணி சார்ந்த கருவிகள் (stylistic devices) மற்றும் அவை ஏற்படுத்தும் பார்வையாளர் எதிர்வினை ஆகியவற்றை முறையாக வகைப்படுத்தி ஆய்வு செய்வதாகும்.

குறிப்பாக, இந்த ஆய்வு பின்வரும் கேள்விகளுக்கு விடை காண முயலும்:

1. சோவின் நாடகங்களின் மொழியில் காணப்படும் தனித்துவமான இலக்கண, சொல்லாடல் மற்றும் அமைப்பு சார்ந்த அம்சங்கள் யாவை?
2. நகைச்சுவை, கிண்டல் மற்றும் கடும் க讽刺 (satire) ஆகியவை உருவாக்கப்படுவதற்கு எவ்வாறான பாணி கருவிகள் (எ.கா., உவமை, முரண்பாடு, மிகைப்படுத்தல்) பயன்படுத்தப்படுகின்றன?
3. இந்த மொழி மற்றும் பாணி மூலம், பார்வையாளர்களின் சிந்தனைப் போக்குகள் மற்றும் சமூக விழிப்புணர்வு எவ்வாறு தூண்டப்படுகிறது அல்லது வடிவமைக்கப்படுகிறது?

இந்த ஆய்வை முன்னெடுக்க, சோவின் நாடக நூல்கள் முதன்மை மூலமாகப் பயன்படுத்தப்படும். மேலும், சோவின் வாழ்க்கை, அவரது காலத்திய அரசியல் சூழல் மற்றும் அவரது பரபரப்பூட்டும் அரசியல் நகைச்சுவை நாடகங்களின் தாக்கம் பற்றிய தகவல்கள், நம்பகமான ஊடகக் கணக்குகள், திறனாய்வுக் கட்டுரைகள் மற்றும் சரித்திரப் பதிவுகளில் இருந்து சேகரிக்கப்படும். இத்தகவல்கள், நாடகங்களின் மொழி மற்றும் பாணி பகுப்பாய்வுக்கு பின்னணி அறிவையும், சூழலையும் வழங்கும்.

2. சோ. இராமசாமியின் நாடகக்காரியம் — ஒரு விருத்தகத் தோற்றம்

நாடகாசிரியர் சோ. இராமசாமி அவர்கள் தமிழ் நாடக வரலாற்றில் அரசியல் நையாண்டி மற்றும் நகைச்சுவை நாடகங்களின் முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்கிறார். முகமது பின் துக்ளாக் போன்ற

நாடகங்கள் மூலம் அவர் நிலைத்த இடத்தைப் பெற்றுள்ளார். அவரது படைப்புகள் தனித்துவமானவை, ஏனெனில் அவை நிகழ்கால அரசியல் நிகழ்வுகளை நேரடியாக அடிப்படையாகக் கொண்டுள்ளன. அவரது நாடகங்கள் சமகால அரசியல் மேலாண்மை, நிர்வாகக் குறைபாடுகள் மற்றும் சமூக அந்தஸ்துகள் குறித்த கடுமையான விமர்சனத்தை, குத்துவாள் போன்ற நகைச்சுவை மூலம் முன்வைக்கின்றன.

சோவின் நாடகக்கலையின் மையச் சிறப்பு, அதன் மொழி மற்றும் உரையாடல் அமைப்பில் அடங்கியுள்ளது. அவர் பயன்படுத்திய வாக்கியக் கட்டமைப்புகளும், சொல்லாட்சி முறைகளும் மிகவும் துல்லியமாகவும், நுட்பமாகவும் வடிவமைக்கப்பட்டவை. இந்த மொழிச் சிக்கனம் மற்றும் கூர்மை, சாதாரண மக்கள் முதல் அறிவுஜீவிகள் வரை அனைவரையும் ஈர்ப்பதோடு, சமூகத்தின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. அவரது உரையாடல்கள் வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமல்ல, பார்வையாளரின் மனதில் ஒரு கேள்வியைப் பதிக்கும் 'சிந்தனைத் தூண்டுகோல்களாக' (Thought-Provoking Stimuli) செயல்படுகின்றன.

இத்தகைய கலைப்பாணி, சோவின் நாடகங்களைக் காலத்தை மtranscendும் கலைப் படைப்புகளாக உயர்த்தியுள்ளது. அவை அரசியல் நிகழ்வுகளின் உடனடி பதிவுகள் மட்டுமல்ல, மனித சுபாவம் மற்றும் அதிகாரத்தின் இயல்புகளைப் பற்றிய நித்தியமான விமர்சனங்களாகவும் விளங்குகின்றன. எனவே, சோ. இராமசாமியின் நாடகங்கள் தமிழ் இலக்கியத்தில் ஒரு விருதகமான (distinct) தோற்றமாகவும், ஆய்வுக்கு மதிப்புள்ள படைப்புகளாகவும் தொடர்ந்து விளங்குகின்றன.

3. மொழி அமைப்பு மற்றும் சொற்பிரயோகம்

3.1 சொற்பொருள் தேர்வும், பேச்சு மட்டமும் (Register)

சோவின் நாடக உரைகளில் மிகவும் தெளிவாகக் காணப்படும் ஒரு அம்சம், **பொது மக்களின் பேச்சுத் தமிழ்** (Colloquial Tamil) மற்றும் **இலக்கியம்/அரசியலில் பயன்படுத்தப்படும் முறைசார்ந்த தமிழ்** (Formal/Literary Register) ஆகிய இரண்டின் வேண்டுமென்றே ஏற்படுத்தப்படும் மோதலாகும். இந்த இரு பேச்சு மட்டங்களையும் இணைத்துப் பயன்படுத்தும் முறை, சிக்கலான அரசியல் கருத்துகளை மிகவும் எளிமையாகவும், கவர்ச்சியாகவும் பார்வையாளர்களுக்கு எடுத்துச் சொல்ல உதவுகிறது.

முறைசார்ந்த, கடினமான அரசியல் சொற்களுக்குப் பதிலாக அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் எளிய சொற்களையும், பேச்சு வழக்குகளையும் பயன்படுத்துவதால், சாதாரண மக்களும் அரசியல் விவாதங்களில் ஈடுபட முடிகிறது. இந்த மோதல் நகைச்சுவையை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. உயர் அரசியல் கருத்துகள் திடீரென ஒரு சாதாரணமான, நகைச்சுவை ததும்பும் நடைமுறை உவமையில் விளக்கப்படும்போது, பொருந்தாத சூழல் (Incongruity) காரணமாக வலுவான சிரிப்பு உருவாகிறது. இதன் மூலம், கடுமையான விமர்சனம் கூட ஒரு இனிமையான அனுபவமாக மாறுகிறது.

3.2 சூழலுக்கு ஏற்ப மொழி மாற்றங்கள் (Code-switching & Style-shifting)

சோவின் மொழிப் பாணியின் மற்றொரு சிறப்பம்சம், **சூழலுக்கு ஏற்ப மொழி மாற்றம்** (Code-switching) மற்றும் **பேச்சுப் பாணி மாற்றம்** (Style-shifting) ஆகும். நாடகத்தின் உரையாடல்களில், அவர் திடீரென பேச்சுப் பாணியை மாற்றிக்கொள்வதைக் காணலாம். இதில் பின்வரும் அம்சங்கள் அடங்கும்:

- **ஆங்கிலச் சொற்களின் இணைப்பு:** அரசியல், நிர்வாகம் தொடர்பான ஆங்கிலச் சொற்களை (எ.கா., 'அரசியலமைப்பு', 'ஜனநாயகம்', 'பியூர்') தமிழ் வாக்கியத்தினுள்ளே நேரடியாக இணைப்பது ஒரு சாதாரண நடைமுறை. இது நகர்ப்புற, கல்விபெற்ற வர்க்கத்தின் மொழிப்பழக்கத்தை நம்பகத்தன்மையுடன் சித்தரிக்கிறது. மேலும், இது சிலசமயம் அந்த வர்க்கத்தின் நடைமுறைத் தன்மை அல்லது ஆங்கில மோகத்தைக் கேலி செய்வதற்கும் பயன்படுகிறது.
- **திரைப்படம் மற்றும் பாபுலர் கலாச்சாரக் குறிப்புகள்:** சமூகத்தில் பிரபலமான திரைப்படப் பாடல்கள், வசனங்கள் அல்லது பாபுலர் கலாச்சார சின்னங்களைக் குறிப்பிடுவதன் மூலம், நாடகத்தை நடப்புக் காலத்துடன் நேரடியாக இணைக்கிறார். இது பார்வையாளர்களுடன் உடனடி ஒற்றுமையை ஏற்படுத்துகிறது.
- **பாத்திரத்திற்கு ஏற்ப பாணி மாற்றம்:** ஒரே காட்சியில், ஒரு பாத்திரம் அதிகாரத்துவ நடையில் பேசியவாறு, திடீரென சாதாரண மனிதனின் கோபத்துடன் பேசத் தொடங்கும். இத்தகைய திடீர் பாணி மாற்றம் நாடகத்திற்கு இயக்கத்தைக் கொடுப்பதோடு, நகைச்சுவையையும் மிகைப்படுத்துகிறது.

இந்த மொழி மாற்றங்கள், **நகைச்சுவையின் தன்மை** மற்றும் **சமகால பார்வையாளர்களுடன் இணைத்தல்** ஆகிய இரு நோக்கங்களையும் நிறைவேற்றுகின்றன. பாத்திரத்தின் தன்மை மற்றும் உரையாடலின் வேகம் கூட நகைச்சுவையை உருவாக்கும் முக்கிய கருவியாகும். ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், வார்த்தைகளின் தேர்வு மட்டுமல்ல, அதைச் சொல்லும் **வேகம்** மற்றும் **சந்தம்** ஆகியவை சிரிப்பைத் தூண்டும் திறன் கொண்டவை. இவ்வாறு, சோவின் மொழி அமைப்பு என்பது வெறும் தகவல் தெரிவிப்பிற்கான ஊடகம் மட்டுமல்ல, ஒரு சிக்கலான, குறி காட்டும் கலைக் கருவியாகவும் திகழ்கிறது.

4. நகைச்சுவை மற்றும் பரியாச பாணி கருவிகள் (Stylistic devices)

நாடகாசிரியர் சோ. இராமசாமியின் நாடகங்களில் நகைச்சுவை மற்றும் பரியாசம் ஆகியவை கடும் சமூக விமர்சனத்திற்கான முக்கிய கருவிகளாக செயல்படுகின்றன. அவர் பயன்படுத்தும் பாணி சார்ந்த கருவிகள் (Stylistic Devices) கூர்மையான அரசியல் விமர்சனத்தை இனிமையான நகைச்சுவை மூலம் பார்வையாளரின் மனதில் பதிய வைக்கின்றன.

4.1 முரண்தொனி / எதிர்மறை நகைச்சுவை (Irony)

சோவின் நாடகங்களில் **முரண்தொனி** (Irony) மிகவும் ஆழமான மற்றும் சிக்கலான முறையில் காணப்படுகிறது. இது ஒரு எதிர்பார்ப்பை உருவாக்கி, பின்னர் அந்த எதிர்பார்ப்பை முற்றிலும் மீறும் விதத்தில் விமர்சனத்தை நிகழ்த்துகிறார். 'முகமது பின் துக்ளக்' போன்ற நாடகங்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இந்நாடகத்தில், ஒரு அறிவார்ந்த மற்றும் புரட்சிகர சிந்தனையாளர் என்று தொடங்கும் பேரரசர், தனது நல்லெண்ணமான திட்டங்களே மக்களுக்கு பேரழிவைத் தரும் ஒரு முரண்பாட்டு நிலைக்கு ஆளாகிறார். இங்கு, ஆட்சியின் 'இரக்கம்' என்று கூறப்படுவது, உண்மையில் 'அரசியல் அநியாயமாக' மாற்றப்படுகிறது. இந்த முரண்தொனி வழியாகவே, அரசியல் மேலாண்மையின் தவறான நடைமுறைகள் மற்றும் அதிகாரத்தின் இயல்பு பற்றிய கடும் விமர்சனம் நிகழ்த்தப்படுகிறது. இது பார்வையாளருக்கு மகிழ்ச்சியும், சிந்தனையும் ஒருங்கே தருகிறது.

4.2 குறிப்பிட்ட இலக்குகளைக் கொண்ட கேலிச்சித்திரம் (Satire with Specific Targets)

சோவின் கேலிச்சித்திரம் (Satire) எப்போதும் **நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளைக்** கொண்டது. அவர் விமர்சனத்தின் குறியாக அமைக்கும் முக்கிய துறைகள்:

- **அரசியல் கட்சி முறைமை:** கட்சித் தலைமையின் சுயநலம், கூட்டணி அரசியலின் தத்தளிப்பு.
- **அதிகார அசமநிலை:** அரசு அதிகாரிகளின் தன்னிச்சையான நடவடிக்கைகள், பண்பாட்டு ஏற்றத்தாழ்வுகள்.
- **பத்திரிக்கைத் துறை:** ஊடகங்களின் நடுநிலைமை இல்லாத்தன்மை, அதிகார வர்க்கத்திற்கு அடிமைப்படுதல்.
- **பொது மரபுகள்:** சமூகத்தில் ஆழப் பதிந்துள்ள குறுகிய மனப்பான்மை, நம்பிக்கைகள்.

இந்தக் கேலிச்சித்திரத்தின் மூலம், அவர் சமூகத்தின் மறுத்து வைக்கப்பட்ட உணர்வுகளை வெளிக்கொணர்ந்து, குற்றங்கள் மற்றும் சமூகத் தவறுகளை 'சிரிப்பு' என்ற சக்திவாய்ந்த ஆயுதம் மூலம் தாக்குகிறார். சிரிப்பு ஏற்படுத்தும் மன ஆரோக்கியத்தின் வழியாக, தவறானவற்றை எதிர்க்கும் துணிச்சலைப் பார்வையாளர்களுக்கு ஊட்டுகிறார்.

4.3 மிகைப்படுத்தல், தணித்தல், நையாண்டிப் பாணி (Hyperbole, Understatement & Parody)

சோ தனது உரையாடல்கள் மற்றும் காட்சி அமைப்புகளில் **மிகைப்படுத்தல்** (Hyperbole) முறையை அடிக்கடி பயன்படுத்துகிறார். ஒரு விஷயத்தை அதன் இயல்பான அளவை விட பல மடங்கு பெரிதாக்கிக் காட்டி, அதன் அபத்தத்தை அல்லது தீங்கை வலியுறுத்துகிறார். இது விமர்சனத்தை அதிர்ச்சியூட்டும் விதமாகவும், நினைவில் கொள்ளத்தக்கதாகவும் ஆக்குகிறது.

இதற்கு எதிர்மறையாக, **தணித்தல்** (Understatement) முறையையும் சில சமயங்களில் கையாளுகிறார். ஒரு பெரிய குறைபாடு அல்லது துயரம் நிகழ்ந்தபோதும், அதை மிகச் சாதாரணமான அல்லது லேசான சம்பவம் போல் கதாபாத்திரங்கள் மூலம் விவரிப்பார். இந்த முரண்பாடு, உண்மையான தீமையின் அளவை இன்னும் தீவிரமாக வெளிப்படுத்தும்.

மேலும், நடப்பு அரசியல் நிகழ்வுகள், பிரபலமான திரைப்படக் காட்சிகள் அல்லது இலக்கியப் படைப்புகளை **நையாண்டிப் பாணியில்** (Parody) அளித்துஅவற்றின் பின்னணியில் ஆழமாக மறைந்துள்ள அரசியல் வக்கிரத்தை வெளிக்கொணர்கிறார். இந்தப் பாணி கருவிகள் அனைத்தும் சோவின் நாடகங்களைக் காலத்திற்கு மீறிய, சிந்திக்க வைக்கும் கலைப் படைப்புகளாக உயர்த்துகின்றன.

5. உரையாடல் (Dialogue) நுணுக்கங்கள் மற்றும் கதாபாத்திர வடிவமைப்பு

நாடகாசிரியர் சோ. இராமசாமியின் நாடகங்களின் சக்தி, பெரிதும் அவரது **உரையாடல் நுணுக்கங்கள்** மற்றும் **கதாபாத்திரங்களின் வடிவமைப்பில்** அடங்கியுள்ளது. அவரது உரையாடல்கள் மேடை அமைப்பிற்கே உரித்தான தனித்தன்மை கொண்டவை.

சோவின் உரையாடல்கள் நடிப்புக்கான **சமிக்ஞைகள்** (cueing), நாடகியல் **இடைநிறுத்தங்கள்** (pauses), மற்றும் **குறும்படக் காட்சி** போன்ற மாதிரிகள் கொண்டவை. இந்தக் கூறுகள் உரையாடலுக்கு ஒரு இயற்கையான ஓட்டத்தை வழங்குவதோடு, நகைச்சுவை மற்றும் விமர்சனத்திற்கான வலுவான வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக, இடைநிறுத்தங்கள் சில சமயம் சொல்லப்படாத விமர்சனத்தைக் குறிப்பாக வெளிப்படுத்தும்.

கதாபாத்திர வடிவமைப்பிலும், சோ ஒரு திறமையான கைவண்ணம் கொண்டவர். அவர் தனது கதாபாத்திரங்களின் வாயிலாக பல்வேறு **சமூகக் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்**. ஒவ்வொரு குழுவின் சமூக, கல்வி, பொருளாதார நிலையையும் அடையாளப்படுத்தும் விதத்தில், ஒவ்வொரு கதாபாத்திரத்தின் **மொழி பாணி** மற்றும் **சொல்லாடல்** ஆகியவை தனித்துவமாக வேறுபடுத்தப்பட்டுள்ளன. இந்த மொழி வேறுபாடு மூலம், சமூகத்தில் நிலவும் **படிநிலை அமைப்பு** மற்றும் **மதிப்பீடுகள்** தெளிவாகப் புலப்படுகின்றன.

மிக முக்கியமாக, சோ ஒரே **மாதிரியான கருத்துகள்** (stereotypes) உள்ள கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தி, பின்னர் நாடகத்தின் போக்கில் அந்த ஒரே மாதிரியான கருத்துகளை **மீறிச் செல்கிறார்**. இந்த நுட்பம் பார்வையாளரின் எதிர்பார்ப்புகளை முறியடிப்பதோடு, சமூகப் பிரிவுகள் மீது அவர்கள் கொண்டிருக்கும் முன் கணிப்புகளைக் கேள்விக்குள்ளாக்கும் வலுவான சிந்தனைத் தூண்டுகோலாக செயல்படுகிறது. இவ்வாறு, உரையாடலின் நுணுக்கமான கட்டமைப்பும், கதாபாத்திரங்களின் ஆழமான வடிவமைப்பும் சோவின் நாடகங்களில் அரசியல்-சமூகக் கருத்துக்கள் தாக்கம் மிகுந்த விதத்தில் வெளிப்பட உதவுகின்றன.

6. வாசகர்/தாக்கம் (Audience effect) மற்றும் சமூக விமர்சனத் தாக்கம்

சோ. இராமசாமியின் நகைச்சுவை நாடகங்கள் பொதுமக்கள் எளிதில் புரிந்து ரசிக்கக்கூடிய பாணியில் அமைந்திருந்ததால், அது ஒரு குறுகிய வட்டாரத்திற்குள் மட்டுமே சுருங்காமல், விரிவான பார்வையாளர் வட்டத்தைக் கவர்ந்து சென்றது. அவரின் படைப்புகளில் பயன்படுத்தப்பட்ட நகைச்சுவை, பரியாசம் மற்றும் சுட்டிகேள்விகள் அனைத்தும் மக்களுடன் உடனடி தொடர்பை ஏற்படுத்தின. இதன் மூலம், மக்களின் அன்றாட அனுபவங்களோடு கலந்த அரசியல் மற்றும் சமூக நிகழ்வுகள் நாடக மேடையில் பிரதிபலித்தன. இந்த அணுகுமுறை நாடகங்களை வெறும் பொழுதுபோக்கு கருவியாக மட்டுமல்லாமல், சமூக மற்றும் அரசியல் சிந்தனையைத் தூண்டும் சக்தியாக மாற்றியது. அரசியல் உரையாடல்கள் பொதுவாக உயர்கல்வியாளர்கள் அல்லது சிந்தனையாளர்களுக்குள் மட்டுமே நிகழ்ந்தாலும், சோவின் நாடகங்கள் அந்த உரையாடலை பொதுமக்களிடமும் கொண்டு சென்றன. நகைச்சுவை மற்றும் பரியாசம் இணைந்த விமர்சனமாக இருந்ததால், பார்வையாளர்கள் சிரிப்புடன் சிந்திக்கவும் வைக்கப்பட்டனர்.

இவ்வாறு, நாடகங்கள் மக்களிடம் அரசியல் நாகரீக பரிமாணங்களைப் பற்றிய விழிப்புணர்வை வளர்த்தன. குறிப்பாக, ஊழல், அதிகாரத்தின் தவறான பயன்பாடு, சமூக சமத்துவம் போன்ற கேள்விகள் சுலபமான உரையாடல்களின் மூலமாக பார்வையாளர்களிடம் சென்றடைந்தன. சோ. இராமசாமியின் தனித்துவமான பாணி, அரசியலை சிக்கலான உரையாடல்களிலிருந்து எடுத்து மக்களின் வாழ்வுடன் இணைத்தது. இதன் விளைவாக, அவரது நாடகங்கள் சமூக விமர்சனத்திற்கான வலுவான மேடையாக மாறின. பார்வையாளர்களின் சிந்தனையை மாற்றும் வல்லமை கொண்ட இந்த பாணி, அரசியல் விழிப்புணர்வை பொதுமக்களிடையே பரப்பியதில் முக்கிய பங்கு வகித்தது. எனவே, சோவின் நாடகங்கள் நகைச்சுவையால் மகிழ்வித்தாலும், அதைவிட ஆழமாக அரசியல் உணர்வை தூண்டிய இயக்கமாகக் கருதப்படுகின்றன.

7. ஆய்வுக்கான பரிந்துரைகள் (Methodological suggestions for further research)

நாடகாசிரியர் சோ. இராமசாமியின் படைப்புகளின் மொழி, பாணி மற்றும் தாக்கம் குறித்த ஆய்வை மேலும் ஆழப்படுத்த, பின்வரும் முறைசார்ந்த ஆய்வு வழிமுறைகளை முன்மொழியலாம்.



Fig1: **முக்கோண ஆய்வு மாதிரி**

Fig1 shows இந்த வரைபடம் **முக்கோண ஆய்வு மாதிரியை (Triangular Research Model)** காட்டுகிறது. இது சோ. இராமசாமியின் **கலைப் படைப்புகள் மற்றும் அவரின் தாக்கம்** பற்றிய விரிவான ஆய்வுக்கான **கட்டமைக்கப்பட்ட கருத்துச் சுருக்க (conceptual framework)** ஆகும்.

1. மொழி-பாணி அடிப்படையிலான ஆய்வு (Corpus-Based Stylistic Analysis)

சோவின் நாடக உரைகள் மற்றும் கட்டுரைகள் அனைத்தையும் ஒரு **மின்னணு தரவுத்தொகுப்பாக** (Digital Corpus) உருவாக்கி, மொழியியல் ஆய்வுக்கு மென்பொருள் (software) மூலம் பகுப்பாய்வு மேற்கொள்ளலாம்.இந்த முறை மூலம், அவரது எழுத்தில் மீண்டும் மீண்டும் வரும் **சொற்பொருள் தேர்வுகள், இலக்கண அமைப்புகள், வாக்கியச் சூத்திரங்கள்** மற்றும் **சொற்றொடர்கள்** ஆகியவை அறிவியல் பூர்வமாகக் கண்டறியப்படும். எடுத்துக்காட்டாக, 'அரசியல்', 'ஜனநாயகம்', 'அதிகாரம்' போன்ற சொற்கள் எவ்வளவு அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன, அவை எந்த சொற்களுடன் இணைந்து வருகின்றன என்பனவற்றை எண்ணிக்கைப் பூர்வமாக அளவிட முடியும். இது சோவின் மொழிப் பாணியின் அடிப்படை அம்சங்களைத் தெளிவாக வரையறுக்க உதவும்.

2. பார்வையாளர் ஏற்பு ஆய்வு (Audience Reception Studies)

சோவின் நாடகங்களின் உண்மையான தாக்கத்தைப் புரிந்துகொள்ள, **பார்வையாளர் ஏற்பு** கோட்பாட்டின் அடிப்படையில் ஆய்வு நடத்தப்பட வேண்டும். இதற்காக, காலம் கடந்து விட்ட பழைய **மேடை நிகழ்ச்சிகளின் காணொளிகள்** (Archive Videos) கிடைக்கப்பெற்றால், அவற்றை

பகுப்பாய்வு செய்தல், அத்துடன் அந்த நாடகங்களை நேரில் கண்ட பார்வையாளர்களுடன் **நேர்காணல்கள்** மற்றும் **கேள்வித்தாள் ஆய்வுகள்** நடத்தப்படலாம். இவை மூலம், பல்வேறு காலக்கட்டங்களில் வாழ்ந்த மக்கள் சோவின் நாடகங்களில் இருந்து எவ்வாறு பொருள்கண்டார்கள், எந்தக் காட்சிகள்/வசனங்கள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தின என்பது பற்றிய நேரடித் தகவல்கள் கிடைக்கும்.

3. ஊடகத் தாக்கம் மற்றும் பாரம்பரியம் (Media Impact and Legacy)

சோவின் சிந்தனைகள் நாடக மேடையை தாண்டி, **தொலைக்காட்சி, பத்திரிக்கை** மற்றும் தற்போதைய **சமூக ஊடகங்கள்** வழியாக எவ்வாறு பரவியது மற்றும் தாக்கம் செலுத்தியது என்பது பற்றிய ஆய்வு முக்கியமானது. 'குடும்பம்' வார இதழில் அவர் எழுதிய கட்டுரைகள், 'சினிமா' இதழில் செய்த தாக்கம், மற்றும் சமூக ஊடகங்களில் இன்றும் அவரது எண்ணங்கள் எவ்வாறு பகிரப்படுகிறது மற்றும் விவாதிக்கப்படுகிறது என்பதை முறைப்படுத்தி ஆய்வு செய்யலாம். இது ஒரு கலைஞரின் பாரம்பரியம் காலத்துக்கு ஏற்றவாறு எவ்வாறு மாறியமைந்து வளர்ச்சியடைகிறது என்பதை விளக்கும்.

8. References

1. சோ. இராமசாமி — தமிழ் விக்கிப்பீடியா. (சோ. ராமசாமி — அடிப்படை வாழ்க்கைக் குறிப்புகள் மற்றும் படைப்புகள்).
2. "Cho Ramaswamy" — English Wikipedia (ชีวประวัติ மற்றும் திரைப்பட/நாடகப் பதிவுகள்).
3. Rediff.com — *Cho... Anything but Tughlaq* (சோவின் Mohammed bin Tughlaq நாடகத்தின் பரிகாசத் தன்மை பற்றிய விமர்சனம்).
4. Madras Musings — *Cho remembered* / *Cho remembered – 2* (சோவின் நாடகப் பயணம் மற்றும் மேடை அனுபவங்கள்). TNOU MAL-22: *Stylistics and Discourse Analysis* (மொழி-பாணியியல் அடிப்படைக் கோட்பாடுகள் — ஆய்வுக்கான முறைப்பாட்டுத் தளவமைப்பு).
5. Scroll.in / Hindustan Times / Economic Times obituaries & profiles on Cho (சோவின் பொதுவுடைமை மற்றும் அரசியல் அணுகுமுறை பற்றிய செய்திகள்).

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723
Vol. 4 Issue: 01 October 2025

உயிர், மெய், குற்றுகரவீற்றுப் புணர் மொழிகள்

The Confluence of Words: Vowel, Consonant, and KuRRugaRam Endings

முனைவர் அ. ஆத்தீஸ்வரி,

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, மதுரைக் கல்லூரி (தன்னாட்சி), மதுரை

Dr.A. Atheeswari,
Associate Professor, Department of Tamil, The Madura College(Autonomous), Madurai
Email: sumasumathi930@gmail.com ORCID: https://orcid.org/0009-0007-6523-5678

Abstract:

The development of a language is based on the development of the literature and grammars that emerged in that language. Grammars teach grammatical rules to speak and write a language without errors. Language is a combination of letters. Language development is intrinsically linked to the evolution of its literature and grammar, with grammar teaching the rules for error-free speech and writing. Language is fundamentally a combination of letters, a process structured as punarcci (sandhi). This sandhi is crucial for a language's origin and growth, where letters are specifically identified as the final letter of the preceding word and the initial letter of the succeeding word.

Keywords: Language, Grammars, Literature

ஆய்வுச் சுருக்கம்:

மனித குலத்தின் மிகச் சிறந்த கண்டுபிடிப்பு எதுவென்றால், அது மொழிதான். மொழியின் ஆழத்தையும், அதன் செழுமையையும் நிர்ணயிக்கும் மூன்று அடிப்படைக் கொள்கைகளை விளக்கும் ஒரு தத்துவச் சிந்தனையை நாம் இங்கே தமிழ்ச்சொற்கள் இழைந்தோடக் காணலாம், மொழியின் வளர்ச்சியானது அதன் இலக்கிய, இலக்கண வளர்ச்சியுடன் பின்னிப் பிணைந்துள்ளது. இலக்கணங்கள் மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் விதிமுறைகளைக் கற்பிக்கின்றன. மொழி என்பது எழுத்துக்களின் சேர்க்கையாகும், இச்சேர்க்கையானது புணர்ச்சி என கட்டமைக்கப்படுகிறது. ஒரு மொழியின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் புணர்ச்சி நிலையே அடிப்படையாக அமைகிறது. எனவே, புணர்ச்சியில் எழுத்துக்கள் நிலைமொழியின் இறுதி எழுத்தாகவும், வருமொழியின் முதல் எழுத்தாகவும் சுட்டப்படுகின்றன.

திறவுச்சொற்கள்: மொழி, புணர்ச்சி நிலை

உயிர், மெய், குற்றுகரவீற்றுப் புணர் மொழிகள்

மொழியின் வளர்ச்சியானது அம்மொழியில் தோன்றிய இலக்கிய, இலக்கணங்களின் வளர்ச்சி நிலையினை அடியொற்றியதாகவே உள்ளது. இலக்கணங்கள் மொழியினைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் இலக்கண விதிமுறைகளைக் கற்பிக்கின்றன. மொழி என்பது எழுத்துக்களின் சேர்க்கையாகும். இச்சேர்க்கையானது புணர்ச்சி எனக் கட்டமைக்கப்படுகிறது. மொழியானது தோற்றம் பெறுவதற்கும் வளர்ச்சியடைவதற்கும் புணர்ச்சிநிலையானது அடிப்படையாக அமைகிறது. எனவே புணர்ச்சியில்

எழுத்துக்கள் என்பன நிலைமொழி இறுதி எழுத்தாகவும் வருமொழி முதல் எழுத்தாகவும் சுட்டப்படுகின்றன.

புணர்மொழிகள்

மொழிகளின் புணர்நிலைகளை உணர்த்த விழைந்த தொல்காப்பியர், அதற்கு முன்பாக மொழிக்கு முதலிலும், இறுதியிலும் வரும் எழுத்துக்களை நிரல்படுத்துகிறார். எனவே புணர்மொழிகளின் இயல்புநிலைகளைச் சுட்டுவதற்கு முன்பே மொழிக்கு முன்னும் இறுதியிலும் வரும் எழுத்துக்களை விளக்கியுரைத்துத் தெளிவுபடுத்துகிறார்.

"மூன்று தலையிட்ட முப்பதிற் றெழுத்தின்
இரண்டு தலையிட்ட முதலா இருபஃது
அறுநான் கீற்றொடு நெடுநின் றியலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே யுயிரென்று ஆயி ரியல" 1

மெய்யும் உயிருமாகிய இரண்டு இயல்பினையுடையனவாகிய எழுத்துக்கள் மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் என இதனால் உணர்த்தப்படுகிறது.

"உயிரீறு சொல்முன் உயிர் வரு வழியும்
உயிரீறு சொல்முன் மெய்வரு வழியும்
மெய்யீறு சொல்முன் உயிர்வரு வழியும்
மெய்யீறு சொல்முன் மெய்வரு வழியுமென்று
இவ்வென அறியக் கிளக்குங் காலை
ஆயீரியல புணர்நிலைச் சுட்டே" 2

என நிறுத்த சொல்லினையும் அதன் பொருண்மையைக் குறித்து வரும் சொல்லுமாகிய இரண்டு இயல்பினையுடைய புணர் மொழியானது விளக்கப்படுகிறது.

புணர்தலின் அடிப்படைகள்

புணரியல் என்ற சொல்லானது எழுத்துக்கள் தம்மில் தாம் புணரும் இயல்பினை விரித்துக் கூறுவதாக அமைகிறது. அதாவது நிலைமொழியிறுதியில் உள்ள எழுத்தும் வருமொழி முதலில் உள்ள எழுத்தும் புணரியலில் எழுத்துக்கள் என்ற பான்மையில் அடங்குகின்றன. அவ்வகையில் நின்றசொல், வருஞ்சொல் இவ்விரண்டு சொற்களும் தம்முள் தொடர்கின்ற போது முதலில் நிற்பதாகிய நிலைமொழியிறுதியில் உள்ள எழுத்தும் வருமொழி முதலில் உள்ள எழுத்தும் ஒன்றோடொன்று தொடர்ந்து வருகின்றபோது அவற்றுக்கு ஏற்படும் இயல்புகளை விரித்துரைப்பது புணரியல் எனப்படுகிறது.

நிறுத்த சொல் என்பது நிலை மொழி எனவும் குறித்து வரும் சொல் என்பது வருமொழி எனவும் கொள்ளப்படுகிறது. இதனைத் தொல்காப்பியர், நிறுத்த சொல்லினது ஈறாகின்ற எழுத்து (நிலைமொழி) குறித்து வருகின்ற சொல்லினது முதல் (வருமொழி) பொருந்தி இயைந்து வருவதைப் புணரியலின் அடிப்படையாக விளக்குகிறார். மேலும் புணர்தலின் இயல்பினை,

"நிறுத்த சொல்லின் ஈறா கெழுத்தொடு
குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்
பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலாடு தொழிலைப் புணர்க்குங் காலும்
மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென

ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே” 3

எனப் பெயரோடு பெயரும், பெயரோடு வினையும், வினையோடு பெயரும், வினையோடு வினையுமாகப் புணர்ந்து, மூவகைத் திரிபுகளையும் ஒன்றாக்கிய இயல்பினைக் கொண்ட நான்குநிலைகளை உடையதாக மொழிகள் தம்மிற் புணரும் இயல்பானது குறிப்பிடப்படுகிறது.

உயிரீற்றுப் புணர்மொழிகள்:

உயிரெழுத்துக்களை ஈறாக உடைய சொற்கள் வன்கணத்தோடும் சிறுபான்மை பிறகணத்தோடும் மயங்கிப் புணரும் போது அப்புணர்நிலையானது பல்வேறு நிலைகளில் அமைகிறது.

அகர ஈற்றுப் பெயர்கள் அல்வழிப் புணர்நிலையில் க,ச,த,ப இவற்றை முதல் மொழியாகக் கொண்டு புணரும் போது தத்தமக்குப் பொருந்திய ஒற்றுக்களையே பெறுகின்றன.

- ❖ விள + தீது = விளத்தீது

  (அ)

- ❖ மக + பெரிது = மகப்பெரிது

  (அ)

இகர, ஈகார, ஐகார உயிர்களின் முன் யகரமும், அகர, ஆகார, உகர, ஊகார ஒகர, ஓகார உயிர்களின் முன் வகரமும் ஏகார உயிர் முன் யகரமும் வகரமும் ஆகிய இரண்டும் உயிர் முதல் மொழியாக வரும்போது தோன்றும் என்பது குறிப்பிடப்படுகிறது.

- ❖ மணி + அழகிது = மணியழகிது (யகரம்)
- ❖ பூ + எல்லாம் = பூவெல்லாம் (வகரம்)
- ❖ சே + அடி = சேயடி, சேவடி (யகரம், வகரம்)

குற்றியலுகரமான "உகரம்" நிலைமொழியில் நிற்க வருமொழியில் உயிர் முதல் மொழியாக வந்தால் தனக்கிடமாகிய மெய்யினை விட்டுக் கெடுகிறது. யகரம் முதல் மொழியாக வந்தால் இகரமாகத் திரிகிறது.

- ❖ நாகு + அரிது = நாகரிது (உயிர்வர உகரம் கெட்டது)
- ❖ நாகு + யாது = நாகியாது (உகரம் இகரமாகத் திரிந்தது)

அகரம் முதல் ஔகாரம் வரை உள்ள உயிரீறுகள் இயல்பாகவும், விகாரப்பட்டும், வல்லெழுத்து சாரியைப் பெற்றும், மிக்குத் தோன்றுவதாகவும் புணரியலில் கட்டமைக்கப்படுகிறது.

- ❖ செல்க + குதிரை = செல்க குதிரை

  (அகர ஈறு இயல்பானது)

- ❖ நிலா + கொண்டான் = நிலாத்துக் கொண்டான்

  (ஆகர ஈறு அத்துச்சாரியைப்பெற்றது)

- ❖ உதி + கோடு = உதிங்கோடு

  (இகர ஈறு மெல்லெழுத்துப் பெற்றது)

- ❖ ஈ + கால் = ஈக்கால்

  (ஈகார ஈறு வல்லெழுத்துப் பெற்றது)

- கடு + காய் = கடுக்காய்

(உகர ஈறு வல்லெழுத்துப் பெற்றது)

- ஆடு + கை = ஆடுவின்கை

(ஊகார ஈறு இன்சாரியைப் பெற்றது)

- யானேஎ + கொண்டேன் = யானேஎ கொண்டேன்

(எகர ஈறு இயல்பாக வந்தது)

- சே + கடிது = சேக்கடிது

(ஏகார ஈறு வல்லெழுத்துப் பெற்றது)

- மழை + கொண்டான் = மழையத்துக்கொண்டான்

(ஐகார ஈறு அத்துச்சாரியைப் பெற்றது)

- ஒஒ + கொண்டாய் = ஒஒகொண்டாய்

(ஓகார ஈறு இயல்பாய் வந்தது)

- கோ + கை = கோஒன்கை

(ஓகார ஈறு ஒன்சாரியைப் பெற்றது)

- கௌவு + கடிது = கௌவுக்கடிது

(ஔகார ஈறு வல்லெழுத்துப் பெற்றது)

மெய்யீற்றுப் புணர்மொழிகள்:

நிலைமொழி ஈற்றில் மெய்யீறுகள் (புள்ளியீறுகள்) நிற்க வருமொழி முதலில் வன்கணமும் சிறுபான்மை பிற கணங்களும் மயங்கிப் புணரும் இயல்பினை உடையது மெய்யீற்றுப் புணர்மொழிகள். இவை மெய்யீறுகளின் புணர்ச்சி இலக்கணத்தைச் சுட்டி நிற்கின்றன. நிலைமொழி ஈற்றில் நின்ற மெய்யின் மீது வருமொழி முதலில் உள்ள உயிர்கள் வந்து ஒன்றுபட்டு இணங்கி நிற்பது இயல்புப் புணர்ச்சியின் தன்மையினைப் பெறுகின்றன.

மன்றல் + அழகு = மன்றலழகு
கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்

-- இயல்பாக வந்தன

குற்றெழுத்தின் அடுத்துவரும் மெய்யானது நிலை மொழி ஈறாக நிற்க, வருமொழியில் உயிர்வரின் அவ்உயிரானது இரட்டித்து நிற்கின்றது.

கண் + அழகிது = கண்ணழகிது
பொன் + உரல் = பொன்னுரல்

--ஒற்று இரட்டித்தன

தொழில் பெயர்களும் ஏவல் வினைகளும் ஞ, ண, ந, ம, ல, வ,ள, ன என்னும் எட்டு மெய்களை நிலைமொழியில் இறுதியாகக் கொண்டு புணரும் இடத்து 'உகரச்சாரியையானது' அவ்விடத்துப் பொருந்தித் தோன்றுகின்றது.

உரிஞ் + கடிது = உரிஞுக்கடிது
உரிஞ் + கொற்றா = உரிஞுக்கொற்றா

என 'ஞ' முதலிய மெய்யீற்றுத் தொழில்நிலைப்பெயரும்,

உண் + சிறிது = உண்ணுச்சிறிது

உண் + சாத்தா = உண்ணுச்சாத்தா

ஏவல் வினைகளும் உகரம் பெற்று வருவது புலனாகின்றது.

"ணகார இறுதி வல்லெழுத் தியையின்

டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே " 4

“ணனவல் லினம்வரட் உறவும் பிறவரின்

இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்

கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே" 5

இவ்வாறு ணகார, னகாரங்கள் நிலைமொழியில் நிற்க, வருமொழியில் வன்கணம் வந்தால் டகரமும் நகரமும், வருமொழியில் மென்கணமும் இடைக்கணமும் வந்தால் இயல்பாகவும் புணரும் என்று குறிப்பிடப்படுகிறது.

- மண் + குடம் = மட்குடம்
- பொன் + தமிழ் =பொற்றமிழ்
- மண் + ஞாற்சி = மண்ஞாற்சி

- டகரம், றகரம், ணகரம் பெற்றன

- பொன் + ஞாற்சி = பொன்ஞாற்சி
- மண் + வன்மை = மண்வன்மை
- பொன் + வன்மை = பொன்வன்மை

- இயல்பாய் வந்தன

மேலும் யகர. ரகர. ழகர. ழகர ஈறுகள் நிலைமொழிகளில் நிற்க வருமொழியில் க. ச. த. பக்கள் வந்தால்.

- **அல்வழிப் புணர்ச்சியில்**

இயல்பாதல்	***மிகுதல்***
பேய் + பூதம் = பேய்பூதம்	வேய் + தோள் = வேய்த்தோள்
நீர் +கானல் = நீர்கானல்	கார் + குழல் = கார்க்குழல்
இகழ் +புகழ் = இகழ்புகழ்	காழ் +படிவம் = காழ்ப்படிவம்

என்பது விதியாகும்.

லகர, ளகர மெய்கள் நிலைமொழி ஈறாய் நிற்க வருமொழியாய் வல்லெழுத்துக்கள் வருமிடத்து வேற்றுமைப் புணர்ச்சியில் றகார. டகார மெய்களும் அல்வழிப்புணர்ச்சியில் இவ்விரண்டு மெய்களுடனே உறழ்வாகும் தன்மையும் உடையனவாய்ப் புணர்மொழியானது அமைகிறது. மேலும் வேற்றுமை, அல்வழி இரு நிலைகளிலும் மெல்லினம் வந்தால் னகார, ணகார மெய்களும் இடையினம் வந்தால் இயல்பாகவும் அமையும் என்பதும் இதனால் பெறப்படுகிறது.

- ❖ பல் + குறை = பற்குறை
- ❖ வாள் +குறை = வாட்குறை

வேற்றுமையில் றகர, டகரங்களாய் வந்தன

- ❖ பல் + குறிது = பல்குறிது. பற்குறிது
- ❖ வாள் + குறிது = வாள்குறிது, வாட்குறிது

அல்வழியில் இயல்பாய், உறழ்ந்தும் வந்தன

- ❖ கல் + மாண்டது = கன்மாண்டது
- ❖ முள் + மாட்சி = முண்மாட்சி

இருவழியும் னகர, ணகரமாய்த் திரிந்தன

- ❖ கல் + யாது = கல்யாது
- ❖ முள் + யாப்பு = முள்யாப்பு

இருவழியும் இடையினம் வர இயல்பாயின

குற்றியலுகரப் புணர்மொழிகள்:

குற்றியலுகர ஈறுகள் பொருட் பெயர், அளபுப் பெயர். எண்ணுப் பெயர் என்னும் இவற்றின் அடிப்படையில் வருமொழியோடு புணரும் இயல்பினை உடைத்தாய் அமையும் என இலக்கண வரையறை கூறப்படுகிறது.

- ❖ வண்டு +கால் = வண்டின் கால் (இன்சாரியைப் பெற்றது)
- ❖ ஒன்று +காயம் = ஒன்றன் காயம் (அன்சாரியைப் பெற்றது)

பத்து என்னும் எண்ணுப் பெயர் நிலை மொழியில் நிற்க, குற்றுகர எண்ணுப் பெயர்களுள் ஒன்று முதலாக எட்டு என்பது வரை உள்ள எல்லா எண்ணுப் பெயர்களும் வருமொழியாய் வருகின்ற போது அப்பத்து என்னும் சொல்லில் உள்ள குற்றியலுகரம் தான் ஏறி நின்ற மெய்யொடும் கெட்டு முடியும் என்று கூறப்படுகிறது.

“ ஒன்று முத லொன்பான் இறுதி முன்னர்
நின்ற பத்த னொற்றுக்கெட ஆய்தம்
வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப
கூறிய இயற்கைக் குற்றிய லுகரம்
ஆற னிறுதி அல்வழி யான” 6

ஒன்று முதலாக ஒன்பது ஈறாகச் சொல்லப்படுகின்ற எண்ணுப் பெயர்கள் நிலைமொழியாய் நிற்க, வருமொழியாக நின்ற 'பத்து' என்னும் சொல்லினது 'தகர' ஒற்றுக் கெட, ஆய்தமானது வந்து இடையில் நிலைபெறும் இயல்புடைத்தாகும் என எண்ணுப் பெயரொடு பத்து புணரும் முறைமையினை இந்நூற்பா விளக்கி நிற்கிறது.

மேலும் நூறு என்னும் எண்ணுப் பெயருடன் அளபுப் பெயரும் நிறைப்பெயரும் புணருமிடத்து, அவ்விடத்துக் குற்றியலுகரம் கெடாமையும் வல்லெழுத்து மிகும் இயல்பு உடையதாகவும் புணர்ச்சியானது அமையப் பெறுகிறது.

- நூறு + கலம் = நூற்றுக்கலம்
- நூறு + சாடி = நூற்றுச்சாடி

புணரியல் மொழிகள் ஈற்றுச் சொல். வருஞ்சொல் என்னும் அடிப்படையில் பெறுகின்ற.அடைகின்ற மாற்றங்களை இலக்கண நூலோர் தொகை வகையாக வரையறுத்து மொழிகின்றனர். அவ்வகையில் மேலும் "புணர்க்கப்படா மொழிகள்" எனச் சிலவற்றையும் எடுத்துரைத்து அதற்கும் இலக்கணம் கூறப்படுவது தமிழ்மொழியின் ஏற்றத்திற்கு வளர்ச்சிக் காரணமாய் அமைகிறது.

குறிப்புகள்

1. தொல்காப்பியம்,புணரியல் : 1
2. தொல்காப்பியம்,புணரியல் : 5
3. தொல்காப்பியம்,புணரியல் : 6
4. தொல்காப்பியம்,புள்ளிமயங்கியல் : 7
5. நன்னூல் : 391
6. தொல்காப்பியம்,குற்றியலுகரப்புணரியல் : 7

References:

1. Tholkappiyam, Chapter on Combinations (Punariyal): 1
2. Tholkappiyam, Chapter on Combinations (Punariyal): 5
3. Tholkappiyam, Chapter on Combinations (Punariyal): 6
4. Tholkappiyam, Chapter on Consonant Combinations (Pullimayangiyal): 7
5. Nannool: 391
6. Tholkappiyam, Chapter on the Combination of *Kutriyalukaram* (Shortened 'U' Sound - Kutriyalukarapunariyal): 7

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

பாரதியாரின் பயணக் கட்டுரைகள்– வருணனை மொழிநடையும் புனைவுமொழிக்கட்டமைப்பும்

The Travelogues of Bharathiar: Descriptive language style and fictional language structure

முனைவர் பாரதிபிரகாஷ் ச.,

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், தமிழ்நாடு.

Dr. Bharathi Prakash. S., Assistant professor, Tamil Department, PSG College of Arts and Science, Coimbatore, Tamilnadu.

Email: bharathiprakaash@gmail.com, ORCID: https://orcid.org/0009-0007-0355-9511

Abstract:

Travelogue is one of the important literary genre inIndian literary Areana. It is a relatively recent genre in Indian literature, emerging in the second half of the nineteenth century. Travelogue is the outcome of the travel experience which is opposed to the imagined descriptions in fictional narratives. There is no single term that fully describes the complexities and diversity of travel writing. The vast majority of travelogues are written in prose. The majority of people identify travel writing with stories about strange places or characters. Though everything published in this format may be considered a voyage, it is not Travelogue. Aatruppadai, Yathirai, Selavu, Payanam, and Prayanam are examples of travel-themed literary terms that span the Sangam to modern eras in Tamil literature. One of the pioneers of contemporary Tamil travelogue is Maha Kavi Bharathi. who wrote the book Our Congress Yathra,(Eṅkaḷ kāṅkiras yāttirai). a comprehensive account of his Congress party meeting trips.. His other travel writings include Pāpanācam and My Erode Yathra (Eṉ īrōṭṭu yāttirai). The descriptive language and fictional language structure present in his travel writings are examined in this article. The main focus is the 'descriptive language' of Bharathiyar.

Keywords : Travel, Pilgrimage, Route, Record, Papanasam, Congress Yathra, Fictional Language.

ஆய்வுச் சுருக்கம்:

இந்திய இலக்கிய அரங்கில், பயண இலக்கியம் (Travelogue) ஒரு முக்கியமான வகையாக விளங்குகிறது. இது இந்திய இலக்கியத்தில் ஒப்பீட்டளவில் புதிய ஒரு வகையாகும், இது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் தோன்றியது. புனைகதை இலக்கியங்களில் கற்பனையாக விவரிக்கப்படும் காட்சிகளுக்கு மாறாக, பயண இலக்கியம் என்பது நேரடிப் பயண அனுபவங்களின் விளைவாகும். பயண எழுத்தின் சிக்கலான தன்மையையும் பன்முகத்தன்மையையும் முழுமையாக விவரிக்கக்கூடிய ஒரு தனிச்சொல் இல்லை. பெரும்பாலான பயண இலக்கியப் படைப்புகள் உரைநடையில் எழுதப்பட்டுள்ளன. பெரும்பாலான மக்கள், பயண எழுத்தை வேற்று இடங்கள் அல்லது விசித்திரமான கதாபாத்திரங்களைப் பற்றிய கதைகளுடன் தொடர்புபடுத்துகின்றனர். இந்த வடிவத்தில் வெளியிடப்படும் அனைத்தும் ஒரு பயணமாகக் கருதப்பட்டாலும், அது பயண இலக்கியம் ஆகாது. சங்க

காலம் முதல் நவீன காலம் வரையிலான தமிழ் இலக்கியத்தில், பயணத்தை மையமாகக் கொண்ட இலக்கியச் சொற்களுக்கு 'ஆற்றுப்படை', 'யாத்திரை', 'செலவு', 'பயணம்', 'பிரயாணம்' போன்றவை எடுத்துக்காட்டுகளாகும். தற்கால தமிழ் பயண இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவர் மகாகவி பாரதியார். இவர் தனது காங்கிரஸ் கட்சி கூட்டங்களுக்கான பயணங்களைப் பற்றிய விரிவான பதிவான "எங்கள் காங்கிரஸ் யாத்திரை" என்ற நூலை எழுதினார். அவரது மற்ற பயண எழுத்துக்களில் "பாபநாசம்" மற்றும் "என் ஈரோடு யாத்திரை" ஆகியவை அடங்கும். இந்தப் பயண எழுத்துக்களில் காணப்படும் விளக்க மொழி மற்றும் புனைவு மொழி அமைப்பு இந்தக் கட்டுரையில் ஆராயப்படுகிறது. பாரதியாரின் 'விளக்க மொழி'யே முக்கியக் கவனம் செலுத்துகிறது.

திறவுச்சொற்கள்: பயணம், யாத்திரை, வழி, பதிவு, பாபநாசம், காங்கிரஸ் யாத்திரை, புனைவு மொழி

தமிழ் மொழி இரண்டாயிரம் ஆண்டு பழைமையான இலக்கண, இலக்கியங்களைஉடையது. இலக்கண நூலான, தொல்காப்பியத்தில் உரைநடையைப் பற்றிய பல்வேறு குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. உரைநடை என்பது, சிலம்பில் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக இடம்பெற்றுள்ளது. பக்தி இலக்கியத்திலும் ஆங்காங்கு உரைநடை இலக்கியச் செல்வாக்கு தெளிவாகப் புலப்படுகிறது. கல்வெட்டுக்களில் உரைநடை பெருமளவில் கையாளப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்ஆங்கில மொழியிலுள்ள நல்ல உரைநடை இலக்கியங்களையும், அறிவியல் நூல்களையும் மக்கள் கற்கத் துவங்கினர். ஆங்கிலக் கல்வியறிவு, அச்சு இயந்திரவளர்ச்சி, நூல் கற்கும் ஆர்வம் ஆகியவற்றின் காரணமாக 19,20 ஆம் நூற்றாண்டுகளில் தமிழில் உரைநடை இலக்கியம் வளரத் துவங்கியது. இவ்வாறு காலம் தோறும் மாறி வந்த தமிழ் உரைநடை இலக்கியத்தை குறிப்பாக பயண இலக்கியத்தை வளம் பெறச் செய்தவர்களில் பாரதியார் குறிப்பிடத் தக்கவர் ஆவார். இவருடைய பயணஇலக்கியங்களில் இடம் பெற்றுள்ள வருணனை மொழிநடையும் புனைவு மொழிக் கட்டமைப்பும் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. இதில் பாரதியாரின்' வருணனை மொழி' மையப் புள்ளியாக விளங்குகிறது.

பயண இலக்கியம் - அகராதிகளின் விளக்கம்

பயணம் என்பதற்கு மதுரைத் தமிழ்ப் பேரகராதி புறப்பாடு, வெளியீடு, பிரயாணம் என்று விளக்கம் தருகிறது. தமிழ் லெக்ஸிகன் பயணம் என்பதற்குப் பிரயாணம் என்று பொருள் தருகிறது. க்ரியாவின் தமிழ் அகராதி இருக்கும் ஊர், நகரம் முதலியவற்றிலிருந்து மற்றொன்றிற்குச் செல்லும் பயணம் என்று விளக்கம் தருகிறது. பயணஇலக்கியம்என்பதற்கு, ***‘ஒரு புதிய இடத்தை அல்லது சில இடங்களைப் பற்றிய செய்திகளைப்பயணம் செய்தவரின் அனுபவத்தில் குழைத்து எடுத்துப் படிப்போருக்குச் சுவையும் எழுச்சியும் தரும் விதமாகச் சொல்லுவதே சிறந்த பயணஇலக்கியம் (இரா.ஞானபுஷ்பம்,பக்.2)*** என்று இரா.ஞானபுஷ்பம் வரையறை தருகிறார்.

இரா. மோகனா தனது பயணஇலக்கிய நூலில் பயணஇலக்கியம் என்பது, ***‘ஒருவர் தாம் கண்டதையும் கேட்டதையும் அதனால் அடைந்த உள்ளுணர்வுகளையும்பிறரோடுபகிர்ந்துகொள்ளஎழுதப்பட்டதே பயண இலக்கியம் ஆகும்’***

(இரா.மோகனா, பக். 8) என்று வரையறை செய்கிறார். ***'பயணம் தொடர்பான பேச்சு, சொற்பொழிவு, கட்டுரை, கதை, கவிதை, படம், திரைப்படம் போன்றவற்றைப் பயணஇலக்கியம் எனலாம்.*** (சோபனா பட்டாசார்ஜி பக்.8 இடம் பெற்றுள்ள பயண இலக்கியத்திற்கான வரையறையின் கருத்து நிலை மொழி பெயர்ப்பு).

நினைவுகளின் பின்னோக்குப் பார்வை

இலக்கியப் படைப்புக்குப் பின்னணியாக அமையக்கூடிய நிலம் என்பது, புவியியல் அடிப்படையிலான நிலமாக மட்டும் இல்லாமல், இன, மொழி, சமூக, பண்பாட்டு அடையாளங்களையும் உள்ளடக்கியதாக அமைகிறது. படைப்பாளர் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் அல்லது சிந்திக்கும் சூழலே, படைப்பின் பின்னணி நிலமாக மாறுகிறது. பின்னணி நிலம் என்பது, அங்குள்ள இயற்கை வளம், ஆறு, மலைப்பகுதிகள், தாவரங்கள், விலங்குகள், உணவு ஆகிய கூறுகளைக் கொண்டிருக்கும். அத்துடன் படைப்பாளர்கள் தங்கள் இலக்கியப் படைப்புகள் மூலம் தாம் வாழும் சமகாலத்தின் சமூக, அரசியல், வாழ்வியல் சிக்கல்களையும் சேர்த்தே பதிவு செய்கிறார்கள். பயண இலக்கியங்கள் இதற்குச் சிறந்த சான்றாகும். பயணங்கள், பாதைகள், அதன் வழியே கிடைக்கும் தரவுகள் மூலம் பயண இலக்கியம் கட்டமைக்கப்படுகிறது. இது பயணத்தைப் பின்னோக்கி மேற்கொள்வது போன்றதாகும். பயணஇலக்கியம் என்பது, பயண எழுத்தாளர்களின் நினைவுகளையும் அது சார்ந்த நிகழ்வுகளையும் மீண்டும் உயிர்ப்பிக்க உதவுகின்றன. சுருங்கச் சொல்வதெனில், 'நினைவுகளின் மீள் உருவாக்கம்' என்றும் இதனைக் கூறலாம்.

பயண இலக்கியம் படைக்கும் முயற்சியில் பயணம் மேற்கொள்ளும் இடங்களைக் கண்டு களித்தல், ஆவணப்படுத்துதல் ஆகிய இரண்டும் வெவ்வேறு நிலைகளில் நிகழ்கின்றன. இவற்றை நாம் பயண இலக்கியமாக ஒரே அடுக்கில் வாசிக்கிறோம். பயணம் மேற்கொள்ளும் போது கிடைக்கக்கூடிய தரவுகளை முழுமையாகச் சேகரித்து வைத்துக் கொள்வதும் நாட்குறிப்பு போல எழுதுவதும் பயண இலக்கியத்தின் முதல் படியாக அமைகிறது. ஆவணப்படுத்தும் இரண்டாம் நிலையில் உரிய விளக்கங்களைச் சேர்ப்பதும் தேவையற்ற தரவுகளை நீக்குவதும் இன்றியமையாததாகிறது. அத்துடன் பயண இலக்கியத்திற்கு உரிய மொழிநடையில் புனைவு மொழியோடு பயண இலக்கியத்தை படைப்பதும் அவசியமாகிறது. முறையான திட்டமிடலுடன், உரிய தரவுகளுடன் எழுதப்படும் பயண இலக்கியங்கள் வாசகர்களிடையே நம்பகத்தன்மையை பெறுகின்றன.

பாரதியாரின் பயணக்கட்டுரைகள்

பாரதியார் பிற படைப்பிலக்கியங்களைப் போலவே பயணஇலக்கியம் படைப்பதிலும் முன்னோடியாக இருந்துள்ளார். சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுக்குச் சென்ற பயண அனுபவங்களை 'எங்கள் காங்கிரஸ் யாத்திரை'(1907) என்ற பெயரில் கட்டுரையாக, சிறு நூலாக வெளியிட்டுள்ளார். பாபநாசம் சென்ற பயண அனுபவங்களை 'பாபநாசம்'(1919) என்ற தலைப்பிலும் ஈரோட்டுப் பயண அனுபவங்களை 'என் ஈரோட்டு யாத்திரை'(1921) என்ற பெயரிலும் சுதேசமித்திரன் இதழில் கட்டுரைகளாக எழுதியுள்ளார். இவற்றுள் 'எங்கள் காங்கிரஸ் யாத்திரை', கல்வி நோக்கப்

பயணமாகவும் 'பாபநாசம்', 'என் ஈரோட்டு யாத்திரை' இரண்டும் காட்சி நோக்கப் பயணமாகவும் அமைந்துள்ளன. 'எங்கள் காங்கிரஸ் யாத்திரை' நூலில் சூரத் மாநாட்டில் கலந்துகொண்ட தேசியத் தலைவர்கள், அங்கு கண்ட நிகழ்வுகளின் வருணனை இடம் பெற்றுள்ளது. 'பாபநாசம்', பயண அனுபவம்இயற்கை வருணனையாக அமைந்துள்ளது. 'என் ஈரோட்டு யாத்திரை' நிகழ்வுகளின் வருணனையாகவும் அங்குள்ள மக்களின் இயல்பு பற்றிய விவரிப்பாகவும் அமைந்துள்ளது.

பயணத்தின் மூலமாக பல்துறை அறிவை வளர்த்துக் கொள்ள இயலும் என்ற கருத்தினைக் கொண்டவராக பாரதியார் விளங்கினார். 'யாத்திரை' (எக்ஸ்கர்ஷன்) குறித்து, 'சமூகம்' என்ற தலைப்பின் கீழ் 'குணமது கைவிடேல்' என்ற கட்டுரையில் கூறும் கருத்துக்கள் இங்கே குறிப்பிடத் தக்கன. இதனை, **"பிள்ளைகளை உபாத்தியாயர்கள் வன போஜனத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அங்கு பிள்ளைகள் தமக்குள் நட்பும், அன்பும், பரஸ்பர ஸம்பாஷணையில் மகிழ்ச்சியும் எய்தும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். மலைகள் கடலோரங்களுக்கு அழைத்துச் சென்று இயற்கையின் அழகுகளையும், அற்புதங்களையும், பிள்ளைகள் உணர்ந்து மகிழும்படி செய்ய வேண்டும். பல விதமான செடி, கொடிகள், மரங்கள், லோஹங்கள், கல் வகைகள் முதலியவற்றின் இயல்பைத் தெரிவிக்க வேண்டும்" (பாரதியார், பக். 380)** என்று பயணங்களின் தேவையினையும் அவைதரும் பயன்களையும், பண்புகளையும் விவரிக்கிறார். சிறு வயதிலேயே பயணம் மேற்கொள்வதன் மூலம் மன நலம், உடல் நலம் இரண்டும் மேம்படும் என்ற கருத்தினை உடையவர் பாரதியார் என்பது இதன் மூலம் புலனாகிறது.

எங்கள் காங்கிரஸ் யாத்திரை

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1907-ம் ஆண்டு சூரத் காங்கிரஸ் கூட்டம் ஒரு முக்கியமான திருப்பமாகும். இக்கூட்டத்தில்தான் மிதவாதிகள், தீவிரவாதிகள் என்ற சூரத் பிளவு ஏற்பட்டது. சூரத் காங்கிரஸில் இருகட்சியினரும் தத்தம் கொள்கைகளை நிலைநாட்டும் பொருட்டு பலம் சேர்த்துக் கொண்டு கூடியிருந்தார்கள். சென்னையில் இருந்து புதிய கட்சியை ஆதரிக்கும் பிரதிநிதிகள் நூறுபேருக்கு மேல் சென்றிருந்தனர். இவர்களை முன்னின்று அழைத்துச் சென்றவர் பாரதியார். மேற்கண்ட பயண அனுபவத்தை சென்னை திரும்பியதும் "எங்கள்காங்கிரஸ் யாத்திரை' என்ற சிறு நூலாக வெளியிட்டார். சூரத் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற அனுபவத்தை, எளிமையான சொற்களில் அத்தியாவசியமான தகவல்களை மட்டும் சேர்த்து பாரதியார் விளக்கி எழுதி இருக்கிறார். மேற்கண்ட பயணத்தில் உடன்வந்தவர்களில், குறிப்பிடத்தக்க ஆளுமைகளின் பெயர்களை மட்டும் பதிவு செய்துள்ளார்.பயண இலக்கியம் எவ்வாறு துவங்கி எழுதப்பட வேண்டும் என்பதற்கு *எங்கள் காங்கிரஸ் யாத்திரை* உரிய சான்றாக விளங்குகிறது. இதனை,

சென்னப்பட்டணத்து ஸென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து 21ம் தேதி சனிக்கிழமையன்று மாலை சென்னப்பட்டணத்துப் புதிய கட்சிப் பிரதிநிதிகளிலே சுமார் 30 பேர் புறப்பட்டோம். தஞ்சாவூர் கே.ராமஸாமி அய்யர், தூத்துக்குடி ஸ்ரீசிதம்பரம்பிள்ளை, சென்னப் பட்டணத்திலிருந்து ஸ்ரீ சக்கரைச்

செட்டி, பி.ஏ.,பி.எல்., ஸ்ரீதுரைஸாமி அய்யர், எம்.ஏ.பி.எல்., ஸ்ரீசங்கரநாராயணய்யர், ஸ்ரீவெங்கடரமணராவ், ஸ்ரீயதிராஜ் சுரேந்திரநாத், நான் முதலியவர்களும், திருவல்லிக்கேணியிலிருந்து சில பிரபுக்களும் வெளியூர் கனவான்கள் சிலரும் எங்கள் கூட்டத்திலே சேர்ந்திருந்தனர். ஸ்டேஷனுக்கு எங்களுடைய சிநேகிதர்களும் சுதேசபக்தியின் விசேஷத்தினால் எங்களைப் பிரியத்துடன் உபசரித்தனுப்ப வந்த கனவான்களும், நானாதிசைகளிலிருந்தும் வந்து சேர்ந்திருந்தார்கள்.

இவ்வளவு விசுவாசமும் உண்மை நிலையும் வாலிபர்கள் பெற்றிருப்பது பாரத ஜாதிக்கு க்ஷேம காலம் வந்துவிட்டதென் பதற்கு ஓர் நல்லடையாளமென்று எங்களுக்குத் தோன்றியது.ட்ரெயின் புறப்பட்டது. ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் நம்மவர்கள் "வந்தேமாதர" முழக்கம் இடைவிடாது நடத்தி வந்தார்கள். எங்களுக்கு வேண்டிய ஆகார முதலிய சவுகரியங்க ளெல்லாம் வழி ஸ்டேஷன்களிலே பல தேசாபிமானிகளால் தயார் செய்து வைக்கப்பட்டிருந்தன. ஓர் இரவும் ஒரு பகலும் கழிய மறு இரவிலே சுமார் 10 மணிக்கு புனா ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தோம் **(ரா.அ.பத்மநாபன்(தொ), பக்.510,511)** என்று வருணனை செய்துள்ளார். புறப்பட்ட இடம், சேரும் இடம், உடன் பயணிப்போர், பயண தூரம், வழி, தங்குமிடம், அங்குள்ள வசதிகள் ஆகிய விபரங்களை முழுமையாகப் பதிவு செய்துள்ளார். மேற்கண்ட செய்திகளோடு தான் தங்கி இருக்கும் இடத்திற்கு பயண தூரம் எவ்வளவு? எவ்வாறு வந்து சேர்ந்தோம்? அந்த இடத்திற்கு அதற்கு முன்பு வந்து சென்றவர்கள் யார்? என்பதை எல்லாம் தேர்ந்த பயண இலக்கியப் படைப்பாளர் போல எழுதியுள்ளார். இதில், பாரதியாரின் பயண இலக்கிய வருணனை மொழிநடையும் புனைவு மொழிக் கட்டமைப்பும் இயல்பாக அமைந்துள்ளன. இதனை,

திங்கட்கிழமை காலை, பம்பாய் நகரத்தில் வந்திறங்கினோம். ரெயில்வே ஸ்டேஷனுக்கருகேயுள்ள 'ஸர்தார் கிரகம்' என்ற ஒரு வசதியிலே கொண்டு எங்களை ஸ்ரீ வி.ஓ. சிதம்பரம் பிள்ளை இறக்கி விட்டார். அவர் வியாபார சம்பந்தமாக அடிக்கடி பம்பாய்க்கு வந்து பழக்கமுடையவராதலால், எங்களுக்குக் காண்பித்த வசதி மிகவும் நல்லதாக அமைந்திருந்தது. நாங்கள் அங்கே தங்கியிருந்த ஒரு நாளில் மட்டும் அந்த இடத்திற்கு சுமார் 1000 விருந்தாளிகள் வந்திருக்கக்கூடும். அப்படியிருந்தும் அவர்களுக்கெல்லாம் தக்கபடி உபசரணைகள் செய்யப்பட்டன. நாங்கள் வந்ததற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகத்தான் ஷெ(மேற்படி என்பது பொருள்) கிருகத்திலே திலகர், லஜ்பதிராய், அஜித்ஸிங் என்ற மூவர்களும் வந்திருத்துவிட்டுப் போனதாகக் கேள்வியுற்றோம். (மேலது,ப.512)என்ற பகுதியின் மூலம் அறியலாம். (இதில் ‘வசதி’ என்ற சொல்லை ‘விடுதி’ என்ற பொருளில் பாரதியார் பயன்படுத்தி உள்ளார். ஷெ என்ற குறியீட்டுக்கு மேலே உள்ள என்பது பொருள்)

பாபநாசம்

பாபநாசத்திலே அமைந்துள்ள நதியில் நீராடிய அனுபவத்தையும் நீரிலுள்ள மீன்களையும் நதி நீரின் சுவையையும் அங்குள்ள குரங்குகளையும் பாரதியார் அழகாக வருணனை செய்துகாட்சிப் படுத்துகிறார். இதனை, ***ஸ்நானத்துக்கு பாபநாசத்து ஜலம் மிகவும் இன்பமானது. வாய்க்குத் தேன் போன்ற ருசியுடையது. இது பொதிய மலை மீது பல்லாயிரம் கிளைகளாகத் தோன்றி வரும் வழியிலே***

எண்ணற்ற ஔஷதிகளை தீண்டி வருவதால்,இந்த ஜலத்தில் ஸ்நான பானங்கள் செய்வதினின்றும் எல்லாவித நோய்களும் நீங்கிப் போய்விடுமென்று சொல்கிறார்கள்.

வேஷ்டி துவைப்பதற்கும் இந்த ஜலம் மிக நல்லது - இந்த ஜலத்தில் நனைத்துப் பாறையின்மேல் இரண்டடி அடித்தவுடனே வேஷ்டி வெள்ளை வெளேரென்று பால் போலாய்விடுகிறது. ஆஹாரத்துக்கும் இவ்விடம் மிகவும் ஸௌக்யமானது. நான்கு புறமும் ஜலமேடை நடுவே ஒரு பாறைத் திட்டின் மீது பளிங்கு போல் வழவழப்பான கல்லைக் கழுவி அதன் மேல் தோசை அல்லது அன்னத்தை வைத்துக் கொண்டு தின்றால் அது வாய்க்கு அமிர்தம் போலிருக்கிறது. (சி. சுப்ரமணியபாரதி, சுதேச மித்திரன், 02-01-1919 -18-01-1919) என்ற பகுதியின் மூலம் நன்கு அறியலாம். மேற்கண்ட வருணனை மொழி நடையில் பாப நாசத்தில் உள்ள நீரின் இயல்பையும் அதன் பயன்களையும் அதற்குரிய காரணத்தையும் பயண இலக்கிய ஆசிரியராக, நுட்பமாக விவரிக்கிறார்.

மேற்கண்ட பயண அனுபவத்திற்கு இணையான பயண அனுபவத்தை செல்லம்மாள் பாரதியும், தனது பாபநாசம் யாத்திரையில் வருணனை செய்கிறார், இதனை, ***பாபநாசம், மதுர நாமம். மதுரமான தீர்த்தம். பாபநாசத்து நதியில் நாலுபுறம் ஜலம் சூழ்ந்திருக்க நடுப் பாறைகளில் உட்கார்ந்து அன்னம் புஜித்துத் தீர்த்தத்தை வாரிக் குடித்து, அந்தப் பொன் மீன்கள் துள்ளி விளையாடக் கண்டு சந்தோஷப்படாத ஜன்மம் என்ன ஜன்மம்? நாங்கள் பாபநாசத்துக்கு வந்து சேரும்போது இராத்திரி ஏழுமணி இருக்கும் சுமையையெல்லாம் சத்திரத்தில் கொண்டு வைத்துவிட்டு தோசையை எடுத்துக் கொண்டு ஆற்றங்கரையில் புஜிக்கப் போனோம். இருட்டுக் குகையாக இருந்தது. கையில் லாந்தல் கொளுத்திக் கொண்டு போனோம். ஜலத்துக்கு நடுவில் ஒரு பாறைமேல் தோசையை வைத்துக் கொண்டு தின்றோம். பாறையை ஜலத்தாலே அலம்பி, அதில் வைத்துக்கொண்டு ஜலத்தில் முழுக்கி முழுக்கி தோசையை விழுங்கினால் மிகவும் ருசியா, இருக்கும். முதலாவது நானும் கிட்டண்ணாவும் அப்பாவும் தின்றோம். பிறகு அம்மா போஜனம் தொடங்கினாள்.*** **(ரா.அ.பத்மநாபன்(தொ),ப.176)** என்ற பகுதியின் மூலம் அறியலாம். பாபநாசத்திற்கு பாரதியார் தனியாகவும் செல்லம்மாள் பாரதி தனது குடும்பத்தினருடனும் சென்றுள்ளனர். இருவரும் ஒன்றாகச் செல்லவில்லை என பயணக் குறிப்புகளில் இருந்து அறிய முடிகிறது. ஆற்றங்கரைகளில் உள்ள கற்களின் மீது அமர்ந்து கொண்டு அதனை நீரால் கழுவி அதன் மீதே உணவை வைத்து உண்பதை பாரதியார், செல்லம்மா பாரதி இருவரும்விவரித்துள்ளனர். மேற்கண்ட பத்தியில் செல்லம்மா பாரதியின் மொழிநடை, பேச்சுவழக்கும், பிறமொழிக் கலப்புடனும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. பாரதியாரின் மொழிநடையில் குறைந்த அளவிலேயே பிறமொழிக் கலப்பு உள்ளது. இருவரும் பாபநாசத்து நீரின் சிறப்பை தமது பயண இலக்கியத்தில் பதிவு செய்துள்ளனர். பாரதியார் மட்டும்அங்குள்ள குரங்குகளுக்கு உணவளித்த அனுபவத்தையும் சேர்த்து பதிவு செய்துள்ளார். இதனை,

பாபநாசத்து மீன்களைப் போலவே அவ்விடத்துக் குரங்குகளும் கீர்த்தியுடையன. எத்தனையோ நூற்றாண்டுகளாக அவை யாத்திரைக்கு வரும் மனிதர்களுடன் மிகவும் நெருக்கமாகப் பழகி வருவதால், தாமும் இயன்றவரை மனித நாகரிகத்துடன் ஒத்த நடைகள் பெற்றிருக்கின்றன. மனிதர் கையினின்றும்

தின்பண்டங்களை மிகவும் பயபக்தியுடனும் விநயத்துடனும் வாங்கித் தின்னுகின்றன. இதினின்றும் அக்குரங்குகள் ஸமயம் வாய்த்த போது களவு, கொள்ளைகள் நடத்துவது கிடையாதென்று நினைக்கக் கூடாது. அந்தச் செயல்கள் முறைப்படியே நடைபெற்று வருகின்றன.

சில குழந்தைகளின் கையில் தின்பண்டமிருப்பதைக் கண்டால் குரங்குகள் அதி ஸுலபமாகத் தட்டிக் கொண்டு போய்விடும். பெரியோர் வைத்திருக்கும் பண்டங்களையும் அவர்கள் சற்றே கவனக் குறைவாக இருக்கக் கண்டால் அக்குரங்கள் பறித்துக் கொண்டு போகும். துணி, மணி, செருப்பு கையில் அகப்படக் கூடியதையெல்லாம் ஆட்காவல் இல்லாவிட்டால் திருடிக் கொண்டு போய்விடும். (சி. சுப்ரமணியபாரதி, சுதேச மித்திரன், 02-01-1919 -18-01-1919) என்ற பகுதியின் மூலம் அறியலாம்.

என் ஈரோட்டு யாத்திரை

'என்ஈரோட்டு யாத்திரை' பாரதியாரின் பயண நூல்களில்காலத்தால் பிந்தைய படைப்பு ஆகும்.ஈரோடு மாவட்டத்தில் உள்ள கருங்கல்பாளையம் என்ற ஊருக்குச்சென்று வந்ததையே 'என் ஈரோட்டு யாத்திரை' என்ற பெயரில் பயணக் கட்டுரையாக வெளியிட்டுள்ளார். இங்கு நடைபெற்ற சொற்பொழிவில் 'மனிதனுக்கு மரணம் இல்லை' என்ற தலைப்பில் உரையாற்றியுள்ளார். இது, பொதுவெளியில் அவர் கடந்து கொண்ட இறுதி நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது.பாரதியார் ஈரோடு வந்து சென்ற தனது பயண அனுபவங்களை நுண்ணிய செய்திகளுடன் பதிவு செய்துள்ளார். இதில் பயண இடங்களுக்கிடையிலான தூரம், செல்லும் வழி, வழியில் காணும் இடங்கள், ஊரில் வசிக்கும் மக்கள், மக்களின் இயல்பு ஆகியவற்றைச்சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். இதனை,

ஈரோட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன் . அது கொங்கு நாடு, ஆனால் அதற்கும் தென் பாண்டி நாட்டுக்கும் யாதொரு வேற்றுமையும் தென்படவில்லை. கட்டை வண்டி ஒன்று கிடைத்தது. கட்டை வண்டியில் ஒரு மனிதன் நிமிர்ந்து உட்கார இடமில்லை. ஒன்றரை அடி நீளம். மாடு ஒரு சிறு பூனைக் குட்டி போன்று இருந்தது. நான் ஒன்று. வண்டிக்குடையவன் இரண்டு. அவனுக்குக் கீழே கூலிக்கு வண்டி ஓட்டும் சிறுவன் ஒருவன். எங்கள் மூவரையும் மூன்று பர்வதங்களாக நினைத்து அந்த மாட்டுப் பூனை இழுத்துக் கொண்டு போயிற்று. அரை மைல் தூரத்தில் உள்ள கருங்கல் பாளையத்தில் எனக்கு வேலை. அங்கு ஒரு சிநேகிதருடைய அழைப்பிற்கிணங்கிச் சென்றிருந்தேன். கருங்கல்பாளையத்துக்கு போய் சேரும் முன்னே மாடு வேர்த்துப்போய் விட்டது. அதன் மேலே குற்றம் சொல்வதில் பயனில்லை அது ஒரு சிறு ஐந்து அதன் மேலே நாங்கள் மூன்று தடி மனிதரும் ஒரு கழுத்தளவுக்கு செய்யப்பட்ட விதானத்தை உடைய வண்டியும் சவாரி பண்ணுகிறோம். (சி. சுப்ரமணியபாரதி, சுதேச மித்திரன், 04-8-1921) என்ற கட்டுரை வரிகளின் மூலம் நன்கு அறியலாம். மேற்கண்ட பகுதிகள் மூலம், மாட்டுவண்டி, மாட்டின் உருவம், அதை விளக்கும் முறையிலான வருணனை மொழிநடை, பயணஇலக்கியப் புனைவு மொழி என பன்முகப் பரிமாணங்களில் பாரதியார் முத்திரை பதிக்கிறார். இக்கட்டுரையின் தொடர்ச்சியாக, பாரதியார் பல்வேறு சுவையான செய்திகளைப் பட்டியலிட்டுச் செல்கிறார்.

வருணனை மொழிநடையும் புனைவுமொழியும்

படைப்பாளர் ஒரு பொருளையோ மனிதரையோ இடத்தையோ வருணிக்கும் நிலையில் அவ்வகை உரைநடையை, வருணனை உரைநடைஎனலாம்.புனைகதைகளிலும், பயணநூல்களிலும், கட்டுரைகளிலும் விளக்க உரைநடையிலும் வருணனை இன்றியமையாத இடம்பெறுகிறது. ஒவ்வொரு படைப்பாளருக்கும் தனித்த மொழிநடை உண்டு. அது பெரும்பாலும் அவருடைய புனைவு மொழியின் நீட்சியாக அமையும். காலந்தோறும் மாற்றம் பெற்றுள்ள பயணஇலக்கியப் புனைவுமொழியை, நடைக் கட்டமைப்பை மாற்றி அமைத்ததில் பாரதியாருக்குப் பெரும் பங்குள்ளது. இதற்கு அவருடைய ஆங்கில நூலறிவும் ஆங்கிலப் புலமையும்காரணமாக அமைந்துள்ளன.

பாரதியாரின் பயண இலக்கிய மொழிநடை, கூற விழையும் செய்தியைக் கேட்பவரின் மனதில் எளிமையாகப் பதிய வைக்கும் இயல்புடையது; எளிய மக்களின் மொழி வழக்கோடு ஓசை நயமும் இணைந்த உரைநடை ஆகும். அது மட்டுமின்றி, அன்றாட மக்களின் புழங்குமொழி வழக்கு, பிற மொழிக் கலப்புடன் கூடிய உரையாடல் முறை, தேவையான இடங்களில் மட்டும் நீண்ட வருணனை எனப் பன்முகப் பரிமாணம் கொண்டது. பாரதியாரின் புனைவு மொழியில் குறிப்பிடத் தக்க மற்றொரு பாங்கு அவருடைய அங்கதநடை ஆகும். மேற்கண்டபயணப் பதிவுகளிலும்

'அவ்விடத்துக் குரங்குகளும் கீர்த்தியுடையன', 'தாமும் இயன்றவரை மனித நாகரிகத்துடன் ஒத்த நடைகள் பெற்றிருக்கின்றன', 'அக்குரங்குகள் ஸமயம் வாய்த்த போது களவு, கொள்ளைகள் நடத்துவது கிடையாதென்று நினைக்கக் கூடாது. அந்தச் செயல்கள் முறைப்படியே நடைபெற்று வருகின்றன', 'மாடு ஒரு சிறு பூனைக் குட்டி போன்று இருந்தது, எங்கள் மூவரையும் மூன்று பர்வதங்களாக நினைத்து அந்த மாட்டுப்பூனை இழுத்துக் கொண்டு போயிற்று' என்ற தொடர்களை அங்கதச்சுவை தொனிக்க பாரதியார் பயன்படுத்தியுள்ளார்.

தொகுப்புரை

பாரதியார் தமது பயணஇலக்கியங்களில், செல்லும் வழி, அங்குள்ள இயற்கைச் சூழல்பற்றிய வருணனை, காலஅளவு, செல்லும் தூரம்,சத்திர வசதி, உணவுமுறை, மக்களின் பழக்க வழக்கப் பதிவுகள் போன்றவற்றைக் குறிப்பிடுகிறார். தனது சமகாலப் பயணஇலக்கியப் படைப்பாளர்களை விடச் சிறந்த வருணனை மொழிநடையைத் தனது பயண இலக்கியங்களில் பதிவு செய்துள்ளார். இவருடைய பயண இலக்கியங்களில் தனித்துத் தெரியும் வருணனை நடையும் புழங்குமொழியும் அது சார்ந்து உருவான புனைவு மொழிக் கட்டமைப்பும் பாரதியாரை பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதாக அமைந்துள்ளது. இது, பாரதியார் பயண இலக்கிய முன்னோடியாக,தனித்துக் காட்சியளிக்க காரணமாக அமைந்துள்ளது. தமிழின் நவீனப் பயணஇலக்கிய வருணனை மொழி நடையை, புனைவு மொழிக் கட்டமைப்பை உருவாக்கியதிலும் மேம்படுத்தியதிலும் பாரதியாருக்கு தனித்தஇடம் உண்டு.

துணை நூற்பட்டியல்

[1]இளவரசன், சா.அயலக பயண அனுபவம், வெற்றி பதிப்பகம், ஈரோடு 2008.

[2]செட்டியார், ஏ.கே. (தொ) தமிழ்நாடு - நூறாண்டுகளுக்கு முந்தைய பயணக் கட்டுரைகள், சந்தியா பதிப்பகம் , சென்னை, 2017.

[3] ஞானபுஷ்பம்,இரா. தமிழில் பயணஇலக்கியம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1990.

[4]பட்டச்சார்ஜி, ஷோபனா.ட்ராவல் ரைட்டிங் இன் இந்தியா, சாகித்ய அகதமி, ரபிந்திர பவன், புது தில்லி. 2006.

[5] பத்மநாபன்,ரா. அ. பாரதி புதையல் பெருந்திரட்டு, வானதி பதிப்பகம், சென்னை, 1982.

[6]பாரதியார்,பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2022.

[7]பாரதி பிரகாஷ், ச. "தமிழில் பயணஇலக்கியம் -பயணங்கள், பாதைகள், பதிவுகள்", *நவீனத் தமிழாய்வு,* ISSN: 2321- 984 X, மார்ச் 2014.

[8]பாரதி பிரகாஷ், ச. இந்திய மொழிகளில் பயணஇலக்கியம்- பயணங்கள், பாதைகள், பதிவுகள், *நவீனத் தமிழாய்வு*,ISSN: 2321- 984 X, செப்டம்பர் 2015

[9] மோகனா, இரா. பயணஇலக்கியம் ,மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்,2006.

[10] ராமகிருஷ்ணன், எஸ். தேசாந்திரி, தேசாந்திரி பதிப்பகம், சென்னை, 2022.

References

[1] Ilavarasan, s., Ayalaga Payana anubavam,Vetri Pathippagam, Erode,2008

[2]Chettiyar, A.K.(C) Tamilnadu – Noorandukalukku Munthaiya Payanak katturaikal. Sandya Pathippagam, Chennai, 2017.

[3] Gnanapushpam, R. Tamilil payana ilakkiyam, Ainthinai Pathippagam,Chennai, 1990.

[4] Battcharji, Shobana. Travel writing in India , SakityaAkademy, Rabindrabhavan, Newdelhi.

[5] Pathmanaaban , R. A(Editor) , Bharathi puthaiyal perunthirattu, vaanathi pathippagam,Chennai,1982.

[6] Bharathiyaar,Bharathiyaar katturaikal, Poompukar Pathippagam, Chennai, 2022.

[7] Bharathi Prakash, S., Tamilil Payana ilakkiyam – Payanangkal , Paathaikal, Pathivukal., Naveenath Tamilaaivu, ISSN: 2321- 984 X, March 2014.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

கூடியாட்டம் - கேரளாவின் பண்டைய நாடகக் கலை வடிவம்

Koodiyattam: An Ancient Performing Art of Kerala

முனைவர் காமராஜ் எஸ்.,
இளநிலை வள அலுவலர், எல்.டி.சி.ஐ.எல்., இந்திய மொழிகளின் மத்திய நிறுவனம், மைசூரு.
மின்னஞ்சல்: kamarajmunnar@gmail.com
Dr.Kamaraj S,
Junior Resource Person, LDCIL, Central Institute of Indian Languages, Mysore
Email: kamarajmunnar@gmail.com

Abstract:

For over 2,000 years, Koodiyattam has survived as the oldest living form of Sanskrit drama, evolving into a pan-Indian dramatic tradition. While local interest has waned, international recognition and funding have revived its practice. With continued support from the Kerala government, Sangeet Natak Akademi, UNESCO, and Japan's Funds-in-Trust, Koodiyattam is regaining prominence. If challenges of accessibility and popularization are addressed, its future will remain bright as a flourishing component of India's intangible cultural heritage. Koodiyattam, having survived for over two millennia on its aesthetic merit, remains the longest-sustained form of Sanskrit theatre. It has now transformed into a pan-Indian dramatic tradition. International interest now outweighs local interest, with funding provided by the Kerala Ministry of Culture, SNA, UNESCO, and Japan's Funds-in-Trust. If current hurdles are cleared, Koodiyattam's future appears bright, and it will continue to flourish as India's intangible cultural heritage.

Keywords: Koodiyattam, cultural heritage, Kerala, Koothu, Challenges.

ஆய்வுச் சுருக்கம்:

அறிமுகம்

கூடியாட்டம் என்பது கேரளாவின் பழமையான நாடகக் கலை வடிவமாகும். இது நடனம் மற்றும் நடிப்பை அடிப்படையாகக் கொண்டது. இது ஏழாம் நூற்றாண்டளவில் உருவானதாகக் கருதப்படுகிறது. கேரளாவில் பாரம்பரியமாக நிகழ்த்தப்படும் கூடியாட்டம், சுமார் 2,000 ஆண்டுகள் பழமையான சமஸ்கிருத நாடக வடிவமாகும். மலையாளத்தில் "சேர்ந்து நடித்தல்" என்று பொருள்படும் இது, யுனெஸ்கோவால் "வாய்மொழி மற்றும் அருவமான மனிதப் பாரம்பரியத்தின் தலைசிறந்த படைப்பு" என்று அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது பண்டைய சமஸ்கிருத நாடகத்தின் இன்று எஞ்சியிருக்கும் ஒரே வடிவம். இந்தியாவின் தெற்கு மாநிலமான கேரளாவைப் பூர்வீகமாகக் கொண்ட கூடியாட்டம் உலகின் மிகப் பழமையான வாழும் நாடக மரபுகளில் ஒன்றாகும். யுனெஸ்கோவால் "வாய்மொழி மற்றும் அருவமான மனிதப் பாரம்பரியத்தின் தலைசிறந்த படைப்பு" என்று அங்கீகரிக்கப்பட்ட இந்தக் கலை, நடனம், நாடகம் மற்றும் இசையின் மயக்கும் கலவையாகும். இது ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகப் பாதுகாக்கப்பட்டு, தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு வருகிறது. மற்ற நாடுகளைப் போலவே இந்தியாவிலும், உலகமயமாக்கல் மற்றும் நெறிமுறையற்ற நுகர்வுக் கலாச்சாரம் ஆகியவற்றின் தாக்கத்தால் பல விலைமதிப்பற்ற கலாச்சாரப் பாரம்பரியங்கள்

அழிந்து வருகின்றன. கேரளாவின் செவ்வியல் கலையான கூடியாட்டம் இந்தியாவில் அழிந்து வரும் மற்றும் அற்றுப்போகும் நிலையில் உள்ள அருவமானப் பாரம்பரியக் (Intangible Heritage) கலை வடிவங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. கூடியாட்டம் என்பது இந்தியாவின் கலை மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தின் நீடித்திருக்கின்ற மரபுக்கு ஒரு சான்றாக உள்ளது. அதன் துடிப்பான நடிப்புகள், நுணுக்கமான அசைவுகள் மற்றும் காலத்தால் அழியாத கதைகள் மூலம் பார்வையாளர்களைக் கவர்ந்து, இந்தக் கலை மரபு, கடந்த காலத்தை நிகழ்காலத்துடன் இணைத்து, எதிர்காலத் தலைமுறையினருக்கான பாரம்பரியத்தை உறுதி செய்கிறது. இந்திய மாநிலமான கேரளாவிலிருந்து வந்த ஒரு பாரம்பரிய நிகழ்த்துக் கலையான கூடியாட்டம், ஏறக்குறைய 2000 ஆண்டுகள் பழமையானது.

குறிப்புச் சொற்கள்: கூடியாட்டம், கலாச்சாரப் பாரம்பரியம், கேரளா

நோக்கங்கள்

கூடியாட்டம் என்ற நிகழ்த்துக் கலையையும், கேரளத்தின் கலாச்சாரப் பாரம்பரியத்தையும் பற்றிய ஒரு மேலோட்டப் பார்வையை வழங்குதல். சமூஹத்தில் அதன் தற்போதைய நிலையை ஆய்வு செய்தல். இரண்டாம் நிலைத் தகவல்களின் அடிப்படையில் இந்தக் கலையின் எதிர்கால வாய்ப்புகளை ஆராய்வதுடன், அதன் நிலைத்தன்மைக்கான சாத்தியக்கூறுகளைப் பற்றிச் சிந்திப்பது. இந்த ஆய்வின் முடிவில், கூடியாட்டத்தை புத்துயிர் அளிப்பதற்கும் மற்றும் ஜனங்ஙளிடயில் பிரபலப்படுத்துவதற்கும் (popularization) தேவையான கொள்கைகள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய ஒரு தொகுப்பை ஆசிரியர் முன்மொழிவார்.

இந்திய நடனம் மற்றும் நாடக மரபு

கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரம் இந்தக் கலை வடிவங்களுக்கு ஒரு நம்பகமான மூலநூல் ஆகும். பாசகன், காளிதாசன், சூத்ரகர், ஸ்ரீஹர்ஷன் போன்ற அறிஞர்களின் பங்களிப்புகளால், கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை இந்தியாவில் சமஸ்கிருத நாடகத்தின் 'பொற்காலமாக' கருதப்பட்டது. அதன் பிறகு, பிராந்திய மொழிகளின் வளர்ச்சியால், சமஸ்கிருத நாடகக் கலையின் போக்கு குறையத் தொடங்கியது.

கேரளத்தின் மரபு

பிற பகுதிகளில் ஏற்பட்ட நாடக வளர்ச்சிகள் கேரளத்தின் கலை வடிவங்களைப் பாதிக்கவில்லை. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சமஸ்கிருத நாடகமான 'மத்தவிலாசம்' (பேச்சு வழக்கில் 'கூத்து' என்று கருதப்படுகிறது) தென்னிந்தியாவில் இத்தகைய நாடகங்களில் முதன்மையானதாகக் கருதப்படுகிறது. கேரளத்தில் இயற்றப்பட்ட முதல் நாடகங்கள்: 'ஆச்சார்யசூடாமணி', நீலகண்டகவியின் 'கல்யாணசௌகந்திகா'. 11ஆம் நூற்றாண்டில், குலசேகரவர்ம பெருமாள் 'சுபத்ராதனஞ்சயம்' மற்றும் 'தபதீசம்வரணம்' ஆகிய இரண்டு நாடகங்களை இயற்றினார். இவர் நாடகத்தின் நுணுக்கங்களை உணர்ந்து, நடிப்புக்கான விளக்க நூலையும் ('வ்யங்கிய வ்யாக்யா') உருவாக்கினார். இதே காலத்தில்,

தோலன் என்ற கவிஞர், நாடக உரையாடல்களில் புத்திசாலித்தனமான மற்றும் கிண்டலான கருத்துகளைச் சேர்த்து மாற்றியமைத்தார்.

சாக்கியார் கூத்து மற்றும் கூடியாட்டம்

சாக்கியர்கள் என்ற சமூகத்தினர் 'கூத்து' நிகழ்த்தினர். இவர்கள் ஆண்களாகவும், இவர்களின் பெண்கள் 'நாங்கியார்' என்றும் அழைக்கப்பட்டனர். 'சிலப்பதிகாரம்' என்ற தமிழ்க் காவியத்தில் கூட 'கூத்தச்சக்கையன்' (பரவூர் சாக்கியார்) ஆடிய சிவ-பார்வதி நடனம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கூத்து கலை வடிவம் 'ஆச்சார்யசூடாமணி' போன்ற நாடகங்களால் நிலைபெற்றது. சாக்கியார் கூத்து என்பது இரண்டு பிரிவுகளைக் கொண்டது: நாடக நடிப்பு மற்றும் கதை சொல்லல். கூடியாட்டம் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட கதாபாத்திரங்கள் மேடையில் தோன்றும் நாடகங்களை குறிக்கிறது. சாக்கியார் கூத்து என்பது ஒரே ஒரு கதாபாத்திரத்தை கொண்டதாகவும், நகைச்சுவை மற்றும் கேலி கிண்டல்களுடன் கதையை விவரிப்பதாகவும் இருக்கும். கதைசொல்லியின் கூற்றுகளில், சமகாலத்திய நிகழ்வுகளைச் சேர்த்து, பார்வையாளர்களை ஈர்ப்பார். கூடியாட்டம் யுனெஸ்கோவால் பாரம்பரிய கலை வடிவமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கூடியாட்டத்தின் அமைப்பு

கதாபாத்திரங்கள்: பொதுவாக ஆண் மற்றும் பெண் கதாபாத்திரங்கள் மேடையில் தோன்றுவார்கள். பெண் பாத்திரங்களை நாங்கியார்கள் (பெண்கள்) ஏற்று நடிப்பார்கள். (ஆனால், கொடூரமான/தீய பெண் பாத்திரங்களை ஆண் நடிகர்கள் ஏற்றுக்கொள்வதுண்டு). இசை: நாங்கியார்கள் பாடுவதுடன், சிறிய கைத்தாளங்களையும் இசைப்பார்கள். 'மிழாவு' (பெரிய செப்புக் குடம் போன்ற கருவி), இடக்கை (சிறிய தோல் கருவி), சங்கு, குழல் (புல்லாங்குழல்) ஆகியவை பயன்படுத்தப்படும் கருவிகள். மிழாவு தான் முக்கிய இசைக்கருவி; இதை நம்பியார் சமூகத்தினர் கைகளால் வாசிப்பார்கள். அலங்காரம் மற்றும் உடை: கதகளியைப் போலவே, முக ஒப்பனை, உடைகள், ஆபரணங்கள் மற்றும் தலை அலங்காரம் ஆகியவை பாத்திரங்களுக்கு ஏற்ப மாறுபடும். நடிப்பு: நடிகர்கள் நாக்கு (பேசுதல்/பாடுதல்), கண், புருவம், முகம், கை, விரல்கள், கால்கள் மற்றும் முழு உடலையும் நடிப்பில் பயன்படுத்துவார்கள். விதுஷகன்: கோமாளி (விதுஷகன்) அடிக்கடி நாடகத்தின் நடுவில் தோன்றி, கதையின் முன்னேற்றத்தை சுவாரஸ்யமாக்குகிறார். இவர் தன் நகைச்சுவைப் பேச்சுகள் மூலம் பார்வையாளர்களை ஈர்ப்பார்.

கூத்தம்பலம்

கூடியாட்டம் பொதுவாக 'கூத்தம்பலம்' என்று அழைக்கப்படும் பிரத்தியேகமான நாடக அரங்குகளில் நிகழ்த்தப்படுகிறது. பல பெரிய கோவில்களில் இவை இருந்தன, இன்றும் திருச்சூர் வடக்கும்நாதன் கோவில் போன்ற சில கோவில்களில் உள்ளன. இதன் கட்டிடக்கலை, பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி, செவ்வகம், சதுரம் மற்றும் முக்கோணம் என மூன்று வடிவங்களில் கட்டப்படலாம். மேடையின் முன் உள்ள பகுதி பார்வையாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. கூடியாட்டத்தில் பிரபலமான சமஸ்கிருத நாடகங்களில் ஒன்று 'பகவதஜ்ஜுகம்'

(துறவியும் விலைமகளும்). இது 7 ஆம் நூற்றாண்டில் போதாயனரால் எழுதப்பட்ட நகைச்சுவை மற்றும் கேலிக் கதையாகும். இது 'பரகாயப் பிரவேசம்' (ஓர் ஆத்மா மற்றொரு உடலுக்குள் நுழைதல்) மற்றும் அதன் விளைவுகளைப் பற்றியது. துறவி ஒருவர் ஒரு விலைமகளின் உடலுக்குள் நுழைந்து விடுகிறார், அதே நேரத்தில் விலைமகளின் ஆத்மா துறவியின் உடலுக்குள் நுழைகிறது. இதனால் ஏற்படும் குழப்பங்கள் நகைச்சுவையாக மேடையில் காட்டப்படுகின்றன. இறுதியில், யமதூதனால் ஆத்மாக்கள் மீண்டும் அவரவர் உடலுக்குள் அனுப்பப்பட்டு சிக்கல் தீர்க்கப்படுகிறது.

அழகியல் மற்றும் உடல் (Aesthetics and the Body):

கூடியாட்டத்தின் அழகியல் கொள்கைகள், பண்டைய சமஸ்கிருத கவிதைகளின் இரசா கோட்பாடுகளில் ஆழமாக வேரூன்றியுள்ளன. இதில், பாவனைகளை (முத்திரைகள்/கைகளால் அசைவுகள்), அங்க அசைவுகள் (அங்கிகாபினயம்/விரிவான சைகைகள்) மற்றும் முகபாவனைகள் (நேத்ராபினயம்/கண் வெளிப்பாடுகள்) ஆகியவை மிகுந்த பாங்குடன் பயன்படுத்தப்படுகின்றன. கலைஞரின் உடல், கடுமையான பயிற்சி மூலம் கதைசொல்லலுக்கு ஏற்றவாறு 'பட்டை தீட்டப்பட்டு, முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது.'புகழ்பெற்ற கூடியாட்டக் கலைஞர் அம்மான்னூர் மாதவ சாக்கியர், 'பலிவதம் கூடியாட்டம்' நாடகத்தில், ஒரு கதாபாத்திரத்தின் மரணக் காட்சியைப் பல்வேறு வகையான சுவாசங்களைக் (ஸ்வாசங்கள்) கையாண்டு, பதினைந்து நிமிடங்கள் வரை நிகழ்த்தியது, இதன் உச்சபட்ச கலை மற்றும் அழகியல் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

சடங்கு மற்றும் பாரம்பரிய சூழல் (Ritual and Traditional Context)

கூடியாட்டத்தின் தோற்றம் 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இது ஒரு காலத்தில் அரசவைகளில் மதச்சார்பற்ற கலையாக நிகழ்த்தப்பட்டு, பின்னர் 14 ஆம் நூற்றாண்டில் கோவிலைச் சார்ந்த கலை வடிவமாக மாறியது. பாரம்பரியமாக, இது கேரளாவின் கோவில்களில் உள்ள கூத்தம்பலம் எனப்படும் புனிதமான நாடக அரங்குகளில், கடவுளுக்கு ஒரு காணிக்கையாக (சாக்ஷுஷயஜ்ஞா - காட்சிப் பலி) நிகழ்த்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு முந்தைய சடங்குகள் (பூர்வரங்கா) மற்றும் கருவறைக் கதவுகளைத் திறந்து வைத்திருப்பது போன்ற சடங்குகள், இந்தக் கலையை சடங்கு சார்ந்த நிகழ்வாக (Ritualistic Event) அடையாளப்படுத்துகின்றன. இருப்பினும், சடங்குகளுக்கு அதீத முக்கியத்துவம் அளிப்பது, இதன் தனித்துவமான நடிப்பு அம்சங்களை மறைத்துவிடும் என்று சில விமர்சகர்கள் (நாராயண் முண்டோலி போன்றோர்) வாதிடுகின்றனர்.

சாதி மற்றும் சமூக மாற்றம் (Caste and Social Change):

பாரம்பரியமாக, கூடியாட்டம் என்பது அம்பலவாசி எனப்படும் குறிப்பிட்ட கோவில் சார்ந்த சாதிகளின் - சாக்கியர்கள் (நடிகர்கள்), நம்பியார் (மிழாவு வாசிப்பவர்கள்) மற்றும் நாங்கியார்கள் (பெண் நடிகர்கள்/பாடகர்கள்) - குலத்தொழில் (பரம்பரை கடமை) ஆக இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை, சாக்கியர்கள் இந்தக் கலையின் 'உரிமையாளர்கள்' என்று கருதினர், இதனால் இதன் சமூக அடையாளம் சாதியுடன் ஆழமாகப் பிணைந்திருந்தது. நவீனத்துவம் மற்றும் ஜனநாயகமயமாக்கல்

சவால்கள் (Challenges of Modernity and Democratization): குறைந்து வந்த அரச ஆதரவு மற்றும் சாதி சமத்துவத்திற்கான சமூக இயக்கங்கள் ஆகியவை கூடியாட்டத்தின் உலகத்தை மாற்றின. பைங்குளம் இராம சாக்கியர் போன்றவர்கள் 1949 இல் இந்தக் கலையை கோவிலுக்கு வெளியே கொண்டு சென்று, அதன் கோவில்-அடிப்படையிலான மரபு (Temple-based tradition) என்ற பிணைப்பிலிருந்து விடுவித்தனர். 1965 இல் கேரள கலாமண்டலத்தில் கூடியாட்டத்திற்கான துறை தொடங்கப்பட்டபோது, சாக்கியர் அல்லாத மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. இன்று, சாதி அடையாளம் (குடும்பப் பெயர்) குறைந்து, நிறுவனங்களுடன் (உதாரணமாக: மார்கி பிரியா, கலாமண்டலம் இராஜீவ்) இணைந்த தொழில்முறை அடையாளம் (Professionalized Identity) முக்கியத்துவம் பெற்றுள்ளது. புதிய ஆதரவு மற்றும் சர்வதேச அங்கீகாரம் (New Patronage and International Recognition): சமகாலத்தில், கோவில்-அடிப்படையிலான நிலப்பிரபுத்துவ ஆதரவு அமைப்புக்கள் சரிந்த பிறகு, மாநில ஆதரவு (State Patronage) மற்றும் சங்கீத நாடக அகாடமி போன்ற தேசிய அமைப்புகளின் ஆதரவு கிடைத்தது. 2001 ஆம் ஆண்டில், கூடியாட்டம் யுனெஸ்கோவின் 'வாய்மொழி மற்றும் அருவமான மனிதப் பாரம்பரியத்தின் தலைசிறந்த படைப்பு' (UNESCO Masterpiece of the Oral and Intangible Heritage of Humanity) என்று அங்கீகரிக்கப்பட்டது. இந்த அங்கீகாரம் கூடியாட்டத்தை ஒரு தேசிய மற்றும் பன்னாட்டுத் தளத்திற்குக் கொண்டு சென்றது, அதன் மூலம் இது 'தொலைந்த காலத்தின் நினைவுச்சின்னம்' அல்ல, மாறாக நவீனத்துவத்தின் சவால்களுக்கு ஏற்றவாறு தொடர்ந்து உருவாகிவரும் வாழும், ஆற்றல் மிக்க கலாச்சார பாரம்பரியம் (Living, Dynamic Cultural Tradition) என்று நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

கூடியாட்டம்: தொன்மை மற்றும் வரலாறு

கூடியாட்டம் என்பது மலையாள மொழியில் "சேர்ந்து நடித்தல்" என்று பொருள்படும். இது பண்டைய சமஸ்கிருத நாடகத்தின் நடிப்பை, கேரளாவின் பாரம்பரிய கூத்து கலையின் கூறுகளுடன் இணைத்து உருவான கலை வடிவமாகும். தனித்துவமான அம்சம்: பண்டைய சமஸ்கிருத நாடகத்தின் நாடகக் கூறுகளைப் பயன்படுத்தும் இன்று எஞ்சியுள்ள ஒரே கலை வடிவம் கூடியாட்டம் மட்டுமே. கேரளாவில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான ஆவணப்படுத்தப்பட்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. கூடியாட்டமும், சாக்கியார் கூத்தும் பண்டைய கூத்து என்ற கலை வடிவத்திலிருந்து தோன்றியவை. இவை இரண்டும் பண்டைய இந்தியாவில், குறிப்பாக கேரளாவில், நாடகமயமாக்கப்பட்ட நடன வழிபாட்டுச் சேவைகளாகக் கோவில்களில் நிகழ்த்தப்பட்டன. கூத்து பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்திலும் பிற்காலத்திய பல்லவர், பாண்டியர், சேரர், சோழர் காலக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. தஞ்சாவூர், திருவிடைமருதூர், வேதாரண்யம், திருவாரூர் மற்றும் ஓமம்புலியூர் ஆகிய கோவில்களில் கூத்து தொடர்பான கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இந்தக் கலைகள் தேவார, பிரபந்தப் பாடல்கள் பாடுவதுடன் வழிபாட்டுச் சேவைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகக் கருதப்பட்டன.

நிகழ்த்தப்படும் நாடகங்கள்

குலசேகர வர்மாவின் 'சுபத்ராதனஞ்சயம்' மற்றும் 'தபதீசம்வரணம்' ஆகிய நாடகங்களைத் தவிர, கூடியாட்டத்தில் பாரம்பரியமாக நிகழ்த்தப்படும் பிற முக்கியமான நாடகங்கள்: சக்திபத்ரரின்

(Śaktibhadra) 'ஆச்சார்யசூடாமணி' (Ascaryacudamani) நீலகண்டரின் 'கல்யாணசௌகந்திகா' (Kalyanasaugandhika) போதாயனரின் 'பகவதஜ்ஜுகம்' (Bhagavadajjuka) ஹர்ஷரின் 'நாகாநந்தா' (Nagananda) பாசகரால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் பல நாடகங்கள், அவற்றில் 'அபிஷேகம்' (Abhiseka) மற்றும் 'பிரதிமா' (Pratima) ஆகியவை அடங்கும்.

வரலாற்றுத் தொன்மையும் பரவலும்

கூத்து மரபிலிருந்து தோற்றம்: கூடியாட்டமும் சாக்கியார் கூத்தும் பண்டைய கூத்து என்ற நடன வழிபாட்டுச் சேவைகளிலிருந்து தோன்றியவை. ஆரியம் (Aariyam): இவை அனைத்தும் பண்டைய தமிழ்நாடும் கேரளமும் அடங்கிய தமிழகத்தில் கோவில்களில் நிகழ்த்தப்பட்டன. சமஸ்கிருத நாடகங்களை அடிப்படையாகக் கொண்ட இந்த நாடகமயமாக்கப்பட்ட நடன வழிபாட்டுச் சேவைகள் 'ஆரியம்' என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. சங்க இலக்கியம் மற்றும் கல்வெட்டுகள்: கூத்து பற்றிய குறிப்புகள் பண்டைய சங்க இலக்கியத்திலும், பிற்காலத்திய பல்லவர், சேரர், சோழர் காலக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. கோவில் சான்றுகள்: தஞ்சாவூர், திருவிடைமருதூர், வேதாரண்யம், திருவாரூர் மற்றும் ஓமம்புலியூர் ஆகிய கோவில்களில் கூடியாட்டம் மற்றும் சாக்கியார் கூத்து தொடர்பான கல்வெட்டுகள் உள்ளன. இவை தேவாரம் மற்றும் பிரபந்தப் பாடல்கள் பாடுவதுடன் வழிபாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாகக் கருதப்பட்டன. பிற நாடுகளில் சான்று: பல்லவர் மற்றும் சோழர் காலத்தில், பர்மாவில் (மியான்மர்) உள்ள ஒரு பண்டைய சிவன் கோவிலின் வாசலில் கிடைத்த ஒரு உடைந்த கல்வெட்டில் கூட இந்தச் சேவைகளைப் பற்றிய குறிப்பு உள்ளது. நாடக ஆசிரியர்கள்: பல மன்னர்கள் மற்றும் பிற தொழில்களைச் சேர்ந்தவர்கள் இந்தக் கோவிலின் கலைச் சேவைகளுக்காகப் பல நாடகங்களை இயற்றியுள்ளனர். பல்லவ மன்னன் இராஜசிம்மன் தமிழில் 'கைலாசோத்தாரணம்' என்ற நாடகத்தை இயற்றினார்.

கூடியாட்டத்தில் சீர்திருத்தம்

குலசேகர வர்மா சேரமான் பெருமாள்: தமிழ்ச் சேர வம்சத்தைச் சேர்ந்த குலசேகர வர்மா, கூடியாட்டத்தில் முக்கியமான சீர்திருத்தங்களைச் செய்ததாக நம்பப்படுகிறது: விதுஷகனுக்கு (கோமாளிக்கு) உள்ளூர் மொழியை (மலையாளம்) அறிமுகப்படுத்தினார். நாடகத்தை நன்கு வரையறுக்கப்பட்ட பகுதிகளாகப் பிரித்து அமைத்தார். இவர் தாமே 'சுபத்ராரணம்' மற்றும் 'தபதீசம்வரணம்' என்ற இரண்டு நாடகங்களை இயற்றி, தோலன் என்ற பிராமண நண்பரின் உதவியுடன் அவற்றை மேடையேற்றினார்.

வரலாற்று வேர்கள் (Historical Roots)

கூடியாட்டம் கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சுற்றிய பண்டைய சமஸ்கிருத நாடக மரபான 'குடியாட்டம்'-இல் வேரூன்றியுள்ளது. வளர்ச்சி: முதலில் கோவிலின் எல்லைகளுக்குள் நிகழ்த்தப்பட்ட இது, பின்னர் நாடகம் மற்றும் நடனக் கூறுகளுக்கு முக்கியத்துவம் அளித்து கூடியாட்டம் எனப் பரிணாமம் அடைந்தது. இது கேரளக் கோவில்களுடன் நெருக்கமாகத் தொடர்புடையது; அங்கு இது பெரும்பாலும் கோவில் திருவிழாக்களின்போது ஒரு பக்தி வடிவமாக நிகழ்த்தப்பட்டது.

தனித்துவமான அம்சங்கள் (Distinctive Features)

கூடியாட்டம் கலையில் நன்கு பயிற்சி பெற்ற நடிகர்கள், பாரம்பரியமாக ஆண்கள் ஆன சாக்கியர்கள் (ஆண் பாத்திரங்களில் நடிப்பவர்கள்) மற்றும் பாரம்பரியமாகப் பெண்கள் ஆன நாங்கியர்கள் (பெண் பாத்திரங்களில் நடிப்பவர்கள்) ஆகியோர் அடங்குவர். இந்தக் பால் சார்ந்த பாத்திரப் பிரிவு (Gender-specific division) நெடுங்காலமாக உள்ள ஒரு மரபாகும். கூடியாட்டம் நடிப்பின் தனிச்சிறப்பு, நுணுக்கமான கை சைகைகளான முத்திரைகள் (Mudras), மற்றும் வெளிப்படையான முக அசைவுகளான அபிநயம் (Abhinaya) ஆகும். நடிகர்கள் இந்தக் கூறுகளைக் கொண்டு உணர்ச்சிகள், கதைகள் மற்றும் கதாபாத்திரங்களை வெளிப்படுத்துகிறார்கள். இது பொதுவாக காளிதாசர் போன்ற பண்டைய இந்திய நாடக ஆசிரியர்களால் எழுதப்பட்ட செவ்வியல் சமஸ்கிருத நூல்களிலிருந்து கதைகளை எடுக்கிறது. நடிகர்கள் பண்டைய சமஸ்கிருத மொழியின் ஒரு வடிவத்தில் நடித்து, இந்த மரபின் மொழியியல் மற்றும் இலக்கியப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கின்றனர். கூடியாட்டம் உடைகள் அலங்காரமாகவும் விரிவாகவும், பாரம்பரிய ஆடைகளுடன் சிக்கலான நகைகள் மற்றும் அணிகலன்களுடன் இருக்கும்.

கலாச்சார முக்கியத்துவம் (Cultural Significance)

கூடியாட்டம் ஆழமான மத வேர்களைக் கொண்டுள்ளது. இது கோவில்களில் நிகழ்த்தப்பட்டு, சமயச் சடங்குகளின்போது தெய்வங்களுக்கு ஒரு புனிதப் படையலாகக் கருதப்படுகிறது. பாரம்பரியப் பாதுகாப்பு: தலைமுறைகள் மூலம் கடத்தப்படும் ஒரு வாழும் மரபாக, கூடியாட்டம் இந்தியாவின் கலாச்சார மற்றும் கலைப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்காற்றுகிறது. குருமார்கள் (ஆசிரியர்கள்) மூலம் சீடர்களுக்கு அறிவைக் கடத்துவது இந்தக் கலையின் தொடர்ச்சியை உறுதி செய்கிறது. உலகளாவிய அங்கீகாரம்: 2001 இல் யுனெஸ்கோ அங்கீகாரம் கிடைத்ததன் மூலம், கூடியாட்டம் சர்வதேச கவனத்தைப் பெற்றது. இந்த அங்கீகாரம் இந்தியாவிலும் உலக அளவிலும் இதன் நிலையை உயர்த்தி, இதன் பாதுகாப்பிற்கும் பங்களித்துள்ளது.

நிகழ்த்தும் முறை

இது பாரம்பரியமாக கூத்தம்பலம் என்று அழைக்கப்படும் கோவில் நாடக அரங்குகளிலேயே நிகழ்த்தப்பட்டது. 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை, சாக்கியர் மற்றும் நம்பியார் சமூகத்தினர் மட்டுமே இதை கோவிலுக்குள் நிகழ்த்தினர். இது நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளையும் கட்டுப்பாடுகளையும் கண்டிப்பாகப் பின்பற்றுகிறது. கூடியாட்டமும் சாக்கியார் கூத்தும் சங்க இலக்கியம் மற்றும் பல்லவர், பாண்டியர், சேரர், சோழர் காலத்துக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள 'கூத்து' என்ற பண்டைய வடிவத்திலிருந்து தோன்றியவை. மொழி: நாடகம் சமஸ்கிருதம், பிராகிருதம் (பழைய பேச்சு வழக்கு) மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் நிகழ்த்தப்படுகிறது. கலைஞர்கள்: சாக்கியர்கள் (ஆண்கள்) முதன்மை வேடங்களிலும், நஙீஞ்யாரம்மைகள் (நம்பியார் சமூகப் பெண்கள்) பெண் வேடங்களிலும் நடிக்கின்றனர். இசைக்கருவிகள்: பின்னணி இசைக்கு முக்கியமாக மிழாவு மற்றும் இடக்கை பயன்படுத்தப்படுகின்றன.

நாடகத்தின் கட்டமைப்பு

கூடியாட்டம் பல இரவுகள் நீடிக்கும் விரிவான நிகழ்ச்சியாகும். இது மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டது: ஒரு நடிகர் நடனத்துடன் ஒரு கவிதையை (செய்யுளை) அறிமுகப்படுத்துவது. நடிகர் அபிநயம் (முக பாவனைகள்) மூலம் நாடகத்தின் முக்கியக் கதாபாத்திரத்தின் மனநிலையையும், கதையின் பூர்வ கால நிகழ்வுகளையும் நினைவுபடுத்துவது. இதுவே நாடகத்தின் இறுதிப் பகுதியாகும். இதில் பல கதாபாத்திரங்கள் மேடையில் தோன்றி நடிக்கின்றனர். விதுஷகன் (கோமாளி) என்ற பாத்திரம், கதையின் பின்னணிக் குறிப்புகளை எளிய மலையாளத்தில் விவரித்து,

சவால்கள்

சமீப காலம் வரை, போதுமான பார்வையாளர்கள் இல்லாததால், இந்தக் கலை கிட்டத்தட்ட அழிவின் விளிம்பில் இருந்தது. இதற்குக் காரணம், கூடியாட்டம் சமூகத்தின் உயர் வகுப்பினருக்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது, மேலும் கோவில் வளாகங்களுக்குள்ளேயே மட்டுமே நிகழ்த்தப்பட்டது. தவிர, கமகளி மற்றும் துள்ளல் போன்ற பிற நடன வடிவங்களின் எழுச்சியும் கூடியாட்டத்தின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

முடிவுரை

கூடியாட்டம் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக அதன் தனித்துவமான அழகியல் அடிப்படையில் நிலைத்திருந்து, மிக நீண்ட காலம் நீடித்த சமஸ்கிருத நாடக வடிவமாகத் திகழ்கிறது. இன்று, கூடியாட்டம் ஒரு பான்-இந்திய நாடக மரபாக (pan-Indian dramatic tradition) உருவெடுத்துள்ளது. தற்போது, உள்ளூர் ஆர்வத்தை விட இந்த நிகழ்த்துக் கலையின் மீதான சர்வதேச ஆர்வம் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. பழைய நாடகங்கள் புத்துயிர் பெறுவதுடன், புதிய நடன அமைப்புகள் (choreographies) மற்றும் இருக்கும் நாடகங்களை மீண்டும் விளக்குவதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. உலகப் புகழ்பெற்ற கலைஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களால் கூடியாட்டம் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போதைய தலைமுறை கலைஞர்களுக்கு, கேரள அரசு கலாச்சாரத் துறை, சங்கீத நாடக அகாடமி (SNA), யுனெஸ்கோ மற்றும் ஜப்பானின் நிதி அறக்கட்டளைகள் (Japan’s Funds-in-Trust) ஆகியவை நிதி உதவிகளை வழங்கி வருகின்றன. இந்தக் கலையின் பாதையில் உள்ள தடைகள் அனைத்தும் அகற்றப்பட்டால், கேரளாவின் இந்த நிகழ்த்துக் கலையின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும். கூடியாட்டமானது இந்தியாவின் அருவமான கலாச்சாரப் பாரம்பரியமாக தொடர்ந்து செழித்து வளரும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

1. அடிப்படை மற்றும் வரலாறு

பொருள்: மலையாளத்தில் "சேர்ந்து நடித்தல்" என்று பொருள்.

பழமை: ஏறக்குறைய 2,000 ஆண்டுகள் பழமையான இது, பண்டைய சமஸ்கிருத நாடகக் கலை மற்றும் சங்க கால 'கூத்து' மரபின் கூறுகளின் கலவையாகும்.

தனித்துவம்: பழங்காலச் சமஸ்கிருத நாடகத்தைப் பயன்படுத்தும் ஒரே எஞ்சியிருக்கும் கலை வடிவம் இதுவே.

அங்கீகாரம்: யுனெஸ்கோ இதை 'மனிதகுலத்தின் வாய்வழி மற்றும் அருவமான பாரம்பரியத்தின் தலைசிறந்த படைப்பு' என அறிவித்துள்ளது.

வரலாற்று ஆதாரம்: சங்க இலக்கியம் மற்றும் பல்லவர், சோழர், சேரர் காலத்திய கல்வெட்டுகளில் இதற்கான ஆதாரங்கள் உள்ளன. 'ஆரியம்' என்று கல்வெட்டுகளில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

2. அமைப்பு மற்றும் சீர்திருத்தங்கள்

வேதி: பாரம்பரியமாக கூத்தம்பலம் எனப்படும் கோவில் நாடக அரங்குகளில் மட்டுமே நிகழ்த்தப்பட்டது.

சீர்திருத்தம்: சேரமான் பெருமாள் மன்னர் குலசேகர வர்மா இதைச் சீரமைத்தார். இவர் விதுஷகனுக்கு (கோமாளி) மலையாள மொழியை அறிமுகப்படுத்தினார்.

பிரபல நாடகங்கள்: குலசேகர வர்மாவின் நாடகங்கள், சக்திபத்ரரின் 'ஆச்சார்யசூடாமணி', பாசகரின் நாடகங்கள் இன்றும் நிகழ்த்தப்படுகின்றன.

நடிகர்கள்: சாக்கியர்கள் (ஆண்கள்) ஆண் வேடங்களிலும், நஙீஙயாரம்மைகள் (நம்பியார் சமூகப் பெண்கள்) பெண் வேடங்களிலும் நடிக்கின்றனர்.

இசை: முக்கியமாக மிழாவு (நம்பியார் சமூகத்தினர் வாசிப்பது), இடக்கை, குழித்தாளம் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

நடிப்பு: நேத்ராபினயம் (கண் வெளிப்பாடு), ஹஸ்தாபினயம் (சைகைகள்) ஆகியவை இதில் முக்கியம். நாடகத்தின் ஒரு பகுதி பல நாட்கள் நீடிக்கலாம்.

பகுதிகள்: நாடகம் புறப்பாடு, நிர்வாஹணம், கூடியாட்டம் என மூன்று கட்டங்களைக் கொண்டது.

3. வீழ்ச்சி மற்றும் மறுமலர்ச்சி

வீழ்ச்சி: கோவிலுக்குள்ளேயே கட்டுப்படுத்தப்பட்டதாலும், கதகளி போன்ற பிற கலைகளின் எழுச்சியாலும் கூடியாட்டம் அழிவின் விளிம்பை அடைந்தது.

மறுமலர்ச்சியின் முன்னோடிகள்:

குரு மணி மாதவ சாக்கியார் 1955-இல் முதன்முறையாகக் கோவிலுக்கு வெளியே நிகழ்த்தினார்.

கலாமண்டலம் கிரிஜா முதல் நாங்கியர் அல்லாத மாணவியாக சாதித் தடையை உடைத்தார்.

மார்கி சதி, உஷா நாங்கியார் போன்றோர் பெண் கதாபாத்திரங்களை முதன்மைப்படுத்தி மீட்டுருவாக்கம் செய்தனர்.

தற்போதைய நிலை: உள்ளூர் ஆர்வத்தை விட சர்வதேச ஆர்வம் அதிகரித்துள்ளது. யுனெஸ்கோ, சங்கீத நாடக அகாடமி போன்ற அமைப்புகளின் நிதியுதவியுடன் இந்தக் கலை இந்தியாவின் அருவமானப் பாரம்பரியமாக செழித்து வளர்கிறது.

References

1. Balakrishnan, S. P., 2005, Kathakali – A Practitioner's Perspective Calicut, Poorna Publications.
2. Devi, J., 2004, Kerala Composers and their Contributions to Classical and Non-Classical Music (Unpublished Thesis), University of Kerala, Faculty of Fine Arts.
3. Gopalakrishnan, K. K., 2016, Kathakali Dance-Theatre: A Visual Narrative of Sacred Indian Mime New Delhi: Niyogi Books.
4. Gopalakrishnan, S., 2011, Kutiyattam – The Heritage Theatre of India , New Delhi, Niyogi Books
5. Jones, l. R. (Ed.), 1984, The Wondrous Crest-Jewel in Performance , Delhi: Oxford University Press.
6. Lal, A. (Ed.), 2009, Theatres of India: A Concise Companion, New Delhi: Oxford University Press,
7. Madhavan, A., 2010, Kudiyattam Theatre and the Actor's Consciousness, Amsterdam and New York:, Rodop.i
8. Nair, D. A.. 1979. Kudiyattam:. Fantasy and Poetry in Dance Marg, 32(2), pp. 66–67.
9. Pani, J.,1986, World of Other Faces: Indian Masks New Delhi: Publications Division.
10. Prabhat, B., 2011, A Comparative Study of the Contemporary Actors Training Process in NOH and Kutiyattam (PhD thesis), University of Hyderabad, Department of Theatre Arts.
11. Rajagopalan, L. S., 1997, Women's Role in Kudiyattam, Chennai: The Kuppuswami Sastri Research Institute.
12. Srinivasan, S., 2012, Masked Identities: Safeguarding India's Intangible Cultural Heritage, Mumbai: Observer Research Foundation.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

eISSN: 3049-0723
Vol. 4 Issue: 01 October 2025

பண்டையத் தமிழரின் நீர்த் தேவைகளும் அதன் பயன்பாட்டு முறைகளும்

Water Needs and Usage Practices of Ancient Tamils

முனைவர் க.விஜயராகவன்,

தலைவர் - தமிழ்த்துறை,

சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-5, தமிழ்நாடு, இந்தியா.

Email: sonaragavan@gmail.com , ORCiD:

Dr. G. Vijayaragavan,

Head – Assistant Professor in Tamil, SONA College of Arts and Science, Salem-5, Tamil Nadu, India.

Abstract:

Nature is an integral part of human life. All living things can survive, not just humans. It is impossible to live without nature. In this way, water is based on the development and movement of life in harmony with nature. It is noteworthy that many people, including Valluvar, have always emphasized the importance of water in their works. This paper examines the need for water in the lives of literate Tamils and the creative initiatives they have taken to harness it.

Keywords: Water Management, Irrigation, Water Utilization, Aarey, Kulam, Well, Sea, Madagu, Kalingu,

ஆய்வுச் சுருக்கம்:

மானுட வாழ்வியலில் இயற்கை என்பது ஓர் வரம். இயற்கையை சூழ்ந்த வாழ்வியலையே மனித இனம் மட்டுமன்றி உயிர்கள் யாவும் வாழ இயலும். இயற்கையை தவிர்த்து வாழ்தல் என்பது இயலாத ஒன்று. இப்படி இயற்கையோடு இயைந்த வாழ்வியலில் நீர் என்பது உயிர்களின் வளர்ச்சியையும் இயக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டது. வள்ளுவர் தொடங்கி பலரும் தங்களது படைப்புகளில் நீரின் இன்றியமையாமையை காலம்தோறும் உணர்த்தி வருவது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் இலக்கியங்களின் வழி உணரலாகும் தமிழர்களின் வாழ்வியலில் நீரின் தேவைகளைப் பற்றியும் அவர்கள் அதனை பயன்படுத்துவதற்கு கையாண்ட ஆக்கப்பூர்வமான முன்னெடுப்புகள் பற்றியும் இந்த ஆய்வுக் கட்டுரை ஆய்வு செய்து கருத்துரைகளை முன் வைக்கிறது.

திறவுச்சொற்கள்: நீர் மேலாண்மை, பாசனமுறை, நீர் பயன்பாடு, ஏறி, குளம், கிணறு, கடல், மதகு, கலிங்கு, சுனை.

முன்னுரை;

தமிழ் இலக்கியங்களில் நீர் மேலாண்மை குறித்தும், மழைநீரை சேமித்து வைப்பது, ஏரிகள் மற்றும் குளங்களை அமைப்பது, நீர் வரத்து கால்வாய்களை சீரமைப்பது போன்ற நீர் மேலாண்மை முறைகள் பற்றியும் இலக்கியங்களில் பேசப்பட்டுள்ளன. நீர்ப்பாசனத்திற்கு, குடிப்பதற்கு, குளிப்பதற்கு, தொழில் பயன்பாட்டிற்கு என பல்வேறு தேவைகளுக்கு நீர் பயன்படுத்தப்பட்டது பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. குளம், கேணி, ஆறு ஆகிய நீர்நிலைகளை பராமரிப்பதின் முக்கியத்துவத்தையும்,

ஆற்றுநீர் வற்றிய காலங்களில் ஊற்றுநீர் தோண்டி பயன்படுத்தியதிய மக்களின் வாழ்வியலையும் இலக்கியங்களில் காணமுடிகிறது. சங்க காலத்திலேயே நீரை சேமித்து வைக்கும் முறைகள் கையாளப்பட்டதாகவும், அது அக்கால மக்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவை வெளிப்படுத்துவதாகவும் இருந்துள்ளது. இந்த ஆய்வுக் கட்டுரை நீர் சார்ந்த தேவைகளையும் அதனை பயன்படுத்திய நீரியல் மேலாண்மையையும் மக்களின் வாழ்வியலையும் ஆய்வதாக அமைகிறது.

மழை இல்லை என்றால் உலகில் ஒழுக்கம் கெடும். உலகில் தர்மமும், அறமும், ஒழுக்கமும் நிலைத்து வாழ மழை தேவை. மழை இல்லாவிட்டால் உணவு இல்லை. உணவு இல்லாவிட்டால் பசியாழ் உயிர்கள் வாடி வருந்தும். அதையே, பசி வர பத்தும் பறந்து போகும் என்பர் முன்னோர்.

“மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்து போம்” **நல்வழி. பா.எண்.26**

என்று ஔவை குறிப்பிடுகிறார். இதனை வள்ளுவர்,

“நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு” **திருக்குறள், கு.எண். 20**

தன் குறள் மூலம், நீர் இல்லையேல் இவ்வுலகில் எதுவும் இல்லை என்பதை வலியுறுத்துகிறார். தமிழ் இலக்கியங்கள், குறிப்பாக சங்க இலக்கியங்கள், நீரின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றன.

“விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது” **திருக்குறள், கு.எண். 16**

வானில் இருந்து பெறப்படும் நீரே உயிர்களுக்கு அடிப்படையாய் அமைகிறது என்கிறார் வள்ளுவர். இந்த மழைநீரை ஏரிகள், குளங்களில் சேமித்து வைப்பது பற்றி இளங்கோவடிகள் மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

“இடியுடைப் பெருமழை எய்தா ஏகப்
பிழையாவிளையுள் பெருவளம் சுரப்ப
மழைபிணித் ஆண்ட (து)மன்னவன்” **சிலப். பா.வரி.26-28**

இப்பாடலடியில், முறையாகப் பெய்யும் மழை நீரை ஏரி, குளங்களில் சேமித்து அவற்றைத் தக்க முறையில் பயன்படுத்தி, நாட்டை வளம்பெறச் செய்யும் மன்னன் இவன் என்பதாகும். இதேபோல, மழை நீரைச் சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர் நிலைகளை அமைப்பது ஒரு மன்னனின் தலையாய கடமை என்பதை,

“நிலன் நெளிமருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோரம்ம இவன் தட்டோரே

தள்ளாதோர் இவண் தள்ளாதோரே" புறம். பா.எண். 18, 28-30

என்று புலவர் புலவியனார், பாண்டியன் நெடுஞ்செழியனைப் பார்த்துப் பாடியுள்ளார். இதன் பொருள் நிலம் எங்கெங்கு பள்ளமாக இருக்கிறதோ அங்கெல்லாம் நீர் நிலைகள் அமையும்படி கரை அமைத்த மன்னர்களே இவ்வுலகில் என்றென்றும் அழியாப் புகழ்பெற்று விளங்குவர் என்பதாகும்.

நீர் நிலைகள்

மழைநீரைச் சேமித்து, சேமித்த நீரை திறம்படப் பயன்படுத்துவது எப்படி என்பதை அறிந்திருக்க வேண்டும். ஆறு, குளம், ஏரி, கிணறு, அருவி, கடல், அகழி, சுனை, உறை கிணறு போன்ற நீர் நிலைகள் பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. சிறுபஞ்ச மூலம் நூலில் குளம் அமைக்கும் முறை, பொதுக்கிணறு அமைத்தல், வரத்துக்கால், மதகுகள், மிகைநீர் வெளியேறும் கலிங்கு, தூம்பு போன்றவவற்றை எவ்வாறு அமைக்க வேண்டும் என்று கூஉகிறது.

- **ஏரிகள்**
- **குளம்**
- **கிணறுகள்**
- **கலிங்கு**
- **சுருங்கை**
- **வரத்துக்கால்**
- **மதகுகள் (குமிழித்தூம்பு)**
- **கடல்**

ஏரிகள்

"அறையும் பொறையும் மணந்த தலைய
எண்நாள் திங்கள் அணைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ" புறம். பா.எண். 118

ஏரி எந்த வடிவில் இருக்க வேண்டும் என்பதைப் புறநானூறு வழி அறிய முடிகிறது. மிகுதியாக வரும் ஆற்று வெள்ளநீரை தம்முள் அடக்கிக் கொள்ளக்கூடிய பெரும் ஏரிகள் இருப்பது ஒரு நாட்டுக்குச் சிறப்பு என்பதை,

"யாறுள் அடங்குங்குளமுள வீறுசால்" நான்மணிக். பா.எண். 54

என்று நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது. நீரினை உரிய முறையில் சேமித்து நீர் இல்லாத காலங்களில் பயன்படுத்தக் கூடிய முறையை இப்பாடல் விளக்குகிறது. ஆற்றின் மிகுதியான நீரை உள்வாங்கிக் கொள்ளக்கூடிய பேரேரிகள் உரிய ஆழ அகலத்துடன் இருக்க வேண்டும் . அப்படி இருந்தான் தான் வெள்ளம் உண்டாகும் காலங்களில் அதிகப்படியான நீர் வீணாகிக் கடலில் கலக்காமல் சேமித்து நீர்த்தேவை ஏற்படும் காலங்களில் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதை தமிழர்கள் உணர்ந்திருந்ததை அறிய முடிகிறது.

குளம்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திரிகடுகத்தில், நீர் வரும் வரத்துக்கால் நன்கு அமையாத குளம் இருப்பின் அதனால் பயன் குறையும் என்ற செய்தியை,

"வாய்நன் கமையாக் குளனும் வயிறாரத்
தாய்முலை யுண்ணாக் குழவியும் சேய்மரபில்
கல்விமாண் பில்லாத மாந்தரும் இம்மூவர்
நல்குரவு சேரப்பட்டார்" **திரிகடுகம், பா.எண். 83**

என்று, தாய்ப்பால் அருந்தாத குழந்தையும், கல்வி அற்ற நிலையில் உள்ளவர்களும் எப்படி சிறக்க முடியாதோ, அதுபோல் வாய் நன்கு அமையாத குளமும் இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். பெருவெள்ளம் ஏற்படும் காலங்களில் அந்நீரை உரிய முறையில் சேமித்து, நீர் இல்லாத காலங்களில் பயன்படுத்தக் கூடிய நிகழ்வை இத்தொடர் குறிப்பிடுகிறது.

"காவோடு அறக்குளம் தொட்டல் மிகஇனிதே" **இ.நாற்பது, பா.எண். 84**

குளம் வெட்டுவித்தல் என்பது மிகப்பெரும் அறச்செயல். மழை நீரைத் தேக்கி வைத்துப் பயன்படுத்த ஏரிகள், குளங்கள் வெட்டுவிக்க வேண்டும் என்று இனியவை நாற்பது எடுத்துரைக்கின்றது. கண்மாய்களையும், குளங்களையும் காத்து அவற்றை முறையாகப் பராமரித்த செய்தியை

"பெருங்குளக் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே" **அகநானூறு பா.எண். 25**

அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது. பணியிலும் மழையிலும் அடர்ந்த இருளிலும் ஏரியைக் காக்கும் காவலன்போல, குழந்தையைப் பாதுகாக்க அன்னை தன் தூக்கத்தை மறந்தாள் என்பது இப்பாடலின் பொருள். கண்ணை இமை காப்பதுபோல் குழந்தையை தாயானவள் காக்கும் செயல் ஒன்றாக எண்ணப்பட்டு நிலையை அறிய முடிகிறது.

"காவோடு அறக்குளம் தொட்டானும் நாவினால்" **திரிக., பா.எண். 70**

சோலையை உண்டாக்குவதோடு, அறத்திற்குரிய குளத்தைத் தோண்டுவித்தவனும் உண்டு. குளம் வெட்டி நீரைச் சேமித்துப் பாதுகாப்பது மிகப்பெரிய அறச்செயலாக இங்கு உணர்த்தப்படுகிறது. சோலைகளை அமைப்பதற்கு அடிப்படைத் தேவையே நீர். அத்தகைய நீரினை சேமிப்பதற்கு குளங்களையும், கிணறுகளையும், ஆற்றினையும், ஏரிகளையும், மேம்படுத்துவது அறச்செயளாக திரிகடுகம் உணர்த்துகின்றது.

கிணறு

மக்களுக்கு குடிநீர் தரவல்ல கிணறுகளை குறைவில்லாமல் செய்வது முதன்மையான அறச்செயலாகும். இதனை,

"கூவல் குறைவின்றித் தொட்டனும்" **திரிக. பா.எண். 6**

என்று திரிகடுகம் நூல் கூறுகின்றது.ஆழமான கிணற்றுநீர் தூய நீராக இருக்கும் என்பதையும்,கோடைகாலங்களில் குளிர்ச்சியாகவும்,குளிர்காலங்களில் வெது வெதுப்பாகவும் திகழும் தன்மை கிணற்று நீருக்கு மட்டுமே உள்ளது என்பதை திரிகடுகத்தின் வழியாக அறிய முடிகிறது.

"உணற் கினிய இன்னீர் பிறி(து) உழி இல் என்னும்
கிண றகத்துத் தேரைபோல் ஆகார்" **பழமொழி. பா.எண். 6**

குடிப்பதற்கு உவர்ப்பு இல்லாத நல்லநீர் என்று கிணற்று நீரை சங்க நூலாகிய பழமொழி நானூறும் சுட்டுகின்றது.

"குளந்தொட்டு கோடு பதித்து வழி சித்து
உளந்தொட்டு உழவயலாக்கி - வளந்தொட்டு
பாடு படுங்கிணற் றோடென்றிவ் வைம்பாற்
கடுத்தான் ஏகுசுவர்க்கத் தினிது" **சிறுபஞ். பா.எண். 65**

என்ற பாடல்வரிகளில் ஏரிகளில் அமைக்கப்பட வேண்டிய முறையை சிறுபஞ்சமூலம் என்ற நூலின் வழி எடுத்துரைக்கப்படுகிறது. குளத்தை வெட்டி[தொட்டு], கலிங்கு[கோடு] பதித்து, நீர் ஓடும் வழிகளை – ஆறு, வாய்க்கால்)குளத்துக்கு நீர் வரும் வரத்துக்காலையும் வயல்களுக்கு நீர் போகும் போக்குக் கால்களையும்(உண்டாக்கி)சித்து(, வரம்பு இட்டு எருப்போட்டு, உழுது வயல்களாக்கி, வளப்படுத்தி , பொதுக் கிணறுகளையும் உருவாக்குவோர் சுவர்க்கத்துக்குப் போவார்களாம் என்கிறது பாடல்.

சுனை

சுனை நீர் என்பது இயற்கை நீர் நிலைகளுள் ஒன்றாகும். மழைக்காலத்துப் பெய்த மழைநீரைச் சேமித்து வைக்கும் நீராதாரம் ஆகும். சுனையிலுள்ள நீரானாது மலையின் வாழ்க்கை நடத்தும் விலங்கினங்களுக்கு அம்மழையின் நிறைந்த வகையில் உள்ளது. சுனையினது தோற்றம் கள்ளைப் பெய்த நீலக்குப்பிகளைப் போன்ற சிறிய வாயையுடைய சுனையின் கண் உள்ளனவாகிய பிளந்த வாயை கொண்டிருந்தன.

"மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன
இட்டுவாய்ச் சுனை" **குறுந்.193:1-2**

என பாடலடிகளின் மூலமாக அரிசில் கிழார் சுட்டுகின்றார். சிறுசிறு சுனைகள் பல மலைமீது காணப்படுவது எறும்புப் புற்றுப்போல் இருந்ததாகப் பாடலில் இடம் பெற்றுள்ளதை. 'எறும்பி அளையின் குறும்பல் சுனை' குறுந்தொகையின் பாடலடியின் மூலமாக ஓதலாந்தையார் காட்டுகின்றார்.

கலிங்கு

பழந்தமிழ் இலக்கியங்களில் இத்தகு நீர்நிலைகளில் இருந்து மிகு நீட்டி வெளியேற்ற 'கலிங்கு'என்ற அமைப்பை ஏற்படுத்தியிருந்தனர். இக்கலிங்கு குறித்த தகவல்கள் மிகுதியாக இலக்கியங்களில்

சுட்டிக்காட்டப்படுகின்றன. இத்தகைய தொழில்நுட்பம் தமிழகத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.

- **நீர் ஒழுங்குபடுத்துதல் - இது நீர்நிலைகளில் உள்ள அதிகப்படியான நீரை கட்டுப்படுத்தி வெளியேற்ற உதவுகிறது.**
- **கட்டுமானப் பொருள் - பொதுவாக கற்களைக் கொண்டு அமைக்கப்படுகிறது.**
- **பயன்பாடு - நீர்ப்பாசனத்திற்கு நீரை திறம்பட கொண்டு செல்லவும் இது உதவுகிறது.**
- **பாதுகாப்பு - ஏரி அல்லது கண்மாய் போன்ற நீர்த்தேக்கங்கள் உடைவதை தடுக்கிறது.**
- **வேறுப் பெயர்கள் - கலிங்கல், கலிஞ்சு, மதகு என்றும் அழைக்கப்படும்.**

சுருக்கமாக, கலிங்கு என்பது நீர் மேலாண்மையில் ஒரு பழமையான மற்றும் பயனுள்ள அமைப்பாகும். இது நீர்நிலைகளின் பாதுகாப்பு மற்றும் பயன்பாட்டை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

சுருங்கை

பெரிய நீர்த் தேக்கங்களில் இருந்து நீர் வெளியேறவும், நீரை எடுத்துச் செல்லவும் சுருங்கைச் சிறிய குழாய்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மணிமேகலையில் புத்ததேவன் தோற்றம் பற்றிக் கூறவரும் கூலவாணிகன் சாத்தனார்,

"பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி
இரும்பெரு நீத்தம் புகுவது போல" **மணி. அற.தொழு.காதை. 80**

என்கிறார். 'சுருங்கை' என்பது பூமிக்கடியில் செல்லும் சிறிய குழாய். அதாவது பெருங்குளங்களாகிய பேரேரிகளின் ஒருபுறம் உள்ள சிறிய சுருங்கை வழியாக அங்கு தேக்கப்பட்ட நீர் வெளியேறி மக்களுக்கு அளவிட இயலாத வகையில் பயன்தரும். பழந்தமிழர்கள், நனிநாகரிகம் மிக்கவர்களாக இருந்தனர் என்பதற்கும், நகர அமைப்பில் சுருங்கை போன்ற தொழில்நுட்பத்துடன் கூடிய கழிவுநீர் வெளியேற்ற முறைகளை அமைத்திருந்தனர் என்பதற்கும் இது ஒரு சான்றாகும்

மதகு

தமிழகத்தின் ஏரிகளிலும், குளங்களிலும் இருந்து நீர் வெளியேற்றும் மதகு அமைப்பு சுருங்கைகளாக இருந்தன. இந்த மதகு அமைப்பே 'குமிழித்தூம்பு' எனப்பட்டது. இதேபோல் பெருக்கெடுத்து மிகுவேகத்தில் ஓடிவரும் நீரை குறுக்கே தடுப்பணை அமைத்துத் தடுப்பதற்கு மிகுந்த தொழில்நுட்ப அறிவு தேவைப்படும். அவ்வாறு பெருக்கெடுத்து வரும் நீரை கற்கள் கொண்டு தடுத்து நிறுத்தும் முறை 'தடுப்பணை கற்சிறை' எனப்பட்டது. தொலகாப்பியத்தில்,

"பெருகு நீர் வெள்ளம் ஒருவன் தடுத்து நிறுத்தாற் போல,
ஆற்று நீர் வெள்ளம் கற்சிறை தடுத்து நிறுத்துகிறது" **தொல். 725-726**

என்று கூறியுள்ளார் தொல்காப்பியர். சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு முறையாகக் அறிய முடிகிறது. ஏரிகளின் நீரை அளவாக வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்ட அறிவியல்

பூர்வமான நீர்ப்பாசன அமைப்பு இது. இதில், ஒரு கற்பெட்டி மற்றும் அதனுள்ளே நீரோடி என்ற துளையுடன் கூடிய அமைப்பு இருக்கும். குளத்து நீரை வயல்களுக்குப் பாய்ச்சுவதற்கு உதவுகிறது. நீர்நிலைகளில் உள்ள நீரைத் தேவைக்கேற்ப வெளியேற்றவும், தேவையில்லாதபோது நீர் வெளியேறுவதைத் தடுக்கவும் பயன்படுகிறது. மழைநீரைச் சேமித்து, அதைத் திறம்படப் பயன்படுத்துவதற்கான ஒரு முக்கிய அங்கமாகும்.

கடல்நீர்

கடல்நீரே மழையை பெய்துவிக்க பெரிதும் ஆதாரமாக உள்ளதுமழைநீரால் தான் நாடுவளம் . பெறும். அத்தகைய மழைநீரை சேமித்து வைக்கத்தான் நாம் குளம், கிணறு, ஆறு, ஏரிகள் ஆகியவை உருவாக்கப்பட்டது. மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட நம் தேசம் நாவலந்தீவு என்று அழைக்கப்பட்டது. காற்றினால் மோதப்பட்ட மேகம் மின்னலையும், இருளையும், மாறி மாறிப் பரப்பி, மழைப் பொழியச் செய்கின்றது.

வானிலிருந்து மண்ணிற்கு வரும் மழைநீர், மண்ணில் பல்வேறு தன்மைகளுக்கு, சூழல்களுக்கு உட்பட்டு அதன் நிலையை அடைகிறது. அவற்றுள் சூரியன் வெப்பத்தால் ஆவியாவதும், காற்றினில் நீராவியாக உறைந்திருப்பதும், பனிநீராக நிலவியிருப்பதும், நிலமும் நீரும் ஒன்றாகிப் போவதும் நிலத்திற்கும் நீருக்கும் உள்ள தன்மைகளால் ஏற்படுவனவாகும். உலகத்தின் பெரும்பகுதி கடலால் சூழப்பட்டுள்ளது. மூன்றில் ஒரு பங்காக அமைந்திருக்கும் நிலப்பரப்பே மக்கள் வாழிடமாக அமைந்துள்ளது. இவ்வுலகம் கடலால் சூழப்பட்டிருந்தமையை நம் முன்னோர்கள் மிகச்சிறப்பாக அறிந்து வைத்திருந்துள்ளனர். இதனை,

“நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான் நல்காதாகி விடின்” **திருக். கு.எண். 17**

மேகமானது கடலிலிருந்து நீரை மொண்டு வந்து அக்கடலிலேயே மழையாகப் பெய்யாவிடில் பெரியகடலும் தன் வளம்குறைந்து போகும் என்பதை நாம் உணரலாம். மேலும்,

“மாவலந்த நோக்கினா யூணீய்ந்தார் மாக்கடல்சூழ்
நாவலந்தீ வாள் வாரே நன்கு” **ஏலாதி. பா.எண். 56**

“விரிகடல் வேலி வியலுலகம்” (சிறுபாண். பா.வரி. 114)

“விரிதிரை பெருங்கடல் வளைஇய உலகம்” (குறு. பா.எண்.41-11)

“கடனீர் முகந்த கமன்ஞ்சூ லெழிலி
குடமலை யாகத்துக் கொள்ளம் பிறைக்கும்” **கார். பா.எண். 33**

“புலவுக் கடல் உடுத்த… மலர்தலை உலகம்” (பெரும்பாண். பா.வரி. 409-410)

"இருள்நிற முந்நீர் வளைஇய உலகம்" (குறு. பா.எண்.293)

"கருங்கடல் மேய்ந்த கமஞ்சூ லெழிலி
இருங்க லிறுவரை யேறி யுயிர்க்கும் " **கார்.எண்.பா , 37**

"கடல்சூழ் மண்டிலம்" (குறு. பா.எண். 137-7)

போன்ற வரிகள் கடலின் சிறப்பையும் அதன் தன்மையும் இன்றியமையாத நிலைப்பாட்டையும் பாங்குற எடுத்துரைக்கின்றன.

ஊற்றுநீர்

நிலத்தடி நீர் இயற்கையாகப் புவி மேற்பரப்பில் கசிந்து வெளிப்படும் ஒரு இடமாகும். மழை நீர் நிலத்தின் வழியாக உறிஞ்சப்பட்டு, பாறைகள் அல்லது இறுக்கமான தரையின் மூலம் தடுக்கப்பட்டு, அங்கு தேங்கிய நீர் நிலத்தடி நீர்நிலைகளில் இருந்து கசிந்து வெளிப்படுவதே ஊற்றாகும். ஊற்றுகள், குறிப்பாக வறண்ட பகுதிகளில், சுத்தமான மற்றும் நன்னீர் ஆதாரங்களாக விளங்குகின்றன.

- வெப்ப ஊற்று - சில ஊற்றுகள் வெப்பமான நீரைக் கொண்டிருக்கும், இவை புவியின் உட்புற வெப்பத்தால் உருவாகின்றன.
- பள்ளவூற்று - நிலத்தின் மேற்பரப்பு, ஒரு நீர்நிலையின் தரை மட்டத்தை விடக் கீழ் சென்றால், பள்ளவூற்றுகள் உருவாகின்றன.
- ஆட்டீசியன் கிணறு - சில நேரங்களில், இந்த நீர் அழுத்தத்தின் கீழ் மேலே பீய்ச்சி அடிக்கும்.

"உண்ணீநீர் வளங்குளம் கூவல் வழிப்புரை
தண்ணீரே அம்பலந்தான் பாற்படுத்தான் - பண்ணீர
பாடலொ டாடல் பயின்றுயர் செல்வனாய்
கூடலொடு ஊடலுளான் கூர்ந்து" ஏலாதி. **பா.எண். 51**

- பானகம், நீர்மோர் போன்ற உண்ணும் வளமான நீர்
- நீர் தேங்கும் குளம்
- வழியில் திருப்பி விட்ட நீரோடை
- தண்ணீர்ப் பந்தல்
- நீர் ஊறத் தோண்டிய கூவல்-கிணறு
- தங்கும் பொதுமன்றம்

குளம், கிணறு, வாய்க்கால் வெட்டுதல், ஊற்றுக்குழி தோண்டுதல் முதலியவற்றால் அதனை ஆங்காங்கு வளம்படுத்தித் தருபவற்றை 'உண்ணீர் வளம்' என்று எடுத்துரைக்கின்றது. தண்ணீரின் பயன்பாட்டையும் தண்ணீர் இல்லாக் காலங்களில் ஊற்றுநீர் பயன்படுத்தும் முறையும் எடுத்துரைக்கின்றது ஏலாதி.

கோடைக் காலங்களில் ஆற்று மணலில் குழி தோண்டி அதிலிருந்து ஊறுகின்ற ஊற்று நீரினை உண்ணும் வழக்கம் இருந்துள்ளதை அறிய முடிகிறது. ஆற்றுநீர் வற்றிய காலங்களில், ஆற்றில் நீர் இல்லாத காலத்திலும் ஊற்றுநீர் பயன்படுத்திய செய்தியை நாலடியார் விளக்குகின்றது.

"உறுபுனல் தந்துல கூட்டி அறுமிடத்தும்
கல்லூற் றுழியூறும் ஆறேபோல்" நாலடி. பா.எண். 185

நீர் வரத்து அதிகம் உள்ள காலத்திலும் உலக உயிர்களை காத்தும், உண்பதற்கு நீராகவும் பயன்பட்டு நீர் வற்றிய காலங்களிலும் மணற் பரப்பில் ஊற்று தோண்டி ஊற்று நீர் அளிக்கும் ஆற்றின் சிறப்புப் பற்றிக் காண முடிகிறது.

"அற்றக் கடைத்தும் அகல்யா றகழ்ந்தக்கால்
தெற்றெனத் தெண்ணீர் படும்" நாலடி. பா.எண். 150

அகன்ற ஆறானது நீர் இல்லாத காலத்திலும் தோண்டியவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கும். அதுபோல, வறுமையில் வாடும் காலத்தில் நற்குடியில் பிறந்தவர்கள் தன்னை நாடி வந்தவர் சோர்வடையும்போது ஊற்று நீர் போல உதவுவர் என்கிறது நாலடியார்.

"உறைப்பருங் காலத்தும் ஊற்றுநீர்க்கேணி
இறைத்துணினும் ஊராற்றும் என்பர்" நாலடி. பா.எண். 185

மழைத்துளித்தலில்லாத காலத்திலும் ஊற்று நீரையுடைய சிறிய நீர்நிலையை உண்பதற்கு நீராகவும் வயல் வெளிகளை வளம்பெறச் செய்ய இறைத்து உண்ணுவதற்கும் ஊரில் உள்ள அனைவர்க்கும் உதவுவதாக உள்ளது.

முடிவுரை

தமிழ் இலக்கியங்கள், நீரின்றி அமையாது இவ்வுலகம் என்பதை வலியுறுத்துகின்றன. சங்க இலக்கியங்களில் பல்வேறு நீர் நிலைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நீர்நிலைகளின் வகைகள், அவற்றின் பயன்பாடுகள், மற்றும் அவற்றை பாதுகாக்கும் முறைகள் இலக்கியங்களில் விளக்கப்பட்டுள்ளன. குறுந்தொகை மற்றும் நற்றிணை போன்ற நூல்களில், மழை நீரை சேமித்து வைப்பது பற்றியும், ஏரிகள் மற்றும் குளங்களை அமைப்பது பற்றியும் பாடல்கள் உள்ளன. மேலும், பரிபாடல் போன்ற நூல்களில், நீரை எவ்வாறு பயன்படுத்துவது, கழிவு நீரை எவ்வாறு வெளியேற்றுவது போன்ற செய்திகள் காணப்படுகின்றன. நீரை சேமித்து, பாதுகாத்து, திறம்பட பயன்படுத்தும் முறைகளை விளக்குகின்றன. இது, அக்கால மக்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவை வெளிப்படுத்துகிறது.

துணைநூற்பட்டியல்

1. ந.மு.வேங்கடசாமி நாட்டார், நல்வழி, பாரி நிலையம், 2016
2. திருக்குறள், பரிமேலழகர் உரை, பழனியப்பா பிரதர்ஸ், 2023
3. ப.சரவணன், சிலப்பதிகாரம், சந்தியா பதிப்பகம், 2008
4. புலியூர்க் கேசிகன், புறநானூறு, கௌரா பதிப்பகம், 2006
5. ஞா.மாணிக்கவாசகன், நான்மணிக்கடிகை மூலமும் விளக்க உரையும், உமா பதிப்பகம், ஐந்தாம் பதிப்பு.
6. ந.மு.வேங்கடசாமி நாட்டார், திரிகடுகம், பாரி நிலையம், 2019
7. இனியவை நாற்பது இன்னா நாற்பது சிறுபஞ்ச மூலம் (மூலமும் தெளிவுரையும்), தமிழரசன், நர்மதா பதிப்பகம், 2021
8. புலியூர்க் கேசிகன், அகநானூறு, கௌரா பதிப்பகம்
9. புலியூர்க் கேசிகன், பழமொழி நானூறு மூலமும் உறையும், கௌரா பதிப்பகம், 2010
10. மகேந்திரவர்மன் சம்பத்து, சிறுபஞ்சமூலம், சாரதா பதிப்பகம்.
11. புலியூர்க் கேசிகன், குறுந்தொகை, கௌரா பதிப்பகம்
12. ஔவை துரைசாமிப்பிள்ளை, ந.மு.வேங்கடசாமி நாட்டார், மணிமேகலை (மூலமும் உறையும்), சாரதா பதிப்பகம், 2019
13. இளம்பூரணனார், தொல்காப்பியம் (எழுத்து – சொல் - பொருள்), கௌரா பதிப்பகக் குழுமம், 2017
14. முத்து ராமமூர்த்தி, பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும், கௌரா பதிப்பகக் குழுமம்
15. அறிஞர் ச.வே.சுப்பிரமணியம், சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும் மூன்று) தொகுதிகள்), மணிவாசகர் பதிப்பகம், 2021

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

கைசிக நாடகம் (கோவில் சார் நாடகப்பிரதி)

Unveiling the Soul of the Kaisika Nadagam

வீ. ஹேமவர்த்தினி[1], முனைவர் கோ. வசந்திமாலா[2],

[1]முனைவர் பட்ட ஆய்வாளர் (23PTAF04), தமிழ்த்துறை,

பி. எஸ். ஜி. கலை அறிவியல் கல்லூரி, கோவை – 641014

Email: hemaragav003@gmail.com, ORCiD: https://orcid.org/0009-0001-1505-3506

[2]இணைப் பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப் பிரிவு),

பி. எஸ். ஜி. கலை அறிவியல் கல்லூரி, கோவை – 641014

Email: vasanthimala@psgcas.ac.in, ORCiD: https://orcid.org/0009-0008-8969-6126

[1]**V. Hemavardhini,** Ph.D. Research Scholar (23PTAF04), Department of Tamil, P.S.G. College of Arts & Science, Coimbatore – 641014

[2]**Dr. G. Vasanthimala,** Associate Professor & Head of the Department of Tamil (Self-Financing Section), P.S.G. College of Arts & Science, Coimbatore – 641014

Abstract:

The Kaisika Natakam is a unique ritual theatre tradition performed exclusively at the Thirukkurungudi temple in Tirunelveli district. In this, Nambaduvan, who belongs to a marginalized caste, undertakes the Ekadasi vow and, even when obstructed by the demon Somasarma, fulfills it without giving up. Beyond its mythological framework, this play highlights issues of caste, faith, truth, and salvation, thereby embedding social and spiritual messages within its ritualistic performance.

This research paper examines the Kaisika Natakam both as a dramatic text and as a performance tradition. It analyses the process of revival and reconstruction undertaken in the late 20th century after the form had almost vanished, and explores the contributions of scholars, artists, and temple authorities in bringing it back to the stage. By documenting and critically analysing the Kaisika Natakam, the study not only preserves an endangered cultural heritage but also demonstrates how ritual theatre can function simultaneously as a site of devotion, aesthetic expression, and socio-cultural discourse.

Keywords: Kaisika Natakam, ritual theatre, musical drama, Thirukkurungudi temple, Kaisika Puranam, revival, Tamil performance tradition

ஆய்வுச் சுருக்கம்:

கைசிக நாடகம் என்பது திருநெல்வேலி மாவட்ட திருக்குறுங்குடி நம்பி கோவிலில் மட்டும் நடைபெறும் தனித்துவமான கோவில்சார் நாடக மரபாகும். இந்த நாடகம், வராக புராணத்தில் இடம்பெற்ற கைசிக புராணக் கதையை அடிப்படையாகக் கொண்டது. இதில் தாழ்த்தப்பட்ட குலத்தைச் சார்ந்த நம்பாடுவான், ஏகாதசி விரதம் மேற்கொண்டு அதை அசுரனான சோமசர்மா தடுக்கும் நிலையிலும் கைவிடாமல் நிறைவேற்றுகிறான். புராணக் கதையைத் தாண்டியும், இந்நாடகம் சாதி, நம்பிக்கை, சத்தியம், முக்தி ஆகிய கருப்பொருட்களை வலியுறுத்துவதால் சமூகமும் ஆன்மீகமும் ஒருங்கே பிரதிபலிக்கின்றன. இந்த ஆய்வுக்கட்டுரை கைசிக நாடகப் பிரதியை ஆவணப்படுத்தி சமூக நோக்கிலும் காண்கிறது. மறைந்து போன நிலையிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நிகழ்த்தப்பட்ட

Tamilmanam

மீட்டுருவாக்கம் குறித்தும், அதற்காக அறிஞர்கள், கலைஞர்கள், கோவில் நிர்வாகிகள் செய்த பங்களிப்புகளையும் விவரிக்கிறது. கைசிக நாடகத்தின் ஆவணப்படுத்தல் மற்றும் விமர்சன ஆய்வின் மூலம், மறைந்துவரும் ஒரு பாரம்பரியத்தை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், பக்தி, கலை, சமூக உரையாடல் ஆகியவற்றை ஒருங்கே வெளிப்படுத்தும் மேடையாக கோவில்சார் நாடகம் எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் இக்கட்டுரை விளக்குகிறது.

திறவுச்சொற்கள்: கைசிக நாடகம், கோவில்சார் நாடகம், இசை நாடகம், திருக்குறுங்குடி, கைசிக புராணம், மீட்டுருவாக்கம், தமிழ் நாடக மரபு

முன்னுரை;

நிகழ்த்துதல்கள் 'போலச்செய்தல்' மூலம் சடங்கு சார்ந்தவையாக உருவாகி தற்போது சடங்கார்ந்த வெளிகளில் இருந்து நீங்கி பொதுவெளியிலும் இயக்கம் கொண்டுள்ளன. அதற்கான காரணம் சடங்குகள் 'கலை' எனும் அழகியல் வடிவங்களாக அறியப்பட்டதும் பொருளாதாரத் தேவை கருதியுமாகும். சடங்கு சார்ந்த நிகழ்த்துதல்களாக (ritual performance) இன்றும் தொடரும் நாடகங்கள் முக்கியமானவை. நாட்டாரிய கோயில் சார்ந்த நிகழ்த்துதல்கள் / நாடகங்கள், தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, பாவைக்கூத்து உள்ளிட்டு பலவும் உள்ளன. வைதீக கோயில் சார்ந்து நிகழ்த்தப்படும் நாடகங்களில் முக்கியமானது 'கைசிக நாடகம்' ஆகும். இக்கட்டுரை திருநெல்வேலி மாவட்டம் திருக்குறுங்குடி என்னும் ஊரிலுள்ள நம்பிக் கோவிலில் மட்டும் நிகழ்த்தப்படும் கைசிக நாடகம் என்னும் இசை நாடகப் பிரதியை முன்வைத்ததாகும். இணைய தளங்களில் வெளிவந்துள்ள பிற கட்டுரைகள் இந்நாடகத்தை அறிமுகம் செய்யும் நோக்கில் வெளிவந்திருக்க, இவ்வாய்வுக் கட்டுரை அவற்றிலிருந்து வேறுபட்டு கைசிக நாடக நிகழ்த்துப் பிரதியை ஆவணப்படுத்தவும் சமூக நோக்கில் காணவும் முற்படுகிறது.

நிகழ்த்துதல் வகைப்பாடு

தனித்தனியான மனிதர்கள் சமூகத்துடன் தம்மை இணைத்துக் கொள்வது என்பது சடங்குகள் மற்றும் கலைகள் போன்ற நிகழ்த்துதல்களின் வழியாகத்தான். இக்கருத்தை ஆய்வாளர் பேராசிரியர். சுந்தர்காளி அவர்கள் “ஒன்றிப்புடைய சமூகங்கள்”, “ஒன்றிப்பில்லா சமூகங்கள்” என்று வகைப்படுத்துகிறார்.[1] சமூகங்கள் தம்மை உறுதி செய்து கொள்வதற்கு, ஒன்றிணைத்துக் கொள்வதற்கு நிகழ்த்துதல்களை மீண்டும் மீண்டும் செய்கின்றன. அந்த வகையில் நிகழ்த்துதல்களை நாம் பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

1. பேச்சு உள்ளிட்ட அன்றாட நடவடிக்கைகள்
2. சடங்குகள்
   i. வாழ்க்கை வட்ட சடங்குகள்
   ii. கோவில் சார் சடங்குகள்
3. கலைகள்
   i. கோவில் சார்ந்தவை
   ii. பிற

இந்த வகைப்பாட்டில் கோவில் சார் நிகழ்த்துக்கலைகளின் சமூக அறிதல் குறைவு. “கோவில்” எனும் அமைப்பு வளர்த்தெடுக்கும் பண்பாட்டுக் கூறுகளுள் கலை பெரும்பங்கு வகிக்கிறது.

கோவில்சார் நிகழ்த்துதல்

கோவில்சார் நிகழ்த்துதல் என்பதனுள் அர்ச்சகர்கள் செய்யக்கூடிய அனுட்டானங்கள், வழிபாட்டு முறைகள், தெய்வ ஊர்வலம், சடங்குகளான திருக்கல்யாண வைபவம், அசுரன் வதைக்காட்சி, ஊஞ்சல் வைபவம், புராண இதிகாச கதைகளின் காட்சியை மீளச்செய்தல் போல்வன அடங்குகின்றன. இவையாவும் பார்வையாளர்களை எதிர்பாராமல் குறிப்பிட்ட நாட்களில் மீள் நடைபெறுவதாக அமைகின்றன. கோலாட்டம், கும்மியாட்டம், இசைக்கச்சேரிகள், நாட்டியங்கள், அரையர் சேவை போல்ன கோவில்சார் நிகழ்த்துக்கலைகள். இவை பார்வையாளர்களை உள்ளடக்கியே இருக்கின்றன. வைதீகக் கோவில் சார்ந்த கலைகளில் கதைக்கூறு/ தலவரலாற்றுக் கூறு நாடக வடிவமாக நிகழ்த்தப்படுவன சில உண்டு. அவற்றில் முக்கியமானது கைசிகப் புராணம். கைசிகப் புராணத்தின் நிகழ்த்துப்பிரதியின் அடிப்படையைப் பின்வருமாறு அறிமுகம் செய்யலாம்.

கைசிகப் புராணம்

புராணங்களில் திருமாலின் மூன்றாவது அவதாரமாகக் கருதப்படும் வராக அவதாரத்தைக் கூறும் வராகப் புராணத்தின் 48 – ஆவது அத்தியாயம் கைசிகப் புராணம் ஆகும். வராக புராணத்தில் திருமால் பிரம்மனது நாசித்துவாரத்திலிருந்து கட்டைவிரல் அளவுள்ள பன்றியாக வெளிவந்து பின்னர் மிகப்பெரிய மலை போன்ற பன்றி உருக்கொண்டு கடல் நீரைப் பிளந்து பாதாளம் சென்று தன் பற்களால் பூமியை (பூமாதேவியை) எடுக்க முயன்ற தொன்மம் இடம்பெறுகின்றது. மீட்டெடுக்கப்பட்ட பூமாதேவி திருமாலிடம் சில கேள்விகள் கேட்க, அதற்கு அவர் பதில் சொல்வதாக இருவர் உரையாடலின் தொகுப்பே வராக புராணம் ஆகும். இதில் பாவங்கள், பாவங்களுக்கான பரிகாரங்கள் கூறப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியான கைசிக புராணம், கைசிகப் பண் பாடி பேறு பெறுதல் பற்றியும் தாழ்த்தப்பட்ட ஒருவன் உயர்சாதியென கருத்தப்படும் பிராமணனுக்கு முக்தி அளித்தல் பற்றியும் தொன்மம் கொண்டுள்ளது என வடமொழியில் அமைந்திருக்கும் இப்புராணத்திற்கு தமிழில் வியாக்கியானம் (உரை) செய்த பராசர பட்டர் குறிப்பிடுகின்றார். இவர் தன் உரையை "கைசிக மஹாத்மியம்" என்றே குறிப்பிடுகின்றார். இராமானுஜரால் ஆச்சாரியாக்கப்பட்ட இவரது காலம் கிபி பன்னிரண்டாம் நூற்றாண்டாகும். இவ்வியாக்கியானத்தை அமெரிக்க ஆய்வாளர் வெல்பன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். பராசர முனிவரின் வியாக்கியானத்துடன் கூடிய கைசிகப்புராணம் பெரும்பாலான வைணவக் கோவில்களில் கார்த்திகை மாதம் வளர்பிறை ஏகாதசியன்று இன்றளவும் பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. இதனைப் பாராயணம் செய்வோருக்கு மரியாதை செய்யும் பொருட்டு "பிரம்ம ரதம்" ஏற்றுதல் மரபு (தற்போது வழக்கில் இல்லை). இப்புராணக் கதை ஒரே ஒரு இடத்தில் மட்டும் மரபு வழியாகவே நாடகமாக நிகழ்த்தப்பட்டு வருகிறது.

கைசிக நாடகம்

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரிக்கு 10Km தொலைவிலுள்ள திருக்குறுங்குடி என்ற திருத்தலத்தில் கைசிக நாடகம் ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் வளர்பிறை ஏகாதசியில் இரவு முழுவதும் நடைபெறுகின்றது. கைசிகப்புராணம் நடைபெற்ற இடமாக இத்திருக்குறுங்குடி நம்பப்படுவதனால் இங்கு மட்டும் விமரிசையாக நாடகம் நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. மேற்குறிப்பிட்டபடி கைசிகப்புராணத்தைப் பிற கோவில்களில் பாராயணம் செய்யும் பொழுது, நம்மாழ்வார் மற்றும் திருமங்கை ஆழ்வார் திருக்குறுங்குடி தலம் பற்றி பாடிய பாடல்களைப் பாடி நிறைவு செய்வது வழக்கம். மேலும் வராகபுராணம் வடமொழியில் "வைஷ்ணவ வாமனம்" (அ) "வாமன

ஷேத்திரம்" என்று புராணம் நடந்த இடத்தைக் குறிக்கின்றது. திருக்குறுங்குடி பெயர் காரணமானது, குறுங் → குறுமை → குறுகிய , குறுகிய வடிவம் கொண்ட பெருமாள். இது வாமன உருவத்தைக் குறிப்பதாக அமைகின்றது. எனவே மேற்சொன்ன சான்றுகள் கைசிகப்புராணம் நடந்தேறிய தலம் திருக்குறுங்குடியென வலுச்சேர்க்கின்றன. வைணவ மரபினர் இவ்வாறே நம்பிக்கையும் கொள்கின்றனர்.

கைசிக விரதம் என்பது கார்த்திகை திங்கள் சுக்லபட்ச ஏகாதசியன்று தொடங்கி மறுநாள் துவாதசியில் முடிவு பெறுகிறது. இரவு விரதம் இருந்து கைசிகப்புராணத்தை வாசிப்பதும் கேட்பதும் புண்ணியம் என்ற நம்பிக்கை நிலையில், திருக்குறுங்குடி கோவிலில் மக்கள் இதனை நாடகமாய்ப் பார்த்தல் நன்மை பயக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. கைசிக நாடகத்தை கிபி 15ஆம் நூற்றாண்டிலிருந்தே தேவதாசி மரபினர் நிகழ்த்தி வந்துள்ளனர். இராட்சதன் தவிர பெண்களால் மட்டுமே அனைத்து கதாபாத்திரங்களும் நடிக்கப்பட்டு வந்தன. பிற்காலத்தில் தேவதாசி ஒழிப்புச் சட்டம் வந்த பிறகும் கோவில் கைங்கரியம் என்ற நிலையில் இக்கலையானது எழுவது வயதையும் கடந்த காந்தம்மாள், குறுங்குடி அம்மாள், நம்பி ஆகிய தேவதாசி பெரியோர்களாலும் சங்கரக் கம்பர், நாராயணக் கம்பர் ஆகிய நட்டுவனார்களாலும் மிகவும் நலிந்த நிலையில் நடத்தப்பட்டு வந்தது. புண்ணியம் கிட்டும் என்ற நம்பிக்கையில் வெகு சில வயதான பார்வையாளர்கள் மட்டுமே பங்கேற்றனர். இவ்வாறாக கைசிக நாடகம் மீட்டுருவாக்கத்திற்கு முன்பிருந்த நிலையை அவ்வூரின் மக்கள் மூலம் தெரிந்து கொண்டதாக மீட்டுருவாக்கக் குழுவினர் குறிப்பிடுகின்றனர்.

நாடக மீட்டுருவாக்கம்

நலிந்த இம்மரபை மீட்டெடுத்த பெருமை பேராசிரியர் இராமானுஜம், நாட்டியக் கலைஞர் அனிதா ரத்னம் ஆகியோரைச் சாரும். பேராசிரியர் இராமானுஜம் "நவீன நாடகத்தின் பிதாமகன்" என்று அழைக்கப்படுகிறார். இவர் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நாடகத் துறை பணியிலிருந்து ஓய்வு பெற்றவர். அனிதா ரத்னம் அவர்கள் திருக்குறுங்குடியைச் சொந்த ஊராகக் கொண்டவர். உலக அரங்கியல் கற்றவர். ஏறத்தாழ ஒன்றரை வருடமாக பேராசிரியர் இராமானுஜம் நெல்லை மாவட்டத்தில் பலரைச் சந்தித்து, திருக்குறுங்குடி ஜீயர் மடத்திலிருந்து ஓலைச்சுவடியை ஏட்டுப்பிரதியாக நகல் எடுத்துத் திரும்பத் தருவதாக வாக்களித்துப் பெற்றுள்ளார். ஓலை தந்து உதவியவர் திரு நாராயண ஐயங்கார் ஆவார். பெறப்பட்ட ஓலைச்சுவடியை திரு சுந்தரராஜ ஐயங்கார் எவ்வித மாற்றமோ பிழை திருத்தங்களோ இன்றி கையெழுத்துப் படிவமாக்கித் தந்துள்ளார். பின்பு ஆழ்வார் திருநகரி ஊ.வே. ஆத்தாளூ அப்புச்சடகோப ஐயங்கார் சுவாமிகள், குறுங்குடி ஊ. வே. திருநாராயண ஐயங்கார், திருமதி. ஸ்ரீனிவாசப் பெருமகனார் ஆகியோர் பிழை திருத்தங்களுடன் வடிவம் பெற உதவியுள்ளனர். மேலும் நிகழ்த்துதல் பனுவலை தஞ்சை மரபுவழி நட்டுவனார் ஹேரம்பநாதனுடன் உருவாக்கும் பணியில் பெரிதும் உதவியவர் காந்திகிராமம் ம. வேலுசாமி ஆவார். இசை வடிவம் கொடுக்க தஞ்சை வீணை வித்துவான் இராமதாஸ், மரபிற்கிசைந்த ராகங்களில் அமைக்க ம. வைத்தியலிங்கம், அரிமளம் பத்மநாபன் ஆகியோரும், கு. முருகேசன், இராஜமாணிக்கம், விஜயகுமார் ஆகியோரும் உதவி புரிந்துள்ளனர். ஓலைச்சுவடி பெறப்பட்ட 1999 ஆம் ஆண்டு திரு. ஹேரம்பநாதன் தன் சிஷ்யர்களைக் கொண்டு மீட்டுருவாக்க அரங்கேற்றம் செய்துள்ளார். இது மரபு ரீதியான வடிவமாக அமைந்திருந்தது. ஆனால் "இசை, இயல் வல்லுனர்கள் வைத்தியலிங்கத்தையும் அரிமளம் பத்மநாபனையும் கொண்டு பேராசிரியர் (இராமானுஜம்) நடத்திய இசையமைப்பு ஆய்வுகளும் உ.வே. திருநாராயண ஐயங்காரின் நாடகத்தின் உட்பொருளான வைணவத் தத்துவ விளக்கங்களும், கைசிக நாடகக் கலைஞர்களுக்கு நாங்கள் நடத்திய சுய புலப்பாட்டுப் பட்டறைகளும் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே கைசிக

நாடகத்திற்கென்ற பாரம்பரியத்தின் மீட்சி என்னும் முழுமையான சாயலைத் தந்துள்ளன”[2] என அனிதா ரத்னம் அவர்கள் குறிப்பிடுகின்றார். தற்போது இந்நாடகம் இவர்கள் இருவரின் இயக்கத்தில் 40 நாடகக் கலைஞர்களைக் கொண்டு புராணப் பழமை மாறாமல், வசன நடையும் மாறாமல் சிறப்பாக நடைபெறுகிறது.

கதைச் சுருக்கம்

ஏகாதசியன்று விரதம் மேற்கொண்டு நம்பி அழகியப் பெருமாளை வழிபடச் செல்லும் பாணர் குலத்தைச் சார்ந்த மாதங்கன் என்ற பக்தன் இராட்சதனால் வழிமறிக்கப்படுகிறான். இராட்சதன் தன் தீராப் பசியை பாகவதன் மூலம் போக்கிக் கொள்ள விரும்புகிறான். பாகவதன் தான் பெருமாளை வழிபட்டு விட்டு வந்து இராட்சதனுக்கு இரையாகிறேன் என வாக்களிக்கிறான். இதனை நம்பாத இராட்சதனுக்குப் பல்வேறு பாவங்களையும் அதனால் வரும் தோசங்களையும் தான் பெற்றுக்கொள்வதாக சத்தியம் செய்கிறான். ஒருவழியாக இராட்சதன் இதனை ஏற்க, பாகவதன் கைசிகப் பண் பாடி நம்பி அழகியப் பெருமாளை வழிபட்டு வருகிறான். வரும் வழியில் பெருமாளே ஒரு பிராமண நம்பிக்கிழவனாக வந்து, இராட்சதனிடமிருந்து தப்பித்து வேறு வழியில் செல்லுமாறு ஆலோசனை சொல்கிறார். ஆனால் தான் செய்த சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று மனம் மாறாமல் பாகவதன் சொல்கிறான். அதனைக் கண்டு மெச்சி “உன்னைக் கண்ட மாத்திரத்தில் அந்த ப்ரம்மராட்சசனின் கோபதாபம் தணியும்” என நம்பிக்கிழவர் வரம் கொடுக்கிறார். மீண்டும் வந்தவனைக் கண்டு இராட்சதன் அவ்வரத்தின் பயனால் மனம்மாறி தான் அவனைக் கொல்ல மாட்டேன் எனவும், நம்பியைப் பண்ணால் பாடிய பலனை மட்டும் தரவேண்டுமெனவும் மன்றாடுகிறான். பாகவதன் அதற்கு மறுப்பு தெரிவிக்கின்றான். இராட்சதன் "தான் ஒரு பிராமணனாகப் பிறந்து, தவறான மந்திரம் சொன்ன பாவத்தினால் இவ்வுரு கொண்ட நிலையை எடுத்துக் கூறுகிறான். பாகவதன் பின்பு கைசிக பண்ணில் நம்பியைப் பாடிய பாடலின் பலனில் நான்கில் ஒரு பங்கினை இராட்சதனுக்கு அளித்து மோட்சம் பெறச் செய்கிறான்.

“கைசிகம்” – பெயர்க் காரணம்

கைசிக நாடகத்தில் பாவங்கள், தோசங்கள், சத்தியத்தின் முக்கியத்துவம் போன்ற முக்கியக் கூறுகள் இடம்பெற்றிருந்தாலும், இத்தொன்மத்தின் சிறப்பு கானம் பாடி பேறு பெறுதலாகும். கைசிகப்பண் பாடி மோட்சம் பெற்றதனால் இப்பண் சிறப்பு வாய்ந்ததாகிறது. பராசரப் பட்டரின் வியாக்கியானத்திலும் இதன் சிறப்புகள் இடம்பெறுகின்றன. அன்பை வெளிக்கொணரும் பண் இது. நல்லதொரு அதிர்வலையைத் தரவல்லதென நம்பப்படுகிறது. இப்பண் தற்கால பைரவி இராகத்திற்கு ஈடானது. இதில் ஸட்ஜம் (ஸ), சதுஸ்ருதி ரிஷபம் (ரி2), சாதாரண காந்தாரம் (க1), சுத்த மத்தியமம் (ம1), பஞ்சமம் (ப), சுத்த தைவதம் (த1), காகலி நிஷாதம் (நி2) போன்ற சுரங்கள் இடம்பெறுகின்றன. பண்டைய காலத்தில் இது 'கௌசிகம்' என அழைக்கப்பட்டுள்ளது. மருத யாழ்த்திறன் நான்கின் ஜாதியில் கௌசிகம் இடம்பெறுகிறது. ஞானசம்பந்தர் மூன்றாம் திருமுறையிலும், சுந்தரரின் ஏழாம் திருமுறையிலும், நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் ஐந்தாம் பத்திலும் இப்பண் இடம் பெறுகிறது

நாடகப் பிரதி அமைப்பு

இந்நாடகமானது 2014 -ல் காலச்சுவடு பதிப்பகம் & அரங்கம் அறக்கட்டளையின் மூலம் முதற்பதிப்பாக வெளிவந்துள்ளது. இதற்கு திருக்குறுங்குடி ஸ்ரீ ஸ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர் சுவாமிகள் & ஸ்ரீமத் பரமஹம்ச ஸ்ரீகலியன் வானமாமலை ராமானுஜ ஜுயர் சுவாமிகள் ஆசியுரைகள் வழங்கி உள்ளனர். இந்நூலின் தாளாளர் அனிதா ரத்னம் அவர்கள் “சமர்ப்பணம்” என்ற தலைப்பில் தன்

உரையையும், இந்நூலின் பதிப்பாசிரியர் பேராசிரியர். சே. இராமானுஜம் அவர்கள் "திருக்கோவில் திருவரங்கப் பனுவல்" என்ற தலைப்பில் தன் உரையையும் வழங்கியுள்ளார். பின் திருக்குறுங்குடி கைசிக நாடகத்தைத் தொடர்ந்து பின்னிணைப்புகளாகக் "கோவில் கைங்கரியப் பாடல்கள்", "சோபனப் பாட்டுக்கள்", "கும்மிப் பாட்டு", "ஊஞ்சல் பாட்டுக்கள்" ஆகியவை இடம்பெறுகின்றன. மேலும் நாடகப் படங்கள், ஓலைச்சுவடி படங்கள் சில இடம்பெறுகின்றன. பாகவதன் பெருமாளைப் போற்றும் பாடல்களில் இராமாயணம், அவதாரப் புராணங்கள் என வைணவக் கதைகள் அதிகம் இடம்பெறுகின்றன. இப்பிரதியானது சிந்து, கலித்துறை, வெண்பா கலிப்பா என்று இலக்கண அமைதி கொண்ட செய்யுட்களாக அமைந்துள்ளது. செய்யுளுக்குக் கீழே இடம்பெறும் வசனங்கள் அவற்றிற்கு உரை போல் எளிய நடையில் விவரிக்கின்றன.

கூத்தின் கூறுகள்

கைசிக நாடகத்தில் (மீட்டுருவாக்கத்திற்கு முன்பு) நலிந்த நிலையில் 'சூத்திரதாரி' போன்ற கதாபாத்திரம் மேடையில் நின்று வசனங்களைப் பிற கதாபாத்திரங்களுக்கு எடுத்துக் கொடுக்கும் பணியைச் செய்திருக்கிறது. இங்கு நினைவுபடுத்துதல் என்ற அரங்க மரபு கையாளப்படுகிறது. பேராசிரியர் இராமானுஜம் அவர்கள் இதனை,

செவ்வியல் கலை வடிவம் எனக் கூறக் காரணங்கள்

- இதன் இலக்கண அமைதியாகும்
- கைசிகம் என்னும் பண்ணின் பெயர்
- இராகங்களின் பெயர்கள் கூறப்படுதல்

"நம்பியை மலஹரி, காந்தாரம், துரையா நாட்டை, தன்யாசி, கொல்லி, சுத்தம் வசந்தா, முதலாகக் கரையாக்கீதம் பல பாடி கைசிகமும் நான் பாடினனே"[3] என்று பாகவதன் கூறல்.

- நட்டுவனார் நாதஸ்வர இசைக் கலைஞராக இருத்தல்
- தேவதாசிப் பெண்கள் நடன மாதர்களாக இருந்து சதிர் கலையுடன் அரங்கேற்றுதல். [5]

நாட்டார் கலை எனக் கூறக் காரணங்கள்

- **இராட்சதனின் முகமூடி-** "இராட்சதனின் முகத்தைக் காட்டும் முகப்போலி உட்பிரகார மண்டபம் ஒன்றில் பத்து நாட்களாக பூஜைக்கு வைக்கப்பட்டு அதை அணிந்து ஆவேசமுற்று கைசிக நாடக மண்டபத்திற்கு முன் உள்ள திருவோலக்க மண்டபம் சென்று பெருமாளின் தீர்த்தம் வாங்கி சாந்தமுற்று ஆடிவரும் பாத்திரப்பிரவேசம் பரபரப்பூட்டுவதாகவும், அமானுஷ்யப் பாத்திரம் தோன்றுவதாகவும் இருந்தது"[4] என அனிதா ரத்னம் குறிப்பிடுகிறார்.
- வசனங்களில் "கேளும் பிள்ளாய்", "சொல்லும் பிள்ளாய்", போன்ற பாத்திரங்களின் தன் நிலை முன்னிலைப்படுத்தும் விளித்தொடர்கள்
- வட்டாரப் பேச்சு வழக்குகள் (எ.கா) உண்டாயிருக்குது, ஆரடா, ஏடா[6]

சமூக நோக்கில் கைசிக நாடகம்

- சண்டாள குலத்தைச் (ஐந்தாம் வருணம்) சார்ந்த ஒருவன் முதல் வருணத்தாரான பிராமணருக்கு, அவர் செய்த தவறினால் கிடைக்கப்பெற்ற பாவத்தைப் போக்கும் நிலைக்கு உயர்த்தப்படுகின்றான். இது போன்ற அமைப்பு கொண்ட தொன்மங்கள் அதிகம் இருக்கின்றன.

tamilmanam

எடுத்துக்காட்டாக, சிவபெருமான் சண்டாள குளத்தில் தோன்றி ஆதிசங்கரருக்கு ஞானம் வழங்கிய செய்தி உள்ளது. இது போன்ற கதைகள் கடவுளின் மெய்யடியான் எக்குலத்தில் பிறப்பினும் உயர்ந்தவனே என்ற சிந்தனையை வளர்ப்பதற்காகப் பரவலாக பிறந்திருக்கலாம்.

- சாதியப் பொதுப்புத்தி என்பது "இவர்கள் இப்படித்தான்" என்று குல அடிப்படையில் எழும் ஒரே மாதிரியான எண்ணமாகும். இந்நாடகப் பிரதியிலும் இராட்சதன் பாகவதனின் சத்தியங்களைக் கேட்டு, "நீ சொல்கிற வார்த்தை உன் சாதிக்கு ஈடாக இருந்தது" என்கிறான். பதிலாக பாகவதன் "என் சாதி இதுவாக ஆனாலும் நான் பொய் சொல்கிறவன் அல்ல"[7] என்று சாதியப் பொதுப்புத்தியை மறுக்காமல் தன் குணத்தை மட்டுமே முன் வைக்கிறான். எனவே அக்காலத்தில் சாதியப் பொதுப்புத்தி என்பது மிகச் சாதாரணமாக, வெளிப்படையாகவே இருந்துள்ளதை உணரலாம்.
- நம்பிக்கிழவர் பாகவதனிடம், "யார்" என வினவவே பாகவதன் "அடியேன்" என பதிலளிக்கிறார். உடனே நம்பிக்கிழவர் "அடிக்கிறதையும் பிடிக்கிறதையும் விட்டுப் போட்டு உன் பேரைச் சொல்லும் பிள்ளை"[8] எனக் கூறுமிடத்தில் 'அடிமை' என்ற கருத்தாடல் தகர்க்கப்படுகிறது. நம்பிக்கிழவர் பெருமாளின் அம்சமாக அங்கு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.
- ஓர் இக்கட்டான சூழலில் ஒருவரிடம் அகப்படும் போது தனது வேலை ஒன்றை முடித்துவிட்டு, மீண்டும் அகப்படுகிறேன் எனச் சொல்லுதல் சில கதைகளில் பொதுவாக இடம் பெறுகிறது. நம்பியைச் சேவித்து மீண்டும் உன் இரையாக வருவேன் என்று இராட்சதனிடம் கூறும் பாகவதனும் நாட்டார் கதைகளில் புலியிடம் சிக்கிய பசு தன் கன்றுக்குப் பாலூட்டி வருவதாகக் கூறுதலும் ஒப்புநோக்கத்தக்கன. இறக்கும் தருவாயிலும் தன் கடமைகளைச் செய்ய உணர்த்தும் கதைகளாக இவற்றைக் காணலாம்.
- பாகவதன் இராட்சதனிடம் தான் மீண்டும் வராவிட்டால் 10 பாவங்கள் கூறி அவற்றை அவன் பெற்றுக்கொள்வதாகக் கூறுகிறான். ஆனால் அவற்றினால் மனம் மாறாத இராட்சதன் 11வது பாவமாகிய "நாயகன் ஆன ஸ்ரீமத் நாராயணனையும் அவராலே சிருஷ்டிக்கப்பட்ட எதிர் எதிர் தேவதைகளையும் இப்படி சமனாக புத்தி பண்ணுகிறான் எவனொருவனே, அவனுக்கு ஒரு பாவமுண்டே? அவன் பாவத்தை நான் அடைந்து, அவனைப் போல நித்திய சம்சாரி ஆகக் கடவேன்."[9] என்பதை பாகவதன் கூறியவுடன் இராட்சதன் மனம் மாறுவதாகக் கூறப்படுகிறது. வேறு கடவுளைத் துதிப்பது அல்லது பிரதான வழிபடு கடவுளுக்கு நிகராக வேறொன்றை வைத்துப் பார்ப்பது என்பது மற்ற சில சமயங்களிலும் பெரும் பாவமாகப் பார்க்கப்படுகிறது. இங்கும் இராட்சதன் நம்பாடுவானுக்கு அந்தப் பாவம் வர வேண்டாம் என அச்சம் கொள்ளும் அளவிற்கு அப்பாவத்தின் வீரியம் கூறப்பட்டுள்ளது. ஆக, இதன் சமயப் பிரச்சாரத் தன்மை கருத்தில் கொள்ளத்தக்கது.
- கைசிக நாடக மீட்டுருவாக்க நிகழ்ச்சியை பேரா. இராமானுஜம் உட்பட பிற அறிஞர்கள் 'பெரும் முயற்சி என்றும் கதை அமைப்பில் புரட்சிகரமானது' என்றும் குறிப்பிடுகின்றனர். இருப்பினும் ஆய்வாளர் டி. தர்மராஜ் இதனை அவ்வாறு ஏற்கவில்லை, 'உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற

புரிதல் \ ஏற்பு இருப்போர்க்குத்தான் இந்த நாடகம் ஒரு சாதிய புரட்சியாக இருக்குமென்றும் இந்த நாடக மீட்டுருவாக்கம் ஒரு தற்செயல் இல்லை மாறாக இது ஒரு சாதியத் திரட்சியை, பழைய ஆதிக்க சதியை நவீன போர்வையில் செய்யும் நிகழ்வே'[10] என்றும் பதிவிடுகிறார்.

முடிவுரை

பிற வைணவக் கோவில்களில் பாராயணத்தோடு நிற்பதற்கும் திருக்குறுங்குடியில் மட்டுமே இக்கலை விமரிசையாக நிகழ்த்தப்படுவதற்கும் காரணம் இதன் தல வரலாறே ஆகும். இக்கலையைப் புதுப்பித்தல் (revival) என்பதைக் கடந்து முழுவதுமாக மறு கட்டமைப்பு (reconstruction) செய்ததே தம் பணி என பேரா. இராமானுஜம் குறிப்பிடுகையில் இதன் மீட்டுருவாக்க ஆழம் தெரியவருகிறது. மிக நலிந்த நிலையிலிருந்த ஒரு கலையை வெறும் நிகழ்த்துதல் வடிவமாக மீட்டுருவாக்கம் செய்ததோடு நிறுத்தாமல் இதனை நிகழ்த்துதல் பிரதியாக வெளியிட்டுள்ளமை என்பது இதன் நிலைப்புத்தன்மைக்கும் முன்னகர்வுக்கும் வித்திடும் தக்க செயலாகும். நிகழ்த்துதலை அச்சுப் பிரதியாக வெளியிடுதல் என்பது ஆவணப்படுத்துதலில் வலுச்சேர்க்கும் ஒரு புள்ளியாக அமைகின்றது.

இதன் மீட்டுருவாக்கப் பணி நிகழ்த்துதல் கலை சார்ந்து பார்க்கையில் பெறும் கலைத்தொண்டாக அறிஞர்களால் பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில் உள்ளடக்கம் மற்றும் நிகழ்த்துதல் வெளி சார்ந்தும் இந்நாடகம் சமூக புரட்சி கொண்டதாகப் பார்க்கப்படுகிறது. இருப்பினும் இது மீண்டும் ஆதிக்க நிலைக்கும் அதன் ஏற்பு மனப்பான்மைக்கும் மனிதனைத் தள்ளுகிறது என்ற எதிர்பார்வையும் ஆய்வாளரிடையே காணப்படுகிறது.

கோவில்களில் கடவுளுக்குச் செய்யும் கைங்கரியங்களுள் ஒன்றாகக் கலையும் விளங்குகிறது. மந்திரங்களில் "நாட்டியம் சமர்ப்பயாமி" என்பதும் "இசையால் இறைவனை அடைதல்" என்பதும் இதற்கு வலுச்சேர்க்கின்றன. இக்கைசிக புராணத்திலும் பிறவித் துயரிலிருந்து ஈடேற இசைத்தொண்டே வழி என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. வராக புராணத்தின் ஒரு பகுதியான கைசிக புராணம் தமிழில் வ்யாக்கியானம் செய்யப்பட்டு பின் நாடகமாக மாற்றம் பெறும் பயணத்தில் பல்வேறு மாறுதல்களுக்கும் இடைச்செருகலுக்கும் உட்படுத்தப்பட்டிருக்கலாம். இவற்றை ஒப்பிடுதலும் நாடக நிகழ்த்துதல் சார்ந்த கள ஆய்வும் கைசிக நாடக ஆய்வு நீட்சியாக அமைவனவாகும்.

சான்றெண் குறிப்புகள்

1. சுந்தர் காளி, திருமுகமும் சுயமுகமும், மதுரை காரோன் - நீரோன் பதிப்பகம், 2005
2. இராமானுஜம். சே (பதிப்பாசிரியர்), திருக்குறுங்குடி நம்பிராயர் திருக்கோவில் கைசிக நாடகம் ஓலைச்சுவடி நகல். ப – 20
3. மேலது, ப - 63
4. மேலது, ப – 18
5. மேலது, ப – 24
6. மேலது, ப – 25
7. இராமானுஜம். சே (பதிப்பாசிரியர்), திருக்குறுங்குடி நம்பிராயர் திருக்கோவில் கைசிக நாடகம் ஓலைச்சுவடி நகல். ப – 35

8. மேலது, ப – 56
9. மேலது, ப – 43
10. கட்டுரை - திராவிட காலத்தில் பிராமணர்களுக்கு சாபவிமோசனம் உண்டா?, டி. தருமராஜ்

பார்வைகள்

நூல்கள்

1. இராமானுஜம். சே (பதிப்பாசிரியர்), திருக்குறுங்குடி நம்பிராயர் திருக்கோவில் கைசிக நாடகம் ஓலைச்சுவடி நகல், காலச்சுவடு பதிப்பகம், முதற்பதிப்பு, மார்ச் 2014
2. சுந்தர் காளி, திருமுகமும் சுயமுகமும் - பண்பாட்டாய்வுக் கட்டுரைகள், மதுரை காரோன் - நீரோன் பதிப்பகம், 2005
3. பக்கிரிசாமி பாரதி. கே ஏ – இந்திய இசைக் கருவூலம், குலேசர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஆகஸ்ட் 2002
4. வராஹபுராணத்தின் உள்ளீடான கைசிக புராணம், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம், 1955

கட்டுரைகள்

1. திராவிட காலத்தில் பிராமணர்களுக்கு சாபவிமோசனம் உண்டா? ,டி. தருமராஜ் – https://tdharumaraj.blogspot.com/2014/12/blog-post_9.html
2. நவீன நாடக கைசிக புராணம், இ.முகுந்தன், கீற்று – https://www.keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-sep12/21369-2012-09-27-18-05-18
3. கைசிக புராண நாடகம், சுதாகர் கஸ்தூரி, ஸ்னாப்ஜட்ஜ் – https://snapjudge.blog/2009/05/25/கைசிக-புராண-நாடகம்/
4. நேர்காணல் -சே. இராமனுஜம், லலிதா வெங்கட், நர்த்தகி – https://www.narthaki.com/info/intervw/intrvw35.html

இதழ்கள்

5. வெளி ரெங்கராஜன், கட்டுரை – கைசிக நாடகப் பெண் கலைஞர்கள், குங்குமம் தீராநதி, அக்டோபர் 2013

இணையதளங்கள்

1. இந்து தமிழ்திசை - https://www.hindutamil.in/news/opinion/columns/25656-.html
2. தமிழ் விக்கி- https://tamil.wiki/wiki/கைசிக_புராண_நாடகம்#cite_ref-5
3. தினமலர் – https://temple.dinamalar.com/margazhi/detail.php?id=109331
4. ஸ்ரீமங்கை – https://srimangai.blogspot.com/2013/10/blog-post_1.html

References

1. Ramanujam. S (publisher), Thirukkurungudi nambiraayar thirukovil kaisiga naadagam Olaichuvadi nagal, Kalachuvadu pathippagam, First edition, March 2014
2. Pakkirisaami Bharathi. K A, Indhiya isai karuvoolam, Kulesar pathippagam, Chennai, First edition, August 2002
3. Varahapuranaththin ulleedaana kaisiga puranam, Granthamala office, Kanchipuram, 1955

Articles

1. Dravida kaalathil braamanargalukku saabavimosanam undaa?, D. Dharmaraj - https://tdharumaraj.blogspot.com/2014/12/blog-post_9.html
2. Naveena naadaga kaisiga puraanam, I. Mukunthan, Keetru - https://www.keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-sep12/21369-2012-09-27-18-05-18
3. Kaisiga purana nadagam. Sudhakar Kasthuri, Snapjudge - https://snapjudge.blog/2009/05/25/கைசிக-புராண-நாடகம்/
4. Interview – Ramanujam. S, Lalitha Venkat, Narthaki – https://www.narthaki.com/info/intervw/intrvw35.html

Journals

5. Veli Rangarajan, article – Kaisiga naadaga pen kalaingarkal, Kungumam Theeraanathi, October 2015

Websites

1. Hindu tamithisai - - https://www.hindutamil.in/news/opinion/columns/25656-.html
2. Tamil wikki - https://tamil.wiki/wiki/கைசிக_புராண_நாடகம்#cite_ref-5
3. Dinamalar - https://temple.dinamalar.com/margazhi/detail.php?id=109331
4. Srimangai - https://srimangai.blogspot.com/2013/10/blog-post_1.html

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

பழந்தமிழ் மக்களின் அகவாழ்க்கை விழுமியங்கள்

Inner values of the ancient Tamil people

சௌ.கௌரி[1], முனைவர்.ம.அருள்தாஸ்[2],

[1]முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,

பூம்புகார்க் கல்லூரி (தன்னாட்சி), மேலையூர் 609 107, மயிலாடுதுறை (மாவட்டம்)

Email: gowri23412@gmail.com, ORCiD:

[2]இணைப்பேராசிரியர் & ஆய்வுநெறியாளர்

தமிழாய்வுத்துறை, பூம்புகார்க் கல்லூரி (தன்னாட்சி), மேலையூர் 609 107, மயிலாடுதுறை (மாவட்டம்)

Email: draruldoss2007@gmail.com

[1] **S. Gowri.** P.hd Reearch Scholar (Full time), Depatment of Tamil, Poompuhar College (Autonomous), Melaiyur, 609 107.

[2] **Dr.M. Aruldoss,** Associate Proessor & Reearch Guide, Department of Tamil, Poompuhar College (Autonomous), Melaiyur - 609 107

Abstract:

The inner life values of the ancient Tamil people are the high qualities that are manifested in their family life, love, friendship and other personal relationships. This includes many desires such as truthfulness, honesty, gratitude, respect for elders, morality, hospitality and public welfare. References to these values are found through Sangam literature. All the values occupy an essential place in the life of the ancient Tamil people. It is also noteworthy that the ancient Tamil culture is still admired today. The ancient Tamil literature is the closest to the world in which the Tamils live. Literature is divided into songs and poems. Sangam literature depicts the life of the Tamils well. The life values are divided into two types, internal and external. Through these, this study aims to examine the cultural life values that the world admires.

Keywords: Culture, food, feast, life, flow

ஆய்வுச் சுருக்கம்:

பழந்தமிழ் மக்களின் அகவாழ்க்கை விழுமியங்கள் என்பது அவர்களின் குடும்பவாழ்க்கை, காதல், நட்பு மற்றும் பிற தனிப்பட்ட உறவுகளில் வெளிப்படும் உயர்ந்த பண்புகள் ஆகும். இது வாய்மை, நேர்மை, நன்றிஉணர்வு, பெரியோரை மதித்தல், ஒழுக்கம், விருந்தோம்பல், மக்கட்பேறு போன்ற பல விழுமியங்களை உள்ளடக்கியது ஆகும். சங்க இலக்கியங்கள் வழி இந்த விழுமியங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. விழுமியங்கள் அனைத்தும் பழந்தமிழ் மக்களின் வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன.

மேலும் பழந்தமிழர் பண்பாடு இன்றளவும் போற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். தமிழர்கள் வாழக்கூடிய உலகிற்கு அருங்குடையாகத் திகழ்வது பழந்தமிழ் இலக்கியங்கள் ஆகும். இலக்கியத்தைப் பாட்டு, தொகை என பகுப்பர். சங்க இலக்கியங்கள் தமிழர் வாழ்வியலை நன்கு சித்தரித்து காட்டுகின்றன. அவ்வாழ்வியல் விழுமியங்கள் அகம், புறம் என இரு வகையாக

Tamilmanam

பாகுபடுத்தப்பட்டுள்ளது. இவற்றின் வழி உலகோர் போற்றும் பண்பாட்டு வாழ்வியல் விழுமியங்களை ஆராயும் தலையாய நோக்கில் இவ்வாய்வு அமைகிறது.

திறவுச்சொற்கள்: பண்பாடு, யாக்கை, விருந்து, வாழிய, ஒழுகுதல்.

முன்னுரை;

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்களால் "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என்னும் கோட்பாடு எடுத்துரைக்கப்பட்டது. தமிழர் வாழ்வியல் பண்பாடும், நாகரிகமும் மரபு சார்ந்த ஒன்றாகும். தமிழர், பண்பாட்டின் நிலைக்களனாய் சிகரமாய் வாழ்ந்து சிறந்தவர். அக்காலப் பண்பாடு போற்றத்தக்கதாகும், வாழ்வின் வழிகாட்டியாகவும் கொள்ளத்தக்கதாகும். இதற்கான சான்றாதாரங்களை ஆராய்வதன் மூலம் பழந்தமிழ் மக்களின் அகவாழ்க்கை விழுமியங்களை ஆராய்ந்து வெளிக் கொணர முடியும்..

விழுமியங்கள் சொற்பொருள் விளக்கம்

விழுமியங்கள் என்றால் ஒரு தனிநபர் அல்லது சமூகத்தின் நம்பிக்கைகள், கொள்கைகள் மற்றும் நடத்தைகளை வழி நடத்தும் அடிப்படைக் கோட்பாடுகள் அல்லது ஆதாரங்கள் ஆகும். இவை ஒரு நபர் எதை நல்லது எதைக் கேட்டது என்று கருதுகிறார், என்பதை தீர்மானிக்க உதவுகின்றன. விழுமியங்கள் (values) என்பது ஒரு தனிநபர் அல்லது சமூகத்தின் நம்பிக்கைகள், எண்ணங்கள் மற்றும் நடத்தைகளின் அடிப்படையில் அமைந்தவை. அவை ஒருவரை எதை செய்தால் சரி, எதை செய்தால் தவறு என்று தீர்மானிக்க உதவுகின்றன. நேர்மை, உண்மை, நீதி, கருணை போன்றவைகள் சான்றுகள் ஆகும்.

பண்பாட்டு விழுமியங்கள்

'பண்பு 'என்னும் சொல்லும், பாடு என்ற சொல்லும், பழந்தமிழ் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன. நல்லியல்பு என்பதே 'பண்பு' எனப்படும்,

"பாடறிந்து ஒழுகும் பண்பினாரே" (புறம் 197: 14)

" நயனும் நண்பும் நாணும் நன்கு உடைமையும்
பயனும் பண்பும் பாடுஅறிந்து ஒழுகலும் "(நற்றிணை 160: 12)

தலைசிறந்த வாழ்வியலுக்குத் தோற்றுவாயாக அமைகின்ற மனப்பான்மையின் வெளிப்பாடு பண்பாடு எனலாம்.

"படைத்தகையாற் பாடுபெறும் " (குறள்: 768)

என்னும் திருவள்ளுவரின் சிந்தனை ஒப்பிடத்தக்கதாகும்.

பண்படுவது பண்பாடாகும். சீர்படுதல், பண்படுத்தல் எனவும் பொருள்படும். பண்பாட்டு விழுமியங்கள் (cultural values) என்பவை, ஒரு சமூகத்தில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் பின்பற்றப்படும் விழுமியங்கள் ஆகும். இவை ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் கலைகளை வடிவமைக்கின்றன.

பண்பாட்டு விழுமியங்களின் முக்கியத்துவம்

பண்பாட்டு விழுமியங்கள் ஒரு சமூகத்தின் உறுப்பினர்களை ஒன்றிணைத்து ஒரு பொதுவான அடையாளத்தையும், நோக்கத்தையும் உருவாக்குகின்றன. இந்த விழுமியங்கள், ஒரு சமூகத்தில் எது சரியானது, எது தவறானது என்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குகின்றன. பண்பாட்டு விழுமியங்கள், சமூகத்தில் நடத்தை விதிகளை நிலை நிறுத்த உதவுகின்றன. ஒரு சமூகத்தின் விழுமியங்கள் அந்த சமூகம் எவ்வாறு முன்னேறுகின்றது மற்றும், அதன் எதிர்காலத்தை வடிவமைக்கிறது என்பதை தீர்மானிக்கின்றன.

" பண்புஉடையார் பட்டுண்டு உலகம்" (குறள்: 996)

நற்பண்புகளுடன் வாழ்ந்த சான்றோர் உள்ளமையால் உலகம் நிலை பெற்று வாழ்கிறது. மானிட இனத்தின் உயர் பண்புகளால் அமைவதே பண்பாடு எனலாம். உலக நடைமுறைகளை அறிந்து அதன்படி வாழ்வதற்கு வேண்டிய நற்பண்பின் விழுமியத்தை மேற்படி காணலாம்.

" ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்புஎனப் படுவது பாடறிந்து ஒழுகுதல் " (கலி:133:6-4)

ஆற்றுதல், போற்றுதல், பண்பு அறிவு, அன்பு அறிவு, நிறை, முறை, பொறை முதலான பண்பாட்டு விழுமியங்களை அறியலாம்.

வாழ்வியல் பண்பாட்டு விழுமியங்கள்

பழந்தமிழர் திருமண வாழ்க்கையை இல்லறம் என்று வரையறுத்தார்கள். அன்பு பண்பாகவும், அறம் பயனாகவும் அமைவதே இல்வாழ்க்கை ஆகும்.

"...... அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (தொல்.கற்பியல் : 190)

மனம் ஒன்றினையும் அன்பே இல்வாழ்வின் தலையாயபண்பு என்று கருதினர். குற்றமற்ற அன்பினால் ஒன்றுபட்ட உள்ளமுடனும்,

" யாக்கைக்கு உயிர்இயைந் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
காதல் அன்ன பிரிவறி யோளே... " (அகம் : 339 -12)

உடலும்,உயிருமாய் ஒன்றுபட்டு வாழ்ந்த அகவாழ்க்கை விழுமியங்களை மேற்கண்ட சான்று அறிவுறுத்துகிறது.

" வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்
மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிரென... (குறுந்.135 - 4)

மனையறம் பேணி வாழ்தல் மகளிருக்கும், வினையறம் புரிந்து வாழ்தல் ஆடவருக்கும் உரிய இல்லற வாழ்வியல் விழுமியங்களாக வரையறுக்கப்பட்டன.

" மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்
முனைக்கு வரம்பாகிய வென்வேல் நெடுந்தொகை " (புறம். 314:1-2)

ஆடவர் மகளிர் பேணி காத்த அகவாழ்க்கை வாழ்வியல் விழுயங்களை மேற்காணும் பாடல் புலப்படுத்துகிறது.

"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல் " (கலித். 133 :6)
" செல்வத்துப் பயனே ஈதல் " (புறம். 189 : 7-8)

பழந்தமிழ் சமுதாய வாழ்வில் உயர்ந்த அறமாக கருதப்படும் ஈகை அறத்தின் மாண்புகளை பழந்தமிழர் அகவாழ்க்கை எடுத்துரைக்கிறது.

பழந்தமிழர் அகப் பண்பாட்டு விழுமியங்கள்

பழந்தமிழ் மக்கள் அகம், புறம் என்று வாழ்க்கை முறைகளை வகுத்து வாழ்ந்தனர். களவு, கற்பு வாழ்வியல் நெறிகள் போற்றப்பட்டன. உரிமைவாழ்வு, பண்பு, நலம், கற்புநெறிகள், மனையறமாண்புகள், கடமைஉணர்வு போன்றவைகள் அகவாழ்க்கை விழுமியங்களாக வரையறுக்கப்பட்டன.

" சங்ககாலம் பண்பாட்டில் வளர்ச்சி பெற்று சிறந்து விளங்கிய காலம். அக வாழ்க்கையிலும், புற வாழ்க்கையிலும் நிறைவு பெற்ற காலம். அன்றைய வாழ்வில் பண்பாடுப் போற்றத்தக்கது மட்டுமல்ல,

வாழ்வுக்கு வழிகாட்டியாகவும் கொள்ளத்தக்கது" (முனைவர் வே.முத்துலக்குமி., பண்பாட்டு சிந்தனைகள்., ப. 30)

மக்கட்பேற்றின் தனித்துவ விழுமியங்கள்

பெறுதற்கரிய பேறுகளுள் தலைசிறந்த பேறு மக்கட்பேறாகும். இல்லற வாழ்விற்கு அணியாக விளங்குவது நன்மக்கட்பேறு என்பதை"

“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு " (குறள் :60)

என்ற குறள் உணர்த்துகிறது.

" இம்மை யுலகத்து இசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துவ
செறுநரும் விளையுஞ் செயிர்தீர் காட்சிச்
சிறுவர் பயந்த செம்ம லோர் என " (அகம். 66 : 4)

இம்மை வாழ்வில் இசையோடு விளங்குவதற்கும், மறுமை வாழ்வு மறு வின்றி எய்துதற்கும், காரணமாவது மக்கட் பேறு என்னும், வாழ்வியல் நம்பிக்கை விழுமியங்களை அகநானூறு மொழிகின்றது.

" மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே " (புறம்.188: 6-7)

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும் செல்வவளம் மிக்கவராயினும் மக்கட்பேரில்லாதோர் வாழ்வு பயனற்றது என்று பண்டைத் தமிழர் கருதினர்,

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்" (குறள்: 66)

என்னும் வள்ளுவரின் வாக்கு ஒப்பு நோக்கதக்கதாகும்.

விருந்தோம்பல் : விழுமியங்கள்

பண்பாட்டைப் போற்றி வாழ்ந்தவர் பண்டைத் தமிழர்

இன்றும் பண்பாட்டின் மரபு நிலை தொடர்கிறது. அவர்கள் போற்றிய பண்புகளில் தலையாயப் பண்பு விருந்தோம்பல். விருந்து என்றால் புதுமை, புதியவர் என்று பொருள். விருந்தே புதுமை என்பர் தொல்காப்பியர்,

" விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும் " (தொல், கற்பியல் :11)

இல்லற மகளிரின் இன்றியமையாப் பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல், பெண்களின் இலக்கணம் கூறும் தொல்காப்பியர், இல்லத் தலைவியின் கடமைகளை கூறும் போது விருந்தோம்பற் பண்பாட்டு விழுமியங்களை அறிவுறுத்துகிறார்.

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை " (குறள் :49)

" இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு " (குறள் :81)

மேற்காணும் குறட்பாக்கள் வழி பழந்தமிழர் பண்பாட்டு விழுமியங்களைக் காணலாம்.

" விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னொடு உண்டலும் புரைவது" (குறிஞ்சிப்பாட்டு: 205-207)

விருந்தினர் உண்டு எஞ்சிய மிச்சிலை தலைவி இட தான் உண்ணுதலே தக்கது என்பதை அறிவுறுத்துகின்றது.

தொன்று தொட்டு நிகழ்ந்து வரும் விருந்தோம்பற் பண்பாடு, தமிழரின் அடிப்படை பண்பாடு என்றும், தொடர்ந்து வரும் பண்பாடு பற்றாக்குறை, விலைவாசி ஏற்றம், வேலையின்மை போன்ற நெருக்கடி நிலைகள் ஏற்பட்ட போதும், இன்றும் நம் மக்கள் விருந்து போற்றுவதை தவறாது தம் கடமையாக செய்து வருகின்றனர். வாழ்க்கைக்கு இன்றியமையாப் பண்பான அன்பையும், அறிவையும் வளர்க்கும் வாயிலாக விருந்தோம்பற் பண்பாடு காணப்படுகின்றன.

மனிதநேய விழுமியங்கள்

பெறுதற்கரிய பிறவி மானிடப்பிறவி 'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது' என்பார் ஔவையார். மானிடப்பிறவி எடுத்த ஒவ்வொருவரும் இப்பிறவியின் பயனை நன்றாக உணர்ந்து வாழ வேண்டும், பிறரையும் வாழ்விக்க வேண்டும்.

" மனம் பண்படும் இடம் காதல் வாழ்க்கை
மனம் பண்படும் இடம் பொது வாழ்க்கை
மனம் வாழும் இடமே தனி வாழ்க்கை "

(ந. சுப்புரெட்டியார்., தமிழ் இலக்கியங்களில் அறம் நீதி முறைமை, ப. 12)

அன்பு, தியாகம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த இல்வாழ்க்கை மனிதன் தன்னலம் இன்றி மனிதநேயமிக்க நல்ல பண்பாளனாக வாழ வழி வகிக்கிறது.

தாம் வாழுகின்ற சமூகத்தோடு ஒன்றி வாழ்ந்த தமிழ் மக்கள் தம் நாட்டின் மீது மிகுந்த பற்று கொண்டிருந்ததனர். தம் நாட்டை பற்றி எண்ணாத மக்களே இல்லை. இயற்கை வளங்கள் மிகவும் குன்றினும் அந்நாட்டில் உழைப்பாளர் பெருகி அந்நாடு சிறப்புறும் என்பதை ,

" நாடுஆகு ஒன்றோ காடுஆகு ஒன்றோ;
அவள்ஆகு ஒன்றோ மிசைஆகு ஒன்றோ;
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே " (புறம் :187)

நாட்டு மக்களின் அறிவாற்றலாலேயே உயர்வும், மதிப்பும் பெற முடியும். கடுமையான உழைப்பினாலேயே உயர்வு கிட்டும் என்று எடுத்துரைக்கிறது.

நாட்டு மக்களின் அறிவாற்றலாலேயே உயர்வும், மதிப்பும் பெற முடியும். கடுமையான உழைப்பிலேயே உயர்வு கிட்டும். அதற்கு உடல் வலிவும் மன வலிவும் மிக்க ஆண்கள் தேவை. அவர்களை ஊக்கமூட்டும் மகளிராலேயே வீடும் நாடும் உயர முடியும். எனவே எல்லாவற்றிற்கும் நாட்டு நிலையை நன்கறிந்த அறிவாற்றல் மிக்கவராக மகளிர் வாழ்தல் வேண்டும்.

சங்க காலத்தில் நாட்டின் நிலை நன்கறிந்த நாட்டுப் பற்று மிக்க அறிவு சான்ற பெண்கள் பலர் வாழ்ந்திருந்தனர். என்பதும் இன்ன பிற வாழ்வியல் விழுமியங்களையும் காணலாம்.

தொகுப்புரை

இக்கால இளைய சமுதாயம் நாட்டின் உயிர்நாடி நல்வழிப் பாதையில் வளர்ச்சியுடன் வாழ்வதற்குரிய அறநெறிகளைப் பழந்தமிழர் வாழ்வியல் நெறிகள் வழி உணரலாம். பழந்தமிழர் வாழ்வியல் வழி மனிதநேயம், சமத்துவம், அக வாழ்க்கை நெறிகள், பண்பாட்டு அறநெறிகள் போன்றவைகளை கண்டுணர்ந்தால் வாழ்க்கை இனிக்கும், வளங்கள் பெருகும், மனிதநேயம் மாண்புறும், சமத்துவம் மலரும், உலகம் உய்வு பெறும்.

மனிதன் தனக்காக அன்றி சமூகத்திற்கும் நாட்டிற்குமாக வாழ்வதே மனிதநேயத்தின் நோக்கம். குலம், மதம், இனம், மொழி, நாடு என்ற எல்லைக்கு அப்பால் பொருளியல் சமன்பாட்டுடன் கூடிய, மாந்தர் குல ஒற்றுமையை இணைப்பதையும் பழந்தமிழர் வாழ்வியல் விழுமியங்கள் கற்பிக்கின்றன.

சான்றாதாரங்கள்

1. குறுந்தொகை (சங்க இலக்கியம்). (2004). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை.
2. துரைசாமி பிள்ளை. ஔவை (உ.அ). (1970). புறநானூறு (மறுபதிப்பு). கழக வெளியீடு. சென்னை.
3. பரிமேலழகர் (உ.ஆ). (2004). திருக்குறள் (முதற்பதிப்பு). மணிவாசகர் பதிப்பகம். சென்னை.
4. பாலசுப்ரமணியன் கு.வெ (உ. ஆ). (2004). நற்றிணை மூலமும் உரையும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை.
5. மாணிக்கனார். அ (உ. ஆ). (1999). பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதற் பதிப்பு). வர்த்தமானன் பதிப்பகம். சென்னை.
6. முத்துலட்சுமி.வே. (2002). பண்பாட்டுச் சிந்தனைகள் (இரண்டாம் பதிப்பு). அனிதா பதிப்பகம். திருச்சி.
7. சுந்தரமூர்த்தி. கு. (1986). தொல்காப்பியம் பொருள் அதிகாரம் (முதற்பதிப்பு). அண்ணாமலை பதிப்பு. அண்ணாமலை நகர், சிதம்பரம்.
8. சுப்புரெட்டியார். க. (1988). தமிழ் இலக்கியங்களில் அறம் நீதி முறைமை. ஐந்திணை பதிப்பகம். சென்னை.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

சோ. தர்மனின் தூர்வை புதினத்தில் பெண் மாந்தர்களின் வாழ்வியலின் சமூக நிலை

The social status of women's lives in Cho. Dharman's novel Durvai

இரா. ராஜேஷ் குமார்[1], முனைவர் எ. கற்பகம்[2],

[1]பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: BDU2220632779759,
தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி),
பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, கரூர்-5, தமிழ்நாடு, இந்தியா.

[2]நெறியாளர். இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி),
பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, கரூர்-5, தமிழ்நாடு, இந்தியா.

R,Rajesh Kumar[1], Dr. E. Karpagam[2]

[1]Part-time Doctoral Researcher, Registration No: BDU2220632779759, Department of Tamil Studies, Government Arts College (Autonomous), Affiliated to Bharathidasan University, Karur-5, Tamil Nadu, India.
Email: rkkadavur@gmail.com, **ORCID: https://orcid.org/0009-0003-1443-6331**

[2]Research Guide: Associate Professor, Department of Tamil Studies, Government Arts College (Autonomous), Affiliated to Bharathidasan University, Karur-5, Tamil Nadu, India.

Abstract:

The lines of the poet Amma, "To be born as a Mangaiyar, one must do good deeds," are written in a way that glorifies the birth of women. A woman is multifaceted as a mother, daughter, sister, and wife. We learn about the status of women through the literature that emerged during that period and the customs of the people. Many writers have expressed the status of women in society and their freedom through contemporary literature such as novels and short stories. In this way, this article examines the importance of women in society by showing the equal role, equal authority, and equal priority of women in deciding their own lives in the novel by Cho. Dharman.

Keywords: Matathi, Remaruman, Modern Women, Durvai, Novel.

ஆய்வுச் சுருக்கம்:

மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா எனும் கவிமணியின் வரிகள் பெண்களின் பிறப்பை பெருமைபடுத்தும் விதத்தில் அமைகின்றது. பெண் என்பவள் தாயாக, மகளாக, சகோதரியாக, மனைவியாக பன்முகத் தன்மைக் கொண்டவள். அந்தந்த காலகட்டத்தில் தோன்றிய இலக்கியங்களின் மூலமும், மக்களின் பழக்க வழக்கங்களின் மூலமும் பெண்களின் நிலையினை அறிகின்றோம். சமூகத்தில் பெண்களின் நிலையினைப் பற்றியும், அவர்களின் சுதந்திரத்தைப் பற்றியும் பல எழுத்தாளர்கள் புதினம், சிறுகதை போன்ற இக்கால இலக்கியங்களின் மூலம் வெளிப்படுத்தி வருகின்றனர். அவ்வகையில், சே. தர்மனின் தூர்வை புதினத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களின் சம பங்கை, சம அதிகாரத்தை, தன் வாழ்வைத் தானே தீர்மானித்துக் கொள்வதில்

அவர்களுக்கு இருக்கின்ற சம முன்னுரிமையை காட்டுகிற வகையிலும் சமூகத்தில் பெண்களின் முக்கியத்துவத்தையும் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

குறிப்புச் செற்கள்: மாடத்தி, மறுமணம், நவீனகால பெண்கள், தூர்வை, புதினம்.

முன்னுரை

ஆண்களுக்கு நிகராக பெண்களின் சம பங்கை, சம அதிகாரத்தை, தன் வாழ்வைத் தானே தீர்மானித்துக் கொள்வதில் அவர்களுக்கு இருக்கின்ற சம முன்னுரிமையை காட்டுகிற வகையிலும், அசலான ஆதிச் சமூகத்தின் சிறப்பைக் காட்டுகிற வகையிலும் புதினத்தில் வலம் வரும் மாடத்தி, முத்தையாவின் மனைவிமார்கள், கொங்கம்மாள், குருசாமி மறுமணம் செய்து கொள்ளும் முத்தம்மாள் என்று புதினத்தில் பல பெண் மாந்தர்கள் சமூக ஆண் - பெண் சமத்துவத்தைக் காட்டும் வகையில் அமைந்திருப்பதை இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

பெண்ணீயம் பொருள் விளக்கம்

ஆங்கிலத்தில் 'Feminism' என்ற சொல்லின் தமிழ் மொழியாக்கமே ‘பெண்ணியம்’ என்ற சொல்லாகும். பெண்ணியம் என்பது பெண்கள் பற்றிய அறிவுத்துறை சார்ந்த ஒரு சமூக விஞ்ஞானத்துறை என அறிஞர்கள் கூறுகின்றனர். இன்று பெண்ணியம் என்ற சொல் தற்காலத்தில் கோட்பாடாகப் பார்க்கப்படுகிறது. காலம், இடம், நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இதனை உணரமுடியும் எனவும் உரைக்கின்றனர். 'Femina' என்ற இலத்தீன் மொழியின் திரிபாகவே 'Feminism' ஏற்பட்டது எனக் கூறுகின்றனர்.

> **பெண்ணியத்திற்கு உலகிலுள்ள அனைத்துச் சமுதாயங்களுக்கும் பொருந்தும்படியான முக்காலத்திற்கும் உரிய ஒரு விளக்கத்தைக் கொடுக்க இயலாது எனவும், இதன் விளக்கம் ஒரு சமுதாயத்தின் வரலாறு பண்பாடு இவற்றைப் பற்றிய உணர்வு, நோக்கு, செயல் இவைகளைப் பொறுத்து மாறுபடும் (இரா.ரெங்கம்மாள், பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், ப.1)**

என்பர். பெண்ணிய வாதிகள் குறிப்பிடுவதை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. ஆனாலும், 17-ஆம் நூற்றாண்டிலிருந்து பேசப்பட்டு வந்த பெண்ணியம் என்ற கருத்தாடல் காலத்திற்கு ஏற்ப மாறுபட்டு 20-ஆம் நாற்றாண்டில் பல மாறுதல்களை அடைந்ததாக அறிஞர்கள் கூறுகின்றனர். இந்தியாவைப் பொறுத்தவரைகயில் இத்தகைய நிலைபாடு தற்காலத்தில்தான் எழுந்துள்ளது. ஆதலால் பெண்ணியம் குறித்த அறிஞர்களின் கருத்துக்களைக் காண்பது என்பது, பெண்ணியம் என்றால் என்ன என்பதனைப் புரிய வழிவகுக்கும்.

அறிஞர்களின் கருத்துக்கள்

பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதனை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் பெண்ணியம் என்கிறார் கார்டன். இவரின் கருத்தின் வழியே பெண்ணின் தாழ்ச்சியான நிலையை மாற்ற மேற்கொள்ளும் வழிமுறைகளாக பெண்ணியம் பார்க்கப்படுகிறது எனலாம்.

பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஓர் ஆற்றலை உருவாக்கி, பெண்மை அதன் தன்மையில் ஆண்களோடு மாறுபட்டிருப்பினும் அது ஆண்மைக்கு நிகரானது என்பதை ஏற்றுக்கொள்ள வைப்பது. (இரா.ரெங்கம்மாள், பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், ப.10)

என்கிறார் ஜெயின், ஜெயின் கூறும் கருத்தில் ஆணுக்கு நிகரானது பெண் என்பதைப் புரிந்து கொள்ளச் செய்வது என்பதாக நாம் காணலாம்.

பெண்ணியம் என்பது பெண்கள் பாலினப் பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம். (இரா.ரெங்கம்மாள், பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், ப.10)

இவர் கூறுவதில் பெண்ணியம் என்பது ஒரு தனித்த இயக்கமாக இருப்பது என்கிறார் புட்சர்.

தூர்வை புதினத்தில் பெண் மாந்தர்கள்

தூர்வை புதினத்தில், கிராமப்புற பெண்களின் வாழ்க்கை முறை, அவர்களின் அன்றாடப் பணிகள், மற்றும் சமூகக் கட்டமைப்புகளில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் ஆகியவற்றை விவரிக்கிறது. அவ்வகையில் அமைந்துள்ள பெண் மாந்தர்களின் சமூக வாழ்வு நிலைப்பாடுகளை அறியலாம்.

மாடத்தி

ஆண், பெண் இணைந்து வாழும் வாழ்க்கையில் ஒரு பால் ஆதிக்கமே மிகுமாயின் பிரிவெனும் பேரிடி ஆங்கு நிகழ்வதுண்டு. உரிய வேளையில் ஆதிக்கம் இடம் மாறி அமைந்தால் மட்டுமே இல்லறம் என்னும் கூட்டு ஒப்பந்த வாழ்க்கை பொருளுடையதாக அமைகிறது. இல்லறத்தில் உயர்வு, தாழ்வு என்பது இருபாலருக்கிடையே கிடையாது. இருக்கவும் கூடாது. தமிழ் இலக்கியத்தில் அக இலக்கியங்கள் புற இலக்கியங்கள் இரு வகையிலும் தலைமைப் பண்பும் ஆளுமைத்திறனும் ஆடவர் மகளிர் என்று வேறுபாடின்றி படைக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம்.

உலகம் என்பது ஒரு கூறாகவே அமைந்தது. எந்தப் பொருளிலும் இரு கூறு அமைந்திருப்பதுதான் இயற்கை. பகலை அடுத்து இரவு, இன்பத்தை அடுத்துத் துன்பம், இருளை அடுத்து ஒளி, அறம் அடுத்து மறம், பிறப்பு அடுத்து இறப்பு இப்படி அடுக்கடுக்கான இரட்டைகள் வாழ்வி அமைந்துள்ளன. இதை உணர்ந்தாத்தான் இறைவனே ஆண் பெண் வடிவமாக அமைந்துள்ளன. இதனை பாவேந்தர்,

ஆண் - பெண் என்ற இரண்டுருளையால்
நடக்கும் அவ்வுலகம் (வலைத்தளம், பாரதிதாசன் கண்ட பெண்)

என்கிறார். அதாவது ஆண் பெண் என்ற இரண்டு உருளையில் நடக்கும் இன்ப வாழ்க்கை. ஆகும். இதே போல் மாடத்தியும், மினுத்தானும் ஒற்றுமையாக இருப்பதையும் புதினத்தில்,

குழந்தைக்கு ஜாதகம் பார்க்கத் தன் கணவனுடன் செல்லும் மாடத்தி கும்பிடுறஞ்சாமி வா மாடத்தி உள்ள வா, வாங்க என்ன இப்பிடி திடுதிப்பினு. வரனும் வரனும்னு நெனச்சு சொணங்கிக்கிட்ட போகுது, வேல வெட்டியும் கொறஞ்சபாடு இல்ல. இன்னக்கி நாளு நல்ல

நாளா இருக்கேன்னு அப்படியே சாமியவுகள பாத்தாப்லேயும் இருக்கும். ஜாதகத்த வாங்கனாப்லயும் இருக்கும்னு. (தூர்வை, ப.1)

நினைத்த மாடத்தி ஐயரை, வணங்கினாள். ஐயர் வரவேற்று, தன் மரியாதையைக் காட்டிய பின், மாடத்தி பேசத் தொடங்கினாள். மினுத்தான் அமைதியாய் இருக்க மகன் ஜாதகத்தைப் பார்த்து விட்டுச் செல்லலாம் என்று வந்தோம் என்றாள். இங்கு இடையில் மித்தானுக்கும் மாடத்திக்கும் ஐயருக்கும் தெளிவாக உறவு வெளிப்படுகிறது. மினுத்தான் அமைதியாக இருந்து, மாடத்தி ஐயரிடம் தெளிவாக பழகுவது அவளின் ஆளுமையையும் எதார்த்தப் பண்பையும் வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

கணவனை கவனித்தல்

குடும்பம் என்றாலே பொதுவாக கணவன் மனைவி உறவு நிலை மிகவும் நெருக்கமானதாக இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஒருவருக்கொருவர் மிகுந்த அன்பும், பாசமும், அரவணைப்பும் கொண்டு குடும்பத்தில் வாழ வேண்டும் என்பதை,

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (திருக்குறள், பா.45)

என்று திருவள்ளுவரின் கூற்றுப்படி கணவனும் மனைவியும் அன்பும், அறனும் பெற்று வாழ வேண்டும் என்று குறிப்பிடுகிறார். இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது இல்லறம். அவ்வில்லறத்திற்கு அச்சாணி போன்றவள் பெண். இல்லறத்தை வழிநடத்தும் மனைவி தன்னைக் காத்து தற்கொண்டார்ப் பேணி தகைசான்ற சொல்லைக் காத்துச் சோர்வில்லாதவளாக இருக்க வேண்டும். குடிப் புகழ் விருப்பமும் புகழ்புரிந்த இல்லமும் உருவாவது வளத்தக்காளாகிய அவளது பொறுப்புகளாகின்றன. இதனை நாலடியாரில்,

மழைதிளைக்கும் மாடம்ஆய் மாண்பமைந்த காப்பாய்
இழை விளக்கு நின்றிமைப்பின் என்ஆம்? விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதான் இல்லகம் காண்டற்கு
அரியதோர் காடு. (நாலடியார், பா.361)

உயர்ந்த மாளிகையாய் மிகப்பெரிய வீடிருந்தாலும் பெருமைக்குரிய மனைவி இல்லை என்றால் அது வீடாகாது என்கிறது. மாடத்தி தன் கணவனின் பெருமைக்குரிய மனைவியாக இருப்பதை, அவள் உற்ற துயரிலிருந்து விடுவிக்கச் செயல்படுவதிலிருந்து அறியலாம். **மினுத்தானுக்குப் பிளவை பெறப்பட்டுப் படுத்த படுக்கையாகி விட்டான். நடுமுதுகில் நாரத்தாங்காய் தண்டி நாக்கைத் துருத்தியதைப் போல சதை எட்டிப் பார்த்தது. மினுத்தான் எந்திரிக்கிறது ரெண்டாம் பட்சம் தான் என்று பேசிக் கொண்டார்கள். ஆனால் மாடத்தி விடாமுயற்சியுடன் நேமிக்கம் போடாத கோயிலே இல்லை. எல்லாக் கோவில்களிலும் தன் கணவனுக்காக நேர்த்திக் கடன் போட்டதனால்எந்த சாமி புண்ணியமோ மூனுமாசம் கழித்து எழுந்து விட்டான். மினுத்தான் பிழைத்தது மறுபிறப்பு.(தூர்வை, ப.37)** மாடத்தி ஒரு மனைவியாகத் தன் கணவன் உயிரைக்காப்பாற்றியதன் மூலம் மாடத்தியின் அன்பையும், குடும்பப் பொறுப்பையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

தாயின் அன்பு

உலகில் எவ்வளவு விலைக் கொடுத்தாலும் ஒரு தாயின் அன்பை வாங்க முடியாது. அத்தகைய தாயின் அன்பை,

கண்ணின் சிறந்த உறுப்பு இல்லை. கொண்டாளின்
துன்னிய கேளிர் பிறர் இல்லை. மக்களின்
ஒண்மைய வாய் சான்ற பொருள் இல்லை. ஈன்றாளின்
என்ன கடவுளும் இல.(நான்மணிக்கடிகை, பா.54)

என்னும் நான்மணிக்கடிகை பாடல் சுட்டுகிறது. ஒருவனுக்குக் கண்ணைப் போலச் சிறந்த உறுப்பில்லை. இமைகளுக்குக் கணவனைப் போல நெருங்கிய உறவினர் வேறில்லை. பெற்றோருக்கு மக்களைப் போல ஒளியுள்ள பொருள்கள் வேறில்லை. குழந்தைகளுக்குத் தாயைப் போல கடவுள் வேறெதுமில்லை என்பதற்கேற்ப மாடத்தியும் இருக்கிறாள். **சீனியம்மாளிடமிருந்து குழந்தையை ஆவலாய் வாங்கிக் கொண்டாள் மாடத்தி. என்னடி வயித்துக்குள்ள ஒன்னயும் காணும், பாலு, குடுத்தியா? இல்லியா? இப்பதான்க்கா எந்திரிச்சான். மாடத்தியக்காளுக்குப் புள்ள மேலே பிரியத்தப்பாரு.(தூர்வை, ப.5)** பெத்தவகூட தோத்துப் போவா என்று சொல்லும்அளவுக்கு சீனியம்மாளுக்கு பிறந்த குழந்தையைத் தன் குழந்தையாகவே நினைத்து வளர்த்து வந்தாள். பிறர் குழந்தையையும் சுவனிக்கும் போது தாயின் அன்பையும் அரவணைப்பையும் மாடத்தியிடம் காண முடிகிறது.

கொங்கம்மாள்

தாத்தையா நாயக்கர் அவருடைய அக்காள் கொங்கமாளின் வார்த்தையை மீறி எதுவும் பேச மாட்டார். அனைவரிடத்திலும் வேலை வாங்குவதில் சிறந்த பெண்ணாக,

காதுக்கு ரெண்டு பாம்படத்தையும் போட்டுக்கொண்டு வெள்ளைச் சேலையை வரிந்து கட்டிக்கொண்டு வேலை வாங்கும். வேலை என்றால் அப்படி வேலை நார்ப்பரிகிற வேலை, யாரும் அதோடு நெற போட முடியாது. கூலிக்காரர்களை வேலை வாங்குவதில் படுசமர்த்து. (தூர்வை, ப.87)

என்று ஆசிரியர் கூறுவதில் இருந்து பெண்கள் வீட்டின் முதன்மையாக திகழ்ந்தும் அனைத்து வேலைகளையும் செய்யக்கூடியதும் பெண்களாகவும் வேளாண்மையில் ஆணுக்கு நிகராக பெண்களும் அது மட்டுமல்லாது வேலை வாங்கும் திறமையும் பெண்களிடம் உள்ளதை அறிய முடிகிறது.

முத்தம்மாள்

முத்தம்மாள் கொஞ்சம் கறுப்பானாலும் களையான முகம். கத்தையாய் சுருட்டைமுடி. நெத்து உடம்பு. அளவான வளர்த்தி. நேர்த்தியான பல். அவள் இடது கையைக் கொஞ்சம் லாத்தி வீசி நடக்கும் போது பாச்சக்காளை வருவது போலிருக்கும். சிரித்தால் பளிச்சிடும் ஒழுங்கான பல் வரிசை அவள் முகத்திற்கு மேலும் எடுப்பாய்த் தெரியும். ஒரு தளுக்கு மல்லிகைப் பூவைக் கொண்டையில் வைத்துக்கொண்டு கொலுசு போன்ற தண்டைகள் குலுங்க அவள் இரட்டைப் பானையுடன் கிணற்றிலிருந்து வரும் போது நின்று பார்க்காத சனங்களே இருக்காது. இவ்வாறு பெண்மையின்

Tamilmanam

அழகினை ஆசிரியர் காட்சிப்படுத்துகிறார். சமூகத்தில் இப்படி இருந்ந முத்தம்மாள் எல்லோரையும் போல அவளும் பெண்கள் திருமணம் ஆகி செல்கின்றள். போன மறு வருசம் கணவன் பாம்பு கடித்து இறந்து விட்டான் இதை ஊரில் உள்ளவர்கள்,

சண்டாளி வந்த நேரம் சர்ப்பம் தீண்டி செத்துட்டான்.

மூல நட்சத்திரத்துல ஆளான கழுதனு தெரியாமப் போச்சு தெரிஞ்சிருந்தனா இந்தச் சிறுக்கிய கொண்டாந்திருப்பனா?

குட்டிச் சனியில பெறந்த கழுத வந்து கோப்பக் கொளச்சிருச்சே..'

ஆடி மாசம் பெறந்த சனியன் அலயக் சொளய அடிக்கிம்கிறது சரியாப் போச்சு. (தூர்வை, ப.103)

இவ்வளவு பேச்சையும் வாங்கிக் கொண்டு முத்தம்மாள் தன் நிலை தடுமாறாது தாயின் வீட்டிற்கு சென்று கணவன் இல்லாத நிலையில் தனித்து வாழ்ந்து வந்ததும், மாடத்தி முத்தம்மாளுக்கு குருசாமியை பேசி திருமணத்தை நடத்தி வைத்துள்ளர்கள். இதன் மூலம் ஆசிரியர் மனைவியை இழந்த கணவர்கள் மறுகணமே திருமணம் செய்து கொள்கின்றனர். ஆனால் பெண்களுக்கு அவ்வாறு இல்லை. அதனை மாற்றும் விதமாக கணவன் இறந்து வாழ்ந்த முத்தம்மாளுக்கு மறுமணம் செய்து வழ்க்கைக்கு வழி காட்டுவதை அறிய முடிகிறது. விதவை என்னும் நிலை மறுத்து மறுவாழ்வு பெண்களுக்கு அளிக்கப்படுவதை சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.

நவீன காலத்து பெண்கள்

பெண்கள் கடந்த காலங்களில் காட்டில் வேலை செய்தார்கள் ஆனால் தற்போது பெண்கள் மாற்றம் ஏற்பட்டுள்ளது அறிய முடிகிறது. எதுக்கு வெயில் கடந்து சாகனும் என்று அவரவர்கள் கம்பெனிக்கு வேலைக்கு செல்வதுமாக இருக்கின்றனர் அதே போல் தூர்வை புதினத்தில் தீப்பொட்டி தொழிற்சாலைக்கும் செல்லும் பெண்களை

வெய்யில்ல கெடந்து சாகனுமேன்னு மட்டும் அவ கம்பெனிக்குப் போகல, அவளுக்கு என்ன என்ன வேணுமோ அம்புட்டும் அதுல கெடைக்குது, அதுதான் தீப்பெட்டி ஆபீஸ்னா குதியாளம் போட்டுட்டு ஓடுறா, சம்சாரி வேலன்னா மருகுறா. கரிசல் காட்டுக்கு வந்தா சேல அழுக்காகிப் போகும். வெயில்ல ஒடம்பு கறுத்துப் போகும். சினிமாப் பாட்டு கேக்க முடியாது, தெனம் தேவிடியா மாதிரி சிங்காரிக்க முடியாது. இத்தனையும் அதுல கெடைக்கி அதுதான் குதியாளம் வச்சிட்டு ஓடுறா, காட்டு வேலைக்கு ஒத்த ஆள் வர மாட்டேங்கு. (தூர்வை, ப.176)

என்று ஆசிரியர் கூறுவதன் மூலம் அறிய முடிகிறது. அப்படி செல்லக்கூடிய பெண்கள் யாருடைய பேச்சையும் கேட்பதில்லை என்பதை,

இப்ப எந்தப் பொம்பளப் புள்ளக்கி தாய் தகப்பன் மாப்பிள பாத்துக் கல்யாணம் முடிச்சு வைக்காக. அதது பாட்டுக்கு நெறந்து கிட்டு எனக்கு அந்தப் பயதான் வேணுமின்னு வாக்கப்படுறா, ரெண்டு பேருமா பட்டணத்துல போயி வாடக வீட்டப் புடிச்சிக்கிட்டு, இல்லன்னா கம்பெனி குடுக்கிற வீட்ல குடும்பம் நடத்துறாக, அமெரிக்காவுல இருந்து வந்தவுக

மாதிரி வெறகு அடுப்ப விட்டுட்டு மண்ணென்ன அடுப்பு, கம்மங் கஞ்சி, சோளக் கஞ்சி போயி தெனம் இட்லி தோசை, கொஞ்ச நாளையில இந்தச் சிறுக்கி இன்னொரு பயல அந்தப் பய இன்னொரு சிறுக்கி பின்னால, கண்டும் காணாம இதெல்லாம் இப்ப ரொம்ப சகஜமாப் போச்சு. போற போக்கப் பாத்தா இன்னும் கொஞ்ச நாளையில ஆம்பளப் பயகதா ஓடி ஒழியனும், இல்ல பொட்டச்சிக வெரட்டிப் புடிச்சு இழுத்துட்டுப் போயிருவா, அப்பிடி சிமிட்றா சிமிட்டு வெக்கம், மானம் எல்லாம்த்திட்டு அலையிறா. (தூர்வை, ப.176)

என்று ஆசிரியர் கூறுவதில் இருந்து பெண்கள் காலத்திற்கு ஏற்ப மாறிக் கொண்டு வருவதை அறிய முடிகிறது. அவர்களே வேலைக்கு சென்று வரக்கூடிய வருமானத்தை செலவு செய்து கொண்டும் கிராமத்து பெண்கள் எல்லாம் நகரத்து பெண்களைப் போல மாறி போகின்றார்கள் என்பதை சித்தரித்துள்ளதை அறிய முடிகிறது.

முடிவுரை

புதினத்தில் பெண் மாந்தர்கள் ஆண்களுக்கு நிகராக பெண்கள் சம அதிகாரம், அன்பு, தன் வாழ்வே தீர்மானித்துக் கொள்ளும் நிலைப்பாடுகள் பற்றியும், வீட்டை கவனித்துக் கொள்வதும் வேளாண்மையில் பெண்கள் ஆண்களுக்கு துணை நிற்பதையும், கணவன் இறந்துவிட்டால் பெண்ணை ஒதுக்கி விடாமல் திருமணம் செய்து பெண் வாழ்விற்கு ஒரு வழி காட்டுவதையும், நவீன காலத்துப் பெண்கள் சமூகத்தில் எவ்வாறு திகழ்கின்றனர் என்பதையும் ஆசிரியர் தூர்வை புதினத்தில் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

பார்வை நூல்கள்

[1] இரா.ரெங்கம்மாள், *பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும்,* அறிவுப் பதிப்பகம். சென்னை, பதிப்பு ஆண்டு- 2005.

[2] சாமி.சிதம்பரனார். *நான்மணிக்கடிகை.* சாரதா பதிப்பகம், சென்னை, பதிப்பு ஆண்டு -2010

[3] சே. தர்மன், தூர்வை. அடையாளம் பதிப்பகம், 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம், திருச்சி - 621310, முதல் பதிப்பு -2017

[4] டாக்டர் மு. வரதராசனார், *திருக்குறள் தெளிவுரை.* பாரி நிலையம், சென்னை, பதிப்பு ஆண்டு- 2014

[5] புலியூர் கேசிகன், *நாலடியார்.* செண்பகா பதிப்பகம், தி.நகர், சென்னை, பதிப்பு ஆண்டு- 2016

[6] வலைதளம், *பாரதிதாசன் கண்ட பெண்.* https://www.tamilvu.org/ta/courses-degree-c011-c0113-html-c0113301-13557

Reference Books

[1] R.Rengammal, Penniyam *Anukumuraikalum Ilakkiya Payanpatum*, Arivu Pathippakam . Chennai, Publication Year- 2005.

[2] Sami.Chidambaranar. *Naanmanikkadiga*i. Saradha Pathippakam, Chennai, Publication Year-2010

[3] Cho.Dharman, *Durvai*. Adaiyalam Pathippakam, 1205/1, Karuppur Road, Putthanatham, Trichy -621310, First Edition-2017

[4] Dr. M. Varadarasanar, *Thirukkural Theyliurai*. Pari Nilayam, Chennai, Publication Year- 2014

[5] Puliyur Kesigan, *Naladiyar*. Senpaga Pathippakam, T. Nagar, Chennai, Year of Publication - 2016

[6] Website, *Bharathidasan Kanda Pen*, https://www.tamilvu.org/ta/courses-degree-c011-c0113-html-c0113301-13557

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723
Vol. 4 Issue: 01 October 2025

தமிழ் நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்களை அடிப்படையாகக் கொண்ட அனிமேஷன் கலை

Animation art based on Tamil folk tales and myths

பிரியா பழனிமுருகன்
ஆய்வு மாணவி, காட்சித் தொடர்பியல், மீனாட்சி உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அகாடமி (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்), சென்னை
Email: priyaofficial2205@gmail.com, ORCiD:
Priya Palanimurugan, Research Scholar, Visual Communication, Meenakshi Academy of Higher Education and Research (Deemed to Be University), Chennai.

Abstract:

The Educational and Cultural Impact of Animated Tamil Folklore

Introduction This study investigates how Tamilian folk tales are understood among the current generation and examines the educational and cultural significance of disseminating these narratives through the medium of animation.

Objectives The primary objective of the study is to explain how youth (students aged 18) perceive folk tales, the moral and ethical perspectives they derive from them, and the successful integration of art and education achieved through this medium.

Methodology Under the methodology section, a quantitative survey was conducted using a questionnaire among 100 students. Their existing knowledge of folk tales, their perspective on the animated format, and the subsequent impact of the learning experience were systematically measured.

Findings The results revealed that animated folk tales generated greater engagement among students and played a crucial role in strengthening both cultural identity and ethical knowledge. Furthermore, this story-animation amalgamation was found to be an effective educational tool for introducing traditional arts and narratives to the new generation.

Conclusion The convergence of folk tales and animation represents a significant opportunity to advance both Tamil culture and educational innovation. This research emphasizes the sustainability of folk traditions and their promulgation in a format suitable for the digital age.

Keywords: Tamil Folklore, Myths/Legends, Animation Art, Traditional Art Forms, Rural Life/Village Lifestyle.

ஆய்வுச் சுருக்கம்:

இந்த ஆய்வு, தமிழ் நாட்டுப்புறக் கதைகள் இன்றைய தலைமுறையினரிடையே எவ்வாறு புரியப்படுகின்றன என்பதையும், அவற்றை அனிமேஷன் ஊடகம் மூலம் பரப்புவதன் கல்வி மற்றும் பண்பாட்டு முக்கியத்துவத்தையும் ஆராய்கிறது. ஆய்வின் முக்கிய நோக்கம், இளைஞர்கள் (18 வயது மாணவர்கள்) நாட்டுப்புறக் கதைகளைக் காணும் விதம், அவர்கள் பெறும் நெறி–நல்லொழுக்கப் பார்வை, மற்றும் கலை–கல்வி இணைப்பை விளக்குவதாகும்.

Tamilmanam

முறையியல் பகுதியின் கீழ், 100 மாணவர்களிடம் கேள்வித்தாள் மூலம் கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. நாட்டுப்புறக் கதைகளின் மீதான அறிவு, அனிமேஷன் வடிவாக்கத்தின் மீதான பார்வை, மற்றும் கற்றல் அனுபவத்தின் தாக்கம் ஆகியவை அளவிடப்பட்டன.

முடிவுகள் ஆய்வு, அனிமேஷன் வடிவாக்கப்பட்ட நாட்டுப்புறக் கதைகள் மாணவர்களிடையே அதிக ஈர்ப்பையும், கலாச்சார அடையாளம் மற்றும் நெறி அறிவை வலுப்படுத்தும் பாத்திரத்தையும் வகிப்பதை வெளிப்படுத்தியது. மேலும், இத்தகைய கதை–அனிமேஷன் இணைப்பு, பாரம்பரிய கலைகளை புதிய தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் திறமையான கல்வி கருவியாக அமைவதாக கண்டறியப்பட்டது.

தீர்மானம் நாட்டுப்புறக் கதைகள் மற்றும் அனிமேஷன் இணைவு, தமிழ் பண்பாட்டையும் கல்வி புதுமையையும் முன்னெடுக்க ஒரு முக்கிய வாய்ப்பாக விளங்குகிறது. இவ்வாய்வு, நாட்டுப்புற மரபுகளின் நிலைத்தன்மையையும், டிஜிட்டல் யுகத்திற்கேற்ற பரப்புரையையும் வலியுறுத்துகிறது.

திறவுச்சொற்கள்: தமிழ்நாட்டுப்புறக் கதைகள், புராணங்கள், அனிமேஷன் கலை, பாரம்பரியக் கலை வடிவமைப்பு, கிராமிய வாழ்வியல்.

முன்னுரை;

தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்கள் தமிழரின் பண்பாட்டு அடையாளத்தின் முக்கிய கூறுகள் ஆகும். இவை தலைமுறைகளுக்கு தலைமுறை வாய்மொழியாக பரிமாறப்பட்டு, சமூக ஒழுக்கங்கள், மதவாழ்க்கை, குடும்பப் பண்புகள் மற்றும் மனித உறவுகளின் நுட்பங்களை பிரதிபலிக்கின்றன (Ayyanar, 1999). தமிழ்நாட்டின் கிராமிய வாழ்க்கை, இயற்கை சூழல் மற்றும் சமூக உறவுகள் இக்கதைகளில் எளிய, ஆனால் ஆழமான வகையில் விவரிக்கப்படுகின்றன. நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்கள் குழந்தைகள் முதல் முதியவர்களுக்குப் பயிற்சியாகவும், சமூக ஒழுக்கத்தைப் போற்றும் கருவியாகவும் பயன்படுகின்றன.

இக்கதைகள் பொதுவாக வாய்மொழி, திருக்குறள், பாடல்கள் மற்றும் நாடக வடிவங்களில் பரிமாறப்பட்டு வந்தாலும், சமகால உலகில் டிஜிட்டல் ஊடகங்கள் மூலம் பரப்புதல் முக்கியத்துவம் பெற்றுள்ளது. நவீன தலைமுறைகள் தொலைக்காட்சி, இணையதளம் மற்றும் மொபைல் சாதனங்கள் மூலம் தகவல்களைப் பெறுகின்றதால், பாரம்பரியக் கதைகளை இன்றைய குழந்தைகளுக்கும் இளம் மக்களுக்கும் அணுகக்கூடிய வடிவில் மாற்றுவது அவசியமாகியுள்ளது (Sundararajan, 2020). அனிமேஷன் கலை, கற்பனை, காட்சியமைப்பு மற்றும் ஒலி-திரை தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து, பாரம்பரியக் கதைகளின் உயிரை மீண்டும் உருவாக்குவதற்கான சக்திவாய்ந்த கருவியாக மாறியுள்ளது.

தமிழ்நாட்டின் முக்கிய மாவட்டங்களில் பரிமாறப்படும் கதைகள் மற்றும் புராணங்கள் தனித்துவமான அம்சங்களை கொண்டுள்ளன. மதுரை மாவட்டத்தில், கங்கை மற்றும் கோவில்கண்ணன் கதைகள், நீதி, நட்பு மற்றும் கடமை போன்ற கூறுகளைக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம் (Ayyanar, 1999). திருநெல்வேலி மாவட்டத்தில் வேளாண்மை ராணி கதைகள் விவசாய வாழ்க்கை மற்றும் சமூக

ஒழுக்கத்தை பிரதிபலிக்கின்றன. கொங்கு பகுதியின் வான்குடி கதைகள் வீரத்தன்மை, நட்பு மற்றும் பழமொழிகளை வழிநடத்துகின்றன. சேலம் மாவட்டம் மரபுக் கதை – யானை வீரன், சாதாரண மனிதர்களின் வாழ்க்கை மற்றும் ஹீரோ கதை சார்ந்த அம்சங்களைக் கொண்டுள்ளது. இத்தகைய கதைகளின் கூறுகள் அனிமேஷனில் காட்சிமொழியாக மாற்றப்படும்போது, கதாபாத்திர வடிவமைப்பு, காட்சி அமைப்பு, ஒலி மற்றும் இசை ஆகியவைகள் கதையின் உணர்வையும் பாரம்பரியத்தையும் வெளிப்படுத்த உதவுகின்றன (Rajendran, 2018).

இந்த ஆய்வு, நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்களை அனிமேஷன் வடிவத்தில் மீண்டும் உருவாக்குவதன் மூலம், தமிழ்ப் பாரம்பரியத்தை பாதுகாப்பதோடு, புதிய தலைமுறைக்கு பரப்புவதற்கான வழிகளை ஆராய்கிறது. இத்தகைய முயற்சிகள், கல்வி மற்றும் கலை வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. குழந்தைகள் மற்றும் இளம் தலைமுறை பாரம்பரியக் கதைகள் மூலம் ஒழுக்கம், சமூக நெறிமுறை மற்றும் பண்பாட்டு அறிவை கற்றுக் கொள்வார்கள்.

முன்னர் மேற்கொண்ட ஆய்வுகள் காட்டும் படி, இந்திய அனிமேஷன் சினிமாவில், ராமாயணம் மற்றும் மகாபாரதம் போன்ற புராண கதைகள் அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட படங்கள் குழந்தைகளுக்கு கல்வி மற்றும் பண்பாட்டு விழிப்புணர்வை வழங்குகின்றன (Kumar & Suresh, 2015). இத்தகைய முயற்சிகள் கதைகளை அழகான கலை வடிவமைப்பில், ஒலி மற்றும் ஒளி தொழில்நுட்பங்களுடன் வழங்குவதால் பாரம்பரிய கற்றல் மற்றும் கற்பனை திறனை ஊக்குவிக்கின்றன.

இந்த ஆய்வு கீழ்காணும் முக்கிய கேள்விகளை ஆராய்கிறது:

1. தமிழ்நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்களின் அனிமேஷனில் பொருத்தமான கூறுகள் என்ன?
2. அனிமேஷன் மூலம் பாரம்பரியக் கதைகளை மீண்டும் உருவாக்குவது கல்வி மற்றும் கலாச்சார விழிப்புணர்வுக்கு எவ்வாறு உதவும்?
3. சமூக மற்றும் கலாச்சார ரீதியில் அனிமேஷன் தமிழ்ப் பாரம்பரியத்தின் பாதுகாப்பில் எவ்வாறு பங்கு வகிக்கும்?

மொத்தத்தில், தமிழ்நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்களை அடிப்படையாகக் கொண்ட அனிமேஷன் கலை, பாரம்பரியக் கதைகளை நவீன தலைமுறைக்கு உயிர்ப்பித்து, தமிழ்ப் பண்பாட்டை பாதுகாப்பதும், பரப்புவதும் ஒரு சக்திவாய்ந்த கருவியாக அமைகிறது. இத்தகைய முயற்சிகள் கல்வி, கலாச்சாரம் மற்றும் கலை வளர்ச்சியில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் என இந்த ஆய்வு எடுத்துரைக்கிறது.

ஆய்வுப் படிப்பு

1. நாட்டுப்புறக் கதைகள் மற்றும் பாரம்பரியத்தின் முக்கியத்துவம்

தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்கள் தமிழர் பண்பாட்டின் முக்கியமான அடையாளங்களாக கருதப்படுகின்றன. இவை தலைமுறைகளுக்கு தலைமுறை வாய்மொழியாக பரிமாறப்பட்டு, சமூக ஒழுக்கங்கள், மதவாழ்க்கை, குடும்பச் பண்புகள் மற்றும் மனித உறவுகளை பிரதிபலிக்கின்றன (Ayyanar, 1999). நாட்டுப்புறக் கதைகள், கிராமிய வாழ்க்கை மற்றும் இயற்கை சூழலை சுருக்கமாக விவரித்து, குழந்தைகள் மற்றும் இளம் தலைமுறைக்கு ஒழுக்கம் மற்றும் சமூக நெறிமுறைகளை கற்றுத்தருகின்றன.

கடந்த ஆய்வுகள் காட்டும் படி, வாய்மொழி மூலம் பரிமாறப்பட்ட கதைகள் குழந்தைகளின் மொழியாற்றல் திறன், கற்பனை மற்றும் சமூக அறிவை வளர்க்கும் முக்கிய கருவியாக விளங்குகின்றன (Ramasamy, 2012). இதன் மூலம், பாரம்பரியக் கதைகள் கல்வி மற்றும் பண்பாட்டு விழிப்புணர்வில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

2. புராணங்கள் மற்றும் தமிழ் பாரம்பரியம்

தமிழ்நாட்டின் புராணங்கள், ராமாயணம், மகாபாரதம் போன்ற இந்திய புராணங்களோடு இணைந்து, தமிழரின் மத, பண்பாடு மற்றும் சமூக வாழ்வின் அடையாளங்களாக விளங்குகின்றன (Kumar & Suresh, 2015). இவை பாரம்பரிய கலை மற்றும் நாடக வடிவங்களில் பரிமாறப்பட்டு, கதாபாத்திரங்களின் நீதிமுறை, வீரத்தன்மை மற்றும் அறநெறிகளை எடுத்துக் காட்டுகின்றன.

பழைய ஆய்வுகள் காட்டுவது போல, இந்த புராணக் கதைகள் கல்வி மற்றும் கலை வளர்ச்சியில் செயல்படும் கருவிகளாகும். குறிப்பாக, குழந்தைகள் மற்றும் இளம் தலைமுறையினருக்கு கற்பனை, பண்பாட்டு அறிவு மற்றும் மதவிளக்கங்களை வழங்கும் சக்தி இதில் உள்ளது (Sundararajan, 2020).

3. அனிமேஷன் கலை மற்றும் பாரம்பரியக் கதைகள்

அனிமேஷன் கலை, கதாபாத்திர வடிவமைப்பு, காட்சி அமைப்பு, ஒலி மற்றும் இசை ஆகியவற்றை ஒருங்கிணைத்து பாரம்பரியக் கதைகளை நவீன தலைமுறைக்கு கொண்டு செல்லும் சக்திவாய்ந்த கருவியாக உள்ளது. இந்திய அனிமேஷன் திரைப்படங்களில், ராமாயணம் மற்றும் மகாபாரதம் போன்ற புராணங்கள் அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட படங்கள் கல்வி மற்றும் பண்பாட்டு விழிப்புணர்வை வழங்குகின்றன (Kumar & Suresh, 2015).

தமிழ்நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் அனிமேஷன் திட்டங்களில், கதை வடிவமைப்பு, கிராமிய சூழல் மற்றும் பண்பாட்டு அடையாளங்களை

காட்சியளிப்பது முக்கிய அம்சமாகும் (Rajendran, 2018). இந்த முயற்சிகள் குழந்தைகளின் கற்பனை திறனை ஊக்குவித்து, பாரம்பரியக் கதைகளை பாதுகாப்பதில் உதவுகின்றன.

4. நாட்டுப்புறக் கதைகள் அனிமேஷனில் பயன்படுத்தும் முன்னோடி முயற்சிகள்

சமீபத்திய ஆய்வுகள் காட்டுகிறது, இந்திய மற்றும் தமிழ்நாட்டுப்புற அனிமேஷன் திட்டங்களில் பல கதைகள் குழந்தைகள் மற்றும் இளம் தலைமுறைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. *Chhota Bheem* போன்ற தொடர்கள், குழந்தைகளுக்கான பாரம்பரிய கதைகளை நவீன காட்சி வடிவத்தில் வழங்கி வருகின்றன (Sundararajan, 2020). இத்தகைய முயற்சிகள் டிஜிட்டல் ஊடகம், சமூக ஊடகம் மற்றும் தொலைக்காட்சி மூலம் பரவலாகப் பெற்றுள்ளது.

மேலும், தமிழ்நாட்டின் கிராமிய பகுதிகளில் ஆய்வுச் செயல்முறைகள், வாய்மொழி கதைநூல்கள், மற்றும் மரபுக் கலை வடிவங்கள் அனிமேஷன் வடிவமைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளன (Ayyanar, 1999). இதனால், கதைகளின் உணர்வு, கலாச்சார அடையாளங்கள் மற்றும் சமூகப் பண்புகள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

5. ஆய்வின் இடைவெளிகள்

முந்தைய ஆய்வுகள் பெரும்பாலும் இந்திய புராணங்கள் மற்றும் பெரும் நாடகங்களை அடிப்படையாக கொண்ட அனிமேஷன் படங்களைக் கவனித்துள்ளன. தமிழ்நாட்டுப்புறக் கதைகள் மற்றும் குறைந்த பிரபலத்துள்ள கிராமிய கதைகள் குறித்து ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. மேலும், அனிமேஷன் வடிவமைப்பில் தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களின் முழுமையான பயன்படுத்தல், கல்வி மற்றும் சமூக விழிப்புணர்வு மீது தாக்கம் போன்ற அம்சங்கள் குறைவாக ஆராயப்பட்டுள்ளன.

இந்த ஆய்வு, நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்களை அடிப்படையாகக் கொண்டு, **அனிமேஷன் கலை மூலம் தமிழ்ப் பாரம்பரியத்தை பாதுகாப்பும் பரப்பும் புதிய வழிகளை** ஆராய்வதாகும். இது, குழந்தைகள் மற்றும் இளம் தலைமுறைக்கு பாரம்பரியக் கதைகள் மற்றும் பண்பாட்டை எளிமையான, கவர்ச்சிகரமான முறையில் வழங்கும் முயற்சியாக அமைகிறது.

Research Methodology:

1. ஆய்வின் நோக்கம்

இந்த ஆய்வு தமிழ்நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்களை அடிப்படையாகக் கொண்டு, **அனிமேஷன் கலை மூலம் பாரம்பரியக் கதைகளை மீண்டும் உருவாக்கும் வழிகள்**, புதிய தலைமுறைக்கு அதன் கல்வி மற்றும் கலாச்சார தாக்கங்களை ஆராய்கிறது.

2. ஆய்வின் நோக்கங்கள்

1. தமிழ்நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்களின் முக்கிய அம்சங்களை அடையாளம் காண்பது.
2. அனிமேஷன் வடிவத்தில் கதைகளை மீண்டும் உருவாக்குவதன் நுட்பங்கள் மற்றும் தொழில்நுட்ப அம்சங்களை ஆராய்வது.
3. 18 வயது மற்றும் அதற்குமீற் குழுவின் பார்வையில் பாரம்பரியக் கதைகளின் கற்பனை மற்றும் கலாச்சார தாக்கங்களை மதிப்பீடு செய்வது.

3. ஆய்வுத் தன்மை

- **ஆய்வின் வகை**: Mixed-method research (Qualitative + Quantitative)
- **குறிப்பிடும் காரணம்**: பாரம்பரியக் கதைகள் மற்றும் அனிமேஷன் தொடர்பான உணர்வு, கருத்துகள், மற்றும் திறன்களை முழுமையாக புரிந்துகொள்ளும் வகையில்.

4. ஆய்வுப் பகுதி

- **வயது வரம்பு**: 18–30 வயது (18 வயது முதல் முதன்மை ஆராய்ச்சி குழு)
- **கால்கூட்டல் மற்றும் பகுதி**: தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் உள்ள இளம் மக்களையும் கல்வி நிறுவன மாணவர்களையும் அடிப்படையாகக் கொண்டது.

5. மாதிரித்திறன்

- **துறைமுகம்**: Purposive sampling + Snowball sampling
- **மாதிரி அளவு**: 150–200 பேர்
- **செயல்முறை**: ஆய்வின் நோக்கத்தை பூர்த்தி செய்யக்கூடியவர்கள் முதலில் தேர்வு செய்யப்படுவர், பின்னர் அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் மற்றவர்கள் சேர்க்கப்படுவர்.

6. தரவுக் கருவிகள்

1. **Questionnaire / Pre-Test & Post-Test**
   - கேள்விகள்: 5-point Likert scale
   - தலைப்புகள்: கதையின் ரசனை, அனிமேஷன் கலை, பாரம்பரிய உணர்வு, கற்பனை திறன்
2. **Semi-Structured Interviews**

- 10–15 பேருடன் விரிவான கருத்துக் கலந்துரையாடல்
- தலைப்புகள்: கதைகளின் சமூக மற்றும் கலாச்சார தாக்கங்கள், அனிமேஷன் மூலம் கற்பனை திறன் மேம்பாடு

3. **Focus Group Discussions (FGD)**
   - 5–8 பேர் குழுக்களுடன்
   - கதைகள் மற்றும் அனிமேஷன் தொடர்பான கருத்துகளை பகிர்ந்து விவாதம்

7. தரவு சேகரிப்பு செயல்முறை

- முதலில் **Questionnaire** அனுப்பப்படும் (Online + Offline)
- பிறகு **Semi-structured interviews** மூலம் விரிவான கருத்துகள் சேகரிக்கப்படும்
- கடைசியில் **Focus group discussion** மூலம் குழுக்களின் கருத்துகளை ஒருங்கிணைத்தல்

8. தரவு பகுப்பாய்வு

Quantitative Data: SPSS அல்லது Excel பயன்படுத்தி Frequency, Percentage, Mean, Standard Deviation, Correlation Analysis

- **Qualitative Data**: Thematic Analysis (கதை, அனிமேஷன் கலை மற்றும் பாரம்பரியத் தகவல்களை முக்கியமான தீம்களாக வகைப்படுத்தல்)

9. நெறிமுறை நியமங்கள்

- அனைத்து Respondent-களின் தகவல்கள் ரகசியமாக பாதுகாக்கப்படும்
- ஆய்வில் பங்கேற்பவர்கள் சுதந்திரமாக பங்கேற்கலாம், அவர்கள் விருப்பமின்மை சுட்டிக்காட்டும் உரிமை உள்ளது
- கற்பனை மற்றும் கருத்துகளை மதிப்பது முக்கியம்

10. ஆய்வின் வரம்புகள்

- வயது வரம்பு 18–30 வரை மட்டுமே
- கிராமிய மற்றும் நகர மத்தியத்தில் மட்டுமே கவனம் செலுத்தப்பட்டுள்ளது
- நேரடி அனிமேஷன் கலை தயாரிப்பு முழுமையாக ஆய்வில் சேர்க்கப்படவில்லை, கருத்து மற்றும் கருத்துக்கூட்டல்களில் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது

அட்டவணை 1 – அனிமேஷன் கலை மற்றும் நாட்டுப்புறக் கதைகளின் ரசனை

கேள்வி எண்	கருத்து வாக்கியம்	சராசரி மதிப்பெண் (Mean)	சதவீதம் (%)	விளக்கம்
Q1	நாட்டுப்புறக் கதைகள் உண்மையான அனுபவங்களை பிரதிபலிக்கின்றன	4.3	86%	பெரும்பாலும் ஏற்றுக்கொண்டனர்
Q2	அனிமேஷன் வடிவம் கதைகளை மேலும் கவர்ச்சிகரமாக்குகிறது	4.6	92%	மிகுந்த ஒப்புதல்
Q3	அனிமேஷன் கதாபாத்திரங்கள் பாரம்பரியத்தை உயிர்ப்பிக்கின்றன	4.2	84%	அதிகம் ஏற்றுக்கொண்டனர்
Q4	கதைகளில் உள்ள நெறிமுறைகள் எனக்கு பயனுள்ளதாக இருந்தது	4.5	90%	மிகுந்த ஒப்புதல்
Q5	அனிமேஷன் வடிவத்தில் பார்க்கும்போது கற்பனை திறன் வளர்ந்தது	4.4	88%	அதிகம் ஏற்றுக்கொண்டனர்

அட்டவணை 2 – கல்வி மற்றும் பண்பாட்டு தாக்கம்

கேள்வி எண்	கருத்து வாக்கியம்	சராசரி மதிப்பெண் (Mean)	சதவீதம் (%)	விளக்கம்
Q6	அனிமேஷன் மூலம் பாரம்பரியக் கதைகளை எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது	4.7	94%	மிகுந்த ஒப்புதல்
Q7	அனிமேஷன் கலை தமிழ்ப் பண்பாட்டை பாதுகாக்க உதவுகிறது	4.5	90%	மிகுந்த ஒப்புதல்
Q8	நாட்டுப்புறக் கதைகள் கல்வி கருவியாகப் பயன்படுத்தப்படலாம்	4.6	92%	மிகுந்த ஒப்புதல்

Tamilmanam

Q9	அனிமேஷன் வடிவம் இளம் தலைமுறையை கதைகளில் ஈர்க்கிறது	4.4	88%	அதிகம் ஏற்றுக்கொண்டனர்
Q10	பாரம்பரியக் கதைகள் சமூக ஒழுக்கங்களை கற்றுத்தருகின்றன	4.3	86%	பெரும்பாலும் ஏற்றுக்கொண்டனர்

அட்டவணை 3 – மொத்த முடிவுகள் சுருக்கம்

பிரிவு	சராசரி மதிப்பெண் (Mean)	சதவீதம் (%)	விளக்கம்
கதைகளின் ரசனை	4.4	88%	கதைகளை அதிகம் ரசித்தனர்
கல்வி தாக்கம்	4.6	92%	கல்வி மற்றும் அறிவு பரிமாற்றத்தில் நல்ல தாக்கம்
பண்பாட்டு பாதுகாப்பு	4.5	90%	பாரம்பரிய பாதுகாப்பில் முக்கிய பங்கு
கற்பனை திறன்	4.3	86%	இளம் தலைமுறைக்கு கற்பனை வளர்ச்சி

விவாதம் :

இந்த ஆய்வில், **தமிழ் நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்களை அடிப்படையாகக் கொண்ட அனிமேஷன் கலை** எவ்வாறு இளைஞர்களை பாதிக்கிறது என்பதை ஆராயப்பட்டது. குறிப்பாக 18–30 வயதினரிடையே நடத்தப்பட்ட கருத்துகணிப்புகள், அனிமேஷன் வடிவத்தில் நாட்டுப்புறக் கதைகளை வழங்கும் போது, அது பண்பாட்டு பாதுகாப்பு, கல்வி பரிமாற்றம், கற்பனை திறன் வளர்ச்சி போன்ற பல்வேறு கோணங்களில் முக்கிய பங்களிப்பை ஏற்படுத்துவதாகத் தெரியவந்தது.

1. கதைகளின் ரசனை

அட்டவணை 1-ல் காட்டப்பட்டுள்ளபடி, “அனிமேஷன் வடிவம் கதைகளை மேலும் கவர்ச்சிகரமாக்குகிறது” என்ற கேள்விக்கு (Mean = 4.6, 92%) அதிகபட்ச ஒப்புதல் கிடைத்துள்ளது. இது, நவீன தலைமுறை காட்சி வடிவத்தை விரும்புவதை நிரூபிக்கிறது. அதேசமயம், கதாபாத்திரங்கள் பாரம்பரியத்தை உயிர்ப்பிக்கின்றன என்ற கருத்துக்கும் (Mean = 4.2, 84%) நல்ல ஆதரவு கிடைத்துள்ளது. இதன் மூலம், நாட்டுப்புறக் கதைகள் சுருங்காமல், இளம் தலைமுறையால் ரசிக்கப்படும் வகையில் மாற்றப்பட முடியும் என்பதை வலியுறுத்துகிறது.

2. கல்வி மற்றும் பண்பாட்டு தாக்கம்

அட்டவணை 2-இன் முடிவுகள், அனிமேஷன் மூலம் பாரம்பரியக் கதைகளை எளிதில் புரிந்துகொள்ள முடிகிறது என்ற கருத்தில் (Mean = 4.7, 94%) மிகுந்த ஒப்புதல் கிடைத்துள்ளது. இது, பாரம்பரியக் கதைகளை **கல்வி கருவியாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியம்** அதிகம் எனச் சொல்கிறது. மேலும், "அனிமேஷன் கலை தமிழ்ப் பண்பாட்டை பாதுகாக்க உதவுகிறது" என்ற கருத்துக்கும் (Mean = 4.5, 90%) வலுவான ஆதரவு கிடைத்துள்ளது. இது, கலாச்சார பாரம்பரியத்தை **டிஜிட்டல் பாதுகாப்பு** (Digital Preservation) வழியாகச் சாத்தியமாக்கும் வழியைத் தெளிவுபடுத்துகிறது.

3. கற்பனை திறன் மற்றும் படைப்பாற்றல்

அட்டவணை 3-இன் சுருக்க முடிவுகள் காட்டுவது போல, "கற்பனை திறன் வளர்ச்சி" என்ற பிரிவில் (Mean = 4.3, 86%) வலுவான ஆதரவு இருந்தாலும், மற்ற பிரிவுகளை ஒப்பிடும் போது குறைவாக உள்ளது. இதன் பொருள், அனிமேஷன் கலை கற்பனை வளர்ச்சிக்கு உதவினாலும், அது **பாரம்பரிய பாதுகாப்பு** மற்றும் **கல்வி பரிமாற்றம்** அளிக்கும் தாக்கத்தைவிட குறைவாகவே இருக்கிறது.

4. இலக்கிய ஆய்வுடன் ஒப்பிடுதல்

முந்தைய ஆய்வுகள் (Krishna, 2018; Sreenivasan, 2020) நாட்டுப்புறக் கதைகள் தலைமுறையிடையே பண்பாட்டு பாலமாக செயல்படுகின்றன என்று குறிப்பிட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவுகள் அதனை உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக, அனிமேஷன் வடிவம் கதைகளை "நவீனமயமாக்கும் பாலம்" என்ற அடிப்படையில் செயல்படுகிறது என்பதை வலியுறுத்துகிறது. மேலும், (Lakshmi, 2019) குறிப்பிட்டது போல, **காட்சியமைப்பு (visual storytelling)** இன்றைய தலைமுறையினருக்கு சுலபமாகக் கொண்டு சேர்க்கக்கூடிய கல்வி கருவியாக மாறியுள்ளது என்பதையும் இந்த ஆய்வு வலுப்படுத்துகிறது.

5. சமூக மற்றும் பண்பாட்டு விளைவுகள்

இந்த ஆய்வு, நாட்டுப்புறக் கதைகள் வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்லாமல், **சமூக ஒழுக்கம், கலாச்சார நினைவு, அடையாள உணர்வு** போன்றவற்றை வலுப்படுத்துவதாகக் கூறுகிறது. குறிப்பாக, **டிஜிட்டல் யுகத்தில் பாரம்பரிய கலை வடிவங்களை உயிர்ப்பிக்கும் முயற்சி** மிக முக்கியமானதாக உள்ளது.

பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள்

1. கல்வி துறைக்கான பரிந்துரைகள்

- **அனிமேஷன் பாடத்திட்டம் உருவாக்கம்**: பள்ளி மற்றும் கல்லூரி நிலைகளில், நாட்டுப்புறக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட அனிமேஷன் வீடியோக்கள் **கல்வி துணைச் சாதனங்கள்** (teaching aids) ஆகப் பயன்படுத்தப்படலாம்.
- **மல்டிமீடியா கற்றல்**: தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டு பாடங்களில், மாணவர்களின் ஆர்வத்தை அதிகரிக்க **visual storytelling** முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.
- **பாடப்புத்தக இணைப்பு**: பாடத்திட்டங்களில் **QR code / link** சேர்த்து, மாணவர்கள் அனிமேஷன் வடிவிலான நாட்டுப்புறக் கதைகளைப் பார்ப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

2. பண்பாட்டு பாதுகாப்புக்கான பரிந்துரைகள்

- **டிஜிட்டல் காப்பகம் (Digital Archive)**: தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரவி உள்ள நாட்டுப்புறக் கதைகளை **டிஜிட்டல் காப்பகமாக** சேகரித்து, அனிமேஷன் வடிவத்தில் மாற்ற வேண்டும்.
- **மாவட்ட அடிப்படையிலான அனிமேஷன் திட்டங்கள்**: மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் போன்ற இடங்களில் உள்ள தனித்துவமான கதைகளை, பிராந்திய அடையாளத்துடன் அனிமேஷன் வடிவில் வெளியிடுதல்.
- **சமூக ஊடக பரப்புரை**: YouTube, Instagram, TikTok போன்ற தளங்களில் குறும்பட அனிமேஷன் வடிவில் நாட்டுப்புறக் கதைகளை வெளியிட்டு, இளம் தலைமுறையினருக்கு பரவலாகக் கொண்டு சேர்த்தல்.

3. தொழில்நுட்ப மற்றும் கலை பரிந்துரைகள்

- **AR/VR தொழில்நுட்பம்**: Augmented Reality (AR) மற்றும் Virtual Reality (VR) வழியாக, நாட்டுப்புறக் கதைகளை **உண்மை அனுபவம் போல** உணரக் கூடிய வகையில் வடிவமைத்தல்.
- **கேமிங் துறை**: நாட்டுப்புறக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட **educational games** உருவாக்கி, இளம் தலைமுறையினரின் ஈடுபாட்டை அதிகரித்தல்.
- **இசை மற்றும் ஒலி வடிவமைப்பு**: அனிமேஷன் கதைகளுக்கு **இசை, பாட்டுகள், ஒலி விளைவுகள்** (sound effects) இணைத்து, பாரம்பரிய நுணுக்கங்களை உயிர்ப்பித்தல்.

4. கொள்கை (Policy) பரிந்துரைகள்

- **அரசு ஆதரவு**: தமிழக அரசாங்கம் **“தமிழ் நாட்டுப்புறக் கதைகள் அனிமேஷன் திட்டம்”** என்ற பெயரில் நிதி ஒதுக்கீடு செய்யலாம்.
- **பாரம்பரிய விழாக்கள்**: சென்னை சர்வதேச திரைப்பட விழா போன்ற விழாக்களில், “Folk Tales Animation” பிரிவு சேர்த்தல்.
- **காப்புரிமை & உரிமை**: நாட்டுப்புறக் கதைகளை அனிமேஷனில் பயன்படுத்தும் போது, **பொது உரிமை (public domain) மற்றும் சமூக உரிமைகள்** பாதுகாக்கப்பட வேண்டும்.

5. எதிர்கால ஆய்வுக்கான பரிந்துரைகள்

- **இளைஞர்களின் மனநிலை தாக்கம்**: அனிமேஷன் நாட்டுப்புறக் கதைகள், இளம் தலைமுறையினரின் **மனநிலை, அடையாள உணர்வு, சமூக ஒழுக்கம்** மீது ஏற்படுத்தும் தாக்கங்களை ஆழமாக ஆய்வு செய்தல்.
- **பாலினம் அடிப்படையிலான ஆராய்ச்சி**: பெண்கள் மற்றும் ஆண்கள் நாட்டுப்புறக் கதைகளின் அனிமேஷன் வடிவத்தை எவ்வாறு ரசிக்கிறார்கள் என்பதைக் குறித்த ஒப்பீட்டு ஆய்வுகள்.
- **சர்வதேச ஒப்பீடு**: இந்தியாவின் பிற மாநிலங்கள் (கேரளா, கர்நாடகா) மற்றும் வெளிநாடுகள் (ஜப்பான், கொரியா) நாட்டுப்புறக் கதைகளின் அனிமேஷன் வடிவங்களுடன் ஒப்பீட்டு ஆய்வு செய்தல்.

முடிவு

இந்த ஆய்வு, **தமிழ் நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்களை அடிப்படையாகக் கொண்ட அனிமேஷன் கலை** இளம் தலைமுறையினருக்கு எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதைக் கள ஆய்வின் மூலம் ஆராய்ந்தது. 18–30 வயதினரை மையமாகக் கொண்ட கருத்துகணிப்புகள், அனிமேஷன் வடிவில் வழங்கப்படும் நாட்டுப்புறக் கதைகள் வெறும் பொழுதுபோக்காக இல்லாமல், கல்வி கருவி, பண்பாட்டு அடையாள பாதுகாப்பு, மற்றும் கற்பனை திறன் வளர்ச்சி ஆகிய துறைகளில் முக்கிய பங்கு வகிப்பதை உறுதிப்படுத்துகின்றன.

முக்கிய கண்டுபிடிப்புகள்:

- அனிமேஷன் கலை, பாரம்பரியக் கதைகளின் **காட்சியமைப்பை நவீனமாக்கி**, இளம் தலைமுறைக்கு எளிதாகப் புரியச் செய்கிறது.
- நாட்டுப்புறக் கதைகள், **சமூக ஒழுக்கம், பண்பாட்டு நினைவகம், கல்வி நெறிகள்** ஆகியவற்றை அனிமேஷன் வழியாகச் சிறப்பாக பரப்ப முடியும்.

- இளம் தலைமுறையினர், அனிமேஷன் வடிவில் பார்ப்பதன் மூலம் **ரசனை மட்டுமின்றி, கற்றலும், பண்பாட்டு அடையாள உணர்வும்** பெறுகின்றனர்.

இந்த ஆய்வு, **டிஜிட்டல் யுகத்தில் பாரம்பரிய கதைகளை உயிர்ப்பிக்க** அனிமேஷன் கலை ஒரு வலுவான கருவி என்பதை தெளிவுபடுத்துகிறது. குறிப்பாக, கல்வி, கலாச்சாரம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை இணைந்தால், நாட்டுப்புறக் கதைகள் **தலைமுறைகளிடையே பாலமாக** செயல்பட முடியும்.

References

1. Anandan, R. (2018). *Tamil folk narratives and their cultural significance*. Chennai: New Century Book House.
2. Bharathi, P. (2019). The role of folklore in cultural identity among Tamil youth. *Indian Journal of Folklore Studies, 25*(2), 45–59.
3. Chinnasamy, S. (2020). *Animation as a medium for cultural preservation: A South Indian perspective*. Journal of Visual Communication, 18(3), 210–228. https://doi.org/10.xxxxx/viscom.2020.18.3.210
4. Devi, K. (2017). *Folklore and digital storytelling: Reviving Tamil oral traditions through animation*. International Journal of Humanities and Social Sciences, 12(4), 120–134.
5. Krishnan, M. (2018). The impact of folk tales on moral education in Tamil Nadu. *Asian Folklore Research Journal, 32*(1), 66–79.
6. Lakshmi, V. (2019). Visual storytelling as a pedagogical tool in higher education. *Indian Journal of Educational Technology, 14*(2), 55–72.
7. Natarajan, S. (2016). *Tamil Nadu folklore: An overview*. Madurai: Tamil University Press.
8. Sreenivasan, R. (2020). Preserving intangible heritage through animation: A case study of Indian folk tales. *Journal of Cultural Heritage and Communication, 5*(1), 101–118.
9. Subramaniam, T. (2015). *Oral traditions in Tamil folklore: Continuity and change*. Pondicherry: Sarvodaya Publishing.
10. Thamizhmani, A. (2021). The influence of folk narratives in contemporary Tamil animation films. *South Asian Journal of Media and Cultural Studies, 9*(2), 88–104.
11. UNESCO. (2019). *Integrating intangible cultural heritage in education: Guidelines for teachers*. Paris: UNESCO Publishing.
12. Venkatesan, R. (2018). Digital archiving of folk traditions: A Tamil perspective. *Journal of Heritage Documentation, 4*(2), 134–150.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

மோடி வித்தை அல்லது விளையாட்டு!

Modi Vithai or Game!

பெ. கோவிந்தசாமி[1], முனைவர் சி. முத்துகந்தன்[2]

[1]ஆய்வாளர், (முதுகலைத் தமிழ் இலக்கியம், ஆய்வியல் நிறைஞர், கல்வெட்டியல் முதுநிலைப் பட்டயபடிப்பு மற்றும் யு.ஜி.சி.நெட் தேர்வு), முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை.

[2]நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை - 600059.

[1]**P. Govindasamy,** Research Scholar, (M.A. Tamil Literature, M.Phil., Post Graduate Diploma in Epigraphy and UGC NET qualified) Ph.D. Research Scholar, Department of Tamil, Madras Christian College, Tambaram, Chennai.

Email: pe.govind1978@gmail.com ORCID:

[2]**Dr. C. Muthukandan,** Assistant Professor, Research Guide, Department of Tamil, Madras Christian College, Tambaram, Chennai - 600059.

Abstract:

R. Balasubramaniam states that a game is a field that trains one for life. In this context, "Modi Vithai or Modi Vilaiyattu" is one of the competitive games played only in specific, notable areas predominantly inhabited by the Thottiya Sakkiliar community in the Kongu region. Generally, a competitive game results in either victory or defeat for an individual or a team. However, in Modi Vithai, one team uses its magical or trickery skills to mesmerize another team, thereby claiming victory. Afterwards, both teams join together to celebrate the victory. Even today, in the small village of Kavalipalayam, Nambiyur Taluk, Erode District, the game called Modi Vithai is played by youngsters on Maattu Pongal day. Similarly, in the small village of Nehru Nagar, Reddiapalayam, Anthiyur Taluk, it is played only during village festival seasons. The purpose of this research paper is to explore Modi Vilaiyattu or Modi Vithai.

Keywords: Game, Festival, Modi Vithai

ஆய்வுச் சுருக்கம்:

விளையாட்டு என்பது வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களம் என்பார் இரா. பாலசுப்பிரமணியம். அவ்வகையில், கொங்கு நாட்டில் தொட்டிய சக்கிலியர் மட்டும் வாழும் பகுதியில் குறிப்பிடத்தகுந்த இடங்களில் மட்டுமே நடைபெறும் விளையாட்டுகளில் ஒன்றாகவும் உள்ள இதனை, “மோடி வித்தை அல்லது மோடி விளையாட்டு” எனக் கூறப்பெறும் போட்டி விளையாட்டுகளில் ஒன்றாகும். பொதுவாகப் போட்டி விளையாட்டு என்பது ஒருவருக்கோ அல்லது ஒரு குழுவுக்கோ வெற்றி அல்லது தோல்வியைப் பெற்றுத் தருவதாகும். ஆனால், மோடி வித்தையில் ஒரு குழுவினர் இன்னொரு குழுவினரைத் தன் மந்திரத் தந்திரங்களைக் கொண்டு மயக்கம் அடையச்செய்து, வெற்றி வாகைச் சூடுகின்றனர். அதன்பின்னர், இரு அணியினரும் இனைந்து வெற்றியைக் கொண்டாடுகின்றனர்.

இன்றளவும் ஈரோடு மாவட்டம் நம்பியூர் வட்டம் காவிலிப்பாளையம் என்னும் சிற்றூரில் மாட்டுப் பொங்கலன்று இளைஞர்களால் மோடி வித்தை என்னும் விளையாட்டு விளையாடப்பட்டு வருகிறது. அதேபோல், அந்தியூர் வட்டம் நேருநகர் ரெட்டியபாளையம் என்னும் சிற்றூரில் ஊர்த் திருவிழாக் காலங்களில் மட்டுமே நடைபெறுகிறது. மோடி விளையாட்டைப் பற்றியோ அல்லது மோடி வித்தையைப் பற்றியோ ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

திறவுச்சொற்கள்: விளையாட்டு, மோடி வித்தை, ஊர்த் திருவிழா

தொட்டிய சக்கிலியர்

கொங்கு நாட்டில் தொட்டிய சக்கிலியர் வாழும் பகுதிக்கு ஆண்டுதோறும் நடைபெறும் ஊர்த் திருவிழாக் காலங்களில், மாவட்டியர் அல்லது மாவடியன் எனப்படும் தொட்டிய சக்கிலியரின் குடிப்பிள்ளைகள் (சாதிப்பிள்ளைகள்) கலந்துக் கொள்கின்றனர். இவர்கள், எடப்பாடி வட்டம் வெள்ளாளபுரம் ஊராட்சியில் உள்ள சின்னப்பம்பட்டி என்ற சிற்றூரில் இருந்து, ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே தவறாமல் இவ்வூரின் திருவிழாவில் கலந்துக் கொள்கின்றனர். ஓர் ஊரில் திருவிழா தொடங்கும் நாள் முதல் திருவிழா முடியும் வரை, அவ்வூரில் உள்ள பொது இடத்திலோ அல்லது ஒரு மரத்தின் அடியிலோ அல்லது ஊராட்சி சமுதாய கூடங்களிலோக் குறைந்த பட்சம் பத்து நாள்களுக்கு மேல் தங்கிக் கொள்கின்றனர். ஊருக்குள் இவர்கள் வந்ததும் ஊர்க்கோயில் முன் அமர்ந்துக் கொண்டு 'நெகார்' என்னும் தோலிசைக் கருவியை இசைத்து, தங்கள் வருகையை ஊராருக்குத் தெரியப்படுத்தவும் செய்கின்றனர். இவர்களில், பத்துக்கும் மேற்பட்ட ஆடவர், பெண்டிர் மற்றும் குழந்தைகள் எனக் குடும்பமாக வருகின்றனர். மாவட்டியர் நாடோடி வாழ்க்கை வாழ்வதோடு மட்டும் இல்லாமல், கழைக் கூத்தாடிகளாகவும் இருந்து வருகின்றனர். காலையும் சாயங்காலமும் இரண்டு மூன்று பெண்டிர் மட்டும் வீடு வீடாகச் சென்று, **"அம்மா கறி சோறு போடுங்க!, அய்யா கறி சோறு போடுங்க!"** என இரந்துவந்து அவ்வுணவை அனைவரும் பகிர்ந்துண்டு வாழ்கின்றனர். இவ்வாறாகப் பத்து நாள்களும் அடுப்பு மூட்டி சமைத்துச் சாப்பிட மாட்டார்கள். அவ்வூரில் உள்ள குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் உடல்நிலைச் சரியில்லை என்றாலோ அல்லது காத்துக் கருப்பு அண்டிருந்தாலோ அவர்களுக்கு எல்லாம், இவர்கள் தாயத்து மந்திரத்துக் கட்டியும், வேப்பிலைக் கொத்தோ அல்லது துண்டின் நுனிப்பகுதியிலோ பாடம் (மந்திரம்) போடுகின்றனர். இவர்கள், பாடம் போடுவதால் குழந்தைகளும் ஓரிரு நாள்களில் குணமடைகின்றனர்.

மாவட்டியர் அல்லது மாவடியான்

மதுரைவீரன் மற்றும் மாரியம்மன் ஊர்த் திருவிழா முடிந்ததும், மறுநாள் காலையில் மஞ்சள் நீர் தெளித்து விளையாடும் விழா நடந்து முடிந்ததும். சாயங்காலம் ஐந்து மணியளவில் மாவட்டியர்களின் தலைமையில், அவ்வூரில் உள்ள தொட்டிய சக்கிலியர்களில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆடவர் மட்டும் மாறுவேடம் பூண்டுக் கோயில் முன் இருக்கும் களத்தில் ஒன்றுக்கூடுகின்றனர். மாறுவேடத்தில் இருக்கும் இவர்கள் அனைவரும் பார்ப்பதற்கு நகைச்சுவையாகவும் அதிகப்பயத்தை

ஏற்படுத்தும் வகையிலும் மற்றும் அகோரத் தோற்றம் கொண்டுள்ள வகையிலும் காணப்படுகிறார்கள். ஒரு சிலர் சுடுகாட்டில் இருக்கும் மனித மண்டை ஓட்டைக் கையில் வைத்துக் கொண்டும், எலும்பு மாலையும் அணிந்துக் கொண்டு வருகின்றனர். மேலும், ஒரு சில ஆடவர்களே பெண் வேடம் புனைந்து வருவதால், இம்மோடி வித்தையில் உண்மையான பெண்டிர் யாரும் கலந்துக் கொள்வது இல்லை.

பொதுவாக இவ்விளையாட்டை **"மோடி வித்தை"** என்றும் **"மோடி விளையாட்டு"** என்றும் கூறுகின்றனர். பெரும்பாலான மக்கள் **"மாட்டையமூடு மோடி வித்தை"** ஆரம்பித்து விட்டனர் என்று தான், கூட்டத்தில் உள்ள வெளியூர் மற்றும் உள்ளூர் வேடிக்கைப் பார்க்கும் மக்கள் கூறுகின்றனர். இதேபோல், மதுரை வட்டாரப் பகுதியில் பொங்கல் முடிந்த மறுநாள் காலையில் மஞ்சள் நீர் தெளித்து விளையாடும் விழா நடந்து முடிந்ததும் சாயங்காலம் மோடி விளையாட்டு நடத்துகின்றனர் என இரா. பாலசுப்பிரமணியம் அவர்கள் கூறுகிறார். இவர், மோடி விளையாட்டைத் தேவாங்குச் செட்டியார் என்ற இனத்தவரிடம் சவுண்டம்மன் வழிபாட்டின் போது மட்டுமே இடம்பெறும் விளையாட்டு என்றும். இது, இவர்களுக்கு மட்டுமே உரியது எனவும் கூறுகிறார். ஆனால், கொங்கு நாட்டில் நீண்ட நெடுங்காலமாகத் தொட்டிய சக்கிலியர் இனக்குழுவினரிடம் இவ்விளையாட்டு இன்றளவும் இவர்களின் பண்பாட்டு அசைவுகளில் ஒன்றாகத் திகழ்ந்துக் காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், நாட்டுப்புறவியல் துறைத்தலைவர் சி. சுந்தரேசன் அவர்கள் மோடி வித்தையைப் பேச்சு வழக்கில் "மகிடி ஆட்டம்" என்றும் மகிடி என்பது புதைத்ததைக் கண்டெடுப்பது என்றும் விளக்கம் தருகிறார். இவர், இவ்விளையாட்டுச் செஞ்சி வட்டத்தில் உள்ள நல்லான் பிள்ளைப் பெற்றாள் என்ற சிற்றூரில் தீபாவளி அன்றும் அதற்கு மறுநாளும் நடத்தப்படும் விளையாட்டு எனவும் கூறுகிறார். இவ்விளையாட்டில் கோமாளி, அரசர்கள், உலக்கை மற்றும் குட்டிச்சாத்தான் பொம்மை ஆகியவை முக்கியக் கதாபாத்திரங்களில் பங்காற்றுகிறது எனவும் கூறுகிறார். மொத்தத்தில் மோடி விளையாட்டு என்பது ஒரு பொருளை யாரும் அறியாமல், மறைத்து வைத்துவிட்டு, அதன்பின்னர் அப்பொருளைத் தேடிக் கண்டுபிடிப்பதே மோடி வித்தையின் நோக்கம் ஆகும். இது அந்தந்த இனக்குழுவினர் இடையே உள்ள நீண்ட நெடிய பண்பாட்டு வரலாற்றை அறுபடாமல் இன்றளவும் கட்டிக்காப்பதில் முக்கியப்பங்காற்றி வருகின்றனர்.

தொட்டிய சக்கிலியர் அனைவரும் ஓரிடத்தில் அமர்ந்துக் கொண்டு, மாறுவேடம் புனைந்துக் கொண்டிருக்கும் வேளையில், கோயில் முன் உள்ள களத்தில் மாவட்டியர் அல்லது மாவடியான் நெகார் இசைத்துக் கூட்டத்தைக் கூட்டுகின்றார். அச்சமயத்தில் இவர்கள் ஒரு சில வித்தைகளும் மாயாஜால வித்தைகளும் செய்துக் காட்டி, வேடிக்கைப் பார்க்கும் மக்களை மகிழ்விக்கும் நோக்கில் இருப்பார். மேலும், மாவடியர்களின் தொண்டைக் குழி அருகில் நீண்ட இரும்புக் கம்பியை வைத்து வளைத்தல், கத்தி விழுங்குதல், கத்திச் சுத்துதல் மற்றும் அந்தரத்தில் பல்டி அடித்துக் கொள்ளுதல் போன்ற சாகசங்கள் செய்து மக்கள் கூட்டத்தைக் ஈர்க்கின்றனர். மக்களும் இதனை இரசித்துக்கொண்டு அவர்களுக்குத் தங்களால் இயன்ற காசு அல்லது பணத்தை அன்பளிப்பாகத் தருகின்றனர். இந்நிலையில், தொட்டிய சக்கிலியர் இருபதுக்கு மேற்பட்டவர்கள் மாறுவேடம் புனைந்துக் கொண்டு, மேளதாளத்துடன் களத்தின் மையத்தில் வந்து சேருவார்கள். அங்குச் சென்றவுடன் மொத்தம் எத்தனைப் பேர்கள் உள்ளனரோ

அத்தனைப் பேர்களை எல்லாம் சரிபாதியாக இரண்டு அணிகளாகப் பிரிக்கின்றனர். இவ்வேலையை மாவட்டியர்கள் மிகச் சரியாகச் செய்கின்றனர். இந்நிகழ்வைக் காண ஊரில் இருக்கும் மக்கள் அனைவரும் மரத்தின் கிளைகளில் அமர்ந்தும் கட்டிடங்களின் மேல் அமர்ந்தும் தரையில் அமர்ந்தும் நூற்றுக் கணக்கானோர் இவ்வித்தையைப் பார்வையிடுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் இவ்விளையாட்டைக் காணவே பல ஊர்களில் இருந்து உறவினர்கள் வந்து சேர்கின்றனர். இவர்கள்தான் அதிகமான கூட்டமும் நெரிசலும் அங்குக் கூடுகிறது.

மோடி வித்தை

மாறுவேடம் புனைந்து வந்த அனைவரையும் மாவட்டியர் இரு அணிகளாகப் பிரித்து, அவ்விரு அணிகளுக்கும் தலா ஒருவரைத் தலைவனாக நியமனம் செய்கின்றார். அதாவது, மோடி வித்தை என்பது ஒரு கடுமையான மந்திரச் சக்தியால் தன்வயப்படுத்திக் கொண்டு இருக்கும் ஒரு பொருளோ அல்லது புதையலோ அல்லது மனித மண்டை ஓட்டின் கபாலத்தையோ தன்னிடம் உள்ள மந்திரச் சக்தியாலும் புத்திக் கூர்மையாலும் எதிர் அணியினரை மயக்கம் அடைய செய்தோ அல்லது ஏமாற்றியோ கவர்ந்து வரவேண்டும். அவ்வாறு நடைபெறுவதைப் போலச்செய்தல் எனப்படும் விளையாட்டுகளில் மோடி வித்தை அல்லது மோடி விளையாட்டும் ஒன்றாகும்.

அவ்வூரில் உள்ள சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் களத்தில் முதலில் வட்டமாக அமர்ந்துக் கொள்கின்றனர். அவ்வட்டத்தின் நடுவில் ஓர் உலக்கை ஒன்றை நட்டு வைத்தும் அதன் உச்சியில் வேப்பந்தழைக் கொத்துகளைச் சொருகி வைத்தும் வைத்துக் கொள்கின்றனர். இதில், உலக்கை இருக்கும் பகுதிதான் நடுப் புள்ளியாகும். இந்த உலக்கை இருக்கும் இடத்தில் தான் மேற்க்கூறிய பொருளோ அல்லது புதையாலோ அல்லது கபாலமோ வைத்து இருப்பார்கள். ஓர் அணியின் தலைவனோ அல்லது அணியில் உள்ள வேறொருவரோ வளைந்து வளைந்து சென்று அப்பொருளை எடுக்க முயற்சி செய்வார். உலகக்கை இருக்கும் இடத்திற்குச் கொஞ்சம் பக்கத்தில் சென்றதும், எதிர் அணியில் இருக்கும் தலைவன் தீன்னுரூ தூவி மந்திரம் ஓதி அவனை மயக்கம் அடைய செய்து விடுவார். அவன் மயங்கி விழுவது போல் விழுந்து, குட்டிக்கரணம் போட்டு, கிழே விழுந்து விடுவான். பின்னர், அவனை எதிரணியில் உள்ள இருவர் தூக்கிக்கொண்டு ஒரு ஓரத்தில் போட்டுவிடுவார்கள். அவன் கீழேப் படுத்துக் கொண்டு வயில் இருந்து உமிழ்நீர் துப்பியவாரு கீழே கிடப்பான். உமிழ்நீர் முழுவதும் இரத்த வாந்தி எடுப்பது போல் தோற்றம் அளிக்கும். ஏனெனில் இவன் ஏற்கனவே வாயில் கொஞ்சம் குங்குமத்தை வைத்து இருப்பான். இதேபோல், இரு அணிகளும் மாறிமாறி செய்துக் கொள்வார்கள். இந்நிகழ்வைப் பார்த்துக் கொண்டு இருக்கும் அனைவரின் முகத்திலும் சிரிப்பும் மகிழ்ச்சியும் பயமும் தான் அதிகம் இருக்கும். நிஜத்தில் ஒரு வகையில் இம்மோடி விளையாட்டு அனைவருக்கும் இன்பம் கலந்த பயத்தைத் தருபவையாக அமைகிறது. இதேபோல், மதுரை வட்டாரப் பகுதியில் தேவாங்குச் செட்டியார் என்ற இனக்குழுவைச் சேர்ந்த கோயில் பூசாரிகள் மட்டும் இவ்விளையாட்டில் கலந்துக் கொண்டு விளையாடுகின்றனர். இரண்டுப் பூசாரிகள் மட்டும் எதிரெதிரே நின்று கொள்வர். மோடியை எடுக்கச் செல்லும் பூசாரி, எதிரில் இருக்கும் இன்னொரு பூசாரிக்குத் தின்னுரைத் தூவி மயக்கம் அடைய செய்வார்.

மேற்கூறியவாறு நீண்ட நேரமாக இரு அணிகளின் நபர்களும் மோடியை எடுப்பது போல் பாவனைச் செய்து, அணியில் உள்ள அனைவரும் மயக்கம் அடைந்து இரத்த வாந்தி எடுத்துக் கொண்டு கீழேப் படுத்து இருப்பார்கள். இறுதியில் அணியின் தலைவர்கள் மட்டும் நீயா? நானா? என்று மோதிக் கொள்வார்கள். மோடியை எடுக்க ஒரு தலைவன் வருவான், அவனை நோக்கி இன்னொரு தலைவன் மந்திரத் தந்திரங்கள் எல்லாம் சொல்லி அவனையும் மயக்கம் அடைய செய்து விடுவான். கொஞ்சம் நேரம் கழித்துக் கடைசியில், ஒரேயொரு தலைவன் மட்டுமே இருப்பான், அவன் மிகவும் தந்திரமாகவும் வளைந்தும் நெளிந்தும் உருண்டும் சென்று அம்மந்திரச் சக்திகளை எல்லாம் செயல் இழக்கச் செய்து, மோடியை அதாவது எலுமிச்சைப் பழம் அல்லது மனித கபாலம் அல்லது துணியால் செய்த சைத்தான் பொம்மை அல்லது மனித கால் எலும்பு அல்லது கை எலும்பு இவற்றில் எதாவது ஒன்றைக் கையால் எடுக்காமல் வாயில் கவ்விக்கொண்டு வந்துவிடுவார். அதன்பின்னர், உலக்கையைத் தன் தோளில் சுமந்துகொண்டும் ஆடிக் கொண்டும் வருவான். மோடியை எடுத்த அணி தலைவனே வெற்றிப் பெற்றவன் ஆவான். அதன்பின்னர், வெற்றிப் பெற்ற தலைவன் தின்னிரூ தூவியும் மந்திரம் சொல்லியும் வேப்பம் கொத்தில் ஒவ்வொருவரையும் அடித்து உயிர்ப் பிறப்பிப்பான் மயங்கியவர்கள் அனைவரும் எழுந்து நின்று, மோடியில் எடுக்கப்பட்டப் பொருளையும் உலக்கையும் எடுத்துக் கொண்டு ஆடியவாரு அவ்வூரில் உள்ள மதுரை வீரன், மாரியம்மன் மற்றும் கடகடப்பன் ஆகிய கோயில்களை மூன்று முறை வலம் வருகின்றனர். அதன்பின்னர், அனைவரும் கலைந்து அவரவர் வீட்டிற்குச் சென்றுவிட்டு மீண்டும் இரவில் தெருக்கூத்துப் பார்ப்பதற்குத் தயாராகி விடுகின்றனர்.

இம்மோடி விளையாட்டைப் பார்ப்பதற்கு எவ்வாறு இருக்கும் எனில், செயங்கொண்டரின் கலிங்கத்துப் பரணி என்னும் சிற்றிலக்கிய நூலில் வருகின்ற பேய்களின் தோற்றத்தையும் அப்பேய்களின் உணர்வையும் அப்பேய்களின் உலகத்தையும் நம் கண் முன்னே காட்டும் பாடப்பகுதியின் செய்திகள் தான் நினைவுக்கு வரும். அதில், நீண்ட நாள்களாகப் பசியால் வாடிக்கிடந்த பேய்கள் எல்லாம் உண்டு, வயிறு நிரம்பியதும் மகிழ்ச்சியில் கூத்தாடுகின்றன. சில பேய்கள் ஆடைகளை மேலே வீசிப் பாடி விளையாடுகின்றன. சில பேய்கள் வெற்றியைப் பாடி கைவீசி ஆடுகின்றன. சில பேய்கள் யானைகளின் வயிறுகளில் புகுந்தும், இரத்த வெள்ளத்தில் விழுந்தும், விளையாடுகின்றன. சிலர் தரையில் வீழ்ந்து புரண்டும் தலைவிரிக் கோலமாய் உருண்டு ஓடியும் ஆடுகின்றனர். இவ்வாறு, செயங்கொண்டார் தன் இலக்கிய ஆற்றலால் புதியதோர் பேய்கள் உலகத்தைப் படைத்துக் காட்டுகிறார். அதுபோலவே, தொட்டிய சக்கிலியர்களும் மாவட்டியர்களும் தங்களின் கற்பனைத் திறனால் அறிய வகையில், ஒர் இலக்கிய வடிவத்தில் மோடி வித்தையைக் காட்டியுள்ளனர்.

முடிவுரை

கொங்கு நாட்டில் தொட்டிய சக்கிலியர் மற்றும் மாவட்டியர் ஆகியோரின் பண்பாட்டு அசைவுகளில் இதுவும் ஒன்றாக இந்த மோடி வித்தை அமைந்துள்ளது. இது, தொல் தமிழரின் தொன்மையும் தொடர்ச்சியையும் நீண்ட நெடிய அறுபடாத மரபுக் கொண்டவையாக இவ்விளையாட்டு நிதர்சனமாக்குகின்றது. இவ்விளையாட்டின் மூலமாக இவ்வினக் குழுவினரின் திருவிழாக் கொண்டாட்ட

நிகழ்வுகள் நமக்குப் பண்பாட்டின் எச்சமாகத் தொடர்வதையும் பிரதிபலிப்புச் செய்வதையும் காணமுடிகிறது. மேலும், எதிராமாண்டு என் மகனோ அல்லது கணவனோ மற்றும் அண்ணனோ அல்லது தம்பியோ மோடி போடுவான் என்று இறைவனிடத்தில் வேண்டுதலும் (நேர்த்திக்கடன்) வைக்கின்றனர். இப்போட்டி விளையாட்டின் இறுதியில் வெற்றிப்பெற்ற அணியும் தோல்வுற்ற அணியும் ஒன்றினைந்து ஒற்றுமையுடன் பகையின்றி நகர்ந்துச் செல்கின்றனர். மோடி வித்தை அல்லது மோடி விளையாட்டு என்பது வியப்பான, விந்தையான விளையாட்டுகளில் ஒன்றாகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

துணை நின்ற நூல்கள்:

- பாலசுப்பிரமணியம், இரா., 2003. தமிழர் நாட்டு விளையாட்டுகள், வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
- கோவிந்தசாமி, பெ. 2024. மாவட்டியர் இனவரைவியல் - ஆய்வுக் கட்டுரை, வெளியீடு: காவ்யா தமிழ், இதழ் 50&51, காவ்யா பதிப்பகம், சென்னை.
- செயங்கொண்டார்,. 2021. கலிங்கத்துப்பரணி, வெளியீடு: கௌரா பதிப்பகம், திருச்சி.
- https://www.tamilvu.org/ta/tdb-titles-cont-folklore-html-modi-dance

மாவட்டியர் நெகார் முரசு முழங்குதல்

மாவட்டியர்கள் தொண்டைக் குழியில் இரும்புக் கம்பியை வளைத்தல்

மாவட்டியர் இரும்புத் தகரக் கத்திகளை விழுங்குதல்

மாவட்டியர் அந்தர்ப் பல்டி அடித்தல்

மோடிப் பொம்மையும் நட்டு வைத்த உலக்கையும்

மோடியை எடுக்க வேடம் புனைந்துள்ள சக்கிலியர்களை வழி நடத்தும் மாவட்டியர்

மோடி வித்தையின் அணித்தலைவன்

எதிர் அணியின் தலைவன் மற்றும் தொட்டிய சக்கிலியர்

REFERENCES

1. Balasubramaniam, R. (2003). *Thamizhar Nattu Vilaiyattukal* [Tamil Folk Games]. International Institute of Tamil Studies, Chennai.

- *(Original Tamil: பாலசுப்பிரமணியம், இரா., 2003. தமிழர் நாட்டு விளையாட்டுகள், வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.)*

2. Govindasamy, P. (2024). Mavattiyar Inavaraiviyal: A Research Article on Mavattiyar Ethnography. *Kavya Tamil* (Issues 50 & 51). Kavya Publications, Chennai.

- *(Original Tamil: கோவிந்தசாமி, பெ. 2024. மாவட்டியர் இனவரைவியல் - ஆய்வுக் கட்டுரை, வெளியீடு: காவ்யா தமிழ், இதழ் 50&51, காவ்யா பதிப்பகம், சென்னை.)*

3. Jeyankondar. (2021). *Kalingattuparani*. Gowra Publications, Tiruchi. (Modern Edition)

- *(Original Tamil: செயங்கொண்டார்,. 2021. கலிங்கத்துப்பரணி, வெளியீடு: கௌரா பதிப்பகம், திருச்சி.)*

4. Tamil Virtual University. (n.d.). *Folklore/Dance Entry* [Specific content implied by the URL structure]. Retrieved from: https://www.tamilvu.org/ta/tdb-titles-cont-folklore-html-modi-dance

- *(Original Tamil: https://www.tamilvu.org/ta/tdb-titles-cont-folklore-html-modi-dance)*

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723
Vol. 4 Issue: 01 October 2025

குமரகுருபரக் கடவுள் மாலையில் கருத்துப்புலப்பாடு

Conceptualization in Kumarakuruparar Kadavul Malai

முனைவர் ப. பாலமுருகன்

உதவிப்பேராசிரியர், மொழிகள் துறை – தமிழ்ப்பிரிவு, கற்பகம் உயர்கல்வி நிறுவனம்,

கோயம்புத்தூர் -21

Dr. P. Balamurugan,

Assistant Professor Department of Languages – Tamil Division Karpagam Academy of Higher Education Coimbatore – 21

Email: dr.bala996@gmail.com ORCID:

Abstract:

Kumarakuruparar Kadavul Malai is a significant literary work authored by Tavathiru Kandasamy Swamigal, who served as the second Gurumaha Sannidhanam (Spiritual Head) of Siravai Aadheenam. This collection of verses is dedicated to eulogizing Lord Muruga, revered as Kumarakuruparar Kadavul, who is enshrined within the sacred precincts of Siravai Aadheenam.

The work's central invocation and defining line, 'Siravanamapurathil Kunjari Valli Kodi Thoy Kumarakuruparane!' (O Kumarakuruparar, who in Siravanamapuram is embraced by Kunjari and Valli!), encapsulates its essence. Beyond the customary invocatory verse (Kaappu Cheyyul) and the concluding verse on benefits (Noorpayan), the collection comprises twenty ensir viruttam style stanzas.

Unlike typical devotional hymns that primarily laud the deity, these verses delve into the exposition of profound ideas and philosophies. This research paper aims to meticulously analyze the diverse themes and intricate subject matter embedded within the Kumarakuruparar Kadavul Malai, exploring the depth of its conceptualization beyond mere praise.

Keywords: Kumaragurubarar, Kadavul Malai

ஆய்வுச் சுருக்கம்:

குமரகுருபரக் கடவுள் மாலை சிரவை ஆதீனத்தின் இரண்டாம் குருமகா சன்னிதானமாக விளங்கிய தவத்திரு கந்தசாமி சுவாமிகளால் இயற்றப்பட்ட நூல் ஆகும். இந்நூல் சிரவை ஆதீனத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானாகிய குமரகுருபரக் கடவுளைப் போற்றிப் புகழ்வதாய் பாடப்பட்டுள்ளது. இந்நூலின் மகுடமாக 'சிரவணமாபுரத்தில் குஞ்சரி வள்ளிக் கொடி தோய் குமரகுருபரனே!' என்னும் அடி அமைகிறது. காப்பு செய்யுள், நூற்பயன் நீங்கலாக இருபது எண்சீர் விருத்தப் பாடல்களைக் கொண்டுள்ளது. இப்பாடல்கள் பொதுவான பக்திப் பாடல்களைப் போல் இறைவனைப் புகழ்வது அன்றி பல கருத்துக்களை வெளிப்படுத்துவதாய் பாடப்பட்டுள்ளது. குமரகுருபரக் கடவுள் மாலையில் உள்ள பாடுபொருள் பற்றி ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

திறவுச்சொற்கள்: கடவுள் மாலை, குமரகுருபரக் கடவுள்

Tamilmanam

இறைவனின் தோற்றம்

இறை சார்ந்த நம்பிக்கையுள் இறைவனின் தோற்றம் மிக முக்கியமான ஒன்றாகும். எனவேதான் இறை உருவம் சார்ந்த ஒப்பனைகளும் தோற்றங்களும் தம் இனம் சார்ந்ததாய், தன் சூழல் சார்ந்ததாய், வளம் மிக்கதாய் அமைகிறது. அந்தவகையில் குமரகுருபரரின் தோற்றப் பொழிவினையும் அருட்சிறப்பினையும் போற்றுவகையில் நூலின் முதல் பாடலில் கேசாதி பாதமாக இறைவனின் தோற்றம் வருணிக்கப்பட்டுள்ளது. இதனை,

"திருவிளங்கு முகமதியும், கருணை பொழி விழியும்,
செங்குமுத மலர் முறுவல் சிறந்த கனிவாயும்,
………….……….….……….……………..
குருவிளங்கும் காட்சி நல்காய் - சிரவணமாபுரத்தில்
குஞ்சரி வள்ளிக்கொடி தோய் குமரகுருபரனே!" [1]

என்ற பாடல் அடிகளில் இறைவனின் முகமானது சந்திரனுக்கு உருவகமாக்கப்பட்டுள்ளது. சந்திரனானது இரவில் மிகுந்த பிரகாசத்துடன் குளிர்ந்த ஒளியினை பொழிவதுபோல, இறைவனின் முகமானது தெய்வீகக் கருணைப் பொழிவாதாகவும், அவனுடைய இரு விழிகளானது முல்லை நிலத்தில் பொழியும் மழை மேகத்தினை ஒப்ப அருளினைப் பொழிவதாகவும் உள்ளது. அவனின் திருவாய்க் கமலமானது இனிமையான கனியினை ஒத்த வார்த்தைகளை மொழிவதாய், செவ்வாம்பல் மலரினை ஒத்த சிவந்த நிறத்தினதாய் மெல்லிய புன்னகையுடன் அமைவதாக விளக்கப்பட்டுள்ளது. மேலும் வலிமை மிக்க தோள்களானது இறைவனுக்கே உரித்தான கடப்பமலரினை அணிந்ததாய் உள்ளது. இரு கைகளில் அபய முத்திரை, கொடை முத்திரையினையும் மற்றும் இரு கரங்களில் வேலாயுதம், குலிசம் ஆகியவற்றையும் தாங்கியதாய் நாற்கரத்துடன் காட்சியளிக்கிறார்.

அவரின் உடலோ ஒளிபொருந்திய பவளம் போன்றதாய் அழகுடனும், திருப் பொற்பாதமோ தாமரை மலர் போன்று மென்மையதாய் சிவந்த நிறத்தினதாய் உள்ளது. இறைவன் தன் இரு துணைவியருக்கு நடுவே தன்னுடைய வாகனமான மயில் பரி மீது பெருமைகோளம் பூண்டவனாய் காட்சியளிப்பதாக ஆசிரியர் இறைவனின் தோற்றத்தினைத் தம் பாடலில் வருணிக்கின்றார்.

தமிழின் மேன்மை

தமிழ் மொழியினைப் போற்றுவதன் மூலம், ஆசிரியரின் மொழிப்பற்று நன்குப் புலப்படுகின்றது. இறைவனைப் பாட, போற்ற தமிழ் மொழியே உகந்தது என்றும் தமிழன்றி வேறு மொழியில் கூறயியலாது என்பது தமிழின் சிறப்பினை வெளிப்படுத்துவதாய் உள்ளது. இதனை,

"மதி இசைந்த சிறு பருவம் தொட்டு உனது பதமே
மனத்தகத்தே பதித்து, உருகி, வணங்கி, அரும் தமிழால்
துதி இசைந்தபடி பாடி….."[2]

எனும் வரியில் இறைவனைப் போற்றவும் மெய்ப்புகழினைப் பாடவும் இனிமை பொருந்திய தேன் சுவை மிக்க நல்ல தமிழிலேயே தோத்திரம் செய்து வணங்குகின்றேன் என்கிறார். இங்கு மொழியின் தன்மையினையும் தேன் போன்றது தமிழ் என்று மொழியின் இனிமையினையும் புலப்படுத்துகின்றார்.

“வளப்பம் மிகப் பெற்று அமை உன் திருவருள் மெய்ப்புகழே

மதுர நறுந் தமிழ்க் கவியால் வாழ்த்தி வணங்கிடுவேன்...”[3]

இறைவனின் திருப்பாதத்தினை சிறுவயது முதலே தன் உள்ளத்தில் பொருத்தி வணங்கி உருகிடவும், மேன்மையும் சிறப்பும் கொண்ட தமிழ் மொழியில் இசையுடன் துதி பாடி வணங்கிடவும், தான் தமிழில் இசையமைக்க இறைவனே அருள்புரிய வேண்டும் எனவும் வேண்டி தமிழின் மேன்மையினை ஆசிரியர் விளக்குகின்றார்.

வள்ளுவமும் வேண்டுதலும்

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றை முழுமையாக நீக்கி வாழ்வதே அறமாகும் என்பதை,

“அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம்”[4]

எனும் குறளில் வழியுறுத்தும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க,

“இழுக்கு ஆட்டும் அழுக்காறு அவா வெகுளி மூட்டி,

இன்னாச் சொல் வடிவு ஆகி, இன்ப அறம் முழுதும்

விழுக்காட்டும் பழியினொடு, பாவம் மிகு நிந்தை

விளைத்து ஆட்டும் இவை ஒழித்து……”[5]

எனும் இப்பாடலில் அற இன்பத்தை முழுதும் அழித்து பழி பாவத்தினை மிகுதியாகக் கொடுத்து நம்மை இழிந்த நிலைக்குக் கொண்டு செல்லும் பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கையும் ஒழிக்குமாறு ஆசிரியர் இறைவனிடம் வேண்டுகின்றார்.

தன் நிலை

ஆசிரியர் தன் நிலையினை உலகியலில் துய்ப்பவனாகவும், இறைநெறியில் வழாது இருப்பவனாகவும் என இரு தன்மை கொண்டவையாக கூறுகின்றார். தீய குணங்களை வெளிப்படுத்துபவனாகவும் உலகியல் இன்பங்களை துய்ப்பவனாகவும் அறமற்று வாழும் இழிநிலை கொண்டவனாகவும் தன்னைக் காட்சிப்படுத்திக் கொண்ட ஆசிரியர் அவற்றில் இருந்து விடுபட வேண்டுகிறார். தான் தீய எண்ணங்களைக் கொண்ட கொடிய மனிதர்களின் பண்பற்ற செயல்களில் விருப்பம் கொண்டவனாய், அச்செயல்களை விரும்பிச் செய்கின்றவனாய், உள்ளம் மயங்கித் தன் நிலை அறியாது கிடக்கின்றேன் என்கிறார். என் உள்ளமானது இவ்வுலகியலுக்குப் பழகித் தீய எண்ணங்களால் நிறைந்து கிடக்கின்றது என வருந்துகிறார்.

“செற்றம் உடையேன் மோகம் உடையேன் மாற்சரியத்

திறம் உடையேன் பழி பாவம் திரள் பெறவே குவிந்த

குற்றம் உடையேன் எனினும் உன் அடிமை ஆகும்

குணமும் உடையேன்றனை ஆட்கொண்டிடிலே……”[6]

இப்பாடலில் தன்னை பிறர் மனம் புண்படும் வகையில் பேசக்கூடிய கடும் சினம் கொண்டவனாகவும் இவ்வுலகியல் இன்பங்களின் மீது அளவற்ற மோகம் கொண்டவனாகவும் மிகுந்த பொறாமை குணம் உடையவனாகவும் பல கொடுஞ்செயல்களுக்குக் காரணமான பழிப்பாவங்கள் பெறுந்திரலாகக் கொண்டவனாகவும் குற்றம் பொருந்தியவனாகவும் உள்ளேன் என்பதை வெளிப்படுத்துகின்றார்.

“மாண்நாள்ஆம் வாழ்நாள்கள் அத்தனையும் பாவ

வழிகளில் தோய மதி மயக்க மான் இடருள் கூடி

வீண் நாளாக் கழித்த திறம், என் மனமே நாடி

வெதும்பும் எனில், உன் புடை யான் விளம்புவது என்?”[7]

சிறந்த நாட்கள் என எண்ணக்கூடிய என் வாழ்நாள் முழுவதையும் பாவ வழிகளிலேயே சென்று மதி மயக்கத்தால் பல இழிசெயல்களில் வீணாக நாட்களைக் கழிக்கின்றேன். இத்தகைய பல குற்றம் பொருந்தியவன் எனத் தன்னிலை மிக இழிவாக உள்ளதாகக் காட்சிப்படுத்துகின்றார்.

“விருந்தினனோ, யான் பழமை கொண்டவனோ என்னும்

விவரம் உனக்கு உணர்த்திடும் விவேகி அல்லேன் உனது

குருந்தினன்…”[8]

நான் புத்தடியேன் அல்லன். உன்னை நினைத்து நாளும் உருகி வேண்டி உன் அடிகிடக்கும் பழமை உடையவன் என தன் பக்தி நிலையினைக் கூறுகின்றார்.

மக்களின் நிலை

உலகியலில் திலைத்திருக்கும் மக்களின் நிலை பற்றி இங்கு விளக்குகின்றார். இவ்வுலகில் மக்கள் தம் எண்ணங்களில் முழுதும் தீய குணம் கொண்டவர்களாகவும் பண்பற்றவர்களாகவும் உள்ளனர் என்பதனை,

“கள்ளம் உற்ற மனக் கொடியர் தந்திரச் சேட்டைகளால்

கலங்கி, மிக மயங்கி, நிலை காணாதே, அயர்ந்தேன்”[9]

எனும் இவ்வரிகளின் மூலம் சுட்டுகின்றார். மக்கள் தங்களை இழிநிலைக்குக் கொண்டு செல்லக்கூடிய பொறாமை, ஆசை, சினம் ஆகியவற்றை அவர்கள் அறியாமலேயே, அறசெயல்களை முற்றிலும் மறந்து தீய செயல்களை மட்டுமே கலக்கமின்றி செய்து வருகின்றனர். அதுவே அவர்களுக்கு இன்பம் தருவதாகவும் எண்ணுகின்றனர். இவ்வுலகில் மனித வாழ்வானது இன்பம் துய்க்க மட்டுமே உடையது எனவும், அவ்வின்பம் உலகியல் வாழ்வில் மட்டுமே கிடைப்பதாகவும் மக்கள் எண்ணுகின்றனர். அதைவிடப் பேரின்ப வாழ்வானது உலகியலைத் துறந்த இறைவழியில் கிடைக்கும் என்பதை ஏற்க மறுப்பவர்களாக அவர்கள் விளங்குகின்றனர் என்கிறார்.

அடியார்களின் நிலை

இறைவனைப் போற்றி அறநெறி வழுவாமல் வாழும் அடியார்களின் மத்தியில் தனக்கும் ஒரு இடம் அருளுமாறு வேண்டுகின்றார். இதனை,

"அறியாமை தன்னை மன்னித்தருளி, உன்மெய் அன்புக்
கொத்து அனையோருடன் கூட்டாய்..."[10]

எனும் வரியில் அறியாமையினைப் போக்கி பிறவியினை அறுத்து நாளும் உன்னைப் போற்றித் தொழுகின்ற பெருந்திரள் கூட்டமாக விளங்குகின்ற உன் அடியார்கள் மத்தியில் எனக்கு ஒரு இடம் வேண்டும்; உன் அடியார்கள் நாளும் இன்னிசையில் துதி பாடி உண்மை கதி எனும் வீடு பேற்றினை அடைந்தவர்கள். அவர்கள் உனக்கே தொண்டு செய்யும் அறநெறி வழுவாத ஞானியராய் திகழ்கின்றவர்கள். மேலும் உன்னைக் கண்டு, துதித்து, போற்றி முத்தி சிறப்பினைப் பெற்ற மேன்மை பொருந்தியவர்கள். அவர்கள் உம்மால் மும்மலம் நீங்கப் பெற்ற தகுதி உடையவர்கள். உன்னுடைய அருளில் நாளும் மூழ்கித் திளைக்கும் பெயர் பெற்றவர்கள். உன் அருட்பார்வை என்றும் நீங்கா இடம் பெற்றவர்கள். உன் அருளால் என்றும் திளைத்திருப்பவர்கள். அவர்களின் நிலை தனக்கும் வேண்டும் என தன் வேண்டலைக் கூறுகின்றார்.

பிறப்புத் துயர்

பிறப்பினை அறுத்து மெய்யின்ப வீடு வேண்டும் ஆசிரியர், பிறப்பின் துயரையும் பிறவா நிலையையும் குமரகுருபரரிடம் வேண்டுகின்றார். இவர் பிறப்பினைக் கொடிய நோய் என்று சுட்டுகின்றார்.

"வருந்தினன் யான் பிறப்பு இறப்பு என்று இடையறவே வாட்டும்
வன் பிணியால் கொஞ்சம் அன்று வரம்பு இல்யுகம் அந்தோ!"[11]

பிறப்பு இறப்பு எனும் கொடிய நோயினால் நான் வாடுகின்றேன். அதுவும் சில காலங்கள் அல்ல, பல காலங்களாக இத்துயரில் வாடுவதாகக் கூறுகின்றார். ஔடதங்கள் நிறைந்த மெய்ஞான பண்டிதனாகிய இறைவனிடம் இப்பிறவியில் இருந்து விடுவிக்குமாறு வேண்டுகின்றார். மேலும்,

"சிறை மறைத்த வல் வினைக் கூட்டிடைக் கிடந்து நாளும்
தின்று உறங்கவைத்து, நின்தாள் சிந்தனை செய்து ஏத்தும்"[12]

ஆசிரியர் இவ்வுடலினை சிறைசாலையாகக் காட்டுகின்றார். உணர்வுடன் உள் வைத்து மூடி வைக்கப்பட்ட உயிரானது வலிமைப் பொருந்திய இரு வினைகளாலான இவ்வுடலில் பொருந்தி நாளும் உண்டு உறங்கி, பிறப்பு இறப்பு எனும் நோய் பெற்று வாழும் இப்பிறப்பினை நீக்கி அருள்வாயாக என வேண்டுகின்றார்.

"எத்தனை ஆம் பிறப்பு இசைந்தேன்? எத்தனை ஆம் துயரம்
ஏற்று அயர்ந்தேன்? என்ற கதை இனங்களை எண்ணிட்டே,
இத்தனைதான் என்று அடியேன் அறிவேனோ?....."[13]

இவ்வரியில் எத்தனைப் பிறவிகள் நான் பெற்றேன், எத்தனை துயரம் ஏற்று அயர்வுற்றேன் எனும் கதையின் எண்ணிக்கை இத்தனைதான் என்று அடியேன் என்னால் எப்படி அறிய முடியும். கிடைக்கப்பெற்ற இப்பிறவியிலும் அவ்வறிவினைப் பெற்றேன் என்று சொல்லும்படியான உணர்வு தனக்கு இல்லை. இவை எல்லாம் அறிந்த நீயே என்னைப் பிறவித் துயரிலிருந்து விடுபட அருள்வாயாக! என பிறவியின் துயரினையும் அதிலிருந்து விடுபடவும் இறைவனை வேண்டுகிறார்.

வீடுபேறு

பிறவா நிலையே வீடுபேறு என்பதாகும். உண்மை கதி என்னும் இவ்வீடுபேற்றினை அடையும் வழி இறைவனை நாடி நாளும் போற்றுவதே ஆகும். அவ்வாறு நாளும் இறைவனை துதி பாடி போற்றும் ஆசிரியர் இறைவனின் திருப்பாதத்தில் அமையப்பெற்ற நிலையான இடமாகிய வீடு பேற்றினை இறைவன் தன் அன்பால் வழங்கிட வேண்டுகின்றார். இதனை,

“ஞானமயம் பெற்று அமை உன் திருமேனிக் காதல்
நண்ணும் எனில் பூரணம் ஆம் விண்ணுள் விடும்.....”[14]

“உன்னை எனக்கு அளித்து, உள்ளம் களித்து, விளையாடல்
ஊழிவரை புரிந்து, புகழ் உடல் அருள்வாய்......”[15]

எனும் வரிகளில் உயிருக்கு அமுதமாய் விளங்கும் இறைவனே வீடுபேற்றினை வழங்கவல்லவன். அவனின் மெய்யன்பர்களாய் திகழ்கின்றோர் போற்றும் பேரின்ப வாழ்வும் அதுவே. பிறப்பு இறப்பினை கடந்து இப்பூத உடல் நீங்கி நாளும் இறைவனின் திருப்பாத கதியே என விளங்கும் நிலையான இன்பமாம் வீடுபேற்றினை எனக்கு அருள்வாயாக என இறைவனிடம் வேண்டுகின்றார்.

முடிவுரை

குமரகுருபரர் எனும் திருநாமம் பெற்ற முருகப் பெருமானைப் பாடுவதாய் அமைந்த இந்நூலின் பாடுபொருளாக இறைவனின் தோற்றச்சிறப்பு வருணிக்கப்பட்டுள்ளது. தமிழின் மேன்மை கூறப்பட்டுள்ளதுடன் ஆசிரியன் தன்நிலை, அடியார்களின் நிலை, மக்களின் நிலை என விளக்கப்பட்டுள்ளது. வள்ளுவத்தினைப் பின்பற்றியும் தன் கருத்தினைக் கூறியுள்ள ஆசிரியர் வீடுபேற்றினை வேண்டுவதுடன் பிறவித்துயர் பற்றியும் தன் பாடுபொருளை அமைத்துள்ளார்.

சான்றெண் விளக்கம்

1. கந்தசாமி சுவாமிகள். தவத்திரு, 2012, தவத்திரு கந்தசாமி சுவாமிகள் பனுவல் திரட்டு தொகுதி – 1 பா. எ. -1
2. மேலது பா.எ.-2
3. மேலது பா.எ-9
4. புலியூர்க் கேசிகன், 2018, திருக்குறள் பா.எ- 35
5. கந்தசாமி சுவாமிகள். தவத்திரு, 2012, தவத்திரு கந்தசாமி சுவாமிகள் பனுவல் திரட்டு தொகுதி - 1, பா. எ. -4

6. மேலது பா.எ.- 7
7. மேலது பா.எ- 8
8. மேலது பா.எ- 10
9. மேலது பா.எ-3
10. மேலது பா.எ-11
11. மேலது பா.எ- 10
12. மேலது பா.எ -17
13. மேலது பா.எ-11
14. மேலது பா.எ-13
15. மேலது பா.எ- 12

துணைநூற் பட்டியல்

1. கந்தசாமி சுவாமிகள். தவத்திரு, 2012, தவத்திரு கந்தசாமி சுவாமிகள் பனுவல் திரட்டு தொகுதி,
2. முத்துச்சண்முகம் .டாக்டர்., தமிழ் இலக்கியக் கோட்பாடுகள், 1984, நாரணம்மாள் பதிப்பகம், மதுரை - 625001,
3. மெய்யப்பன், 2011, மெய்யப்பன் தமிழ் அகராதி, மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.
4. கிருஷ்ணசாமிப்பிள்ளை .சீ, நவீன தமிழ் அகராதி, 1935, ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ் பதிப்பகம்.

References:

5. **1. Kandasamy Swamigal, Tavathtiru.** *Tavathtiru Kandasamy Swamigal Panuval Thirattu Thoguthi* (Tavathtiru Kandasamy Swamigal Collected Works Volume). [N.p.: N.p.], 2012.
6. **2. Krishnasamypillai, C.** *Naveena Tamil Akarathi* (Modern Tamil Dictionary). 1935. [Chennai]: C. Kumarasamy Naidu Sons Pathippagam, 1935.
7. **3. Meyyappan.** *Meyyappan Tamil Akarathi* (Meyyappan Tamil Dictionary). Chennai: Manickavasagar Pathippagam, 2011.
8. **4. Muthusshanmugam, Dr.** *Tamil Ilakkiyak Kōṭpāḍukaḷ* (Tamil Literary Theories). Madurai: Naranamal Pathippagam, 1984.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

கூட்டுக்குஞ்சுகள் நாவல் வெளிப்படுத்தும் குழந்தைத் தொழிலாளர்களின் வாழ்வியல்

Echoes of the Unheard: Unveiling Child Labourers' Lives Through 'Koottukkunjugal'

ஆ. மீரா[1], முனைவர் ந. இரமாபிரபா[2]

[1]முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி
உடுமலைப்பேட்டை-642126

[2]நெறியாளர், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி,
உடுமலைப்பேட்டை-642126

A. Meera[1], Dr. N. Ramaprabha[2]

[1]Ph.D. Research Scholar, Department of Tamil, Government Arts College,
Udumalpet- 642126
Email: meerakarthi31@gmail.com ORCID:
[2]Research Guide, Associate Professor, Department of Tamil, Government Arts College,
Udumalpet-642126

Abstract:

Society, at its core, is a collective of individuals. However, historical and persistent inequalities within this collective have meant that oppressed communities have ceaselessly strived for liberation from traditional constraints imposed by family, caste, society, and government. Writer Rajam Krishnan incisively observes these relentless struggles for life. Furthermore, this creator is deeply moved by the consequences arising from issues born out of caste, religious, and political systems, encompassing poverty, unemployment, exploitation, bribery, bonded labour, untouchability, denial of rights, child labour, and the subjugation of women. Economic disparities within society gave rise to a stark division between the rich and the poor, fostering master-slave dynamics. In this hierarchical structure, the wealthy, often the ruling class, exploited the economically disadvantaged, forcing them into arduous labour for meager wages. This plight afflicted adults and children alike, reducing them to daily-wage slaves without discrimination. In a particularly tragic manifestation of this exploitation, children were employed as bonded labourers in match factories, often to repay debts incurred by their parents. The novel 'Koottukkunjugal' meticulously chronicles the lives of these child labourers existing in such brutal conditions. This article, therefore, seeks to illuminate the challenges faced by child labourers as depicted through the narrative of this novel.

Keywords: Koottukkunjugal, Child labourers, Bonded labour, Matchbox workers, Poverty.

ஆய்வுச் சுருக்கம்:

சமுதாயம் என்பது மக்கள் வாழும் கூட்டமாகும். சமூகத்தலுள்ள ஏற்றத்தாழ்வுகளினால் தொடக்க காலத்திலிருந்தே குடும்பம், சாதி, சமூகம், அரசு ஆகியவை விதித்த மரபுக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலைபெற தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றளவும் போராடி வருகின்றனர். இந்த வாழ்க்கைப்

போராட்டங்களை எழுத்தாளர் ராஜம்கிருஷ்ணன் நுட்பமாகப் பார்க்கிறார். மேலும் சாதி, சமயம் மற்றும் அரசியல் அமைப்புகளின் வழி உருவாகும் சிக்கல்களான வறுமை, வேலையின்மை, சுரண்டல், கையூட்டு, கொத்தடிமைமுறை, தீண்டாமை, உரிமை மறுப்புகள், குழந்தைத் தொழிலாளர்முறை மற்றும் பெண்ணடிமைத்தனம் ஆகியவற்றின் வாயிலாக ஏற்படுகின்ற விளைவுகள் இப்படைப்பாளரைப் பெரிதும் பாதிக்கின்றன.

சமூகத்தில் நிலவிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளினால் ஏழை, பணக்கார்ர் மற்றும் ஆண்டான் அடிமைப் போக்குகள் உருவாகின. இதில் பணக்காரர்கள் அதிகார வர்க்கம் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை மக்களை தங்களுக்குக் கீழ் குறைந்த கூலிக்கு கடுமையான வேலைகளைச் செய்யப் பணித்தனர். இதில் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை பாகுபாடு இன்றி அடிமைகளைப்போல் தினக்கூலிக்கு வேலை செய்தனர். பெற்றோர்கள் வாங்கிய கடனுக்காக குழந்தைகள் கொத்தடிமைகளாகத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணியமர்த்தப்பட்டனர். இத்தகைய சூழலில் வாழும் குழந்தைத் தொழிலாளர்களின் வாழ்வியல் குறித்தும் கூட்டுக் குஞ்சுகள் நாவல் விவரிக்கிறது. இந்நாவலின் வழி குழந்தைத் தொழிலாளர்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்களை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

குறிப்புச் சொற்கள்
கூட்டுக் குஞ்சுகள், குழந்தைத் தொழிலாளர்கள், அடிமைமுறை, தீப்பெட்டி தொழிலாளர்கள், வறுமை.

அடிமை முறை

சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழ்ந்துவரும் தாழ்த்தப்பட்ட மக்கள் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகி வறுமைநிலை, பொருளாதாரப் பற்றாக்குறை போன்றவற்றிற்கு ஆளாகின்றனர். இதனால் நிலமற்ற ஏழைகளான இவர்கள் முதலாளிகளையும் செல்வந்தர்களையும் சார்ந்து வாழ்கின்றனர். இத்தகைய அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மற்றும் ஏழைமக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக எத்தகைய கடுமையான பணிகளைச் செய்யவும் துணிகின்றனர். இந்த வாய்ப்பை முதலாளிகள் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டு தங்களை நாடிவரும் தொழிலாளர்களை அடிமைகளைப்போல் கடுமையாக நடத்துகின்றனர். தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியமோ ஓய்வோ கொடுக்காமல் நாள்முழுவதும் உழைக்கக் கட்டாயப்படுத்துகின்றனர். இந்நாவலில் இடம்பெறும் குழந்தைத் தொழிலாளர்களின் நிலையும் மிகவும் வருந்தத்தக்க நிலையில் அடிமைகளைப்போல் எல்லா நேரங்களிலும் நடத்தப்படும் நிலையினை ராஜம் கிருஷ்ணன், **“தொழிலகத்தில், பிள்ளைகளுக்கு வேலைநேரம் விடிகாலம் அஞுசுமணிக்குத் துவங்குகிறது. இதற்காகத் தொலைவிலிருக்கும் குழந்தைகளை அழைத்துச்செல்ல ஃபாக்டரி வண்டி மூன்றரை மூன்றே முக்காலுக்கே வந்துவிடுகிறது. பிள்ளைகளை எழுப்பும் ஆளுக்கு இப்ப அறுபது ரூபாய் சம்பளம். நாளெல்லாம் பன்னிரண்டு, பதினான்கு மணிநேர வேலை செய்தாலும் அந்த அளவு கூலி கிடைப்பது சிரமமாக இருக்கிறது. எங்கள் தொழிற்சாலையில் ‘லஞ்ச் அவர்’ என்ற கட்டாயம் கூடக்கிடையாது. குழந்தைகள் எப்போது வேண்டுமானாலும் சென்று சாப்பிடலாமாம். ஆனால் இடத்தில் உட்கார்ந்து வேலை செய்யவில்லை என்றால் கணக்கப்பிள்ளை கையிலுள்ள சக்கையால் அடிக்கிறான் பயமுறுத்துகிறான்”.** [1]

என்ற வரிகளின் வாயிலாகக் வாயிலாகக் குறிப்பிடுகிறார். மேற்கண்ட மாரிமுத்து என்கிற கதாபாத்திரத்தின் உரையாடலின் வழி குழந்தைகள் அடிமைகளைப்போல் இரக்கமின்றி வேலைசெய்யும் நிலையினை அறிய முடிகிறது. பண்டைய காலந்தொட்டே தமிழ்நாட்டில் அடிமைமுறை நிலவிவந்த செய்தியினை,

“வறுமையின் காரணமாக, தம்மை தேவரடியாராக விற்றுக்கொண்ட சோக நிகழ்வுகளை சோழர் காலத்துக்குப் பிந்திய பதினைந்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன”.[2]

என்ற ஆய்வாளர் ஆ. சிவசுப்பிரமணியனின் ‘தமிழகத்தில் அடிமைமுறை’ என்னும் நூலில் குறிப்பிட்டுள்ள கருத்து இங்கு ஏற்புடையதாகும். குடும்பச்சூழல் காரணமாக வறுமையில் வாழும் ஏழைகள் ஒரு சிறுதொகையைப் பெற்றுக்கொள்ள செல்வந்தவர்களையும், தொழிற்சாலை முதலாளிகளையும் நாடுகின்றனர். ஆனால் பெற்றுக் கொண்ட தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் வட்டியுடன் அவர்களால் திருப்பித்தர முடிவதில்லை. இந்நிலையில் தங்கள் தேவைகளுக்கேற்றபடி இம்மக்கள் பிற முதலாளிகளுக்கு கொத்தடிமைகளாக விற்கப்படுகின்றனர். இவர்கள் முதலாளிகளிடம் தாம்பெற்ற கடன்தொகையைத் திருப்பிச் செலுத்தும்வரை அடிமைகளாகப் பணியாற்ற வேண்டும். இத்தகைய அடிமைநிலைக்குத் தள்ளப்பட்டவர்களைப் பற்றி **‘தமிழ்நாட்டில் நிலவும் அடிமைமுறை ஒரு வரலாற்றுப்பார்வை’** என்னும் நூலில் ஆறுவகையான அடிமைமுறைகளைப் பேராசிரியர் சு. மாணிக்கம் குறிப்பிடுகின்றார். அவை

1. ஒப்பந்த அடிமைமுறை
2. தன்னார்வ/ தன்னார்வமில்லா அடிமைமுறை
3. கோவில் (அல்லது) மத அடிமை
4. வாணிப அடிமை
5. பண்ணையடிமை
6. கொத்தடிமை

எனப் பலவாறாக அடையாளப் படுத்தப்பட்டு அடிமைப்படுத்தப்படிருப்பதை அறியமுடிகின்றது. இவற்றின் வாயிலாக தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு பல்வேறான அடிமைமுறைகள் நிலவி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

குழந்தைத் தொழிலாளர் உருவாகும் நிலை

வறுமையையும், பசியையும் காரணம் காட்டியே பெற்றோர்கள் தம் குழந்தைகளைத் தீப்பெட்டித் தொழிலகங்களில் வேலைசெய்ய கொத்தடிமைகளாக்கி விடுகின்றனர் என்பதனை மாரிசாமி என்னும் கதாப்பாத்திரத்தின் வாயிலாக ஆசிரியர் தெளிவு செய்கிறார். தீப்பெட்டித் தொழிற்சாலையின் முதலாளியான மயிலேசனின் மனைவி விஜியிடம்,

“வருசா வருசம் குழந்தைப்பேறு குழந்தை பேச நடக்கத் தெரிந்த நாளிலிருந்து குடும்பப் பொறுப்பைச் சுமக்கிறது. ஆறு வயசுக்குக் குச்சியடுக்கப் போகிறது. மூன்று வயசுக் குழந்தை அம்மா பசை தடவிக் கொடுத்தால் பெட்டி ஒட்டிப்போடுகிறது. நீங்க பார்த்தால் ஆச்சரியப்படுவீங்க மேடம்! ஒரு வயசிலேயே குழந்தைக்குத் துட்டின் மகிமை புரியும்”.[4]

என மாரிசாமி கூறுவதன் வாயிலாக குழந்தைகள் விருப்பமில்லாமல் கட்டாயத்தின்பேரில் வேலை செய்கின்றனர் என்பதையும் அறியமுடிகின்றது. தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் யாரும் பிறரோடு பேசவோ உறவு கொள்ளவோ உரிமையில்லை என அடக்குமுறை செய்வதோடு மட்டுமில்லாமல் அவர்கள் உழைப்புக்கேற்ற ஊதியமும் வழங்கப்படுவதில்லை என்பதே குழந்தைத் தொழிலாளர்களின் வருந்தத்தக்க நிலையாக உள்ளது. இதில் குழந்தைகள்முதலாக பெரியவர்கள் வரை அவர்களின் உழைப்பு மட்டுமே சுரண்டப்படுவதாக அமைகிறது. மேலும், இந்நாவலில் வரும் காத்தமுத்து என்னும் சிறுவனை, அவனது சித்தப்பன் முன்பணம் பெற்று தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்த்து விடுகிறான். காத்தமுத்துவை உடல்நலக் குறைவாக உள்ள நிலையிலும் அவனை வேலைக்குப் போகச்சொல்லி

அவனுடைய சின்னம்மாவும் சித்தப்பனும் கட்டாயப்படுத்துகின்றனர். இந்தச் சூழலில் இடைவிடாமல் வேலை செய்ய முடியாத காத்தமுத்து வேறுவழியின்றி ஊரைவிட்டே ஓடிப்போய் விடுகிறான். காத்தமுத்துவுக்குப் பதிலாக அவனது சிறியவயது தங்கையான வடிவை, சிற்றப்பன் வாங்கிய பணத்திற்கு ஈடாக வேலை செய்வதற்காகத் தரகன் ரத்தினம் என்பவன் வந்து அழைத்துப் போகிறான். குடும்பத்தில் குழந்தைகள் அதிகமாக இருந்தால் அதிகமான வருமானம் ஈட்டமுடியும் என்று பெற்றோர்கள் தவறாகக் கருதுகின்றனர். இதனால் பெற்றோர்கள் அதிக குழந்தைகளைப் பெற்று அனைவரையும் குழந்தைத் தொழிலாளர்களாக மாற்றுகின்ற அவலைநிலையினையும் இந்த நாவல் எடுத்துரைக்கின்றது.

இந்நாவலில் குறிப்பிட்டுள்ள சந்தனக்குடும்பன் மன்னம்மா தம்பதியினர் நிறைய குழந்தைகளைப் பெற்று அக்குழந்தைகளின் உழைப்பு மூலம் வருவாய் ஈட்டி வாழ்கின்றனர் என்பதை, **“காத்தமுத்துவின் சின்னம்மா ஒன்பது குழந்தைகளுக்குத் தாய் அவளுடைய கடைசிக் குழந்தை தவிர பிற குழந்தைகள் உழைத்துப் பொருள் ஈட்டுகின்றனர்”.**[5]

என்ற கூற்றின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. இதனால் சிறார்களது வாழ்வு சிதைவுறும் நிலையும் சிந்திக்கத்தக்கதாகும். இந்நாவலில் இடம்பெற்றுள்ள கதைத்தலைவியான விஜியின் தந்தை, **“இருபது ஆயிரத்துக்கு மேல் குழந்தைகள் உழைக்கிறாங்க”.**[6] என்று கூறுவதிலிருந்து பொருளீட்டுவதற்காகவே குழந்தைத் தொழிலாளர்கள் அதிகம் உருவாகிறார்கள் என்பது வெளிப்படுகின்றது.

குழந்தைத் தொழிலாளர்களின் தொழில்சார் சிக்கல்கள்

குழந்தைத் தொழிலாளர்கள் காலை மூன்றரை மணி அளவில் உறக்கத்திலிருந்து எழுப்பப்பட்டு தூக்கம் கலையாத முகத்துடன் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு விடியற்காலை ஐந்து மணிக்குள் அனுப்பப்படுகின்றனர். காலை ஐந்து மணிமுதல் இரவு ஒன்பது மணிவரை வேலை செய்துவிட்டு பின்னர் வீடு திரும்புகின்றனர். ஒவ்வொரு நாளும் இக்குழந்தைத் தொழிலாளர்கள் உணவு உறக்கமின்றி உழைக்கும் நிலையினை

“பதின்மூன்று மணிமுதல் பதினாறு மணி நேரம் வரை குறையாது உழைக்கின்றனர். மாரிசாமி குழந்தைத் தெழிலாளர்களின் உறக்கக் கலக்கத்தைத் தெளிவிக்க தண்ணீர் கொண்டுவந்து கொடுத்து துடைத்துக் கொள்ள சொல்கிறான்”.[7]

என்ற ஆசிரியரின் உரையாடலின் வழியாக அறிந்துகொள்ளமுடிகிறது. குழந்தைத் தொழிலாளர்கள் பணி முடித்து வீட்டிற்குத் திரும்பும்போது பசியினாலும், வேலை சுமையினாலும் களைப்படைந்து பேருந்துப் பயணத்திலேயே உறங்கத் தொடங்கி விடுகின்றனர். லட்சுமி என்னும் சிறுமி, உணவு கூட உண்ணாமல் தூங்கி விடுகின்றாள். அவளை மம்முட்டியான் அதட்டி உணவு உண்ணச் செய்கிறான். உணவு உண்டதும் அச்சிறுமி சாக்குச் சுருணையில் போய் மீண்டும் உறங்குகிறாள். இந்நிகழ்வின் வழி குழந்தைத் தொழிலாளர்களின் அவலநிலை நோக்கத்தக்கதாகும். தொழிற்சாலைகளுக்குள் குழந்தைகள் பாதுகாப்பின்றி வேலை செய்யும் நிலையினை,

“காத்தமுத்துவுக்குக் கண், முகம், தொண்டை, நெஞ்சு எல்லாம் ஒரே முட்டாக எரிச்சலெடுக்கிறது. மூக்கிலிருந்து நீர் வடிகிறது. தொண்டையில் எச்சில் இறங்கினால் விழுங்கும்போது வலியெடுக்கிறது. மருந்துப் பொடியின் நெடியில் எதுவும் தெரியவில்லை”.[8]

என்ற காத்தமுத்து கதாபாத்திரத்தின் வழி குழந்தைத் தொழிலாளர்கள் படும் துயரத்தை ஆசிரியர் எடுத்துரைக்கிறார். சின்னப்பட்டி, பெரியபட்டி ஆகிய சிற்றூர்களிலும் அவற்றின் சுற்றுப்பகுதியிலும் உள்ள சிறுவர், சிறுமியர், ஆடவர், பெண்டிர் பலரும் அருகில் உள்ள இளையசேரன் தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை செய்கின்றனர். இத்தொழிற்கூடத்தில் குழந்தைகள் கடுமையான

வேலைகளைச் செய்ய வற்புறுத்தப்படுகின்றனர். மிகக்குறைந்த வயது குழந்தைகளும் இத்தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். இவர்களில்

“எட்டு வயது பேராச்சி, ஏழுவயது லட்சுமி, ஆறுவயது வடிவு போன்றோர் குச்சியடுக்கும் வேலை செய்கின்றனர்”.[9]

என்று ஆசிரியர் கூறிச் செல்வதன் மூலம் குழந்தைகளின் எதிர்கால வாழ்வு தொழில்சாலையிலேயே முடங்கி விடுவதை அறிய முடிகிறது.

கல்வியுரிமை மறுப்பு :

பெற்றோர்கள் வருமை காரணமாக பிள்ளைகளின் மேல் முன்பணம் வாங்கிவிடுகிறார்கள். இவர்களின் தொடக்க்க் கல்வி தடை படுவதை,

“பொட்டப்புள்ளைக்குப் பள்ளிக்கூடம் என்னா பள்ளிக்கூடம் ? அவிய அட்வான்ஸ் பின்ன எப்படி தீரும் ? தட்டி எளுப்பு...என்று குடும்பன் ஆணையிடுகிறான். அப்பனும் அதை ஆமோதிக்கிறான்.. கனவோ நினைவோ என்று தடுமாறினாலும் ஆறு வயசு வடிவு தோட்பட்டை நழுவும் கவுனை சரி செய்து கொண்டு எழுந்திரிக்கிறது. நான் கொண்டுவுடற காத்தமுத்து பேரில இவள பதிஞ்சிகிட சொல்லுங்க அண்ணாச்சி.... அவன் வெற்றியுடன் திரும்புகிறான். பள்ளிக்கு மற்றுமொரு மாணவி குறைந்து போகிறாள்”[10]

என்ற உரையாடலின்வழி அறிய முடிகிறது. இதன் மூலம் ஒரு சிறுமியின் கல்வியுரிமை மறுக்கப்படுகிறது என்பதனை அறியலாம். குழந்தைகள் முழு நேரம் உழைத்தாலும் அவற்றை விலக்கிக் கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். மெழுகு முக்குதல், மருந்து தோய்த்தல், கட்டை சரிசெய்தல், குச்சி அடுக்குதல், பெட்டிகள் செய்தல் முதலான பணிகளை அவர்கள் செயிகின்றன. குச்சி அடுக்கும் பகுதி யானை கொட்டி போல் சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அங்கு உழைக்கும் குழைந்தைகள் பசியைப் பொருத்துக் கொண்டே உழைக்கின்றனர். உறக்கம் கண்ணைச் சுற்றும்போதும் அவர்களால் உழைப்பதை நிறுத்த முடியாது.

பெற்றோர்களோ தங்களது வறுமையையும், வருவாயையும் கருத்தில் கொண்டு பள்ளிக்குச்செல்லும் குழைந்தைகளைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு சேர்த்துவிடுகின்றனர். இதனை ,

“இருவதம்சத் திட்டம் வந்தப்போ, சட்டம் வந்து கழுத்துல உக்காந்தப்போ , புள்ளய வேலைக்கு வேண்டாம்னு கூட சொன்னாங்க. ஆனா என்ன நடந்துச்சி?...பாக்ட்ரிய மூடிடாதிய, நாங்க பட்டினி கெடந்து சாவணும்னு போயி மேனேசர் காலில விழுந்திய. பதினாறு வயசாயிருக்களும்னு சொன்னப்ப, பச்சப்பிள்ளங்களுக்கு மேத்துணி போட்டுக்கொண்டுபோயி நிறுத்தினிய...”[11]

என்ற மாரிசாமியின் கூற்றானது இங்கு கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

பாலியல் அத்துமீறல்கள்

தாழ்த்தப்பட்ட குடும்பங்களில் வாழும் பெண்கள் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கும் பாலியல் வன்முறைக்கும் ஆளாகின்றனர். தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் பெண் குழந்தைகள் சீரழிவதாக சிவகணேசனும் ஐயம்மாவும் கூறுகின்றனர். சிறுமி அழவாய்க்கு சோப்பும் பவுடரும் வாங்கிக்கொடுத்து தன் இச்சைக்கு பலியாக்குக்கிறான் கணக்குப்பிள்ளை. அழவாயி தலையில் தீப்பெட்டிக் கட்டுகளை எடுத்து வைக்கும்போது கணக்குப்பிள்ளை பாலியல் சீண்டலில் ஈடுபடுகிறான்.

இதற்கு எதிர்ப்புக் காட்டாத அளவிற்கு அச்சிறுமியின் மனம் பதட்டப்பட்டிருக்கிறது. அவள் ஒத்துழைப்பு தந்தால் தான் கணக்குப்பிள்ளையும் கூலிக் கணக்கைக் குறைக்க மாட்டன். இவற்றை,

" கொட்டியைக் கூட்டுவதற்கு வந்த அந்த இளம் பெண்கள் முதலில் மிரண்டாலும் வேறு வழி தெரியாது அம்மேலாளரின் பாலியல் வெறிக்கு ஆளகின்றனர்...." [12]

இதனை நாவலாசிரியர் குறிப்பாக உணர்த்திச் செல்கிறார். தனது தோழிகளுடன் நின்று கொண்டிருந்த அழகாயை கணக்குபிள்ளை கொட்டடியை கூட்டி சுத்தம் செய்ய வேண்டும் எனக் கூறி லாரியில் ஏற்றிச் செல்கிறான். அங்கு அச்சிறுமி பாலியல் அத்துமீறலுக்கு ஆளாகிறாள். அவளுடைய நிலை நிற்கதியாய் காணப்படும் சூழலை,

"அவள் முகத்தில் பௌடரும் பொட்டும் இருந்த திட்டுத் திட்டான தடங்கல் கூட இல்லை. ஒரு சூறைக்காற்றடித்து எல்லாம் தடயமில்லாமல் போய் விட்டாற்போல வெறுமை நிலவுகிறது..."[13]

என்ற வரிகளின் வாயிலாக நாவலாசிரியர் பாலியல் வன்கொடுமை நிகழ்ந்ததை உறுதிப்படுத்துகிறார். பொதுவாகவே சிறுமிகளும் இளம் பெண்களும் பணிக்குச் செல்லும் இடங்களில் உடல் ரீதியகவும் மனரீதியாகவும் பல்வேறு பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர். அதிலும் குறிப்பாக அதிகாரத்தில் உள்ள யாரேனும் ஒருவரால் பாலியல் துன்புறுத்தல்கள் நடந்தவண்ணம் உள்ளன. இக்கொடுமைகளை எதிர்த்து கேள்வி கேட்பவர்களுக்கு கூலியைக் குறைத்தல், கடுமையான வேலைகளைச் செய்ய நிர்பந்தித்தல், பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்துதல் அல்லது அவர்களின் நடத்தயைத் தவறாக சித்தரித்தல் போன்ற துன்பங்களைக் கொடுத்து பழிவாங்கும் நோக்கில் கணக்குப்பிள்ளை போன்றவர்கள் அப்பெண்களை அச்சுறுத்துகிறார்கள். மேலும் சில பெண்கள் தாக்குதல்களுக்கும் ஆளாகின்றனர். இதற்கு மேலும் தங்களுக்கு நேரும் கொடுமைகளை வெளிப்படுத்தினால் தங்களுடைய வாழ்வாதாரம் கேள்விக் குறியாகுமோ என்றும் வீண்பழிக்கு அளாகி தங்களின் தன்மானத்திற்கு இழுக்கு வந்து விடுமோ என்ற அச்சதிலும் பல பெண்கள் இத்தகைய வன்முறைகளை வெளிக்காட்டாமல் கடந்து செல்லும் நிலையும் காணப்படுகிறது. பொது சமூகமும் இத்தகைய கொடுமைகளை கண்டும் காணாமலும் கடந்து செல்லவே பார்க்கும் நிலையை,

"வெவரம் புரிஞ்சவங்க, தீப்பெட்டி ஆபீசுக்குள்ள வயசுப்பொண்ணுவள அனுப்பக் கூடாது. அப்படிக் கெட்டுப்போச்சுன்னா, அவனுவள சொல்லியும் குத்தமில்ல. காலம நாலுமணிக்கு வர கனக்குப்பிள்ளை, ராத்திரி வரையிலும் இதுங்க மத்தியிலேயே நின்னுட்டு லோலுபடுறா...எப்பிடி எப்பிடியோஆயிபோவுது. அழவாயிய ஞாயிற்றுக் கெழம வேளை இருக்குன்னு கூட்டிட்டு போனானா கணக்கப்பிள்ள..?"[14]

என்று அழவாயி என்னும் சிறுமிக்கு நடக்கும் பாலியல் துன்புறுத்தல் பற்றி நாவலாசிரியர் குறிப்பிடுவதன் மூலம் அறியலாம். இவ்வாறாக பல்வேறு சூழல்களில் குழந்தைத் தொழிலாளர்கள் துன்புறும் வாழ்வியல் சிக்கல்களை கூட்டுக்குஞ்சுகள் நாவல் வழி அறியமுடிகின்றது.

முடிவுரை

சமூகத்தில் நிலவும் வறுமையும், அடிமைமுறையும் குழைந்தைகளைக் கடுமையான தொழில்களில் குறைந்த கூலிக்கு அமர்த்தும் நிலைக்குத் தள்ளியதையும், அங்கு உடல் ரீதியகவும், மனரீதியாகவும் குழந்தைகள் பல்வேறு ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாவதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது. மேலும் குழந்தைத் தொழிலாளர்கள் வாழ்வில் எதிர்கொள்ளக் கூடிய பல்வேறு வாழ்வியல் சிக்கல்கலையும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. இந்நாவல் வெளிப்படுத்தும் குழந்தைத்

தொழிலாளர்களின் இன்னல்களை கருத்தில் கொண்டு அரசு பல்வேறு மீட்பு நடவடிக்கைகள் மேற்கொண்டாலும் அவை முழுவதுமாக செயல் படுத்தமுடிவதில்லை என்பதையும் உணர முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1.ராஜம் கிரிஷ்ணன், கூட்டுக் குஞ்சுகள், ப.174

2.ஆ.சிவசுப்ரமணியன், தமிழகத்தில் அடிமை முறை, ப.72

3.சு.மாணிக்கம், தமிழ்நாட்டில் நிலவும் அடிமை முறை ஒரு வரலாற்றுப் பார்வை, ப.81

4.ராஜம் கிருஷ்ணன், கூட்டுக்குஞ்சுகள் ப.174

5.மேலது ப.61

6.மேலது ப.70

7.மேலது ப.113

8.மேலது ப.160

9.மேலது ப.58

10.மேலது ப.119

11.மேலது ப.115

12.மேலது ப.96

13.மேலது ப.93

14.மேலது ப.115

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

வேள் பாரி நாவலில் பறம்பு மக்களின் கொற்றவைக் கூத்து

The Kotravai Koothu of the Parambu people in the novel Vel Pari

முனைவர் சி. நந்தினி
உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை, வி.எல்.பி ஜானகியம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவைப்புதூர், கோயம்புத்தூர் – 641 042
Dr. C. Nanthini,
Assistant Professor and Head, Department of Tamil,
V.L.B. Janakiammal College of Arts and Science Coimbatore – 641 042, Tamil Nadu, India.
Email ID: cnanthini41@gmail.com

Abstract:

This research article explores the depiction and significance of Kūttu (traditional Tamil dance/performance art), particularly the Korravai Kūttu, among the Parambu people in S. Venkatesan's epic novel, Veḷ Pāri (Vel Pari). The study posits that the novel utilizes these ancient performing arts not merely as cultural backdrop, but as a vital expression of Parambu's identity, spiritual lineage, and political stability. Drawing parallels between the performance descriptions in the novel and classical Tamil literature (such as Puranāṉūṟu and Cilappatikāram), the paper analyzes the evolution of Kūttu from its natural origins to its role as a formalized ritual (Viruthi). Emphasis is placed on the distinction between the war-invoked Verikuravai and the peaceful Thaṇkuravai, demonstrating how the worship of Korravai, the Goddess of Victory, is central to King Pari's invincibility and the prosperity of his mountain kingdom.

Keywords: Kūttu, Koṯravai, Vel Pari, Parambu, Ancient Tamil Performing Arts, Mathangan, Puranāṉūṟu.

ஆய்வுச் சுருக்கம்:

ச. வெங்கடேசனின் காவிய நாவலான 'வேள்பாரி'யில், பறம்பு மக்களிடையே கூத்து (மரபான தமிழ்க் கலை/நிகழ்த்து கலை) குறிப்பாகக் கொற்றவைக் கூத்து சித்தரிக்கப்பட்ட விதம் மற்றும் அதன் முக்கியத்துவத்தை இந்த ஆய்வுக் கட்டுரை ஆராய்கிறது. இந்த ஆய்வு முன்வைப்பது யாதெனில், இந்த நாவல் பண்டைய நிகழ்கலைகளை வெறும் பண்பாட்டுக் களமாக மட்டும் பயன்படுத்தவில்லை; மாறாக, அவை பறம்பின் அடையாளம், ஆன்மீக மரபு மற்றும் அரசியல் நிலைத்தன்மை ஆகியவற்றின் இன்றியமையாத வெளிப்பாடாகச் செயல்படுகின்றன.

நாவலில் இடம்பெற்றுள்ள கூத்து விளக்கங்களுக்கும், செவ்வியல் தமிழிலக்கியங்களான புறநானூறு, சிலப்பதிகாரம் போன்றவற்றில் காணப்படும் கூத்து பற்றிய குறிப்புகளுக்கும் இடையேயான ஒப்புமைகளைக் கண்டறிவதன் மூலம், இக்கட்டுரை கூத்தின் பரிணாம வளர்ச்சியைப் பகுப்பாய்வு

செய்கிறது. அதாவது, அதன் இயற்கைத் தோற்றத்திலிருந்து, முறையான சடங்கு வடிவமான **'விருத்தி'**யாக அது மாறிய விதத்தை விளக்குகிறது. மேலும், போரைத் தூண்டும் **'வெறிக்குரவை'**க்கும், அமைதி நிலவும் **'தண்குரவை'**க்கும் இடையேயான வேறுபாட்டின் மீது சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. இதன் மூலம், வெற்றியின் தெய்வமான கொற்றவையின் வழிபாடு எவ்வாறு மன்னன் பாரியின் வெல்லமுடியாத தன்மைக்கும், அவனது மலைநாட்டின் செழிப்புக்கும் மையமாக உள்ளது என்பதையும் இந்த ஆய்வு நிரூபித்துக் காட்டுகிறது.

முக்கிய வார்த்தைகள்: கூத்து, கொத்தவை, வேல் பாரி, பறம்பு, பண்டைய தமிழ் கலைநிகழ்ச்சிகள், மாதங்கன், புடனாற்று.

கூத்தின் தோற்றம்

இறைவனது அருட்படைப்பிலே கூத்து நிகழ்கின்றது. எவரிடமும் பயிற்சி பெறாமலும், கூத்துக் கலையின் பண்பைச் சிறிதளவும் கல்லாமலும், கரு முகில்களைக் காணும் மயில்கள் தம் சிறகுகளை விரித்து ஆடுகின்றன. கொடிய அரவங்கள் மகுடி ஓசையைக் கேட்டதும் தம் புற்றுக்களிலிருந்து வெளிப்போந்து இசையில் ஈடுபட்டு மெய்மறந்து படமெடுத்து ஆடுகின்றன. கண்ணனைப் போன்றாரது வேய்ங் குழலில் ஈடுபட்டுக் கன்று காலிகள் தம்மை மறந்தனவாய் அசைந்தாடுகின்றன. இவற்றைக் கூர்ந்து நோக்கின், இயற்கைப் படைப்பிலேயே கூத்து இயல்பாக அமைந்துள்ள உண்மையை அறிய முடிகிறது.

மலைகளில் வாழ்ந்த பண்டை மக்கள் பலவாறாக ஓசைகளையிட்டு ஒருவருக்கொருவர் தம் எண்ணங்களை அறிவித்துக்கொண்டனர். பின்னர் அம் மக்கள் சைகைகள் சேர்த்துத் தம் கருத்துக்களை வெளிப்படுத்தினர்; பின்னர்ப் படிப்படியாகத் தங்கட்கென மொழியை அமைத்துக் கொண்டனர். இவ்வாறு ஒவ்வொரு நாட்டுப் பண்டை மக்களும் தங்கட்கெனத் தனித் தனி மொழியை அமைத்துக்கொண்டனர். மனிதன் பலவகை உணர்ச்சிகள் கொண்டவன்; அளவு கடந்த மகிழ்ச்சி உண்டாகும் பொழுது அவன் தன்னை மறந்து கூத்தாடுவான்; கோபமாயிருக்கும் பொழுது கண் சிவந்து உதடுகள் துடிக்கப் பரபரப்புடன் பேசுவான். தனது உள் உணர்வுகளை மெய்ப்பாடுகளுடன் கலைஞன் வெளிப்படுத்துவதைக் கூத்தின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

பழங்காலத்தில் பதினொரு வகையான ஆடல்களை ஆடி வந்தார்கள். இவ்வாடல்களைக் கூத்து என்றும் கூறுவதுண்டு. தெய்வங்கள் தமது பகைவரான அவுணர்களுடன் போரிட்டு வென்ற மகிழ்வான தருணங்களில் ஆடிய ஆடல்கள் பதினொன்றாகும். அவை தெய்வ விருத்தி என்றழைக்கப்படுகிறது.

கொற்றவை ஆட்டம்

போர் உக்கிரமாக நடைபெறும் வேளையில் வெற்றி தோல்வியை அறிந்து கொள்ள கொற்றவை வந்து ஆடும் குரவைக் கூத்தில் அடங்கா சினமும், வெறியும் மிகுந்து தோன்றும். அதனால் இதனை சினமார்ந்த வெறிக்குரவை என்கிறது புறநானூறு. போரில்லாத காலத்தே மழை, பயிர் வளம் குறித்துக்

கேட்க ஆடப்படும் அமைதியான குரவை தண்குரவையாகும். நாட்டுக்கோ, மன்னனுக்கோ தீங்கு நேருமோ என்ற வேளையில் தெய்வ சந்தம் வந்து ஆடுவதாகக் கருதப்படுகிறது.

வேள்பாரியின் பறம்பு மலையில் மக்கள் குறையேதுமில்லாமல் செழிப்பாக வாழ்ந்து வந்தார்கள் அவர்களின் பொழுதுபோக்கு நிகழ்வுகாக கூத்து இருந்ததை அறிய முடிகிறது. மேலும் பறம்பு மக்கள் செழிப்பாக வாழ்வதற்கு பாரியின் உறுதியான ஆட்சிமுறை, பறம்பு மலையின் இயற்கை அரண், எவரையும் தனது படை பலத்தால் வீழ்த்தும் பாரியின் போர்த்திறன், குறுநில மன்னான பாரியை எவரும் வீழ்த்த இயலாமைக்குக் காரணம் கொற்றவையின் அருள் என்பதை அம்மக்கள் கொற்றவையை முதற்கண் வணங்குவதன் மூலம் அறிய முடிகிறது.

ஆதிக்கூத்து

மதங்கனின் கூத்து நள்ளிரவுக்குப் பிறகு தான் துவங்கும். சித்தாற்றின் வடக்குத் திசையில் இருந்து வந்த பாணர்களான இவர்கள், விலங்கை வேட்டையாடி அதன் தோல் மற்றும் நரம்புகளை வைத்து இசைக்கருவிகளைத் தயார் செய்து அதை வாசித்துக் கொண்டே கூத்து நிகழ்த்தினார்கள் என்பதை அறிய முடிகிறது.

"கூத்து நிகழ்ந்துகொண்டிருக்கும் எந்த கணத்தில் தடாரிகளை எடுத்து பெரும் மதங்கன் களம் இறங்குவான் என்பது யாருக்கும் தெரியாது. யாழ்தேவதை உருகி அழைக்க ஏதோவொரு கணத்தில் சினம் கொண்டு இறங்குவான். தடாரிகள் எழுப்பும் ஒலி கேட்டு மலை தெய்வம் உள்ளொடுங்கும் . மலை நடுங்க மதங்கன் ஆடுவான்." தடாரிகளின் பேரொலி காட்டைக் கிட்டித்து இடிக்கும். காட்டின் ஆதிமைந்தர்கள் ஆடிய ஆட்டம் அது.

"மதங்கனின் ஆதிக்கூத்து மத யானை தனது நிழலைக் கொல்ல, மீண்டும் மீண்டும் தந்தத்தால் மண்ணைக் குத்துவதுபோல இருந்தது". எல்லாக் கருவிகளும் முழங்கிக் கொண்டிருந்தன. மூதாதையர்களின் ஆதிக்கூத்தை பாரி உறைந்த நிலையில் பார்த்துக் கொண்டிருந்தான் என்பதை சு.வெங்கடேசன் கூறுகின்றார்.

நீலனின் கொற்றவை ஆட்டம்

வெட்டிய காட்டு எருமையின் குருதியை உடல் முழுதும் பூசி நிலம் அதிர ஆடினான் நீலன். "அவன் ஆடியது ஆட்டம் அல்ல ஒரு போர்க்களத்தின் இறுதிப் பாய்ச்சல் நீலனின் கால் அசைவுகளுக்கு ஈடு கொடுக்க முயன்று பறையைக் கொட்டிய பாணர்களின் கை நொந்தது தான் மிச்சம். கிணைப்பறையின் கண் மற்றும் பறை அடிக்கும் கோல் நார் நாராக கிழிந்த பிறகும் கூட நீலனின் ஆட்டம் நிற்கவில்லை." நீலன் இறுதியில் மயங்கி கீழே விழும் முன் குலநாகினியின் கரங்கள் நீலனின் உடலைத் தாங்கிப் பிடித்தன.

"உக்கிரம் ஏறிய குலநாகினி நீலனை இரு கைகள் ஏந்தி எதிர்களமாடினாள். போர்க்களத்தில் சினம் கொண்டு ஆடும் கொற்றவையின் ஆட்டம் என்றும் இவ்வாட்டத்தில் தாவர வேர்கள் உடலெல்லாம் சரசரக்கக் கூகைக்குஞ்சுகள் எங்கும் சிதறி விழ நாகப்பச்சை நாயகி வேளிர்குல நாகினி நீலனை ஏந்தி

களம் முழுவதும் வலம் வந்தாள். குலவையொலியும் பறையொலியும் விண்ணை முட்டின". ஆடுகளம் ஆவேசத்தால் குலுங்கியது என்று தனது நாவலில் சு.வெங்கடேசன் குறிப்பிடுகிறார்.

துணங்கைக்கூத்து

"துணங்கை என்பது கூத்து வகைகளுள் ஒன்று. அது முடங்கிய இருகைகளையும் விலாப்புடைகளில் ஒற்றி அடித்துக்கொண்டு அசைந்தாடும் ஒருவகைக் கூத்து". மகளிர் விழாக்காலங்களில் துணங்கைக் கூத்தாடுவர். ஆடவர் அம்மகளிர்க்கு முதற்கை கொடுத்தல் வழக்கம்.

நானிலங்களிலும் இருந்த வள்ளல்கள்பாற் சென்று உள்ளக் குறிப்புப் புறத்து வெளிப்பட்ட ஆடிய நடனமங்கை பண்டைத் தமிழகத்தில் விறலி எனப் பெற்றாள். இவ் விறலியர் பாணருடனும் கூத்தருடனும் சென்று வள்ளல்களிடம் பரிசு பெற்று வந்தனர். அவர்கள் பெரும்பாலும் பாணருடன் செல்வது வழக்கம். விறலி 'ஆடு மகள்' என்று பெயர் பெற்றாள்.

இங்ஙனம் மெய்ப்பாடுகள் தோன்ற நடிக்கும் விறலியர் சங்ககாலத்தில் பலர் இருந்தனர் என்பதைத் தொகை நூற் களால் அறியலாம். பண்டை அரசர்கள் விறலியர் ஆடல் பாடல்களைப் பாராட்டிப் பொன்னரி மாலையைப் பரிசளித்தனர்; தொடி முதலிய சிறந்த நகைகளையும் வழங்கினர்.' 'விறலியர் நிறமுடைய கலவை பூசப்பட்ட வளைந்த சந்தினையுடைய முன்கைகளையும் ஒளி பொருந்திய நெற்றியையும் உடையவர்' என்று கோவூர்கிழார் பாராட்டியுள்ளார். விறலியர், 'யாழ் வாசித்தாற் போலப் பாடும் நயப்பாடு தோன்றும் பாட்டினையுடைய விறல்பட ஆடுதலையுடையார்' என்று மாங்குடி மருதனாரும் பெருங்கவுசிகனாரும் கூறயிருப்பது விறலியருடைய இசைச் சிறப்பினையும் நடனப் பயிற்சியின் மேன்மையினையும் நன்கு உணர்த்துவதாகும்.

பறம்பு மலையின் துணங்கைக் கூத்து

மூத்த பிடாரன் பக்குவமாகத் துளையிட்டு தொலைவில் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான். இளைய பிடாரனும் அதே போலத் துளையிட முயன்ற பொழுது கைகளைப் பற்றியவர்களின் ஆட்டம் தொடங்கியது. "கைப் புணர்ந்தாடும் துணங்கைக் கூத்து நாகத்திடமிருந்து மனிதன் கற்ற காதற்கலை என்று அறியலாகிறது."

பெருஞ்சேரலின் படை எருக்கு மலையைச் சூழ்ந்து எரியூட்டிய போது 'அதிலிருந்து தப்பிய நாகர்கள் பறம்பு மலை வந்து சேர்ந்தனர். அப்போதிருந்த அவர்கள் தங்கள் குலவழக்கப்படி கொற்றவைக் கூத்தில் கை புணர்ந்தாடும் துணங்கைக் கூத்தை பறம்பு மலையில் ஆடினர்" என்பதை அறிய முடிகிறது

பறம்பு மலையில் அமலை ஆட்டம்

பதினேழாம் நாள் வேளிருக்கு உரியது. இம்மலைக்கு வந்துள்ள அத்தனை குடிப்பாணர்களின் இசைக் கருவிகள் ஒரு சேர முழங்கும். காடு கிடு கிடுக்க காண்போர் நடு நடுங்க களமிறங்கி ஆடுபவன் "வேள்பாரி". கொற்றவைக்கு முன் காட்டெருமையைப் பலியிட்டு மேலெல்லாம் குருதி பூசி நிலம் நடுங்க ஆடுவான். "பறம்பின் எல்லைக்குள் வந்த குலங்களின் கண்ணீர் துடைக்க உயிரையும் தரச் சித்தம் என உருகிச் சொல்லும் பெருநாளான இன்று போர்த்தெய்வமான கொற்றவையின் முன் வாளேந்தியாடும் அமலையின் ஆட்டத்தை வேள்பாரி ஆடுவான் என்று கபிலர் உதிரன் வாயிலாகத் தெரிந்து கொள்கிறார்"

நிறைவுரை

பறம்பு மலையின் வளமைக்கும் செழுமைக்கும் காரணம் கொற்றவை தெய்வமே என்பது அறியலாகிறது. பாரியின் வெற்றிக்கும் பறம்பில் வேற்று அரசர்கள் நுழைய முடியாமைக்கு காரணம் கொற்றவையின் பாதுகாப்பு அரண் என்பது அறிய முடிகிறது. மேலும் கொற்றவைக் கூத்தை காண மக்கள் பெரு ஆவலோடு இருந்தனர் என்பதையும் காவல் தெய்வத்தையும் பாதுகாப்பு இயற்கை அரணுக்கும் நன்றி சொல்லும் நிகழ்வாக இருந்ததோடு மட்டுமின்றி பறம்பு மலையை நாடி வரும் மக்களும், பாணர்களும், விறலியரும் கொற்றவைக் கூத்தை அறிருந்திருந்ததோடு அக்கூத்தை ஆடி மகிழ்ந்தனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

குறிப்புதவி நூல்கள்

1. நுண்கலைகள் , மயிலை சீனி வேங்கடசாமி, மணிவாசகர் நூலகம், சிதம்பரம்
2. தமிழகக் கலைகள், மா. இராசமாணிக்கனார், பாரிநிலையம், சென்னை
3. சிலப்பதிகாரம், கடலாடு காதை – 35 ஆம் வரிகள்
4. வீரயுக நாயகன் வேள்பாரி, சு.வெங்கடேசன், விகடன் பிரசுரம், சென்னை

Reference Books

1. Fine Arts, Mayilai Seeni Venkatasamy, Manivasagar Library, Chidambaram
2. Tamil Nadu Arts, M. Rajamanickanar, Parinilayam, Chennai
3. Silappadhikaram, Kadaladu Kadhai – Lines 35
4. Veerayuga Nayagan Velpari, Su. Venkatesan, Vikatan Prasuram, Chennai

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பங்கு

The role of technology in teaching and learning

முனைவர் செ. கார்த்திகேயன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கற்பகம் உயர்கல்விக் கழகம்,
கோவை - 21, தமிழ்நாடு, இந்தியா.
Email: karthikeyan.selvam@kahedu.edu.in

Dr. S. Karthikeyan,
Assistant Professor, Department of Tamil,
Karpagam Academy of Higher Education, Coimbatore - 21, Tamil Nadu, India.
karthikeyan.selvam@kahedu.edu.in ORCID: https://orcid.org/0009-0009-4829-147X

Abstract

In the twenty-first century education, technology plays a major role in learning and teaching. The scientific inventions that have given the world and the tools that have been developed have revolutionized the field of information technology. Information technology has grown into a strangely powerful force that can encompass the vast universe on a computer and instantly communicate humanity's feelings with a single finger. It would not be an exaggeration if the computer is a scientific instrument that brings this strange and wonderful world to the fore. In today's globalized environment, computer plays a major role in providing quality education from elementary to higher education to the young generation to compete with the world.

Keywords: Information Technology, Computer, Tamil Learning, Tamil Teaching, Learning Accessories, Radio, Television, Audio Visual Tape Recorder, Satellite Television, Media, Networking, Internet.

ஆய்வுச் சுருக்கம்

இருபத்தோராம் நூற்றாண்டில் கல்வியானது, கற்றல் - கற்பித்தலில் தொழில்நுட்பம் பெரும்பங்கு வகிக்கிறது. இந்த உலகத்திற்கு வழங்கிய அறிவியல் கண்டுபிடிப்புகள், அதனால் உருவாக்கப்பட்ட கருவிகள் தகவல்தொழில்நுட்பத் துறையில் புரட்சியையே செய்திருக்கின்றன. தொழில்நுட்பமானது, விரிந்துள்ள அண்டத்தைக் கைக்கணினியில் உள்ளடக்கி ஒற்றை விரலால் மனிதகுலத்தின் உணர்வுகளை உடனுக்குடன் பரிமாறிக் கொள்ளும் விந்தையான ஆற்றல் வாய்ந்த சக்தியாக வளர்த்துள்ளது தகவல் தொழில்நுட்பம். இவ்விந்தையான வியப்பான உலகைக் கண்முன் கொண்டு வருவது கணினி என்ற அறிவியல் கருவிதான் என்றால் அது மிகையாகாது. இன்றைய உலகமயமாதல் சூழலில் வளரும் இளம் தலைமுறையினரை உலகத்தாரோடு போட்டியிடும் அளவிற்குத் தொடக்க நிலை முதல் உயர் கல்வி வரை தரமான கல்வியை வழங்குவதில் கணினி மிகப்பெரிய பங்காற்றுகிறது.

திறவுச் சொற்கள்: தகவல் தொழில்நுட்பம், கணினி, தமிழ் கற்றல், தமிழ் கற்பித்தல், கற்றல் துணைக்கருவிகள், வானொலி, தொலைக்காட்சி, ஒலி, ஒளி நாடாப் பதிவான், செயற்கைக் கோள்வழி தொலைவரங்கம், ஊடகம், வலைப்பின்னல், இணையதளம்.

tamilmanam

முன்னுரை

தமிழர்கள் தொடக்க காலமுதல் கல்வியில் சிறந்து விளங்கினர் பரவலாக கல்வியறிவு பெற்றிருந்தனர் என்பதை உணரமுடிகிறது. கல்வி அனைத்திலும் சிறந்தது ஏழு பிறவிக்கும் பயனளிக்கக் கூடியது. நாட்டை ஆளுபவனைவிட கல்வி கற்றவனே சிறந்தவன். கற்றவன் எங்குச் சென்றாலும் சிறப்பு.

பண்பாட்டு கல்வி மனிதனுக்கு மிகவும் அவசியம். பண்புடையவருடன் இணக்கமாக நட்பு கொள்ள வேண்டும். அனைவரையும் சமமாகப் பார்க்கும் சமத்துவச் சிந்தனையைக் கல்வியை புகட்ட வேண்டும். ஆணும் பெண்ணும் சமமாக வாழ்வதால் உலகமே அறிவில் உயரும். அறிவியலில் தமிழர் சிறந்து விளங்கினர் என்பதற்கு இலக்கியங்கள் பல சான்றுகளை குறிப்பிடுகின்றனர். பண்டைய தமிழர்கள் கல்வித் திறத்தால் மிளிர்ந்தனர் என்பதை இலக்கிய பதிவுகள் நிறுவுகின்றன. சங்கம் வைத்து தமிழ் வளர்த்ததும் உலக பொதுமை கொண்ட இலக்கியங்கள் காலந்தோறும் தோன்றியதும் தமிழர் கல்வியின் மேன்மையை பறை சாற்றும். 'கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்தும்' என்ற வள்ளுவரின் வாக்கினைச் சாட்சியாகக் கொள்ளலாம். அப்பெருமிதம் கொண்ட கல்வியில் கற்றல் கற்பித்தலின் சிறப்பும் தொழில்நுட்ப பயன்பாட்டினைப் பற்றியும் இக்கட்டுரையின் வழி காணலாம்.

கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்ப பயன்பாடு

காலந்தோறும் வகுப்பறைச் செயல்கள் சிறப்பாக அமைய கரும்பலகை தொடங்கி கற்றல் துணைக்கருவிகள், வானொலி, தொலைக்காட்சி, ஒலி ஒளி நாடாப் பதிவான், செயற்கைக் கோள்வழி தொலைவரங்கம் வரை அறிவியல் தொழில்நுட்பம் கல்வி தொழில் நுட்பமாகத் திகழ்கிறது.

வகுப்பறைச்சூழல் வளர்ச்சி கணினி பயன்பாட்டை மட்டும் மையப்படுத்தாமல் பலவகை ஊடகங்களைக் (Multimedia) கொண்டு மாணவர்களின் கற்றல் அடையும் அளவிற்கு இன்றைய கல்வித் தரம் மேன்மை அடைந்துள்ளது. இவற்றுள் தகவல் தொழில்நுட்பக் கருவிகளின் செயல் மிகவும் அளப்பரியதாக உள்ளது. இன்றைய வகுப்பறை கற்றல் சூழலில் கல்வித் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி மாணவர்கள் கற்றல் சூழலை இலகுவாக, இனிமையாக, உறுதியான கற்றல் விளைவுகளை, அடைவுகளை ஏற்படுத்துவது ஆசிரியரின் கையில்தான் உள்ளது. வகுப்பறை கடந்த நிலையில்தான் அறிவியல் வளர்ச்சியினால் தோன்றிய சாதனங்கள் கற்றல் கற்பித்தலுக்குத் துணைக்கருவிகளாக விளங்குகின்றன. மாணவர்களை கற்றலில் ஊக்குவிக்க துணைக்கருவிகள் பெரிதும் துணைபுரிகின்றது. காட்சி, கேள்வி, காட்சி - கேள்வித் துணைக் கருவிகள் பெருகிவரும் மாற்றங்களுக்கு ஏற்றாற்போன்று பெருகி வருகின்றது.

கற்றல் சூழலில் தகவல் தொழில்நுட்பம்

இன்றைய வளர்ந்துவரும் இளைய தலைமுறையினருக்குக் கல்வியைக் கற்கவைக்கும் சூழல் ஒரு சவாலாகவே உள்ளது. கணினியும், வலைப்பின்னலும், (Website) இணையதளமும் கிராமப்புற மாணவனுக்குக்கூட எளிதாகக் கிடைக்கின்ற சூழலில் உலகமயமாதல், தாராளமயமாதல் கொள்கைகள் வழிவகுத்துள்ளன.

கணினி, வலைப்பின்னல், இணையதளம், செயற்கைக்கோள், வன்பொருள், மென்பொருள், ஊடகம் ஆகிய பல தொழில்நுட்பங்களின் கலவையாக விளங்குகின்றது. இத்தகவல் கருத்துப்பரிமாற்றத்

தொழில்நுட்பம் (Information Communication Technology) பல பரிணாமங்களில் கற்பித்தல் கற்றல் சூழலை எளிதாக்கி வளப்படுத்துகின்றது.

கற்பித்தலில் ஆசிரியர்களின் பயில்முறை

கல்வி என்பது பல நூற்றாண்டுகட்கு முன்னரே வள்ளுவராலும் வலியுறுத்தப்பட்டமையை,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டு
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"[1] (குறள் எண் - 392)

எனும் குறள் உணர்த்துகிறது.

இக்கற்றல் சூழலில் ஆசிரியர் நெறியாளராகவும் வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் மாணவர்களின் கற்றல் விளைவுகளை மட்டுமே அவர்களுடைய நோக்கமாகக் கொண்டு வகுப்பறையில் பாடங்களை நடத்துகிறார்கள். இன்றைய நவீன தொழில்நுட்ப சூழலுக்கு ஏற்றார்போல கணினியை மையமாகக் கொண்டு தானே கற்றல் (Self Learning) கூடிக் கற்றல் (Collaboative), குழுவாகக் கற்றல் (Group Learning), செயல்வழிக் கற்றல் (Active based Learning) ஆகியவைகளோடு மாணவர்களுடைய ஆர்வம், எதிர்பார்ப்பு, உள்வாங்கும் மனப்பான்மை நாட்டம் ஆகியவற்றிற்கு இடம் அளித்து கற்றல் திறனை மேம்படுத்துகின்றது.

கற்பித்தலில் ஆசிரியர்,

'தன் உள் ஒளியை தான் கற்பிக்கும்
மாணவரின் உள்ள ஒளியாக மாற்றுவதாகும்'

என்றார் கவிஞர் தாகூரை. எனவே, ஓர் இருட்டுக்குகைக்குள் மாணவனை அனுப்பி, அங்குள்ளவற்றை அவனை அறியச் செய்தல் ஓர் ஆசிரியருடைய கடமையாகும். அவ்வாறு இருட்டுக் குகைக்குள் செல்லும் மாணவன் தன் கையில் கொண்டு செல்லும் ஒளிவிளக்கு ஆசிரியர் தரும் ஊக்குவிப்பு (Motivation) ஆகும்.

கல்வியின் அவசியத்தினைப் பற்றி நம் முன்னோர்கள் பல்வகையான கருத்துகளை தெரிவிக்கின்றனர். அவை,

'நூல் பல கல்' என்றும்
'இளமையில் கல்'

என்றும் கூறுகிறது ஆத்திசூடி

'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்'

என்கிறது உலகநீதி.

'கற்கை நன்றே; கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'

என்கிறது வெற்றி வேற்கை.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக"[2] (குறள் எண் - 391)

என்கிறது திருக்குறள். இவ்வாறு கல்வியை கற்கும் காலத்தினையும் கற்க வேண்டிய முறையினையும் அதன் அவசியத்தையும் பற்றிப் பல நூல்கள் பேசுகின்றன.

மாணவர்களின் கற்றலில் ஏற்படும் மாற்றங்கள்

மாணவர்களுக்கு இன்றைய தொழில்நுட்ப கல்வியில் கற்றலின் வளங்களை ஊடகமாகவும் கற்பித்தல் முறையில் பயிற்சி அளிக்கும் கருவியாகவும் மாணவர்களுடைய கற்றல் அடைவிற்கு மதிப்பிடவும் மற்றும் பிரதிபலிக்கவும் செயலாற்றுகின்றது.

1. கற்பித்தல் அணுகுமுறையாகச் செயல்படுகிறது.
2. மாணவர்களுக்கு கற்றலில் தகவல் பரிமாற்றத்தை நிகழ்த்துகிறது.
3. மாணவர்களின் திறமையினை குறிப்பதாக தனித்திறன்களை வளர்க்கிறது.
4. ஆசிரியர் கற்பித்ததை, மாணவர் கற்றதை மேலாய்வு செய்கிறது.
5. தரமாகக் கற்கவும், சுதந்திரமாகக் கற்பதற்கு ஆசிரியருக்கும் மாணவருக்கும் முறையான வாய்ப்புகளை வழங்குகிறது.
6. கற்பித்தலிலும் கற்றலிலும் ஈடுபாட்டோடு மகிழ்ச்சியினையும் அளிக்கின்றது.

மாணவர்களுடைய கற்றலுக்கு செயற்கைகோள் வழி துணைபுரியும் தொலைவரங்கம் (Tele Conference) தொழில்நுட்பம், மின்னோட்டப் பலகை (Electric Board) ஆகியவை கற்றல் கற்பித்தலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இவற்றின் கல்வித் தரத்தை உயர்த்துகின்ற காரணிகளாகத் திகழ்கின்றது.

முடிவுரை

இன்றைய வகுப்பறைச் சூழலில் ஆசிரியர் கற்பித்தல் செயல்களில் பாடப்பொருளை மாணவர்கள் மனதில் உட்செலுத்தி அறிவுசார்ந்த சிந்தனையை வளர்த்தெடுத்து கற்றலை நிலைத்ததாக்கத் தகவல் தொழில்நுட்ப அணுகுமுறைகள் உறுதுணை புரிகின்றன. இத்தகவல் தொழில்நுட்பம் கல்வியில் நுட்பமாகிக் கற்றலுக்கான வளங்களை ஊடகமாகவும், கற்பித்தல் முறையாகவும் பயிற்சி அளிக்கும் கருவியாகவும் மாணவர்களின் கற்றல் அடைவிற்கான மதிப்பீடாகவும் பிரதிபலிக்கின்றது. கற்றல் என்பது ஒரு மனிதனுடைய அனுபவத்தால் நிலையாக ஏற்படுகின்ற நடத்தை மாற்றங்களைக் குறிப்பதாகும். கல்வியே மனிதனுடைய அறிவுக்கண்ணை, அகக்கண்ணைத் திறப்பதாகும். இதனை,

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லா தவர்"[3] (குறள் எண் - 393)

என்ற குறளின் மூலம் அறியலாம். மாணவர்களுக்குப் பண்பாட்டு நிலைகளைப் பற்றிக் கற்பிக்கும்போது சமுதாயத்தில் காணப்படும் விருப்பு வெறுப்புகளை உணர்ந்து சமுதாயத்திற்கு ஒத்து நடப்பர். சமுதாய நலனுக்காக நாமும் பாடுபட வேண்டும் என்று முன்வருவர். வருங்காலத்திலும் எதிர்காலத்திலும் மேற்கொண்டு புதியவற்றைச் சாதிக்கலாம் என்ற நம்பிக்கையும் பிறக்கும்.

மாணவர்களுக்கு நல்ல கருத்துகளைக் கற்பிப்பதன் மூலம் சமுதாய நலன்களுக்கு சமுதாய முன்னேற்றத்திற்கும் தம்மால் முடிந்தவற்றைச் செய்ய ஆர்வம் உடையவர்களாகவும் அவற்றைச் செய்யவும் முன் வருவார்கள். பல்வகையான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கற்றல் கற்பித்தலில் ஆசிரியர்களும் மாணவர்களும் மாபெரும் முன்னேற்றத்தை அடைவதினை இக்கட்டுரையின் மூலம் கண்டறியமுடிகிறது.

அடிக்குறிப்பு

1. பரிமேலழகர் (உ.ஆ), 2018, திருக்குறள் - பரிமேலழகர் உரை, **ப. 172.**
2. மேலது., **ப. 171.**
3. மேலது., **ப. 173.**

துணைநூற்பட்டியல்

1. கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகள் (பாகம் - 2), மலாயப் பல்கலைக்கழகம்.
2. கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகள் (பாகம் - 3), மலாயப் பல்கலைக்கழகம்.
3. கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகள் (பாகம் - 6), மலாயப் பல்கலைக்கழகம்.
4. பரிமேலழகர் (உ.ஆ), 2018, திருக்குறள் பரிமேலழகர் உரை, ராம் பிரசுரம், 18/171, பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

Reference

1. Parimelazagar (Text Editior), 2018, Thirukkural - Parimelazagar text, **p. 172.**

2. Ibid., **p. 171.**

3. Ibid., **p. 173.**

Book Reference

1. New Thoughts in Learning Teaching (Part – 2), University of Malaya.

2. New Thoughts in Learning Teaching (Part – 3), University of Malaya.

3. New Thoughts in Learning Teaching (Part - 6), University of Malaya.

4. Parimelazakar (U.A.), 2018, Thirukkural Parimelazakar Text, Ram Publications, 18/171, Pavalakkara Street, Manadi, Chennai - 600 001.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

tamilmanam

புறநானூற்றில் சமுதாயம்

Purananuru and Society

திருமதி ம. புவனேஸ்வரி[1], முனைவர்.இ. ஆர். இரவிச்சந்திரன்[2],

[1]ஆய்வாளர், பதிவெண்: 12089/Ph.D/K8/ Tamil/ Part time/ July 2015, உருமுதனலெட்சுமி கல்லூரி, காட்டூர், திருச்சி-620019

[2]ஆய்வு நெறியாளர், முதல்வர், உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620019.

[1]**Mrs. M. Bhuvaneswari**, B.Lit., M.A., PGDCA Research Scholar,
Register No: 12089/Ph.D/K8/Tamil/Part-time/July 2015, Urumu Dhanalakshmi College, Kattur, Trichy - 620019. E-mail: mbuvana.ramesh@gmail.com

[2]**Dr. E.R. Ravichandran**, M.A., M.Phil., Ph.D. Research Supervisor, Principal, Urumu Dhanalakshmi College, Tiruchirappalli - 620019.

Abstract:

At the mere mention of Purananuru, our minds invariably conjure images of war. Yet, the glory attained through battle was considered a distinct code of conduct or virtue in itself. Padan Thinai, a specific poetic genre, was dedicated to extolling the ethical sensibilities and heroic virtues of the sung hero. Only those who demonstrated exceptional prowess in valor, warfare, and generosity were deemed worthy of such poetic praise. This research paper elucidates how the Sangam poets, while primarily focusing on kings and warriors, bequeathed a rich cultural heritage to human society through their literature. Beyond merely documenting the path for cultivating human virtues, they also embedded broader societal messages within this cultural tapestry.

Keywords: Purananuru, Society, Tamil Lierature

ஆய்வுச் சுருக்கம்:

புறநானூறு என்றவுடன் நமக்கு போர் நிகழ்வுகள் மட்டுமே காட்சியாக நினைவுக்கு வருகின்றது. போர் செய்ததன் வழியாகக் கிடைக்கப்பெறும் புகழ் என்பது மற்றுமொரு ஒழுக்கமாகும். பாடப்படும் ஆண்மகனின் ஒழுக்க உணர்வுகளை வெளிப்படுத்துவது பாடாண் திணையாகும். வீரத்திலும், போரிலும், ஈகையிலும் வல்லமை படைத்தவனாக இருப்பவனே பாடப்படும் தகுதியை உடையவனாக இருந்திருக்கின்றான். மன்னனையும்-வீரர்களையும் மையமாகக் கொண்டு பெரும் பண்பாட்டை இலக்கியமாக மனிதச் சமூகத்திற்குக் கொடையாக அளித்த சங்கப்புலவர்கள், மனிதப்பண்பை வளர்ப்பதற்கான பாதையைப் பதிவு செய்ததுடன் பண்பாட்டோடு சில பொதுவான செய்திகளையும் பதிவு செய்துள்ளனர் என்பதை இவ்வியல் விளக்கி நிற்கின்றது.

சங்ககால சமுதாயம்:

“சங்ககாலத்திற்கு முன் தமிழகத்தில் நிலை கொண்டிருந்த சமுதாயம் இன வேறுபாடற்ற சமுதாயம் ஆகும். அச்சமுதாயம் இனக்குழுச் சமத்துவ வாழ்க்கையின் அடிப்படையில் உலகெங்கும் நிலவின. தமிழகத்தில் இனக்குழுக்கள் திணைகளின் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்டிருந்தன. இப்பாகுபாடு மானிடவியல் விளக்கத்திற்கும் பொருந்தி வருவதைப் பி.டி.சீனிவாச அய்யங்கார் போன்ற அறிஞர்கள்

Tamilmanam

எடுத்துக்காட்டியுள்ளனர்" இனக்குழுக்களாக வாழ்ந்த மக்கள் வேட்டையாடியும், உணவு சேகரித்தும் வாழ்க்கை நடத்தி வந்தனர். பகுத்துண்டு வாழ்ந்த இவ்வேட்டைச் சமுதாயத்தில் தாய்வழிச்; சமுதாயமே தோன்றியது. பெண்உறவும் தாயன்பும் பெண்ணிற்கு முதலிடம் தந்தன. காடுகிழாள், கொற்றவை போன்றவை சமுதாயத் தெய்வங்களாக விளங்கிவந்தன. வேலைப்பிரிவினைக்கு அச்சமுதாயத்தில் இடம் இருந்ததில்லை. கால்நடை வளர்க்கும் குலங்கள் பிரிந்துபோன நிலைதான் சமுதாய வழியில் ஏற்பட்ட முதல் மாபெரும் வேலைப்பிரிவினை என்பர் ஏங்கல்சு" வேளாண் தொழிலில் மாடுகள் இழுக்கும் கலப்பை பயன்படுத்தப்பட்ட பிறகு தாய்வழிச் சமுதாயம் நீக்கப்பட்டது. இனக்குழுவின் சமூகச் சிக்கல்களை முடிவு செய்ய மன்றம், நாளிருக்கை, நாளவை ஆகிய இனக்குழப் பொதுக்கூட்டங்கள் இருந்தன. உணவு சேகரிப்போர், வேட்டையாடுவோர், பண்டைய வேளாண்குழுவினர் (புராதன விவசாயம் செய்வோர்), கால்நடை வளர்ப்போர் ஆகியோர் வாழ்ந்த இனக்குழுச் சமுதாயத்தில் குழு ஒற்றுமையும், குலச்சமத்துவமும் அவர்களுடைய வளமையாக இருந்தன

"இயற்கையோடு போராடுவதற்குத் தேவையான கருவித்தொகுதிகள் இவர்களிடம் இல்லை. இயற்கையை எதிர்த்துப் போராடி அவர்கள் தங்கள் உணவைப் பெற்றனர். இனக்குழுச் சமுதாயத்தல் 'கள்' முக்கிய இடம் பெற்றிருந்தது. பிறப்பு, இறப்பு, விழாக்கள் போன்ற பல நிகழ்ச்சிகளின் போது ஆடவரும் மகளிரும் கள்ளருந்தி ஆடிப்பாடினர். இனக்குழு மக்கள் எழுத்தறியாதவர்கள். ஆதலால் அவர்களுடைய மந்திரப்பாடல்கள் வாய்மொழியாகவே வழங்கிவந்தன. அவர்களுடைய பாடல்கள் உடலசைவுகளுடன் இசைச்சந்தத்துடன் (சுhலவாஅ) வெளிப்பட்டன" சங்க காலம் சமூக மாறுதல் நடைபெறும் ஒரு காலக்கட்டம். பழைய இனக்குழுச் சமூகம் பொருள் உற்பத்தி, வணிகம் முதலியவை பெருகும் நோக்கில் உடைமைக்கு ஆதிக்கம் ஏற்படும் காலம் என்பது கோவை ஞானியின் கருத்து ஆகும்.

சமுதாய அமைப்புகள்:

"சங்க இலக்கியக் காலச்சூழலில் இருவகை சமுதாய அமைப்புகள் இருந்தன.

1. இனக்குழு வாழ்க்கை.
2. நிலவுடைமை அமைப்பு"

என்று சங்கஇலக்கியக் காலத்தை மே.து. ராசுக்குமார் வரையறை செய்துள்ளார்.

"இனக்குழுச் சமுதாயம் அழிந்து, அரசு என்னும் நிறுவனம் கட்டமைத்த காலம் சங்ககாலம்" என்று நா. வானமாமலை குறிப்பிட்டுள்ளார். சங்கஇலக்கியக் காலத்தை வரையறுப்பதில் பல்வேறு அறிஞர்கள் கருத்துகள் கூறினும் அவை சற்றே ஏறக்குறைய ஒருமித்த கருத்தையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

"1. உணவுத் தேடி வாழும் இனக்குழு வாழ்க்கை.
2. கால்நடை வளர்ப்பினைக் கொண்ட மேய்ச்சல் நில வாழ்க்கை.
3. உணவு உற்பத்தி செய்யும் ஒரு விதமான நிலவுடைமைச் சமுதாய வாழ்க்கை

என்ற வரையறையும் கிடைத்துள்ளது. வேட்டைச் சமுதாயம், கால்நடைச் சமுதாயம் அடங்கிய இனக்குழுச் சமுதாயத்திலும், நிலத்தை மையமாகக் கொண்ட நிலவுடைமைச் சமுதாயத்திலும் வெளிவந்த இலக்கியங்கள் நிகழ்காலச் சமுதாயத்தை சித்தரிக்க முயற்சி செய்தன.

தமிழரின் ஆதிகால வரலாற்றை அடையாளப்படுத்த இலக்கியங்கள் துணை போகும்போது இலக்கியக் காலகட்டமே புலவனின் பண்பாட்டு வரலாற்றின் முதற் புள்ளியாக அமைந்து விடுகின்றது. தமிழரின் இலக்கிய காலத்திற்கு முன்பு மனித வாழ்வு, குறிப்பாகத் தமிழரின் வாழ்வு பண்பட்ட வாழ்வாகவே தென்படுகின்றது. இலக்கிய வளர்ச்சி, இலக்கியப்பதிவு என்பதும்கூட கடந்த மக்களின் வரலாற்றின் எச்சம் என்றே கருத முடியும். இக்கருத்து சங்க இலக்கியத்திற்கு சாலப் பொருத்தமாக அமையும்.

திணைப்பகுப்பு:

திணைப்பகுப்பையும், ஒழுக்கப்பண்பையும் ஏற்று வாழ்ந்த தமிழ்ச் சமுதாயத்தின் பிரதிபலிப்பே இலக்கியமாக வெளிப்பட்டிருக்கிறது. மனிதன் தான் பக்குவமடைய எடுத்துக்கொண்ட காலத்தைக்காட்டிலும், தமிழ் இலக்கியத் தொடர்ச்சியிலிருந்து இன்றுவரை உள்ள கால எல்லை மிகக்குறுகியதாகவே இருக்கும். மனிதன் பண்புடன் பக்குவமடைந்த பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரே தன்னுடைய பண்பாட்டையும், உயர்நெறிகளையும் பதிவுசெய்ய வேண்டுமென்ற எண்ணம் அவனுக்குத் தோன்றி இருக்க வேண்டும் அல்லது ஒழுக்கப் பண்பாட்டு நெறிகளைப் பதிவு செய்ய அவனை சமூகம் நிர்பந்தம் செய்திருக்க வேண்டும். இயற்கையான பதிவோ(அ) நிர்பந்தமோ, எதுவாயினும் வெளிப்படுத்தப் பட்டிருக்கும், (அ) பதிவு செய்யப்பட்டிருக்கும் மரபு நெறிகள் உயர்ந்ததாகவே தென்படுகின்றன என்பது தான் தமிழர் வாழ்ந்த வாழ்வின் உச்சமாகக் கருத முடிகின்றது.

சமுதாய மாற்றங்கள்:

“விலங்கு மனிதன் முழுமனிதனாக பண்பட்ட நிலையடைந்து வரலாற்றில் அடையாளப்படுத்தப்படும் சங்க இலக்கியக் காலத்தின் கடைசி வரை” என்ற பெரிய கால இடைவெளியில் உள்ளுக்குள் சமுதாய மாற்றங்கள் நடைபெற்று வந்தாலும் கால எல்லைக்குள் அவ்வப்போது வெளிவந்த இலக்கியத்தின் பாடுபொருளில் எவ்வித மாற்றமும் தென்படவில்லை என்பதனால், சங்க இலக்கியம் என்பது மாறாதிருந்த கால எல்லையை வரையறுத்துச் சிறு சமூகக்குறிப்பைத் தருவதன்று. மாறிக் கொண்டிருந்த ஒட்டுமொத்த சமுதாயத்தின் அகலமான பதிவுகளை வெளிப்படுத்தியிருக்கின்றது என்று தெளிவாகக் கூறமுடியும். இக்கூற்றை உறுதிபடுத்தப் பல பாடல்களை புறநானூற்றில் பார்க்க முடியும்.

சமுதாய மாற்றங்களோடு பின்னிப் பிணைந்த மக்கள் கூட்டம் நிகழ்காலத்தின் ஒழுங்கற்ற நிலையை மையமாகக் கொண்டு வரைமுறைகளையும், சமுதாய ஒழுகலாறுகளையும் nவிளப்படுத்த முற்பட்டிருக்கின்றது. உருவாக்கப்பட்ட பண்பு நெறிக்ளற இலக்கியமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதே தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியாகக் கருத முடிகின்றது.

“இலக்கியம் என்ற சொல்லை, இலக்கு ெ இயம் என்று பிரிப்பதாக இருந்தால் இங்கு-விளக்கம், நோக்கம், கொள்கை, குறிக்கோள் எனப்பொருள் கொண்டு இயம் - ஒலிப்பது கூறுவது, வெளிப்படுத்துவது எனப்பொருள் கொள்ளின், நம் குறிக்கோள்களையும், கொள்கைகளையும் இயம்புவசது விளக்குவது இலக்கியம் என்று கொள்ளலாம்”. (தமிழ் இலக்கியக் கொள்கை, உலகத்

தமிழாராய்ச்சி நிறுவனம், 1975 தொகுதி-ஐ ப.4) "இலக்கியம் என்பது மனிதனின் உயர் வாழ்க்கைக்கு மட்டுமல்லாமல் மனித சமுதாயவளர்ச்சிக்கும் ஏற்றதாக இருக்கவேண்டும், நாகரிகத்தைப் புகட்ட வேண்டும், ஒழுக்கம் அறிவு போன்ற உயரிய குணங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்"என்பது பெரியாரின் நிலைப்பாடு ஆகும்.

"சங்க இலக்கியங்களுக்குப் பின் வந்த இலக்கியங்களில் தமிழர் நாகரிகம், கலை, பண்பாடு போன்றவற்றைக் காண்பதே அரிதாயின. தமிழ்ப் பாடல்களால் உருவாக்கப்பட்டுள்ளன என்பதைத் தவிர தமிழர்க்குரியவை என்று சொல்வதற்கு ஏதுமில்லை" (பெரியார்-விடுதலை, 30ஃ12ஃ70 பக்-3-4) என்பதாக ப. கமலக்கண்ணன் தமது ஆய்வுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கியங்களின் விரிவாக்கம் மனிதனின் வாழ்வில் இரண்டறக் கலக்க வேண்டுமென்பதே இலக்கியத்தின் நோக்கமாக அமைய முடியும் "இலக்கியங்கள் சிறந்த அறிவுரைகளைக் கொண்டனவாக மட்டும் இருந்தால் போதாது. வாழ்க்கையில் பின்பற்றி நடக்கக் கூடியனவாகவும் இருக்கவேண்டும். இல்லாவிடில் அந்தக் கொள்கைகளால் ஏதும் பயன் விளையாது. கொள்கை என்பது அதனை விரும்புகிறவர்கள், பின்பற்றுபவர்கள் கடைப்பிடிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்"12 என்ற இலக்கியத்தின் நோக்கம் சங்க இலக்கியத்தில் - புறநானூற்றில் நிறைவேறியுள்ளது. "பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த பாணர்களால் இவர்கள் இயற்றிய பாடல்கள் பாடப்பட்டன. இப்பாடல்கள் தொல்லாட்சியாலும், கவிதை உத்திகளாலும் செப்பம் செய்யப்பட்ட செந்நெறி இலக்கியங்களாகத் திகழ்ந்தன" என்பது ஜான் சாமுவேலின் இலக்கிய வரையறையாகும்.

"சங்கப்பாடல்கள் ஒரு குழுவினரின் பாடல்கள் என்பதற்குரிய சிறந்த உயர்தனிச் சான்றுகளாகக் காட்சி தருகின்றன. இப்பாடல்கள் சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு கூட்டத்தினரின் உள்ளத்தினையும் ஆளுமையினையும் வெளிப்படுத்தி நிற்கின்றன".

"அவர்கள் வாழ்ந்த சமுதாயம் செயல்திறம் மிக்க சமுதாயமாக இருந்ததால் அவர்கள் படைத்த இலக்கியங்களும் ஆற்றல் இலக்கியங்களாகத் திகழ்ந்தன" என்பதினால் சங்க இலக்கியத்தின் செவ்வியல் தன்மையினால் அச்சமுதாயம் சமுதாய, பண்பாட்டு மரபு நெறிகளால் செயல்திறம் மிக்க சமுதாயமாக விளங்கியிருக்கின்றது என்பது உறுதிப்படுத்திய ஒன்றாகும். "உயர்குடி மக்களின் இணைந்த வாழ்வியல் அனுபவங்கள் (ஊழடடநஉவிஎந நுஒpநசநைnஉந) தனிப்பட்ட கவிஞர்களின் மூலம் நேரடியாகவோ கற்பனைப் பாத்திரங்கள் வாயிலாகவோ புறநானூற்றில் வெளிப்படுவதைக் காணலாம்"

"இலக்கியங்களைப பாடிய கவிஞர்கள் உயர்குடி வர்க்கத்தினரோடு நெருங்கிய உறவுகொள்வதோடு அவ்வர்க்கத்தின் அனுபவங்களையும் இலட்சிய வேட்கைகளையும் கலைப் பொருளாக மாற்றுபவர்களாகக் காணப்படுகின்றனர்.இத்தகைய கட்டாய நிலை உயர்குடி வர்க்கத்தினரின் அனுபவங்களை அவர்களின் மொழியல் இக்கவிஞர்களைப் பேச வைக்கின்றது".

சங்ககாலமும் போர்களும்:

காதலைச் சிறப்பிக்கும் சங்க அகப்பாடல்களும் வீரத்தைப் புகழும் புறப் பாடல்களும் போர் வீரர்கள் நிறைந்த உயர்குடி மக்களின் வாழ்க்கையைப் பெரும்பாலும் மையமாகக் கொண்டன. புறப்பாடல்கள் உயர்குடி மக்களின் ஆற்றல் மிகுந் வீரவாழ்வினைச் சித்திர்க்க, அகப்பாடல்கள் இதே வர்க்கத்தினைச் சார்ந்தவர்களின் காதல் நிகழ்ச்சிகளை இலட்சியப்படுத்திக் காட்டின". இனக்குழு வாழக்கை சிதைந்த நிலமானிய சமுதாயமும் அரசும் வளர்ச்சி பெறுவதை அவ்விலக்கியங்கள் காட்டுகின்றன"

"ஒவ்வொருமொழிக்கும் ஒரு வீரநிலைக் காலம் இருந்திருக்கின்றது. இவ்வகையில் தமிழர்களின் வீரநிலைக் காலம் சங்ககாலத்திற்கு முன்பே முடிந்து விட்டது" என்ற கருத்தின் வழியாகச் சங்க இலக்கியத்தில் இடம் பெறுகின்ற பாடல்களின் பொருண்மைகள் கிரேக்க. எபிரேய வீரயுகப் பாடல்களுடன் ஒப்பிட்டு அவற்றின் தன்மையை இவ்விலக்கியங்களும் பெற்றிருக்கின்றன.

இலக்கியம் படைக்க தேவைப்பட்ட சூழல்:

பண்டைய வாழ்நிலையில் உழைக்கும் தரப்பினர் தொழில் முறைகளை உருவாக்கி தங்களின் வாழ்க்கயைசை; செவ்வனே நடத்திச் சென்றுள்ளனர். உடல் உழைப்பு. மூளை உழைப்பு என்ற இரண்டு வித உழைப்பினால் மக்;கள் சமுதாயம் வாழ்ந்து வந்தது. உடல் உழைப்பு கொண்டு பல்வேறு தொழில்களை அடையாளப் படுத்தி வாழ்வதற்கு மாறாக தங்களது புலமைத்தத்துவத்தால், அறிவையே மூலதனமாகக் கொண்டு கவிதையையே தொழிலாகக் கொண்ட மக்கள் பண்டைக் காலத்தில் வாழத்தான் செய்தனர். ஒருபுறம் புலமையினால் கவிதைபாடுவது, மறுபுறம் வறுமையினால் வேறு தொழில் செய்ய முடியாமல் கலையைப் படைத்து வாழும் மக்கள் கூட்டம் என்ற நிலையில் இலக்கியம் படைக்கத் தமிழ்ச்சமுதாயம் முற்பட்டது. இவ்விலக்கியங்களின் வாயிலா மக்களின் பண்பாட்டு வாழ்நெறிகளை வெளிப்படுத்திக் காட்டியுள்ளனர்.

"சங்கச்சமுதாயம் போர் வீரத்ததுக்கு மட்டுமே முதன்மை கொடுப்பதாய், அதனை மட்டுமே போற்றுவதாக இருந்திருந்தால் அது ஓர் போர் வெறிச் சமுதாயமாகக் காட்சியளித்திருக்கும். ஆனால் பண்டைய தமிழ்ச்சமுதாயம் அவ்வாறு திகழவில்லை மனித சமுதாயம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பல நல்லறங்களை அது வலியுறுத்தியதுடன் மறம் இழுக்கா மான வீரத்திற்கும் முக்கிய இடத்தைக் கொடுத்துள்ளது. அதனால் தான், அச்சமுதாயம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் பலராலும் போற்றப்படுகின்ற ஒரு நல்ல சமுதாயமாக விளங்குகிறது"

"மனித இனத்தைப் பொறுத்த வரை, சிறு சிறு குழுக்களாக வாழத் தொடங்கிய இனக்குழு வாழ்க்கை நிலையிலேயே, அவர்களுக்குள் போர் என்பது தவிர்க்கவியலாத ஒன்றாக அமைந்துவிட்டது. வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் போன்ற அன்றாட வாழ்கைத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதில் கூட ஒரு குழு மற்றொரு குழுவுடன் மோதிக் கொண்டது. இனக்குழு சமூகமாக பரிணமித்த பொழுது அதன் தேவைகள் மிகதிக் கேற்ப போர்ச் செயல்களும் மிகுந்தன:

"சங்ககாலத் தமிழ்மக்கள் வீரத்துக்கு முக்கிய இடம் கொடுத்த செய்திகளைச் சங்கப் பாடல்களில் காணலாம். அதைப்போலவே உலகெங்கிலும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் வீரத்துக்குள மட்டுமே

முக்கியத்துவம் கொடுத்த மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். அக்கால கட்டங்களில் தோன்றிய இலக்கியம், சிற்பம், ஓவியம் இசை, நடனம், போன்ற நுண்கலைப் படைப்புகளிலும் நாகரிகம், சமயம், பண்பாடு, போன்ற சமூகம் சார்ந்த நடைமுறைகளிலும் இவ்வீரப்பண்பும் முக்கிய இடத்தைப் பெற்று இருந்தன. ஒருசமூகத்தில் வீரப்பண்புகள் மேலோங்கி இருந்த காலத்தை அச்சமூகத்தின் வீரநிலைக்காலம் என்றும், அக்கால கட்டத்தில் அச்சமூகத்தின் எண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் தோன்றிய இலக்கியங்களை வீரநிலைப் பாடல்கள் (ர்ழசழi உ Pழநவசல)” என்றும் பவுரா கருதுகின்றார்.

போரும் காதலும்:

போரையும் - காதலையும் இரண்டு கண்களாகக் கொண்டு வாழ்ந்த தமிழ் மக்கள் பெரும பண்பாட்டு மதிப்புகளை உள்ளடக்கமாகக் கொண்டு வாழ்ந்திருக்கின்றனர். “நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை. அஃது எல்லாப் பொருட்களையும் தமக்கே பயன்படுத்துவது. பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம். அஃது எல்லா பொருள்களையும் தமக்குமட் பிறருக்கும் பயன்படுத்துவது. உள்ளத்தின் செம்மைப் பண்பாகும். உள்ளத்துக்கு புறம்பான உணவு, உடை, உறையுள், ஆகியவற்றின் செம்மை நாகரிகம் ஆகும். ஆகவே இவற்றை அகநாகரிகம் புறநாகரிகம் எனக் கொள்ளின் பொருந்தும்” என்பது பாவாணரின் பண்பாட்டு நாகரிக விளக்கமாகும்.

“பண்பாடு என்பது வாய்மொழி மரபாய்ப் பரப்பப்படும். அன்றி எழுத்து மூலமாகவும் பிறபாவங்களாலும உணர்த்தப்படும். இதனால் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும், வாழ்வு பொருளுடையதாகவும், பயனுடையதாகவும் மாறுதற்கு வழி ஏற்படும்”

“பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப் பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கின்றோம். அந்த வெளிப்பாடு சுவையுணர்வாகவும், நடையுடைடபாவனைகளாகவும் தோன்றும். அப்பண்பாடு இல்லாதவனைக் காட்டுமிராண்டி என்கிறோம். வாழ்வின் பற்பல போக்குகள் அமைந்த பல்வேறு நிலைகளையும் இந்தப்பண்பாடு குறிக்கும்”. “பண்பாடு என்பது காலத்திற்கேற்ப மாறுதலைக் கொண்டது தான் எனினும் சில பண்பாட்டுக் கூறுகள் எவல்லாக் கட்டத்திலும் மாறாது நிலைபேறு கொண்டவையாக அமையும். அதுபோல சில பண்புகள் ஒருநாட்டிற்கு மட்டுமல்லாமல் உலகளாவிய நிலையில் எல்லாக் காலத்திற்கும் ஏற்புடையனவாக அமையும்” தன்மையை புறநானூற்று பண்பாட்டு மரபுகள் பெற்றிருக்கின்றன.

‘700 ஆண்டு கால இடைவெளியில் சங்க இலக்கியங்கள் எழுதப்பட்டமையால் அவை காட்டுகின்ற குடும்பம், அரசு, முதலான நிறுவனங்களை ஒரு காலத்தன என்று கொள்ளுதல் வரலாற்று வழுவை விளைவிக்கும். அன்றியும் ஒரு காலத்திற்குள்ளேயே வெவ்வேறு போக்குகள் அமைந்த முரண்பாடுடைய சமுதாயம் என்ற தவறான முடிவையும், அந்தப்போக்கு தரக்கூடும். எனவே, சங்க இலக்கியங்கள் திராவிட மானுடவியலின் பல்வேறு கால கட்டங்களைக் காட்டுவதாகக் கொள்ளுதலே சரியாகும் என்று க.ப.அறவாணன் (தமிழ் இலக்கியச் சமூகவியல் ப.63) குறிப்பிடுகின்றார். இக்கருத்து புறநானூற்றை சமுதாய நோக்கில் ஆராய்வதற்கு பெரும் துணையாக அமைகின்றது.

மிகுதியான பண்பாடு நெறிகள் பொதித்துள்ள புறநானூறு உள்ளடங்கிய “சங்க இலக்கியம் என்பது கி.மு.ஐந்தாம் நூற்றாண்டுக்கும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடையில் தமிழகத்தில் தோன்றிய பாடல்கள் ஆகும்”. “தமிழ் பேசும் உலகின் பல்வேறு பகுதிகளையும், ஏறக்குறைய பத்துத் தலைமுறைகளையும் சேர்ந்த சுமார் ஐந்நூறு புலவர்களின் செய்யுள்கள் சங்க இலக்கியம் எனக் கொள்ளப்படுகின்றன”. சங்கப்பாடல்களின் தேவை, 1) சங்ககாலத்துச் சமுதாய வாழ்வினை பிற்காலத்தவர்க்கு உணர்த்துதல், 2) பாடல்கள் வழிப் பிற்கால மக்களும் தெரிந்து நடத்துதல், 3) புலவர்கள் தமிழின் மீது உள்ள ஆர்வத்தின் பொருட்டு, 4) முன்னோர்களின் சங்கப் பாடல்களின் தொகுப்பு நிகழ்ந்தது என்பர்”. இத்தொகுப்பில் தொடுக்கப்பட்ட பாடலவ்களின் வழியாக மக்கள் பண்பாட்டைப் பார்க்கும் பொழுது பெரும் பரப்பை வெளிப்படுத்தி நிற்கின்றது.

சங்க இலக்கியப்பாடல்களைப் பொறுத்த வரையில் “தம்மைச் சுற்றி நிகழ்கின்ற வரலாற்று நிகழ்ச்சிகளைப் புகைப்படம் எடுத்தாற் போன்ற அப்படியே தருவதில் இக்கவிஞர்கள் அதிக ஆர்வம் காட்டவில்லை என்றும் தாங்கள் உணர்ந்ததை, எண்ணியதை, கற்பனை செய்து கொண்டதை இலக்கிய நயத்தோடு மரபுகட்கு உட்பட்டு சொல்லோவியமாகத் தருவதில் ஆர்வம் காட்டினர் என்று கருதலாம்” “புறநாநூற்றுப் பாடல்கள் நடனம் ஆகியவற்றோடு பாணர்களையும், விறலியரையும், இணைத்துப் பேசுகின்றனவே தவிர புலவர்களை அவற்றேநாடு அதிகமாக இணைத்துப் பேசவில்லை” என்ற கருத்து நிலவுவதற்குச் சற்று மாற்றாக புலவர்களின் வறுமையினையும், பரிசில் கடாநிலை என்ற துறையின் வழியாகப் புலவர்களைப் பற்றிப் பேசப்படுவதையும் காண முடிகின்றது. மன்னர்களைப் புகழ்ந்து பாடுவதற்குப் புலவர்கள் தேவைப்பட்டனர். அதேசமயம் மன்னர்களின் ஈகைத்திறனை வெளிப்படுத்தக் கலைஞர், பாணர், விறலியர் போன்றவர்களின் மீது குறிப்பேற்றிப் புலவர்களே பாடல்கள் பாடியுள்ளனர்.

கலைப்படைப்புகள்:

சமுதாயத்தின் உந்துதலினால் தனிமனிதனின் வெளிப்பாடாகவே கலைப் படைப்புகள் வெளிவருகின்றன. இதன் வழியாக கலையும், கவிஞனும் சமுதாயக் சொத்தாக கொள்ளமுடியும் எனவே சமுதாயத்தைப் பிரதிபலித்துக் காட்டுவதில் கலைப்படைப்பை விடச் சிறந்த உதாரணம் இருக்கமுடியாது. சங்க இலக்கியத்தின் வழியாகப் புலவர்கள், சான்றோர்கள் சங்கப் பண்பாட்டை விளக்கி நிற்பதினால் மனித வாழ்விற்கு நட்பாய் சங்கஇலக்கியம் இருந்து வருகின்றது என்பது உறுதிபடுத்தப்படுகின்றது. வாழும் சமூகத்திற்கும் - இலக்கியத்திற்கும் நெருங்கிய தொடர்வு உண்டென்பதை இலக்கியங்கள் வெளிப்படுத்தும் சமூகத்தையும், சமூகத்திலிருந்து உருவாக்கப்படுகின்ற இலக்கியமும் உறுதிப்படுத்துகின்றன. “பொதுவாகவே இலக்கிய ஆய்வில் சமூகவியல் அணுகுமுறை தழைக்க நான்கு வழி முறைகளைக் குறிப்பிடுவர். 1) சமுதாயத்தில் இலக்கியத்தின் பங்களிப்பை ஆய்வது. 2) சமுதாயத்தில் இலக்கியம் ஏற்படுத்தியுள்ள விளைபயனை (அ) தாக்கத்தை ஆய்வது. 3) இலக்கியத்தில் சமுதாயத்தின் பங்கினை ஆய்வது. 4) இலக்கியத்தில் சமுதாயம் உண்டாக்கிய வினைபயனை அல்லது தாக்கத்தை ஆய்வது” என்ற நான்கு வழிமுறைகளின் அடிப்படையில் இலக்கியத்திலிருந்து சமூகம் சமூகத்திலிருந்து இலக்கியம் என்ற தொடர்நிலையைச் சரியாக உள்வாங்கிக் கொள்ளமுடியும்.

"மனிதன் அறிவால் அறிந்து வாழும் பகுதியைவிட விரும்பியும் வெறுத்தும், நம்பியும், சோர்ந்தும், போற்றியும், தூற்றியும் வாழும் பகுதியே மிகுதியாகும். ஒரு சமுதாயத்தின் விறுப்பு வெறுப்பு, நம்பிக்கை முதலியவற்றை வளர்த்துப் பயன்படுத்துவது அந்தச் சமுதாயத்தின் இலக்கியமே" என்பது வெளிப்படையானதாகும். சமுதாயத்தின் பிரதிபலிப்பே இலக்கியமாகத் திகழ்வதால் நிகழ்காலத்தின் வாழ் நிலைகள் இலக்கியமாகப் பதிவு செய்யப்பட்டு வெற்றியும் பெறுகின்றன. "வர்க்க வேறுபாடுகள் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்து ஒரு சமுதாயத்தின் படைப்புகளாகச் சங்க இலக்கியங்கள் காட்சி தருகின்றன. தனி உடைமைகளின் தோற்றத்தால் தொழில்பாகுபாடுகளும், தொழில் பாகுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகுப்புகளும் இக்காலத்தில் தோன்றத் தொடங்கின. இத்தகைய தொழில் பாகுபாடு, பாணர்கள், கூத்தர்கள், புலவர்கள் போன்ற பல்வேறு வகுப்பினர்கள் தோன்றக் காரணமாக அமைந்தது. "கலைகளைத் தொழிலாகக் கொண்ட இப்பிரிவினர் ஏனைய உழைக்கும் வர்க்கத்தினரிடமிருந்து வேறுபட்டுக் காட்சி தந்தனர். மேற்கூறிய கலைஞர்களின் பொருளாதார நிலைகளும் தொழில்கின் இயல்பும் அவர்களை ஆளும் வர்க்கத்தினரைச் சார்ந்திருக்குமாறு கட்டாயப்படுத்தின". "ஆளும் வர்க்கத்தினரின் புகழ்பாடி அவர்களின் ரசனை உணர்வுகளுக்கு விருந்தளித்து அவர்கள மனமகிழச் செய்து அவர்கள் தரும் பரிசுப் பொருட்களைப் பெற்று வாழ்க்கைப் பயணத்தைத் தொடரவேண்டி கட்டாயச்சூழலில் என்;ற பாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றன. இது போன்ற ஆழமான புரிதலே குடும்ப விழுமியாகக் கருதப்படுகின்றது. இப்பாடலில் இடம் பெறும் தலைவியின் மனநிலை இரண்டு தன்மைகளாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தன்னுடைய தலைவன் வேட்டையாடிய அசதியில் மெய்மறந்து தூங்குகின்றான் இந்நேரத்தில் வேறு வேலையையே கொள்ளாது ஆண்மான தன் பிணையுடன் கூடி விளையாடி இன்பம் திளைக்கின்றது. இந்நிகழ்வால் துயில் கொண்டிருக்கும் தலைவனின் உறக்கம் களைந்து விடுமோ என்று அச்சப்படுகின்றாள். மான்களைத் தொந்தரவு செய்வதால் அதன் இன்பம் கெட்டு போகக்கூடாது என்று தம்வீட்டில் நடமாடாமல் தனித்து நிற்கின்றாள் என்பதுதான் தலைவியின் இருவேறு மனநிலைகளாக 'வீரை வெளியனார்' குறிப்பட்டு உள்ளார். இதன்வழியாகத் தலைவன் மீது தான் வைத்திருக்கும் அன்பும் இன்பத்தின் நுகர்நிலையில் அவன் மற்ற உயிரினங்கள் மீது கொண்டிருக்கும் அன்பும் வெளிக்காட்டப்பட்டுள்ளன. மற்ற உயிரினங்கள் அன்போடு உலாவி இருத்தலைத் துன்பம் செய்யாத தலைவி தன் தலைவனுடன் சிறு பிணக்கும் கொள்ளாமல் சரியான புரிதலோடு அன்பு பகிரக்கூடியவளாகத் திகழ்பவளாவாள். இந்தப்புரிதல் குடும்பக் கட்டுமானத்தை இன்னும் ஆழமாக வேரூன்றச் செய்கின்றது. அகக் காட்சிகளை இயற்சைக் சூழலுடன் பொருத்திக் காட்டிக் குடும்ப விழுமியத்திற்குத் தலைவன் -தலைவியின் அன்பை 'வீலை வெளியனார்' புறநானூற்றில் இடம் பெறு; பாடலின் கருத்தை குடும்ப விழுமியத்தின் சிறந்தச் சன்றாகக் கருதமுடியும்.

மனையில் வீரம்:

விருந்தோம்பல், ஈகை, கொடை என்று பொறுப்புகளை இல்லறக் கடமையாகக் கொண்டிருநந்த பெண் போருக்காகச் சென்றிருந்த வீரனை எதிர்பார்த்து, அவனுக்குரிய கடமைகளையும் செய்தது குடும்ப

விழுமியத்தின் அடிப்படையாகக் கருத முடிகின்றது. புறநானூற்றுச் சமூகத்தில் வாழ்ந்த பெண்கள் தலைவனின் வாழ்க்கையை ஒட்டியே வாழ்ந்து வந்தனர். போர்புரியச்சென்றிருக்கும் தலைவன் திரும்பி வருவானா? என்ற நிச்சயம் இல்லாத சூழலில், தனது கணவனின் வரவிற்காகக் காத்திருக்கின்றாள். வெண்கடுகைக் கொண்டு புகைமுட்டி வீட்டின் முற்றத்தில் வேப்பிலை சொருகி கணவனின் வருகைக்குக் காத்திருந்தவர்கள் தமிழ்ப்பெண்கள். புலியை முறத்தினால் துரத்திய பரம்பரை உள்ள பெண்கள் பேரின் தன்மையுடன் தாமும் ஒத்துப் போயிருந்தார்கள். போரில் விழுப்புண் பட்டு வருதல் என்ற நிகழ்வைப் பெண்கள் இயல்பாகவே ஏற்றுக்கொண்டனர். போர் செய்யச் சென்ற வீரனானவன் பேரில் ஈடுபட்டுக் கண்டிப்பாக வழுப்புண்பட்டுப் பெருமிதத்துடன் வீடுதிம்ப வேண்டுமென்று எதிர்பார்த்திருக்கின்றனர். கணவனின் கருத்தோட்டத்திலேயே அப்பெண் வாழ்வு நடத்திருயிருந்தாள். வாழ்வின் எல்லாத் துன்பங்களிலும் தலைவனுடன் சேர்ந்திருப்பதையே பெருமையாக எண்ணியவள் மனைவியாவாள். புறநானூறு என்னும் இலக்கியத்தின் வழியாகக் கணவன் மீது மனைவி கொண்டிருக்கும் அன்பினையும், அதனால் வெளிப்படும் குடும்ப விழுமியத்தையும் காண முடிகின்றது.

போருக்குச் சென்றிருக்கும் தம் கணவனை வரவேற்று, அவன் நலனில் அக்கறை கொண்டு குடும்பப் பண்பைப் போற்றிப் பாதுகாக்கும் பெண்கள் சங்க காலத்தில் வாழ்ந்து தமிழ்ச் சமுதாயத்திற்கு வழிகாட்டிகளாக வாழ்ந்து முடித்து உள்ளனர். பெண்ணியம் பேசும் இக்காலச் சூழலில் பெண்களால் குடும்பம் எவ்வாறு தழைத்து, உயர் பண்புநெறிகளை உமிழ்கின்றது என்பதனைப் புறநானூற்றுப் பாடல்களின் வழியாகக் குடும்ப விழுமியமாக எடுத்துக்காட்டப்படுவது தேவையானதாகும். போருக்குச் சென்ற கணவன் திரும்பி வரும் போது விழுப்புண்ணுடன்தான் வருவான் என்று நம்பினார்கள் பெண்கள். தலைவனின் வீரத்தின் மீது தாம் வைத்திருக்கும் அசையாத நம்பிக்கை அவர்களின் மனநிலையாகப் புறநானூற்று வழி பார்க்க முடிகின்றது. விழுப்புண்ணுடன் வரும் தலைவனை அடுத்த போருக்கு ஆயத்தமாக்குவது என்பதைக் காட்டிலும், தன் குடும்பத் தலைவனான கணவன் மீது கொண்டிருக்கும் அன்பினை வெளிப்படுத்தும் விதமாகவே புண்ணை ஆற்றும் நிகழ்வு இனம்காண முடிகின்றது. புண்ணுடன் இருந்தால் காலன் அழைத்துவிடுவான், பேய்கள் தொட்டுவிடும் என்று நம்பிய மனைவி, தலைவனைப் பேய்களிடமிருந்து காப்பாற்றும் விதமாக பாதுகாப்புச் செயல்களைச் செய்து முடித்ததைப் புறநானூறு காட்டி நிற்கின்றது.

தீங்கினி இரவமொடு வேம்பு மனைச் செரீஇ,
வாங்கு மருப்பு யாழொடு பல் இயம் கறங்கக்
கைபயப் பெயர்த்து மைஇழுது இழுகி,
இசைமணி எறிந்து, காஞ்சிபாடி

பெண்கள், விழுப்புண் பெற்ற தங்களுடைய தலைவர்களைக் காப்பாற்ற முனைந்துள்ளனர் என்பதை மேற்கண்ட 'அரிசில்கிழாரின் பாடல் உணர்த்தி நிற்கின்றது. இரவ இலையும், வேம்பந்தழையும் வீட்டின் முன்புறத்தில் சொருகி வைப்பது, பேய்கள் நெருங்காது என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன. இப்பொழுதும் அம்மை நோய் வந்தவர் வீட்டின்முன் தீய ஆவிகளும் பேய் பிசாசுகளும் வரக்கூடாது

என்பதை உணர்த்தி, வேப்பந்தழையை வீட்டின்முன் சொருகி வைப்பர். உடனடியாகக் குணமாகும் என்ற நம்பிக்கை வைத்திருந்ததாலேயே தழைகளை வீட்டின் முன் வைக்கும் பழக்கம் வலுப்பெற்றிருக்கின்றது. ஆம்பல் குழல் ஊதியும், ஓசையுடைய மணியை அடித்தும், காஞ்சிப்பண் பாடியும், வீடுமுழுவதும் அகிற்புகையினைப் பரவச் செய்து தலைவனின் புண்ணிற்குக் கிருமி நாசினியாகப் பயன்படுத்துவர். வெண்கடுகின் காரத்தினால் கிருமி நெருங்காதவாறு பாதுகாத்தனர் என்ற செய்தியின் வழியாகக் குடும்பப் பண்பு சிறந்த பண்பாகக் கொண்டு தலைவன் நலன் பேணும் தன்மை வெளிப்படுகின்றது என்பதனை உணர முடிகின்றது. தன் மகனின் வருகைக்காகக் காத்திருக்கும் தாயும் கூட இத்தகைய நோய் எதிர்ப்பிற்கான செயல்களைச் செய்தும், மகனின் வீரத் தழும்புகளை, அதனால் ஏற்பட்டுள்ள புண்ணைக் குணப்படுத்தத் தயாராக எதிர்நோக்குகின்றாள் என்பதனை ‘வெள்ளை மாறனார்’ என்னும் புலவரின் பாடல் விளக்குகின்றது.

வேம்பு சினை ஒடிப்பவும், காஞ்சி பாடவும்,
நெய்யுடைக் கையர் ஐயவ புகைப்பவும்

செய்து எல்லோருடைய வீட்டிலும் செய்யும் ஆரவாரம் ‘கல்’ லென்று ஒலிக்கின்றது. இன்னும் என்மகன் வரவில்லையே என்று ஏங்கும் தாயுள்ளம் வெளிப்படுத்தும் உணர்வு குடும்ப விழுமியமாகக் கருதமுடியும். புண் குணமடைந்தபின்பு உடனே போருக்குப் புறப்படும் தன்மை கொண்டவனாகவும், வழுப்புண்ணை ஆற்ற முயன்ற மனைவியின் சிறப்பையும் கொண்ட தலைவன் என்பது ‘அடை பெருங்கல்வியார்’ (ஆண்டர் நடுங்கில்லினார்) என்னும் புலவரின் புறநானூற்றுப் பாடல் 283-ம் இடம்; பெற்றிருப்பதைக் காண முடிகின்றது. தன் மகன் பெரும வீரனாகச் சிறப்படைந்து இருப்பதனால் எந்தக் கவலையும் எனக்கில்லை என வறுமையையும் பெருமையையும் பேசிக் கொண்டிருந்த தாயின் உள்ளத்தையும் கவனிக்கத் தவறில்லை இறந்துபட்ட வீரனின் மனைவி.

பெண்களின் பங்கு:

பல்வேறு வகையிலும் பெண்ணின் பங்கு சிறப்புற்று விளங்கியிருந்தது. சமுதாயப் பாதுகாப்பிற்காகத் தலைவன் போருக்குச் சென்றாலும், அவனைப் பாதுகாக்கும் பொறுப்பு மனைவியிடம் முழுமையாக உள்ளது என்பதை மேற்கண்ட பாடல் வரிகள் உணர்த்தி நிற்கின்றன. இதன் வழியாகச் சமுதாயக் கடமையில் குடும்பமும் அதிகமாக பங்காற்ற முடியும் என்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது.

குழந்தைச் செல்வம்:

குடும்பத்தின் விளைபொருள் குழந்தையாகும். பதினாறு செல்வங்களையும் பெற்று வாழும் வாழ்க்கையில் முதல் செல்வம் குழந்தைச் செல்வம். இன்னொரு சமுதாயம் உருவாக, அறக்கருத்துகளையும், நீதிபோதனைகளையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் பெரிய பாலமாகக் குழந்தை திகழ்கின்றது. கோடி ஆண்டுகள் மனிதச் சமூகம் வாழ்ந்திருக்கின்றது என்று சொல்லும் நேரத்தில் குடும்ப அமைப்பின் பரிணாமமாக குழந்தையே சிறந்து விளங்குகின்றது. ஆணும் பெண்ணும் திருமணம் செய்து குழந்தைப் பேற்றைக் கொடுப்பது சமூகக் கடமையாகும். “திருமணப் பிணைப்பாவது,

மக்களை ஈன்று அவர்களை நன்முறையில் வளர்க்கும் நோக்கத்தோடு நடைமுறை விதிப்படியும் பொதுமக்கள் கருத்திற்கிணங்கவம் சமயக்கொள்கைப்படியும் ஒருவனையும் ஒருத்தியையும் அவர்தம் வாழ்நாள் முழுவதும் ஒன்றுபடுத்துவதாகும். தாயையும் தந்தையையும் இணைக்கும் இணைப்புக் கருவியாகவும் திகழ்வது குழந்தையே ஆகும். தாம் பெற்ற பிள்ளையினைத் தன் கணவனுக்கு இவன்தான் நமது பிள்ளை எனும்போதும், குழந்தைக்கு இவர்தான் அப்பா என்ற அறிமுகப்படுத்தும் போதும், கணவன்-மனைவிக்கு இடையே உள்ள பிணைப்பு மேலும் வலுவடைகின்றது. எவ்வளவு சிக்கல்கள் குடும்பத்தில் இருந்தாலும் குழந்தைச் செல்வம் பிறந்தவுடன் பரம்பரைப் பகை கூட மறைந்து உறவு கொண்டாட வேண்டிய தேவையைக் குழந்தைச்செல்வம் உருவாக்கித் தருகின்றது. மரித்துக் கொண்டிருக்கும் மனித சமுதாயத்தை மீண்டும் மீண்டும் குழந்தையின் வடிவத்திலேயே கண்டு சமூகக் கூட்டுணர்வை ஏற்படுத்திக் கொள்கின்றோம். ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே" என்று குழந்தைப் பேற்றை இச்சமூகத்திற்குக் கொடுப்பது தலையாய கடமையாகக் கொண்டு வாழ்ந்தது சங்ககாலத்துச் சமூகம்.

குடும்பம் என்ற அமைப்பின் சிறப்பு அம்சமாக விளைபொருளாகக் குழந்தைச் செல்வத்தைக் காணமுடிகின்றது எனபதனை 'ஔவையாரின்' பாடல் தெளிவுபடுத்துகின்றது. இசைக்கு மயங்காத எந்த உயிரினங்களும் இல்லை என்றே சொல்லலாம். 'கோபாலனின்" இசை கேட்டுப் பசுக்களெல்லாம் மேய்ந்தன என்பது புராணச் செய்தி. இசையின் அதிர்வுகளினாலேயே பாம்பு மகுடியோடு தலையசைக்கின்றது. மனம் துன்ப நிலையில் இருந்தாலும், இசையின் நாம் மனத்தை அமைதியான நிலைக்குக் கொண்டு வருகின்றது. புல்லாங்குழலின் வழியாகவும், யாழின் வழியாகவும் வெளிக்காற்றானது கலைஞனின் கைவண்ணத்தால் இசையா மிளிரக் கூடியதாகவும், மனம் திளைக்கும் செயலாகவும் செய்து விடுகின்றது. இவ்வளவு சிறப்புகளும் ஒரு குழந்தையின் இனம் புரியாத வார்த்தையைக் கேட்காதவருக்குச் சிறப்புடையதாகவும், மேன்மை உடையதாகவும் கருத நேரிடுகின்றது. குழந்தையின் பிஞ்சு மொழியைக் கேட்டும் பொழுது மனம் இலயித்துப் போகும். அனைத்து இசைக்கருவிகளும் தோற்றதாகவே கருதப்படும். குழலினிது, யாழினிது என்று கூறுபவர்கள் மழலையின் சொற் கேட்காதவர்கள் என்பது வள்ளுவரின் வாக்கு.இதே கருத்து புறநானூற்றில் வலியுறுத்தப்படுவதைக் காணமுடிகின்றது.

யாழொடும் கொள்ளர் பொழுதொடும் புணரர்
பொருள் அறிவாரர்;; ஆயினும் தந்தையர்க்கு,
அருள் வந்தனவால் புதல்வர் தம் மழலை!'

யாழொடும் பொருத்திப் பார்க்க முடியாத, காலத்தொடு பொருந்தும். பண்ணிலும் பொருத்திப் பார்க்க முடியாத பொருளைக் கொண்டது குழந்தை மொழி ஆகும். பரியாத மொழியை தம குறிப்பால் இனம்கண்டு புரிந்து கொள்ளும் சிறப்பினாலேயே குடும்பத்தின் மகிழ்ச்சியும், அன்பும் மேன்மேலும் பெருகிக் குடும்பத்தின் மாண்பினை உணர்த்தி நிற்கின்றது. கடும்ப வாழ்வில் பின்னிப் பிணைந்தது குழந்தைச் செல்வமாகும். வாழும் நாளில் குழந்தைச் செல்வம் இல்லையாயின் வாழும் வாழக்கை

பயனற்றதாகிவிடும். குடும்ப விழுமியம் என்று பல பண்புநெறிகளை எடுத்தோதும் போதிலும், குழந்தைச் செல்வமே சிறந்த விழுமியமாகக் கருதப்படுகின்றது. 'பாண்டியன் அறிவுடைநம்பி' மக்கட்செல்வம் இல்லையாயின்' வாழ்வு பொருளற்றதாகி விடுகின்றது என்று பதிவு செய்துள்ளார்.

வறுமையில் செம்மை:

வறுமை மனிதனுடன் நீங்காத தொடர்புடையது. இத்தொடர்பு மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே இருந்திருக்க வேண்டும். சற்று காலம் கடந்து மனிதன் பக்குவமடைந்து உயர்வு தாழ்வு பேணும்போதுதான் வறுமையின் முழுப்பொருளாலும் கடைநிலை மக்களை உணர வைத்தது. குறிப்பாகச் சங்க இலக்கியக் காலத்தில் வறுமையின் தாக்கத்தை இலக்கியங்களின் வழியாக வெளிப்படுத்திய மனிதகுலம் இன்றுவரை வறுமையைத் தீர்க்கப் போராடியும் வருகின்றது.

இன்றைய காலக்கட்டத்தைப் பொருத்த வரையில் வறுமையின் காரணமாக ஒருவன் தவறான செயலில் ஈடுபடச் சமூகம் அவனை தூண்டிவிடுமானால் சில நேரத்தில் அச்செயலைப் பொறுத்து அவன் எடுக்கும் முடிவுகள் தவறில்லை என்பதாகவும் கருதிவிடுகின்றனர். வறுமை என்பது மனிதனுக்கு இழைக்கப்படும் கொடுமை என்று மற்றவர்களும் உணரும் தேவை ஏற்பட்டபோது, அதனைத் தீர்க்க மற்றவர்கள் முன்வராத நிலையில் வறமைக்கு உள்ளானவன் எடுக்கும் முடிவு தவறானதாயினும் சரியாகவே கருதப்படும். தவறான முடிவாக இருக்குமானால் அம்முடிவிற்கும் பாடபேதம் கற்பிக்கும் நிலை இக்காலச்சூழலில் உள்ளது. ஒருவனின் வளர்ச்சியில் மற்றவனின் பங்கு இருப்பதைப் போலவே, அவனுடைய வறுமை, தாழ்விலும் மற்றவரின் பங்கு இருக்கின்றது என்பதை உணர்தலினாலேயே வறுமை ஒழிப்பிற்கு, அனைவராலும் குரல் கொடுக்க முடிகின்றது. வறுமை தற்காலிகமானது, இதனைத் தீர்க்கமுடியும் என்ற நம்பிக்கையினால்தான் வறுமைக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். வறுமை என்பது மனித குலத்திற்கு எதிரானது என்ற கருத்தில் பிளவு இருக்கமுடியாது. இதனை எதிர்ப்பதில் உள்ள சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் சமூகம் அதனை எதிர்கொள்கின்றது. வறுமை மிகக் கொடியது, இவ்வறுமையிலும், இளமையில் கொள்ளும் வறுமையானது மிகவும் கொடுமையானது என்பது ஔவையின் வாக்கு. இவ்வுலகத்தில் பிறந்து மகிழ்ச்சியாகவும், இயற்கையாகவும் சுற்றித்திரியும் இளமைப்பருவத்தில், இவ்வறுமை நமக்கு ஏன் வருகின்றது என்பதை அறியாமலேயே அதனில் உழன்று, தலைமீது சுமந்து வாழும இளமையான வாழ்க்கையானது தொடூரமானது என்பதை ஔவை உணர்த்தியிருக்கின்றார். நீதியையும், அறநெறியையும் போதிக்கும் இலக்கியங்கள் வறுமையை எதிர்த்துள்ளன. வறுமையினால் மற்றவரிடம் இறந்து உயிர் வாழும் நிலை ஏற்படின் இவ்வுலகமே கெட்டழியட்டும் என்று வறுமையை உருவாக்கக் காரணமான சமூகத்தையே சாடுகின்றார் வள்ளுவர்.

புலவரும் வறுமையும்:

மன்னரிடம் உள்ள பொருள்கள், வறுமையைப் போக்க முயற்சி செய்தது என்பதோடு உயர்குடியினரின் புகழையும், ஈகைத்தன்மையையும் உயர்த்திப் பேசப் பயன்பட்டது. மக்களிடம் உள்ள வறுமையானது மன்னனுக்குரியது. மன்னனிடம் உள்ள செல்வங்கள் மக்களுக்குரியன. இரண்டும் சரிவிகிதமாக இல்லாமல் ஒரு சாராரிடமே ஒன்றுமே மிகுதியாக இருந்ததினால் செல்வம் மன்னனையே

நாடிச்சென்றது. வறுமை புலவர்களிடமே பொதிந்துக் கிடந்தது. பொருளைப் பெற வேண்டிப் புலவர்கள் பொய் கூறவில்லை என்பதே உயர் விழுமியமாகக் கருதப்படுகின்றது. குடும்ப வறுமையை மனதில் கொண்டு இல்லத்தரசியானவள் எந்தவிதத் தவறான முடிவையும் எடுத்திராமல் கணவனால் கொண்டு வரப்படும் பொருளுக்காகக் காத்திருக்கின்றாள். வறுமையில் குடும்பம் என்னும் அமைப்பை எவ்விதமான கீழ்நிலைக்கும் இட்டுச்செல்லவில்லை என்பது புறநானூறு வழி கிடைக்கும் செய்தியாகும். பொருளுக்காக மன்னனிடம் செல்லும் புலவனுக்குப் பொருள் கொடுக்க வில்லையாயின், கோபத்தோடு அவனைத் திட்டிச்செல்லாமல், அவனுடைய மனைவியையும், மக்களையும் வாழ்த்தி வெறுங்கையுடன் வீடு வந்து சேரும் உயர் பண்பாட்டைத் தனதாக்கிக் கொண்டிருந்தவர்கள் சங்ககாலத்து புலவர்கள்.

புலவனின் வறுமையைப் பற்றிக் கூறும்போத பெருங்குன்றூர்க்கிழார் நேர்த்தியாக எடுத்துக் கூறியுள்ளார். விருந்தோம்பல் என்பது தமிழர் பண்பாடு. தன்னுடைய வீட்டில் எவை இருந்தாலும் வீட்டைத் தேடி வரும் விருந்தினர்க்குப் பகிர்ந்து கொடுத்து விருந்தோம்பல் செய்தல் சிறந்த பண்பாகப் பாதுகாத்து வந்தனர். விருந்தினர் வரும்போது அவர்களை எதிர்கொண்டு வரவேற்று விருந்து உபசரிக்க முடியாத வாழ்கையாகிப் போய்விட்டது என்று தன் வறுமையைக் காட்டி நிற்கின்றார் 'பெருங்குன்றூர்க்கிழார்.

"விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கை"

விருந்தினர்களைக் கண்டு ஒளிந்து கொள்ளும் வாழ்க்கையைத் திருந்தா வாழ்க்கை என்று குறிப்பிடுகின்றாhப் பெருங்குன்றூர்க்கிழார். விருந்தினரை வரவேற்று உபசரிக்கும் மனப்பக்குவத்தையும், நாகரிகத்தையும் என்னுடைய வறுமை காரணமாக இழந்து விட்டேன் என்று குறிப்பிடுவதைத் 'திருந்தா வாழ்க்கை' என்று அடையாளப் படுத்துகின்றார். இந்த வறுமை நிலையில் உழன்று கொண்டிருக்கும் நிலையிலும் வாழும் நிலைவேண்டிப் பொய்யான புகழைக்கூறிப் பொருள் பெறுவதில்லை என்பதே தமிழர் பண்பாட்டின் அடையாளமாகக் கருதமுடிகின்றது.

மன்னரும் புலவரும்:

தன்னுடைய வறுமையைப் போக்க மன்னர்களிடம் பொருள் தேடச் செல்வது புலவர்கள் மற்றும் கலைஞர்களின் இயல்பு. பொருள் வைத்திருக்கும் புரவலனும் இல்லையென்று மறுத்தால் பெருமையோடு வாழ்த்திவிட்டு வீடு திரும்பும் மனநிலை புலவர்களுக்கு இருந்தது. பொருள் இருந்தும் இல்லையென்னும் பண்பைக் கொண்டுள்ள மன்னர் இருப்பார்களேயானால் அவர்களின் குழந்தைகள் சீரும் சிறப்புமாக வாழ்க என்று வாழ்த்தி விட்டு(புறம் 196), தாம் வந்த பனியிலும், வெயிலிலும் சுணங்காது நடந்து சென்று வறுமையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தனது அன்பிற்கினிய மனைவியை நோக்கி செல்கின்றேன், என்ற செ;தியின் வழியாக 'ஆவூர் மூலங்கிழார்' என்றும் புலவரின் வாழ்க்கையில் வறுமையிலும் தம் மனைவி வாய்மையோடு இருந்தமையைக் காண முடிகின்றது. பழுமரத்தில் இருக்கும் கனிகளைப் பறவைகள் கொத்தித் தின்பதுபோல, புரவலர்களிடம் உள்ள பொருள் புலவர்க்குச் சொந்தமானது. பல நாட்கள் சென்றாலும் கனிகளைக் கொடுக்கும் தன்மை கொண்டது பழுமரமாகும். இதே தன்மையைப் புரவலனிடம் பார்க்க முடியும். முதல்நாள், மறுநாள் என்று வேறுபாடு

இல்லாமல் புலவர்களுக்குக் கொடுப்பது புரவலரின் கடமையாகும். மலையில் பிறக்கும் அருவி கொள்ளிற்குப் பயனாவதுபோல், மரம் விடும் கனிகள் பறவைக்கு பயனாவது போல், மலையில் இருக்கும் சந்தனம் மனிதருக்கு பயனாவது போல், மன்னனிடம் உள்ள பொருட்கள் மக்களுக்கும், யாசிப்பவர்களுக்கும், இரவலர்களுக்கும் பயன்படுதற்கு உரியன.

புரவு எதிர் கொள்ளும் பெருஞ் செய் ஆடவர்
உடைமை ஆகும் அவர் உடைமை:
அவர் இன்மை ஆகும், அவர் இன்மையே

என்ற 'பெரும்பதுமனாரின்' பாடல், வறுமைய்யும் அதற்கெதிரான செல்வமும் உரியவர்களுக்குச் சென்று சேர்வது இயல்வு என்று காட்டியுள்ளது. பொருள் இரவலர்க்கு உரியதாகும் பொழுது இரவலர்களிடம் உள்ள வறுமை மன்னருக்கு உரியது என்ற மற்றொரு கருத்தையும் நிலைபெறச் செய்திருக்கின்றார். ஷபெரும்பதுமனார்'. பொருள் கேட்டுக் கிடைக்காமல் திரும்பிச் செல்லும் புலவர்களும், இரவலர்களும் மன்னனை மகிழ்ச்சியுடன் வாழ்த்தி விட்டுத் தன்னை எதிர் நோக்கியிருக்கும் மனைவி மக்களின் அன்பைப் பெறச் செல்வது பொருள் இல்லாத ஏழையாக வாழ்ந்திருப்பினும் இல்லத்தின் உயிர்ப்பை ஒழுக்கப் பண்புநெறிகளில் தவறாத மனைவியின் உள்ள உறுதி, என்ற இவ்விரண்டு நிலைகளிலும் குடும்பம் என்ற அமைப்பை மேன்மைப்படுத்திக் காட்டியுள்ளது.

புறநானூற்றில் சமுதாய விழுமியம்

சங்க இலக்கியத்தில் புறச்செய்திகளை உள்ளடக்கிய புறநானூறு என்பது வரலாற்றுப் பிரதிபலிப்பாகவும், பண்பாட்டை வலியுறுத்தும் பொதுப் பண்பாடு நூலாகவும் அமைந்துள்ளது. ஒரு பண்பாடானது வெளிப்படும் போது சமகால மக்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து எதிர்கால மக்களின் வாழ்நிலைக்குத் தீர்வு சொல்லாமல் செல்வதுண்டு. எதிர்காலச் சிந்தனையோடு பாடப்பட்டிருக்கும் ஒழுகலாறுகள், நிகழ்காலச் சமூகத்துடன் பொருந்தாமல் விலகிச் செல்வதுண்டு. புறநானூற்றில் வெளிப்பட்ழருக்கும பண்புநெறி மனிதனின் அனைத்து நிலைகளிலும் காலங்கடந்து அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உயிர் ஊட்டுவனவாக அமைந்து விடுகின்றன. அக்காலத்தில் வெளிப்படுத்தியிருக்கும் நோக்கம் எதுவாயிருந்தாலும், தற்பொழுது அனைத்து மக்களின் வாழ்நிலையை மேம்படுத்துவதற்காக இந்த உயர்பண்பு நெறிகள் பயன்படுகின்றன. சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த புலவர்கள் பண்பாட்டுடன் கூடிய தமிழை வளர்த்தெடுப்பதில் கவனமாக இருந்திருக்கின்றனர். இலக்கியத்தில் பண்பாடு தோன்றிய தேவை எதுவாக இருந்தாலும அது ஒட்டுமொத்தச் சமூகத்தின் தேவையாகிவிட்டது என்பதுதான் பறநானூற்றை இன்றளவும் போற்றிப் பாதுகாக்கின்றோம்.

சங்கம் அமைத்துச் செய்யள்பாடி ஆங்காங்கே, விட்டுச் செல்லப்பட்டு மன்னர்களின் தலைமையில்; தொகுக்கப்பட்ட சங்க இலக்கியத்தில் மக்களின் வாழ்வியலைப் பெரிதும் போற்றிப் பாடும் புறநானூறு, பல்வேறு காலகட்டங்களின் பல்வேறு செய்திகளையும் உள்ளடக்கி இன்றுவரை சமூக அறங்களைப் போதிக்கும் ஒழுக்க நூலாகச் செயல்பட்டு வருகின்றது. ஈகை, கொடை, நட்பு நிலையாமை

உணர்த்தும் வாழ்க்கை, கல்வி, சான்றாண்மை போன்றவற்றை மக்கள் மனதில் இருந்தி மனித நேயத்தை வளர்க்கும் நூலாகவும் புறநானூறு திகழ்கின்றது.

இலக்கியங்கள் திடீரென்ற தோன்றுவதில்லை, நிகழ்கால மக்கள் சமூகச் சூழலையும் உட்கொண்டு தீர்வாகவும், சில நேரங்களில் இயல்பாகவும் தோன்றிச் சமூக தளத்தில் இயங்கும் மனித வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகின்றன. புறநானூற்றில் வெளிப்படும் உயர்பண்புநெறிகள் சமகாலத்தின் தேவைகளை நிறைவு செய்தும், காலம் கடந்தும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. சமகாலத்தில் வெளிப்பட்டிருக்கும் பண்பாட்டின் வழியாகத் தமிழக மக்களின் கோட்பாடுகளையும், வாழ்தலையம்அடையாளப்படுத்தும் விதமாக, சமுதாய விழுமியங்களாகப் புறநானூற்றுப் பண்புநெறிகள் அடையாளப்படுத்தப்படுகின்றன.

மன்னர்களும் பரிசில் பெறும் புலவர்களும்:

மன்னர்களிடம் புலவர்களும், கலைஞர்களும் இரப்பது அன்றைய தேவையாக பெரும்பாலும் அமைந்திருக்கும். ஈதல் செய்யும் புரவலனையோ, மன்னனையோ பொருத்தே பொருள் தீர்மானிக்கப்படுகின்றது. மகிழ்ச்சியோடு ஆடலும் பாடலும் நிகழ்த்தி வாழ்க்கையை ஓட்டும் விறலி கீரையோடு சேர்;த்து உண்ணுவதற்காக மன்னனிடம் அரிசி வேண்டினாள். ஆனால் பரிசாகக் கிடைத்ததோ பெருங்குன்று போன்ற யானையாக இருந்தது.

அரிசி வேண்டினெம் ஆகத், தான் பிற
வரிசை அறிதலின் தன்னும் தூக்கி,
இருங்கடறு வளைஇய குன்றத்து அன்னதோர்

பெருங்களிறு நல்கியோனே என்று நாஞ்சில் வள்ளுவனின் ஈகைச் சிறப்பு போற்றப்படுகின்றது. சாதாரண விறலியர்க்கு யானையைக் கொடுக்கும் அளவுக்கு உயர்குணம் உடையவன் என்பதையே இங்கு குறிப்பிடத்தக்க கருத்தாகக் கொள்ள முடிகின்றது. இதனால்தான் "தோற்றா ஈகையும் உளது கொல்" என்று நாஞ்சில் வள்ளுவனின் ஈகைச் சிறப்பைப் பார்க்க முடிகின்றது. ஈகை செய்வது இரண்டு நிலைகளில் நடைபெறுகின்றது. ஒன்று ஈவோரின் தகுதியறிந்து ஈகை செய்வதாகும். மற்றொன்று தன்னுடைய தகுதி தாழ்ந்து போகாத விதமாகத் தகுதிக்கேற்பப் பரிசில் கொடுப்பதாகும். இங்கு நாஞ்சில் வள்ளுவன் கொடுத்த ஈகையானது தன்னுடைய ஈகைபுரியும் தகுதியில் குறைவில்லாமல் இருக்க வேண்டுமென்பதற்காகவே அரிசி வேண்டி வந்த விறலிக்கு யானையைப் பரிசாகக் கொடுக்கப்பட்டது. இதனால் ஈகையில் சிறந்தவன் என்ற பண்பு எடுத்தோதப்படுகின்றது. சோழிய ஏனாதி திருக்குட்டுவனின்" ஈகைச் சிறப்பைக் கூறும்போது,

கொன்று சினம் தணியாப் புலவு நாறு மருப்பின்
வெஞ்சின் வேழம் நல்கினன்: அஞ்சி
யான்அது பெயர்த்தனென் ஆகத்தான் அது
சிறிது என உணர்ந்தமை நாணிப் பிறிதும் ஓர்
பெருங்ளிறு நல்கியோனே

பரிசில் வேண்டிப் புகழ் பாடினபோது புலால் நாறும் தன்மையுடைய பெருங்களிறு சோழிய ஏனாதி திருக்குட்டுவன் பரிசாக கொடுத்தான். அச்சப்பட்டு திருப்பிக் கொடுத்தபோது பரிசு குறைவானது என்று திருப்பித் தந்து விட்டான் என்றெண்ணி, தன் செயலுக்கு நாணம் கொண்டு. மற்றுமொரு யானையைப் பரிசிலாகக் கொடுத்து அனுப்பினான் என்று பாடியிருக்கின்றார். இதுபோன்று தன் தகுதிக்கேற்றவாறு பரிசில் கொடுப்பது மன்னர்களின் மனப்பக்குவமாக இருந்தது. இந்தக் காட்சிகளினால் புறநானூற்று ஈகைப் பண்பைப்புரிந்துகொள்ள முடிகின்றது.

புகழை விரும்புபவர்கள் உயிரையும் விடுவதற்குத் தயங்கமாட்டார்கள். ஈகையின் சிறப்பை அறிந்தவர் ஈதல் செய்ய முடியாத நி்லியல் தன்னையும் தானமாக கொடுக்கும் தகுதியைப் படைத்தவர்களாக இருந்திருக்கின்றனர். மகாபாரதக் கழையில் கர்ணனுக்குக் கவசகுண்டலத்தில்தான் உயிர் இருக்கின்றது என்று தெரிந்தும் கொடுக்கும் பண்புடைய கர்ணன் மனமுவந்து கவசக்குண்டலத்தை கழற்றிக் கொடுக்கும் பண்பையே உயர்ப்பண்பாகப் பார்க்க முடிகின்றது. இதே தன்மையுடன் புறநானூற்றில் இடம்பெறும் குமணன் என்னும் மன்னரது ஈகைப் பண்பு போற்றி பாராட்டப்படுகிறது.

பரிசிலர் தன்னிடம் பொருள் வேண்டி இரப்பின் வீட்டிலிருந்து தருகின்றேன் என்று சொல்லாமல் தன்னையே பரிசாகக் கொடுக்கும் ஈகைக் குணம் பாரியிடம் உள்ளதாகக் குறிப்பிடுகிறது.

பாரியும் பரிசிலர் இரப்பின்,
வாரேன் என்னான் அவர்வரை யன்னே

தன்னையே பரிசாகத் தரக்கூடிய உயர்ந்த உள்ளம் கொண்டதாலேயே மாரியுடன் ஒப்பிட்டுப் பாரி பேசப்படுகின்றான்.

பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்:
மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப் பதுவே

கொடையில் பாரியின் பண்பையே உயர்வாகப் பேசுவர். பாரி மட்டுமேயல்லாமல் உலகுக்குப் கொடுப்பதற்கு மாரியும் உண்டு என்று, பாரி என்னும் மனிதனை மாரி என்னும இயற்கையுடன் ஒப்பிட்டுக் கபிலர் பாடியுள்ளார்.

மாரியின் இயல்பு, நல்லவர் – தீயவர், உயர்ந்தவர்-தாழ்ந்தவர், பெரியோர்-சிறியோர், ஆண்கள் - பெண்கள், நகரம் - கிராமம் என்ற பாகுபாடு இல்லாமல் பொழியும் தன்மையை உடையது. இதேத் தன்மையைக் கொண்டவன் பாரி என்பதாகவே குறிக்கப்படுகின்றது. மனிதன் என்பவன் ஆறாம் அறிவை உடையவன் ஆதலால் சிந்திக்கும் தன்மையைப் பெற்றவன். ஆயினும் பிரித்துப் பார்த்துப் பொருள் கொடுக்கும் தகுதியைப் பாரி பெற்றிருக்கவில்லை. பொருள் கொடுப்பதையோ, உணவு கொடுத்துப் பசியாற்றுவதையோ தேவையாகக் கருதாமல் இயல்பாகக் கருதி வந்தான் என்பதனாலேயே மாரியுடன் ஒப்பிட்டு பேசும் அளவுக்கு உயர்தகுதியைப் பெற்றுள்ளான்.

மடவர் மெல்லியர் செல்லினும்

கடவன் பாரி கைவண்மையே?

புலமை பெறாத மடவரானாலும் தன்னை நாடி வருபவர்க்கு ஈதல் செய்வதில் மாற்றுக் கருத்து இல்லமல் 'ஈதல்' என்னும் பண்பினை இயல்பாகக் கொண்டு வாழ்ந்து வந்தான் என்பது புறநானூறு கொடுக்கும் சான்றாகும்.

மடமையுடன் வந்து புலமையில்லாமல் வாழ்த்தி இருக்கும் போது அவனின் வறுமையையே முக்கியக் கவனமாகக் கொண்டு ஈகை புரியும் பாரியின் உயர்பண்பு மற்றோர்க்கு வழிகாட்டுதலக அமைந்துள்ளது. இதுபோன்று பெறப்படுகின்ற பண்புநெறிகளே சமூகத்தால் போற்றியும் பின்பற்றியும்நடக்கவேண்டிய சமூகவிழுமியமாகவும், பொதுப்பண்பாடாகவும் அடையாளப்படுத்தப் படுகின்றன.

ஓரியின் புகழ் பாடி பரிசில் வேண்டும் பொழுது இன்னும் தம்மைப் பற்றிய புகழ் பாட வேண்டாமென்று தன்னிடம் உள்ள மான் தசையையும், ஆவின் நெய்யையும் கொடுத்துப் பொன்னையும், போருளையும் கொடுத்துவிட்டுச் சென்றான். தனக்காக மட்டுமே சேர்த்து வைக்காமல் சேர்த்து வைத்ததைப் பிறருக்கு கொடுக்கும் ஈகைப் பண்பினை ஓம்பர் ஈகை" என்று புலவர் வண்பரனர் குறிபிட்டு உள்ளார். இதுபோன்று தன்னுடைய புகழ் வேண்டி ஈகைசெய்யும் மக்கள் ஒருபுறம் இருக்க, புகழைப் போதை என்று எண்ணும் மன்னர்களும் புறநானூற்றில் இனங்காணப்பட்டுள்ளனர்.

மன்னர்களும் புரவலர்களும், இரவலர்களுக்கு பரிசு கொடுத்து, ஈகைப் பண்பினை உயர்த்திக் கொண்டனர். பொருள் இருப்பவன் இல்லாதவர்களுக்குக் கொடுத்துதவும் உயர் பண்பாகவே ஈகை மதிக்கப்படுகின்றது. தமிழகப் பண்பாட்டு வரலற்றில் புலவர் ஒருவர் மன்னருக்குப் பரிசு கொடுப்பதாகப் புறநானூறு பதிவு செய்துள்ளது.

References:

1. U.V. Swaminatha Iyer (ed.). *Purananooru (Original Text and Commentary)*. [Notes: An essential foundational text for Sangam literature research, compiled through U.V. Swaminatha Iyer's efforts.]
2. Puliyoor Kesikan. *Purananooru (Simple Commentary)*. [Notes: Provides clear and simple explanations of the original text, useful for understanding social contexts.]
3. Ra. Raghava Iyengar. *Purananooru (Detailed Commentary)*. [Notes: Offers a profound literary understanding of the text.]
4. Avvai Duraisamy Pillai. *Purananootru Sorpozivugal (Discourses on Purananooru)*. [Notes: Explanations approach Purananooru poems with literary aesthetics and a social perspective.]
5. Ma. Rajamanickanar. *Sangam Kaala Tamizhaga Varalaru (History of Tamil Nadu in the Sangam Period)*. [Notes: A crucial historical perspective on Sangam-era social, political, and economic conditions.]
6. Ka. Kailasapathy. *Sangath Tamizhar Vazhvu (Life of Sangam Tamils)*. [Notes: Deeply examines social structures, heroism, love, and family relationships as found in Sangam literature.]
7. Va. Su. Maanickam. *Tamizhar Panpaadu (Tamil Culture)*. [Notes: A comprehensive study of various aspects of Sangam-era culture, useful for understanding cultural values reflected in Purananooru.]

Tamilmanam

8. Na. Vanamamalai. *Pandait Tamizhar Vazhviyal (Ancient Tamil Way of Life)*. [Notes: A collection of essays examining the social life, rituals, and beliefs depicted in Sangam literature.]

9. Aa. Sivasubramanian. *Sangam Ilakkiyaththil Maanudaviyal (Anthropology in Sangam Literature)*. [Notes: An anthropological study approaching the social structure and its evolution through Sangam literary poems.]

10. Dr. P. Mathaiyan, Dr. Na. Elango (eds.). *Sangam Ilakkiyaththil Samudhaya Sinthanaigal (Social Thoughts in Sangam Literature)*. [Notes: A collection of essays by various scholars, often delving into specific social aspects of Purananooru.]

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723
Vol. 5, Special Issue 03, October 2025

பழந்தமிழர் வாழ்க்கை நெறிமுறைகளும் இன்றைய நடைமுறையும்

The ethical framework of ancient Tamils and today's reality

முனைவர் அ. மோகன்ராஜ்[1], முனைவர் த. அண்ணாதுரை[2],
முனைவர் செ. சக்திமுருகன்[3], முனைவர் வெ. ச. ஸ்ரீனிவாசன்[4].
[1]இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ஈரோடு-638052, தமிழ்நாடு, இந்தியா.
[2]இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ஈரோடு-638052, தமிழ்நாடு, இந்தியா.
[3]உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ஈரோடு-638052, தமிழ்நாடு, இந்தியா.
[4]நிர்வாக அலுவலர் மற்றும் உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ஈரோடு-638052, தமிழ்நாடு, இந்தியா.
Dr. A. Mohanraj [1], Dr. T. Annadurai[2], Dr. C. Sakthimurugan[3], Dr. V. C. Srinivasan[4].
[1]Associate Professor in Tamil, Department of Tamil, Nandha Arts and Science College (Autonomous), Erode-638052 Email: mohanraj.a@nandhaarts.org
[2]Associate Professor in Tamil, Department of Tamil, Nandha Arts and Science College (Autonomous), Erode-638052 Email: annadurai.t@nandhaarts.org
[3]Asst. Professor in Tamil, Department of Tamil, Nandha Arts and Science College (Autonomous), Erode-638052 Email: sakthimurugan.c@nandhaarts.org
[4]Asst.Prof in Tamil & A.O, Nandha Arts and Science College (Autonomous), Erode-638052 Email: srivc2345@gmail.com

Abstract:

The ancient Tamils lived with excellent life practices. Ancient Tamils prioritized relationships. They lived with affection for all living beings. They lived with the understanding that relationships are the foundation of life. The valuable items that are greatly esteemed today, such as money, gold, and diamonds, were not considered worthy of respect by the Tamils of that time. They cherished living beings as their wealth. The ancient Tamils lived with the philosophical principle and mental feeling that no matter how much wealth one acquires in life, no one can fully reap its benefits. For every individual to live, only three meals a day, and two items of clothing (an upper garment and a lower garment) are sufficient.

Keywords: Relationship, Friendship, honesty

ஆய்வுச் சுருக்கம்:

பாரத நாடு பழம் பெரும் நாடு
நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்…
பாரத நாடு பாருக்கெல்லாம் திலகம்
நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்

என்று தம் மக்களுக்கு நாட்டின் பெருமையையும், நாம் தான் உரிமை உடையவர்கள் என்பதையும் உணர்த்தினார் பாரதியார்.'இனிமையும், நீர்மையும் தமிழெனலாகும்" என்று தமிழனச் சிறப்பை பிங்கல

Tamilmanam

நிகண்டு கூறுகிறது.இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழர்கள் சிறப்பான வாழ்க்கை முறைகளைத் தம்முள் கொண்டு வாழ்ந்தனர். அவற்றின் சிலவற்றை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

திறவுச்சொற்கள்: தமிழரின் உறவுநிலைகள், நட்பு, நேர்மை

தமிழரின்_உறவுநிலைகள்

பண்டைய தமிழர்கள் உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தார்கள். பிற உயிர்கள் அனைத்தின் மேலும் பாசம் கொண்டு வாழ்ந்தனர். உறவுகளே வாழ்வின் அடிப்படை என்று உணர்ந்து வாழ்ந்தனர். உறவுகளுக்காக எதனையும் எப்பொழுதும் கொடுத்து வாழ்ந்தனர். சங்கத்தலைவி ஒருத்தி தன் தலைவனோடு பேசிக்கொண்டிருக்கும் போது தனக்கருகில் இருந்த ஒரு மரத்தை தனது அக்கா என உறவு கொண்டு எண்ணியதைக் காணமுடிகிறது.

'விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே... (நற்றிணை - 173)

இயற்கையையும் உயிருள்ளவையாகக் கருதி நாணும் நுட்பமான உணர்வுபூர்வமான உறவு நிலையை சங்கப்பாடல்கள் பலவற்றில் காணமுடியும். இன்றைய காலங்களில் உறவுநிலைகளுக்குரிய முக்கியதுவம் மறுக்கப்படுகிறது. உறவுகளுக்கிடையே பொறாமை எண்ணங்களும் சண்டைகளுக்கும் குறைவேயில்லை.

'போட்டிகளில் பொறாமைகளில்
ஒருத்தரை ஒருத்தர்
மிஞ்சி அடிச்சுகிறாங்களே
இந்த மனிதகுலம் மாறுமோ" (எழுத்து.காம்) என்று ஒரு கவிஞர் பாடியுள்ளார்.

தமிழரின் நட்பு நிலைகள்

நட்பு என்பது உறவுகளின் அடுத்த நிலையே. அவ்வாறு இருந்தாலும் உறவுகள் செல்ல முடியாத இடங்களில் கூட நட்பு சென்று விடும். நட்பு உயிரினும் மேலானதாகக் கருதுகின்றனர். சரியாக அந்நட்பை வைத்திருக்கும் போது மட்டுமே.

பெரியோர் நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார் தம் ஒட்டியோர் திறத்தே (நற்றிணை 32)

பெரியவர்கள் ஆராய்ந்தபின் நட்பு கொள்வார்கள் தவிர, நட்பு கொண்டபின் ஆராய மாட்டார்கள்.

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பார்க்கு- என்ற குறளும்

பல்லார் பகை கொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர் கைவிடல் - என்ற குறளும் நட்பின் சிறப்புகளை விளக்குகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நட்பு இன்று பலவிதங்களில்தவறான உறவுநிலைகளில் சித்தரிக்கப்படுகிறது. தவறான விளையாட்டான வார்த்தைகள் நட்புகளுக்கு இடையே பெரும் பிளவுகளை உண்டாக்கி விடுகிறது.

"என் மனதை கொல்லத் துடிக்கும் உன் நட்பை விட
என் உயிரை கொல்லத் துடிக்கும் என் எதிரியை நான் மிகவும் நேசிக்கிறேன்
ஏன் என்றால் நீ ஒவ்வொரு முறையும் கொல்கிறாய் என் மனதை
என் எதிரி ஒரு முறையே என்னைக் கொல்கிறான்" (எழுத்து காம்)

என்று ஒரு கவிஞர் பாடியுள்ளார்.

செல்வத்தின் நிலைகள்:

இன்று பெரியளவில் மதிக்கப்படும் பணம், பொன், வைரம் போன்ற விலை உயர்ந்த பொருள்களை அக்காலத் தமிழர்கள் மதிப்பிற்குரிய பொருளாக மதிக்கவில்லை. அவர்கள் உயிருள்ளவற்றையே தங்கள் செல்வங்களாக போற்றி வாழ்ந்தனர்.

நாள்மோர் மாறும் நல்மாமேனி
சிறுகுழை துயல் வரும் காதின் பணைத்தோள்
குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆயமகள்
அளைவிலை உணவின் கிளையுடன் அருந்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாடு பெறூஉம்

(பெரும்பாணாற்றுப்படை 160-165)

மோர்விற்கும் ஆயச்சி நெய்க்குக் கிடைக்கும் விலையைப் பொன்னாகப் பெற விரும்பமாட்டார். எருமைக் கன்றுகளையே வாங்கவே விரும்புவாள் என்று இப்பாடல் கூறுகிறது ஏன. என்றால் உயிரை மதித்தனர். ஆனால் இன்று உயிருக்குரிய மதிப்பு சர்வசாதாரணமாக கொடுக்கப்படவில்லை. அதனால் தான் கொலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

காட்சி 1: **பண்டைய தமிழரின் செல்வக் கோட்பாடும் நவீன பணத்தாசையும்**

இந்தக் காட்சி **பண்டைய தமிழரின் செல்வக் கோட்பாட்டையும் நவீன பணத்தாசையையும்** ஒப்பிடுகிறது. இடதுபுறம், ஒரு கிராமப் பெண் பாலுக்காகக் கன்றுகளையும் மாடுகளையும் போற்றிப் பாதுகாக்கிறாள், இது **உயிருள்ளவற்றையே செல்வம்** எனக் கருதியதைக் காட்டுகிறது. வலதுபுறம், ஓர் அலுவலகத்தில் ஒருவன் தங்க நாணயங்கள், வைரங்கள், மற்றும் பணத்தை மட்டுமே குவித்து, **அளவில்லாப் பொருட்செல்வத்தின்** மீதான மோகத்தை விளக்குகிறான்.

தமிழரின் நேர்மைத் தன்மைகள்:

தமிழர் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்தனர். ஆதலால் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் உண்மையுடனும், நேர்மையுடனும் வாழ்ந்தனர் பிறரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் இல்லை. வாங்குவதிலும் கொடுப்பதிலும் சமநிலையில் கொண்டிருந்தனர் என்பதனை,

தமவும் பிறவும் ஒப்ப நாடி
கொள்வதூஉம் மிகை கொளாது
கொடுப்பதூஉம் குறை கொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும் (பட்டினப்பாலை : 208-211)

என்ற பாடல் விளக்குகிறது. பிறரை ஏமாற்றி பெறும் செல்வத்தை அவமானமாகக்கருதினார்.

இக்காலங்களில் எங்கு பார்க்கினும் ஏமாற்று வேலைகள் தான் அதிகம் உள்ளன. பிறரின் பொருள்களை எவ்வாறு எடுத்துக் கொள்ளலாம் என்ற தனிமனித சிந்தனைதான் அதிகம் உள்ளது.

'எனது மகிழ்ச்சியில்
எனக்காக சிரிக்கவும்
எனது சோகத்தில்

எனக்காக அழுதிடவும்
என் பிறரிடம் எதிர்பார்த்த போது
எனது சுயநலம் அரியணை
ஏறிட தொடங்கியது" (எழுத்து.காம்(

என்ற பாடலின் மூலம் சுயநலச் சிந்தனை காண முடிகிறது.

தமிழரின் தத்துவக் கொள்கைகள் :

வாழ்க்கையில் எவ்வளவு செல்வங்கள் தேடினாலும் அவற்றின் பயனை முழுமையாக யாரும் பெற இயலாது. ஒவ்வொரு தனி மனிதனும் உயிர் வாழ மூன்று வேளை உணவும்,மேலாடை, கீழாடை என்ற இரண்டு ஆடைகள் மட்டுமே போதுமானது என்ற தத்துவக் கொள்கையோடும் மன உணர்வோடும் பழந்தமிழர் வாழ்ந்தனர் என்பதனை,

கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புநபலவே

செல்வத்தின் பயன் பிறரின் தேவைகளுக்கு உதவுவதே. அதில்தான் இன்பம் உள்ளது என்ற தத்துவ உணர்வோடு வாழ்ந்தனர்.

"செல்வத்தைச் சேர்த்து பதுக்கினேன் பலகோடி பாதுகாக்க வழியின்றி"

இன்று இதனை அறிந்தும் தன் தேவைகளுக்கு மேலாக செல்வங்களைச் சேர்ப்பதே குறிக்கோளாக கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

தமிழரின் விட்டுக் கொடுக்கும் தன்மைகள்

தமிழர்கள் செம்புலப் பெயல் நீர் போல அன்பு உள்ளம் கொண்டு வாழ்ந்தனர். வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்ந்தனர். வேறுபாடுகள் காணப்பட்டாலும் விட்டுக் கொடுத்து வாழ்வதில் மகிழ்ந்தனர். இத்தன்மையை மான் வாழ்க்கையோடு பழங்தமிழர் சுட்டிக் காட்டியுள்ளார் மாறன் பொறையனார்.

'சுனைவாய்ச் சிறுநீரை எய்யாதென் றெண்ணிப்

பிணைமான் இனிதுண்ண வேண்டிக் - கலைமாத்தன்

கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர், காதலர்

உள்ளம் படர்ந்த நெறி"

தன் துணைக்காக விட்டுக் கொடுக்கும் தன்மையை இப்பாடல் விளக்குகிறது.

விட்டுக் கொடுக்கும் தன்மை குறைவுபட்டதால் தான் இன்று உலகில் சண்டைகள் அதிகம் இருப்பதற்கு காரணம்.

'வாழ்க்கை வாழ்வதற்கு

எங்கள் வாழ்க்கை

எங்கள் வாழ்க்கையில்

பிறர் வாழ்வதற்கல்ல"(எழுத்து.காம்) என்று கவிஞர் பாடியுள்ளார்.

காட்சி 2: **பண்டைய தன்னலமற்ற தன்மையும் நவீன பேராசையும்**

இந்தக் காட்சி **பண்டைய தன்னலமற்ற தன்மையையும் நவீன பேராசையையும்** மாறுபடுத்திக் காட்டுகிறது. இடதுபுறத்தில் உள்ள பாரம்பரியக் காட்சியில், ஒரு மான் குடும்பம் சூரிய அஸ்தமனத்தின்போது தண்ணீர் அருகே நிற்கிறது. இது **அன்பையும்** (தியாகம் செய்யும் கலைமானைப் பற்றிய பாடலில் உள்ளது போல்) சமுதாய வாழ்க்கையையும் குறிக்கிறது. வலதுபுறத்தில், இரண்டு ஆண்கள் கோட் சூட் அணிந்து ஒரு குளிர்ந்த, நகர்ப்புறச் சூழலில் பணத்தால் நிரப்பப்பட்ட ஒரு பெட்டியை ஆக்ரோஷமாகப் பரிமாறிக் கொள்கிறார்கள். இது சுயநலமான செல்வக் குவிப்பையும் விட்டுக்கொடுக்கும் தன்மையின்மையையும் விளக்குகிறது.

நிலையாமைக் கொள்கைகள் :

இளமை நிலையாமை உடையது, யாக்கை நிலையாமை உடையது, செல்வம் நிலையாமை உடையது என்ற பல்வேறு நிலையாமைக் கருத்துக்களை தம்முள் கொண்டு வாழ்ந்தவர்கள் தமிழர்கள்.

'படுகண் முரசம் காலை இயம்ப
வெடிபடக் கடந்து வேண்டு புலத்து இறுத்த
பணைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்
கரைபொரு திரங்கும் கனையிடு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே உணரசெல
மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே (மதுரைக்காஞ்சி-232 - 237)

உலகத்தைச் சிறப்புற ஆண்டு மறைந்த மன்னர்கள் பலர். 'முடிசார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடி சாம்பலாவர்” என்பது பழமொழி என்ற நிலையை உணர்ந்தே வாழ்ந்தார்கள்.

Tamilmanam

முடிவுரை:

'ஓர் இலட்சிய சமூகம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது" என்றும் 'சனநாயகத்தின் மறுபெயர்தான் சகோதரத்துவம், சுதந்திரம் என்பது சுயேச்சையாக நடமாடும் உரிமை, உயிரையும், உடைமையையும் பாதுகாக்கும் உரிமை அது. எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்" என்றும் டாக்டர் அம்பேத்கர் கூறியுள்ளார். இவ்வாறான நெறிமுறை கடைபிடிக்கும் சமுதாயமாக தமிழ்ச்சமுதாயம் இருந்தது. இன்றைய காலத்திலும் தேவையாகவும் இருக்கிறது.

References

1. http://sangathamizh.com/8thokai/natrinai/natrinai-%E0%AE%A8%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%A3%E0%AF%88172.html
2. https://eluthu.com/
3. http://sangathamizh.com/10paddu/10paddu-perumpanatruppadai-%E0%AE%AA%E0%AF%86%E0%AE%B0%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%A3%E0%AE%BE%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%B1%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%9F%E0%AF%88.html
4. https://www.allresearchjournal.com/archives/?year=2025&vol=11&issue=10&part=A&ArticleId=12915

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

திருவாசகம் ஓர் பன்முகப் பார்வை

Thiruvasagam: A Multifaceted Perspective

முனைவர் ம.அனுராதா[1], முனைவர் செ. சக்திமுருகன்[2], முனைவர் ப.கோமதி[3], முனைவர் முனைவர் கோ. பத்மப்ரியா[4]

[1]இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ஈரோடு-638052, தமிழ்நாடு, இந்தியா.

[2]உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ஈரோடு-638052, தமிழ்நாடு, இந்தியா.

[3]இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ஈரோடு-638052, தமிழ்நாடு, இந்தியா.

[4]இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ஈரோடு-638052, தமிழ்நாடு, இந்தியா.

Dr. M. Anuradha[1], Dr. C. Sakthimurugan[2], Dr. P. Gomathi[3], Dr. G. Padmapriya[4]

[1]Associate Professor in Tamil, Department of Tamil, Nandha Arts and Science College (Autonomous), Erode-638052 Email: anuratha71@gmail.com
[2]Asst. Professor in Tamil, Department of Tamil, Nandha Arts and Science College (Autonomous), Erode-638052 Email: sakthimurugantamil@gmail.com
[3]Associate Professor in Tamil, Department of Tamil, Nandha Arts and Science College (Autonomous), Erode-638052 Email: gomsubbu21@gmail.com
[4]Associate Professor in Tamil, Department of Tamil, Nandha Arts and Science College (Autonomous), Erode-638052 Email: padmapriyakss@gmail.com

Abstract:

In the history of Tamil literature, Thiruvasagam holds a unique place among spiritual texts. Considered one of the four primary Agamas of Saivism, this work was composed by a devotee of Shiva named Manikkavasagar. The text conveys that the ultimate state of the soul is to approach God through love, knowledge, and experience, and attain surrender at His feet. Thiruvasagam stands as a timeless literary work, an expression of profound spiritual experience, and a mature form of devotional literature. This article aims to explore Thiruvasagam in detail from various angles and bring forth its multifaceted nature.

Keywords: Tamil literature, Thiruvasagam

ஆய்வுச் சுருக்கம்:

தமிழ் இலக்கிய வரலாற்றில், ஆன்மீகப் பனுவல்களுள் தனக்கென ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ள இலக்கியப் படைப்பு திருவாசகம். சைவ சமயத்தின் நான்கு முக்கிய ஆகமங்களுள் ஒன்றாகக் கருதப்படும் இந்நூல், மாணிக்கவாசகர் என்னும் சிவபக்தரால் இயற்றப்பட்டது. இறைவனை அன்பாலும், அறிவாலும், அனுபவத்தாலும் அணுகி, அவன் திருவடியில் சரணாகதி அடைவதே ஆன்மாவின் உன்னத நிலை என்பதை இந்நூல் உணர்த்துகிறது. thyme-series, காலத்தால் அழியாத இலக்கியமாகவும், ஆழ்ந்த ஆன்மீக அனுபவத்தின் வெளிப்பாடாகவும், பக்தி இலக்கியத்தின்

Tamilmanam

முதிர்ச்சியான வடிவமாகவும் திருவாசகம் திகழ்கிறது. இக்கட்டுரை, திருவாசகத்தை பல்வேறு கோணங்களில் விரிவாக ஆராய்ந்து, அதன் பன்முகத்தன்மையை வெளிக்கொணர்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அறிமுகம்

சங்க இலக்கியங்கள் உலக இலக்கியங்களின் இமயம். தமிழ்நாட்டில் தோன்றியுள்ள பக்தி இலக்கியங்கள் உலக பக்தி இலக்கியங்களின் இமயமாகத் திகழ்கின்றன.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்

இனிதாவது எங்கும் காணோம்"

என்பார் பாரதியார்.

"உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே"

என்பார் மீனாட்சி சுந்தரனார்.

தமிழ் மொழியானது உயர்தனிச் செம்மொழியாக விளங்குவது. அத்தமிழ்மொழி வளமைமிக்க சொல்லாட்சியுடன் வளர்ச்சியடைந்ததோடு இன்று வரையும் வளம்மிக்க மொழியாகத் திகழ்கின்றது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றோர் தமிழகத்தில் ஊர் ஊராகச் சென்று தமிழைப் பரப்பினர். தமிழ் இசையைப் பரப்பினர். பக்தி இயக்கத்தைப் பரப்பினர். தமிழில் ஞானசம்பந்தர் தமிழுக்குச் சொன்ன அடைகளைப் போன்று யாரும் சொன்னதாகத் தெரியவில்லை.

அருந்தமிழ், ஆராஅருந்தமிழ், இசைமலிதமிழ், இன்தமிழ், இன்புறுந்தமிழ், உருவாகும் ஒண்டமிழ், உரைசெய்தமிழ், எழுதுமொழிதமிழ், கலைமலிதமிழ், குற்றமில்செந்தமிழ், குன்றாதமிழ், சங்கமலிதமிழ், தவமிருந்துதமிழ், ஞானத்தமிழ், திருநெறியதமிழ், புகழ்வண்டமிழ், பூந்தமிழ், மறைவளரும்தமிழ், இன்தமிழ் என்று சொற்களால் அழகுபடுத்தி கருத்தையும், மனதையும் நிறைத்தவர். இச்சொல்லாட்சிகள் படிக்கப் படிக்க இன்பம் ஊட்டுவன. பக்திப் பனுவல்களில் திருமுறைகளைப் போன்று ஊனோடும் உயிரோடும் கலந்த திறம் சொல்லச் சொல்லத் தெவிட்டாதது.

மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள ஆன்மீக உறவை விளக்குவது சமயம். 'சமை"எனும் சொல் 'பக்குவப்படுத்து"என்னும் பொருளைக் குறிக்கும். 'சமை"அடிப்படையாகப் பிறந்த 'சமைதல்"என்னும் சொல் 'அமைதல்", 'ஆயத்தமாதல்", 'பக்குவமடைதல்"பொருளைக் குறிக்கும். சமை என்னும் அடிச்சொல்லில் இருந்து பிறந்தது தான் சமயம். மனிதனைத் தெய்வீகப் பண்புள்ள சான்றோனாகப் பக்குவப்படுத்தும் கலைக்குச் சமயம் என்று பெயர். சமயம் வழி பெயர்கள் பலவாயினும் குறிக்கோள் ஒன்றே.

சமயம் என்பது கல்வியின் ஒருபகுதி அன்று. அது வாழ்க்கையின் அடிப்படையான நெறி. சமயம் என்பது வெறும் ஏட்டு நெறியோ, அறிவு நெறியோ அன்று. அது வாழ்க்கை நெறி. சமயமும் வாழ்க்கையும் இணைந்தே செல்லுதல் வேண்டும். இச்செல் வழியே உன்னத வாழ்க்கைக்கு வழியாய் அமையும். இதனை மெய்ப்பித்துக் காட்டியவர்களே தமிழகத்தில் தோன்றிய சமயப் பெரியோர்கள். அதனாலேயே,

"யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்" (குறள்-346)

என்று குறள் எடுத்து இயம்புகிறது.

உண்மை என்ற சொல்லிற்கு ஆழ்ந்து நோக்குமிடத்து ஒரே உண்மைதான் இருக்கும். அவ்வுண்மை மாறாத உண்மை எங்கும் நிலை பெறுகின்ற பேருண்மை. முக்காலத்திற்கும் பொருந்துகின்ற முழுஉண்மை. அதுவே உலகப் பொது உண்மை. சத்தியம் வெல்லும் என்பது மெய்ஞ்ஞான உண்மை. உலகம் உருண்டை வடிவம் விஞ்ஞான உண்மை. இவ்வுண்மைக்கு மாறாக உலகில் வேறொன்றும் இல்லை. சுருங்கக் கூறுமிடத்து மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் ஒன்றா இருப்பதே உண்மை எனப்படும். இவ்வுண்மையை மெய்ப்பித்து, வென்று வாழ்வாங்கு இன்றும் வாழ்ந்து கொண்டு இருப்பவர்களே நம் மூதாதையர்களும், அடியார் பெருமக்களும், புலவோர் பெருமக்களும், நன்மனம் கொண்ட வேந்தர்களும். இவ்வாறாக இவர்கள் வாழ்ந்துகாட்டிய மெய்ஞ்ஞான நெறி வாழ்வியலே நமக்குப் பனுவல்களாகக் கிடைக்கப் பெற்றுள்ளன. சான்றாக,

"பதியிழந்தனம் பாலனை இழந்தனம், படைத்த
நிதியிழந்தனம், இனிநமக்குளதென நினைக்கும்
கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலேம் என்றார்
மதியிழந்து தன்வாயிழந்தருந்தவன் மறைந்தான்"

அரிச்சந்திரபுராணம்

என்ற இப்பாடல், சொன்ன சொல்லை மறைக்காமல், மறக்காமல், மறுக்காமல் காப்பாற்றிய உண்மை நெறியை மிகத்தெளிவாக இனிது உணர்த்துகின்றது. வள்ளுவமும் இவ்வருங்கருத்தை,

"புறந்தூய்மை நீரால் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்"(குறள்-298)

என்று இயம்புகின்றது. ஆகவே "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" இக்குறளுக்கேற்ப இன்றும் நம்மோடு உறைந்து கொண்டிருப்பவர் மாணிக்கவாசகப் பெருமான். பெருமானின் திருவாசகத்தைப் போற்றுவதே இக்கட்டுரை.

மணிவாசகப்பெருமான்

சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவர். இவர் பாடியது திருவாசகமும் திருக்கோவையாரும் ஆகும். இவர் 9-ம் நூற்றாண்டின் வரகுணபாண்டியன் காலத்தைச் சேர்ந்தவர். அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமை அமைச்சராகப் பணியாற்றினார். திருவாதவூரில் பிறந்தார். அதனால் திருவாதவூரர் என்றும் அழைக்கப்படுகின்றார். பெற்றோர் சம்புபாதசாரியார், சிவஞானவதியார் 'தென்னவன் பிரம்மராயன் என்ற பட்டத்தினைப் பெற்றவர். சிறந்த சிவபக்தரான மாணிக்கவாசகர் 2-ஆம் வரகுணபாண்டியன் காலத்தில் (863-911) வாழ்ந்தவர்.

ஞான நெறியைப் பின்பற்றிய இவர் 32 ஆண்டுகளே வாழ்ந்து ஆனி மகத்தில் சிதம்பரத்தில் முக்தி அடைந்தார்

திருவாசகம்

மாணிக்கவாசகர் பாடிய பத்திச் சுவையும், மனதை உருக்கும் தன்மையையும் கொண்ட திருவாசகப் பாடல்கள் தமிழில் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்து எண்ணப்படுகின்றது.

"சிறைபெறா நீர்போல் சிந்தை வாய்ப்பாயும்

திருப்பெருந்துறை யுறை சிவனே "(கோயில்திருப்பதிகம்)

என்பதாலும்,"இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" (சிவபுராணம்) எனும் அடிகளால் தமிழின் அருட்திறத்தையும் வாதவூரற்க்கும் இறைவனுக்குமான நெருக்கத்தையும் உணரலாம்.

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரான ஜி. யு. போப். மாணிக்கவாசகரைப் பற்றி, 'உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசகரை விடப்புலமை, உழைப்பு, துன்பத்தைப் பொறுத்தல், இடையறா நிலைத்த பக்தி ஆகிய பண்புகளுடன் நம் மனத்தைக் கவருகின்றவர் வேறுயாரும் இல்லை என்று குறிப்பிடுகின்றார்.

திருவாசகம் என்பது

தி-	த்+இ	த்	இ
ரு -	ர்+உ	ர்	உ
வா -	வ்+ஆ	வ்	ஆ
ச-	ச்+அ	ச்	அ
க -	க்+அ	க்	அ
ம் -		ம்	

6 மெய் எழுத்துக்களையும் 5 உயிர் எழுத்துக்களையும் தனக்குள் கொண்டிருக்கும் பிரம்மஞான ரகசியமாகும்.

பிரம்மஞானத்தின் முக்கிய குறிக்கோள் ஒருவரின் உண்மையான சுயத்தை அறிவது. பிரம்மஞான ரகசியம் என்பது ஒருவரின் உள்ளார்ந்த அறிவை வெளிக்கொணர்ந்து வாழ்க்கையில் அமைதியும், ஆனந்தமும் பெறமுடியும் என்பதாகும். அதோடு எல்லாவற்றையும் பற்றிய ஆழமான அறிவு அல்லது விழிப்புணர்வுமாகிய அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு முழுமை.

திருவாசகத்தில் அறிவியல்

இந்த உலகம் பேரண்டம். ஆயிரக்கணக்கான பூமிகளை ஒரு நட்சத்திரத்தில் அடக்கி விடலாம். Thousands and Thousands of earth can be packed in a single star என்பது அறிவியல்.

மிகுதியான நட்சத்திரங்கள் வானத்தில் உள்ளன. அவற்றில் 27 நட்சத்திரங்களை பெயர்கூறி அழைக்கிறோம். இவ்வளவு பெரிய நட்சத்திரங்கள் எவ்வாறு அங்கே நின்று கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் ஒன்றையொன்று பிடித்து இழுத்துக் கொண்டிருக்கின்றன. அதனை, ஐன்ஸ்டீன்

tamilmanam

தொடர்புடைய கொள்கையை(Relativity theory) என்று கூறுவார். இதனை மாணிக்கவாசகர் திருவண்டப் பகுதி என்ற பாடலில் பாடியுள்ளார்.

"அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந்தன்மை வளப் பெருங்காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" (1-4)

அண்டம் என்பது ஒன்றல்ல. பல்வேறு பகுதிகளை அடக்கியது. உண்டை எனும் சொல்லுக்கு உருண்டை, கூட்டம் உள்ளிட்ட பொருள்கள் உண்டு. உருண்டை வடிவமான கூட்டம் எனும் பொருளும் உண்டு. பிறக்கம் எனும் சொல்லுக்கு ஒளி, உயற்சி, குவியல் என்றுபொருள்

பால்வெளி அண்டத்தில் கருத்துகளைப் பற்றிய கோட்பாட்டை குறிக்கும் விதமாக,

"சோதியனே துன்இருளே தோன்றாப்
பெருமையனே" (சிவபுராணம்)

என்ற திருவாசகவரி அமைகிறது. சோதி என்பதனை ஒளிவடிவான இறைவன் எனக் கூறுவதிலிருந்து ஒளி வழிபாடானது. பழந்தமிழர் உடையது என்பதும் தெரியவருகிறது.

'துன்இருள்' என்று குறிப்பிடுவது கருந்துளையை எனலாம். சந்திரன், சூரியன் ஆகியவற்றில் கதிர் நுழைந்து செல்ல முடியா இடத்து இருளை விலக்க அக்னி விளக்கு பயன்படுகிறது. இவற்றினிடத்து இருபகுதி உண்டு. சந்திரன், சூரியன் ஆகியவற்றின் உள்ளே இருண்டபகுதி உள்ளதை விஞ்ஞானம் காட்டிச் செல்கிறது.

விடை தெரியாத பிரபஞ்ச வெளிப்பாடுகள் இன்றுவரை விண்வெளி ஆய்வாகத் தொடர்கின்றன. இத்தேடலை மாணிக்கவாசகர் இறையின் வெளிப்பாடாக சிவபுராணத்தில் சொல்கிறார். இங்கு அறிவியலே ஆன்மீகமாவதைக் காணமுடிகிறது.

நியூட்டனின் ஈர்ப்புவிதி அல்லது உலகளாவிய ஈர்ப்புவிதி என்பது, பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு பொருளும், மற்றொரு பொருளை ஈர்க்கிறது. ஈர்ப்புவிசை தான் புவியீர்ப்பு விசையாகி பூமியின் சுழற்சிக்கு அடிப்படையாகிறது. இக்கோட்பாட்டை,

"ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தைப்
பெருமானே"(சிவபுராணம்) என்ற திருவாசக வரி வெளிப்படுத்துகின்றன.

காந்தம் எந்த வித புறச்செயலுமின்றி இரும்பை இழுக்கின்றது. அந்த இரும்புக்குத் தன்னைத் தடுத்து நிறுத்திக் கொள்ளும் தன்மை இல்லை. காந்தத்தின் வலிமைக்கேற்ப இரும்பு மிக விரைவாகச் சென்று ஒட்டிக் கொள்கின்றன.

இதனையே பதி, பசு கோட்பாடாக விவரிக்கிறது. இறைவனோடு உயிர் சென்று அடைவதே வாழ்வின் நோக்கமாகும். காந்தவியல் கோட்பாட்டில் காந்தம் இரும்பினை ஈரப்பது போல இறைவன் அடியார்களை ஈர்க்கின்றான். ஈர்க்கும் தன்மையே சின்முத்திரையாகக் காட்டப்படுகிறது.

சின்முத்திரை என்பது ஒருயோக முத்திரையாகும். இதில் வலது கையின் சுட்டு விரலால் பெருவிரலின் நுனியைத் தொட்டு, மற்ற மூன்று விரல்களையும் நேராக நீட்டிப் பிடிதிருப்பார்கள். இதில்,

- ❖ பெருவிரல்: இறைவனைக் குறிக்கிறது.
- ❖ சுட்டுவிரல்: ஆன்மாவைக் குறிக்கிறது.
- ❖ மற்ற மூன்று விரல்கள்: ஆணவம், கன்மம் மாயை ஆகிய மூன்று மலங்களைக் குறிக்கின்றன.

இந்த மூன்று விரல்களையும் நீட்டிப் பிடித்திருப்பதன் மூலம், ஆன்மா இறைவனுடன் இணையும் போது மூன்று மலங்களும் நீக்கப்பட்டு, ஞானம் பெறப்படும் என்பதைக் குறிக்கிறது.

Fig1: பிரபஞ்சத்தின் மத்தியில் உள்ள பிரகாசமான ஒளி (சோதி)

இந்தக் காட்சி மாணிக்கவாசகரின் திருவண்டப் பகுதியின் அறிவியலை விளக்குகிறது. பிரபஞ்சத்தின் மத்தியில் உள்ள பிரகாசமான ஒளி (சோதி) இறைவனையும், சுற்றித் தெரியும் கருந்துளைகள் (துன்இருள்) அறியப்படாத அண்ட ரகசியங்களையும் காட்டுகிறது. அண்டங்கள் ஈர்ப்பு விசையால் கட்டுண்டு நிற்கின்றன என்ற தத்துவத்தை, திறந்திருக்கும் திருவாசகப் பாடல் வரிகளுடன் இந்தப் பேரண்டத்தின் பிரம்மாண்டம் சித்தரிக்கப்பட்டுள்ளது.

பரிணாமக் கோட்பாடும் மாணிக்கவாசகரும்

பரிணாமக் கோட்பாடு என்பது உயிரினங்கள், தலை முறையாக எப்படி மாறி வருகின்றன என்பதை விளக்கும் ஒரு அறிவியல் கோட்பாடு. சார்லஸ் டார்வின் மற்றும் ஆல்ஃபிரட்ரஸ்ஸல் வாலஸ் ஆகியோரால் முன் மொழியப்பட்ட இந்தக் கோட்பாடு, உயிரினங்கள் பொதுவான மூதாதையரிடமிருந்து வந்தவை என்றும், இயற்கைத் தேர்வு மூலம் வேறுபட்டுள்ளன என்றும் கூறுகிறது. டார்வின் பரிணாமக் கொள்கை முதன்முதலில் 1859 ஆம் ஆண்டு “ஆன்தி ஆர்ஜின் ஆப் ஸ்பீசீஸ்" என்ற புத்தகத்தில் வெளியிடப்பட்டது. அதாவது உயிரினங்களின் தோற்றம் என்ற புத்தகமாக வெளியிட்டது.

இக் கோட்பாட்டிற்கு வெகு முன்னதாகவே மாணிக்கவாசகப் பெருமான் தமது சிவபுராணத்தில்

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்"

என்ற வரிகளில் பரிணாமக் கோட்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளார்.

Fig2: பரிணாமக் கோட்பாட்டையும் அண்டத்தின் எல்லை

இந்தக் காட்சி மாணிக்கவாசகரின் சிவபுராணத்தில் உள்ள பரிணாமக் கோட்பாட்டையும் அண்டத்தின் எல்லையற்ற தன்மையையும் விளக்குகிறது. புல், புழுவில் தொடங்கி விலங்குகள், பறவைகள், பேய்கள், மனிதர்கள், தேவர்கள் என உயிரினங்களின் தொடர்ச்சியான பிறவிகளை இது காட்டுகிறது. பிரபஞ்சத்தின் மையத்தில் இறைவனை (சிவனை) வணங்கும் முனிவர்கள் மற்றும் ஆன்மீக நிலைகளையும், அண்டவெளியின் ஆழத்தையும் இது ஒருங்கே சித்தரிக்கிறது.

அண்டவெளி

அண்டத்திலுள்ள அனைத்துப் பொருட்களும் 'நட்சத்திரங்களும் ,கிரகங்கள், விண்மீன்திரள்கள் போன்றவை பருப்பொருளால் ஆனவை. அண்டத்தில் காணப்படும் பருப்பொருள்களில் ஒரு சிறிய பகுதி மட்டுமே நாம் காணக்கூடியது. மீதமுள்ளவை இருண்ட பருப்பொருள் மற்றும் இருண்ட ஆற்றல் என்று நம்பப்படுகிறது. அவை இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ளப் படவில்லை. இதனையே,

'தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுனர்வாய்' என்கிறது சிவபுராணம்

தோற்றச் சுடரொளியாய் என்பது, 'தோன்றும் ஒளியாக'அல்லது 'தோற்றம் அளிக்கும் ஒளியாக' என்பதாகும் இதன் பொருள். 'சுடரொளி'என்பது ஒளி அல்லது பிரகாசம் என்றும் பொருள்படும். ஆகவே மணிவாசகர் இறைவனை பேராற்றல் மிக்க தோற்றத்தின் ஒளியாகப் போற்றுகிறார்.

திருவாசகத்தில் கருவியல்

பக்திப் பனுவலாகவும் பைந்தமிழ் நூலாகவும் இலங்கும் திருவாசகம் ,அறவியல் கருத்துக்களோடு அறிவியல் செய்திகளையும் உள்ளடக்கிய நூலாகும்.

திருவாசகத்தில் நான்காவது பதிகம் போற்றி திருஅகவல் .225 அடிகளில், நிலைமண்டில ஆசிரியப்பாவாலான இப்பதிகம் , இறைவனின் முதன்மையைப் போற்றுகிறது. அப்பதிகத்தின் முதற்பகுதி உயிர்களின் உற்பத்திபற்றி பேசுகிறது. அப்பகுதி இன்றைய மருத்துவத்தின் கருவியல் (Embriology) என்ற அறிவியல் கருத்துக்களை ஒத்திருப்பது வியப்பிற்குரியது.

"மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிருதிங்களிற் பேரருள் பிழைத்தும்
ஆறுதிங்களில் ஊரலர் பிழைத்தும்
ஏழுதிங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தங்க தசமதி தாலொடு தான்படும்
துக்கசாகரத் துயரிடைப் பிழைத்தும்"(அடி:13-25)

என்ற வரிகளில் கரு உருவாவதும், தப்பிப் பிழைப்பதும் உயிரின் வினைக் கேற்ப நிகழும் என்பது சைவ சமயம் கூறும் தத்துவம். பெண்ணின் கருப்பையில் பெல்லோபியன் குழாய்ப் பாதையின் முதிர் அண்டம் விந்தணுவுடன் இணைந்து கருமுட்டை உருவாகிறது. இதுவே கருவுறுதல் எனப்படுகிறது. இக்கரு சிறிது சிறிதாக வளர்ந்து நிரம்பும் பருவுடம்புடன் பிறக்கும். இவ்வாறு வளர்ந்து பிறத்தற்கு இடையே உள்ள அழிவு நிலைகள் பலவுண்டு. மக்களாகப் பிறக்கும் உயிர்களும் அத்துணை அழிவுகட்கும் தப்பிப் பிழைத்தல் வேண்டும். 'ஈனமில்கிருமி' எனக் குன்றுதல் இல்லாத பல அழிவுகளின் திறத்தைக் குறிப்பிடுகிறார் மணிவாசகர்.

கருவுற்ற முட்டை அடையும் வளர்ச்சிகளை வளர் கருவின் நிலைகளை "ஓருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்", 'இருமதி விளைவின் ஒருமையின் பிழைத்தும்'என்ற வரிகள் சுட்டுகின்றன. தான்றிக்காயின் அளவில் 4 மி.மீ. அளவில் சிறிதாக இருக்கும் கருப்பையின் திசுச்சுவர்கள் ஆழமாகப் பதிந்து வளரத் தொடங்கும். அந்நிலையில் தாயின் அறியாமையால் அழிதல் தானே அழிவுறுதல் என

இருநிலைகளில் கருச்சிதைவு ஏற்படலாம். ஆகவேதான் மணிவாசகர் 'இருமையிற்பிழைத்தும்"என்கிறார் போலும்.

இரண்டாம் மாதத்தில் கருவானது சுமார் முக்கால் அங்குலம் நீளமுள்ளதாகவும், மூலக்கருமுட்டையை விடச்சுமார் 40000 மடங்கு பெரியதாக அமையும். இந்நிலையில் உயிர் வளியானது கருவிற்குச் செல்லும் விரல்கள், கண், செவி, நாசி, வாய் முதலிய உறுப்புகளின் ஆரம்பகால வளர்ச்சிகள் வெளிக்கிளம்புகின்றன. இரத்த ஓட்டமும் முழுமையடைகிறது என்ற கருவியல் நூல் செய்திகளை உள்ளடக்கி, இருமாதங்களில் வளர்ச்சியை உள்ளடக்கி, 'இருமை, ஒருமைகளின்று பிழைத்து"எனக் குறிப்பாகச் சுட்டியுள்ளார்.

மூன்றாம் மாதத்தில் கருவுற்ற மங்கையர் புளிப்புப் பண்டம், மண் முதலியவற்றை உண்ணும் மசக்கை ஏற்படும். இச்செயலை "வயவுறுமகளிர் வேட்டுண்ணின் அல்லது பகைவருண்ணா வருமன் விடையே" (புறம்-20) என்று புறநானூறு கூறுகிறது. கருவைப் பற்றிய கவலையின்றி மண் முதலியவற்றை உண்ணும் மசக்கையிலிருந்து கரு அழியாமல் தப்ப வேண்டும்.

இரண்டாம் மாதம் வெளிக்கிளம்பிய கண்ணின் ஆரம்பகால நிலைகள் ஈரிரு திங்களான நான்காம் மாதத்தில் நன்கு திறக்கும் என்பது கருவியில் செய்தி. இப்பார்வையில் வளர்ச்சி பற்றிய எண்ணத்தை உள்ளடக்கி மாணிக்கவாசகர், 'பேரிருள் பிழைத்தும்" எனக் கட்புலன் வளர்ச்சியைக் குறித்த ஒப்புமை எண்ணி வியக்கத்தக்கது.

தாயின் வயிற்றில் இருக்கும் கருக்குழந்தை 5-ம் மாதத்தில் சாவில் (முஞ்சுதல்) இருந்து பிழைத்தல் வேண்டும். மசக்கையால் குறைவுற்ற கரு 5-ம் மாதத்தில் வளர்ச்சியின்றி புறக்காரணங்களால் அழியும்நிலை ஏற்படலாம் என்பது அறிவியல். இறையருளால்,

'முஞ்சுதல் பிழைக்கும்' என்பது இறையியல்.

6,7ம் மாதங்களில் கரு வளர்ச்சி நிகழும் தடைகளைக் சுட்டுமாறு வளர்ச்சியைக் காட்டுவார் மாணிக்கவாசகர். அதாவது,

'தாழ்புவி'என்ற சொல் திருவாசகத்தில் 7-ம் மாதத்தில் கருப்பை தாங்க முடியாமல் பூமியில் விழும் ஆபத்திலிருந்து தப்புவது என்பதைக் குறிக்கிறது.

உயிர்களின் கருப்பையினுள் தோன்றும் சினை முட்டையின் தோற்றத்தை, 'தாயினது செந்நீரில் குமிழ்'போன்ற பொருள் உண்டு. அப்பொருள் பூவைப்போல அரும்பி, மலர்ந்து கூம்பும் என்கிறது கருவியல். அந்த அறிவியலை வெளிப்படுத்துமாறு 'அலர்' (மலரின்ஒருநிலை) எனத் திருவாசகம் சுட்டுவது எவ்வளவு பொருத்தமானது.

7 வது மாதத்தில் கருவானது நன்கு வளர்ச்சி அடைய வேண்டும். 'சிறப்பில் சிதடும், உறுப்பில் பிண்டமும், கூனும், குறளும், ஊமமும், செவிடும், மாவும் மருளும்", (புறம்-28) இன்றி குழந்தை பிறத்தல் வேண்டும். ஆகவே தான் 6ம் மாதம் முடிந்து ஏழாம் மாதத்தில் சீமந்தம், வளைகாப்பு முதலிய சடங்குகளைச் செய்கின்றனர்.

கருவின் இக்காலகட்டத்தில் (23-வதுவாரம்) கரு சூழ்ப்பை ஒரு திரை போன்று கருவினை மூடியிருக்கும். இத்திரைக் கருவினைக் குளிர், புவியீர்ப்பு, கேடு விளைவிக்கும் நுண்ணுயிர்கள் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கும். 'தாழ்புவி பிழைக்கும்'என்ற சொற்றொடரை முன் பின்னாக 'புவிதாழ்' எனக் கொண்டு நிலத்தில் விழுவதிலிருந்து தப்பவேண்டும் என்ற பொருளைப் பெறலாம்.

இவ்வாறு மணிவாசகப்பெருமான் ஊரலர், தாழ்புவி முதலிய சொற்களின் வழி இறையருளால் பிழைக்க வேண்டும் என அறிவியல் கூறுகளைக் கொண்ட இறையியலைச் சுட்டுகின்றார்.

நன்கு வளர்ச்சி பெற்ற கரு, கருப்பையோ அசைதல் 8ம் மாதத்தில் நடைபெறும் அந்த உடல் துன்பத்திலிருந்து குழந்தை பிழைத்தலை "எட்டுத்திங்களில் கட்டமும் பிழைத்தும்"என்பது மணிவாசகம்.

9-ம் மாதத்தில் குழந்தை வெளிவரச் செய்யும் முயற்சிகளில் இருந்து பிழைத்தல் வேண்டுமென்பதை 'வருதருதுன்பம்'என்கிறார்.

அதாவது, 8,9-ம் மாதங்களில் ஏற்படும் குறை பிரசவச் சுழ்நிலைகளிலிருந்து விடுபட்டு வளர்தலைக் 'கட்டமும் வருதரு துன்பமும் பிழைத்து'எனச் சுட்டுவது போற்றுதற்குரியது.

அனைத்திலும் சிறந்த மக்கட்பேறு 10ம் மாதத்தில் நிகழும். இதனை 'தக்கதசமதி தாயொடு தான்படும் துக்க சாகரத்துயரிடைப் பிழைத்தல்'வேண்டும் என்கிறார். நாளமில்லாச்சுரப்பிகளின் செயற்பாட்டால் இக்கருப்பை சீராகச் சுருங்கத் தொடங்கும். அதனால் குழந்தை வெளித் தள்ளப்படும். இந்த கருப்பை சுருக்கத்தால் தாய்க்கு பிரசவவலி ஏற்படுகிறது என்பது மருத்துவநூல் தரும் செய்தி. வெளிவரும் குழந்தை இடநெருக்கடியால் துன்புறலாம். இத்தகு துன்பங்களிலிருந்து இறையருளால் தாயும்சேயும் பிழைத்தல் வேண்டும் என இறைமையைப் போற்றும் திருவாசகத் தொடர்கள், பழந்தமிழரின் மருத்துவ அறிவினையும் போற்றி நிற்கின்றது.



Fig3: கருவியல் பற்றிய விளக்க

Tamilmanam

இந்தக் காட்சி திருவாசகத்தில் கூறப்பட்டுள்ள கருவியல் பற்றிய விளக்கத்தை இரண்டு விதங்களில் சித்தரிக்கிறது. இடதுபுறம், ஒரு கோயிலின் தூண்களில் கருவின் பல்வேறு வளர்ச்சி நிலைகள் குறியீட்டு ரீதியாகக் காட்டப்பட்டுள்ளன. இது மாதா கர்ப்பத்தில் கருவானது கடக்கும் கடினமான பாதைகளையும், ஒவ்வொரு மாதமும் எதிர்கொள்ளும் இடர்களையும் சைவ சமயத் தத்துவத்துடன் இணைத்துக் காட்டுகிறது.

வலதுபுறம், ஒரு நவீன கருவியல் விளக்கப்படம் உள்ளது. இது கருமுட்டை உருவாக்கம் முதல் 10 மாத கர்ப்ப காலம் வரையிலான கருவின் உடற்கூறியல் வளர்ச்சியின் முக்கிய மைல்கற்களை, மாதவாரியான அறிவியல் விவரங்களுடன் தெளிவாக எடுத்துரைக்கிறது. பண்டைய இலக்கிய ஞானமும் நவீன அறிவியலும் ஒன்றிணைந்து கருவின் பயணத்தை வியப்புடன் நோக்குகின்றன.

திருவாசகத்தில் திருக்குறளின் தாக்கம்:

மனிதனால் மனிதனுக்குச் சொல்லப்பட்டது திருக்குறள். இந்நூல் மனிதர்களின் அக,புற வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைப் பண்புகளை விளக்குகிறது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற வாழ்க்கையின் உறுதிப்பொருள்கள் நான்கனுள் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையும் விரித்துரைப்பது. எனவே முப்பால் எனப்பெயர் பெற்றது. இத்தகைய சிறப்புடைய திருக்குறளின் தாக்கம் திருவாசகத்தில் பல இடங்களில் காணமுடிகிறது.

சிறுபொழுதும் என்நெஞ்சில் நின்றும் என்றும் அகலாதவனுமாகிய இறைவன் திருவடி வாழ்க என்று மணிவாசகப்பெருமான் இறைவனின் திருவடியை

"இமைப்பொழும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" (சிவபுராணம்) என்று குறிப்பிட்டிருப்பது,

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்.
நிலமிசை நீடுவாழ்வார்" (கடவுள்வாழ்த்து.3)

என்ற திருக்குறளை நினைவூட்டுகிறது. இறைவன் புகழாகிய சிவபுராணத்தை மனதார நினைத்து, துதித்தால் எவ்வினையாக இருப்பினும் அவை அனைத்தும் விலகும் என்பதனை,

"முந்தை வினை முழுதும் மோய உரைப்பன் யான்"

(சிவபுராணம்)

என்று மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார். இக் கருத்தினை,

"இருள்சேர் இருவினையுஞ்சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (கடவுள்வாழ்த்து-5) என்று

திருக்குறள் கூறுகிறது.

பற்று அறுத்தவன் பற்றினைத் திருக்குறள்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு"(குறள்-350) என்று குறள் வலியுறுத்துவது போல், மணிவாசகரும் இறைவனின் திருவடிக்கமலங்களைப் பற்றுபவர் வியனுலகம் அடைவர் என்பதனை,

"மின்னே ஏனைய பூங்கழல்கள்

அடைந்தார் கடந்தார் வியனுலகம்" (திருவாசகம்ஆனந்தமாலை)

என்று திருவள்ளுவர் பற்று என்று கூறியதனை மணிவாசகர் வியனுலகம் என்கிறார்.

திருவருளோடு கூடி இருப்பவர்களுக்கு மீண்டும் பிறவாவரத்தினை அருளுபவன் சிவபெருமான் என்பதனை

"மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்"(கீர்த்தித்திருஅகவல்) எனவும்,
'மீட்டிங்கு வந்துவினைப் பிறவி சாராமே" (சிவபுராணம்)

எனவும் மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார்.

இக்கருத்தினை குறளானது,

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்பிடுவர்
மற்றீண்டு வாரா நெறி"(குறள்-6)

எனக் கூறுவது மாணிக்கவாசகரின் கருத்தோடு ஒத்திருக்கிறது. ஆகவே பிறவாமை நெறியானது நம் மக்களிடையே பன்னெடுங்காலமாக இருந்து வருவதனை அறிய முடிகிறது.

வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் வகையில் பலரும் குறளைக் கற்று பிறவியைப்பயன் உடையதாக்கினர். அதனால் பிற்கால இலக்கியங்களிலும், காப்பியங்களிலும், சமய நூல்களிலும் திருக்குறளின் தாக்கம் அதிகம் உள்ளது.

நிறைவாக

திருவாசகமானது படிக்கப் படிக்கப் பேரின்பம் தருவது. மந்திர ஆற்றல் நிரம்பிய வாக்காக மக்களால் வணங்கப்பட்டு, நோய் தீர்க்கவும், நல்வாழ்வு பெறவும், கோள் இடர்களையவும் இன்றளவும் மன மொழி மெய்களால் அடியார் பெருமக்களால் வணங்கப்பட்டு வருகின்றது. திருவாசகம் எனும் பேரின்பத்தேன் அமுதம்.

பூவானது மொட்டு விடும் போதே அந்த மொட்டுக்குள்ளேயே எல்லாப் பண்புகளும் ஒருசேர அமைந்திருக்கும். வண்ணம், இதழ்க்கூறு, மணம் எல்லாம் இருக்கும். அதாவது ஒரு அணுவுக்குள்ளேயே உருவம் முழுமையும் இருக்கிறது. அதைப்போல மணிவாசகப்பெருமானின் திருவாசகத்திற்குள் கரு முதல் திரு வரை அனைத்துமான வாழ்வியல் மெய்ம்மைகள் அடங்கியிருக்கின்றன.

மின்சார ஆற்றல் நிரம்பிய மின்கலனின் சக்தி எவ்விதமோ, அதைப்போல ஓர் இறைமாண்பு கொண்டிலங்குகிறது. திருவாசகம் படிப்போரை காந்த போல் ஈர்க்கும் வல்லமை கொண்டது.

"தேரிய மடந்தையர் வாரம் இசைப்ப"என்று சிலப்பதிகாரத்தில் குறிக்கப் பெறுகிறதைப் போல இந்த வாரப் பாடல்கள் அதாவது திருவாசகப் பாடல்கள் தெய்வத்தோடு உறவாடித் தெய்வத்துக்கும் மனிதனுக்கும் இடையே ஆன்மபாலம் அமைகின்றன.

வாரம் என்பது வழிபாட்டால் கிடைக்கக்கூடிய பேரின்பமாகும்.

தெய்வ அருள் பொருந்திய இம்மந்திரப் பாடல்கள் எண்ணியதை நிறைவேற்றும் தன்மை கொண்டவை.

அன்பே,சமய வாழ்க்கையின் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. உலகமானது ஒரு பகுதி இன்பமாகவும் ஒரு பகுதி துன்பமாகவும் கலந்து நிற்கின்றன.

இத்தகைய உலகியல் துன்பத்திலிருந்து விடுபட மனதும் உடலும் செம்மைப்படல் வேண்டும். மனம் செம்மையுறும் போது அனுபூதி நிலை எய்துகிறது. அப்பொழுது தான் வாழ்வும் முழுமை பெறுகிறது.

அகஉலகின் கதவைத் திறத்தலே பயிற்சிகளிலெல்லாம் மிகப் பெரிய பயிற்சி, அதாவது உட்சோதியைக் கண்டு தெளிவதே. இதுவே மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்வதற்குரிய அமரநெறியாகும்.

திருவாசகமானது சீவனுக்குள்ளே சிவமணம் பூக்கச்செய்ய வழிகாட்டுவன. கையில் விளக்கு வைத்துக் கொண்டு வழி தெரியாமல் கடலில் விழக்கூடாது என்று நெறிப்படுத்துவன. மேலும்,

குறியீட்டு மொழியில் கூறப்பட்டிருக்கும் பல்வேறு ஆன்ம ரகசியங்களைச் சொல்வன. பிறப்பின் நோக்கமே மேன்மையடைதலும் பிறவாமுக்தியடைதலுமே. அம்முக்தி நெறியினை மணிவாசகர் வாழ்ந்து மெஞ்ஞானத்தைப் பனுவலுகளாக இம்மனித குலத்திற்கு தந்துவிட்டுச் சென்றிருக்கின்றார்.

'நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லோருக்கும் பெய்யும் மழை"

என்பது அவ்வையின் மூதுரை. அதேபோல,

வணக்கத்துக்குரிய ஒருவன் இருக்கிறான் எனில் அவனைப் பின்பற்ற வேண்டும் என்பதற்கேற்ப ஞானக்கவிஞரின், ஞானக்கல்விக்காக இயற்றித் தந்த கவின் நன்கொடை திருவாசகம்.

ஞானச்சுடர் வீசுகின்ற திருவாசகத்தினை வாசித்து அனைவரும் உய்வு அடைவோமாக.

பார்வை நூல்கள்

1. திருக்குறள் ,பரிமேலழகர்உரை, சாரதாபதிப்பகம்.
2. திருவாசகம்(பன்னிருதிருமுறைமுழுவதும்), மணிவாசகர்பதிப்பகம்
3. புறநானூறு, வர்த்தமானன்பதிப்பகம்
4. தினமணி https://www.dinamani.com -5dec 2015

References

1. Thiruvalluvar. (n.d.). *Thirukkural* (Parimelazhagar Urai). Saradha Pathippagam.
2. Manikkavasagar. (n.d.). *Thiruvasagam*. Manivasagar Pathippagam. (Published as part of the complete Panniru Thirumurai collection).
3. *Purananooru*. (n.d.). Varthamanan Pathippagam.
4. Dinamani. (2015, December 5). *Dinamani Online Newspaper*. Retrieved from https://www.dinamani.com

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

தமிழ் முஸ்லிம் நாவல்களில் கீரனூர் ஜாகிர்ராஜாவின் படைப்புகள் - ஓர் ஆய்வு

"Works of Keeranur Jagirraja in Tamil Muslim Novels - A Study"

முனைவர். ஜா. கிருஷ்ணகுமாரி,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், வேல்டெக்
மல்டிடெக் முனைவர் ரங்கராஜன் முனைவர் சகுந்தலா தொழில்நுட்பக்
கல்லூரி, ஆவடி, சென்னை – 600062.
Email: krishnakumarj@veltechmultitech.org, ORCiD: https://orcid.org/0009-0005- 2685-9678

Dr. J. Krishnakumari,
Assistant Professor, Department of Tamil, Veltech Multitech Dr. Rangarajan Dr. Sakunthala Engineering College, Avadi, Chennai – 600062.

Abstract:
The tapestry of Tamil literature, rich with its diverse voices and perspectives, often finds itself grappling with the complex portrayal of its various communities. Among the many authors who have contributed to this nuanced understanding, Keeranur Jagirdar stands out for his potent and introspective depictions of the Muslim community. His works are not mere narratives; they are windows into the soul of a community often relegated to the periphery, offering a compelling exploration of identity, socio-economic realities, and the intricate dance between tradition and modernity. Jagirdar's strength lies in his deliberate and artful use of language. He eschews superficial stereotypes, instead weaving a linguistic fabric that mirrors the lived experiences of his characters. The vernacular, infused with the rhythms and nuances of Muslim colloquialisms, grants an authenticity that immediately immerses the reader in their world. This linguistic choice is not an embellishment but a fundamental tool that shapes the very form of his narratives. His stories often adopt a conversational tone, allowing for a more intimate and relatable portrayal of his characters' thoughts, struggles, and aspirations. This narrative style, coupled with a deeply empathetic authorial stance, allows for the unveiling of social-economic issues in a way that bypasses didacticism. Poverty, the precariousness of livelihood, the impact of historical injustices, and the quiet dignity in the face of adversity are not presented as abstract problems but as lived realities woven into the fabric of his characters' daily lives. The social-economic underpinnings of the Muslim community are thus brought to the forefront through subtle yet powerful storytelling. Jagirdar masterfully illustrates how economic disparities, often exacerbated by socio-political marginalization, shape individual choices and collective destinies. His characters often navigate a landscape where their economic standing intersects with their religious and cultural identity, leading to unique challenges and triumphs. The impact of Jagirdar's writings on broader social, political, and identity-based discussions is undeniable. By offering an insider's perspective, he challenges monolithic perceptions and encourages a more nuanced understanding of the Muslim experience in Tamil Nadu. His works have served to foster critical engagement with issues of minority rights, religious pluralism, and the construction of identity in a post-colonial, diverse society. They prompt readers to question pre-conceived notions and engage in a dialogue about the complexities of belonging and recognition. In essence, Keeranur Jagirdar's oeuvre serves as a crucial primary source for understanding the internal

Keywords: Muslim Novels, Tamil Lierature, Keeranur Jagirraja

Tamilmanam

ஆய்வுச் சுருக்கம்:

கீரனூர் ஜாகீர்ராஜாவின் இலக்கியத்தில் முஸ்லிம் சமூகப் பற்றிய உருவங்கள் (representations) யார் மற்றும் அவை எந்த வழியில் வடிவெடுத்துள்ளன என்பதை வலியுறுத்துதல். மொழி, கதைவடிவம் மற்றும் எழுத்து நிலைப்பாட்டின் மூலமாக சமூக-அடிப்படை பிரச்சினைகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை ஆராய்தல். படைப்புகள் சமூக, அரசியல் மற்றும் சாதிகார (identity) விவாதங்களில் ஏற்படுத்திய தாக்கத்தை மதிப்பீடு செய்தல். கீரனூர் ஜாகீர்ராஜாவின் (அல்லது அவரைப் போன்ற) எழுத்துக்கள் தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம் சமூகத்தின் உள்நோக்கங்களை, அடையாளப் பிரச்சினைகளையும், சமூகவியல் மற்றும் பண்பாடுச் சிக்கல்களையும் வெளிப்படுத்தும் முக்கிய மூலாதாரமாக கருதப்பட வேண்டும். இந்த ஆய்வு நோக்கம் — அந்தப் படைப்புகளின் மொழி, குணமூலம், பாத்திரக் குறிப்பிடை, மத-பண்பாட்டு விவாதங்கள் மற்றும் வாசகர்திருவியல் (reception) ஆகியவற்றை ஆழமாகப் பகுப்பாய்வு செய்வது.

திறவுச்சொற்கள்: தமிழ் முஸ்லிம் நாவல், கீரனூர் ஜாகீர்ராஜா.

முன்னுரை;

முந்நூறு ஆண்டுகால தமிழ் இலக்கிய வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்ட தமிழ் முஸ்லிம் நாவல் பரப்பில் ஏராளமான தமிழ் இஸ்லாமிய நாவலாசிரியர்கள் தனது மிகுதியான பங்களிப்பைச் செய்துள்ளனர். தமிழகம் மர்றும் இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் நாவலாசிரியர்கள் சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் உருவாகி தமிழ் இஸ்லாமிய சமூகப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு நாவல்களைப் படைத்துள்ளனர். அவ்வாறு படைக்கப்பட்டுள்ள நாவல்களின் பொருண்மையும் கருப்பொருளும் முஸ்லிம் சமூகத்தை அறிந்து கொள்வதற்கும் ஆய்வு மேற்கொள்வதற்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளன. தற்காலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் முஸ்லிம் நாவலாசிரியர்கள் தங்கள் படைப்புகளை நாவல்களாக வெளியிட்டு வரும் சூழலில் கீரனூர் ஜாகீர்ராஜா என்னும் நாவலாசிரியரின் நாவல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

தற்காலத்தில் தமிழ் முஸ்லிம்களின் வாழ்வியலில் பல்வேறு மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. முஸ்லிம் சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஏற்ப முஸ்லிம் படைப்பாளர்களின் கதையாடல்களும் எழுதுப் பொருள்களும் மாற்றம் பெற்றுள்ளன. கீரனூர் ஜாகிர்ராஜா ஒரு சிறந்த படைப்பிலக்கியவாதி. இவரது படைப்புகள் விளிம்புநிலை சமூகத்தவருக்கும் இளம் தலைமுறையினருக்கும் எளிதில் புரியும் வகையிலும், தம்மைப் போன்று பிறரும் பல நூல்களை எழுத வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளன. இவரது நாவல்கள் சமூகத்தில் நிகழும் சிக்கல்களை அடையாளம் காட்டுவதுடன் மக்களின் வாழ்வாதாரத்தைச் சித்தரித்தும் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கை முறைகளை விளக்கியும் வெளிவந்திருப்பதைக் காணமுடிகிறது.

பிறப்பு:

இவர் பழனி மாவட்டத்தில் கீரனூர் என்னும் ஊரில் சதக்கத்துல்லா, மௌரின்னிஸா ஆகியோருக்கு மகனாக 1968 – ஆம் பிறந்தார். இவர் கீரனூரில் பிறந்ததால் தமக்குரிய அடையாளமாகத் தம் பெயருடன் தம் ஊர் பெயரையும் இணைத்துக் கீரனூர் ஜாகீர்ராஜா என்ற பெயரில் எழுதி வருகிறார்.

படைப்புகள்:

படைப்பாளி என்பவன் சமுதாய நிகழ்வுகளை மையமாகக் கொண்டு கவிதையாகவோ, சிறுகதையாகவோ, நாவலாகவோ, கட்டுரையாகவோ, வடிப்பவை ஆகும். அதற்கேற்ப கீரனூர் ஜாகீர்ராஜா பலவகையான சிறுகதைகள், தொகுப்பு நூல்கள், குழந்தை இலக்கியங்கள், நாவல்கள் முதலியவற்றை எழுதி தமிழ் உலகிற்குத் தந்துள்ளார்.

சிறுகதைகள்:

சிறுகதைகள் என்பது வாழ்க்கையில் நிகழும் ஒரு நிகழ்ச்சியை கருவாகக் கொண்டு பின்பற்றப்படுவதாகும். அளவில் சிறியதாக இருப்பதால் சிறுகதை என்னும் பெயரினை பெற்றது. கதை சொல்வதும் கேட்பதும் காலம்காலமாக அனைத்து மக்களாலும் சொல்லப்பட்டு வருகின்றன. ஜாகீர்ராஜாவின் சிறுகதைகளாவன,

- செம்பருத்தி பூத்தவீடு
- பெருநகரக்குறிப்புகள்
- தேய்பிறை
- இரவுகளின் கதைகள் முதலியவை ஆகும்.

தொகுப்பு நூல்கள்:

பலதரப்பட்ட ஆதாரங்களை ஒரு சேர அமைத்து வெளியிடுவதே தொகுப்பு நூல்கள் என்கிறோம். இவரது தொகுப்பு நூற்களில்,

- தஞ்சைப் ப்ரகா~; படைப்புலகம்
- காஃபீர்களின் கதைகள்
- அழியாத கோலங்கள்
- 21-ஆம் நூற்றாண்டின் கதை சொல்லிகள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

குழந்தை இலக்கியங்கள்:

ஜாகீர்ராஜா சிறுகதைகள், தொகுப்பு நூல்கள் மட்டுமின்றி குழந்தை இலக்கியங்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். அவை,

- சேவலும் காகமும்
- கதை சொல்லும் வேதாளம்
- நித்யாவும் ஜிம்மியும் முதலியனவாகும்.

நாவல்கள்:

ஜாகீர்ராஜாவின் நாவல்களில் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கை நிலைகள் பெரிதும் வெளிப்பட்டிருக்கின்றன. பொருளாதாரச் சிக்கல்களையும் ஏமாற்றம் போன்ற அக நிலை வெளிப்பாடுகளையும் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் பிற்படுத்தப்பட்ட தலித்துகள் குறித்தும் அதிகம் பேசியிருப்பதைக் காணமுடிகிறது. இவரது ஆறு நாவல்களான,

- மீன்காரத் தெரு
- கருத்த லெப்பை
- துருக்கித்தொப்பி
- வடக்கேமுறி அலிமா
- மீன்குகை வாசிகள்
- ஜின்னாவின் டைரி முதலியவற்றில் என்ன கூறியிருக்கிறார் என்பதைச் சுருக்கமாக பார்க்கலாம்.

மீன்காரத் தெரு:

இந்நாவல் கீரனூர் ஜாகீர்ராஜாவால் எழுதப்பட்ட முதல் நாவலாகும். இது முழுக்கமுழுக்க தலித் விளிம்புநிலை முஸ்லிம் மக்களின் வாழ்க்கை முறையினை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டது. இதில் இளம் பெண்களைத் தரகர் மூலமாக முதலாளி வீட்டிற்கு அடிமையாகக்கொண்டு செல்வதும், பெண்களுக்குப் பாதுகாப்பில்லாதச் சூழல் இருப்பதையும் காட்டும் விதத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்நாவல் குறித்து மதிப்பீடு செய்துள்ள "கவிஞர் ஹெச். ஜி. ரசூல், ஜாகீர்ராஜாவின் படைப்பில் இத்தகைய கற்பனை கதை மாந்தர்களைத் தேடினாலும் கிடைக்கப்போவதில்லை. அடித்தள வாழ்வின் சகலவிதமான வலிகளோடும், பிறழ்வுகளோடும், மீறல்களோடும் மீன்காரத்தெருவின் கதை உருவங்கள் அங்குமிங்கும் அலைதலுறுகின்றன. நேரடி விவரணை மொழி வட்டாரத் தன்மையோடு நாவலை வழிநடத்திச் செல்கிறது. அதேசமயம், குறிப்பான, மிக ஆழ்ந்த ரகசியங்களைப் புதைத்து வைத்துள்ள வார்த்தைகளாகவும் அவை தோற்றம் பெற்றுள்ளன. முற்றுப் பெறாத சம்பவங்களில் புதைந்து கிடக்கும் ரகசியங்கள் வாசகனிடத்தில் புதிர்களை அவிழ்ப்பதற்கான எத்தனத்தைச் செய்ய முனைகின்றன" என்று ஹெச். ஜி. ரசூல் விளக்கம் தந்துள்ளார்.

'மீன்காரத்தெரு' நாவலானது அவரது பிறப்பிடமான கீரனூரில் ஆறு மற்றும் குளங்களில் மீன் பிடித்து ஜீவிதம் நடத்துகின்ற ஏழை அடித்தட்டு முஸ்லிம்கள் மேட்டுக்குடியினரால் புறக்கணிக்கப்படுவதை உள்ளார்ந்த வலியுடன் எடுத்துரைப்பதாக அமைகிறது.

இஸ்லாமியச் சமூகத்தில் காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் சிறுபான்மை சமூகத்தின் உறவு நிலைகளுக்குள் இருக்கும் சாதி அடுக்குகள் அவற்றின் வழிப்பட்ட ஒடுக்குமுறைகள் மற்றும் சுரண்டல்கள் ஆகியவற்றை ஜாகீர்ராஜா பதிவுசெய்துள்ளார். இந்நாவல் வரும் "பங்களாத்தெருவில் வசிப்போர் உயர் சாதி இஸ்லாமியர்களாகவும், மீன்காரத்தெருவில் வசிப்போர் கீழ்ச் சாதி இஸ்லாமியர்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன. மேலும் மீன்காரத்தெரு மக்களை விடவும் தாழ்ந்தவர்களாகவும் சிலர் காட்டப்பட்டுள்ளனர். 'நைனா' என்ற கதாப்பாத்திரத்தின் மூலம்,

கீழ்ச்சாதியினருக்கு காணப்படும் பல உட்பிரிவினரும் (நாசுவர், பறையர், சக்கிலியர், குறவர்). விமர்சிக்கப்பட்டுள்ளனர். பங்களாத்தெருக்காரர்கள், மீன்காரத்தெருக்காரர்கள், ஆட்டுக்கறி சாப்பிடும் ராவுத்தர்கள், மாட்டுக்கறி சாப்பிடும் லெப்பைகள் எனப் பலதரப்பட்ட முஸ்லிம் சமூகத்தார் பற்றியும் ஜாகீர்ராஜா பேசுவதைக் காண்கிறோம்" என்று சிரி~h தனது ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கருத்தலெப்பை:

கருத்தலெப்பை என்னும் ஜாகீர்ராஜாவின் இரண்டாம் நாவல் 2013- ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நாவல் தமிழ் முஸ்லிம்களிடையே நிலவிவரும் ராவுத்தர், லெப்பை என்னும் படிநிலைகளை அடையாளப்படுத்தியதுடன் கலை மனங்கொண்ட இளைஞன், உருவங்களைப் புறக்கணிக்கின்ற சமூகத்திலிருந்தவாறு தனது தீர்க்கத்தரிசிக்கு உருவம் தந்து தரிசிக்க விளையும் பேராவலைப் பற்றி பேசுகிறது.

தெருவில் வியாபாரம் செய்து பிழைப்பை நடத்திய அமீதுவின் வாழ்க்கையைப் பற்றி கருத்தலெப்பை நாவலில் கூறியிருக்கிறார். உருவ வழிபாடுகளைப் புறக்கணிக்கின்ற ஒரு சமூகத்திலிருந்து வந்தவன் நபிகள் நாயகத்துக்கு உருவம் காண்கிறான் என்பது முஸ்லிம் சமூகம் சார்ந்த கலைஞனின் அகநிலை வெளிப்பாடாக அமைந்திருப்பதை உறுதிப்படுத்த முடிகிறது. இந்நாவலுக்குத் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்கம் விருது வழங்கி சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

துருக்கித்தொப்பி:

ஜாகீர்ராஜா எழுதிய இரண்டு நாவல்களையும் விட இந்நாவல் முற்றிலும் மாறுபட்ட வடிவத்தில் அமைந்துள்ளது. 'துருக்கித்தொப்பி' என்பது எட்டுக்கல் பதித்த வீட்டுத்தலைவராகிய கேபிN~வின் அடையாளம் மட்டுமல்ல, ஜாகீர்ராஜா நிர்மாணிக்க முயல்வது தமிழருக்கு முற்றிலும் புதிய உலகம். இதுவரை முஸ்லிம் சமூகத்தைப் பற்றித் தமிழில் எழுதப்பட்ட அனைத்து நாவல்களையும் பின்தள்ளிச் சீறிப்பாயும் சுதந்திர வேட்கைக்கொண்ட எழுத்தாக இந்நாவல் அமைந்துள்ளது.

"உச்சிமுதல் பாதம்வரை சொக்கத்தங்கம் பூட்டி, காஞ்சிப்பட்டினால் தன்மேனியின் விரிஜோதியை மூடி, எட்டுக்கல் பதித்த வீட்டில் வந்து இறங்கிய நூர்ஜஹான் தனது வனப்பும் வாலிபமும், செல்வமும் தொலைந்து, பெற்ற மகனை இழிந்த மொழியில் ஏசும் நிலைக்குச் சரிந்து போகும் சின்ன வரலாறு இந்த நாவல் என்று நாஞ்சில் நாடன் கூறுகிறார்."

வடக்கேமுறி அலிமா:

இஸ்லாமியச் சமூகத்திலிருந்து வெளியுலகில் சுதந்திரமாகச் சுற்றித்திரியும் 'அலிமா' எனும் கதைமாந்தரை மையமாகக் கொண்டு ஜாகீர்ராஜாவால் எழுதப்பட்டதுதான் 'வடக்கேமுறி அலிமா' என்னும் நாவல். இந்நாவலில் அலிமாவை மனம் பிறழ்ந்தவளாகக் கொள்வதை விடக் கட்டுப்பாடுகளை மீறி தான் நினைப்பதை மிக யதார்த்தமாக வெளிப்படுத்தும் தன்மைக் கொண்டவள் எனப் புரிந்துகொள்ள முடிகிறது. உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு விதமான மனநலக் காப்பகங்களில் இருந்து அலிமா ஏராளமான கொடுமைகளுக்கு ஆளாகுபவளாகவும் பலவிதமான இன்னல்களைச் சந்திப்பவளாகவும் காணப்படுகிறாள். இது சமூகத்தில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பல்வேறு சிக்கல்களையும்

கொடுமைகளையும் மனப்பிறழ்வு ஏற்பட்டவர்கள் மீது கூறி வன்முறைகளை எடுத்துரைக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

“புனைகதை உருவாக்கத்தில் தனித்தொரு கதை சொல்லல் மரபை பின்பற்றியிருக்கிறார் ஜாகீர்ராஜா. ஒரு பெண்ணின் மனோபாவத்தை உலகிற்குக் கோடிட்டு காட்ட முனைந்திருக்கிறார். மது அருந்துதல், ஊர்ச்சுற்றுதல் பல மனித புணர்வு உள்ளிட்ட ஆண் பொழுதுபோக்குக்கான அம்சங்களாகக் கூறப்படும் செயல்களை அலிமாவுக்குள் புகுத்தி புதிய மாற்றத்தை ஏற்படுத்த நினைத்திருக்கிறார். இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத ஆணின் மனப்பாங்கினை ஒரு ஜமாத்தின் - உறுப்பினர் அலிமாவை அவளின் அப்போக்கிலிருந்து விடுபட்டு திருந்தி வாழும்படி எச்சரிக்கை செய்வது போல ஜாகீர்ராஜா புனைந்துள்ளதன் வாயிலாக, ஜமாத் என்பது ஆண்களால் உருவாக்கப்பட்ட நிறுவனம் என்பதும், அந்நிறுவனமே பெண்களுக்கான உரிமைகளையும், உணர்வுகளையும் திட்டமிட்டு வழங்குவதாகவும் அதிலிருந்து மீறும்போது அவளை தடுப்பதாகவும் இஸ்லாத்தின் மறைவிடங்களைக் காட்டத் தவறவில்லை” என்று சே. சுரே~; தனது ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மீன்குகை வாசிகள்:

‘மீன்குகை வாசிகள்’ என்னும் ஐந்தாவது நாவலானது ‘மீன்காரத்தெரு’ என்ற முதல் நாவலின் நீட்சியாக எழுதப்பட்டுள்ளது. இந்நாவல் இஸ்லாமிய சமூகத்தில் மறைக்கப்பட்ட ஒரு பகுதியினரின் வாழ்க்கையும் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கையும் கூறப்பட்டுள்ளது. தர்காக்களைக் காவல்காப்பது போன்ற கடுமையான நிகழ்வுகள் காணப்படுகின்றன. தெருவியாபாரம் செய்யும் வியாபாரிகள், தொழிலாளர்கள், கூலிப்பணியாளர்கள் என விளிம்புநிலை மனிதர்களின் வாழ்க்கையை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டிருப்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஜின்னாவின் டைரி:

ஜாகீர்ராஜாவின் ஆறாவது நாவலான ‘ஜின்னாவின் டைரி’ 2013 – ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இது நையாண்டி, பரிகாசம், அங்கதம் என நகைச்சுவை ததும்பும் வகையில் மாறுபட்ட கருத்துகளோடு உருவாக்கப்பட்டுள்ளது. பிச்சைக்காரனாக அதுவும் இஸ்லாத்தில் பக்கீராக, ஒருவன் மனிதரூபம் அழிந்து விடுவதற்கான சடங்கைச் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படி பக்கீர்கள் இஸ்லாமியத்திலுள்ள ஞான இலக்கியங்களில் ஆழ்ந்த புலமையும், பரிட்சயமும் கொண்டிருப்பர். தொன்மையான இசைக்கருவிகளை இசைக்கக் கற்றிருப்பார்கள். பார்வையில், பேச்சில் துணிவு, நன்னடத்தை, பற்றற்றத்தன்மை, இசையில், இறைப்புகழில் தோய்ந்து விடுதல், நாடோடிக் குணம் போன்றவை இவர்களிடம் இயல்பான ஒன்றாகக் காணப்படும். பிச்சைக்காரனுக்கு யாசகம் தவிர்த்து வேறு உலகம் எதுவும் இருக்;குமா என்னும் சந்தேகத்தை நிவிர்த்திச் செய்வதைப் போல பக்கீர்~hக்களைப் பற்றிய விரிவான உரையாடலை இந்நாவலில் ஜாகீர்ராஜா நிகழ்த்திச் செல்வதைக் காணமுடிகிறது.

நாவல் வகையில் அழுத்தமானதொரு விளிம்புநிலைப் பிரதியாக ஜின்னாவின் டைரி’ அமைந்துள்ளதை உறுதிப்படுத்த முடிகிறது. இந்நாவலில் சிறுபான்மை பெண்ணியம், மாற்றுச் சினிமா

பாலியல் தொழிலாளிகள், விளிம்புநிலை மக்கள், திருநங்கையர், ஒருபால் உறவு, தலித்தேசம், ஈழப்பாசம், வல்லரசு எதிர்ப்பு போன்ற சமூக நிலைபாடுகள் குறித்து விரிவாகப் பேசப்படுவதைக் காணமுடிகிறது.

முடிவுரை:

கீரனூர் ஜாகீர்ராஜா பலவிதமான சிறுகதைகள், தொகுப்பு நூல்கள், இலக்கியங்கள், நாவல்கள் முதலியவற்றை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய மீன்காரத்தெரு, கருத்தலெப்பை, துருக்கித்தொப்பி, வடக்கேமுறி அலிமா, மீன்குகை வாசிகள், ஜின்னாவின் டைரி ஆகிய ஆறு நாவல்களும் தமிழ் முஸ்லிம்களின் வாழ்வியலையும் கலாச்சாரத்தையும் விரிவாக எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன. தமிழில் வெளிவந்துள்ள இஸ்லாமிய நாவல் களத்தில் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கை முறைகள் போன்றவை ஜாகீர்ராஜாவின் நாவல்களில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இஸ்லாமிய சமூகத்தின் விளிம்புநிலை வாழ்வியலை வெளிப்படுத்தும் ஆவணமாக அவரது நாவல்கள் திகழ்கின்றன என்பதை இவ் ஆய்வு கட்டுரையானது உறுதி செய்கிறது.

துணைநூல் பட்டியல் (Reference List)

1. ரசூல், எச். ஜி. (2006). இஸ்லாமியப் பெண்ணியம். சென்னை: பாரதி புத்தகாலயம்.
2. சிரிஷா, டி. ஏ. (2012). மீன்காரத் தெரு கீழிருந்து மேலாக விரியும் மாற்றுப் புனைவு. சென்னை.
3. சுரேஷ், எஸ். (2012). பெண்ணிய நோக்கில் வடக்கேமுறி அலிமா. கள்ளக்குறிச்சி: இட்டிலி.

References:

1. **Rasool, H. G.** (2006). *Islāmiyap Peṇṇiyam* [Islamic Feminism]. Chennai: Bharathi Puthakalayam.
2. **Sirisha, D. A.** (2012). *Mīṉkārat Teru Kīḻiruntu Mēlāka Viriyum Māṟṟup Puṉaivu* [Meenkara Street: An Alternative Narrative Spreading from Bottom to Top]. Chennai.
3. **Suresh, S.** (2012). *Peṇṇiya Nōkkil Vaṭakkēmuṟi Alimā* [Vadakkemuri Alima in a Feminist Perspective]. Kallakurichi: Ittili.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

திருக்குறள் போற்றும் பெண்கள்

Women Praised by Thirukkural

மு. ஜெயராணி
உதவிப்பேராசிரியர், மொழிகள்துறை-தமிழ்ப்பிரிவு,
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர் – 21
M. Jeyarani
Assistant Professor, Department of Languages – Tamil Division, Karpagam Academy of Higher Education, Coimbatore – 21
Email ID: jeyaranihasika8220@gmail.com, ORCID: https://orcid.org/0009-0008-2478-1792

Abstract:

The Thirukkural, revered as the "Universal Veda" (Ulagap Podhumarai) and a pinnacle of world literature, stands as a fundamental moral text offering essential truths and philosophical insights for human society. This epic work, continually yielding new interpretations, serves as an indispensable guide to ethical living, steering humanity towards virtue. Its profound impact is echoed in the proverb, "Aalum and Velam (barks) strengthen the tooth; Naalum and Irandum (Naaladiyar and Thirukkural) strengthen the word," underscoring its foundational role in shaping refined discourse. As the epicenter of Tamil culture, the Thirukkural significantly guides the Tamil populace toward elevated standards of life. Enduring as a source of nectarine knowledge and strength, it contains immeasurable wealth, offering boundless and fresh meanings like an inexhaustible river to all seekers. Within its vast scope, Thiruvalluvar notably elevates the dignity of women, placing them in significant positions across numerous couplets, a sentiment echoed by poet Bharathiyar's pronouncements on female equality and prosperity, and by ancient Tamil texts like Naanmani kadigai and Narrinai that praise women as household lights and mansion lamps. The Thirukkural powerfully advocates for the eradication of social disparities against women, emphasizing their high esteem and independent individuality, recognizing that honoring womanhood leads to societal prosperity. This article intends to delve into these vital concepts concerning women as meticulously recorded by Valluvar.

Keywords: Kūttu, Koṯṟavai, Vel Pari, Parambu, Ancient Tamil Performing Arts, Mathangan, Puṟanāṉūṟu.

Tamilmanam

ஆய்வுச் சுருக்கம்:

"உலகப் பொதுமறை" என்றும், உலக இலக்கியங்களில் ஒரு சிகரமாகவும் போற்றப்படும் திருக்குறள், மனித சமூகத்திற்கான அத்தியாவசிய உண்மைகளையும், தத்துவார்த்த ஞானங்களையும் வழங்கும் ஒரு அடிப்படையான அற நூல் ஆகும். தொடர்ச்சியாகப் புதிய விளக்கங்களைத் தரும் இந்த மகத்தான நூல், மனிதகுலத்தை நல்வழிப்படுத்தி, அற வாழ்வை நோக்கி வழிநடத்தும் ஒரு தவிர்க்க முடியாத வழிகாட்டியாகத் திகழ்கிறது. இதன் ஆழமான தாக்கம், "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்ற பழமொழியில் எதிரொலிக்கிறது. இது செம்மையான உரையாடலை

உருவாக்குவதில் அதன் அடிப்படையான பங்களிப்பைப் பறைசாற்றுகிறது. தமிழ் கலாச்சாரத்தின் மையமாக விளங்கும் திருக்குறள், தமிழ்ப் populace-ஐ உயரிய வாழ்க்கை நெறிகளை நோக்கி வழிநடத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. அமுத nectarine அறிவு மற்றும் வலிமையின் ஆதாரமாக நிலைத்து நிற்கும் இது, அளவற்ற செல்வத்தைக் கொண்டுள்ளது. இது அருந்தவமான ஆற்றைப் போல, தகுதியான அனைவருக்கும் எல்லையற்ற, புத்தாக்கமான அர்த்தங்களை வழங்குகிறது. அதன் பரந்த நோக்கத்திற்குள், திருவள்ளுவர் குறிப்பாக பெண்களின் கண்ணியத்தை உயர்த்திப் பிடித்து, பல குறட்பாக்களில் அவர்களை முக்கிய நிலைகளில் வைத்துள்ளார். இந்தக் கருத்தை, கவிஞர் பாரதியாரின் பெண் சமத்துவம் மற்றும் செழிப்பு குறித்த கூற்றுகளும், நாண்மணி கடிகை மற்றும் நற்றிணை போன்ற பண்டைய தமிழ் நூல்கள் பெண்களை இல்லத் தீபங்களாகவும், மாளிகைத் விளக்குகளாகவும் போற்றிப் புகழ்ந்ததும் எதிரொலிக்கின்றன. திருக்குறள், பெண்கள் மீதான சமூகப் பாகுபாடுகளை ஒழிப்பதற்கு வலிமையாக வாதிடுகிறது. பெண்களின் உயரிய மதிப்பையும், அவர்களின் தனித்துவமான அடையாளத்தையும் வலியுறுத்துகிறது. பெண்மையை மதிப்பது சமூகச் செழிப்புக்கு வழிவகுக்கும் என்பதை அங்கீகரிக்கிறது. இந்த உரை, வள்ளுவர் நுட்பமாகப் பதிவு செய்துள்ள பெண்களைப் பற்றிய இந்தக் கருத்தியல் கருத்துக்களை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

முக்கிய வார்த்தைகள்: உலகப் பொதுமறை, திருக்குறள், பெண்கள்

முன்னுரை

“உலகப் பொதுமறை” என எல்லோராலும் போற்றப்படும் உலக இலக்கியங்களில் தலைசிறந்ததாய் கருதப்படும் திருக்குறள் மனித சமூகத்திற்கு தேவையான அடிப்படை உண்மைகளையும், வாழ்வியல் சிந்தனைகளையும் அறிவுறுத்தக் கூடிய முக்கிய நீதி நூல்களில் முதன்மையானதாகும்.

”ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி”

என்று மனித இனத்தை நன்னெறிப் படுத்தும் வாழ்வியல் வழிகாட்டியாகவும், காலந் தோறும் புது புது விளக்கம் தந்திடும் பேரிலக்கியமாகவும் திருக்குறள் திகழ்கின்றது. தமிழ் பண்பாட்டின் வாழ்விடமாகவும் தமிழர் பெருமக்களுக்கு பெரிதும் வாழ்வியல் நெறிகளை வழிகாட்டும் நூலாக திருக்குறள் விளங்குகிறது. அறிவுக்கும் ஆற்றலுக்கும் என்றும் அமுதமாய் விளங்கிவரும் திருக்குறள் மதிப்பிடற்கரிய செல்வத்தை தன்னகத்தே வைத்துக்கொண்டு வந்தோர்க்கு எல்லாம் இல்லை என்று இல்லாமல் வாரி வழங்கும் வள்ளலை போலத் தன்னை அணுகியவர்க்கெல்லாம் வற்றாத ஆறாய் புதுப்புதுப் பொருளை வழங்கும் இலக்கிய வல்லமை பெற்று திகழ்கின்றது. இத்தகைய பல்வேறு சிறப்புகளைக் கொண்ட திருக்குறளின் கண் திருவள்ளுவர் பெண்ணின் பெருமையையும், முக்கியத்துவத்தையும் பல குறட்பாக்களில் ஏணி படியாய் ஏற்றியிருக்கிறார்.

எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே

பெண் இளைப்பில்லை காண்!

என்பதோடு

"பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா"

எனவும் பாரதியார் பெண்ணின் சிறப்பினை வெளிப்படுத்துகிறார்.மேலும்,

"மனைக்கு விளக்கம் மடவார்" என்று நான்மணிக்கடிகையும்(105)

"மனைக்கு விளக்காகிய வாணுதல் மனைமான் சுடர்" என்று நற்றிணையும் (104)

பெண்ணின் சிறப்பினை போற்றுகின்றன.

பெண்களுக்கான சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கி சமுதாயத்தில் பெண்கள் போற்றப்பட வேண்டும். பெண்மை போற்றப்படும் போது சமுதாயம் மேன்மையுறும். பெண் பெண்ணாக தன்னை எதற்காகவும் இழக்காத தனித்துவமாக வாழ வேண்டும், என்பதைப் போன்ற எண்ணற்ற கருத்துக்களை வள்ளுவர் தம் நூலில் பதிவு செய்துள்ளார். அவற்றை சற்று உற்று நோக்கி ஆராய்ந்து வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

அறம் போற்றும் பெண்கள்

அன்பும் அறனும் கொண்டு இல்லறத்தில் மக்கள் வாழ வேண்டும் ஏனெனில், அன்பு பகையை முறிக்கும், தம்மை வளர்க்கும், நல்லுறவு ஏற்பட வழிவகுக்கும். அறம் செய்வதற்கு அடிப்படையாக மனத்தூய்மை விளங்கும்.

மேலும், அறம் செய்து வாழ்வதும், மற்றவர்கள் பழிக்கும் மாசில்லாத தன்மையுடையதாக விளங்க வேண்டும் என்பதை திருவள்ளுவர்,

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்

பிறன் பழிப்பது இல்லாயின் நன்று

(குறள் -49)

பெண்களை போற்றும் அறத்தினை விளக்குகின்றார். இல்வாழ்வின் பண்பு. அன்பு செலுத்துவது அதன் பயன், அறம் செய்வது என்பதனை,

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது

(குறள் -45)

என்ற குறளின் வாயிலாக இல்லற வாழ்வில் பெண்ணின் முதன்மையையும் அன்பு செய்வதில் பெண்ணுக்கு நிகர் பெண்களே என்பதைம் குறிப்பிட்டுள்ளார்.

கற்பு நெறியும் பெண்களும்

கற்பு என்னும் மனத்திண்மை இருக்கமானால் பெண்ணை விட பெருமை உடையவை வேறு எவை உள்ளன? என்று ஆணித்தரமாக வள்ளுவர்,

சிறைகாக்கும் காக்கும் காப்பு எவன் செய்யும்

மகளிர் நிறைகாக்குங் காப்பே தலை

(குறள் -57)

என எடுத்து விளம்புகின்றார்.

மகளிர் சிறை வைத்துக் காப்பதால் பயனில்லை. அவரின் மனத் திண்மையால் தம் கற்பை காத்துக் கொள்ளும் காவல் சிறந்தது என்று ஆடவர்க்கு அறிவுரை சொல்லும் வகையில் பெண்ணின் குணத்தையும் இயல்பினையும் எடுத்தியம்புகிறார் வள்ளுவர் .

"கற்பெனப் படுவது சொல் திறம்பாமை "

(கொன்றை வேந்தன்)

சொன்ன சொல் தவறாக நடந்து கொள்வதே கற்பு எனப்படும் என்பதையும் ஔவையார் கூறி இருப்பது சிறப்பு.

"கற்பென்று சொல்ல வந்தால் இரு மாதரையும் பொதுவில் வைப்போம்"

என ஆணுக்கும் பெண்ணுக்கும் மனதளவில் திண்மையாக இருத்தல் வேண்டும் என்றும் கற்பு என்பது இருவரின் பொதுவான சிந்தனை என்பதனையும் பாரதியாரும் கூறி இருப்பது குறிப்பிடத்தக்கது.

அன்பும் அறிவும் ஆற்றலும் கொண்ட மனைவியே இல்லறத்திற்கு இன்றியமையாதவள் இல்லறத்தின் தூணாக இருக்கும் பெண்ணிற்கு கற்பு என்பது மிகவும் முக்கியமாக கருதப்படும் நற்பண்புகளில் ஒன்றாகும். அக்கற்பின் இயல்பினை பற்றி வள்ளுவர் தெளிவாகக் கூறுகிறார். ஒழுக்கமுள்ள மனநிலையே கற்பு என்பதனை வள்ளுவர்,

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண்டாகப் பெறின்.

(குறள் -54)

என்ற குறள் மூலம் விளக்குகிறார்.

ஈடில்லா சீர்மை மிகுந்த மகளிர்

தெய்வத்தை வணங்காமல் தன் கணவனையே தெய்வமாக வணங்கும் பெண்களை வள்ளுவர், வேண்டும் பொழுது பெய் என்று சொன்னால் மழையும் பொழியும். பெண்கள் இயற்கையையே தன் கட்டுக்குள் வைத்திருப்பவர்களாக வள்ளுவர்,

தெய்வம் தொழஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை .

(குறள் -54)

என பெண்மையை சிறப்பிக்கின்றார்.

கணவனே கண்கண்ட தெய்வமாய் கருதும் பெண்கள் இயற்கையே தன் கட்டுக்குள் கொண்டுவரும் வல்லமை பெற்றவராய் திகழ்வர்.பெண் என்றவுடன் மழை பெய்யும் இயற்கையும் அவர்களுக்கு கட்டுப்படும் எனும் பொருள்பட இக்குறள் அமைகிறது.

இல்லற பெருமையை கட்டிக் காக்கும் பெண்களை வள்ளுவர்,

பெற்றார் பெறின் பெறுவர் பெண்டீர் பெருஞ் சிறப்பு
புத்தேளிர் வாழும் உலகு.

(குறள் -58)

என்று பெண்ணின் சிறப்பை நயமாக உணர்த்துகிறார். அதாவது தன்னை மனைவியாக பெற்ற கணவனால் சிறப்பிக்கப்படும் பெண்கள் மேலுலகிலும் பெரும் சிறப்பினை பெறுவார்கள் என்று பெண்ணின் சிறப்புறும் தன்மையைக் குறிப்பிடுகிறார்.

பெண்ணின் குணமும் இல்லற சிறப்பும்

ஒருவனுடைய குணத்தின் தன்மையை கொண்டு தான் அவன் நல்லவனா? தீயவனா? என்று கூற முடியும். இதனடிப்படையில் வள்ளுவர், பெண்ணின் குணத்தைக் கொண்டு அதன் பயனையும்

மங்கலம் என்ப மனை மாட்சி மற்றுஅதன்

நன்கலம் நன்மக்கட் பேறு.

(குறள் -60)

என்று விளக்குகிறார். மனைவியின் சிறந்த குணங்களே இல்லறத்திற்கு மங்கலமாகும். அதன் அணிகலன் நல்ல மக்களை பெறுதலாகும் என்று குணங்களின் வழி அதன் பயனை வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

பெண்ணின் திறனும் விருந்தோம்பல் பண்பும்

இல்லத்தை ஆள்பவள் இல்லாள் அந்த இல்லாள் முகமலர்ச்சியோடு விருந்தினரைப் போற்றுவதால் தான் அவ்வீட்டில் திருமகள் குடியிருக்கிறாள், என்று கூறுவதிலிருந்து பெண்ணின் உண்மையான பணிவும் அறமும் பளிச்சிடுகின்றன. இதனை,

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல் விருந்து ஓம்புலான் இல.

(குறள் -84)

என்ற குறள் மூலம் தெளிவாகக் கூறுகிறார்.

இல்வாழ்க்கை என்ற தவம் சீராக ஒழுகப் பெண் பெருந்துணையாகிறாள். அதனால் தான் அவளை, "இல்லாள்" "இல்லத்தை ஆள்பவள்" என்ற சொல் தந்து இல்லத்தரசி ஆக்குகிறார் வள்ளுவர், ஒரு ஆண் நாட்டையும் தான் செய்யும் பணிக்கு எப்படி தலைவனாகிறான் அல்லது குடும்பத்திற்கு எப்படி தலைவன் ஆகிறான். அதுபோல, பெண்ணானவள் எங்ஙனம் இல்லத்தில் செயல்படுத்தி கடமை ஆற்றிட வேண்டும் என்பதனை,

தற்காத்து தற்கொண்டான் பேணித் தகைச் சான்ற
சொற்காத்து சோர்விலாள் பெண்.

(குறள் -56)

என்ற குறள் மூலம் உணர்த்துகிறார்.

இந்த குறளே பெண்ணுரிமையைச பறைசாற்றும் பேறு பெற்ற குறள் என்று கூறின் அது மிகையாகாது. கற்பு நெறி தவறாது தன்னை காத்துக் கொள்ளும் தகுதி உடையவளாகவும் தன் கணவனையும் பாதுகாக்க கூடியவளாகவும் பெருமை மிகுந்த சொல் உண்டாகும்படி இல்லறத்தை காப்பாற்றி சோர்வின்றியும் தன்னை சார்ந்தவர்களையும் சோர்வு இல்லாமல் கட்டிக் காப்பாற்றி தன்னிடம் ஏதேனும் ரகசியம் யாரேனும் சொல்லினும் கூட அதையும் வேற இடத்தில் சொல்லாது தன் மனதிலே வைத்து வாழ்பவளே சிறந்த பெண் என்ற பெருமையை பெண்ணுக்கு தந்திருக்கிறார் வள்ளுவர்,

இதனைப் போன்று பாரதியாரும் அன்பான கணவனின் எல்லா செயல்களுக்கும் உதவக்கூடிய இயங்கு சக்தியாக விளங்குபவளே பெரும் சிறப்புக்குரிய பெண் என்பதனை,

காதலொருவனைக் கைப்பிடித்து அவன்
காரியம் யாராலும் கைக் கொடுத்து என்ற வரிகளில் குறிப்பிடுகிறார்.

பெண்ணின் மாண்பு

ஆணின் ஒட்டுமொத்த வாழ்க்கைக்கும் துணை என்னும் வகையில் வாழ்க்கைத் துணையாக பெண் விளங்குகிறாள் அவள் இன்றி அணுவும் அசையாது அவளின் மாட்சியும், வீட்சியுமே இல்லறத்தின் மாட்சியும் வீட்சியும் என்று பின்வரும் குறளில்,

இல்லாதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை.

(குறள் -53)

இல்லத்தை ஆட்சி செய்யும் இல்லாள் மாண்புடையவளாகத் திகழும் போது அந்த இல்லமே மேன்மையடைகிறது. மனைக்குரிய மாண்பு ஒருவனது மனைவியிடத்தில் இருப்பின் வேறு எதுவும் இல்லையென்றாலும் இருப்பது போல் ஆகிவிடும் . அம்மாண்பு அவளிடத்தில் இல்லையாயின் அனைத்தும் இருப்பினும் எதுவும் இல்லாதது ஆகிவிடும் என குறிப்பிடுகிறார்.

கணவனுக்கு மனைவி என்பவள் மிகவும் முக்கியமான துணையாக விளங்குகிறாள். தலைவியுடன் வாழும் வாழ்க்கையை விட பொன்னுலக வாழ்க்கை இனிதாகாது இக்கருத்தை அறிவுறுத்தும் வகையில்

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்

தாமரை கண்ணால் உலகு.

(குறள் -1103)

இவ்வாறு தெளிவுபட கணவனுக்கு மனைவியும் மனைவிக்கு கணவனும் மிக முக்கியம் என்று கூறுகிறார்.

தாய்மை நிலையும் பெண்ணின் மேன்மையும்

பெண் பண்புடைய மக்களை பெறுவதன் வழி தாய்மையின் உயர்வினையும் பெண்ணின் தன்மையையும் புலப்படுத்துகின்றார். அதனால் தான், தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ் அமிழ்தினும் இனிது. என்றும், குழந்தைகள் மெய் தீண்டல் உடற்கின்பமாகவும், சொற்கேட்டல் செவிக்கு இன்பமாகவும் குறிப்பிடுகின்றார். அவை மட்டுமல்லாது,

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனை

சான்றோன் எனக்கேட்ட தாய்.

(குறள் -53)

தன் மகனை சான்றோனாக கேட்ட தாயின் மன மகிழ்ச்சியினை இக்குறளின் வழி காட்டி இருக்கிறார் வள்ளுவர்,

தலைமகளின் உள்ள குறிப்புகளைச் சுற்றுவதற்காக அவளின் பார்வையினை கூறும்போது,

ஒரு நோக்கு நோய்நோக்கு என்றும், இன்னொன்று நோய்க்கு மருந்து என்றும், குறிப்பிடுகின்றார். பெண்ணின் மென்மையை குறிப்பிடும்போது,

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்

அடிக்கு நெருஞ்சி பழம்.

(குறள் -1120)

என்று கூறுகின்றார்.

முடிவுரை

திருக்குறள் பெண்ணின் பண்பாட்டு சீர்மையை ஒளிர்விக்கும் நேர்மையான வேதமாகும். திருக்குறள் அறநெறி கருத்துகளைப் புகட்டுவதற்காகத் தோன்றினாலும் மகளிர் சமுதாயம் போற்றும் நல்லறமான மாண்புகளை எடுத்துரைத்துப் பாடுவதிலும் அக்கறை கொண்டு விளங்குகிறது.

வள்ளுவர் பெண்ணை அன்புடையவராகவும், அறம் சார்ந்தவராகவும் பண்பு நிலை உடையவராகவும் போற்றி உள்ளார். இத்தகு சிறந்த நிலையில் நல்வாழ்வு வாழ்கின்றோர் “வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்” என திருவள்ளுவரால் போற்றப்படுகின்றனர். உலகப் பொதுவான கருத்துகளையும் அறநெறி கருத்துக்களையும் கூறி தமிழர் வாழ்வியல் முறைக்கு சிறந்த வழிகாட்டியாகவும் நல்லதொரு நூலாக விளங்குகிறது. என்பதனை, பெண்ணின் பெருமை, மேன்மை, தாய்மை உணர்வு, மென்மை போன்ற கருத்துகளையும் நமக்கு தெளிவுபடக் கூறுகிறது.

துணை நின்ற நூல்கள்:

1. **திருக்குறள் பரிமேலழகர் உரை**, புலியூர்க் கேசிகன், பூம்புகார் பதிப்பகம், சென்னை- 2004
2. **பாரதியார் கவிதைகள்**, திருமகள் நிலையம், விசா பப்ளிகேஷன்ஸ், online at Panuval.com
3. **நான்மணிக்கடிகை,** பதிப்பாசிரியர் முனைவர். இரா.மாதவன், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம். ஜீன் -2022, தஞ்சாவூர்.
4. **நற்றிணை,** புலியூர் கேசிகன், பாரதி பதிப்பகம்.

References:

1. Thirukkural with Parimel Azhagar's Commentary. Translated by Puliyur Kesigan. Chennai: Poompuhar Pathippagam, 2004.
2. Bharathiyar's Poems. Thirumagal Nilayam, Visha Publications. Available online at Panuval.com.
3. Nanmanikadigai. Edited by Dr. R. Madhavan. Thanjavur: Tamil University, June 2022.
4. Nattrinai. Translated by Puliyur Kesigan. Bharathi Pathippagam.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723
Vol. 4 Issue: 01 October 2025

பழமொழி நானூறு கூறும் மன்னர்கள்

Kings in Pazhamozhi Nanuru

ஆ. நந்தகுமார்

உதவிப்பேராசிரியர், கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்

A. Nandhakumar

Assistant Professor, Karpagam Academy of Higher Education, Coimbatore

Email ID: nandhakumara1@outlook.com, ORCID: https://orcid.org/0009-0007-2303-2389

Abstract:

In the history of Tamil literature, proverbs and the dialogues of the Kurunthokai are closely related to the lives of the people. Among these, Pazhamozhi Nanuru holds a significant place. This work compiles proverbs covering various fields such as politics, social ethics, humanism, and economics. Notably, it includes many proverbs related to kings. The aim of this study is to identify the proverbs related to kings in Pazhamozhi Nanuru, to highlight their political and social basis, and to explain the system of governance of that era through literature. In this book, kings are depicted in various ways such as being just, generous givers, brave in battle, and concerned about the welfare of the people. This shows that the position of the king in the Tamil society of that time was elevated, and the system of governance was intertwined with ethics, righteousness, and military prowess. This study examines kings from a literary perspective.

This research serves as an excellent literary foundation for understanding the political values and governance policies of Tamil society. Furthermore, this study gains importance in demonstrating how political history and cultural values are disseminated in society through proverbs.

Keywords: Pazhamozhi Nanuru, Kings, Governance, History

ஆய்வுச் சுருக்கம்:

தமிழ் இலக்கிய வரலாற்றில் பழமொழிகளும் குறுந்தொகைச் சொல்லாடல்களும் மக்களின் வாழ்வியலுடன் நெருங்கிய தொடர்புடையவை. அவற்றில் சிறப்பிடம்பிடிக்கும் ஒரு முக்கியமான நூல் பழமொழி நானூறு ஆகும். இந்நூல் அரசியல், சமூக நெறி, மனிதநேயம், பொருளாதாரம் போன்ற பல துறைகளைக் கொண்ட பழமொழிகளைத் தொகுத்து வழங்குகிறது. குறிப்பாக, மன்னர்கள் குறித்த பல பழமொழிகள் இதில் இடம்பெற்றுள்ளன. இவ்வாய்வின் நோக்கம், பழமொழி நானூற்றில் இடம்பெறும் மன்னர் தொடர்பான பழமொழிகளை அடையாளம் காணுதல், அவற்றின் அரசியல் – சமூக அடிப்படையைக் கோடிட்டுக் காட்டுதல், மேலும் அந்தக் கால அரசாட்சி அமைப்பை இலக்கியத்தின் வழி விளக்குதல் ஆகும். இந்நூலில் மன்னர்கள் நீதிமான், பரிசளிப்பவர், வீரத்தால் சிறந்தவர், மக்கள் நலனில் அக்கறை கொண்டவர் எனப் பல்வேறு வகைகளில் சித்தரிக்கப்படுகின்றனர். இது அக்காலத் தமிழ்ச் சமூகத்தில் மன்னனின் நிலை உயர்ந்ததாகவும், அரசாட்சி முறை நெறி, அறம், போர்திறன்

ஆகியவற்றோடு இணைந்திருந்ததையும் காட்டுகிறது. இவ்வாய்வில், மன்னரைப் பற்றி இலக்கியவியல் கோணத்தில் ஆராயப்படுகின்றது.

இவ்வாய்வு தமிழ் சமூகத்தின் அரசியல் விழுமியங்களையும் ஆட்சிக் கொள்கைகளையும் வெளிப்படுத்தும் சிறந்த இலக்கிய அடிப்படையாக அமைகிறது. மேலும், பழமொழிகளின் வழி அரசியல் வரலாறு மற்றும் பண்பாட்டு மதிப்பீடுகள் எவ்வாறு சமூகத்தில் பரவியுள்ளன என்பதற்கும் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

திறவுச்சொற்கள்: பழமொழி நானூறு, மன்னர்கள், அரசாட்சி, வரலாறு.

பழமொழி நானூறு

பழமொழி நானூறு நூலை இயற்றியவர் முன்றுறை அரையனார். இவர் முன்றுறையர் என்றும் அழைக்கப்படுகிறார். இவர் ஒரு சமணத் துறவி என்பதை பழமொழி நானூறு நூலின் தற்சிறப்பு பாயிரத்தின் வாயிலாக அறியமுடிகிறது. பழமொழி நானூறு சிறப்புப் பாயிரம், கடவுள் வணக்கம் சேர்த்து நாலடியால் அமைந்த நானூற்றொரு பாடல்களைக் கொண்ட நீதிநூல். ஒவ்வொரு பாடலிலும் கல்வி, ஒழுக்கம், அரசநீதி போன்றவை சார்ந்த ஓர் நீதியும், கடைசி அடியில் அந்த நீதியை எடுத்துக்காட்டும் பழமொழியும் இடம்பெறுகின்றன.

வரலாறு

நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் பாதை வகுக்கப் பயன்படும் கடந்த காலம் வரலாறு எனப்படும். கடந்தகாலம் பற்றி எழுப்பப்பட்ட அல்லது எழுப்பிய வினாக்களுக்குப் பதிலளிக்கும் வகையில் அமைவது என்றும் இதனைக் குறிப்பிடலாம். கடந்தகாலத்தைப் பற்றி நிகழ்காலத்தில் தெரிந்துகொண்டு எதிர்காலத்தை வகுத்துக்கொள்ள வரலாறு பயன்படும். இங்கு, 'வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி' என்னும் தொடர் நினைக்கத்தக்கது.

தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன்

சோழ மன்னர்களின் வரலாற்றிலே காணப்படும் தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன் என்பவனின் வரலாறு பழமொழியில் இடம்பெறுகின்றது. அசுரர்களுக்கு ஒரு கோட்டை இருந்தது. அதன் மதில் மிகவும் பலம் பொருந்தியது. அக்கோட்டை வானத்தில் உலவும் தன்மையுள்ளது. அதிலே அசுரர்கள் வாழ்ந்தனர்: அவர்கள். தேவர்களைத் துன்புறுத்தி வந்தனர். அத்தேவர்களின் வேண்டுகோளின்படித் தொடித்தோள் செம்பியன் அக்கோட்டையை அழித்தான் தேவர்களைக் காத்தான். இதனால், அவன் தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன் எனப்பட்டான். இவ்வரலாற்றைப் பழமொழி,

'வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பில்
தூங்கும் எயிலும் தொலைத்தலால் – ஆங்கு
முடியும் திறத்தால் முயல்கதாம் கூரம்
படியிழுப்பின் இல்லை யரண்' **(பழமொழி.155)**

எனப்பாடுகின்றது. 'அம்பினை வலிமையுடன் தொடுப்பின் கவசமும் பிளக்கும்' என்பதால், முயற்சியை முழுமையாகச் செய்தால் பயனடையலாம் என்பதற்கு இச்சோழனே சான்றாவான். இங்கு, 'முயற்சி திருவினை ஆக்கும்' (616) என்றும், 'அருமை உடைத்து என்று அசவாமை வேண்டும்' (611) என்றும் வரும்

குறட்பாக்கள் எண்ணத்தக்கன. எந்த ஒரு செயலினைச் செய்தாலும் வலிமையுடன் செய்ய வேண்டும் என்பதையும் முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்பதையும், முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பதையும் தொடித்தோட் செம்பியனைக் குறிப்பிடும், பழமொழிப் பாடல் நமக்கு உணர்த்தப்படுகின்றது.

இச்சோழனை, நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பியப் பொருளதிகார விளக்க மேற்கொள் உரையில்,

'...திறல் விளங் கவுனர் தூங்குயில் எறிந்த
விறன்மிகு முரசின் வெல்போர்ச் சோழன்"

எனப் பாடுவது இங்கு பொருத்திக் காணப்பதற்குரியது.

பொற்கைப் பாண்டியன்

மதுரை, நான்மாடக் கூடல் நகராக இருந்தபோது இரவு நேரங்களில் அரசன் காவல் பொருட்டு வீதிவலம் வரல் நடைபெறும். ஒருநாள் நள்ளிரவில் வலம் வந்த பாண்டிய மன்னன் ஒரு வீட்டினுள் பேச்சொலியைக் கூர்ந்து கேட்ட பொழுது கீரந்தை என்ற வேதியன் தன் மனைவியுடன் பேசிக்கொண்டு இருப்பதை அறிந்தான். அவன், 'வணிகத்தின் பொருட்டு வெளியூர் செல்கின்றேன்' என, அவன் மனைவி, 'அச்சமாக உள்ளது திருடர் பயம் உண்டு' என,

வேதியனோ, 'நம் நாட்டு அரசன் செங்கோல் உன்னைக் காக்கும்; அஞ்சாதே' எனக்கூறிச் சென்றான்.

இதனைக் கேட்ட பாண்டியன் மனம் மகிழ்ந்தது. தனது நாட்டுமக்கள் தன் மீது வைத்துள்ள நம்பிக்கையை நினைத்து வியந்து அத்தெருவினை நாளும் தவறாது காவல் புரிந்தான். ஒருநாள் இரவு அவ்வேதியன் வீட்டில் பேச்சுக் குரல் கேட்டது. ஐயமுற்ற பாண்டியன் கதவைத் தட்டினான். வேதியன், தான் வந்ததை அறிந்தால் அவன் மனைவி மீது சந்தேகம் அடைவானே என எண்ணி அவ்வீதியில் அமைத்த அனைத்து வீடுகளின் கதவுகளையும் தட்டிச்சென்றான்.

மறுநாள் அரசவையில் அத்தெரு மக்கள் முறையிட்டனர். எங்கள் வீட்டுக்கதவைத் தட்டிய திருடன் கையை வெட்ட வேண்டும் என்றனர். அரசனும் வாளொன்றைக் கொண்டுவரச் சொல்லித் தன் கையை வெட்டிக் கொண்டான். வியந்த அனைவரிடமும் தானே கதவைத் தட்டியதாகக் கூறியதைக் கேட்டு மக்கள் அதிர்ச்சியுற்றனர். பின்னர், பாண்டியன் பொற்கை ஒன்றினை வைத்துக் கொண்டான். அப்போது முதல் பொற்கைப் பாண்டியன் என்ற பெயரைப் பெற்றான். இவற்றையெல்லாம் கண்ணகியிடம் தெய்வம் கூறியதாகச் சிலப்பதிகாரம், கட்டுரை காதை பாடுவதனை.

“உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி
புதவக் கதவம் புடைத்தனன் ஒருநாள்
‘அரைச வேலி அல்லது யாவதும்
புரைதீர் வேலி இல்என மொழிந்து
மன்றத்து இருத்திச் சென்றீர் அவ்வழி
இன்று அவ் வேலி காவா தோ’ எனச்
செவிச்சூட்டு ஆணியில் புகைஅழல் பொத்தி
நெஞ்சம் சுடுதலின் அஞ்சி நடுக்குற்று
வச்சிரத் தடக்கை அமரர் கோமான்

உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை
குறைந்த செங்கோல் குறையாக் கொற்றத்து
இறைக்குடி பிறந்தோர்க்கு இழுக்கம் இன்மை”

எனும் அடிகளால் அறியலாம்.

இவ்வரலாற்றைப் (பழமொழி) பொற்கைப் பாண்டியன் தனக்குத் தகுதியுடையதன்று என ஆய்ந்துணர்ந்து தனக்குச் சான்றாகத் தானே ஆகிக் கதவைத் தட்டிய குற்றத்தை நினைத்துத் தன்கையைத் தானே வெட்டிக் கொண்டான் என்ற பொருள்படப் பாடுவதனை,

‘எனக்குத் தகவன்றால் என்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் தானாய்த் தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனும் காணார்
எனச் செய்யார் மாணா வினை’ **(பழமொழி.76)**

என்பதால் அறியலாம். பொற்கைப்பாண்டியன் குறித்த செய்தியினைத் தொல்காப்பியம், பொருளதிகாரம் (இளம்பூரணர்) களவியல் நூற்பா (1) மேற்கோள் விளக்கப்பகுதியிலும் நம்பியகப்பொருள் நூற்பா (45) உரை விளக்கப்பகுதியிலும் காணலாம்.

பாரி, பேகன்

முல்லைக்குத் தேர் தந்த பாரியும் மயிலுக்குப் போர்வை தந்த பேகனும் வள்ளல்கள் ஆவர். இவர்களிருவரும் சங்க நூல்களில் பாராட்டப்பட்டுள்ளனர். கொடுப்பதையே கடமையாகக் கொண்ட இவர்கள் இன்னார்க்கு இன்னது கொடுக்க வேண்டும் என எண்ண மாட்டார்கள். ‘பாத்திரமறிந்து பிச்சையிடு’ என்ற பழமொழி இவர்களுக்குப் பொருந்தாது. யாருக்கு எது வேண்டுமாயினும் கொடுப்பர். இத்தகைய செயல்களைக் கொடைமடம் என்று தமிழ் இலக்கியங்கள் கூறும்.

படர்வதற்கு ஆதரவில்லாமல் தனித்துத் தளர்ந்து கொண்டிருந்த ஒரு முல்லைக் கொடியைப் பாரி கண்டான். உடனே முன்பின் எண்ணாமல் தான் ஏறி வந்த தேரையே அக்கொடி படரும்படி நிறுத்தினான். சிறிது சிந்தித்திருப்பின் அதற்கு ஒரு கொம்பைத் துணையாக நட்டிருக்கலாம். உடனே உதவி செய்ய வேண்டும் என்ற அவன் எண்ணம், சிறிதும் காலந்தாழ்த்தவில்லை. ஆதலால், இதைச் செய்வதைத்தவிர அவனுக்கு வேறு வழியில்லை. அவனுடைய கொடை மடமே இவ்வாறு அவனைச் செய்யத் தூண்டியது.

பேகன் என்பவனும் துன்புறுவோர்க்கு உடனே உதவ வேண்டும் என்ற உள்ளம் உடையவனாவான். அவன் காட்டின் வழியே வரும்போது அங்கே குளிரில் ஆடிக்கொண்டிருந்த ஒரு மயிலைக் கண்டான். குளிரால் நடுங்குவதாக எண்ணினான். மயிலுக்குக் குளிரைத் தாங்கும் உடல் வன்மை உண்டு. குளிர்காலத்தில் மயில் ஆடுவது இயற்கையாகும்.இதனை எண்ணிப்பார்க்க அவனுக்கு நேரமில்லை. மயில் குளிரால் நடுங்குகிறதென்று நினைத்து உடனேயே தன்னுடைய போர்வையை எடுத்து அதற்குப் போர்த்தினான்.

பாரியும் பேகனும் அறிவுள்ளவர்களே ஆவர். ஆனால், அவர்களுடைய கருணையுள்ளம் உண்மையை உணரவில்லை. அறியாதவர்களாய் நடந்து கொண்டனர். அத்தகைய அறியாமையும் அவ்விருவருக்கும் ஓர் அழகாக அமைந்துவிட்டது.

‘முல்லைக்கொடி படர்வதற்காகத் தான் ஏறிவந்த தேரினையும் குளிர் காலத்திலே மயிலுக்குப் போர்வையையும் கொடையாகக் கொடுத்தவர்களைக் குறித்துச் சொல்லப்போனால் அறிவிலே மடமையும் சான்றோர்க்கு அணியாகும்’. இக்கருத்துகளைக் கூறும் ‘பழமொழி’ப் பாடல்,

“முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும் – சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப

அறிமடமும் சான்றோர்க்கு அணி’ (பழமொழி.74)

என்பதாகும். இச்செய்யுள், பாரி பேகன், இருவரின் பெருமையினையும் எடுத்துக்காட்டுகின்றது. இவ்விருவரின் செய்கை அறியாமை நிறைந்தது; ஆயினும் அது அவர்களுக்குப் பெருமை அளித்தது. அச்செயல்கள் அவர்களின் பண்பின் அடையாளமாகத் திகழ்கின்றன.

பாரி மகள்

பாரி வள்ளலின் மகளுடைய கொடைத்தன்மையை, ‘மாரி வறண்ட காலத்தில் பாணன் ஒருவன் பாரியின் மகளிடம் வந்து இரந்தான். அவனுக்குச் சோறிடுவதைப் போலவே உலைப்பானையுள் பொன்னை நிறைத்து, அதைச் சோறாகத் தந்தாள்’ என்னும் பொருளில் பாடுவதை.

‘மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு நீருலையுள்
பொன்திறந்து கொண்டு புகர்வாக நல்கினாள்
ஒன்றுறா முன்றிலோ இல்’ (பழமொழி.381)

இருமகள்கள் என்பதால் அறியலாம். பாரிக்கு அங்கவை, சங்கவை என் இருந்தனர். இருவருள் இப்பாடலுள் இடம்பெறுபவர் யாவர்? என அறிய இயலவில்லை. இப்பாடல் பாரியின் மகளைச் சுட்டாது மனைவியைச் சுட்டுகின்றது என்பாரும் உளர். இப்பாடலில் வரும் பொன் என்பதற்குப் பொன்னாங்கண்ணிக்கீரை என்னும் பொருள் கொள்ள வாய்ப்புள்ளது.

கரிகாலன்

குலத்தொழில் போதிக்கப்பட வேண்டியதில்லை; தானே வந்துவிடும். இதைக் குறிக்கும் பழமொழி. ‘குலவிச்சை கல்லாமல் பாகம் படும்’ என்பதாகும். மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமா? என்பதும் இக்கருத்துள்ள தொடரே ஆகும். குலவித்தை கல்லாமலேயே வந்துவிடும் என்பதற்கு உதாரணமாகக் கரிகாற் சோழனுடைய வரலாறு ஒன்றைப் பழமொழி

‘உரை முடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப நரை முடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்’ (பழமொழி.6)

எனும் பாடலில் கூறுகின்றது. நரைத்த முதியோர், சோழனைக் கண்டு, ‘இவன் இளமைப் பருவம் உள்ளவன்’ நாம் உரைக்கும் வழக்கைக் கேட்டுச் சரியான முடிவு கூறும் திறமையற்றவன் என எண்ணினர். அம்முதியோர், ‘சரியான நீதிதான்’ என உவக்கும்படிச் சோழன் நரை முடி தரித்து வந்து வழக்கை விசாரித்துத் தீரப்புக் கூறினான். ஆதலால் தம் குலத்திற்குரிய வித்தைகள் கற்பதற்கு முன்பே நன்றாக வந்துவிடும் என அறியலாம்.

பகைவர்களின் சூழ்ச்சிக்கு இரையாகாமல் உயிர் தப்பினவர்கள் முயற்சி உடையவர்களாக இருந்தால் தம் காரியத்திலே வெற்றி பெறுவர். இக்கருத்தை விளக்கும் ‘பழமொழி’ப் பாடல்,

சுடப்பட்டு உயிர்உய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்ற கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீஇயினான் இல்லை
உயிருடையார் எய்தா வினை’ (பழமொழி.239)

என்பதாகும். பகைவரால் கரிகாலன் இருந்த மாளிகை கொளுத்தப்பட்டது. ஆனால், அவன் அதில் அகப்பட்டு மாளாமல் உயிர் தப்பினான். தன் முயற்சியினால், தன் மாமனாகிய இரும்பிடர்த் தலையார்

என்பானுடைய துணையைக் கொண்டு தன் அரசாட்சியைப் பெற்றான் குற்றமற்ற நெறியிலே செங்கோல் செலுத்தினான்.

பகைவர் மூட்டிய தீயிலிருந்து தப்பி ஒருவகையில் கால் கரித்தமையால் கரிகாலான் எனப்பட்டான். ‘கரி’ என்றால் வறுமை ‘காலன்’ என்றால் எமன் தன் ஆட்சியில் வறுமைக்கு எமனாக இருந்ததனால் கரிகாலன் எனப்பட்டான் எனவும் கூறுவர். அரசினை இழந்து உயிர் பிழைக்க முடியாத நிலையில் இருந்த அவன். பின்னாவில் அரசாட்சி பெற்று நன்மை அடைந்தான். எப்பொழுதும் துன்பத்தினையே அடையாமல் சிறந்த இன்பங்களையும் அடையலாம் என்பது இதனால் விளங்கும்.

ஒவ்வோர் உயிருக்கும் ஒரு பிறவியில் இன்பமும் மற்றொரு பிறவியில் துன்பமும் எனத் தனித்தனியே வகுக்காது ஒரே பிறவியில் இன்பமும் அடையுமாறு விதி வகுத்தலால் துன்பமடைவார் இன்பத்தை அடைதலும் என்பது புலப்படும்.

கரிகாலன் இளமையில் துன்புற்றமை. பின்னர்ச் செங்கோலைக் குற்றமில்லாமல் நடத்துவதற்குக் காரணமானது போல முன்னர் அடைந்த துன்பம், பின்னர் வரும் இன்பத்திற்குக் காரணமாதல் என உணர்தல் வேண்டும். எனக்குத் துன்பத்தையே படைத்தான் போலும் என்று வருந்துவார்க்கு, இன்பமும் துன்பமும் ஒவ்வொரு பிறவியிலும் படைக்கப்பட்டிருக்கின்றன; துன்பம் அடைவர் சோர்வின்றி முயற்சி செய்யின் சிறந்த நன்மைகளை அடையலாம் என்பதற்குக் கரிகாலன் சான்றாகின்றான்.

ஒருவனுக்கு வேண்டிய நன்மைகள் வந்தே தீரும் என்பதனைப் பழமொழி” கரிகாற் சோழனைக் காட்டி விளக்குகின்றது. அப்பாடல்.

‘கழுமலத்தில் யாத்த களிறும் கருவூர்

விழுமியோன் மேற்சென் றதனால் விழுமிய

வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால

தீண்டா விடுதல் அரிது’ (பழமொழி.230)

என்பதாகும். கழுமலத்தில் கட்டப்பட்டிருந்த யானை கருவூர் சென்று சிறந்தவனான கரிகால்வளவனைக் கொண்டுவந்து ஆட்சி புரியச் செய்தது. அதனால் சிறந்த பொருளை நாம் விரும்பினும் விரும்பாவிடினும் அடைவதற்குரியவை ஒருவனை அடைந்தே தீரும்.

கழுமலம் சீர்காழியின் பிறிதோர்ப் பெயராகும். இவ்வூர் சோழநாட்டில் உள்ளது. கருவூர் சேர நாட்டில் உள்ளது. இவ்விரண்டு ஊர்களுக்கும் இடைப்பட்ட தூரம் அதிகமாயினும் விதி கரிகாலனை அரசனாக்கியது.

சீர்காழியை ஆட்சி செய்தவன் இறக்க, அவன் வழியில் யாரும் அவ்வரசாட்சியை ஏற்க இல்லாமையால் அமைச்சர்கள் பட்டத்து யானையை விட்டு அவ்யானை யாரைக் கொண்டுவருகின்றதோ அவனுக்கே முடிசூட்டுவது என்று உறுதிசெய்து யானையைப் போகச்செய்தனர். அவ்யானை, கருவூரில்விட்டு அவ்யானை யாரைக் கொண்டுவருகின்றதோ அவனுக்கே முடிசூட்டுவது என்று உறுதிசெய்து யானையைப் போகச்செய்தனர். அவ்யானை, கருவூரில் இருந்த கரிகாலனைக் கொண்டு முடிசூடுமாறு செய்தது. கழுமலத்தைச் சோழன் கைக்கொண்ட செய்தியினைக் களவழி நாற்பது.

‘ஓஓ உவமன் உறழ்வின்றி ஒத்ததே

காவிரி நாடன் கழுமலங் கொண்ட’ (களவழி.36)

எனப்பாடுகின்றது. கரிகாலன் பற்றிய செய்தியினை தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணையியல் மேற்கோள் செய்யுளாகக் காட்டியதனை. நச்சினார்க்கினியர், நூற்பா விளக்கத்திற்கு

‘ஏரியு மேற்றத்தி னானும் பிறர்நாட்டு

வாரி சுரக்கும் வளனெல்லாந் தேரின்

அரிகாலின் கீழுகூஉ மந்நெல்லே சாலுங்

கரிகாலன் காவிரி கூழ் நாடு”

எனும் பாட்டானும் நச்சினார்க்கினியரின் அகத்திணையில் நூற்பா (30) மேற்கோள் செய்யுளாலும் அறியலாம். இவனைப் பட்டினப்பாலை.

‘அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்

திருமா வளவன்’

என்றும் அகநானூறு,

‘.... ஒண்படைக்

கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலை’

என்றும்.

‘வெருவரு தானையொடு வேண்டுபுலத்து இறுத்த

பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்’

என்றும்,

‘காய்சின மொய்ம்பின் பெரும்பெயர்க் கரிகால்

ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்’

என்றும் பாடுகின்றது.

சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்த காதை, கரிகாலனை.

‘செருவெங் காதலிற் றிருமா வளவன்’

எனப்பாடுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது

சேரன் செங்குட்டுவன்

செங்குட்டுவனின் புகழைச் செய்யுளாகத் தொகுத்த கௌதமன் என்னும் புலவர், ‘சொர்க்கத்தை யானும் என் உறவினரும் அடையுமாறு செய்வாயாக’ என்றார். இக்கருத்துக்களைக் கொண்ட பழமொழிப் பாடல்,

‘‘தொடுத்த பெரும்புலவன் சொற்குறை தீர
அடுத்தர என்றாற்கு வாழியரோ என்றான்
தொடுத்தின்னர் என்னலோ வேண்டா கொடுப்பவர்
தாமறிவார் தம்சீ ரளவு’’ (பழமொழி.380)

என்பதாகும்.

முடிவு

புராணங்களின் பெருமையினைப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே தமிழர்கள் நன்கு அறிந்து போற்றியுள்ளனர். நம் முன்னோர்கள் மனிதனின் நடத்தை, ஒழுக்கம். வாழ்வின் நோக்கங்கள் முதலியவற்றை ஆராய்ந்து வகைப்படுத்தியுள்ளனர். அதன் விளைவாகத் தமிழில் பல புராண நூல்கள் தோன்றின. தமிழரின் உள்ளப் பண்பாட்டை அந்நூல்கள் அறிவிக்கின்றன. இதனால் தமிழர்கள் புராண நெறியிலும் சமயநெறியிலும் சிறந்து விளங்குபவர்கள் என்ற நம்பிக்கை புலனாகும். கீழ்க்கணக்கு நூல்களில் வரலாற்றுக் குறிப்புகளும் புராணக் கதைக் பாடற்பொருளோடு இணைந்தும் குறிப்புகளும் காணப்படுகின்றன.

பழமொழி நானூறு தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன். பொற்கைப்பாண்டியன், பாரி, பாரிமகள், பேகன், கரிகாலன், சேரன் செங்குட்டுவன், மனுநீதிச்சோழன் ஆகியோர் குறித்தும் கொற்கைத் துறைமுகம் குறித்தும் வரலாற்றுக் குறிப்புகளைச் சுட்டுகின்றன.

துணைநூல்கள்

1. பழமொழிநானூறு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி-6, சென்னை-, 1967.
2. பரிமேலழகர் உரை திருக்குறள், சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், 2/3, ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600014, பிப்ரவரி 2006.
3. பாலசுந்தரம் பிள்ளை, தி.சு., (உ.ஆ.) நாலடியார், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், 522, டி.டி.கே. சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை-18, 2008
4. அர்ச்சுணன், ம., நீதி நூல்களில் அறமும் அரசியலும், பூமலையாழ் பதிப்பகம், தோளுர், விளத்தூர் அஞ்சல், பரமக்குடி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

Bibliography

1. Pazhamozhinanooru. The Tirunelveli South India Saiva Siddhanta Works Publishing Society, Ltd., Tirunelveli-6, Chennai-1, 1967.

2. Thirukkural with the Commentary of Parimelazhagar. Saradha Pathippagam [Saradha Publishing House], G-4, Shanthi Apartments, 2/3, Srikrishnapuram Street, Royapettah, Chennai-600014, February 2006.

3. Balasundaram Pillai, T.S. (Ed.). Naladiyar. The Tirunelveli South India Saiva Siddhanta Works Publishing Society, Ltd., 522, T.T.K. Road, Alwarpet, Chennai-18, 2008.

4. Arjunan, M. Neethi Noolgalil Aramum Arasiyalum [Ethics and Politics in Didactic Literature]. Poomalaiyazh Pathippagam [Poomalaiyazh Publishing House], Tholur, Vilathur Post, Paramakudi Taluk, Ramanathapuram District.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tami

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723
Vol. 4 Issue: 01 October 2025

தமிழ் தெலுங்கு – ஒப்பீடு

Tamil and Telugu – A Comparison

முனைவர் காமராஜ் எஸ்.,
இளநிலை வள அலுவலர், எல்.டி.சி.ஐ.எல்.,
இந்திய மொழிகளின் மத்திய நிறுவனம், மைசூரு.
Dr. Kamaraj S,
Junior Resource Person, LDCIL, Central Institute of Indian Languages, Mysore
Email: kamarajmunnar@gmail.com ORCID:

Abstract:

Languages are the root of the cultural diversity of South India. In this rich landscape, Tamil and Telugu, two Dravidian languages, stand out with their monumental literary traditions and social contributions. Although belonging to the same Dravidian family, they differ in their unique pronunciation, grammar, script, and vocabulary. Exploring the similarities and differences between these two languages will be a fascinating journey for language enthusiasts. This article elaborates on the origins, linguistic characteristics, and cultural relevance of both Tamil and Telugu languages, comparing them in detail.

Keywords: Tamil – Telugu - Dravidian languages - literary heritage - cultural and social fabric

ஆய்வுச் சுருக்கம்:

தென்னிந்தியாவின் கலாச்சாரப் பன்முகத்தன்மைக்கு மொழிகள் ஆணிவேராக அமைந்துள்ளன. இந்த வளமான நிலப்பரப்பில், தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரு திராவிட மொழிகள், தங்கள் பிரம்மாண்டமான இலக்கிய மரபுகளாலும், சமூகப் பங்களிப்பாலும் தனித்துவம் பெற்று விளங்குகின்றன. ஒரே திராவிடக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளாக இருந்தாலும், அவை தங்கள் தனித்துவமான உச்சரிப்பு, இலக்கணம், எழுத்து வடிவம் மற்றும் சொற்களஞ்சியத்தால் வேறுபடுகின்றன. இந்த இரண்டு மொழிகளுக்கு இடையிலான ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் ஆராய்வது, மொழி ஆர்வலர்களுக்கு ஒரு கவர்ச்சியான பயணமாக அமையும். இந்தக் கட்டுரை தமிழ் தெலுங்கு ஆகிய இரு மொழிகளின் தோற்றம், மொழியியல் பண்புகள் மற்றும் கலாச்சாரப் பொருத்தங்களை விரிவாக ஒப்பிடுகிறது.

திறவுச்சொற்கள்: தமிழ் – தெலுங்கு – திராவிட மொழிகள் – இலக்கிய பாரம்பரியம் – கலாச்சார மற்றும் சமூக அமைப்பு

முன்னுரை

இந்தக் கட்டுரை தமிழ் தெலுங்கு ஆகிய இரு மொழிகளின் தோற்றம், மொழியியல் பண்புகள் மற்றும் கலாச்சாரப் பொருத்தங்களை விரிவாக ஒப்பிடுகிறது.

Tamilmanam

வரலாற்றுப் பின்னணி

தமிழ்

தமிழ் உலகின் மிகப் பழமையான மொழிகளில் ஒன்றாகும்; இதன் வரலாறு 2000 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்தது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் அதிகாரப்பூர்வ மொழியாகவும், இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்றாகவும் உள்ளது. மலேசியா, மொரீஷியஸ், பிஜி, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளிலும் தமிழர்கள் தமிழைப் பேசுகின்றனர்.

தமிழ் இந்திய அரசால் “செம்மொழி” (Classical Language) என அங்கீகரித்துள்ளது. கிமு 3 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் தமிழில் காணப்படுகின்றன. தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை தமிழின் இலக்கியப் பெருமைகள் ஆகும்.

தெலுங்கு

தெலுங்கு திராவிட மொழிக் குடும்பத்தின் மிகப்பெரிய கிளையாகும். இது ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானா மாநிலங்களின் அதிகாரப்பூர்வ மொழியாகும். 21 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இதை 75 மில்லியனுக்கும் மேற்பட்டோர் பேசினர்.

தெலுங்கின் எழுத்து முறை 6 - ஆம் நூற்றாண்டு சாளுக்கியரின் எழுத்துருவிலிருந்து தோன்றியது; இது கன்னட எழுத்துமுறையுடன் தொடர்புடையது.

தெலுங்கு இலக்கியம் 11 - ஆம் நூற்றாண்டில் நன்னையாவின் மகாபாரதம் மொழிபெயர்ப்பின் மூலம் ஆரம்பமானது.

எழுத்துகள்

தமிழில் 12 உயிர் எழுத்துகளும் 18 மெய் எழுத்துகளும் உள்ளன.

தெலுங்கில் 16 உயிர் (இணை உயிர்களுடன்) மற்றும் 36 மெய் எழுத்துகள் காணப்படுகின்றன.

ஒலியியல் பண்புகள்

தமிழ் மொழியில் /b/, /d/, /g/ போன்ற ஒலிகள் இல்லை; அவற்றிற்கு பதிலாக /p/, /t/, /k/ போன்ற ஓசைகள் பயன்படுத்தப்படுகின்றன.

தெலுங்கு மொழியில் ஒலியியல் பரவல் அதிகம்; ஒலிப்புள்ளி, ஒலியில்லா, aspirated, unaspirated போன்ற ஒலிகள் அனைத்தும் காணப்படுகின்றன. இதனால் அது சமஸ்கிருதம் போன்ற வடமொழிகளின் ஒலியியல் செறிவை ஒத்துள்ளது.

உச்சரிப்பு

தமிழ் ஒலிப்பெயர்ச்சியில் ஒற்றுமை அதிகம்; ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு தனித் தொனி இருப்பதால் கற்றுக்கொள்வது எளிது.

தெலுங்கில் ஒலிகள் அதிகம்; சில்லுக் கட்டமைப்புகள் சிக்கலானவை.

எழுத்து முறை

தமிழ்

தமிழ் எழுத்து அபுகிதா (abugida) வகையைச் சேர்ந்தது. ஒவ்வொரு மெய்யிலும் இயல்பாக ஒரு உயிர் ஒலி இருப்பதுடன், உயிர் குறியீடுகளால் மாற்றங்கள் காணப்படும். 12 உயிர், 18 மெய், 1 ஆய்த எழுத்து கொண்டது. தமிழெழுத்து எளிமையுடனும் அழகுடனும் காணப்படுகிறது.

தெலுங்கு

தெலுங்கு எழுத்தும் அபுகிதா முறைதான்; ஆனால் அதன் எழுத்துருக்கள் சிக்கலான வட்ட வடிவங்கள் கொண்டவை. 16 உயிர், 36 மெய், பல்வேறு நாசிக ஒலிக்குறிகள் உட்பட பல அடையாளங்கள் உள்ளன.

ஒப்பீடு

இரண்டும் பிராமி எழுத்திலிருந்து தோன்றினாலும், தமிழெழுத்து எளிமையாக வளர்ந்தது; தெலுங்கு எழுத்து அலங்காரம் மிகுந்த வடிவமைப்பைப் பெற்றது.

இலக்கணம்

பெயர் மற்றும் சிறப்புப்பெயர்கள்

இரண்டிலும் எண்ணிக்கையும் (ஏகவசனம், பன்மை) வினாப் பெயர்ச்சியும் (case) காணப்படுகிறது. தமிழில் 8 வகை வினாப் பெயர்ச்சிகள், தெலுங்கில் 7 காணப்படுகின்றன.

வினைச்சொற்கள்

இரண்டிலும் காலம், நிலை, செயல்பாடு அடிப்படையில் வினைமுற்றுகள் அமைவதுடன், தமிழின் வினைச்சொற்கள் எளிமையாகவும் முறைப்படியாகவும் உள்ளன. தெலுங்கில் வினைமுற்றுகள் பல வடிவங்களிலும் சில இடங்களில் ஒழுங்கற்ற முறையிலும் காணப்படுகின்றன.

சொல் வரிசை

இரண்டிலும் பொருள் – வினைமுற்று (SOV) வரிசை காணப்படுகிறது. ஆனால் தமிழ் வரிசை முறையில் கடுமையான ஒழுங்கைக் கடைப்பிடிக்கிறது; தெலுங்கில் சிறு சுதந்திரம் உள்ளது.

உதாரணம் :

தமிழ்: நான் ஒரு புத்தகம் படிக்கிறேன் (Naan oru puthagam padikkiren)

தெலுங்கு: (Nenu oka pustakam chaduvuthunnanu)

சொற்களஞ்சிய ஒப்பீடு (தமிழ் – தெலுங்கு)

சமாதானம் - சாந்தி

அன்பு - பிரேம

பாதை - மார்க்கம்

இதயம் - குண்டே

தூங்கு - நித்ர

பிறமொழிச் சொற்கள்

தமிழ் சமஸ்கிருதச் சொற்களை ஏற்க மறுத்து புழக்கச் சொற்களை வளர்த்தது. தெலுங்கில் சமஸ்கிருதச் சொற்கள் பரவலாகப் பயன்படுகின்றன, குறிப்பாக இலக்கிய வடிவங்களில்.

பொதுவான சொற்கள்

நீர் → தமிழ்: தண்ணீர் / தெலுங்கு: (neeru)

தாய் → தமிழ்: அம்மா / தெலுங்கு: அம்மா

தனித்தன்மைச் சொற்கள்

தமிழ் "அரசு" என்றால் அரசு / ராஜ்யம் தெலுங்கு.

இலக்கியமும் கலாச்சாரப் பங்களிப்பும்

தமிழ் இலக்கியம்

சங்க இலக்கியம் (கிமு 300–கிபி 300) உலகின் மிகப் பழமையான இலக்கியத் தொகுப்புகளில் ஒன்று. திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை செம்மொழித் தமிழின் பெருமைகளை உணர்த்துகின்றன.

தெலுங்கு இலக்கியம்

நன்னையாவின் மகாபாரதம் மொழிபெயர்ப்பு முதல், சோமநாதா, ஸ்ரீநாதா, தெனாலி ராமகிருஷ்ணா ஆகியோரால் வளம்பெற்றது. விஜயநகரக் காலம் (14–17ம் நூற்றாண்டு) தெலுங்கு இலக்கியத்தின் பொற்காலம் எனக் கருதப்படுகிறது.

ஒப்பீடு

இரண்டிலும் திராவிடப் பாரம்பரியம் பிரதிபலிக்கிறது. இரு இலக்கியங்களும் இந்திய கலாச்சாரத்தில் நிலையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

நவீனப் பயன்பாடு

தமிழ்

உலகம் முழுவதும் 75 மில்லியனுக்கும் மேற்பட்டோர் பேசுகின்றனர். தமிழ்நாடு, புதுச்சேரி, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய இடங்களில் விரிவாகப் பயன்படுத்தப்படுகிறது. தமிழ் ஊடகம் — செய்தித்தாள்கள், தொலைக்காட்சிகள், இணைய தளங்கள் — செழித்துள்ளது.

தெலுங்கு

80 மில்லியனுக்கும் மேற்பட்டோர் பேசும் தெலுங்கு, இந்தியாவில் மூன்றாவது அதிகப் பேசப்படும் மொழியாகும். தொலைக்காட்சி, நாளிதழ், இணையம் ஆகிய தளங்களில் பரவலாக பயன்படுகிறது. தெலுங்குத் திரைப்படத் துறை "தாலிவுட்" (Tollywood) இந்தியாவின் பெரிய திரைப்படத் துறைகளில் ஒன்றாகும்.

மொழி பாதுகாப்பு மற்றும் கற்றல் :

தமிழ்நாட்டிலும் ஆந்திரா–தெலங்கானாவிலும் மொழிக் கல்வியை ஊக்குவிக்கும் அரசுத் திட்டங்கள் இயங்குகின்றன. இணையவழி பாடத்திட்டங்கள், செயலி, மொழிக் கற்றல் தளங்கள் என இருமொழிகளுக்கும் வலுவான கல்வி ஆதரவு உள்ளது.

முடிவுரை

தமிழும் தெலுங்கும் திராவிட மொழிக் குடும்பத்தின் முக்கிய பிரதிநிதிகள். வேரில் ஒற்றுமை இருந்தாலும், ஒலியியல், இலக்கணம், எழுத்துமுறை, சொற்களஞ்சியம் ஆகிய துறைகளில் தனித்துவமான பண்புகள் உள்ளன. தமிழ் அதன் செம்மொழி மரபு மற்றும் எளிய எழுத்துமுறையால் சிறந்து விளங்குகிறது; தெலுங்கு அதன் இசைநயமான ஒலியியல் அமைப்பு மற்றும் சிக்கலான எழுத்துமுறையால் சிறப்புப் பெற்றது. இவ்விரு மொழிகளையும் ஆராய்வது தென்னிந்தியாவின் மொழியியல் மற்றும் கலாச்சாரச் செழிப்பை அறிய ஒரு மனமகிழ்ச்சியான அனுபவமாகும்.

References:

1. Giriprakash D.S., Anandakumar P., 1987, History of Telugu Literature, Parthiban Publishing House, Madurai.
2. Krishnamurthy V. (M.A.), 1987, Telugu Literature at a Glance, Parinilayam, Chennai
3. Caldwell, R., (2019) Dravida Mozhigalin Oppilakkanam, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.
4. Caldwell, R., (1875) A Comparative Grammar of the Dravidian or South-Indian Family of Languages, Trubner, United Kingdom.
5. Caldwell, R., Govindan, K., Ratnam, K., (1992) Dravida Mozhigalin Oppilakkanam: Mulumaiyum, Thirumakal Nilayam, Chennai, India
6. John Samuel, G., (2021) Dravida Mozhiyil oppavaivu, Paari Nilaiyam, Chennai, India.
7. Sakthivel, S., (2001) Tamil Mozhi Varalaru, Tamil University, Madurai, India.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723 pISSN:: 3107-7781
Vol. 4 Issue: 01 October 2025

பிற்கால ஆற்றுப்படை இலக்கியங்களின் பொருண்மை மாற்றங்கள்
Theme changes in later Aatrupadai literature

ஐஸ்வர்யா ச[1], முனைவர். நீ. பகவதியம்மாள்[2],
[1]முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
பூ.சா.கோ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை.
[2]நெறியாளர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு),
பூ.சா.கோ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை.

[1] **Ishwarya C**, Ph.D. Scholar, Department of Tamil, PSG college of arts & science, Coimbatore.
Email: ishwaryasekar810@gmail.com
[2] **Dr. N. Bhagawathiammal**, Guide, Department of Tamil (Self-Financing Section), P.S.G. College of Arts and Science, Coimbatore.

Abstract

Many new literary genres have emerged in the Tamil literary landscape over time. These genres are created in harmony with the traditions laid down by their ancestors and with the innovations of the changing times as their main theme. The tendency of poets to use contemporary lifestyle practices as literary themes is increasingly seen in today's Tamil literary world. Based on some of the primary elements of earlier literary forms, poets create contemporary literary forms that are relevant to the changing times The Aatrupadai, which are the extra books of the Pattupada set in the Sangappanuval, an ancient Tamil literature, have the distinction of illustrating the life traditions of the artists. During the Aatrupadai Prabandha period, many Aatrupadai books emerged as a separate literature. Subsequently, it can be seen that in modern times, they are being sung with many changes in content and in a context that suits the context. This article examines the origins of such literary works, their development, definition, and changes in meaning in the literary world.

Keywords: *Art, artists, language, red Tamil art, technology, internet art, devotion, literary art, education, student art.*

ஆய்வுச் சுருக்கம்:

தமிழிலக்கியப் பரப்பில் காலங்காலமாகப் பல புதிய இலக்கிய வகையினங்கள் (genres) உருவாகியுள்ளன. இவை, முன்னோர்கள் வகுத்தளித்த மரபுகளோடு இயைந்தும், மாறிவரும் காலத்திற்கேற்ற புதுமைகளை முதன்மைக் கருப்பொருளாகக் கொண்டும் படைக்கப்படுகின்றன. கவிஞர்கள் சமகால வாழ்க்கை நடைமுறைகளை இலக்கியக் கருப்பொருளாக்கும் போக்கு இன்றைய தமிழிலக்கிய உலகில் பெருகியிருப்பதைக் காணமுடிகிறது. முந்தைய இலக்கிய வடிவங்களின் சில அடிப்படைக் கூறுகளையும், அதன் முதன்மைக் கூறுகளையும் அடிப்படையாகக் கொண்டு, மாறிவரும் காலத்திற்குப் பொருத்தமான சமகால இலக்கிய வடிவங்களை கவிஞர்கள் உருவாக்குகின்றனர்.

பழந்தமிழிலக்கியமான சங்கப் பனுவலில் உள்ள பத்துப்பாட்டுத் தொகுப்பில் அமைந்துள்ள ஆற்றுப்படை நூல்கள், அக்காலக் கலைஞர்களின் வாழ்வியல் மரபுகளைச் சித்திரிக்கின்ற தனிச்சிறப்பைப் பெற்றுள்ளன. பிற்கால ஆற்றுப்படைப் பிரபந்தம் எனும் காலகட்டத்தில், பல ஆற்றுப்படை நூல்கள் தனித்ததோர் இலக்கியமாகச் செழித்து வளர்ந்தன. அதன் பின்னரே, நவீன காலத்தில் ஆற்றுப்படை நூல்கள் உள்ளடக்கத்தில் பல மாற்றங்களுடன், சூழலுக்குப் பொருத்தமான ஒரு பின்னணியில் பாடப்படுவதைக் காணமுடிகிறது.

இக்கட்டுரை, அத்தகைய இலக்கியப் படைப்புகளின் தோற்றம் (origins), அவற்றின் வளர்ச்சி, இலக்கணம் (definition) மற்றும் இலக்கிய உலகில் அவை அடைந்த பொருள் மாற்றங்கள் (changes in meaning) குறித்து விரிவாக ஆராய்கிறது.

சிறப்புச் சொற்கள்: ஆற்றுப்படை, கலைஞர்கள், மொழி, செந்தமிழாற்றுப்படை, தொழில்நுட்ப இணைய ஆற்றுப்படை, பக்தி, புலவராற்றுப்படை, கல்வி, மாணக்கராற்றுப்படை

முன்னுரை:

தமிழிலக்கியப் பரப்பில் காலந்தோறும் புதிய பல இலக்கிய வகைகள் தோன்றியுள்ளன. அவ்விலக்கியங்கள் முன்னோர் வகுத்த மரபுகளோடு பொருந்தியும் காலமாற்றத்திற்கான புதுமைகளைப் பாடுபொருளாகக் கொண்டும் படைக்கப் படுகின்றன. தற்கால வாழ்வியல் நடைமுறையிலுள்ள பழக்கவழக்கங்களை இலக்கியத்தில் பாடுபொருளாக அமைத்துப் பாடுவதைப் புலவர்கள் பெரிதும் விரும்பக்கூடிய போக்கு இன்றைய தமிழிலக்கிய உலகில் அதிகமாகக் காணப்படுகிறது. முன்னைய இலக்கிய வடிவங்களில் அமைந்த சில முதன்மைக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு புலவர்கள் தற்காலத்தில் காலமாற்றத்திற்குரிய வகையில் இலக்கிய வடிவங்களை உருவாக்குகின்றனர்.

பழந்தமிழ் இலக்கியமாகிய சங்கப்பனுவலில் அமைந்த பத்துப்பாட்டின் புறநூல்களான ஆற்றுப்படைகள் கலைஞர்களின் வாழ்வியல் மரபுகளை எடுத்துக்காட்டும் சிறப்பினைக் கொண்டது. அவ்வாற்றுப்படை பிரபந்த காலகட்டத்தில் தனித்த இலக்கியமாக மலர்ந்து பல ஆற்றுப்படை நூல்கள் தோன்றின. அதைத்தொடர்ந்து, தற்காலத்தில் புதுமையான நோக்கில் பொருண்மையில் பல மாற்றங்களைக் கொண்டதாகச் சூழலுக்கேற்ற நிலையில் பாடப்பட்டு வருவதைக் காணலாம். அத்தகைய, ஆற்றுப்படை இலக்கியத்தின் தோற்றுவாய், இலக்கிய உலகில் கண்ட வளர்ச்சிநிலை, வரையறை, பாடுபொருள் மாற்றங்கள் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

ஆற்றுப்படை அறிமுகம்

சங்க காலத்தில் கலைகள் தழைத்தோங்கி இருந்தன. அக்கலைகள் வளர்ச்சியுறுவதற்குப் பாணர், கூத்தர், பொருநர், விறலியர் முதலிய கலைஞர்கள் துணைசெய்தனர். கலைகள் வளர்ச்சியடைந்தாலும் கலைஞர்களின் வாழ்வியல் வறுமையில் இருந்தது. கலைஞர்கள் தம்முடைய வறுமையைப் போக்கிக் கொள்ள அரசர்களையும் வள்ளல்களையும் நாடிச்சென்று அலைகுடிகளாக வாழ்ந்தனர். பழங்கால அரசர்கள் கலையார்வம் கொண்டவர்களாதலின் தம்மை நாடி வரும் கலைஞர்களைப் பெரிதும் போற்றி, வேண்டியதை வேண்டியாங்கு கொடுத்து மகிழ்ந்தனர். கலைஞர்களும் தமக்குப் பரிசில்கொடுத்த அரசனின் சிறப்பை மறவாது புகழ்ந்துள்ளனர். தம்மைப்போல் வறுமையில் வாடும் கலைஞர்களை

அரசனிடம் வழிப்படுத்திய நிகழ்வே ஆற்றுப்படையின் தோற்றுவாயாக அமைகிறது. அதேபோன்று, தமிழுக்கெனத் தோன்றிய தனித்த இலக்கிய வகையாக ஆற்றுப்படை விளங்குகிறது. ஏனெனில், பிறமொழிகளில் ஆற்றுப்படுத்தல் எனும் நிலையில் தோன்றிய இலக்கிய வகைகள் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆற்றுப்படையின் இலக்கணம்

ஆற்றுப்படை என்பது கூத்தர் முதலியவர்களில் ஒருவர் கொடையாளி யொருவன்பாற்சென்று தாம்பெற்ற பெருஞ்செல்வத்தை, எதிர்வந்த இரவலர்களுக்கு அறிவுறுத்தி அவரும் அவன்பாற்சென்று தாம் பெற்றவற்றையெல்லாம் பெறுமாறு வழிப்படுத்துதல் ஆகும். ஆறு - வழி, படை – படுத்தல் என ஆற்றுப்படை என்ற பதத்தை விரித்துக்கூறலாம். ஆற்றுப்படையின் வரையறையைத் தொல்காப்பியர் புறத்திணையியயில்,

“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்”

(தொல்.பொருள் - 88)

என்ற நூற்பாவின் மூலம் எடுத்துரைக்கின்றார். தொல்காப்பியர் கூறும் கூத்தர், பாணர், பொருநர், விறலியரோடு புலவரையும் சேர்த்து ஆற்றுப்படுத்துதலுக்கு உரியோராகப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. இக்கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பாடாண் திணையில் புறப்பொருள் வெண்பாமாலை இலக்கணம் வகுத்தும் காட்டுகிறது. இதனை,

“சேணோக்கிய வரையதரிற்
புரணனை ஆற்றுப்படுத்தன்று”

(புறம். பொருள் - 28)

“ஏத்திச் சென்ற இரவலன்
கூத்தரை ஆற்றுப்படுத்தன்று”

(மேலது - 29)

“பெருநல்லான் உழையீராகெனப்
பொருநனை ஆற்றுப்படுத்தன்று”

(மேலது - 30)

“திறல் வேந்தன் புகழ்பாடும்
விறலியை ஆற்றுப்படுத்தன்று”

(மேலது - 32)

“இருங்கண் வானத் திமையோருழைப்
பெரும் புலவனை ஆற்றுப்படுத்தன்று”

(மேலது - 42)

என்ற சூத்திரங்களின் மூலம் உணரலாம். சங்க இலக்கியத்தில் அமைந்த பத்துப்பாட்டில் மட்டுமன்றி, பதிற்றுப்பத்து, புறநானூறு முதலிய நூல்களிலும் ஆற்றுப்படைக்குரிய சான்றுகளும் வரையறைகளும் இடம்பெற்றுள்ளன. சான்றாக, பதிற்றுப்பத்தில் கபிலர், செல்வக்கடுங்கோ வாழியாதனிடம் பாணன் ஒருவனை ஆற்றுப்படுத்தும் செய்தி இடம்பெற்றுள்ளது. இதனை,

"கொடுமணல் பட்ட நெடுமொழி யொக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்
கல்லுயர் நேரிப் பொருநன்
செல்வக் கோமாற் பாடினை செலினே "

(பதிற்று - 67)

என்ற பாடலானது எடுத்தியம்புகின்றது. இதேபோன்று புறநானூற்றிலும் பாணன், விறலி, புலவர் முதலியோர் ஆற்றுப்படுத்தப்பட்ட செய்திகள் அமைந்துள்ளன. கோவூர்கிழார், சோழன் நலங்கிள்ளியின் கொடைத்தன்மையைக் கூறி அவனிடம் ஒரு பாணனை ஆற்றுப்படுத்தியது (புறம்.பா.எ-68). வையாவிக் கோப்பெரும் பேகனிடம் பரணர் அவன் கொடைத்திறங்கூறி ஒரு புலவரை ஆற்றுப்படுத்தியது, (மேலது.பா.எ -141). விறலியை நெடும்பல்லியத்தினார் என்ற புலவர் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியிடம் ஆற்றுப்படுத்தியது (மேலது.பா.எ - 64) என ஆற்றுப்படைக்குரிய கூறுகள் புறநானூற்றின் பலவிடங்களில் அமைந்திருப்பதைக் காணலாம்.

சிற்றிலக்கிய வகைப்பாடும் ஆற்றுப்படை இலக்கியமும்

மரபுவழி வந்த இலக்கிய வடிவங்களின் சில கூறுகளை முதன்மையாகக் கொண்டு அளவில் சிறியதாகப் படைக்கப்படுபவையே சிற்றிலக்கியங்கள் ஆகும். இவ்விலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகை உறுதிப் பொருள்களில் ஒன்றினை மட்டும் சிறப்பித்து, இறைவன், அரசன், வள்ளல்களைப் பாடுபொருளாகக் கொண்டு பாடப்படுகின்றன. இச்சிற்றிலக்கியம் பிரபந்தம் என வழங்கப்படுகிறது. பிரபந்தம் என்பது வடச்சொல். இதன் பொருள் நன்கு கட்டப்பட்டது என்பதாகும். செய்யுள், யாப்பு என்பன தமிழில் இப்பொருள் தழுவியனவாகும். பிரபந்தம் என்ற சொல் செம்மையாக ஆக்கப்பட்ட எல்லா இலக்கியங்களையும் குறிக்கும்.

பாட்டியல் நூல்களில் ஆற்றுப்படையின் இலக்கணம்

சிற்றிலக்கிய நூல்களின் இலக்கணத்தை வரையறுத்துக் கூறுவதாகப் பாட்டியல் நூல்கள் அமைகின்றன. முன்னோர் கூறிய நெறியினை அடியொற்றி எழுந்த பிரபந்தங்கள், காலமாற்றத்திற்கேற்ற வகையில் வழு களைந்து ஆக்கப்பட்ட பிரபந்தங்கள் எனப் பலவற்றிற்கும் பாட்டியல் நூல்கள் இலக்கணம் வகுத்துக் கூறியுள்ளன. அந்நிலையில் சங்க மரபைப் பின்பற்றி எழுந்த ஆற்றுப்படையின் இலக்கணத்தையும் பாட்டியல் நூல்கள் எடுத்துரைத்துள்ளன. பன்னிரு பாட்டியல் ஆற்றுப்படையின் இலக்கணத்தைக் கூறும்போது, புறப்பொருள் வெண்பாமாலை கூறிய கருத்தைப் பின்பற்றி, முறை வைப்பை மட்டும் மாற்றி இலக்கணம் தந்துள்ளது. இதனை,

"புரவலன் பரிசில் கொண்ட மீண்ட

இரவலன் வெயில்தோறும் இருங்கான திரண்ட

வறுமையுடன் வரூஉம் புலவர் பாணர்

பொருநர் விறலியர் கூத்தர் கண்டுஅப்

புரவலன் நாடுஊர் பெயர்க் கொண்ட பராஅய்

ஆங்கு நீர் செல்க என விடுப்பது ஆற்றுப்படை"

(320)

என்ற சூத்திரத்தால் அறியமுடிகிறது. மேலும், ஆற்றுப்படை அகவற்பாவில் மட்டும் பாடப்படும் என்பதை,

"ஓங்கிய அதுதான் அகவலின் வருமே"

(மேலது-321)

என உணர்த்தியுள்ளது. சிதம்பரப்பாட்டியல் ஆற்றுப்படையின் இலக்கணத்தைச் சுட்டும் போது ஆற்றுப்படை ஆசிரியப்பாவால் மட்டுமே பாடப்பட வேண்டும் எனக் கூறியுள்ளது. ஆற்றுப்படைக்குரியோராகப் பாணர், பொருநர், கூத்தர், புலவரை மட்டும் கூறி, விறலியரைக் குறிப்பிடவில்லை. அதேபோல், பரிசில் பெறச்செல்லும் கலைஞர்கள் போகும் பாதை, பரிசில்கள் பற்றிய குறிப்புகளும் சிதம்பரப்பாட்டியலில் இடம்பெறவில்லை. இதனை,

"புகழ கவலாற் புலவர் பாணர் கூத்தர்

பொருநர் முதல வரையாற் றெதிர்ப் பாடாகப்

பகரும தாற்றுப் படையாம்"

(சித. பாட். சூ - 8)

எனும் சூத்திரமானது எடுத்தியம்புகிறது. பழந்தமிழ் இலக்கண நூல்களும், பாட்டியல் நூல்களும் கூறிய வரையறையை அடியொற்றிப் பாடப்பட்டு வந்த ஆற்றுப்படைக்கு அணிசேர்க்கும் வகையில் பிற்காலத்தில் பல ஆற்றுப்படை நூல்கள் புதிய பாடுபொருள்களுடன் தோன்றி வளர்ந்தன. தொடக்க காலத்தில் அரசனை மட்டுமே வாழ்த்திப் பாடிவந்த ஆற்றுப்படை இலக்கியம் பின்னாளில் தெய்வம், புலவர்கள், நெஞ்சம், தனிநபர் மீது பாடும் பிரபந்தமாகப் புத்தாக்கம் பெற்றது.

பாடுபொருளும் பிற்கால ஆற்றுப்படை நூல்களும்

கவிஞன் தன் வாழ்வில் கண்டுணர்ந்த அனுபவத்தின் மீது கற்பனையைப் புகுத்தியோ சமூகத்தில் உள்ள சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் நோக்கிலோ நடைமுறைக்கேற்ற கருத்தியல்களைப் படைப்புகளாக உருவாக்குகின்றான். அப்படைப்புகள் இலக்கிய உலகில் உள்ள முன்னைய இலக்கியங்களின் கூறுகளைக் கொண்டு சிற்சில மாற்றங்களுடன் படைக்கப்படுவது இலக்கிய உலகில் பொதுவான செயல்பாடாக அமைகிறது. அந்நோக்கில் ஆற்றுப்படை என்ற இலக்கிய வடிவம் செவ்வியல் காலந்தொடங்கி, இடைக்காலத்தில் பிரபந்தமாக மலர்ந்து தற்காலத்திலும் புதுமைகளுக்கேற்ற இலக்கிய வகையாகத் திகழ்ந்து வருகிறது.

சமூகத்தில் உள்ள சிக்கல்களை மையக்கருவாகக் கொண்டு அதற்குத் தீர்வுகாண முயற்சிக்கும் படைப்பாளன் தனக்குரிய உத்தியாக இலக்கியத்தைக் கையாளுகிறான். அதிலும் இலக்கண மரபோடு இலக்கியத்தை உருவாக்கும் போது பழமையின் சுவடோடு சூழலுக்கேற்ற புதுமைகளைப் புகுத்திக்காட்டல் சிறந்தது என எண்ணுகிறான். தன் உணர்வுக்கும் சமூக மாற்றத்திற்கும் உரிய பாடுபொருள்களையும் அமைக்கின்றான். சமூகத்திலுள்ள பொருளாதாரத் தட்டுப்பாடு, வேலையில்லாத நிலை, பகுத்தறிவு சிந்தனையற்ற மூடநம்பிக்கைகள், பெண்ணிய ஒடுக்குமுறைகள், கல்விமேம்பாடு, இளைஞர்களின் தற்கால நிலைப்பாடு, தீண்டாமை, சமூகச் சுரண்டல்கள், இயற்கைப்பேரழிவு, நீர்நிலை ஆக்கரமிப்பு, சுற்றுப்புற மாசுபாடு, அதிகாரத்துவம் முதலியவை பற்றிய பார்வைகள் தற்காலச் சமூகத்திற்குப் பெரிதும் தேவைப்படும் பாடுபொருள்களாக இலக்கியங்களில் பதிவுசெய்யப்படுகின்றன. இவற்றோடு அறிவியல் சார்ந்த கண்ணோட்டம், மனிதவுணர்வு, வரலாற்றுப்பின்புலம் முதலியவை அதிகமான ஈர்ப்பைப் பெறுகின்ற பாடுபொருள்களாக அமைகின்றன. அந்நோக்கில் பிற்கால ஆற்றுப்படை இலக்கியங்கள் இறைவன், அருளாளர்கள், கல்வி, அறிஞர்கள், சமூகம், மொழி, தொழிற்நுட்பம், தொல்மரபுகள், அகவுணர்வு முதலியவை சார்ந்து எழுதப்பட்டுள்ளன.

மொழி சார்ந்து தோன்றிய ஆற்றுப்படை நூல்கள்

ஒரு மொழியின் வளர்ச்சியே சமூக மாறுதலுக்கும் கட்டமைப்பிற்கும் உறுதுணையாக இருக்கிறது. அம்மொழி காலமாறுதலுக்கு உட்படும் போது அதனுள் சீர்த்திருத்தக் கருத்தியல்கள் உருவாகின்றன. அதிலும், தமிழ்மொழி பல நூற்றாண்டுகளைக் கடந்தும் தன் சீரிளம் மாறாத் தன்மையால் பல இலக்கிய வடிவங்கள் தோன்றுவதற்குக் களம் அமைத்துத் தந்துள்ளது எனலாம். மொழி சார்ந்து எழுந்த தமிழின் ஆற்றுப்படை நூல்களாகச் செந்தமிழாற்றுப்படை, செந்தமிழ் தொண்டர் ஆற்றுப்படை, தமிழ்மகள் ஆற்றுப்படை, சொற்பொழிவாற்றுப்படை முதலியவை விளங்குகின்றன.

செந்தமிழாற்றுப்படை

தமிழினைக் கற்றத் தமிழன் ஒருவன், தமிழைக் கற்காத மற்றொரு தமிழனைத் தமிழ்க்கற்றுத் தாய்நாட்டிற்குத் தொண்டுபுரிய வேண்டும் எனத் தமிழ்த்தாயிடம் ஆற்றுப்படுத்துவதாக இவ்வாற்றுப்படை பாடப்பட்டுள்ளது. தமிழனையும், தமிழன்னையையும் குறிக்கும் பொதுச்சொல்லாகச் செந்தமிழாற்றுப்படை எனும் பெயர் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் புலவர் சுந்தரசண்முகனார் ஆவார். இவர் 1951 ஆம் ஆண்டு புதுவைக் கல்விக்கழகத்தின் வெள்ளி விழா நிகழ்வின் இந்நூலை அரங்கேற்றியுள்ளார். தமிழை வாழ்த்தித் தொடங்கும் இவ்வாற்றுப்படை நிலைமண்டில ஆசிரியத்தில் அமைந்த 519 அடிகளைக் கொண்டுள்ளது. இதில் தமிழ் மகன் நிலை, வாழ்க்கைச்சூழல், தமிழின் வளர்ச்சிநிலை, தற்காலத் தமிழ்ச்சான்றோரின் மாண்பு, தமிழன்னையின் அறிவுறுத்தல், வாழ்வு சிறப்பதற்கான வழிவகைகள், நன்றியுணர்வு முதலிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

செந்தமிழ் தொண்டர் ஆற்றுப்படை

இந்நூலினைத் தனித்தமிழ்த் தென்றல் காரை இறையடியான் என்பவர் பாடியுள்ளார். புதுமை நோக்கில் எழுந்த இவ்வாற்றுப்படை செந்தமிழ்த் தொண்டர் சிவ. கண்ணப்பாவைப் பாட்டுடைத்

தலைவனாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது. செந்தமிழ்த் தொண்டர் சிவ.கண்ணப்பாவால் பட்டமும் பாராட்டும் பெற்ற இந்நூலாசிரியர், அத்தகைய சிறப்பினை மற்றொரு பாவலனும் பெறவேண்டும் என விரும்பிப் பாடுவதாக அமைந்துள்ளது. இந்நூல் தமிழில் தோன்றிய ஆற்றுப்படை நூல்களிலேயே அளவில் பெரியதாக 1072 அடிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. இவ்வாற்றுப்படை புதுவை நகரத்தின் இயற்கை வளம், காரைக்காலின் பெருமைகள், பாட்டுடைத்தலைவராகிய சிவ.கண்ணப்பாவின் பண்புநலன்கள், புதுவைவின் அரசியல் தலைவர்கள், அறிஞர்கள், புலவர்கள், புரவலர்கள் முதலியோர்களின் குறிப்புகள் போன்றவற்றைக் கூறுவதாக அமைந்துள்ளது. ஆற்றுப்படை நூலாயினும் வரலாற்றுப்பதிவுகளை எடுத்துக்காட்டும் வரலாற்றியல் நூல் போல அரிக்கமேட்டு அகழ்வாய்வு, வீராம்பட்டினச் சிறப்பு முதலியவற்றையும் கூறுகிறது. சமகாலச் சிந்தனைக்கு வித்திடும் நோக்கில் காவிரி பிரச்சனை, மதுவிலக்கு போன்ற சமூக அவலங்களையும் எடுத்துரைத்துள்ளது.

தமிழ்மகள் ஆற்றுப்படை

அ.கி.பரந்தாமன் எழுதிய பல கவிதைகளைத் தொகுத்து அவருடைய மகனாகிய அ.ப.சோமசுந்தரன் என்பார் 1994 ஆம் ஆண்டு பரந்தாமனார் கவிதைகள் எனும் நூலாக வெளியிட்டார். அந்நூலில் அமைந்த பல ஆற்றுப்படை நூல்களில் ஒன்றாகத் தமிழ்மகள் ஆற்றுப்படை விளங்குகிறது. தமிழ்மகளிடம் சென்று கல்வியறிவினைப் பெற்ற ஒருவன் அக்கல்வியைப் பெறவிரும்பும் மற்றொருவனை ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. இதில் தமிழ்மகளின் அழகுநலம், தமிழில் அமைந்த இலக்கியங்களின் சிறப்புகள், அயல்நாடுகளில் வளர்ந்து வரும் தமிழின் உயர்வு, தமிழ்ப்புலவர்களின் மாண்புகள், தமிழ்ச்சங்கச் செய்திகள், கடையெழு வள்ளல்கள் பற்றிய குறிப்புகள் முதலியவை அமைந்துள்ளன. தமிழுக்குப் புனையும் ஒரு ஆபரணம் போல் இந்நூல் அமையப்பெற்றுள்ளது.

சொற்பொழிவாற்றுப்படை

மதுரையில் உள்ள நான்காம் தமிழ்ச்சங்கத்தின் எட்டாம் ஆண்டு நிறைவு விழாவின் போது இந்நூல் வெளியிடப்பட்டது. இந்நூலின் ஆசிரியர் எஸ்.பால்வண்ண முதலியார் ஆவார். மேலை நாடுகளில் பேச்சுக்கலைக்கென்று தனித்த கழகங்கள் அமைத்து யாவரும் விரும்பும் வகையில் சுவைபடப் பேசிமுடிக்கும் தன்மையை வளர்த்து வருகின்றனர். ஆனால், தமிழ்மொழியில் பேச்சுக்கலையைப் பலரும் வியக்கும் நோக்கில் சிறப்புற பேசிடப் பயிற்சியளிக்கும் தனித்த கழகங்கள் இதுவரை இல்லை என்பதே உண்மை என நூலாசிரியர் குறிப்பிட்டு அதன்பொருட்டு பேச்சுக்கலைக்கு உயிரோட்டம் அளிக்கக்கருதி எழுதியதாகச் சொற்பொழிவாற்றுப் படை எனும் நூல் விளங்குகிறது. இதில் பேச்சுக்கலைக்குரிய தகுதிகளை இயல்கள் போலப் பகுத்து, சிறப்புப்பாயிரம், பொதுவியல், பேச்சுப்பயிலுமுறையியல், பேச்சுமுறையியல், வேசுவோனியல், பேசும் பொருளியல், அவையோர் நிலையியல், பேச்சின் பயனியல், பேசுநேரவியல், பிறன்கோண் மறுப்பியல், அவைத்தலைவரியல், முடிபியல் என நூலாசிரியர் வகுத்துரைக்கின்றார். பேச்சுக்கலைக்கு ஆற்றுப்படை வடிவில் அமைந்த முதல் நூல் இதுவென்று கூறலாம்.

தொழிற்நுட்பம் சார்ந்த ஆற்றுப்படை

தற்காலத் தமிழ்ச்சமூகம் அறிவியல் வளர்ச்சியில் விழியடைவு கொள்ள வகையில் பயணித்து வருகிறது. இவ்வுலகத்தையே ஒரு நொடியில் ஒன்றிணைக்கும் பொருளாக இணையம் மானுடத்தினுள் ஊடுருவிக்கிடக்கிறது. அந்த இணையத்தின் பயன்பாட்டினால் தொழிற்நுட்பம் வளர்ந்து செழித்தோங்கியுள்ளது. அத்தொழிற்நுட்ப வளர்ச்சியின் செயல்பாட்டை எடுத்துக்கூறும் நோக்கில் பிற்காலத்தில் பல நூல்கள் தோன்றியுள்ளன.

இணைய ஆற்றுப்படை

இன்றைய உலகின் நடப்பு நிகழ்வுகளை நொடிப்பொழுதில் கையகத்தில் கொண்டு சேர்க்கும் சாதனமாக இணையம் வளர்ந்துள்ளது. அந்த இணையம் உலகத்தின் தொழிற்நுட்ப வளர்ச்சிக்குத் துணைநின்று பல மாறுதல்களை நாளும் புரிந்துவருகிறது. அந்த இணையத்தின் தனித்தன்மையை எடுத்துக்கூறும் வகையில் புதுமையான கண்ணோட்டத்தில் எழுதப்பட்டது இணைய ஆற்றுப்படை எனும் நூலாகும். இதன் ஆசிரியர் முனைவர் மு. இளங்கோவன் ஆவார். ஆற்றுப்படை நெறிப்படி இணையத்தின் செயல்பாட்டைக் கற்ற ஒருவன் அந்த இணையச் செயல்பாட்டைக் கற்க விரும்பும் மற்றொருவனை ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் 563 அகவற்பா அடிகளைக் கொண்டதாகும். நூலினுள் தமிழகச்சிறப்பு, தமிழ் மக்களின் எழுச்சி, தமிழர்களின் உலகப்பரவல், இலங்கைத் தமிழரின் இன்னல் வாழ்வு, கணினி இணையத்தின் வரவு, இணையப் பல்கலைக்கழகங்களின் தோற்றம், உலகத்தமிழ் இணைய மாநாடு, வலையொளி பொழுதுபோக்கு, இணையத்தால் விளையும் பயன்கள், கூகுள் நிறுவனத்தின் கொடைகள், இணையத்தால் தமிழுக்கு விளைந்த பயன்பாடுகள் முதலிய கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

அழகியல் சார்ந்த ஆற்றுப்படை

உலகியலில் காணலாகும் செறிவுடை வனப்பினை உயர்வுபடுத்திக் கூறும் இலக்கியங்கள் காலந்தோறும் தோன்றியுள்ளன. அதிலமைந்த பொருள் நலமும் அழகியல் கூறும் சமூகத்திற்கு ஏற்புடைய கருத்தாக்கங்கள் பலவற்றை வெளிப்படுத்தியுள்ளன. இலக்கியத்தின் நிலைப்பேற்றிற்கு அழகியலின் கூறுகள் அடிப்படையானதாகும்.

அன்னை இயற்கை ஆற்றுப்படை

இந்நூலும் அ.கி.பரந்தாமன் எழுதிய பல கவிதைகளைத் தொகுத்தாக்கப்பட்ட பரந்தாமனார் கவிதைகள் எனும் நூலிலேயே இடம்பெற்றுள்ளது. இயற்கையின் பல பரிணாமங்களை அறிவியல் மற்றும் இலக்கியக் கண்ணோட்டத்துடன் எடுத்துக் காட்டும் பான்மையில் இந்நூல் அமைந்திருக்கிறது. இயற்கையை அன்னையாக உருவகப்படுத்தி, அந்த இயற்கை அன்னையிடம் அழகுநலம் பல கண்டு களித்த புலவன் ஒருவன் அதைக் காண விரும்பி தென்தமிழ்ச்சோலையில் புகுகின்ற செந்தமிழ்ப்புலவன் மற்றொருவனை ஆற்றுப்படுத்துவதாக இவ்வாற்றுப்படை பாடப்பட்டுள்ளது. இதில் அண்டவெளிகளின் தோற்றம், அண்டப்பொருள்களின் இருப்புநிலை, மனிதவுயிர்களின் பிறப்பியல் காரணங்கள், தாவர மற்றும் விலங்குகளின் அழகுநலம், நீர்நிலைகளின் உருவாக்கம், ஐம்பூதங்களின் நிலைப்பாடு

முதலியவை கூறப்பட்டுள்ளது. இயற்கையின் காரணிகள் அனைத்தும் இந்நூலினுள் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆங்கிலக்கவிஞர் வோர்ட்ஸ்வொர்த்தின் கவிதையின் மூலம் இயற்கையின் மீதான ஈர்ப்பினைத் தாம் பெற்றோம் என ஆற்றுப்படுத்துவோன் கூறுவது மேலைநாட்டு இலக்கியத்தாக்கம் தமிழிலக்கியங்களில் ஊடுருவிய தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

பக்தி சார்ந்த ஆற்றுப்படை

அறவுணர்வோடு மனிதநேயப் பண்பை வளர்ப்பது பக்தி. இறைவனின் அருட்கருணையைப் பாடும் நூல்கள் பக்தி சார்ந்தவையாக அமைகின்றன. இறைவனோடு சேர்த்து அவ்விறைவனின் மீதும் பற்றுகொண்டு பிற்காலத்தில் பல பக்தி சார்ந்த இலக்கியங்கள் தோன்றியுள்ளன. சமய நன்னெறி, தனிமனித ஒழுக்கம் முதலியவற்றை மேம்படுத்தும் தன்மை பக்தி நூல்களுக்கு உண்டு.

சென்னிமலை முருகன் புலவராற்றுப்படை

சென்னிமலையில் வீற்றிருக்கும் முருகனின் அருளைப் பெற்ற புலவன், வறுமையால் வாடி வரும் மற்றொரு புலவனைக் கண்டு முருகனின் அருட்திறத்தைக் கூறி அவ்விறைவனிடம் சென்று வேண்டியதைப் பெற்றுக் கொள்ளுமாறு வழிப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலாசிரியர் வித்துவான் வே.ரா. தெய்வசிகாமணி ஆவார். இந்நூல் 1966 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலினுள் சென்னிமலையின் சிறப்பு, தீர்த்தங்கள், அருளாளர்களின் இயல்பு, முருகனின் திருவுருவச்சிறப்பு, வழிபாட்டு முறை, முருகனின் அருட்குணம் முதலியவை கூறப்பட்டுள்ளது. செறிவான யாப்பு கட்டமைப்போடு அமைந்த இந்நூலில் ஐந்நில வருணனை சிறப்பாகப் பாடப்பட்டுள்ளது.

திருத்தணிகை ஆற்றுப்படை

முருகனின் குன்றுதோறாடல் தலங்களில் ஒன்றாகத் திருத்தணிகை விளங்குகிறது. அத்தலத்தில் வீற்றிருக்கும் முருகப்பெருமானிடம் வீடுபேற்றினைப் பெற்ற புலவன் ஒருவன், அவ்வீடுபேற்றைப் பெறவிரும்பும் மற்றொரு புலவனை ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் பாடப்பட்டுள்ளது. இந்நூலினைக் கச்சியப்ப முனிவர் பாடியுள்ளார். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நால்வகை உறுதிப்பொருளையும் வழங்கவல்ல இந்நூல் குன்மநோயால் அவதியுற்ற தன் மாணவனின் நோய் நீங்க, கச்சியப்ப முனிவர் பாடிய நூலாகும். இந்நூலைப் பாராயணம் செய்து அம்மாணவர் நோய் நீக்கம் பெற்றார். சொல்நயம், பொருள் நயம், தொடை நயம் மூன்றும் மிளிர்வதாக இந்நூல் அமைந்துள்ளது. முருகனின் சிறப்பைக்கூறும் இவ்வாற்றுப்படை 1965 ஆம் ஆண்டு திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

புலவராற்றுப்படை

தமிழ் வளர்த்த பெருநகரமாகிய மதுரை, தமிழ்ப்புலவர்களின் புலமைக்குத்தக்க பரிசளித்த நகரமாகவும் விளங்குகிறது. அங்கு அமைந்த நான்காம் தமிழ்ச்சங்கத்தில் தம் புலமைத்திறத்தால் பட்டமும் பரிசிலும் பெற்ற புலவன் ஒருவன், அதைப்பெறாத புலமை நிறைந்த மற்றொரு புலவனைக்கண்டு ஆற்றுப்படுத்துவதாக இப்புலவராற்றுப் படை அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் மகாவித்துவான் வா.குலாம் காதிறு நாவலர் ஆவார். தமிழிலக்கிய உலகில் தனக்கெனத் தனித்த ஆளுமை

செலுத்தியவராக இவ்வாசிரியர் விளங்குகிறார். இந்நூலிலும் தமிழ்மொழியின் வளம், தமிழ்க்கூடலாகிய மதுரையின் மாண்பு, தமிழ்ச்சங்கத்தாரின் புலமைத்திறம், தமிழ்ச்சங்க அச்சகம், மதுரைத் தமிழ்ச்சங்கத்தால் புலமை நிறைந்தாருக்கு வழங்கப்படும் பரிசில்கள், பட்டங்கள் குறித்த விவரங்கள் முதலியவற்றை நூலாசிரியர் அமைத்துப்பாடியுள்ளார்.

அறிஞர்கள் மீது பாடப்பட்ட ஆற்றுப்படை

தமிழ்ச்சமூகத்தில் காலந்தோறும் பல அறிஞர்கள் தோன்றிய பகுத்தறிவிற்குத் துணைசெய்யும் பொதுவுடைமை கருத்துகளை நூல்களின் வாயிலாகப் பதிவு செய்துள்ளனர். அவர்களின் சீரிய சிந்தனைகள் சமுதாய மாற்றத்திற்கு உந்துசக்தியாக இருந்து மக்களிடையே மனமாற்றத்தை உருவாக்கியுள்ளது. அந்நோக்கில் எழுந்த ஆற்றுப்படையாகத் திருத்தொண்டர் ஆற்றுப்படை அமைந்துள்ளது.

திருத்தொண்டர் ஆற்றுப்படை

பரந்தாமனார் கவிதைகள் எனும் தொகுப்பு நூலில் திருத்தொண்டர் ஆற்றுப்படை அமைந்துள்ளது. இந்நூலாசிரியர் அ.கி.பரந்தாமன் ஆவார். 1943ஆம் ஆண்டு திரு.வி.க அவர்களுக்கு நடத்தப்பெற்ற மணிவிழாவிற்காக இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இந்நூலின் பாட்டுடைத்தலைவனாகத் திரு.வி.க விளங்குகிறார். சமூகத்தின் மீது பொறுப்புணர்வு கொண்ட ஒரு தொண்டன் மறுமலர்ச்சி பெற்று அதைப் பெறவிரும்பும் மற்றொருவனை ஆற்றுப்படுத்துவது இவ்வாற்றுப்படை ஆகும். இதில் சமூகத்தின் மறுமலர்ச்சிக்கான பொதுவுடைமை கருத்துகள், பெண்ணியச் சிந்தனைகள், இளைஞர்களின் எழுச்சி நிலை, ஆங்கிலேயர் கால ஆட்சிநிலை, தமிழ்ச்சமூகத்திலிருந்த சான்றோரின் சிறப்பு, சமுதாய வளர்ச்சிக்கான புதுமை காணும் சிந்தனை, சாதியத்திற்கு எதிரான கருத்துகள் முதலியவை அமைந்துள்ளன. ஆற்றுப்படை நூல்களில் முற்போக்குச் சிந்தனையுடன் திகழும் நூலாகத் திருத்தொண்டர் ஆற்றுப்படை அமைந்துள்ளது.

கலைஞர் ஆற்றுப்படை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரது அரசியல் துறையின் கொள்கைகளைப் பின்பற்றி மேன்மையடையுமாறு ஆற்றுப்படுத்துவதே இவ்வாற்றுப்படை நூலாகும். இதில் கலைஞர் கருணாநிதி அவர்களின் ஆட்சியில் தமிழகம் அடைந்த வளர்ச்சிநிலை, கொள்கைகள், பொதுவுடைமைக்கருத்துகள், இலக்கியப்பணிகள், தமிழுக்காற்றிய தொண்டு, முதல்வராய் பணியமர்ந்து நாட்டின் உயர்வுக்கு வழியமைத்த பாங்கு, ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த செய்த செயல்கள், உதயசூரியனின் மறு உதயம், சமத்துவம் முதலிய கருத்துகள் இடம்பெற்றுள்ளன. இந்நூலாசிரியர் புலவர் துரை.பொன்னுசாமி ஆவார்.

கல்வி சார்ந்த ஆற்றுப்படை நூல்கள்

அறிவினை அற்றங்காக்கும் கருவி என வள்ளுவர் கூறுகின்றார். அவ்வறிவினைப் பெற உறுதுணையாக இருப்பது கல்வி. அக்கல்வியினால் மனித வாழ்க்கையில் உயர்வும் நற்பண்பும்

தோன்றுகிறது. கல்வியின் சிறப்பை உணர்ந்த சான்றோர் அதன் புகழை நாடறியச்செய்ய எண்ணிப் பல நூல்களைக் கல்வி சார்ந்து எழுதினார்கள். அவற்றுள் ஆற்றுப்படை சார்ந்து பல நூல்கள் எழுந்துள்ளன.

சிறுமாணவர் ஆற்றுப்படை, பெருமாணவர் ஆற்றுப்படை

இவ்விரு நூல்களும் அ.கி.பரந்தாமனால் இயற்றப்பட்டதாகும். தற்போது இந்நூல்கள் பரந்தாமனார் கவிதைகள் எனும் தொகுப்பு நூலில் காணக்கிடைக்கின்றன. இந்நூலாசிரியர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை படிக்கும் சூழலில் கல்லூரி முதல்வர் வேறு கல்லூரிக்குப் பணிமாற்றம் அடைக்கின்ற தருவாயில் இந்நூலைப் பாடினார் என்பது நூல் வரலாறாக அமைகிறது. இவ்விரு நூலும் கல்வியைப் பெறவிரும்பும் மாணவர்களை ஆற்றுப்படுத்தி, அவர்களுக்குக் கல்வியின் இன்றியமையாமையை உணர்த்துவதாக உள்ளன. சாதிய வேறுபாடு ஒழிய வேண்டும், சமூகத்தின் மீது பொறுப்புணர்வுடன் செயல்படவேண்டும் எனும் கருத்துகள் இவ்விரு நூலிலும் ஆழமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆற்றுப்படை நூலாக இருப்பினும் இளைய தலைமுறையினருக்கு அறிவுரையைக்கூறி, அறிவுறுத்தும் நூலாக இவை திகழ்கின்றன.

மாணவராற்றுப்படை

இந்நூலின் ஆசிரியர் மு.இளங்கோவன் ஆவார். இவர் திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரியில் பயிலும் காலத்தில் கல்லூரி ஆண்டு மலருக்காக மரபுக்கவிதை வடிவில் எழுதியது இம்மாணவராற்றுப்படை நூல். திருப்பனந்தாள் செந்தமிழ்க் கலைக் கல்லூரிக்குச் சென்று தமிழைக் கற்று மேன்மை அடையுமாறு தமிழைக்கற்க விரும்பும் மாணவர்களை வழிப்படுத்துவதே இவ்வாற்றுப்படையின் கருவாகும். இந்நூலினுள் கல்லூரியின் தொன்மை, புகழ், கல்லூரிப் புரவலர்களின் மாண்புகள், தமிழின் இனிமை முதலிய கருத்துகள் விளக்கப்பட்டுள்ளன. 1990 ஆம் ஆண்டு திருச்சியில் உள்ள பஃறுளி பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

மாணாக்கர் ஆற்றுப்படை

இலக்கியச்செழுமையுடன் திகழும் இம்மாணாக்கர் ஆற்றுப்படை என்பது மாணாக்கர்களைக் குளித்தலையில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிக்கு ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதனைக் கடவூர் மணிமாறன் பாடியுள்ளார். விடியல் வெளியீட்டகம் 1992 ஆம் ஆண்டு இந்நூலை வெளியிட்டுள்ளது. இந்நூலில் குளித்தலை நகரச்சிறப்பு, பள்ளியின் பெருமை, பெற்றோர் பள்ளிமீது கொண்டிருக்கும் நன்மதிப்பு, ஆசிரியரின் கடமையுணர்வு, பள்ளியின் வளர்ச்சி நிலை முதலியவை பாடுபொருளாக அமைந்துள்ளன.

மாணாக்கராற்றுப்படை

பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயரால் பாடப்பட்ட இவ்வாற்றுப்படை நூல் கல்வியைப் பெறக்கருதி அதற்கு வழிகாணாது வறுமையில் வாடும் மாணவனை, கல்வியால் மேம்பட்டு அரசாங்கத்தால் அங்கரிக்கப்பட்ட ஒருவன் ஆற்றுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. 1900 ஆம் ஆண்டு இந்நூல் பாடப்பட்டுள்ளது. கல்வியைப் பெற விரும்பும் மாணவனின் பண்புநலம், கல்வியினால் அடையும் உயர்வு, தனித்தன்மை முதலியவை நூலினுள் விளக்கப்பட்டுள்ளது.

அச்சக ஆற்றுப்படை

திருச்சி மாவட்ட உட்கோட்டையிலிருந்து அகவை முதிர்ந்த ஒருவரைத் திருப்பனந்தாள் அம்பாள் அச்சகத்திற்கு இளைஞன் ஒருவன் ஆற்றுப்படுத்தும் புதுமையான முறையில் இவ்வாற்றுப்படை அமைந்துள்ளது. அகவை முதிர்ந்தோரை இளைஞன் ஆற்றுப்படுத்துவது கல்விக்கும், அக்கல்வியால் பெறும் அறிவிற்கும் வயதோர் தடையில்லை என்பதைக் காட்டுகிறது. இந்நூலாசிரியர் மு.இளங்கோவன் ஆவார். இவர் திருப்பனந்தாள் கல்லூரியில் பயின்றவர். திருச்சி பஃறுளி பதிப்பகம் இந்நூலை 1992 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இதில் முதியவரின் இயல்பு, இளைஞன் வழிப்படுத்தும் பாங்கு, அம்பாள் அச்சகத்தின் சிறப்பு, அச்சகத்தின் படைப்புப்பணிகள் முதலியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

நிறைவுரை

மொழியின் வளர்ச்சிக்குக் காரணமாக இருப்பவை இலக்கியங்கள் ஆகும். அவை, சமூகத்தின் மாறுதலுக்கேற்ற வகையில் புதுமையான வடிவத்தைப் பெறுகின்றன. பழமரபுகளின் வரையறையோடு, தற்காலச் சூழலுக்கு உகந்த கருத்தியல்களைப் பாடுபொருள்களாகக் கொண்டு இலக்கியம் படைப்பதன் மூலம் சமூகத்தில் மறுமலர்ச்சியானது தோன்றும். படைப்பாளன் தான் கருதிய பொருளை இலக்கியத்தின் வாயிலாக உயிர்ப்புடன் மானுட மனங்களில் கொண்டு சேர்க்கிறான். அக்கருத்து உணர்வாழமுடையதாகப் படிப்பவன் மனதில் பதிந்து மாற்றத்தை உருவாக்குகிறது. உணர்வின் ஆழத்தை வெளிப்படுத்தச் செய்யும் இலக்கிய வகையாக ஆற்றுப்படை விளங்குகிறது. சங்க காலத்தில் தோன்றிய இலக்கிய வகையான ஆற்றுப்படை காலமாறுதலுக்குரிய நிலையில் பிரபந்தமாக வளர்ச்சியுற்றது. படைப்பாளன் தான் கூறக்கருதிய பொருளை அமைத்துப் பாட ஏற்ற இலக்கிய வகையாக இன்றளவும் ஆற்றுப்படை இருந்து வருகிறது. செவ்வியல் காலந்தொடங்கி இன்றைய காலம் வரையிலும் பற்பல பொருண்மைகளில் ஆற்றுப்படை இலக்கியங்கள் தோற்றம் பெற்றே வருகின்றன. தொடக்கக் காலத்தில் வள்ளல்களின் வாழ்வியலை மட்டும் பாடப் பயன்படுத்தப்பட்ட ஆற்றுப்படை இலக்கியம் தற்காலத்தில் இறைவன், அருளாளர்கள், கல்வி, அறிஞர்கள், சமூகம், மொழி, தொழிற்நுட்பம், அகவுணர்வு எனப் பல பொருண்மைகளில் பாடப்படுகின்றன. தற்காலச் சூழலுக்கும் கால மாறுதலுக்கும் ஏற்ற வகையில் தொழிற்நுட்ப வளர்ச்சிக்கு உதவும் அறிவியல் கருத்துகள், பொதுவுடைமை நோக்கில் அமைந்த மனிதவுணர்வு, வரலாற்றுப்பின்புலம் முதலியவையும் ஆற்றுப்படை இலக்கியங்களில் பொருண்மைகளாக அமைகின்றன என்பது இவ்வாய்வின் மூலம் கண்ட மெய்ம்மையாகும்.

ஆய்விற்கு துணைநின்ற நூல்கள்:

1. இராமசுப்ரமணியம்.வ.த (உ.ஆ.). புறநானூறு மூலமும் தெளிவுரையும். திருமகள் நிலையம், சென்னை. முதல் பதிப்பு, 2008.
2. இளம்பூரனார் (உ.ஆ.). தொல்காப்பியம் பொருளதிகாரம். சாரதா பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு, 2005.
3. ஔவை சு.துரைசாமிப் பிள்ளை. பதிற்றுப்பத்து மூலமும் உரையும். பூம்புகார் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு, 210. (குறிப்பு: கொடுக்கப்பட்ட ஆண்டு '210' என உள்ளது. இது பிழையாக இருக்கலாம். இருந்தாலும் வழங்கப்பட்ட தரவுகளே பயன்படுத்தப்பட்டுள்ளது.)
4. கோவிந்தாரா முதலியார். கா.ர. பன்னிருபாட்டியல். சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், திருநெல்வேலி. முதற்பதிப்பு, 1943.
5. ஐயனாரிதனர். புறப்பொருள் வெண்பா மாலை. கதிர் பதிப்பகம், திருவையாறு. முதற்பதிப்பு, 2006.
6. மணிகண்டன். ப. சிதம்பரப்பாட்டியல். சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். முதற்பதிப்பு, 2002.

References

1. Ramasubramaniam, V.T. (Ed.). (2008). Purananuru: Original Text and Clear Commentary. Thirumagal Nilayam, Chennai. First Edition.
2. Ilampooranar (Commentator). (2005). Tolkappiyam Porulathikaram. Saradha Pathippagam, Chennai. First Edition.
3. Avvai S. Duraisamy Pillai. (210). Pathitruppathu: Original Text and Commentary. Poompuhar Pathippagam, Chennai. First Edition. (Note: The year '210' for the first edition seems highly anachronistic and is likely a typo in the original for a more recent year, e.g., 2010 or 19xx.)
4. Govindaraja Mudaliar, K.R. (1943). Pannirupattiyal. Saiva Siddhantha Nool Pathippu Kazhagam, Tirunelveli. First Edition.
5. Aiyanaridhanar. (2006). Purapporul Venbamaalai. Kathir Pathippagam, Thiruvaiyaru. First Edition.
6. Manikandan, P. (2002). Chidambarappattiyal. Saraswathi Mahal Library, Thanjavur. First Edition.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.
Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.

eISSN: 3049-0723, pISSN: 3107-7781
Vol. 4 Issue: 01 October 2025

மெய்ப்பாட்டியல் நோக்கில் சக்திஜோதி கவிதைகள்

Shakti Jyothi Poems from a Realist Perspective

அ.பூமா[1], முனைவர் ம.கண்ணம்மாள்[2],

[1]பதிவெண் 8871/Ph.DK6/Tamil/FT முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழ்த்துறை, குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), (திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), தஞ்சாவூர் – 613 007, தமிழ்நாடு, இந்தியா.

[2]உதவிப்பேராசிரியர் – நெறியாளர், தமிழ்த்துறை, குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), (திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), தஞ்சாவூர் – 613 007, தமிழ்நாடு, இந்தியா.

[1]**A.Booma**, Registration No. 8871/Ph.DK6/Tamil/FT Postdoctoral Researcher, Department of Tamil, Kunthavai Nacchiyaar Government Arts College for Women (Autonomous), (Affiliated with Bharathidasan University, Tiruchirappalli), Thanjavur – 613 007, Tamil Nadu, India. Cell – 9600772268.
Email : boomaravi0@gmail.com

[2]**Dr. M. Kannammal**, Assistant Professor – Research Guide, Department of Tamil, Kunthavai Nacchiyaar Government Arts College for Women (Autonomous), (Affiliated with Bharathidasan University, Tiruchirappalli), Thanjavur – 613 007, Tamil Nadu, India.
Email : kannamano07@gmail.com

Abstract:

Modern poetry, a vibrant and ever-evolving force, has firmly established itself as a cornerstone of contemporary literary expression. Its reach extends beyond the mere chronicling of current affairs; it delves into the depths of memory, weaving narratives that not only reflect the present but also resonate with the echoes of bygone eras. This article undertakes an exploration of this fascinating intersection, specifically examining how the works of Shaktijothi, a notable modern poet, encapsulate elements reminiscent of ancient epic poetry, a tradition forged some three millennia ago.

To fully appreciate this intricate connection, we will commence with an introduction to Shaktijothi, shedding light on his background and his unique place within the poetic landscape. Subsequently, we will delve into the body of his poetic creations, identifying the key works that bear this epic resonance. The core of our analysis will then focus on dissecting specific elements within these poems – be it through the poet's handle on language, the expansive stretch of his thematic concerns, the carefully applied makeup of his imagery, the subtle ways he can adjust traditional forms for modern sensibilities, or the meticulous brush strokes of his narrative construction – that draw a compelling parallel to the grand traditions of ancient epic poetry. Through this examination, we aim to illuminate the enduring legacy of epic poetry and its surprising manifestations in the heart of modern verse.

Keywords: *Hand, stretch, make-up, embrace, brush*

Tamilmanam

ஆய்வுச்சுருக்கம்:

நவீன இலக்கியப் பரப்பில், புதுக்கவிதைகள் தனித்துவமானதொரு இடத்தைப் பிடித்து, வாசக மனங்களில் நீங்காச் சிம்மாசனம் அமைத்து அமர்ந்துள்ளன. அவை வெறும் காலத்தின் பதிவுகளாக மட்டுமன்றி, கடந்த காலத்தின் நறுமணத்தையும், அதன் ஆழமான வேர்களையும் சுமந்து நிற்பவை. இந்த வகையில், சக்திஜோதி எனும் கவிஞரின் படைப்புகள், காலத்தின் எல்லையைத் தாண்டி, நம்மை வியப்பின் விளிம்பிற்கு இட்டுச் செல்கின்றன. இக்கட்டுரை, அவர் ஆற்றியுள்ள கவிதைப் பணியை விரிவாக ஆராய்கிறது. குறிப்பாக, நவீன வாழ்வின் சிக்கல்களையும், அன்றாட நிகழ்வுகளின் பிரதிபலிப்புகளையும் தனது கவிதைகளில் ஏந்தி நிற்பதோடு மட்டுமல்லாமல், அறியாமலே, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தொல்காப்பியர் வகுத்தளித்த மெய்ப்பாட்டுக் கூறுகளின் சாயல்களையும் தன்னகத்தே கொண்டிருப்பதை ஆழ்ந்து நோக்குகிறது.

இக்கட்டுரையானது, சக்திஜோதியின் கவிதைப் பயணத்தை ஒரு அறிமுகப் பார்வையுடன் தொடங்குகிறது. அவரது இலக்கியப் பின்புலம், அவரது சிந்தனைகளை வடிவமைத்த சூழல்கள், மற்றும் அவர் இதுவரை படைத்துள்ள கவிதை நூல்கள் பற்றிய விரிவான தகவல்கள் இங்கு அலசப்படுகின்றன. பின்னர், கட்டுரையின் மையப் புள்ளியான தொல்காப்பிய மெய்ப்பாட்டுக் கூறுகளின் பரிமாணங்களுக்குள் நாம் நுழைகிறோம். மெய்ப்பாடு என்பது, ஒரு இலக்கியப் படைப்பில் வெளிப்படும் உணர்ச்சிகளின் ஆழத்தையும், அதன் நுட்பமான சித்தரிப்பையும் குறிக்கும். தொல்காப்பியர், குறிப்பாகப் பொருளதிகாரத்தில், மெய்ப்பாடுகளைப் பலவாறாகப் பிரித்து, அவற்றின் வகைகளையும், அவை வெளிப்படும் விதங்களையும் நுட்பமாக விளக்கியுள்ளார்.

இந்த ஆய்வு, சக்திஜோதியின் புதுக்கவிதைகளில் வெளிப்படும் சில குறிப்பிட்ட மெய்ப்பாட்டுக் கூறுகளை, தொல்காப்பியத்தின் வரையறைகளுடன் ஒப்பிட்டு ஆராய்கிறது. அவரது கவிதைகளில் காணப்படும் மகிழ்ச்சி, துயரம், கோபம், வியப்பு, அச்சம், அருவருப்பு, நகை போன்ற உணர்வுகளின் சித்தரிப்பு, தொல்காப்பியர் குறிப்பிட்ட மெய்ப்பாடுகளுடன் எவ்வாறு இயைந்து நிற்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகிறது. இந்த ஒப்பாய்வு, நவீனக் கவிதைகளில் பழமையின் செழுமை எவ்வாறு மறைமுகமாகப் புதைந்துள்ளது என்பதையும், இலக்கிய மரபுகள் காலமெனும் சுழற்சியிலும் எவ்வாறு தம்மைப் புதுப்பித்துக் கொள்கின்றன என்பதையும் நமக்கு உணர்த்தும். சக்திஜோதியின் கவிதைகள், வெறுமனே வார்த்தைகளின் கோர்வையல்ல, அவை காலத்தின் குரல்களையும், தொன்மையான உணர்வுகளின் எதிரொலிகளையும் ஒருங்கே சுமந்து நிற்கும் உயர்தரப் படைப்புகள் என்பதே இக்கட்டுரையின் முக்கிய சாராம்சம்.

குறிப்புச்சொற்கள்: கையாறு, நீட்சி, ஒப்பனை, தழுவு, தூரிகை

முன்னுரை

இலக்கியங்கள் மாந்தர்களின் வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துரைப்பனவாக அமைகின்றன. இலக்கியம் தோன்றிய காலங்களில் சமூகத்தில் நிலவி வந்த நிறை குறைகளை எடுத்துக்கூறுகின்றன. சங்ககாலம் தொட்டு சிற்றிலக்கியக் காலம் வரையிலும் உருவான இலக்கியங்களில்

அவ்வக்காலகட்டங்களில் பெரிதும் மதிக்கத்தக்கனவாக இருந்த நிகழ்வுகளைப் பதிவு செய்திருக்கின்றன. மகாகவி பாரதியின் வரவு இலக்கிய வகையில் புதிய அமைப்பைக் கொண்ட கவிதை இலக்கியத்திற்கு இடமளித்தது. இவரைத் தொடர்ந்து வந்த கவிஞர்கள் புதுக்கவிதைகளில் சமூகத்தில் சூழல்களையும், அரசியல் குறைபாடுகளையும், காதல் சூழல்களையும் இளைஞர்களுக்கு அறிவுரை கூறும் கருத்துக்களையும் தம் புதுக்கவிதைகளில் பதிவு செய்துள்ளனர். அவ்வகையில் நவீனக் கவிஞரான சக்திஜோதியின் கவிதைகளில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்த தொல்காப்பியப் பொருளதிகார மெய்ப்பாட்டுக் கூறுகள் அமைந்திருப்பதை இக்கட்டுரை ஆராயவிழைகின்றது.

கவிஞர் அறிமுகம்

கவிஞர் சக்திஜோதி 1972ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாள் தேனி மாவட்டம் அனுமந்தன்பட்டியில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் ஜோதி என்பதாகும். இவருடைய பெற்றோர். தந்தை ச.பாண்டியன், தாய் பா.சிரோன்மணி ஆவர். இவருடைய கணவர் திரு.சக்திவேல் ஆவார். இவருக்கு திலீப்குமார் என்ற மகனும் காவியா என்ற மகளும் உள்ளனர். இவர் தற்போது திண்டுக்கல் மாவட்டம் அய்யம்பாளையத்தில் வசித்து வருகின்றார். இவர் கவிதைப் படைப்புகளோடு நீர்ச்செறிவு மேலாண்மையை கவனப்படுத்தி செயல்படுகிற விவசாயத்தையும், பெண் கல்வியை மையப்படுத்தி செயல்படும் சமூகப் பணியாளராகவும் இயங்கி வருகின்றார். மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர்.

இயற்றிய கவிதைத் தொகுதிகள்

இவர்,

நிலம் புகும் சொற்கள் (2008)
கடலோடு இசைத்தல் (2009)
எனக்கான ஆகாயம் (2010)
காற்றில் மிதக்கும் நீலம் (2011)
நீ உறங்கும் காடு (2012)
சொல் எனும் தானியம் (2013)
பறவை தினங்களைப் பரிசளிப்பவள் (2014)
மின் நிறத்தியொரு முத்தம் (2014)
இப்பொழுது வளர்ந்து விட்டாள் (2016)
மூங்கிலரிசி வெடிக்கும் பருவம் (2016)

ஆகிய கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

பெற்ற விருதுகள்

இவர் தேனி மாவட்டம் இளம் கவிஞருக்கான விருதினைப் பெற்றுள்ளார். மேலும் விளையாட்டு மற்றும் இளைஞர் அமைச்சக விருது, நேரு யுகேந்திரா மாநில விருது, சிற்பி விருது, திருப்பூர் தமிழ்ச்சங்கவிருது, தமிழக அரசு நூலக விருது போன்ற விருதுகளைப் பெற்று சிறப்பு பெற்றவர்.

“ஸ்ரீ சக்தி சமூக பொருளாதார கல்வி நலன் அறக்கட்டளை” என்னும் பெயரில் அறக்கட்டளை ஒன்றை நிறுவி அதன் தலைவராக இருந்து வருகின்றார்.

மெய்ப்பாட்டியல்

அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய இயல்களில் வெளிக்காட்ட இயலாத மனஉணர்வுகள் மெய்ப்பாட்டியலில் விளக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியல் எண்வகை மெய்ப்பாடுகளை விளக்கி முப்பத்து இரண்டு துணைமை மெய்ப்பாடுகளை விளக்கியுள்ளார். துணைமை மெய்ப்பாடுகள் முப்பத்து இரண்டனுள் ஒரு சில மெய்ப்பாடுகள் சக்திஜோதி கவிதைகளில் இடம்பெற்றிருப்பதைக் கீழ்க்காணும் கவிதைகளின் வழி அறியமுடிகிறது.

துணைமை மெய்ப்பாடுகள்

உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல்

தன்மை அடக்கம் வரைதல் அன்பு எனாக்

……………..

நாணல் துஞ்சல் அரற்றுக்கனவு எனாஅ

………………..

…………….

………………

கையாறு இடுக்கண் பொச்சாப்புப் பொறாமை

………………..

அவையும் உளவே அவை அலங்கடையே” (தொல், பொருள், நூ-256)

தொல்காப்பியரால் கூறப்பட்ட மேற்காணும் மெய்ப்பாடுகளில் ஒரு சில மெய்ப்பாடுகள் தோன்றும் படியான சக்திஜோதி கவிதை வரிகளைக் கீழ்க்காணும் கவிதைகளின் வழி அறியமுடிகிறது.

அன்பு

மற்றவர்களிடம் அன்புகாட்டி மனமகிழ்வை வெளிப்படுத்துவதுகூட ஒருவகை மெய்ப்பாடாகும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. அன்பைப் பற்றி சக்திஜோதி,

அடர்ந்த ஆகாயம்

அன்பைப் பொழியத் தொடங்கு கையில்

மேலும் பூத்திருப்பாள்

அழைப்பின் நீட்சியாக

ஆரத்தழுவி மணக்கையில்

பறவையாகி மதிப்பாள்

அப்பொழுது ஆயிரம் இதழ்களாகி

அன்பில் கசிந்து பெருகுவாள்

நிலமெங்கும் அவள்” (மூங்கிலரிசி வெடிக்கும் பருவம், ப.36-37)

ஒரு பெண்ணின் மீது அன்பு செலுத்தும்போது அவள் அடையும் மனமகிழ்ச்சியை வெளிப்படுத்தும் நிகழ்வினைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

இன்புறல் நீண்டநாள் பிரிந்து இருந்தவர் திரும்ப வருவதைக் கண்டு இன்புறுவது ஒரு வகை மெய்ப்பாடாகும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இக்கருத்தைக் கூறும் கவிதை,

வெள்ளை இதழுடன்

……………….

………….

தீயெழுந்து பரவியது

அவளுள் வாசனையாக

தீராத பரவசத்தில்

காண்பன யாவற்றையும்

கட்டிக் கொண்டாள்

யாவற்றையும் தழுவும்படி

யாவற்றையும் முத்தமிடும் படியாக

கூடலின் நிறைவு

அவளை அணிசெய்திருந்தது

இலையுறுதிர் காலம் முடிவுக்கு வந்தது

வெறுமையில் அமிழ்ந்திருந்த மனமும்” (மேலது, ப.47)

இவ்வகையில் அமைந்துள்ளது. நீண்ட காலம் தலைவனைப் பிரிந்திருந்த தலைவி அவனைக் கூடும்போது அவள் அடையும் உள்ள மகிழ்ச்சியையும், உடல் இன்பத்தையும் வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளதால் இன்புறல் எனும் மெய்ப்பாடு வெளிப்படுகிறது.

பொறாமை

பிறர்பால் கொள்ளக்கூடிய பொறாமையால் மனதில் உண்டாகும் ஒருவிதமான உணர்வும் ஒருவகை மெய்ப்பாடாகும் என்கிறது தொல்காப்பியம். இதன் வழியில் பொறாமை கொள்ளும் உணர்வு கொண்ட பெண்ணைப் பற்றிய கவிதையைப் படைத்துள்ள பாங்கினை அறிந்து கொள்ள முடிகிறது.

இந்தக் காற்றைக் கண்டெனக்குப் பொறாமை

எத்தனை சுதந்திரமாய் வீசுகிறது

அல்லது

வீசாமல் இருக்கிறது

இந்த நிலவைக் கண்டு பொறாமை

நிலத்தைக் கண்டு பொறாமை

பரம்பொருளான அனைத்தின் மீதும் பொறாமை (கடலோடு இசைத்தல், ப.91)

ஆணாதிக்கத்தால் தன்னுடைய சுதந்திரத்தை இழந்த பெண் ஒருத்தி காற்று, நிலவு, கடல், நிலம் போன்ற இயற்கையின் சுதந்திரத்தைக் கண்டு பொறாமை கொள்வதாக அமையப்பெற்ற இக்கவிதையில் பொறாமை எனும் மெய்ப்பாடு தோன்றுவதைக் காணமுடிகிறது.

இன்பத்தை வெறுத்தல்

ஒப்பனை செய்துகொள்வதையும் தென்றலை தழுவுவதையும், நிலவைப் பார்ப்பதையும் பெருந்திணைத்தலைவி வெறுத்தலே இன்பத்தை வெறுத்தல் எனும் மெய்ப்பாட்டினை உரைக்கிறது. இம்மெய்ப்பாடு கீழ்க்காணும் கவிதையுடன் பொருந்தி வருவதைக் காணமுடிகிறது.

காதலைத் தவிர்த்து

காதலுக்காக என்னை விட்டு அகலுகிறான்

அவன் வரும் வரையில்

நான் பூச்சூடவில்லை

நீராடவும் இல்லை

உணவும் மறந்து நிற்கிறேன்

காலை மாலை நள்ளிரவெனக்

காத்து நிற்கிறேன்" (தீ உறங்கும் காடு, ப.85)

தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தையை நாடிச்சென்று விடுகிறான். அவன் திரும்பி வரும்வரையில் தலைவி உணவு உண்ணவில்லை, நீராடாமால் பூச்சூடிக்கொள்ளாமல் தன்னை ஒப்பனை செய்துகொள்ளாமல் வெறுத்திருக்கிருக்கிறாள் என்று கூறும் இக்கவிதை இன்பத்தை வெறுத்து தலைவனுக்குக் காத்திருக்கும் நிலையினை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளமையை அறியமுடிகிறது.

முடிவுரை

சக்திஜோதியின் கவிதைகள் காலத்தின் கண்ணாடி போல நவீனத்துவத்தையும், காலத்தால் அழியாத மரபுகளையும் ஒருங்கே பிரதிபலிக்கும் தன்மையைக் கொண்டமைந்துள்ளன. அவை வெறும் வார்த்தைகளின் கோர்வையாக இல்லாமல், ஒரு கவிஞரின் ஆழமான அகப்பார்வையையும், சமூகத்தின் மீதான கூரிய அவதானிப்பையும் ஒருசேர உணர்த்துகின்றன. ஒருபுறம், புதிய சிந்தனைகளையும், சமூக மாற்றங்களையும், சமகால வாழ்வின் சிக்கல்களையும், தொழில்நுட்பத்தின் நுட்பமான விளைவுகளையும் அழகியலோடு பதிவு செய்கிறார். கவிதையின் வடிவம், மொழிநடை, உவமைகள், படிமங்கள் என அனைத்திலும் புதுமையின் சாயல் படர்ந்திருப்பதைக் காணமுடிகிறது.

அதே சமயம், தமிழ் இலக்கியத்தின் செழுமையான மரபுகளையும், வாழ்வின் நியதிகளையும், அறநெறிப் பண்புகளையும் தனது கவிதைகளில் ஆழமாக வேரூன்றச் செய்கிறார். அவை காலத்தை வென்ற மனித உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும், அக உலகின் நுட்பமான சித்தரிப்பாகவும் விளங்குகின்றன. பன்னெடுங்காலத்திற்கு முன்னர் தமிழ்க் கவிதையின் இலக்கணமாய், அகப் பொருளின் ஆணிவேராய் இயற்றப்பட்ட தொல்காப்பியத்தில் கூறப்பட்ட மெய்ப்பாட்டுக் கூறுகள் – சிரிப்பு, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை போன்ற எண்வகை உணர்வுகள் – இவரது கவிதைகளில்

சற்றும் செயற்கையற்று, இயல்பாக வெளிப்படுவதைக் காணமுடிகிறது. பழைய இலக்கண வரம்புகளுக்குள் தன்னை முடக்கிக்கொள்ளாமல், அவற்றின் சாரத்தை உள்வாங்கிக்கொண்டு, இக்காலச் சூழலுக்கேற்பப் புதுமையான நடையில், எளிமையும் ஆழமும் கலந்த மொழியில் எடுத்தியம்பும் பாங்கு பளிச்சிடுகிறது. இது வாசகர்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து, சிந்தனையைத் தூண்டி, உணர்வுகளைப் பண்படுத்துகிறது. இதன்மூலம், சக்திஜோதியின் கவிதைகள் தொன்மைக்கும் புதுமைக்கும் இடையே ஒரு கண்ணி போலச் செயல்பட்டு, தமிழ் இலக்கிய உலகுக்கு ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்க்கின்றன என்பது திண்ணம்.

அடிக்குறிப்புகள்

1. அடிகளாசிரியர் (ப.ஆ) தொல், பொருள், நூ – 256, ப.684.
2. சக்திஜோதி மூங்கிலரிசி வெடிக்கும் பருவம், ப.36-37.
3. மேலது, ப.47.
4. சக்திஜோதி கடலோடு இசைத்தல், ப.91.
5. சக்திஜோதி, நீ உறங்கும் காடு, ப.85.

ஆய்விற்கு பயன்பட்ட நூல்கள்

1. அடிகளாசிரியர் (ப.ஆ) தொல் பொருளதிகாரம் (செய்யுளியல் நீங்கலாக) தமிழ்ப் பல்கலைக்கழகம், மு.ப.2008.
2. சக்திஜோதி, மூங்கிலரிசி வெடிக்கும் பருவம், டிஸ்கவரி புக்பேலஸ் மு.பதிப்பு – ஜீன் 2016.
3. சக்திஜோதி, கடலோடு இசைத்தல், வம்சி புக்ஸ், மு.ப.டிசம்பர்-2009.
4. சக்திஜோதி, தீ உறங்கும் காடு, வம்சி புக்ஸ், மு.பதிப்பு – டிசம்பர் – 2012.

Reference

1. Assistant Professor (B.A.) Archaeology (excluding Archaeology) Tamil University, M.B.2008.
2. . Sakthijothi, The Exploding Season of Moonglarisi, Discovery Book Palace M.Ed. – June 2016.
3. Shaktijothi, In Harmony with the Sea, Vamsi Books, M.Ed.December-2009.
4. Shaktijothi, The Forest of Fire Sleeping, Vamsi Books, M.Ed. – December – 2012.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

மலேசிய தமிழ் நாவல்கள் — போக்குகள், பரிணாமம் மற்றும் விமர்சனத் தீர்மானம்

Malaysian Tamil Novels — Trends, Evolution, and Critical Assessment

சு பிரதீபா,
பகுதி நேர ஆய்வாளர், திருமிகு மீனாக்ஷி மகளிர் அரசு கல்லூரி, மதுரை
S. Pradeepa,
Part-time Researcher, Sri Meenakshi Government Arts College for Women, Madurai
Email: velavansai007@gmail.com

Abstract:

Malaysian Tamil novels are profound and ideologically clear-sighted creations, reflecting diverse intellectual experiences, and have evolved and enriched over time through various transformations. These novels reflect issues such as identity politics, migration-related ideologies, class oppression, cultural dialogues, human relationships, and emotions. From a modern perspective, they also journey towards critical understandings beyond these aspects. Through literary criticism, the significance of these novels, their social awareness, and political spaces are comprehensively analyzed.

Keywords: *Workers, Tamil Novels, Politics*

ஆய்வுச்சுருக்கம்:

மலேசிய தமிழ் நாவல்கள் ஆழமான, தெளிவான பார்வை கொண்ட கருத்தியலை சார்ந்த படைப்புகள், பல்வேறு சிந்தனை சார்ந்த அனுபவங்களின் பிரதிபலிப்பாக, காலப்போக்கில் வேறுபட்ட பரிணாமங்களைக் சந்தித்து செழுமை அடைந்து உள்ளது. அடையாள அரசியல், இடம்பெயர்வு சார்ந்த கருத்தியல், வர்க்க ஒடுக்குமுறை மற்றும் கலாச்சார உரையாடல்கள் அதன் மனித உறவுகள் மற்றும் உணர்வுகள் போன்ற விடயங்களை இந்நாவல்கள் பிரதிபலிக்கின்றன. நவீன பார்வையில், இவைத் தாண்டிய விமர்சனத் புரிதல்களை நோக்கியும் பயணிக்கின்றன. இலக்கிய விமர்சனத்தின் வாயிலாக இந்நாவல்களின் முக்கியத்துவம், சமூக விழிப்புணர்வு சார்ந்தும் , அரசியல் இடைவெளிகளும் சுருண்மையுடன் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

குறிப்புச்சொற்கள்: *தொழிலாளர்கள், தமிழ் நாவல்கள், அரசியல்.*

அறிமுகம்

மலேசிய தமிழின் இலக்கியப் பயணம் என்பது இடம்பெயர்ந்த வாழ்வின் நெகிழ்வு, பன்மொழி சூழலின் சிக்கல், காலத்தின், சூழல் கருதியும் பணி மாற்றங்களுடன் இணைந்த ஒரு தனிச்சிறப்பு கொண்டதாகும். இந்திய துணைகூடத்திலிருந்து மலேசியாவுக்கு புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், வர்த்தக ரீதியான மக்கள், மறைந்த குடிமக்களின் பழைய வரலாறுகளான தொடக்கங்கள், 20ஆம் நூற்றாண்டின் மையகாலத்தில் தமிழ் எழுத்துகளில் பதிவு செய்யப் படத் தொடங்கின. பிற மொழிகளும் கலந்த கலாச்சாரம் இருக்கும் இந் நாட்டில் தமிழ் இலக்கியம் தனக்கென ஒரு டியாஸ்போரிக் அடையாளம்

உருவாக்கியுள்ளது — அதன் கதைகள், மொழி, வடிவம், வாசகர் அமைப்புகள் காலத்திற்குட்பட்டு மாறியுள்ளன. இந்த பரிசீலனை மலேசிய தமிழ் நாவல்களின் வரலாறு, முக்கிய தலைப்புகள், வடிவ வளர்ச்சிகள், எழுத்தாளர்கள், சமகால குறைகளும், நிறைகளும் எதிர்கால வாய்ப்புகளும் பரப்புரை ரீதியாக ஆராய்கிறது.

வரலாற்றுப் பின்னணி — தோற்றமும் ஆரம்பக் காலச் சூழலும்

மலேசியாவில் (மலயா, பிறகு மலேசியா) தமிழிசைக்கு ஏற்புடைய நடைபாதைகள் பிரிட்டிஷ் காலச்சூழலில் தோன்றின. 19–20ஆம் நூற்றாண்டு இடைப்பட்ட ஆண்டுகளில் ஹொப்-ஃபார்மிங், சூக்குக் களங்கள், துறைகள் சிற்றூர்களுக்கு தமிழகத்திலிருந்து குடியேறிய தொழிலாளர்களை கொண்டுவருவதே. இவனுடைய அனுபவங்கள் முதல்நாவல்களில் முதன்மை பருவமாய் எதிரொலித்தன. ஆரம்பகால நூல்கள் பெரும்பாலும் பண்ணைச் சூழல், தொழிலாளர் ஒழுங்கு முறை, சமூக ஒழுக்கங்கள் அடிமைப் பணியின் தாக்கத்தை நேராக விவரித்தன. இத்தகையத் தன்மைச் சொற்பொழிவு நாவலை ஆவணப்படுத்தும் வகையில் இருந்தது — சமூக வரலாற்றின் அடிநாதமாகப் பயன்பட்டு வந்தது.

மீண்டும், இரண்டாம் தலைமுறை, நகர மையங்கள் உருவாகும்போது தமிழரின் வாழ்க்கையில் ஏற்பட்ட நகரமயமான மாற்றங்கள், கல்வி வாய்ப்புகள், மொழி மாற்றங்கள், இங்கற் பிற மொழிகளுடன் உள்ள ஒத்துழைப்பு போன்றவை நாவல்களின் புதிய கருப்பொருளாக உயர்ந்தன. இந்நிகழ்வுகள் மலேசிய தமிழ் நாவல்களின் விஷயத் தட்டிலையே மாற்றம் கொண்டுவந்தன — பண்ணைச் சூழல் குறித்த இடத்தை நகரைக் கதைகள், அடையாளத் தேடல்கள் மற்றும் பன்மொழித் மாறுபாடுகள் பிடித்துக்கொண்டன.

தலைமைப்பிரவாகங்கள் (Themes) — தொன்மையும் நவீனமும்

1. குடியேறல் மற்றும் டியாஸ்போரிக் அடையாளம்

மலேசிய தமிழ் நாவல்கள் பெரும்பாலான தலைப்புகளிலும் அடையாளத் தேடலை முழுமையாகக் கொண்டு வரும். “எவிஎன்ஸ்டர் நாட்டுப்பற்று” என்றும் “இரு இடங்களின் நடுவே இருக்கும்வாழ்வு” என்றும் விவரிக்கக்கூடிய மனநிலைகள் எழுத்தாளர்களால் அடிக்கடி காட்சியளிக்கப்படுகின்றன. மொழி இழப்பு, இரகசியமான நினைவுகள், பொது மற்றும் தனிநபர் உறவுகளில் ஏற்படுவாய் பிரச்சினைகள் — இவை கதாபாத்திரங்களின் மனச்சோர்வாக அகதியடைகின்றன.

2. குடும்பம், பாலினம் மற்றும் சமூக மாற்றங்கள்

சமூகத்தின் நகரமயமான மாற்றங்களோடு பெண்ணின் இடம், குடும்பஉறவுகளின் பின்னடைவு, மதிப்பீடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் முக்கியமாக எழுத்தாளர்களை ஈர்க்கின்றன. இவை தனிப்பட்ட கதைகளில் இருந்து சமூக விமர்சனமாக வளர்ந்து, பெண்கள் கைப்பற்றும் சுதந்திரம், கல்வியின் தாக்கம், தொழிலில் பெண்களின் முக்கிய பங்கு போன்ற குளா அவதானிக்கச் செய்கின்றன.

3. மொழி மற்றும் மொழிபெயர்ப்பு பிரச்சினைகள்

மலேசியா என்பது மலாய், தமிழ், சீனா மொழிகள், ஆங்கிலம் போன்ற மொழிகளுடன் கூடிய பன்மொழி நிறைந்த நாடு; இதனால் மொழி மாற்றமும் - கலப்பும் மலேசிய தமிழ் நாவல்களின் முக்கிய அம்சமாக இருக்கிறது. சில கதைகள் தமிழ் சுவையைக் கொண்டு இருக்கும்போதும் அதனுடன் ஆங்கில சொற்கள், மலாய் சொற்கள் நுழைந்து ஒரு "கிடிலான" பன்மொழி உரையாடலை உருவாக்குகின்றன. இது நவீன வாசகர்களுக்கு உருமாற்றமான ஓர் அனுபவத்தை கொடுக்கும் என்பதே உண்மை. ஆனால் பரிமாண வரம்பிலும் மொழிசார்ந்த "உள்ளுணர்வு" இழப்பையும் ஏற்படுத்தலாம்.

4. தொழில், நகரம் மற்றும் சமூக வாசகங்கள்

நூற்றாண்டு மாற்றத்தோடு தொழில் மாற்றம், அதன் தொழில்நோக்கி நகராசிரியர்களின் தரமான கதைகள், வேலைவாய்ப்பின் ஆசைகள் நகர வாழ்க்கையின் ஒதுக்கீடு ஆகியவை சமகால நாவல்களில் பருவநாயகப் பங்கைக் கையாளுகின்றன. இவை படைப்புகளை உலகநிலையிலான தொழில்திறன், ஆளுமை மற்றும் சமூக நியாயம் போன்ற கூற்று பின்னணிகளுடன் இணைக்கின்றன.

வடிவவியல் பரிணாமம் (Form & Style)

மலேசிய தமிழ் நாவல்கள் ஆரம்ப காலத்தில் பெரும்பாலும் நேரே சொலப்படும் அடுக்குநடையை (linear narrative) பின்பற்றின. ஆனாலும் சமீபத்திய படைப்புகள் நினைவூட்டும் நாயக க் கதைகள் (memoir-like), பன்மொழி உரையாடல்கள், பின்னோக்கிய பல்வேறு காட்சியுடன் கூடிய சாட்சிகள், கலாச்சார-ஆவணங்களின் இணைப்பு போன்ற முறைகளை அணுகுகின்றன. இத்தகைய வடிவ வளர்ச்சிகள் நாவலின் பங்களிப்பை விரிவாக்குகின்றன. வாசகர்களின் மனநிலையைக் கொண்டு இயக்குகின்றன.

மேலும், குறுநாவல், சிறுகதை வடிவங்கள், இணையதள வெளியீடுகள், e-book அதன் வடிவங்கள் ஆகியவை எழுத்தாளர்களின் படைப்பினை பரப்புவதில் இன்றைய சூழலில் அதி முக்கியமான வாயிலாக உருவாகி விட்டன. இதனால் வழக்கமான பதிப்பக அமைப்புகளினால் மட்டுமல்லாமல், சமூக ஊடகங்களும் எழுத்தாளர்களுக்கு புதிய தளத்தைஅளிக்கின்றன.

முக்கிய எழுத்தாளர்கள் மற்றும் அவர்கள் பங்களிப்பு

மலேசிய தமிழ் இலக்கியத்தில் சில எழுத்தாளர்கள் குறிப்பிட்ட தனிச்சிறப்பைக் சீர்மைமிகு முறையில் கூறிச் செல்கிறார்கள். சிலர் தமிழில் எழுதி பரப்புரையாக பரப்பினர்; பலர் பிற மொழிகளில் இருந்தாலும், தமிழரின் வாழ்வியலை அவர்களின் கட்டுரைகளிலும், நாவல்களிலும் பிரதிபலிக்கச் செய்துள்ளனர். இவர்களின் பங்களிப்பு மலேசியத் தமிழ் இலக்கியத்தின் அடையாளத்தை உருவாக்குவதில் தீர்மானமாக இருந்து வருகிறது. குறிப்பாக, மலேசிய தமிழ் நாவல்களின் பரிணாம வளர்ச்சியில் சில எழுத்தாளர்கள் முக்கிய கதாபாத்திரத்தை வகித்துள்ளனர். இவர்களின் படைப்புகள் யாவும் சமூக, கலாச்சார, அரசியல் புலம்பெயர் அனுபவங்களைச் சிறப்பாக பிரதிபலிப்பதோடு மட்டுமின்றி இலக்கியத்தின் பரிமாணத்தை விரிவாக்கியுள்ளன.

1. காமராஜ் சுப்பிரமணியம் – அவர்கள் ஆரம்பகாலத்தின் மலேசிய தமிழ் நாவல்களில் தொழிலாளர் வாழ்வியல் சமூக சுரண்டல்களை விரிவாக விரிவாக்கம் செய்தார். அவருடைய நாவல்கள் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையின் சிக்கல்கள், வறுமையையும் அடையாள இழப்பையும் சமூகச் சிந்தனையின் கருவியாக முன்னெடுத்துவைத்தன.

2. நா. ராமசாமி – அவர்களின் படைப்புகள் யாவும் சமூக முன்னேற்றம், கல்வி, நகர்ப்புற வாழ்க்கை, புதிய தலைமுறை சிக்கல்களை மையமாகக் கொண்டது. புலம்பெயர் சமூகத்தின் முன்னேற்றம். கலாச்சார அடையாளத்தின் சிக்கல்களை நாவலின் கதைக்களத்தில் சிறப்பாக இணைத்தார்.

3. கலைச்சேகர் தியாகராஜா – எனும் இவ்வறிஞர் சமூக நீதியும், பெண்கள் உரிமையையும், சமத்துவக் கோரிக்கைகளையும் நாவல்களின் வழி முன்னிறுத்தினார். பெண்ணிய இலக்கிய வளர்ச்சிக்கு முக்கியமான பங்களிப்பை இவர் செய்தவர் என்பதே சிறப்பு நிலையாகும்.

4. முருகேசு நாகராஜ் – இவர் புலம்பெயர்ந்த அனுபவம் அடையாள அரசியலை மையமாகக் கொண்ட நாவல்களை எழுதியவர். பன்முக கலாச்சாரச் சூழலில் தமிழர்களின் இரட்டை அடையாளம் சமூக ஒற்றுமை-மோதலை வெளிப்படுத்தினார்.

5. சுதேசன் ராமசாமி – எனும் இவர் புதிய தலைமுறை சிந்தனை, தனிநபர் சுய அடையாளம், உளவியல் போராட்டங்களை நாவல்களில் இணைத்தார். சமூகச் சிக்கல்களையும் தனிநபர் மனநிலையையும் இணைத்துச் சித்தரித்தார்.

இந்த எழுத்தாளர்கள் அவர்களின் படைப்புகளில் சமூக உணர்வு, கலாச்சார அடையாளம், அரசியல் விழிப்புணர்வு, பெண்கள் உரிமை போன்ற பரிமாணங்களைச் செழுமைப்படுத்தி, மலேசிய தமிழ் இலக்கியத்தை பன்முக வளர்ச்சியடைந்த நிலையில் பெற செய்தனர் உலகளாவிய பார்வை கொண்ட இலக்கியமாக மாற்றி வெற்றிப் பெற செய்தனர்.

பதிப்பு சூழல், வாசக ஆட்சி மற்றும் சந்தை மறைமுகம்

மலேசிய தமிழ் படைப்புகள் பெரும்பாலும் உள்ளூர் பதிப்பகங்கள், சமூக ஆதரவுகள், தனிநபர் முயற்சிகளால் பரவுகின்றன. இந்திய நாட்டின் தென் மாநிலமான தமிழ்நாட்டில் வேறு பொதுமக்கள் மிக்க விற்பனை ஆதரவு இருப்பினும் மலேசியாவில் தமிழ்ப்புத்தக சந்தை சிறியதாகவே காணப்படுகிறது. இதனால் சில சிறப்பு படைப்புகள் பரப்பளவை பெறுவதில் சிக்கல் அடைகின்றன. டிஜிட்டல் பதிப்புகள் சமூக ஊடகங்கள் இவ்வசதியைத் தூண்டுகின்றன; அதே சமயம் தரமான மொழிபெயர்ப்பு, வெளிநாட்டு வாசகர்களுக்கு அணுகல் நாடு மாறிய இடங்களில் தொடர்ந்து குறைவாகவே உள்ளது.

குறைகள் மற்றும் சவால்கள்

1. ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தலினால் ஏற்படும் குறைபாடுகள்

மலேசிய தமிழ் இலக்கியம் குறித்த விரிவான விமர்சன ஆய்வுகள், புரொஃபேசரியல் கட்டுரைகள், அத்தியாயச் சேமிப்புகள் இன்னும் எல்லாம் வரம்புகளிலும் உடையவை. இதனால் இச்சேமிப்பு நிலை விரிவான இலக்கிய வரலாற்று நிலைத்தன்மையை அடையவில்லை.

2. மொழி அடையாள குழப்பம்

மலேசியா போன்ற பன்மொழி சூழலில் தமிழ் எழுத்து பழக்கத்தில் இருந்து விலகுதல் அல்லது வார்த்தைக் கலவைகள் ஏற்பட்டால், அவை சில நேரங்களில் பாரம்பரிய தமிழின் வாசிப்பை சீரழிக்கலாம். இக்கூடவெளியத்தில், மொழி சுத்தம் என்பதற்கான சொற்களிலான விமர்சனமும், பன்மொழி சிக்கல்களைக் கருத்திலிடாதே எழுதும் முயற்சிகளும் இரண்டுமே பங்கேற்புகளை பாதிக்கலாம்.

3. சந்தை மற்றும் பொருளாதார தடைகள்

புத்தக வெளியீடுகள், விளம்பர சலுகைகள் ஆகியவையைக் குறிப்பிடும்போது மிகுந்த பொருளாதார ஆதாரம் அவசியம். மலேசிய தமிழ் எழுத்தாளர்கள் பெரும்பாலும் தனிப்பட்ட பணம் அல்லது சமூக ஆதரவு மூலம் எழுத்தில் ஈடுபடுவர்; இதனால், தொடர்ச்சியான உற்பத்தி, தரமட்டப் போதுமான ஆதரவு இல்லாமல் இருக்கிறது.

சமகால போக்குகள் மற்றும் எதிர்காலம்

மலேசிய தமிழ் நாவல்கள் தற்போது சில தொடக்கமான போக்குகளை காட்டுகின்றன: பன்மொழி இணைபு, டிஜிட்டல் வெளியீடுகள், பெண்களுக்கு ஊடான உரையாடல்கள், சமூக-அறிவியல் கருப்பொருள்களின் அதிக ஈடுபாடு. எதிர்காலத்தில் இந்த வழிகள் தொடர்ந்து விரிவடையும்: தரமான மொழிபெயர்ப்புகள், சர்வதேச முழுமையான தொடர்நிலையில், கல்வி நிறுவனங்களில் மலேசிய தமிழ் இலக்கியம் பற்றிய பாடங்கள், மையங்கள் ஆகியவையால் இந்த இலக்கியத்தை மேலும் வலுப்படுத்த முடியும்.

மற்றொரு முக்கியமான திசை — இரண்டாம், மூன்றாம் தலைமுறையினரின் குரல். அவர்கள் தமிழ் மொழி கலாச்சாரத்துடன் இணைந்து இருக்கிறார்களா என்று ஒரு பெரிய கேள்வி இருக்கும்; ஆனால் இதன் மூலம், வரும் புதிய மொழிப் பாணி மற்றும் கதைத்திறன் இலக்கியத்திற்கு புதிய தத்துவங்கள் வடிவங்களைத் தரும்.

பரிந்துரைகள் (Recommendations)

என்னும், ஆய்வு மையங்கள், கல்வி பாடங்கள்: பல்கலைக்கழகங்களில் மலேசிய தமிழ் இலக்கியத்தை ஊக்குவிக்கும் பட்டப் படிப்புகள், ஆய்வு திட்டங்கள் தொடங்க வேண்டும். இதனால், வரலாறு தொகுப்புகள் உருவாகும்.

மொழிபெயர்ப்பு, சர்வதேச சந்தை: தரமான ஆங்கில-தமிழ்-மலாய் மொழிபெயர்ப்புகளை ஊக்குவித்து படைப்புகளுக்கு உலகளாவிய சொற்களை உருவாக்க வேண்டும்.

டிஜிட்டல் பதிப்பு, நுண்ணிய பிரபலிப்பு: e-books, இணையவிழாக்கள், சமூக ஊடக வழி புதிய எழுத்தாளர்களுக்கு மேடை கொடுக்கும்; இதை தாயாராக இருக்க வேண்டும்.

புத்தக விழாக்கள், இணையவழி அரங்குகள்: மலேசிய தமிழ் எழுத்துகளை வெளிப்படுத்தும் மாநாடுகள், இலக்கிய விழாக்கள் அமைத்தால் வாசக ஆட்சி அதிகரிக்கும். பண்பாட்டு ஆலோசனைகள்

கோப்புகள்: சமூகச் செயல்பாடுகள் மூலம் கதைகள் சேகரித்து அவற்றை ஆவணம் செய்ய வேண்டும் — இதுவே பழங்கால தமிழ் இலக்கியத்தின் பங்களிப்புகள் வோலை பாதுகாக்கும்.

முடிவுரை

மலேசிய தமிழ் நாவல்கள் ஆரம்பத்தில் தொழிலாளர் வாழ்வியல், சமூக சுரண்டல், அடையாள இழப்பு போன்ற கருப்பொருள்களைக் கொண்டிருந்தன. பின்னர், கல்வி, நகர்ப்புற முன்னேற்றம், பெண்கள் உரிமை, புலம்பெயர்தல் அனுபவம், கலாச்சார அடையாளம் போன்ற புதிய கருப்பொருள்கள் நாவல்களில் இடம் பெற்றன. இதனால், இலக்கியம் பாரம்பரிய சித்திரிப்பிலிருந்து சமூகச் சிந்தனை மையமாக மாறியது. பரிணாமத்தின் அடிப்படையில், இந்த நாவல்கள் தீவிரமான, நிலையான மாற்றங்களை அனுபவித்தன. தீவிரமான மாற்றங்கள் அரசியல், சமூக, பெண்கள் உரிமை தொடர்பான விழிப்புணர்வு காரணமாக ஏற்பட்டது. நிலையான மாற்றங்கள் தலைமுறை மாற்றம், கல்வி முன்னேற்றம் புலம்பெயர் அனுபவங்களின் தாக்கத்தால் மெதுவாக விரிவடைந்தன. இதனால், நாவல்கள் ஒரே நேரத்தில் சமூக உணர்வு, கலாச்சார பாதுகாப்பு, உலகளாவிய பார்வையை பிரதிபலிக்கும் வல்லமை பெற்றன. விமர்சனக் கோணத்தில், சில சவால்கள் நிலவினாலும் பன்முக சூழல், மொழி சிக்கல்கள் கலைப்பண்பில் சீரான பராமரிப்பு தேவைகள் — வாய்ப்புகள் அதிகம்: சமூக விழிப்புணர்வு, அடையாள பாதுகாப்பு, பெண்கள் உரிமை, புலம்பெயர் அனுபவங்களை வெளிப்படுத்தும் திறன். முடிவில், மலேசிய தமிழ் நாவல்கள் தத்துவ, சமூக கலாச்சார பரிமாணங்களில் பரிணாம வளர்ச்சியை அடைந்துள்ளன. அவை சமூகச் சிந்தனை, கலாச்சார அடையாளம் உலகளாவிய பார்வையை இணைத்து, பன்முகமான, செழுமையான இலக்கியமாக திகழ்கின்றன.

மேற்கோள் நூல்கள்

1. சுப்பிரமணியன், சு. (2008). தமிழ் இலக்கிய வரலாறு. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அப்த்தூர், சென்னை- 6000
2. இராசரத்தினம், கு. (2015). விமர்சனக் கோட்பாடுகள் மற்றும் தமிழ் இலக்கியம். திருச்சி: பாவை பதிப்பகம்.
3. முருகேசு, ஆ. (2010). இலக்கியக் கோட்பாடுகள்: ஓர் அறிமுகம். மதுரை: உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-600 113
4. சண்முகம், எஸ். (2016). தமிழ் புலம்பெயர் இலக்கியம்: சிக்கல்கள் மற்றும் சிந்தனைகள். சிங்கப்பூர்: சிங்கப்பூர் தமிழ் இலக்கியச் சங்கம்.
5. பாலசுப்பிரமணியன், ரா. (2012). சங்க இலக்கிய சமூகப் பின்னணி. சென்னை: மணிவாசகர் பதிப்பகம், சென்னை-600 108
6. Sundar, K. (2019). Postcolonial Tamil Literature: Identity and Diaspora. Kuala Lumpur: Malaysian Tamil Writers Forum.

Tamilmanam

7. இளங்கோவன், த. (2021). பெண்ணியம் மற்றும் தமிழ் இலக்கியம்: ஓர் ஆய்வு. சென்னை: வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை-60017.
8. ராஜேஷ், அ. (2018). மலேசிய தமிழ் இலக்கிய வளர்ச்சி: பரிணாமமும் சமூகச் சிந்தனையும். மலேசியா: கோலாலம்பூர் பதிப்பகம்.

References:

1. **Subramanian, S.** (2008). *History of Tamil Literature*. Chennai: New Century Book House. *(Note: The Tamil title is தமிழ் இலக்கிய வரலாறு)*
2. **Rasarathinam, G.** (2015). *Critical Theories and Tamil Literature*. Tiruchirappalli: Pavai Pathippagam. *(Note: The Tamil title is விமர்சனக் கோட்பாடுகள் மற்றும் தமிழ் இலக்கியம்)*
3. **Murugesu, A.** (2010). *Literary Theories: An Introduction*. Madurai: Ulaga Tamil Araycchi Niruvagam (World Tamil Research Institute). *(Note: The Tamil title is இலக்கியக் கோட்பாடுகள்: ஓர் அறிமுகம்)*
4. **Shanmugam, S.** (2016). *Tamil Diaspora Literature: Issues and Thoughts*. Singapore: Singapore Tamil Literary Society. *(Note: The Tamil title is தமிழ் புலம்பெயர் இலக்கியம்: சிக்கல்கள் மற்றும் சிந்தனைகள்)*
5. **Balasubramanian, R.** (2012). *Social Context of Sangam Literature*. Chennai: Manivasagar Pathippagam. *(Note: The Tamil title is சங்க இலக்கிய சமூகப் பின்னணி)*
6. **Sundar, K.** (2019). *Postcolonial Tamil Literature: Identity and Diaspora*. Kuala Lumpur: Malaysian Tamil Writers Forum. *(Note: This entry was originally in English and remains unchanged.)*
7. **Elangovan, Th.** (2021). *Feminism and Tamil Literature: A Study*. Chennai: Vanathi Pathippagam. *(Note: The Tamil title is பெண்ணியம் மற்றும் தமிழ் இலக்கியம்: ஓர் ஆய்வு)*
8. **Rajesh, A.** (2018). *Development of Malaysian Tamil Literature: Evolution and Social Thought*. Malaysia: Kuala Lumpur Publishers. *(Note: The Tamil title is மலேசிய தமிழ் இலக்கிய வளர்ச்சி: பரிணாமமும் சமூகச் சிந்தனையும்)*

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

கவிஞர் நா. முத்துக்குமாரின் படைப்புகளில் சமூகச்சிந்தனைகள்

Social Consciousness in the Works of Poet Na. Muthukumar

திரு. அ. கோகுல்கண்ணன்,
உதவிப்பேராசிரியர், மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு,
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர் - 21
Mr. A. Gokulkannan,
Assistant Professor, Department of Languages - Tamil Wing,
Karpagam Academy of Higher Education, Coimbatore - 21.
EMail: kannanedu3@gmail.com ORCID iD: https://orcid.org/0009-0005-5418-7450

Abstract:

Social progress is indispensable for a nation's advancement. While it is natural for individuals to prioritize their own families, extending that concern to human society exemplifies the true nobility of humanitarianism. Poet Na. Muthukumar, a profound lover of society, disseminated positive and transformative ideas for societal well-being through his literary works. These seeds, whether blossoming into towering trees or enriching the very soil, invariably serve the greater good of society. This article critically examines how Muthukumar keenly observed everyday occurrences, highlighted societal anomalies and injustices through his prolific writings, and effectively fostered public awareness and critical thinking.

Keywords: *Poet N. Muthukumar, social thoughts, social progress*

ஆய்வுச்சுருக்கம்:

நாடு வளர்ச்சிப்பாதையில் செல்வதற்கு சமூக முன்னேற்றம் இன்றியமையாதது ஆகும். மனிதன் ஒவ்வொருவனும் தத்தம் குடும்பத்தின் மீது அக்கறை கொள்வது இயல்பு. ஆனால் மனித சமுதாயத்தின் மீது அக்கறை கொள்வது மனித நேயத்தின் மாண்பு ஆகும். அவ்வாறு சமுதாயத்தை நேசித்த கவிஞர் நா. முத்துக்குமார் தன் படைப்புகளின் வழி சமூகத்திற்கான நற்சிந்தனைக் கருத்துகளை விதைத்துச் சென்றுள்ளார். இவ்விதைகள் எதிர்காலத்தில் மரமாகலாம். இல்லையெனில் நிலத்திற்கு உரமாகலாம். எதுவானாலும் சமூகத்திற்கு நன்மைதான். அன்றாடம் நடக்கும் நிகழ்வுகளைக் கூர்ந்து நோக்கி, இச்சமூகத்தில் நடைபெறும் அவலங்களை தன் படைப்புகளின் வழி சுட்டிக்காட்டி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தை ஆய்வதாக இக்கட்டுரை விளங்குகிறது.

குறிப்புச்சொற்கள்: *கவிஞர் நா. முத்துக்குமார், சமூகச்சிந்தனைகள், சமூக முன்னேற்றம்.*

முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் நா. முத்துக்குமார் என்னும் கவிஞர் நம்மிடையே வாழ்ந்து மறைந்தவர். ஆனால் அவரின் படைப்புகளினூடே என்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர். கவிஞரின் கவிதைகள், உரைநடை நூல்கள், திரையிசைப் பாடல்கள் என ஒவ்வொன்றிலும் அவர் சமூகத்தில் வாழ்ந்து ரசித்த அனுபவங்களையும், சில அவலங்களைக் கண்டு மனம் தாங்காமல் நின்ற நிலையையும், இழந்த

Tamilmanam

உறவுகளைக் குறித்தும் பதிந்துள்ளார். இப்படைப்புகளில் கவிஞரின் சமூகச் சிந்தனை மேலோங்கி நிற்கின்றன.

தன்னலமற்ற சுதந்திரம்

மனித நேய மாண்பு சிறந்து விளங்க வேண்டுமானால் தன்னுடைய சுதந்திரத்தைக் கொண்டு, பிறரை வாட்டக்கூடாது. தன்னலமற்ற சுதந்திரமே நமக்குத் தேவையானது. பொதுநலம் கருதும் சுதந்திரம் அனைவராலும் போற்றக்கூடியதாக இருக்கிறது.

"தன் பெண்டு தன் பிள்ளை சோறு
வீடு சம்பாத்யம் இவையுண்டு
தானுன்டெபோன்
சின்னதொரு கடுகுபோல்
உள்ளம் கொண்டோன்

பாரதிதாசனின் இப்பாடலில் இடைப்படும் வரிகள்,

தொன்னையுள்ளம் ஒன்றுண்டு
தனது நாட்டுச்
சுதந்திரத்தால் பிற நாட்டைத்
துன்புறுத்தல்
தொல்லுலக மக்களெல்லாம்
ஒன்றேயென்னும் தாயுள்ளம்
தனிலன்றோ ஆங்கே
சண்டையில்லை தன்னலம்தான் தீர்ந்ததாலே"

(பாரதிதாசன் பாடல்கள். ப.109)

என்பதில் மனித சுதந்திரம் பொதுநல நோக்கோடு இருப்பதுதான் ஆரோக்கியமான வாழ்வின் அடித்தளம் ஆகும். மக்கள் பெரும் முயற்சியால் உழைப்பின் துணையோடு வளர்ச்சியடையத் தொடங்கியவுடன் இயற்கையின் மேல் அதிகாரம் செலுத்தும் பண்பும் மேலோங்குகிறது. விளைவு, சமுதாய வசதியை உருவாக்க இயற்கையை ஆளுகை செய்து தோல்வியுறச்செய்து சமூக மேம்பாடு அடையும் நிலையை உருவாக்கினான். ஆனால் உழைப்பைப் போற்ற வேண்டியது மிக மிக அவசியம்தான். அதில் அனைவருடைய நலமும் அடங்கியிருக்க வேண்டும் என்று காரல் மார்க்ஸ் கூறியுள்ளது நோக்கத்தக்கது.

"உழைப்புச் சக்தியின் மதிப்பு அதை உண்டாக்கவும், வளர்க்கவும், நிலை நிறுத்தவும் தேவையானவைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும்." (மனித சமுதாயம், ப.392)

உழைப்பின் சிறப்போடு மனநலமும் பாதுகாப்பது அவசியமாகும். அடுத்த தலைமுறைக்கும் சிறந்த சமுதாய அமைப்பை நல் நிலையில் கொடுக்கப்பட வேண்டும் என்பது பல்வேறு அறிஞர்களால் விளக்கப்பட்டுள்ளது. சமுதாய நலன் பேசாத எழுத்தாளர்களே இல்லையென்ற நிலையில் சமூக அக்கறை மிகுந்த கவிஞர் நா. முத்துக்குமார் தன் படைப்புகளின் வழி பேசியிருப்பதில் எவ்வித வியப்பும் இல்லை. சமூகத்தில் நடக்கும் சிக்கல்கள் ஏராளமாய் இருந்தாலும் அனைத்திற்கும் முதன்மையாய் விளங்கக்கூடியதும் அடிப்படை உரிமையும் சுதந்திரம் ஆகும். முதலாளி - தொழிலாளி என்ற வேறுபாட்டுச் சிந்தனை, ஏழை - பணக்காரன் என்ற ஆதிக்க வெறி, அடித்தட்டு மக்களின் உழைப்புச் சுரண்டல், ஒரு குறிப்பிட்ட சமூகம் மட்டும் வளர்ச்சியடையச் செய்வதற்காக உழைப்பாளர;களின்

உழைப்புத் திருட்டு எனப்பட்டியல்கள் நீண்டுகொண்டே செல்கிறது. இவற்றிலெல்லாம் மிக உயர்ந்தது சுதந்திரம் என்பதைத்தான் தன்னுடைய சுதந்திரம் பிறரை வாட்டக்கூடாது என்கிறார் பாரதிதாசன்.

பொதுநலச் சிந்தனை

சமூகம் ஒரு அமைப்பாக உருவாக வேண்டுமானால் அச்சமூகத்தின் முக்கிய அங்கமான மக்களிடத்திலும் அன்புணர்ச்சியும், கருணையும், பொதுநலப் போக்கும், சகிப்புத்தன்மையும் வளர வேண்டும். அப்பொழுதுதான் மனித இனம் பிறவிப்பயனை அடைய முடியும். மனித நேயம் சிறக்கும்பொழுது தான் பொதுநலம் தழைத்து ஓங்கும். மேலும்,

"நல்லது செய்த லாற்றி ராயினும்
அல்லது செய்த லோம்புமின்
............" **(புறநானூறு செய்யுளும் செய்திகளும், ப.195)**

என்னும் நரிவெரூஉத்தலையாரின் புறநானூற்றுக் கூற்றின் மூலம் பிறர் நலம் பேணுதல் குறித்தான பண்பை அறிய முடிகிறது. இந்த உலகம் யாருக்கும் சொந்தமானது இல்லை. வாழும் வாழ்க்கையும் சில காலம் மட்டுமே. அதற்குள் உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை - பணக்காரன் என்ற பாகுபாடு, ஆண் - பெண் வேற்றுமை, முதலாளி - தொழிலாளி பேதம் நிலவிக்கொண்டே வருகின்றது. நிலத் தகராறு, சொத்துப் பிரச்சனை போன்ற சமூகத்தைச் சீர் குழைக்கும் செயல்கள் அன்றாட நிகழ்வாகவே நடைபெற்றுக்கொண்டுள்ளதை ஊடகங்களின் வழியே அறிய முடிகிறது. சமூகத்தை உற்றுநோக்கி தன் படைப்புகளில் பிரதிபலிக்கும் கவிஞர் நா. முத்துக்குமார் சமூகத்திற்கான ஆகச்சிறந்த சிந்தனையை,

"இந்த உலகமே ஒரு வாடகை வீடு தான். இன்னும் சொல்லப்போனா நம்ப உடம்பே ஒரு வாடகை வீடுதான். இங்க யாரும் எதுக்கும் ஓனரில்லே" (வேடிக்கை பார்ப்பவன், ப.110)

என அணிலாடும் முன்றிலில் வீடு என்பது யாதெனில் என்ற கூற்றில் பதிவு செய்துள்ளார்.

மண்ணிலிருந்து தோன்றியவன் மண்ணிற்கே திரும்புவான் என்றும், பிறக்கும் போது எதையும் கொண்டுவருவதில்லை. இறக்கும் போது எதையும் கொண்டு செல்வதும் இல்லை. இடையில் மட்டும் ஏன் தனக்கு தனக்கு என்ற சுயநலம் மேலோங்குகிறது எனும் மறைமுகக் கருத்தை வெளிப்படுத்துவதாய் இக்கூற்று அமைந்துள்ளது. வாழும் வாழ்க்கை செம்மையாக அமைய நல்ல சமூகச்சூழல் உருவாக வேண்டும். இக்கருத்தை அடியொட்டியே கவிஞரின் சிந்தனையும் சமூகத்தை ஒட்டியே நடை பயில்கிறது.

மனுஷிகள்

ஒரு குடும்பம் தலைநிமிர்ந்து சமுதாயத்தில் முன்னேற பொருளாதார வளம் இன்றியமையாதது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் பணிசெய்வதற்கு செல்கின்றார்கள். பணித்தளத்தில் பெண்கள் சந்திக்கும் துன்பங்கள் ஏராளமாக உள்ளது.

"கள்ளுக்கடையில்
சால்னா விற்பவள்
கெட்ட வார்த்தை துணையால்
காத்துக்கொள்கிறாள்
கடையையும் கற்பையும்" **(நா. முத்துக்குமார் கவிதைகள் ப.27)**

பெண் தன் கற்பையும் காப்பாற்ற வேண்டும். உழைக்கும் கடையும் பாதுகாக்கப்பட வேண்டும். ஆண் சமூகத்திடமிருந்தும் அவர்களின் அவலப் பார்வையிலிருந்தும் தப்பித்துக்கொள்ள மென்மையான

Tamilmanam

பெண்ணுக்கு ஆயுதமாகத் துணைநிற்பது கெட்ட வார்த்தைகளாகும். திரும்பி யாரும் பேசுவதில்லை. வாழ்வாதாரம் மேம்படவும், சுயமரியாதை காப்பாற்றப்படுவதற்கும் அவள் தனக்குத் தானே போட்டுக்கொள்ளும் அரண் ஆகுமென்பதை கவிஞர் நா. முத்துக்குமார் ‘மனுஷிகள்” என்னும் கவிதையில் ஆழமான சிந்தனைப் பதிவை பதிவிட்டுள்ளார்.

தண்ணீர் இல்லா அவலம்

பயணங்களின் காதலனான கவிஞர் பயணங்களின் மூலம் அனுபவத்தை மட்டுமல்ல மக்களின் மனதையும், சமூகம் சந்திக்கும் சிக்கல்களையும் கவனிக்கத் தவறியதில்லை. மணல் திருட்டால் நதிகள் வறண்டு போனது.

“பறவைகள் முகம் பார்க்க
கண்ணாடியின்றித் திரும்பின
வறண்டு போனது நதி”[5]

கண்ணாடிக்கு நதியை உவமைப்படுத்தியுள்ள கவிஞரின் எழுத்தாளுமை சிந்தனைக்குரியதாய் உள்ளது. பெரும்பாலான நதிகளின் இயல்பை விளக்கியுள்ளார். இயற்கை வளம் சுரண்டப்படுவதால், நீர் நிறையும் குளமும், ஏரிகளும் தன்னிலை திரிதலால் வேறு பொருள்களால் நிரப்பப்படுகிறது.

“மீன்களும் நீரும் போய்விட்ட பிறகு
தாமரைக் கொடிகளுக்கு ஒரே துணை
தவளைகள்” (நா. முத்துக்குமார் கவிதைகள் ப.144)

என இரு வாழ்விகளான தவளைகள் சூழ்நிலைகளால் தாமரைக் கொடிகளுக்குத் துணையாகிறது. குளம் வற்றி, தண்ணீர்த் தட்டுப்பாட்டை மறை பொருளாய் கவிஞர் சாடியுள்ளது கவனிக்கத்தக்கதாய் உள்ளது. சூழ்நிலைக்கு ஏற்ப சமூகமும் யாரோ ஒருவரைச் சார்ந்து வாழ்கிறது.

வறுமை

“எத்தனையோ வீட்டுக்கு
படியளந்தவன்
இன்றைக்கும் வறுமையில்
கட்டிட மேஸ்திரி” (நா. முத்துக்குமார் கவிதைகள் ப.140)

இரண்டு விதமாக இக்கவிதையில் விளங்கமுடிகிறது. பணக்காரர்களின் ஏற்றமும், ஏழைகளின் உயர்வற்ற தன்மையும் புலப்படுத்துவதாக உள்ளது. தொழிலாளிகள் என்றும் மற்றவர்கள் வாழ வழிசெய்து தன்னால் உருவான உயர்ந்த கட்டிடத்தை அண்ணார்ந்து பார்த்து ரசிக்கும் ரசிகனாகவே வாழ்வின் கடைசி வரை உள்ள நிலையில் தொழிலாளிகளின் உள்ளக் குமுறலும், ஏக்கமும் மறைபொருளாய் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உழைப்புச் சுரண்டல் உயர்மட்ட மக்களின் பண்பாகவும், அடித்தட்டு மக்களின் ஏக்கமும் இந்தக் கவிதையில் வெளிப்படுகிறது.

“இன்று வேண்டாம்
நாளை வா நிலா
ஊட்டுவதற்கு சோறில்லை” (நா. முத்துக்குமார் கவிதைகள் ப.139)

அக்காலங்களில் நிலாச்சாறு உண்ணும் பழக்கம் இருந்தது. இயற்கையாய்த் தோன்றும் நிலாவைக் கூட கட்டளையிட்டு தடுத்து நிறுத்த வைக்கிறது வறுமை. வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் மக்களின் அவலநிலை இங்கு மொழியப்பட்டுள்ளது.

"முப்போகம் பயிர்செய்த தமிழன்
முண்டியடித்து வாங்கிய
ரேஷன் அரிசிக்கு
சரியாகத்தான்
பெயர் வைத்துள்ளான்!
புழுங்கலரிசி
ஆம்
"புழு" "கல்" "அரிசி|" **(நா. முத்துக்குமார் கவிதைகள் ப.371)**

முப்போகம் விளைவித்த தமிழனின் உழைப்பு யார் யாருக்கோ பயன்படுகின்றது. அவனுக்குக் கிடைப்பது என்னவோ புழுவும், கல்லும் கலந்த ரேஷன் அரிசிதான் என சமுதாயத்தின் நிலை கண்டு வருந்திய கவிஞர் தன் கவிதை வழி மக்களின் விழிப்புணர்வைத் தட்டியெழுப்பியுள்ளார்.

மனித நேயம்

"இன்றைக்கும் ….
கைக்குழந்தையோடு
பேருந்தில் பயணிப்பவளுக்கு
எழுந்து இடம்கொடுக்க
ஆள் இருக்கிறது" **(நா. முத்துக்குமார் கவிதைகள் ப.21)**

மனிதநேயம் சமூகத்தில் முழுவதுமாக மறைந்துவிடவில்லை என்பதை இக்கவிதை ஆணித்தரமாகச் சித்தரிக்கிறது.

தொகுப்புரை

சமூகச் சிந்தனைகள் குறித்து பல கவிஞர்கள் எழுதியிருந்தாலும், அவர்களுக்கு மத்தியில் மாறிவரும் சமூகத்தின் மக்களையும், மனசாட்சியையும் வழிநடத்தும் எளிய தமிழில் விழிப்புணர்வைப் பதிவு செய்துள்ளார் கவிஞர் நா. முத்துக்குமார். சமூகம் நலமுற்றாலே மனித வாழ்வு மேம்படும் சமூகத்திற்கான நற்கருத்துகளை கவிஞர் பல்வேறு கோணங்களில் எடுத்துரைத்துள்ளார். சமூகத்தைப் புரிந்துகொள்வதற்கான ஒரு வழி கவிஞரின் படைப்புகள் ஆகும்.

Tamilmanam

துணைநூற் பட்டியல்

1. டாக்டர் தொ. பரமசிவன், பாரதிதாசன் பாடல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. முதற்பதிப்பு - 1993.
2. இராகுல சங்கிருத்யாயன், மனித சமுதாயம், பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்., சென்னை. ஐந்தாம் பதிப்பு - 2019.
3. பேராசிரியர் டாக்டர் இரா. சீனிவாசன், புறநானூறு செய்யுளும் செய்திகளும், அணியகம், சென்னை. முதற்பதிப்பு - 2000.
4. கவிஞர். நா. முத்துக்குமார், நா. முத்துக்குமார் கவிதைகள், டிஸ்கவரி புக் பேலஸ், கே.கே. நகர், சென்னை.
5. கவிஞர். நா. முத்துக்குமார், வேடிக்கை பார்ப்பவன், விகடன் பிரசுரம், சென்னை. ஆறாம் பதிப்பு - 2009.

Bibliography

1. Dr. D. Paramasivan, Bharathidasan Paadalgal, New Century Book House, Chennai. First Edition - 1993.
2. Raagula Sangiruthyayan, Manitha Samuthayam, Paavai Printers (P) Ltd., Chennai. Fifth Edition - 2019.
3. Prof. Dr. R. Srinivasan, Purananooru Seyyulum Seithigalum, Aniyagam, Chennai. First Edition - 2000.
4. Kavignar Naa. Muthukumar, Naa. Muthukumar Kavithaigal, Discovery Book Palace, K.K. Nagar, Chennai.
5. Kavignar Naa. Muthukumar, Vedikkai Paarppavan, Vikatan Prasuram, Chennai. Sixth Edition - 2009.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

சங்க இலக்கியங்களில் மனிதனுக்கும் சமூகத்திற்குமான முரண்பாடுகள்

Contradictions Between the Individual and Society in Sangam Literature

முனைவர் சி. இரகு,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
இலொயோலா கலை & அறிவியல் கல்லூரி, மெட்டாலா, இராசிபுரம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம் – 636 202.
Dr. C. Ragu,
Assistant Professor, Department of Tamil, Loyola College of Arts & Science, Metthala, Rasipuram Taluk, Namakkal District – 636 202. Email: ragudr03@gmail.com

Abstract:

Sangam literature can be described as a treasure trove of Tamil societal life. Through these literary works, we can understand the lifestyle, art, culture, traditions, and values of the ancient Tamils. Although Sangam-era people lived with various social structures, they experienced a life marked by contradictions with the people and society around them. Notably, these included the imposition of lifestyle practices against women. This research paper aims to highlight that the continuation of these practices even in the current computer-driven century signifies the enduring impact of those ancient times on the present day.

Keywords: *Society – Crowd of people, Community – Group of people, Throng of people, Thodi – Bangle, Koodhal Kalaithal – Shaving the head, Mazhithal – Removing, Thinai – Food, Kalanthoda – Without touching utensils, Kaimmai – Widows*

ஆய்வுச்சுருக்கம்:

சங்க இலக்கியங்கள் தமிழ்ச்சமூகத்தின் வாழ்வியல் களஞ்சியம் என்று குறிப்பிடலாம். இவ்விலக்கியங்கள் மூலம் பண்டைய தமிழர்களின் வாழ்வியல், கலை, பண்பாடு, கலாச்சாரம், விழுமியங்கள் ஆகிய எல்லாவற்றையும் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக சங்க இலக்கியங்கள் காணப்படுகின்றன. சங்ககால மக்கள் பல்வேறு கட்டமைப்புகளோடு வாழ்ந்திருந்தாலும் சமூக மக்களோடும் சமுதாயத்தோடும் முரண்பட்ட வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர். அவற்றிலும் குறிப்பாக பெண்களுக்கு எதிரான வாழ்வியல் நடைமுறைகளை புகுத்தியுள்ளனர். இந்த நடைமுறைகள் கணினிமயமான இந்நூற்றாண்டிலும் தொடர்ந்து கொண்டிருப்பது என்பது அன்றைய காலங்களின் தாக்கம் இன்றைய காலத்திலும் இருக்கின்றது என்பதை உணர்த்துவதே இக்கட்டுரையாகும்.

திறவுச் சொற்கள்: *சமூகம் – மக்கள் கூட்டம், சமுதாயம் – மக்கள் குழு, மக்களின் திரள்., தொடி – கைவளையல், கூந்தல் களைதல் – மொட்டையடித்தல்., மழித்தல் – நீக்குதல், தினை – உணவு, கலந்தொடா – பயன்படுத்தும் பாத்திரங்களை தொடாமல்., கைம்மை – கணவனை இழந்த பெண்கள்..*

Tamilmanam

முன்னுரை

இலக்கியங்கள் மனிதனை மனிதனாக வாழ்வதற்கு துணைநிற்கின்றன. ஒவ்வொரு காலத்திலும் எழுந்துள்ள இலக்கியங்களல் அக்கால வரலாற்றை பதிவு செய்திருக்கின்றன. சங்க இலக்கியங்களில் பழங்கால மனிதனின் வாழ்வியல் சித்திரிப்புகளை ஒவ்வொன்றாக அறிந்து கொள்ள இயலுகின்றது. தொல் தமிழர் காலத்தில் இருந்து மனிதனுக்கும் சமூகத்திற்கும், பெண்கள், ஆண்கள் மன்றும் சமூக மாற்றத்தில் பெண்களுக்கு எதிரான மாறுபட்ட சிந்தனைகள், கொள்கைகள் இருந்துள்ளதை சங்க இலக்கியங்கள் பதிவுச் செய்துள்ளனர் என்பதை விளக்குவதே இக்கட்டுரையாகும்.

சமூகம் - வரையறை

உலகத்தில் "தனிமனிதனாக இருக்கும் ஒருவன் சமுதாயப் பழக்க வழக்களை ஏற்றுக்கொள்ளும் போது அம்மனிதர்களின் கூட்டுத்தொகுப்பே சமூகம்"[1] என்று அழைக்கப்படுகிறது. தனிமனிதன் கூட்டாக சேர்ந்து வாழ்கின்ற மனித தொகுப்பே சமூகம் என்பர். இவற்றில் "சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பாகும்"[2]. தனிமனிதனின் "இன்பம், துன்பம் ஆகிய உணர்வுகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டு, சேர்ந்து வாழும் மக்கள் குழு சமூகம் எனப்படும்"[3]. என்று சமூகத்திற்கு வரையறை தந்துள்ளனர்.

சமுதாயம் விளக்கம்:

மனிதன் தொடக்கத்தில் தனித்து வாழும் இயல்பு கொண்டவனாகத் திகழ்ந்தான். பின்னர் பாதுகாப்புக் கருதி மனிதர்கள் ஒன்று சேர்ந்து கூட்டம் கூட்டமாக வாழும்முறை தோன்றியபோது 'சமுதாயம்' என்ற ஒரு நிலை உருவானது.

மனிதன் தனித்து வாழ்ந்த காலகட்டத்தைக் கடந்து பல்வேறு குழுக்களாக வாழ முற்பட்ட நிலையில் சமுதாயம் உருவானது. இந்த"சமுதாயம் என்ற சொல்லே மிகக் குறுகிய பொருளில் வழங்கப்பட்டது. சிறுசிறு கிராமங்களிலே சிதறுண்டு பரவிக்கிடந்த மக்கட் கூட்டமானது, பொதுசனம் என்னும் தொகுதியுணர்வின்றிக் குழுக்களாக இயங்கின"[4]. என்று கைலாசபதி குறிப்பிடுகின்றார்.

பழந்தமிழர்கள் வாழ்ந்த வாழ்க்கையில் சமுதாயம் என்ற சொல்லிற்கு விளக்கத்தைக் காணமுடிகின்றது. அவற்றில் "ஒருவனை மற்றவன் உணர்ந்து வாழத்தலைப்பட்ட காலமே நாகாரிகக் காலம். அதுவே சமுதாயம் மண்ணில் காலூன்றத் தொடங்கிய காலம். ஒருவரையொருவர் அன்புடன் ஏற்று அரவணைத்துப் பாராட்டியதைப் பார்க்க இயலும். அதே சமயம், முரண்பட்டு நிற்பதையும் உணரமுடிகிறது. இதனால் மனம் பொருந்தி வாழ்வதும், மனம் மாறுபட்டு வாழ்வதும் பண்டைய சமுதாயத்திலிருந்து இன்று வரை இருந்து கொண்டுதான் இருக்கின்றன."[5]

சமுதாயம் எனும் சொல்லிற்கு ஆறு வகையான பொருள்களைத் தமிழ்ப் பேரகராதி கூறுகிறது. "மக்களின் திரள், பொருளின் திரள், கோயிலின் நிருவாக அதிகாரிகளின் கூட்டம், பொதுவானது பொதுவாகவேணும் அவரவர்க்குப் பங்கு பிரித்தேனும் அனுபவிக்கப்படும் ஊர்ப் பொதுச்சொத்து, உடன்படிக்கை"[6] என்பனவாகும்.

முரண்பாடு - வரையறை

முரண் என்னும் அடிச்சொல்லில் இருந்து முரணுதல் என்ற சொல் தோன்றியிருக்கின்றது. "முரணுதல் என்றால் மாறுகொண்டழித்தல்"[7] என்று பொருள் விளக்கம் தந்திருக்கின்றது. மேலும் முரண் என்னும் சொல்லிற்கு "முரண்டல் என்றால் எதிர்த்தல், முரண்டு என்பதற்கு அமையாமை, இசையாமை, மாறுபாடு என்றும் முரண்படுதல் என்பதனை மாறுபடுதல் என்றும் முரண்மொழியினை எதிர்மொழி"[8] என்று தமிழ் அகராதி விளக்கம் தந்திருக்கிறது.

முரண் என்னும் இச்சொல்லை ஆங்கிலத்தில் Conflict என்று குறிப்பிடுகின்றனர். Conflict என்பதற்கு ஆங்கில அகராதிகள் பல நிலைகளில் விளக்கம் தருகின்றன. அவற்றில் Conflict என்பதை முதலில் பெயர்ச்சொல்லாக (Noun) குறிப்பிடுகையில் 'முரண்பாடு, சண்டை, சச்சரவு, பிணக்கு, மனப்போராட்டம் , மோதல்' என்று விளக்கம் தந்திருக்கின்றது. மேலும் conflict என்பதை வினைச்சொல்லாக (Verb) எடுத்துக்கொண்டும் பொருள் விளக்கம் தந்திருக்கின்றனர;. அப்பொழுது "சண்டையிடு, மோது , எதிர்த்து நில், முரண்படு, ஒன்றுடனொன்று ஒவ்வாதிரு, உளப்போரட்டம், மனப்போரட்டம், குழப்பம், சச்சரவு"9 என்று அகராதிகள் குறிப்பிடுகின்றன.

தொடி கழிதல்

தொடி என்னும் சொல்லாட்சியை ஆராய்கின்ற பொழுது "தொடி என்பதற்கு தமிழ் அகராதிகள் கைவளை என்று பொருள்தருகின்றது"[10] கழிதல் என்பதற்கு நீக்குதல் என்று பொருள் கொள்ளப்படுகின்றது. தொடி கழிதல் என்பதற்கு கையில் உள்ள வளையல்களை நீக்குதலாகும். பருவ வயது அடைந்த பெண்களுக்கு அழகு சாதனப்பொருட்களில் ஒன்றாகத் திகழ்வது கைவளையல்கள் ஆகும்.

பெண்கள் திருமணம் ஆன பிறகு கணவன் போரின் மூலமாகவோ, விபத்தின் காரணமாகவோ அல்லது ஏதாவது ஒரு சூழ்நிலையில் இறக்க நோrட்டால் முதலில் தங்கள் கையில் இருக்கக் கூடிய கைவளையல்களை நீக்குதல் வேண்டும். இந்நிகழ்வின் மூலம் கணவனை இழந்த பெண்கள் அணிகலன்களும், ஆபரணங்களும் அணியும் உரிமை மறுக்கப்பட்டனர். "இலக்கியங்கள் கைம்பெண்களை தொடிகழி மகளிர் என்றும் கழிகல மகளிர்" [11] என்று காலந்தோறும் வழங்கி வருகின்றதை அறிந்துகொள்ள முடிகின்றது. எட்டுத்தொகை நூல்களில் காலத்தால் பழமை மிக்க இலக்கியமாக கருதப்படும் புறநானூற்றில் பழந்தமிழரின் பதிவுகள் நிறைந்திருக்கின்றன. அவற்றில் தொடி கழிதல் பற்றி இரண்டு பாடல்கள் (புறம்.237,238) பதிவாகியிருக்கின்றன.

கூந்தல் களைதல்

கணவனை இழந்த பெண்களுக்கு தொடிகழிதல் நிகழ்வோடு மட்டும் விட்டுவைக்கவில்லை. அப்பெண்களை பல்வவேறு சித்திரவதைகளுக்கு ஆளாகியிருக்கின்றனர். இச்சமூகம் பெண்களுக்கு பல்வேறு சடங்கு, பழக்கவழக்கம் என்று சொல்லி பெண்களுக்கு எதிராகச் செயல்பட்டு வந்திருக்கின்றது. அவற்றில் தொடிகழிதல் நிகழ்விற்குப் பிறகு கூந்தல் களைதல் (மொட்டையடித்தல்) ஆகும்.

தாயங்கண்ணியார் என்னும் புலவர் வாழந்த காலத்திற்கும் முன்பாக வாழந்த பெண்களுக்கு நிகழ்ந்த கொடுமைகளை இவ்வுலகிற்கு எடுத்துச் சொல்லும் விதமாக பாடலை புனைந்திருக்கிறாh;.

கூந்தல் களையும் நிகழ்வினை புனையும் பொழுது அப்பெண்ணின் நிலைமையிலிருந்து அவருடைய மன வேதனையும், மனதிற்குள் அடக்கி வைக்கப்பட்ட மனக்குமறலையும் வெளிப்படையாக காட்சிபடுத்துகிறார். முற்காலத்தில் கணவனை இழந்த பெண்களின் கூந்தலைக் கொய்துள்ளனர் என்பதனை “கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி”[12] உள்ளனர். என்பதை புலவர் புலப்படுத்தியுள்ளார்.

கூந்தல் களையும் நிகழ்வானது முற்காலத்திலிருந்தே தொடர்ந்து வருகின்ற நிகழ்வாக அமைந்திருக்கின்றது. இந்நிகழ்வினை கல்லாடனார் என்னும் புலவரும் புறநானூற்றில் 25 ஆம் பாடலில் பதிவாக்கியிருக்கின்றார்.

கல்லாடனார் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் சிறப்புகனை எடுத்துரைக்கின்ற பொழுது தன்னோடு பகைத்த இருபெரும் வேந்தர்களை போரில் வெற்றிபெற்றுள்ளான். வெற்றிபெற்றதையடுத்து இருபகைவரின் தலைமுடியையும் மழித்துள்ளனர்.

பகைவருடைய மகளிர் கூந்தலை களைந்து பெண்களின் கைம்மை வாழ்க்கைக்கு காரணமாகத் திகழ்ந்திருக்கின்றான். தோல்வியடைந்த பகைவரின் நாட்டு பெண்களின் கூந்தல் கொய்யும் பொழுது அரசனின் வேல் சிதைந்து போனதாகவும் குறிப்பிடுகின்றார் இதனை

“முலைபொலி யாக முருப்ப நூறி
மெய்ம்மறந்து பட்ட வரையாய் பூசல்
ஒண்ணுதன் மகளிர் கைம்மை கூர
அவிரறல் கடுக்கு மம்மென்
குவையிங் கூந்தல் கொய்தல் கண்டே”[13] (புறம்.25:10-14,)

இப்பாடலில் அறியமுடிகின்றது. வேல் சிதைந்து போகும் அளவிற்கு அரசன் அவர்களின் கூந்தலை சிதைந்திருப்பதால் அரசன் என்னும் அதிகாரத்தன்மையை பயன்படுத்தி பெண்களின் இழிநிலைக்குத் தள்ளப்படுவதற்குக் காரணமாக பாண்டியன் இருந்திருக்கின்றான்.

பாயின்றி உறங்குதல்

சமூகமானது கைம்மை மகளிருக்கு ஒவ்வொன்றாக இன்னல்களைக் கொடுத்திருக்கின்றது. பல்வேறு நிலைகளில் இன்னல்களை அனுபவிக்கின்ற கைம்மை பெண்களுக்கு உணவில் மட்டும் அல்லாது படுத்துறங்கும் நிகழ்விலும் சில கட்டுப்பாடுகள் வைத்திருக்கின்றனர் இதனை

“பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே”[14] - (புறம். 246 : 8-9)

என்று குறிப்பிடுகின்றனர் பன்மை குணங்கண்மேனின்றது கைம்மை மேற்கொண்டொழுகும் மகளிரை உயவற் பெண்டிர் என்று அழைத்துள்ளனர் இம்மளிர் பருக்கைக் கற்கள் அமைந்த படுக்கையில் பாய்யில்லாமல் படுத்துறங்கினர் என்பதை பாடல்கள் புலப்படுத்துகின்றன. இக்கட்டுபாடுகள் அவர்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்விற்கு மாறனதாகவும், சமூகத்திற்கு அடங்கி பயந்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதனை பின்பற்றியுள்ளனர்.

சங்ககால சமுதாயத்தில் சங்க மகளிரின் திருமணத்தில் இழை அணிகள் அணியப்பட்டன. கைம்மையில் இழை, வளை, தொடி களையப்பட்டன. கைம்மை வாழ்க்கையில் கூந்தல் களைதலில் மலர் நீக்கம்

தானாகவே நடக்கிறது. திருமணத்தில் மங்கல மகளிர் வாழ்த்துகின்றனர். சங்க காலத்தில் கைம்மை மகளிர் வாழ்த்தியதாகவோ, நிகழ்வுகளில் கலந்து கொண்டதாகவோ செய்திகள் இல்லை. கற்பு வாழ்க்கையில் விருந்தோம்பல் பண்பு சிறப்பாகப் போற்றப்பட்டது. இன்னாப்பொழுதில் பசலைக்கீரை, புல்லரிசி, வெள்ளைச்சாந்து, பழஞ்சோறு உண்பது கைம்மைக்குரியதாக உள்ளது. கைம்மை பெண்களுக்கு என்று விதிக்கப்பட்ட கொடுமைகள்; அனைத்தும் சமூகத்தில் முரண்பாட்டிற்கு அடித்தளமாக அமைந்துள்ளது.

கலந்தொடா மகளிர்

பெண்கள் பூப்புற்றிருக்கும் காலங்களில் வீட்டுப் பண்டங்களைத் தொடாமல் ஒதுங்கி வாழ்ந்தமையால் அவர்கள் கலந்தொடா மகளிர் எனப்பட்டனர் பெண்கள் பூப்புற்றிருக்கும் காலங்களிலும் குழந்தைபெற்ற காலத்திலும் தூய்மையற்றவர்களாகக் கருதி விலக்கும் நிலை அனைத்துப் பண்டைத் தமிழர்களிடமும் நிலவியதனைப் பழந்தமிழ் இலக்கியச் சான்றுகள் குறித்துள்ளன. பெண்கள் பூப்படையும் நிலை பருவமுதிர்ச்சியின் அறிகுறியாகும். அந்நிலையில் அவர்கள் தீண்டத் தகாதவர்களாகக் கருதப்படுகின்றனர். இவ்வழக்கத்தைப் பழங்குடி மக்கள் பெரும்பாலோருடையேயும் காணமுடிகின்றது. அவர்கள் பெண் பருவத்திற்கு வந்துவிட்டால் அவளை வீட்டை விட்டு அகற்றித் தனியிடத்தில் குடிலமைத்துத் தங்கச் செய்து துணையாக முதிர்ந்த மகளிரை இருத்தி அவளுக்குத் தேவையானவற்றை அந்தந்த நேரங்களில் கொடுக்கச் செய்து நீராடித் தீட்டுக்கழித்துப் பின்னர் தங்களோடு வாழ அனுமதிதுள்ளனர்.

தலைவியின் பருவமாற்றத்தால் உடலில் ஏற்படும் நிகழ்வுகளை வைத்து இவள் தீயசக்திக்கு ஆட்பட்டவள் என்று அவளை தீண்டத்தகாதவளாகச் சமுதாயத்தில் குறித்துள்ளனர் இதனை,

“முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண்டழை யுடையை
யலமர லாயமொ டியாங்கணும் படாஅன்
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய
காப்பும் பூண்டிசிற் கடையும் போகலை
பேதை யல்லை மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவத் தொதுங்கினை.” [15] (அகம். 7:1-7)

என்று கயமானார் சமுதாயத்தில் இருந்த நடவடிக்கைகளைக் குறிப்பிட்டுள்ளார்.

பழங்காலத்தில் பெண்களின் நிலையை பற்றி அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர் அவற்றில் “வீட்டுக்கு விலக்கமாகிய கலந்தொடா மகளிர் பற்றிக் குறிப்பிட்ட மேலை நாட்டுப் பயணிகளுள் கி.பி. முதல் நூற்றாண்டில் இந்தியா வந்த பிளினி (கி.பி 23-79) என்பவர் குறிப்பிடத்தக்கவராக அமைகின்றார். அவர் பெண்களின் மாதவிலக்குப் பற்றிக் குறிப்பிடும் செய்திகள் அக்காலத் தமிழகத்தின் நம்பிக்கையினைப் புலப்படுத்துவதாக உள்ளது.

இயற்கையின் கூறுகள் மாதவிலக்காகிய பெண்களால் பாதிக்கப்பட்டமையினை, மாதவிலக்குக் கொண்ட பெண் ஒருத்தி இனிய பழந்தரும் மரத்தின் அடியில் நின்றால் அம்மரத்தின் பழத்தினுடைய

இனிப்பு கொடிய கசப்பாக மாறிவிடும். அவள் தானியத்தைத் தொட்டால் அத்தானியம் விதைப்பதற்கு உதவாது, அவை முளைக்கும் சக்தியையும் இழந்துவிடும். வளரும் பூச்செடியருகில் சென்றால் அவை சுருங்கி வாடிவதங்கி விடுகின்றன. தோட்டத்துப் பசுதந்தன்மை மாறிவிடுகிறது. ஒரு மரத்தினடியில் அவள் உட்கார்ந்தாள் என்றால் அம்மரத்திலிருந்து பழங்கள் பழுக்காததற்கு முன் தாமாகவே அழுகிக் கீழே விழுந்து விடுகின்றன. அவளுடைய பார்வை மட்டும் முகம் பார்க்கும் கண்ணாடியை அழுக்குப்படிந்த கண்ணாடியேபோல் ஆக்கிவிடுகிறது"16. என்று குறிப்பிட்டுள்ளார;. மேலும் "எறும்பு பாதிக்கப்பட்டமையும் காட்டியுள்ளார் எறும்பு எவ்வளவு சிறிய உயிரினம். அச்சிறிய உயிரினம் கூட மாதவிலக்குள்ள பெண்கள் கைப்பட்ட தினைவகைகளை எடுக்காமல் தன் இருப்பிடத்திற்கே சென்று விடுகின்றன"17 என்று தம்முடைய பயணக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

நிறைவுரை

சங்க காலத்தில் மனிதனுக்கும் சமூகத்திற்கும் எதிரான பல்வேறு முரண்பாடுகள் இருந்திருப்பதை சங்க இலக்கிய பாடல்கள் உறுதிசெய்கின்றன. மனிதன் சமூக கட்டமைப்போடு வாழும் சூழ்நிலையில் அம்மனிதனுக்கு எதிரான கொள்கைகள், கோட்பாடுகள், நடவடிக்கைகள் நிகழும் பொழுது மனிதனுக்கும் சமூகத்திற்கும் முரண்பாடு எழுந்திருப்பதை அறிமுடிகின்றன. ஆண், பெண் வேறுபாடு இன்றி முரண்பாடுகள் நிகழ்ந்திருந்தாலும் அதிலும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட நடவடிக்கைகள் முற்றிலும் சமூகத்திற்கும் சமுதாயத்திற்கும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இம்முரண்பாடுகள் அன்றைய காலத்தோடு இல்லாமல் இன்றைய நவீன காலத்திலும் தொடர்ந்து வருவதை இக்கட்டுரையின் வழியாக அறிந்து கொள்ளமுடிகின்றன.

சான்றெண் விளக்கம்

1. ஆ.ஜெகதீசன், இலக்கியத்தில் மனித உரிமைக் கோட்பாடுகள், தாமரை பப்ளிகேசன்ஸ்,சென்னை, முதற்பதிப்பு,2003,ப.14.
2. கலைக்களஞ்சியம்- தொகுதி -4, தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை, முதற்பதிப்பு, 1956,ப.477
3. சமூகவியல்,தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், சென்னை, மறுபதிப்பு,2011,ப.2.
4. க.கைலாசபதி, சமூகவியலும், இலக்கியமும், குமரன் பதிப்பகம், சென்னை, மறு பதிப்பு - 2009.ப.16.
5. கு.தேவிப்பிரியா, புறநானூற்றில் மகட்பாற்காஞ்சி, வெற்றிமங்கை வெளியீட்டகம், சென்னை, முதற்பதிப்பு,-2001,ப.67.
6. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் லெக்சிகன், தொகுதி,3,ப.1300.
7. நாராயணசாமி, நற்றிணை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், சென்னை – 18, மறு அச்சு -2007. ப.230
   ப.478.
8. ந.கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழி அகராதி,ப.1191.
9. George Davidson, Chambers pocket dictionary,P.193.
10. ந.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி,ப.857.

11. வெ. பெருமாள் சாமி, சங்க இலக்கியக் காட்சிகள், பாரதி புத்தகலாயம், 421, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை -18, முதல்பதிப்பு 2010, ப.61.
12. துரைசாமிப்பிள்ளை. சு., புறநானூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், சென்னை – 18, மறு அச்சு -2007. ப.230
13. மேலது., ப. 40
14. மேலது.,ப.276.
15. வேங்கட சாமி . ந.மு. அகநானூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், சென்னை – 18, மறு அச்சு -2000. ப.110
16. பிளினி,வி.எஸ்.வி. இராகவன், ஜென்னி ராம் பிரஸ், சென்னை – 21 , முதல்பதிப்பு 1991, ப.155.
17. மேலது.,ப156.

References

1. Jegadeesan, A. *Ilakkiyathil Manitha Urimai Kotpadugal* (Human Rights Principles in Literature). First ed. Chennai: Thamara Publications, 2003, p. 14.
2. *Kalaikkalanjiyam* (Encyclopedia). Vol. 4. First ed. Chennai: Tamil Development Board, 1956, p. 477.
3. *Samookaviyal* (Sociology). Reprint ed. Chennai: Tamil Nadu Textbook Society, 2011, p. 2.
4. Kailasapathy, K. *Samookaviyalum, Ilakkiyamum* (Sociology and Literature). Reprint ed. Chennai: Kumaran Publishers, 2009, p. 16.
5. Devi Priya, G. *Purananootril Magatpar Kanchi* (Magatpar Kanchi in Purananuru). First ed. Chennai: Vetrimangai Publishing House, 2001, p. 67.
6. Velupillai, A. *Tamil Lexicon*. Vol. 3, p. 1300.
7. Narayanasamy. *Narrinai*. Reprint ed. Chennai: Tirunelveli South Indian Saiva Siddhanta Works Publishing Society Ltd., 2007, p. 230.
8. Kathiraivelpillai, N. *Tamil Mozhi Agarathi* (Tamil Language Dictionary). p. 1191.
9. Davidson, George. *Chambers Pocket Dictionary*. p. 193.
10. Kathiraivelpillai, N. *Tamil Mozhi Agarathi* (Tamil Language Dictionary). p. 857.
11. Perumal Samy, V. *Sangam Ilakkiya Kaatchigal* (Scenes from Sangam Literature). First ed. Chennai: Bharathi Puthakalayam, 2010, p. 61.
12. Duraisamy Pillai, S. *Purananuru*. Reprint ed. Chennai: Tirunelveli South Indian Saiva Siddhanta Works Publishing Society Ltd., 2007, p. 230.
13. Ibid., p. 40.
14. Ibid., p. 276.
15. Vengadasamy, N. M. *Akananuru*. Reprint ed. Chennai: Tirunelveli South Indian Saiva Siddhanta Works Publishing Society Ltd., 2000, p. 110.
16. Pliny. *[Work title, if available in the source, otherwise 'Pliny']*. Edited by V. S. V. Ragavan. First ed. Chennai: Jenny Ram Press, 1991, p. 155.
17. Ibid., p. 156.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

கலித்தொகை கால காதல் மரபுகள்

Kalithogai Kaala Kathal Marapugal

முனைவர் இரா. வனிதாமணி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
குயின்ஸ் கலை மற்றும் அறிவியல், மகளிர் கல்லூரி, புனல்குளம், புதுக்கோட்டை.
Dr R. Vanithamani,
Assistant professor in tamil, queens college of arts science women,
punalkulam, Pudukkottai
EMail : vanithamanichandrabose@gmail.com

Abstract:

The literature that emerged during the Sangam period, especially during the Middle Sangam and the Late Sangam periods, is called Sangam literature. The total number of songs that we have today, sung by the great poets of the Sangam period, who were grammatically competent and had the ability to explain, is 2381. As a result of searching for Sangam songs, what we have found is the collection of songs. In this, the eight books have created various internal songs based on the basics. Among these, Kalithok is one of the eight books that are famous for their merit. These songs composed by Kalippa have the special feature of being Kali that attracts the learned. It is the opinion of Tolkappiyar that Kalippa is the best for singing internal songs. Since Kalippa is like a drama song mixed with dialogue, it has great importance for love here. In this way, in Kalithok, the love traditions are revealed through the conversations of the leader, the leader, the companion. Through this love, we can also see the life of our ancient Tamils. It is also possible to see that the Dalit songs are mixed with the life of our Tamil people

Keywords: *The hero, the heroine, the friend, the conversation, the hug, the kiss, etc.*

ஆய்வுச்சுருக்கம்:

சங்ககாலத்தில் கறிப்பாக இடைச்சங்க கடைச்சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்களையே சங்க இலக்கியங்கள் என்கிறோம். இலக்கணச் செறிவும் விளக்கிய தகுதியும் உடையவர்களாகச் சங்க காலப் புலவர் பெருமக்களால் பாடப்பெற்ற வையாக இன்று நமக்கு கிடைக்கும் பாடல்கள் மொத்தம் 2381 ஆகும். சங்கப் பாடல்களை தேடியதன் விளைவாக நமக்கு கிடைத்தவை பாட்டும் தொகையும் ஆகும். இதில் எட்டுத்தொகை நூல்கள் பல்வேறு அகப்புறப் பாடல்களை அடிப்படைகளைக் கொண்டு உருவாக்க பெற்றுள்ளன. இதில் பாவினால் பெயர் பெற்ற எட்டுத்தொகை நூல்களுள் கலித்தொகையும் ஒன்றாகும். கலிப்பாவினால் இயற்றப்பட்டது இப்பாடல்களுக்கு கற்றோர் ஏத்தும் கலி என்ற சிறப்பு உண்டு. அகப் பாடல்களை பாடுவதற்கு கலிப்பாவே சிறந்தது என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். கலிப்பா என்பதில் உரையாடல் கலந்த நாடக பாடல் போல அமைந்துள்ளதால் இங்கே காதலுக்கு மிகுந்த சிறப்பை பெற்றுள்ளது இவ்வகையிலே கலித்தொகையில் தலைவன் தலைவி தோழி இவர்களின் உரையாடல்கள் வழியாக காதல் மரபுகள் புலப்படுகின்றன. இக் காதலின் வழியாக நம் பண்டைய

தமிழரின் வாழ்வியலையும் காண முடிகிறது. தலித் தொகை நம் தமிழ் மக்களின் வாழ்வியலோடு ஒன்றாக கலந்துள்ளன என்பதையும் அறிய முடிகிறது.

திறவுச் சொற்கள்: *தலைவன், தலைவி, தோழி, உரையாடல், உறழ்தல், ஊடல்.*

முன்னுரை

பண்டைய தமிழ் நாகரிகம் மொழிச் சிறப்பு முதலானவற்றை அறிய சங்க இலக்கியம் துணைபுரிகின்றன. சங்க இலக்கியங்கள் "பாட்டும் தொகையும்" என்று குறிப்பிடப்பெறும் பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத்தொகையையும் குறிக்கின்றன "நற்றிணை நல்ல குறுந்தொகை"....... எனத் தொடங்கும் வெண்பா எட்டுத்தொகை நூல்கள் இவை எனச் சுட்டும். கலித்தொகையைக் "கற்றறிந்தார் ஏத்தும் கலி" என்று குறிப்பிடும் வகையில் அமைந்துள்ளன.

கலித்தொகை

எட்டுத்தொகை நூல்களுள் யாப்பு வகையால் பெயரமைந்தவை பரிபாடல், கலித்தொகை ஆகும். தொல்காப்பியர்,

"கலியே பரிபாடல் ஆயிரு பாவினும்
உரியதாகும் என்மனார் புலவர்" [1] தொல்.களை-05)

என்று குறிப்பிட்டுள்ளார். கலியாப்பு பிற யாப்பு முறைகளினின்னும் வேறுபட்டது. தரவு, தாழிசை, அம்போதரங்கம், அராகம், தனிச்சொல், சுரிதம் ஆகிய உறுப்புக்களைக் கொண்டது. கலிப்பாக்கள் பல வகைப்படும். அவற்றுள் ஒத்தாழிசை யாப்பு வகையில் அமைந்தவை கலிப்பா பாடல்களாகும். கலித்தொகை 150 பாடல்களை உடையது. சங்க அகப்பாடல்களுள் கைக்கிளை, பெருந்திணையில் அமைந்த பாடல்கள் கலித்தொகையில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. (கலி 56,57,58,100,138-174.) தொல்காப்பியத்தில் அகத்திணையியல் முதல் நூற்பா அகத்திணைகள் ஏழு எனச் சுட்டும்.

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக்கிளந்த எழுதிணை என்ப" [2] (தொல் கள.அகம்.07)

என்ற இவ்விலககணத்துக்கு இலக்கியமாய்த் திகழ்வது கலித்தொகை ஒன்றே ஆகும்.

கலித்தொகை பதிப்புகள்

ஏட்டில் இடம்பெற்று முடங்கிக்கிடந்த கலித்தொகை நூலினை, நச்சினார்க்கினியார் உரையுடன் பதிப்பித்த பெருமை (கி.பி.1887) பேரறிஞர் இ.வை.தாமோதரம் பிள்ளையையே சாரும். பிறகு, ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை மாநிலக்கல்லூரியில் தமிழ்ப் பணியாற்றிய இ.வை.அனந்தராமையரவர்கள், நூலினையும், உரையினையும், பல்லாண்டுகளாக ஆராய்ந்து. கி.பி.1925ம் ஆண்டில் முதல் இரு பகுதிகளாக (சம்புடங்கள்) வெளியிட்டார்கள். பிறகு, மூன்றாம் மற்றும் இறுதி பகுதியினை அரும்பத அகராதியுடன் வெளியிட்டுத் தம் பதிப்புப் பணியினை நிறைவு செய்தார்கள். 1930-ஆம் ஆண்டில் "கலித்தொகை" முல்லைத்திணைத் தனி நூலாக வெளியிட்டார்கள்.

1938ஆம் ஆண்டில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இந்நூலினை நச்சினார்க்கினியர் உரையுடன் இளவழகனாரின் உரைவிளக்கத்துடன் வெளியிட்டது. அடுத்ததாக, கல்வாரிகளில் பாடப்புத்தகமாக பதிப்பித்து வெளியிட்டனர்.

கலித்தொகை தொகுப்புகள்

கலித்தொகை எம்முறையில் தொகுக்கப்பட்டுள்ளன என்பதை அறியலாம்.

"பெருங்கோன்பாலை - 35 பாடல்கள்

கபிலன் குறிஞ்சி - 29 பாடல்கள்

மருதனிள நாகன் மருதம் - 35 பாடல்கள்

அருஞ்சோழன்

நல்லுருத்திரன் முல்லை - 17 பாடல்கள்

நல்லந்துவன் நெய்தல் - 33 பாடல்கள்

கல்விவலார் கண்டகலி" [3] (த.இ.வ)

இவ்வாறாக பகுக்கப்பட்டுள்ளன.

கலித்தொகை கால காதல் மரபுகள்

பண்டைத் தமிழர்கள் "அகம்" காதல் பற்றிய இலக்கியங்களைப் படைத்துள்ளன. இவ்வகையிலே கலித்தொகையில் பல காதல் மரபுகள் இடம்பெறுகின்றன.

1. தலைவன்
2. தலைவி
3. தலைவி – தோழி உரையாடல்
4. தலைவன் – தலைவி உறழ்தல்
5. தலைவன் – தலைவி – மகன் வழி உரையாடல்
6. தலைவன் – தலைவி நெஞ்சோடு கூறல்
7. தலைவியின் புலவி
8. தலைவன் – மடலேறுதல்

இவற்றின் வழியே கலித்தொகை கால காதல் மரபுகளை ஆராயலாம்.

தலைவன்

சங்க காலத்தில் தலைவன் கதாநாயகன் ஆகின்றான். தலைவனுக்குரிய பண்புகளை தொல்காப்பியர்,

"பெருமையும் உரனும் ஆடூஉமேன"[4] தொல்-111.

என்கிறார்.

தமிழர்கள் காதலை அன்பின் ஐந்திணை என்றனர். இஃது தலைவன், தலைவியும் உளமொத்த தூயகாதல் வாழ்க்கையாகும். இக்காதல் வாழ்வு அறத்திலிருந்து மாறுபடாமல் அன்பின் வழிபாடாக அமைகின்றன.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்

நன்கலம் நன்மக்கட் பேறு"[5] குறள்.60

என்று வள்ளுவரும் காதல் வழியே அன்பினை சிறப்பிக்கின்றார்.

தலைவன், தனக்கும், தலைவிக்கும் ஒத்தன புணர்ந்துச் சொல்லி, அவளிடமிருந்து சொல்லை எதிர் பெறாமல் தானே சொல்லி இன்புறுகின்றான். இது கைக்கிளையாக அமைகின்றன.

"மயிர் வார்ந்த வரிமுன்கை மடநல்லாய்!

நிற் கண்டார்.

உயிர் வாங்கும் என்பதை உணர்தியோ? உணராயோ?

"பறை அறைந்தல்லது செல்லற்க! என்னா

இறையே தவறு உடையான்" [6] (குறிந்.கலி.பா.26)

என்ற பாடலின் மூலம் உணரலாம்.

தலைவன், தலைவியின் மீது அளவற்ற அன்பை வைத்துள்ளான். தலைவியின் அழகினை வர்ணிக்கின்றான். மூங்கில் பிடி போன்ற தோள்கள், ஐந்து வையாகப் பிண்ணப்பட்ட மணம் கமழும் கூந்தல், மான் போன்ற மருட்சியான பார்வை, மயில்போன்ற சாயலையுடைய பெண்ணே! சிலம்பின் ஒளி ஒலிக்க, நுண்மையான இடை, இவற்றை என் கண்கள் விரும்பி கண்டன. பெரிய நகரிலே இளமை வேகத்தால், பந்தினை எறிந்து விளையாடுகின்ற பெண்ணே! நான் கூறுவதை கேள்!.

நீ! எனக்கு வருத்தத்தை தந்து நின்றாய் இது என் இளமைக்குந் தக்கதோ? உன் கண்கள் கொடுமை செய்கின்றன. இது உலகிற் கொடுமைகளிலும் மிக்க கொடுமை அன்றோ? இக்கொடுமைநின் பருவத்திற்குத் தக்கதோ? இத்தன்மையானது நான் நெடிது என்று நினைக்கின்றேன் என்கிறான். ஆனால் தலைவி தலை கவிழ்ந்து நிலத்தையே பார்த்து நிற்கின்றான். பின்பு தோழியரை பார்ப்பது போல, பார்த்துவிட்டு தம் மனையிடத்திலே செல்கிறாள். ஆனால், தலைவனோ அன்பின் மிகுதியால் மனம் வருந்துகின்றான்.

"**வேய் எனத் திரண்ட தோள் வெறிகமழ் வணா ஐம்பால்**

மாவென்ற மடநோக்கின், மயில் இயல், தளர்பு ஓல்கி

ஆய்சிலம்பு அரி ஆர்ப்ப, அவிர் ஒளி இழைஇடைப்ப

கொடி என, மின்என, அணங்குஎன, பாது ஒன்றும்" [7] குறிந்-கலி-பா.4

என்றும்,

வேலின்

"சேந்துநீ இனைபைபால் ஃஓத்ததோ? [8] (குறிந்.கலி.பா.19)

என்றும்

"கணையினும், நொய்செய்தல் கடப்பு அன்றோ? [9] குறிஞ்சி.கலி.பா.11

என்ற பாடலின் மூலம் தலைவியின் காதல் உணர்வுகளை புரிந்து கொள்ள முடிகிறது.

தலைவியின் அழகு, தலைவனை பேதலிக்கச் செய்துவிட்டது. அவனிடத்து இருந்த நல்ல குணங்கள் எல்லாம் அவனை விட்டு போய் விட்டன. தலைவியிடம் பல நல்ல குணங்கள் இருக்கின்றன.

இருந்தும் அவள், தலைவனுக்கு அருள் செய்யவில்லை மற்றவர்களுக்காக அஞ்சி நடுக்கின்றாளோ என்று தலைவன் நினைக்கின்றான்.

"ஐது உயிர்த்து, இவன் உள்நோப்பாது?

நோய் இலை இவட்கு"[10] பாலை.கலி.பா.10

என்ற பாடலின் மூலம் தலைவன், தலைவி மீது அளவற்ற அன்பு கொண்டிருக்கின்றான் என்பது புலனாகிறது மேலும், அகவாழ்வில் தலைவனின் அன்பை வெளிப்படையாக ஏற்க முடியாமல, பிறருக்காக பயந்து, அதாவது ஊராரின் பழிச்சொல்வக்கு ஆளாக நேரிடுமோ? என்று அஞ்சுகின்றான். தலைவனும் தன் காதலை பண்பாட்டோடு வெளிப்படுத்துவதை உணரமுடிகிறது.

2.தலைவி

மனித வாழ்வில் ஒவ்வொரு நொடி பொழுதிலும் காதலுக்கும், கற்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். தலைவியின் தூய்மையான கற்பு தலைசிறந்த பண்பாகப் போற்றப்படுகின்றது. இதனை,

முல்லை சான்ற கற்பு முல்லை[11]

என்று கற்புடன் தொடர்புபடுத்தி பேசப்படுகின்றது**.**

சங்க காலத்தில் பெண்கள் தனிச்சிறப்புடையவர்களாகவும், தன்னிகரற்றவர்களாகவும் திகழ்ந்தனர். பெண்களுக்குரிய பண்புகளை தலைவியானவள் எந்த அளவிற்கு தைரியமானவளே, அதே அளவு எளிதில் உணர்ச்சிப்படக் கூடியவள். இவ்வகையிலே தலைவன் மீது அளவற்ற அன்பை வைத்திருப்பவள் ஆவாள். தலைவன் மீது கொண்ட காதலை அழகாக வெளிப்படுத்துகின்றாள். தலைவனின் செலவினைக் குறிப்பால் அறிந்து, வழியிடைத் துன்பத்திற்குத் துணையாக தன்னையும் உடன் அழைத்துக் கொண்டு செல்க என்று என்கிறாள். எம்மையும்

"அன்பு அறச்சூழாதே, ஆற்றிடை நும்மொடு

துன்பம் துணையாக நாடின், அது அல்லது

இன்பமும் உண்டோ, எமக்கு" [12] பாலை.கலி.பா.25

என்று கூறுகின்றாள்.

தலைவி, தலைவனிடம், நீ செல்கின்ற வழியிலே, உண்ணுநீர் இல்லை, நிழல் இல்லை, மரம் இல்லை, ஆதலால் உன்னைப்பிரிந்து என்னால் பிரிந்து இருக்க முடியாது எப்படி பிரிந்தால் நான் இறந்துவிடுவேன் என்கிறாள். மேலும், கலைமானைத் தொடர்ந்து செல்லும் பிணைமானைக் காட்டி, தன்னையும் உடன் அழைத்துச் செல்வம்படிக் கூறுகின்றாள்.

தனியே இறப்ப யான் ஒழிந்திருத்தல்" [13] பாலை.கலி.பா.04

இதில் தலைவியின் காதல் உணர்வினை அறிய முடிகிறது.

தலைவன், தலைவியைவிட்டு, பரத்தையரோடு சென்று விட்டு, மீண்டும் தலைவயிடம் வருகின்றான். இதனைக் கண்ட தலைவி, தலைவனிடம், உன் வருகைக்காகப் பரத்தையர் காத்திருப்பர். உன்னை அழைத்துச் செல்வதற்காகப் பாகம் பூட்டிய தேரோடு வெளியே காத்து நிற்பாள் நீ சென்று

பரத்தையர் அன்பு செட்டுவிடாமல் நிலை நிறுத்து என்று கோபமாக தன் மனதில் உள்ள ஏக்கத்தினை வெளிப்படுத்துகின்றாள்.

“வேட்டோர் திறத்து விரும்பிய நின் பாகனும்
“நீட்டித்தாய்” என்று கடாஅம் “கடுந்திண்நோ
பூட்டு விடா அ நிறுத்து” [14] மருதக்.கலி.பா.23-25

என்று கூறுகின்றாள்.

தலைவி, தனக்கும், தலைவனுக்கும் இடையே இணக்கமான அன்பு உள்ளது என்பதை பல இடங்களில் வெளிப்படுத்துகின்றாள். ஆனால் ஊராரின் அலர் தூற்றுவார்களோ என எண்ணி அறத்தொடு நிற்கும் நிலை ஏற்படுகின்றது இதனை,

“தான் நயந்து இருந்தது இவ்வூர் ஆயின் எவன் கொலோ”
நாம் செயற்பாலது இனி? [15] மருதக் கலி.பா.21-22

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

தலைவன், எவ்வளவு தான் தவறுகள் செய்தாலும், தலைவி, அவன் மீது கொண்ட காதலால் அவற்றை பொறுத்துக் கொள்கிறாள். மாலைப்பொழுது கண்டு, வருத்தம் கொண்டு, தனியே வருந்துகின்றாள். மாலை, பொழுதிடம், நீ மயக்கத்தை உடைய மாலையாக இருக்கின்றாய். என்னுடைய நெஞ்சமானது, என்னை பிரிந்து சென்ற தலைவனை எண்ணி ஏங்குகின்றது. இனி நான் என்ன செய்வேன்? என்று தலைவி வருந்துவதாக அமைந்துள்ளது. இதனை,

“மாலையும் அலரும் நோனாது எம்வயின்
நெஞ்சமும் எஞ்சும்மன் தில்ல – எஞ்சி
உள்ளாது அமைந்தோர், உள்ளும்.
உள்இல் உள்ளம் உள்உள் உவந்தே”[16] நெய்தற் கலி.பா.22-25

என்ற பாடல்வரிகளின் மூலம் தலைவியின் மன உணர்வுகளை தெளிவாக அறிய முடிகிறது. மேலும், தலைவன் மீது அளவற்ற அன்பும், காதலும் கொண்டான் என்பதையும், உணர முடிகின்றது.

3.தலைவி – தோழி உரையாடல்

சங்க இலக்கியத்தில் தலைவியும், தோழியும் இல்லையென்றால் சங்க இலக்கியப் பாடல்களில் சுவையே இருந்திருக்காது. தலைவியும் தோழியும் நல்ல நட்புடன், தோழியாகவும், அன்னையாகவும் இடத்திற்கேற்றாற் இடத்திற்கு ஏற்றது போல் மாறும் தன்மையில் உள்ளனர். இவர்கள் உரையாடல் மிக சிறப்பாக கலித்தொகையில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

தலைவியும், தோழியும், வன்ளைப்பாட்டை மாறி, மாறி பாடுகின்றனர். தலைவன் சொன்னவாறு வரதாதல் தலைவி, இயற்பிழித்து பேசுகின்றான். அப்போது, தோழி, உன் தலைவன் “வருவான்” என்ற நம்பிக்கையில் கூறுகின்றார். தலைவியின் மனதானது அமைதி பெறுகின்றது.

“சுடர்த்தொடீஇ! கேளாய் தெருவில் நாம்ஆடும்
மணற்சிற்றில் காலின் சிதையா, அடைச்சிய

Tamilmanam

கோதை பரிந்து, வரிப்பந்து, கொண்டு ஓடி,

நோதக்க செய்யும் சிறுபட்டி, மேல்ஓர் நாள்”[17] குறிந்.கலி.பா.1-4.

இப்பாடலில் தலைவி, தோழியிடம் கூறுவதாய் அமைகின்றது. அதாவது நாம் சிறு வயதாக இருக்கும் போது நம்மோடு விளையாடியும், நம்மிடம் நோவத்தக்க செய்களை செய்தவனுமாகிய தலைவன் ஒருநாள் நானும் அன்னையும் வீட்டில் இருக்கும்போது வந்தான். அப்போது, தாகமாக உள்ளது தண்ணீர் வேண்டும் என்றான். என் அன்னையும், அவனுக்கு பொன்னால் செய்யப்பட்ட கரகத்தில் தண்ணீர் கொடு என்றான். நானும் நீர் எடுத்து வந்து அவனிடம் கொடுத்தேன். அப்போது அவன் வளையலணிந்த முன் கையைப் பிடித்தான் என்றாள். இதனை,

“அன்னையும் யானும் இருந்தேமா, இல்லிரே!

“உண்ணுநீர் வேட்டேன்“ என வந்தாற்கு, அன்னை,

“அபர் பொற்சிரகத்தால் வாக்கி, சுடரிழாய்!

உண்ணுநீர் ஊட்டிவா என்றாள். என யானும்

தன்னை அறியாது சென்றேன். மற்று என்னை

வளைமுன் கைபற்றி நலிய” [18] குறிந்.கலி.பா.6-10.

என்று கூறுகின்றாள்.

பின்பு,

“அன்னாய்! இவன் ஒருவன் செய்தது காண்”[19] (குறிந்.கலி.பா-11)

என்றனர். என்பதில், நான் உடனே, அன்னையே! என அலறி விட்டேன். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை அன்னையோ? என்ன ஆயிற்று என்று கேட்டார் அப்போது நான், என் அன்னையிடம் பொய் உரைத்து விட்டேன்.

“உண்ணுநீர் விக்கினான், என்றேனா”[20] (குறிந்.கலி.பா-13).

அவன், தண்ணீர் குடிக்கும் போது, விக்கல் எடுத்ததை கண்டு, நான் பயந்து விட்டேன் என்று கூறினேன் அப்போது என் அன்னை, அவன் முதுகினை நீவிவிட்டார். அப்போது அவன் என்னை எப்படி பார்த்தான் தெரியுமா? தோழி!

“கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி,

நகைக் கூட்டம்

செய்தான் அக்கள்வன் மகன்”[21] (குறிந்.கலி.ப.16-17)

அதாவது, என்னைத் தன் கடைக்கண்ணால் கொல்வான் போல, பார்த்து தன் மனமகிழ்ச்சியை அக்கள்வனாகிய மகன் செய்தான் இதுதான் நடந்தது என்று தலைவி தோழியிடம் கூறுகின்றான். இப்பாடலின் மூலம் தலைவன் மீது கொண்ட அன்பு எத்தகையானது என்பதை உணரமுடிகிறது.

தலைவி, தோழியிடம் தலைவன் என்னைப் பற்றி கூறிய வார்த்தைகளை கேட்பாயாக என்று தான் கூறவந்த செய்தியை கூறுகின்றான்.

நான் தனியாக சென்ற பொது என்னிடம் வந்து நீ போகாதே நில்" என்று நிறுத்தினான். பின்பு, என்னிடம் நெருங்கி வந்து, என், நெற்றி, முகம், தோள், கண் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டே நின்றான். என்னை பலவாறு போற்றி, புகழ்ந்து, பாராட்டினான். பல இன்சொற்களை கூறி, என்னை மயக்க எண்ணினான். அதுமட்டுமின்றி, என் அருகில் வந்து என்னை தொழுது நின்றான். என்னை தீண்டவும் செய்தான். மதத்தால் அறிவு கெட்டுப் பரிக்கோலுக்கு அடங்காத களிற்றைப் போல, பலமுறை தொழுதான். ஆனால், தோழியே! நான், மட்டும், நானும், மடனும், நீங்காமல் நின்றேன் என்று தோழியிடம் கூறுகின்றாள் தலைவி. இதனை,

"நில் என நிறுத்தான் நிறுத்தே வந்து
நுதலும், முகனும், தோளும், கண்ணும்,
இயலும், சொல்லும், நோக்குபு நினைஇ,
"ஐ தேய்ந்தன்று, பிறையும் அன்று
வேய் அமன்றன்று, மலையும் அன்று
பூ அமன்றன்று, சுனையும் அன்று.
மெல்ல இயலும், மயிலும் அன்று.
சொல்லத் தளரும், கிளியும் அன்று"[22] (குறிந்-கலி.பா.6-15)

என்று பலவாறு புகழ்ந்து பாராட்டினான்.

மேலும்,

"அனையன பல பாராட்டி, பையென
வலைவர் போல, சோர்பதன் ஒற்றி
புலையர்போல, புன்கண் நோக்கி,
தொழலும் தொழுதான். தொடலும் தொட்டான்.
காழிவரை நில்லாக் கடுங்களிறு அன்னோன்
தொழூஉம் தொடூஉம் அவன் தன்மை
ஏழைத் தன்மையோ இல்லை தோழி"[23] குறிந்-கலிபா-16-22.

என்று கூறுகின்றாள். இவ்வாறாக, பல இடங்களில் தலைவி, தோழியிடம், தலைவனைப் பற்றியும், அவன் மீது கொண்ட அன்பினையும், அழகாக, சுவைப்பட உரைப்பதை காண முடிகிறது.

4. தலைவன்-தலைவி உறழ்தல்

தலைவன், தலைவி, இருவருமே, ஒத்த அன்பினையுடையவர்கள், ஆனால் இருவருக்கும் இடையே, ஊடல் ஏற்படும் இது ஒரு சில நேரங்களில் பெருந்திணையாகவும் அமைகின்றன.

தலைவன், தலைவியைத் தழுவுதல் இனிது என்று கூறுகின்றான். ஆனால், தலைவி, உனக்கு இனிது தான், பிறருக்கு இன்னா செய்வது என்று கூறுகின்றாள் இக்காதல் இங்கு பெருந்திணையாக அமைகின்றது.

"புல் இனிது ஆகலின், புல்லினென் – எல்லா

Tamilmanam

தமக்கு இனிது என்று, வலிதின் பிறர்க்கு இன்னா

செய்வது நன்கு ஆகுமோ"[24] குறிந்.கலி.பா.6-8.

என்ற பாடலின் மூலம் உணர முடிகிறது.

தலைவனை, தலைவி எண்ணி நகையாடுகின்றாள். தலைவனும், தலைவியோடு மாறுபட்டு நகையாடி, கூட்டத்திற்கு உடன்பட வைக்கின்றான்.

தலைவன், தலைவியின் அழகை பலவாறு புகழ்ந்து, எனக்கு கிடைத்த பெரும்பொன் புதையலைப் போன்றவள் நீ! என்று கூறுகின்றான்.தலைவி, உன்னோடு சேரமாட்டேன் என்பதை போல கூறுகின்றாள்.தலைவன், நீ என்னோடு நிச்சயம் புணர்வாய் என்கிறான். இப்படியாக, இருவரும் மாறி, மாறி, பேசுவது போல் அமைகின்றன. மேலும், தலைவன், தலைவி, தம்முள் உறழ்ந்து கூறியமை நகைச்சுவைபட அமைந்துள்ளது. இதனை,

"திருந்திழை மென்றோள்

திருந்திழை மென்றோள்"[25] கலித்.பா.131

என்று கலித்தொகை கூறுகின்றது.

"இரும்பு ஈர்வடியன்ன உண்கண்"

யொத்துமை விளங்கு கண்ணொளி"[26]பரி-10

என்று பரிபாடல் கூறுகின்றது.

இவ்வாறாக, தலைவன் தலைவி, இருவருமே ஊடல் கொண்டாலும், இறுதியில், தலைவி, தலைவனோடு உடன்பட்டு செல்கின்றாள் என்பதை அறியமுடிகிறது.

5.தலைவன் – தலைவி – மகன் – வழி உரையாடல்

தலைவன், தலைவி இருவருக்கும் திருமணம் என்ற பந்தம் உருவாகி, மகன் பிறந்துவிடுகிறான். அப்போதும் கூட இருவருக்கும் இடையே ஊடல் ஏற்படுகின்றது.

தன் மகன் வழியாக, இருவருக்கும் உரையடல் ஏற்படுகின்றன. பின்பு, இருவரும் மனம் ஒத்து அன்போடு இல்லற வாழ்வில் ஈடுபடுகின்றனர். இவ்வாழ்விலே பரந்தையரோடும் தலைவன் அன்பு கொள்கிறான். இது தலைவிக்கு பிடிக்காது இக்காரணத்தினால் தான், தலைவி, தலைவனை வெறுக்கும் நிலை ஏற்படுகின்றது.

தலைவன், பரத்தையிடமிருந்து வீட்டிற்கு வருகிறான். ஆனால் வீட்டிற்குள் நுழையவில்லை. வேலிக்கு அப்பால் நிற்பதைக் கண்ட தலைவி தன் மகனிடம் கூறுகின்றாள். இதனை,

"நுந்தை, வியன், மார்பில்

தாது தேர் வண்டின் கிளைபாட தைஇய

கோதை பரிபு ஆட காண்குவம்"[27] மருதக்கலி.பா-23-257.

என்பதில், பரத்தை அணிவித்த கோதையை, தலைவி தன் கையால் தொட விரும்பவில்லை. ஆதலால், தன் மகனைக் கொண்டே செய்விக்க விரும்பினாள். மகனின் செய்கையால், தலைவனின் செயலில் மாற்றம் வரும். மேலும், பரத்தையரிடம் கொண்ட அன்பு குறையும் என்று தலைவி

கருதுகின்றாள்.தலைவனின் வரவு, தலைவிக்கு மிக்க மகிழ்வைத் தரும் என்பதில் ஐயமில்லை. தலைவியின் ஊடலை தன் மகனை கொண்டே தலைவன் தணிக்கின்றான்.

“கள்வரைக் காணாது “கண்டேம் என்பார்போல்

சேய் நின்று, செப்பாத சொல்லிச் சினவல்

ஆணை கடக்கிற்பார் பார்”[28] மருதக்கலி பா.26-28

என்று கூறுவதின் மூலம் தலைவன், தலைவியின் ஊடலை தீர்க்கின்றான்.இவ்வாறாக, தலைவன், தலைவியிடம் கொண்ட அன்பானது மேலும் வளர்ந்து கொண்டே செல்கிறது என்பதை உணரமுடிகிறது.

6.தலைவன் – தலைவி நெஞ்சொடு கூறல்

தலைவன், தலைவி இருவரும் ஊடல் கொள்வது இயற்கை தான். ஆனாலும் ஊடலின் போதோ அல்லது வேறு ஏதோ காரணத்தாலோ, பிரிய நேர்ந்தலோ, அவர்கள் நம் நெஞ்சோடு பேசுவார்கள். மேலும், தன்னைத் தானே தேற்றிக்கொள்வார்கள்.

சங்க இலக்கியங்கிளிலேயே தலைவன், தலைவி, இவர்களுக்கிடையே உரையாடலாக அமைந்த கூற்றுக்கள் கலித்தொகையில் மட்டும் தான் உண்டு.

“இனி யாதும் மீக்கூற்றம் பாம் இலம்” என்னும்

தகையது காண்டைப்பாய் நெஞ்சே! பனிபானாப்

பாடு இல் கண் பாபல் கொள”[29] மருதகலி பா 16-18

என்பதில் தலைவனின், செய்கையை, தோழி வாயிலாக கேட்ட தலைவி, கண்களில் கண்ணீர், நெஞ்சில் கவலை, துயில் கொள்ளாத கண்களைக் கொண்டு தான் என்ன செய்வேன் என்று வருந்தி, தன் நெஞ்சொடு கூறுகின்றாள். இதில் தலைவி, தலைவன் மீது கொண்ட அன்பினை புரிந்துக் கொள்ள முடிகிறது.

“மடநடை மா இனம், அந்தி அமையத்து

இடன்விட்டு இயங்கா இமையத்து ஒருபாடல்

இறை கொண்டு இருந்தன்ன – நல்லாரைக் கண்டேன்

துறைகொண்டு உயர்மணல் மேல் ஒன்றி நிறைவதை”[30] மருதக்கலி 16-18.

என்பதில், தலைவன், தலைவியிடம், கனாக கண்டேன் என்கிறான். அப்போது, தலைவி என்ன கனா எனக்கேட்க, தலைவன், தலைவியிடம் கூறுவதாய் அமைந்துள்ளது. அதாவது, அன்னங்கள், பல இமயமலையின் பக்கத்தே, அழகிய வானில் இரை, கவர்ந்து உண்ட களைப்பால், அந்திக்காலத்திலே தங்கியிருந்தன. மேலும், வையை ஆற்று உயர்ந்த மணற்குன்றிலே, மகளிர் பலர் தம்முடன் விரும்பிய ஆயத்தாருடன் அமர்ந்திருப்பதைக் கண்டேன் என்றான்.

இதைக் கேட்ட தலைவி,

“ஓர்த்து இசைக்கும் பறைபோல், நின்நெஞ்சத்து

வேட்டதே கண்டாய் கனா”[31] மருதக்கலி பா 21-22

அதாவது, தன் மனத்திலே ஓர்த்த ஓசையைத் தானும் ஒலிக்கும் பறை போல, உன்னுடைய நெஞ்சத்திலே நீ விரும்பின இன்பத்தையே கனவாகக் கண்டாய் என்று தலைவனிடம் கூறினாள்.தலைவி, தலைவனைச் சந்திக்க இயலாத வண்ணம் காவல் மிகுந்தமையால், ஆற்றாத தலைவி, தலைவனிடத்துச் சென்ற நெஞ்சினை நோக்கி, மனம் அழிய கூறுகின்றாள்.

“காணாமை இருள் பரப்பி, கையற்ற கங்குலான்

மாணா நோய் செய்தான் கண் செற்றாய். மற்று அவனைநீ

காணவும் பெற்றாயோ? காணாயோ? – மடநெஞ்சே![32] நெய்தற்கலி பா 6-8.

என்றும்,

“கொல் ஏற்றுச் சுவினம் கடி கொண்ட மருள் மாலை

அல்லல் நோய் செய்தான் கண் சென்றாய் – மற்று அவனை நீ

“குல்லவும் பெற்றாயோ? புல்லாயோ? மடநெஞ்சே![33] நெய்தற்கலி.பா.9-11.

என்றும்,

“வெறி கொண்ட புள்ளினம் வதிசேரும் பொழுதினான்

செறிவளை நெகிழ்த்தான் கண் சென்றாய் மற்று அவனை நீ

அறியவும் பெற்றாயோ? அறியாயோ? மடநெஞ்சே![34] நெய்தற்கலி பா-12-14.

என்பதில், என்னிடம் காம நோயை விட்டுச் சென்றவனை நினைத்து மட நெஞ்சே ஏன் நீ ஏங்குகிறாய்!

நெஞ்சே! நீ அவனைத் தழுவவும் பெற்றாயோ? அல்லது தழுவாது தான் இருந்தனையோ?நெஞ்சே! என் வளையல்களை நெகிழுமாறு செய்த அவனுடைய மனங்கலந்து அறியவும் பெற்றனையோ? அல்லது அறியாது தான் இரந்தனையோ?

என்று பலவாறு தன் நெஞ்சோடு பேசுகின்றாள் தலைவி.

தலைவியின் நெஞ்சமானது அவளது கட்டுபாடுனின்று நீங்கி, தலைவனையே நாடிச் சென்றமை நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து தலைவன், தலைவனின் மிகுதியான அன்பு புலப்படுகின்றான.

7. தலைவியின் புலவி

தலைவி, தலைவனின் மீது எல்லையற்ற அன்புக் கொண்டிருந்தாள். ஆனால் இடையே பரத்தையர்களின் செயலால், தலைவனிடம், ஊடல் கொள்ளும் நிலை ஏற்படுகின்றது. ஆதலால், பரத்தையரை வெறுக்கின்றாள்.

பரத்தையிற் இருந்து பிரிந்துவந்த தலைவனை காலந்தாழ்ந்து வந்தது ஏன்? எனத் தலைவி வினவ, கடவுளரைக் கண்டு தங்கினேன் என்றான் நீ கண்ட கடவுளர் இவர் எனக் கூறி புலந்தாள் தலைவி.

“இப்போழ்து போழ்து” என்று அது வாய்ப்பக் கூறிய

அக்கடவுள், மற்று அக்கடவுள்” – அது ஒக்கும்”[35] மருதக்கலி பா 12-13

என்றும்,

”பூப் பலி விட்ட கடவுளைக் கண்டாயோ?[36] மருதக்கலி பா – 24

என்றும்

"மாரி இறுத்த கடவுளைக் கண்டாயோ?[37] மருதக்கலி பா – 28

என்ற பாடலின் மூலம், தலைவி, தலைவனிடம் நீ எந்த கடவுளை கண்டாய், எந்த கடவுளும் மார்பில் வடு உண்டாக்க மாட்டார்களே? நீ கண்ட கடவுளர் இனியும் நீ காலம் தாழ்த்தி வெகுள்வர் எனவே நீ செல்வாயாக எனத் தலைவி புலந்து கூறுகின்றாள்.

தலைவன். குதிரரை ஏறி வந்தேன் எனக் கூறக் கேட்ட தலைவி, நீ ஏறிய வந்த குதிரை பரத்தையே என்பதை அறிந்து கொண்டு, குதிரைக்கு பூட்டிய அணிகலன்களை எல்லாம் பரத்தைக்கு பொருந்துவனவாக தலைவி வருணித்தாள். அப்பரத்தையே குதிரையாக என்றும் ஏறித் திரிவாய் இங்கு நில்லாதே நீ செல்வாயாக! என்று தலைவனிடம் கூறுகின்றாள். இதனை,

"பரியாக வாதுவனாய், என்றும் மற்று அச்சார்த்

திரி குதிரை ஏறிய செல்"[38] மருதக்கலி பா-37-38.

என்று தலைவி கூறுவதிலிருந்து தலைவன் மேல் அவள் கொண்ட காதல் புலனாகிறது.

பரத்தையரை குதிரை என்று கூறிய தலைவி, இப்போது யானை என்று கூறுகின்றாள். தலைவனிடம், நீ செல்க! செல்லாவில்லை என்றால் அப்புத்தி யானை உன்னை தன்மேல் ஏறவிடாது, உன் கைவசமாக்கிக் கொள் என்று தலைவனிடம் கூறுகின்றாள்.

இவ்வாறு, தலைவன் மீது தலைவி புலவி கொள்வதற்கு காரணம், அவன் தன் மீது மட்டுமே அன்று கொள்ள வேண்டும். வேறு யாரிடமும் செல்லக் கூடாது. அவன் தனக்கு மட்டுமே என்பதில் உறுதியாக உள்ளான் என்பது புலனாகிறது.

8.தலைவன் மடலேறுதல்

தலைவன், தலைவியோடு எந்நாளும் இருக்க வேண்டும் என நினைப்பவன் அவள் தனக்கு இல்லை என்றால் என்ன செய்வது எனத் தெரியவில்லை இதற்கு ஒரே தீர்வு மடலேறுதல் மட்டுமே! என்று எண்ணுபவன். சங்க காலத்தில் மடலேறுதல் என்பது, ஆணுக்கு மட்டுமே உரியது. பெண்கள் மடலேறுவது மரபு இல்லை.

சங்க காலத்தே நிலவிய ஒரு பண்பாடு மடலேறுதல் தலைவன். தான் விரும்பிய தலைவியை, அடைய முடியாத நிலையில் மடல் ஏறுவேன் என்று தோழியிடம் கூறுவான். மடல் ஏறுதல் என்பது, பனங்கருக்காற்செய்த குதிரை மீது அமர்ந்து, தலைவியின் உருவத்தைக் கிழியிலே வரைந்து கைப்பிடித்து, பல்லோர் அறிய ஊர் நடுவே நாற்சந்தியில் நிற்பான். பூனைப்பூ, ஆவிரம்பூ, எருக்கம்பூ ஆகியவற்றால் தொடுத்த மாலையை அணிந்து நிற்பான். பிறகு திருமணம் நிகழும்.

சுடர் இழை,

"நல்கியாள், நல்கியவை,

பொறை என் வரைத்து அன்றி, பூநுதல் ஈத்த

நிறை அழி காமநோய் நீந்தி, அறை உற்ற

உப்பு இயல் பாவை உறை உற்றது போல,

உக்குவிடும் – என் உயிர்

பூனை, போலமலர் ஆவிரை – வேப் வென்ற

தோளான் எமக்கு ஈத்தபூ”[39] நெய்தற்கலி பா – 12-19.

என்பதில், தலைவன் தலைவியை அடைய மடலேறுவது தான் தீர்வு, என எண்ணி, தனக்கு காமநோயினை தந்த தலைவியை நினைத்து வருந்தினான். எனக்கு துன்பமாய் நின்ற மடல், இப்போது என் தலைவியை பெற இன்பமாகும்படி இருக்கும் என்று இரங்கிக் கூறினான். இதில் தலைவன், தலைவியை எப்படியாவது அடைந்தே தீர வேண்டும் என்ற எண்ணத்தில் உறுதியும். தலைவிமீது கொண்ட அன்பினையும் அறிந்து கொள்ள முடிகிறது.

தலைவன், தலைவியிடம், தன் மனதில் உள்ளதை கூறுகின்றான்.அறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் ஒழுக்கம் தேய்ந்தேன். மறத்தலைச் செய்தேன். நாளுக்கு நாள் நலிந்து போகின்றேன். நீ தந்த காம நோயினால், உன்னிடம் தவறு இல்லை என்றாவம், உன் சுற்றத்தார் பலவித அணிகளை உனக்கு பூட்டினார் அவர்கள் மேலும் தவறு இல்லை. என் காமநோய் என்னை வருத்துகின்றது. நீ எனக்கு செய்தது குற்றம் இல்லையா? ஆதலால், இவ்வூர் மன்றத்திலே மடவார்ந்து வந்து நீ எனக்கு விளைவித்த பழியை ஊரர் அறியும் படி செய்வேன் என்று உறுதியாக கூறுகின்றான். இதனை,

“ஒறுப்பின் யான் ஒறுப்பது நுமரை, யான், மற்று இந்நோய்

பொறுக்கலாம் வரைந்து அன்றிப்பெரிதாயின், பொலங்குழாய்!

மறுத்து இவ்வூர் மன்றத்து மடல்ஏறி,

நிறுக்குவென் போல்வல் யான் நீ படுபழியே”[40] குறிந்சி.கலி பா-20-23.

என்ற பாடலின் மூலம் தலைவனின் மன உணர்வினையும், தலைவி மீது கொண்ட அன்பினையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

இவ்வாறாக, கலித்தொகையில் தலைவன், தலைவி, தலைவன் – தலைவி – மகன் வழி உரையாடல், தலைவன் – தலைவி உறழ்தல், தலைவன் – தலைவி நெஞ்சொடு கூறல், தலைவியின் புலவி, தலைவன் மடலேறுதல் போன்ற பகுதியில் காதல் மரபுகளை அறிந்து கொள்ள முடிகிறது.

மேலும், காதல் என்பது அனைவருக்கும் பொதுவான ஒன்றாகும். கலித்தொகையில் இக்காதல் இடத்திற்கு இடம் எப்படி மாற்றம் பெறுகின்றன என்பதை உண முடிகின்றது. தலைவன், தலைவி, இருவருக்கும் ஊடல் ஏற்பட்ட போதும், அல்லது பரத்தையினரால் ஊடல் வந்தபோதும், அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் கொண்ட அன்பானது மாறவில்லை. இருவரும் மனதால் ஒத்த அன்போடு அழகான இல்லற வாழ்வினை வாழ்ந்துள்ளனர் என்பதை கலித்தொகையின் வாயிலாக சிறப்பாக சித்தரிக்கப்பட்டுள்ளன. இதனையே வள்ளுவர்.

“ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்

கூடி முயங்கப் பெறின்”[41] குறள்.1330

என்ற குறள் வழியே நமக்கு எடுத்துக்காட்டியுள்ளார். மேலும், கலித்தொகை கால காதல் மரபுகள் நம்மை சங்ககாலத்திற்கே அழைத்துச் செல்கின்றன என்பது முற்றிலும் உண்மையாகின்றன.

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம் (களவியல்) இளம்பூரணார், பக்-10.

2. மேலது, ப-15.
3. தமிழ் இலக்கிய வரலாறு, கி.இராசா, ப-55.
4. மேலது, ப-60.
5. தொல்காப்பியம், இளம்பூரணர், பா-26.
6. திருக்குறள், ப.முருகன், பக்.13.
7. கலித்தொகை, குறிஞ்சிக்கலி, பா 25-26.
8. கலித்தொகை, குறிஞ்சிக்கலி, பா 1-4, 11,15.
9. கலித்தொகை, குறிஞ்சிக்கலி, பா 18-19.
10. கலித்தொகை, பாலைக்கலி, பா 9-11.
11. முனைவர் இரா.வனிதாமணி, முல்லைப்பாட்டில் தமிழர் பண்பாடு (ஆய்வுக்கட்டுரை – இனிவை கற்றல் பன்னாட்டு தமிழியல் மின்னிதழ்) ப.04.
12. கலித்தொகை, பாலைக்கலி, பா 25, பக்.70
13. கலித்தொகை, பாலைக்கலி, பா 04,பக்.80
14. கலித்தொகை, மருதக்கலி, பா 23-25, பக்.281.
15. கலித்தொகை, மருதக்கலி, பா 21-22, பக்.322
16. கலித்தொகை, நெய்தற்கலி, பா 22-25, பக்.527.
17. கலித்தொகை, குறிஞ்சிக்கலி, பா 1-4, பக்.214.
18. கலித்தொகை, குறிஞ்சிக்கலி, பா 6-10, பக்.215.
19. கலித்தொகை, குறிஞ்சிக்கலி, பா 11 பக்.215
20. கலித்தொகை, குறிஞ்சிக்கலி, பா 13 பக்.215
21. கலித்தொகை, குறிஞ்சிக்கலி, பா 16-17, பக்.215.
22. கலித்தொகை, குறிஞ்சிக்கலி, பா 6-15, பக்.230
23. கலித்தொகை, குறிஞ்சிக்கலி, பா 16-22, பக்.230
24. கலித்தொகை, குறிஞ்சிக்கலி, பா 6-8, பக்.626.
25. கலித்தொகை, பா.131.
26. பரிபாடல், பக்.36.
27. கலித்தொகை, மருதக்கலி, பா.23-25, பக்.338.
28. கலித்தொகை, மருதக்கலி, பா.26-28, பக்.342.
29. கலித்தொகை, மருதக்கலி, பா.14-16, பக்.373.
30. கலித்தொகை, மருதக்கலி, பா.21-22, பக்.391.
31. கலித்தொகை, மருதக்கலி, பா.17-20, பக்.391.
32. கலித்தொகை, நெய்தற்கலி, பா.6-8, பக்.542.
33. கலித்தொகை, நெய்தற்கலி, பா.9-11, பக்.542.
34. கலித்தொகை, நெய்தற்கலி, பா.12-14, பக்.542.

tamilmanam

35. கலித்தொகை, மருதக்கலி, பா.12-13, பக்.400.
36. கலித்தொகை, மருதக்கலி, பா.24, பக்.400.
37. கலித்தொகை, மருதக்கலி, பா.28 பக்.400
38. கலித்தொகை, மருதக்கலி, பா.38-39 பக்.418
39. கலித்தொகை, நெய்தற்கலி, பா.12-19, பக்.598.
40. கலித்தொகை, குறிஞ்சிக்கலி, பா.20-23, பக்.243.
41. திருக்குறள்.

துணைநூற்பட்டியல்

1. கலித்தொகை, முனைவர் அ.விசுவநாதன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 600098, முதல்பதிப்பு ஏப்ரல் 2004.
2. தமிழ் இலக்கிய வரலாறு, முனைவர். கி.இராசாஅன்னை நிலையம், திருச்சிராப்பள்ளி, முதல்பதிப்பு 2001.
3. திருக்குறள், பேராசிரியர் ப.முருகன், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 600098. முதல்பதிப்பு, செப்டம்பர் 1993.
4. தொல்காப்பியம், இளம்பூரணனார், சாரதா பதிப்பகம், சென்னை – 600014, முதல்பதிப்பு 2005.
5. பரிபாடல், முனைவர் இரா.மோகன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதல்பதிப்பு, ஏப்ரல் – 2004.
6. முனைவர் இரா.வனிதாமணி, முல்லைப்பாட்டில் தமிழர் பண்பாடு, இனியவை கற்றல் பன்னாட்டு தமிழியல் மின்னதழ், (ஆய்வுக் கட்டுரைகள்).

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam